பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள்

(இரண்டாம் பகுதி)

விளக்கவுரை :
பெருமழைப்புலவர்
பொ வே சோமசுந்தரனார்

30/4

பதிப்புரை

சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பதினொராந் திருமுறைக்கண் சேர்க்கப்பெற்றிருக்கும் பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள் மட்டும் கழகப் புலவர் சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்கள் எழுதிய விளக்கவுரையுடன் முதற் பகுதியாக முன்னமே வெளியிட்டுள்ளோம். பதினொராந் திருமுறைக்கண் சேர்க்கப்படாத பட்டினத்துப் பிள்ளையார் அருளிய திருப்பாடல்களையும் பத்திரகிரியார் அருளிய மெய்ஞ் ஞானப் புலம்பலையும் சேர்த்து இரண்டாம் பகுதியாக வெளியிடுகின்றோம். பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல் மிகவும் உருக்கமுள்ளதும், பொருட்செறிவும், நுட்ப நிறைவும் அமையப் பெற்றுள்ளதாகும்.

இவ்விரண்டாம் பகுதிக்குப் பெருமழைப் புலவர் திரு, பொ. வே. சோமசுந்தரனாரவர்கள் சிறந்த விளக்கவுரை எழுதியுள்ளார்கள். அவர்களின் உரை மாண்பு பத்துப்பாட்டு, பரிபாடல், குறுந்தொகை, ஐங்குறுநூறு, சூளாமணி, பெருங்கதை, நீலகேசி, கல்லாடம் ஆகிய நூல்கட்கு எழுதப்பெற்ற சீரிய உரையான் இனிது விளங்கும். இதன்கண் பலவகையான மேற்கோள் செய்யுட்கள் ஏறத்தாழ நானூற்றுக்குமேற் காணப்படும். பட்டினத்துப் பிள்ளையாரின் வரலாறு முதற் பகுதியின்கண் விரிவாக எழுதிச் சேர்க்கப் பெற்றிருப்பதால் இப்பகுதியிலே சேர்க்கவில்லை.

இப்பகுதிக்குச் சிறந்த விளக்கவுரையினை எமது விருப்பத்திற் கிணங்க எழுதியுதவிய புலவர் திரு. பொ. வே. சோமசுந்தரனாரவர்கட்குக் கழகத்தார் நன்றி உரித்தாகுக.

முதற் பகுதியை வாங்கிய அன்பர்கள் இதனையும் வாங்கிக் கற்றுப் பயன்பெறுவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றேன் றேழியா துற்றனை யன்றியும்
புற்புதக் குரம்பை துச்சி லோதுக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்
பீளையு நீரும் புறப்படு மோருபோறி
மீளுங் குறும்பி வேளிப்படு மோருபோறி
சளியு நீருந் தவழு மோருபோறி
உமிழ்நீர்க் கோழை யோழுகு மோருபோறி
வளியு மலமும் வழங்கு மோருபோறி
சலமுஞ் சீயுஞ் சரியு மோருவழி
உள்ளுறத் தோடங்கி வெளிப்பட நாறுஞ்
சட்டக முடிவிற் சுட்டேலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து
கடிமலர்க் கோன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போக வின்பத்தை
நிழலெனக் கடவா நீர்மையோடு போருந்தி
எனதற நினைவற இருவினை மலமற
வரவோடு செலவற மருளற விருளற
இரவோடு பகலற விகபர மறவோரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தோளிருஞ் சிவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெரு மானைச் செப் போனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!

க—ரு. நினைமின்... மனனே

(இதன் பொருள்.) மனனே நினைமின்-என் மனமாகிய பெரியீரே! நினைந்து நினைந்து உருகுமின்! என் மனமாகிய பெரியீரே நினைந்து நினைந்துருகுமின்!; சிவபெருமானை செம்பொன் அம்பலவனை - சிவபெருமான என்னும் திருப்பெயருடையவனும் சிவந்த பொன்னு லியன்ற தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண் இன்பத்திருக்கூத் தியற்று பவனும் ஆகிய முழுமுதற் கடவுளையே; மனனே நினைமின் மனனே

நினைமின் – என் மனமாகிய நண்பரே! என் மனமாகிய நண்பரே! நீயிர் இடையறாது நினைந்துருகுமின்! நினைந்து உருகுமின்! என்க.

(விளக்கம்) அநாதியாகிய காலமெல்லாம் பிறவியுட்பட்டுத் துன்புற்று ஆற்றாமை யெய்திய அடிகளார் அத்துன்பக் கடலினின்றும் கரையேறி உய்தற்குத் துணையாவது தமது மனத்தையன்றிப் பிறிதோர் களைகண் காணாமையால் அதனை முன்னிலைப்படுத்தி வேண்டுகின்றார். என்னை?

"துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி"

—குறள், கஉகக

எனவரும் வள்ளுவர் பொன்மொழியும் காண்க.

இனி, தாமெய்திய பெருந்துன்பத்திற்கெல்லாம் காரணமும் அந்த மனமாயையே யாதல் கருதி அதனை இகழ்வார் பாலுந்திணையும் வழுவமாறு பால் பகா அஃறிணைப் பொருளாகிய மனத்தை நினைமின் எனப் பன்மைப்பாலாக விளித்தார். என்னை?

"உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே"

—நன்னூல், ௩எக

எனவரும் சூத்திரமும் காண்க.

இனிப் பற்றிய பற்று விடாது பல்வேறு இடுக்கணும் பட்டுழலுகின்ற நெஞ்சம் அப்பற்றெலாம் விட்டுப் பேரின்ப மெய்த வேண்டின் பற்றற்றான் பற்றினையே பற்றுதல் இன்றியமையாமையின் சிவபெருமானைச் செம்பொன் அம்பலவனை நினைக என்று அறிவுறுத்துவாராயினர். ஈண்டு,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

—குறள், ௩௫0

எனவரும் அருமைத் திருக்குறளையும் நினைக.

இனி, திருநாவுக்கரசர் தாமும்,

"நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலு மெம்பிரானுடைய கோவில்புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீயென்றும்
ஆரூரா என்றென்றே யலறா நில்லே"

—சு. ௩க-௩.

என்றருளிச் செய்தலுங் காண்க.

இனி, இறைவனுடைய உருவிறந்த அருமேனியைச் சிவபெருமான் என்றும், கருதுதற்கும் வழிபடுதற்கும் இனிதாகிய அவனது அருட்டிரு மேனியைச் செம்பொனம்பலவன் என்றும் கூறினாராகக் கொள்க. இனி, இறைவனுடைய திருவருட் டிருமேனிகள் பலவற்றுள்ளும் செம்பொனம்பலத்தே திருக்கூத்தியற்றுகின்ற திருவுருவமே தலை சிறந்தமைபற்றி அதனையே விதந்தெடுத்துக் கூறினர் என்க. அம் பலவன் திருவுருவமே இறைவன் ஐந்தொழிற்கும் அறிகுறியா மென்பதனை,

> "தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பிற்
> சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
> ஊன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதம்முத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு"
>
> —உண்மை விளக்கம், ௩௫

என்பதனானும், அம்பலவனுடைய திருவடிச் சிறப்பை,

> "மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம்
> சாய வமுக்கியருள் தானெடுத்து—நேயத்தால்
> ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
> தானெந்தை யார்பாதந் தான்"
>
> —உண்மைவி, ௩௬

என்பதனானும், உணர்க. இன்னும்,

> "பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
> உரையுணர்வுக் கெட்டா வொருவன்—வரைமகடான்
> காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
> பேணுமவர்க் குண்டோ பிறப்பு"
>
> —உண்மைவி, ௩௮

என்பது பற்றிப் பிறப்பறுக்கலுறும் அடிகளார், சிவபெருமான் என்றமையாது செம்பொனம்பலவன் என்றும் விதந்தோதுவாராயினர் என்க.

சா—௫. அலகை... ஓம்பற்க

(இ - ள்.) அலகைத்தேரின் - அங்ஙனம் அவனடியினை இடையறுதலினைத்தலன்றிக் கானல் நீர் போன்றும்; அலமரு காலின் - இடையறுது சுழலுகின்ற காற்றைப் போன்றும்; உலகப் பொய் வாழ்க்கையை - இவ்வுலகின் கண்ணதாகிய பொய்யேயான வாழ்க்கையையும்; உடலை - அப்பொய் வாழ்க்கைக்குக் கருவியாக மாறி மாறி வருகின்ற இந்த உடலையும்; ஓம்பற்க - பொருளாகக் கருதி அவற்றைப் பேணுவதில் நின் வாழ்நாளைக் கழியாதே கொள்! என்க.

(வி - ம்.) அலகைத்தேர் - பேய்த்தேர். அஃதாவது - கானலிற் றேன்றும் நீர். இது வாழ்விற்குவமை.

" மண்தனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வும்
எண்தரு பூதபேத யோனிகள் யாவு மெல்லாம்
கண்ட விந்திரமா சாலம் கனுக்கழுதிரதங் காட்டி
யுண்டுபோ லின்றாம் பண்பின் உலகினை அசத்து மென்பர்"

—சிவஞான-சுபக்—உசஉ.

என வரும் சித்தியார்ச் செய்யுளையும் அதனுரையில் மாதவச் சிவ ஞானயோகியார், 'கழுதிரதம் ஒரு காரணங்காட்டி அழிவெய்து'தற்கு உவமையாயிற் றென்றலும் உணர்க.

இனி, ஈண்டு வாழ்க்கை யென்பது மெய் முதலிய ஐம்பொறி களான் நுகர்தற்குரிய ஊறு முதலிய இன்பத்திற்கு ஏதுவான மனைவி முதலிய பேறுகளையேயாம். இவற்றைத் தாயுமான அடிகளார்,

" தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்திரசாலக் கோலம்
வஞ்சனை பொருமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை யிலாதகனவே"

தாயுமானவர், கஉ. தேசோ-ந

என அழகுற எடுத்தோதுதல் உணர்க.

இனி, ஈண்டு உடல் என்றது நுண்ணுடலும் பருவுடலுமாகிய இரண்டையுமேயாம். அவற்றுள் நுண்ணுடலானது இடையருது ஒன்றை விட்டொன்றுபற்றிச் சுழன்று கொண்டிருத்தலால் பட்டினத் தடிகளார் உடல் என்று பொதுவினேதி அவ்விரண்டிற்கு மேற்ப அலமருகாற்றை உவமை எடுத்தோதினர். காற்று நுண்ணுடற்கு இடையருதுசுழல்தற்கும் பருவுடற்கு அக்காற்று வாடையாய்க் கோடை யாய்த் தென்றலாய்க் கொண்டலாய் மாறி மாறி வருமாறு போல மாறி மாறிப் பிறந்துழல்தற்கும் உவமையாகக் கொள்க.

இனி, உடலைப் பொய் வாழ்க்கையின் பொருட்டு ஓம்பற்க என்ற மையின் அவ்வுடல் மெய் வாழ்க்கைக்குத் துணையாம், அவ்வாழ்க் கையின் பொருட்டு அதனை நன்கு ஓம்புதலும் வேண்டும் என்றரா யிற்று. என்னை? ஆசிரியர் திருமூல நாயனாரும் யாக்கையின் இழிதகை மையையும் நிலையாமையையும் கருதி,

" பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டவப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமு மல்லது
மண்டி யவருடன் வழிநட வாதே."

என்றற் றொடக்கத்துச் செய்யுளாற் பழித்தன ரேனும் மற்று அது தானே வீடுபேற்றிற்கும் விழுத்துணையாதலைக் கருதிய வழி, அவ்வுடல் அறிஞரால் நன்கு பேணற் பாலதென்பார்,

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"

—திருமந்திரம், எ0௫

என்றற் றொடக்கத்துச் செய்யுளால் அறிவுறுத்துதலுணர்க, எனவே சான்றோர் அனைவர்க்கும் இவ்விருவகைக் கருத்தும் பொருந்தும் என்க. ஆகவே, இவ்வுலகம் பொய் வாழ்க்கைக்குக் கருவியாகுமாற்றலிப் பொய்யுடலை போற்றற்க, செம்பொன் அம்பலவனை நினைத்தற்குக் கருவியாமாற்றால் அதனைப் போற்றிக் கொள்க என்பதே பட்டினத்தடிகளார் திருவுளக் குறிப்பென்று கொள்க.

அ—கஙு. பிறந்தன...உணர்ந்தனை

(இ - ள்.) பிறந்தன இறக்கும் - உலகத்தே பிறப்புற்ற எல்லாவுயிர்களும் இறந்தொழியும்; இறந்தன பிறக்கும் - அவ்வாறே இறப்புற்ற உயிர்களெல்லாம் மீண்டும் வந்து பிறவா நிற்கும்; தோன்றின மறையும் - உலகத்தே தோன்றியுள்ள மலையும் கடலும் போல்வன எல்லாம் மறைந்தொழியும்; மறைந்தன தோன்றும் - இனி மறைந்து போன அவ்வுயிரில் பொருள்கள் தாமும் மீண்டும் தோன்றும்; பெருத்தன சிறுக்கும் - பெருமை எய்திய பொருள்கள் சிறுமை யெய்தும்; உணர்ந்தன மறக்கும் - அறியப்பட்ட பொருள்கள் மறக்கப்பட்டொழியும்; மறந்தன உணரும் - மறக்கப்பட்ட பொருள்கள் மீண்டும் அறியப்படும்; புணர்ந்தன பிரியும் - தம்முள் ஒன்றனோடு ஒன்று கூடிய உயிரும் பிறவும் பிரிந்து போகும்; பிரிந்தன புணரும் - அவ்வாறு பிரிந்து போனவை மீண்டும் வந்து கூடும்; அருந்தின மலமாம் - உயிர்கள் அவாவியுண்ட உணவுகளெல்லாம் அவற்றால் அருவருக்கத்தகுந்த மலமாக மாறிப்போம்; புனைந்தன அழுக்காம் — மாந்தர் விரும்பிப் புனைந்து கொண்ட ஆடைகள் வெறுக்கத்தக்க அழுக்குடையனவாகும்; உவப்பன வெறுப்பாம் - ஒரு காலத்தே பெரிதும் விரும்பப்பட்ட பொருள்களே பின்னொரு காலத்தே பெரிதும் வெறுக்கப்படும் பொருள்களேயாகும்; வெறுப்பன உவப்பாம் - ஒரு காலத்தே வெறுத் தொதுக்கப்பட்ட பொருள்களே பின்னுமொரு காலத்தே பெரிதும் விரும்பப்படுவனவும் ஆகும்; என்று இவை அனைத்தும் உணர்ந்தனை - என்று கூறப்படும் இன்னோரன்ன உலகியலெல்லாம் நீ நன்கு அறிந்துள்ளனை யல்லலையோ? என்க.

(வி - ம்.) பிறந்தன இறந்தன என்பன உயிரினத்தின் மேலும்; தோன்றின மறைந்தன என்பன உயிரில் பொருளின் மேலும் நின்றன. பெருத்தன சிறுத்தன என்பன அவ்விரண்டற்கும் பொது. பெருமை எய்திய உயிர்கள் சிறுமை எய்தும் என்றும் பரியனவாகிய பொருள்கள் சிறியனவாகும் என்றும் கூறிக்கொள்க.

உணர்ந்தன மறந்தன என்பன - உயிர்களால் உணரப்பட்ட பொருள்களும், மறக்கப்பட்ட பொருள்களும் என்க; இனி, இரட்டுறமொழிதலாகக் கொண்டு பொருள்களை உணர்ந்த உயிர்கள் அவற்றை மறந்தொழியும் என்றும் கொள்க. புணர்ந்தன பிரியும் என்றதும்

உயிர்ப் பொருள் உயிரில் பொருள்கள் இரண்டற்கும் தனித்தனி ஏற்கு மாறு கொள்க. உயிர்கள் காதலாலே தம்முள் ஒன்றனோடொன்று சேர்ந்தவை அக்காதல் கெடப் பிரியும் என்றும், உயிரில் பொருள் களாகிய நிலம் முதலியனவும் தம்முட் கூடும் ஆற்றலுற்றுழிக் கூடி அவ்வாற்றல் கெட்டவழிப் பிரிந்துபோம் என்றும் கூறியவாறும்.

அருந்தின - உண்ட உணவுகள்; புனைந்தன - ஆடைகள். வெறுப் பாம் - வெறுக்கப்படுவனவாம். என்று கூறப்படும் நிலையுதலில்லாத இவ்வுலகியல்பினை எல்லாம் நன்குணர்ந்தனை அல்லையோ? என அடிகளார் நெஞ்சிற்குக் கூறுகின்றார்.

இப்பகுதியோடு,

"பிறங்கின செடுங்கள் யாவும் புணர்ந்தவர் பிரிவர்பேசி
னிறங்கின வீழு மேலா யோங்கிய வெண்ணில் யோனிப்
பிறந்தவர் சாவர் செத்தார் பிறப்பவே என்ன நோக்கிக்
கறங்கிசை வண்டு பாடுங் கோதைநீ கவல லென்றாள்"

எனவரும் சீவக சிந்தாமணியும், (கசுகூ) ஒப்புக்காணத்தகும், புனைந் தன அழுக்காம் எனவே தூயனவாக அணியப்பட்ட ஆடைகள் என்பது பெற்றும். இவை என்றது இவ்வுலகியற் பொருள்களும் குணங்களும் அடிக்கடி மாறுவனவேயன்றி நிலையுதலுடையன அல்ல என்னும் உண்மைகளை என்றவாறு. இங்ஙனமே ஆசிரியர் தொல் காப்பியனாரும்,

"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" —புறத், உச

"பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே" —புறத், உ௫

எனவோதுதலுங் காண்க.

இனி, அடிகளார் கோயினான்மணி மாலையில், உஅ-ஆஞ் செய்யு ளினும் இவ்வாறே ஓதுதலுங் காண்க.

கரு—கஅ. அன்றியும்...ஓம்பின

(இ - ள்.) அன்றியும் - அல்லாமலும்; பிறந்தன பிறந்தன பிறவி கள் தோறும் - நெஞ்சமே இதுகாறும் நீ பிறந்துழன்ற எண்ணிறந்த பிறப்புக்களிலே எல்லாம்; அனைத்தும் கொன்றனை - நீ ஏனைய உயிர் கள் எல்லாவற்றையும் கொன்று மிருக்கின்றனை; அனைத்தும் நினைக் கொன்றன - அத்தீவினை காரணமாக நின்னாற் கொல்லப்பட்ட அவ் வுயிர்கள் எல்லாம் நின்னையும் கொன்றுள்ளன; அனைத்தும் தின்றனை - நீ எல்லாவுயிர்களையும் கொன்று தின்றுள்ளனை. அனைத்தும் நினைத் தின்றன — நின்னாற் கொன்று தின்னப்பட்டனவாகிய எல்லாவுயிர் களும் அத்தீவினைக்கீடாக நின்னையும் கொன்று தின்று மிருக்கின்றன; அனைத்தும் பெற்றனை - அல்லாமலும் நீ எல்லாவுயிர்க்குந் தாயாகி அவற்றை யெல்லாம் ஈன்று மிருக்கின்றனை; அனைத்தும் நினைப் பெற்றன - அவ்வாறே நின்னா லீனப்பட்ட வுயிர்கள் அனைத்தும் நினக்குந் தாயாகி நின்னையும் ஈன்று மிருக்கின்றனகாண்; அனைத்தும் ஓம்பினை—இன்னும் எல்லாவுயிர்களையும் நீ பாதுகாத்து மிருக்கின்றனை;

அனைத்தும் நினை ஓம்பின - அந்நல்வினைக் கீடாக நின்னாற் பாதுகாக்கப் பட்ட அத்தனை உயிர்களும் நின்னையும் பாதுகாத்திருக்கின்றன; என்க

(வி - ம்.) நெஞ்சமே நீ இறந்த காலத்தில் எடுத்த பிறவிகளோ எண்ணிறந்தன. அப்பிறவிகள் தோறும் நீ செய்த கொலை முதலிய தீவினைகட்கும் எல்லையில்லை. அங்ஙனமே செய்த நல்வினைக்கும் எல்லையில்லை. இங்ஙனமாகவே எல்லாவுயிர்களையும் நீ கொன்றிருத்தல் கூடும். அவைகளும் நின்னைக் கொன்றிருத்தல் கூடும்; எல்லா உயிரினங்களின் உடலையும் நீ தின்றிருத்தல் கூடும். எல்லா உயிரும் நின்னையும் தின்றிருத்தல் கூடும்; எல்லா வுயிரையும் நீ ஈன்றிருத்தல் கூடும்; எல்லாவுயிரும் நின்னையும் ஈன்றிருத்தல் கூடும் எனவே அனைத்தையும் நீ பாதுகாத்திருத்தல் கூடும். அனைத்தும் நின்னையும் பாதுகாத்திருத்தல் கூடும் என்றவாறு.

இதனால் போந்த பொருள், உயிர்கள் எய்தும் பிறப்பிற்கும் செய்யும் வினைகளுக்கும் அளவில்லை; மேலும் அவைகள் வினைகளாற் பின்னவும் பட்டுள்ளன என்பதாம்.

"தொல்லை நம் பிறவி யெண்ணிற்றொடு கடன் மணலுமாற்றா எல்லைய" என்பது சிந்தாமணி. (உ௩0)

கக—உஉ. செல்வத்து...உற்றனை

(இ - ள்.) செல்வத்தக் களித்தனை - நீ எல்லையற்ற அப்பிறவிகளில் வைத்து ஆகூழ் காரணமாக எத்துணையும் பல பிறப்புக்களிலே செல்வமிக்க வாழ்க்கை எய்தி அதனாற் களித்திருக்கின்றனை; தரித்திரத்து அழுங்கினை - அவ்வாறே எத்துணையும் பல பிறப்புக்களிலே போகூழ் காரணமாக வறுமை எய்திப் பெரிதும் வருந்தியுங்கிடந்தனை; சுவர்க்கத் திருந்தனை - இந்நில வுலகத்தில் நீ செய்த நல்வினை காரணமாக மேனிலை யுலகின்கண் அமரனாகிப் பன்னெடுங் காலம் இன்பவாழ் வெய்தியு மிருந்தனை; நரகில் கிடந்தனை - அவ்வாறே ஈண்டுச் செய்த தீவினை காரணமாக எரிவாய் நரகத்தே வீழ்ந்து துன்பமுற்றும் பன்னெடுங் காலம் கிடந்துள்ளனை காண்!; இரு நிலத்து இன்பமும துன்பமும் அருந்தினை - இந்தப் பெரிய நிலவுலகத்தே நீ எடுத்துள்ள பிறப்புக்களினெல்லாம் மாறி மாறி வருகின்ற இன்பங்களையும் துன்பங்களையும் நுகர்ந்து மகிழ்ந்தும் வருந்தியு மிருக்கின்றனை; ஒன்று ஒன்று ஒழியாது உற்றனை - இவ்வாறு நீ மாறி மாறி வருகின்ற இன்ப துன்பங்களுள் வைத்து யாதானும் ஒவ்வொன்றை இடையறாது நுகர்வுற்றனை காண்! என்க.

(வி - ம்.) ஆகூழ் காரணமாக என்பது போன்று அவ்வவற்றின் காரணங்களையும் வருவித்தோதிக் கொள்க சுவர்க்கத்து இன்புற்றிருந்தனை நரகிற் றுன்புற்றுக் கிடந்தனை என்பது கருத்து. சுவர்க்கம்-மேனிலையுலகம். இதன்கண் இன்ப வாழ்க்கை மட்டுமே உளது; நரகத்தில் துன்ப வாழ்க்கை மட்டுமே உளது. இந்நிலவுலகத்திலோ இன்ப வாழ்க்கையும துன்ப வாழ்க்கையும் விரவி வரும் என்க. ஒன்றொன்று ஒழியாதுற்றனை என்பதற்கு நீசெய்த வினைகளுள் வைத்து ஒன்றொன்று நுகர்ச்சிக்கு வரும பொழுதெல்லாம் இடையீடின்றி அவற்றை நுகர்ந்தனை எனக் கோடலுமாம்.

உஉ—உ௩. அன்றியும்...கருதினே

(இ - ள்.) அன்றியும் - அல்லாமலும்; புற்புதங்குரம்பை துச்சில் ஒதுக்கிடம் என்ன - நீர்மேற்குமிழி என்றும் பறவைக்கூடு என்றும் துச்சில் என்றும் ஒதுக்கிடம் என்றும் நிலையாமை முதலியன கருதி உவமை கூறும்படி; இருவினை நின்று இயங்கும் கூட்டை - முகந்து கொண்ட இருவகை வினை நுகரும் வரை நின்று நிலைப்பது போன்று இயங்காநின்ற கூடாகிய இவ்வுடம்பினை; கல்லினும் வலிதாக்கருதினே - கல்லினும் காட்டில் வலிமையுடையதாக நினைத்துச் செருக்குற்று முள்ளாய் என்க.

(வி - ம்.) இவ்வுடலானது நீர் மேற்குமிழி போல்வதென்றும்; உயிராகிய பறவை வாழுமொரு கூடு என்றும், உயிரின் ஒதுக்குக் குடியிருப்பென்றும் அங்கணம் போலும் அருவருப்புடையதென்றும் கூறும்படி என்க.

நிலையாமைக்கு நீர்மேற் குமிழியையும் பறவைக்கும் அதன் கூட்டிற்கும் உள்ள தொடர்பே உயிர்க்கு உடலின்பாற் றொடர்பென்றும், உடம்பானது வளி முதலிய மூன்றிற்கும் உரியதாய் உயிர்க்குத் துச்சில் மாத்திரையே ஆவதென்றும் அருவருக்கத் தக்கதென்றும் ஆன்றோர் கூறுதல் வந்தழிக் காண்க. அன்றியும் இதனியல்பை,

"மீதிற் காணும் பசும்புற் பனியென
மின்மினிக்கு ளொளியென வேட்கைகூர்
வாதைக் காமினிச் சஞ்சல நெஞ்சென
மாறிமாறி வருகண் ணிமையென
ஆதைக் காலெறி நீர்மேற் குமிழென
வும்பர்மேகத்து மின்னென வோர்கணப்
போதைக் காயிர மாளிகை கட்டிவீண்
போக்கிப் போக்கிப் புதுமாளிகை செய்வான்"

எனவரும் மெய்ஞ்ஞான விளக்கச் செய்யுள் முதலியவற்றானு முணர்க. (அவித் - கடு.)

உ௩—௩௪. இதனுள்...தேர்ந்து

(இ - ள்.) இதனுள் - இத்தகைய உடலின்கண் அமைந்த பொறிகளுள் வைத்து: ஒரு பொறி பீளையும் நீரும் புறப்படும் - ஒன்றாகிய கண்ணினின்றும் அருவருக்கத் தகுந்த பீளையும் நீரும் வெளிப்படும்; ஒரு பொறி மீளும் குறும்பி வெளிப்படும் - மற்றொன்றாகிய செவியினின்றும் மீள்கின்ற குறும்பி புறப்படா நிற்கும்; ஒரு பொறி சளியும் நீரும் தவழும் - மற்றொன்றாகிய மூக்கின்கண் எப்பொழுதும் சளியும் நீரும் தவழ்ந்து கொண்டிருக்கும்; ஒரு பொறி உமிழ்நீர்க் கோழை ஒழுகும் - மற்றொன்றாகிய வாயினின்றும் எச்சிலும் கோழையும் ஒழுகா நிற்கும்; ஒருவழி வளியும் மலமும் வழங்கும் - இனி இதன்கண்ணுள்ள வழிகளிரண்டனுள் ஒரு வழியானது அடிக்கடி தீ நாற்றமுடைய காற்றையும் மலத்தையும் வழங்கா நிற்கும்; ஒருவழி சலமும் சீயும் சரியும் - மற்றொரு வழியில் அடிக்கடி நீரும் சீயும் வீழா நிற்கும்; உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறும் சட்டகம் - இவ்வாற்றால்,

உள்ளேயும் புறத்தேயும் நெடுந்தொலை தீ நாற்றம் வீசுகின்ற இவ்வுடம்பு தானும்; முடிவில் சுட்ட எலும்பு ஆகும் - தன் வாணாள் இறுதியிலே சுடப்பட்ட எலும்பு மாத்திரையே ஆகிவிடுமே காண்!; உடல்உறு வாழ்க்கையை - இத்தகைய உடலால் வருகின்ற வாழ்க்கையின் இழிதகையை; உள்உற தேர்ந்து - உள்ளுணர்ச்சியிலே நன்கு புலனாம்படி ஆராய்ந்து தெளிந்து கொண்டு; என்க.

(வி - ம்.) பீளை முதலியவற்றால் கண் முதலியவற்றை உய்த்துணர்க. ஐம்பொறிகளுள் நான்கு கூறியதனால் இனஞ் செப்புமாற்றால் மெய் என்னும் ஒரு பொறி வியர்வும் அழுக்கும் வெளிப்படுக்கும் என்பதுங் கூறிக் கொள்க. வழி இரண்டனுள் ஒன்று, மலவழி; மற்றொன்று நீர்வழி. 'சீ' என்றது (சுக்கில சுரோணிதங்களை) கருநீர்களை என்க. சீப்போறவின் உவம ஆகுபெயர், என்க. சட்டகம் - உடம்பு. சுட்டவெலும்பு எனற்பாலது சுட்டெலும்பென விகாரமெய்தி நின்றது.

உடம்பினது இழிதகைமை உள்ளுற ஆராய்ந்து தெளியுமிதனை, பௌத்தர்கள், 'அசுப பாவனை' என்பர். தாயுமானாரும்,

"குடக்கொடு குணக்காதி திக்கினை உழக்கூடு
கொள்ளல் போலந்த பூதம்
கூடுஞ்சுருங்கிலைச் சாலேக மொன்பது
குலாவு நடைமனையை நாளும்
வடக்கயிறு வெண்ணரம் பாவெம்பு தசையினன்
மதவேள் விழாநடத்தி
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர் செநீர் கணீர்
மலநீர் புணீ ரிறைக்கும்
விடக்குத் திருத்தியைக் கருமருந்துக் கூட்டை
வெட்ட வெட்டத் தளிர்க்கும்
வேட்கைமர முறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
மெய்போ விருந்து பொய்யாஞ்
சடக்கைச் சடக்கெனச் சதமென்று சின்மயந்
தானாகி நிற்பதென்றோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே."

—சச்சிதா. ௨

என இவ் "வுடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து"ணர்த்துதலுங் காண்க. இவ்வாறு மெய்ஞ்ஞானியர் உடலைப் பழிக்கும் வழக்கம் புத்தசமண சமயத்தினின்றும் தமிழகத்தே வந்ததென்று ஆராய்வார்க்குப் புலனாம்.

௩௫—௩௭. கடிமலர்...பொருந்தி

(இ-ள்.) கடிகொன்றைமலர்ச் சடைமுடிக் கடவுளை - மணங்கமழுகின்ற கொன்றைமலர் சூடிய சடையாகிய திருமுடியையுடைய இறைவனை; ஒழிவு அருஞ்சிவ பெரும்போக இன்பத்தை - ஒழிதல்

இல்லாத சிவபெரும்போகம் என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற பேரின்பத்தினை; நிழல் என - நம்பிறப்பாம் வெப்பந் தணிக்கும் தண்ணிழல் என்று கருதி; கடவா நீர்மையொடு - அச்சிவாநுபவ நிலையினை ஒரு பொழுதும் நீங்காத யோகத்தன்மையோடு பொருந்தி யிருந்தென்க.

(வி - ம்.) முழுமுதற் கடவுளாகிய இறைவனுடைய அருவத் திருமேனி மாந்தர் மனங்கடந்த வியல்பிற்றாகலின் அதனை விடுத்து, நினைத்தற்கியன்ற அவனுடைய திருவருட்டிருமேனியைச் சுட்டிக் காட்டுவார் சிவபெருமானுக்கே சிறந்தரிமையுடைய அடையாளப் பூவையும் கூறினார். கொன்றைமலர் சிவபெருமானுக்கேயுரிய மலராம் இதனை,

> "கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
> வண்ண மார்பின் தாருங் கொன்றை"

எனவரும் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தானு முணர்க.

இனி, ஒழிவருஞ் சிவபெரும்போகம் என்புழி அருமை இன்மைப் பொருள் மேனின்றது. போகமாகிய இன்பத்தை என்க. கடவுளையும் இன்பமானவனையும் என ஆகுபெயராக்கி எண்ணும்மை கொடுத்து விரிப்பினுமாம்.

பிறப்பாகிய வெயிலுக்கு நிழலெனக்கொண்டு என்றவாறு. அந் நெறியைக் கடத்தல் கூடாது என்பார் கடவாது பொருந்தி என்றார். இதனை ஞானபூசை என்று தத்துவநூல் கூறும். என்னை?

> "மண்முதற்பூத மெல்லாம் மறுவசத்தாக்கி ஞானக்
> கண்ணினில் ஊன்றி அந்தக் கருத்தினால் எவையும் நோக்கி
> எண்ணி அஞ்செழுத்து மாறி யிறைநிறை வுணர்ந்து போற்றல்
> புண்ணியன் றனக்கு ஞான பூசையாய்ப் புகலுமன்றே"

எனவரும் சிவப்பிரகாசத் திருப்பாடலும் நோக்குக! (கஎ)

நஅ—௩0 எனதற...இகபரமற

(இ - ள்.) எனது அற - யான் எனது என்னும் இருவகைச் செருக்கும் தவரக் கெட்டொழியவும்; நினைவு அற - மீண்டும் பொய்ப் பொருள்களின் நினைவு தோன்றாமற் போகவும்; இருவினை மலம் அற - நல்வினையும் தீவினையுமாகிய இருவகைக் கன்ம மலம் அற்றொழியவும்; வரவொடு செலவு அற - இக்கன் மலங்காரணமாகப் பிறந்து வருதலும் இறந்து போதலும் தீர்ந்தொழியவும்; மருள் அற - இவற்றிற்கெல்லாம் காரணமா யமைந்த அறியாமை அற்றொழியவும்; இருள் அற - அவ்வறியாமையைச் செய்யும் இருள் போன்ற ஆணவமலம் அற்றொழியவும்; இரவொடு பகல் அற - இம்மல நீக்கத்தாலே கேவல நிலையும் சகல நிலையும் இல்லா தொழியவும்; இகம்பரம் அற - இவ்விரு நிலையுந் தீர்ந்தமையானே, இம்மையும் மறுமையும் இல்லாதொழியவும்; என்க.

(வி - ம்.) இவ்வடிகளாலே மனம் செம்பொனம்பலவனை இடையறாது நினைத்தலாலே உண்டாகும் பயன் கூறப்படுகின்றது.

இனி, முடிவிற் சுட்டெலும்பாகும் உடலுறு வாழ்க்கையை உள்ளூற ஆராய்ந்து தெளிந்தவழி இவ்வுடம்பால் துன்பமே இடையறாது வருதலையுணர்ந்து இதனை யான் என்று கருதும் செருக்கழிந்து

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை." —குறள், ௩௪௫

என்னும் மெய்யுணர்வு தலைப்படுதலின் அகப்பற்றாகிய அதனை யொழித்து எஞ்சி நின்ற எனது என்னும் புறப்பற்றொன்றனையே எனதற என்று எடுத்தோதினர்.

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" —குறள், ௩௪௬

எனவரும் திருக்குறளும் நோக்குக. மனத்தை ஒருவழிப்படுத்தி மெய் யுணர்ந்த பின்னும் அதனின்ப முணர்ந்த பின்னும் பயிற்சி முதிர்ச்சி யாலே வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்றலின் அதனை நீக்குதற் பொருட்டே கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை நினைத்தல் இன்றியமையாமையான் அவனை நினைப்பதனால் பொய்ப்பொருளை நினைக்கும் நினைவு துவாக்கெடும் என்பார், எனதற என்ற பின்னர், அவற்றின்பால் நினைவும் அற என்றும் விதந் தோதினர்.

இருவினையாகிய மலம் என்க. வரவு செலவு என்றது பிறப் பிறப் புக்களை. என்னை?

"சூக்கும தேகியாகித் தூலரூ பத்தின் மன்னிச்
சாக்கிர முதலா யுள்ள அவத்தையுட் டங்கி யெங்கும்
போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவம்
ஆக்கியும் பலன்க ளெல்லாம் அருந்தியும் நிற்கு மான்மா"
—சித்தியார் சுபக், உகஉ

எனச் சித்தியாரும் ஓதுதலுணர்க.

இனி, மருள் என்றது காமத்திற்கும் வெகுளிக்கும் முதலாய் நின்ற அறியாமையை (மயக்கத்தை) காரணம் அற்றவழிக் காரியவறுதி கூறவேண்டாமையின் மருள் அற என்றது, காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமமும் கெட என்றவாறாயிற்று. இருள் என்றது ஆணவ மலத்தை உமாபதிசிவாச்சாரியாரும், திருவருட்பயனில் ஆணவ மலத்திற்கு இருள்மலம் என்றே பெயர் கூறி, அது தானும் புறவிருளி னும் காட்டிற் பேரிருள் என்பார்,

"ஒருபொருளுங் காட்டா திருள் உருவங் காட்டும்
இருபொருளும் காட்டா திது" —இருள்நிலை, ௩

என நுண்ணிதின் ஓதுதலுணர்க.

இரவென்றது உயிரின் உறக்க நிலையை; பகல் என்றது விழிப்பு நிலையை. இரவொடும் பகலும் அற்ற நிலை அதன் மெய்யுணர் துய் நிலையை என்க. இவற்றைக் கேவலம் சகலம் சுத்தம் என்று கூறுப.

இகபரம் - இம்மையும் மறுமையும். இருள் மலமற்றவழி பேராவியற்கை
கைகூடுதலின் இம்மை மறுமைகள் அறம் என்க.

சo—சஉ. ஒரு... கூத்தனை

(இ - ள்.) ஒரு முதல்வனை - ஒப்பற்ற முழுமுதற் கடவுளும்;
தில்லையுள் முளைத்து எழும் சோதியை தில்லை என்னும் திருக்
கோயிலினிடத்தே தனது அருளுடைமை காரணமாக மெய்யடி
யார்க்குக் காட்சி தந்தருளும் பொருட்டுத் திருவுருக்கொண்டு தானே
எழுந்தருளிய பேரொளியானவனும்; அம்பலத்து அரசனை - கடவுளர்
குழுமுகின்ற அறிவம்பலத்தே தலைமையுடையனாய் எழுந்தருளி யிருக்
கின்ற இறைவர்க் கிறைவனும்; ஆனந்தக் கூத்தனை - அவ்வம்பலத்தே
எஞ்ஞான்றும் இன்பக் கூத்தியற்றுகின்றவனும் ஆகிய கடவுளை என்க.

(வி - ம்.) பிறந்திறந்துழலும் திருமால் முதலிய கடவுளர்
போலாது பிறவாயாக்கைப் பெரியோன் சிவபெருமான் ஒருவனுமே
ஆதலின் ஒரு முதல்வன் என்றார். சிவபெருமான் தனது அரு
ளுடைமை காரணமாக அடியார் பொருட்டுத் தானே திருவுருக்
கொண்டெழுந்தருளுதல் தோன்ற முளைத்து எழுஞ்சோதி என்றார்.
அம்பலம் என்றது அறிவு வெளியை. உயிர்களுக்கு இன்பந் தருதலே
இறைவன் செயலுக் கெல்லாம் காரணமாதல்பற்றி இறைவன் ஆடலை
ஆனந்தக் கூத்தென்று சான்றோர் கூறுவர்.

சங—சஎ. நெருப்பினில்... மனனே

(இ - ள்.) மனனே நினைமின் - என் மனத்தீரே நினைவீராக!
நெருப்பினில் அரக்கு என நெக்கு நெக்கு உருகி-தீயிலிட்ட அரக்குப்
போன்று நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகி நின்று; திருச்சிற்றம்பலத்து
ஒளிரும் சிவனை - தில்லை திருச்சிற்றம்பலத்தே விளங்கா நின்ற நஞ்சிவ
பெருமானை; மனனே நினைமின் மனனே நினைமின் - என் மனத்தீரே
நினைவீராக என் மனத்தீரே நினைவீராக!; சிவபெருமானைச் செம்பொன்
அம்பலவனை - நஞ்சிவபெருமானாகிய திருத்தில்லை யம்பலவாணனை;
மனனே நினைமின மனனே நினைமின் - என் அருமை மனத்தீரே
நினைந்துய்யுமின்! என் அருமை மனத்தீரே நினைந்துய்யுமின்!
என்றதாம்.

(வி - ம்.) அகத்தன்பில்லார் வாயான் மட்டும் வாழ்த்திற்
பயனில்லை ஆகலின் அன்பினாலே நினைத்திடுக என்பார், நெருப்பினில்
அரக்கென நெக்கு நெக்குருகி நினைமின் என்றறிவுறுத்தார். இவ்
வுண்மையை,

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீருங் கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே"

எனவும்,

"அன்பேஎன் அன்பேயென் றன்பா லழுதரற்றி
அன்பே யன்பாக அறிவழியும்—அன்பன்றித்

தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்''

எனவும் வரும் பிறசான்றோர் மொழிகளானுமுணர்க.

உ

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னாடும்
காதலுங் கருத்துமல் லால்நின் னிருதாள்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்
தங்கோ டிங்கோ டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித் தங்கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊற்றைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்டம் நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்
மாயா விகாரம் மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்குங் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் தைக்குஞ் சட்டை
ஈமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டு கிழங்கஞ் சருமி
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவில்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமேல்
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்

அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண் துயில் கனவிற் கண்ட காட்சி
அதனினும் போல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே யமையும்
இமய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகோண் டருள்கைநின் னருளினுக் கழகே.

க—ரு. காதளவு...பாங்கிருந்து

(இ - ள்.) காதளவு ஓடிய - தமது செவி வரையில் நீண்டிருக்கின்ற; கலகம் பாதகம் கண்ணியர்-உலகினிகழுங் கலகங்கள் எல்லாவற்றிற்கும் தீவினைகள் அனைத்திற்கும் காரணமான கண்களையுடைய மகளிருடைய; மருங்கில் புண் உடல் நாடும் காதலும் - இடையின்கீழ் ஆறாத புண்ணையுடைய உடம்பினை நாடுதற்கான காமமும்; கருத்தும் அல்லால் - அக்காமத்தை நுகரும் வழியை ஆராய்கின்ற கருத்தும் உடையேனாதலன்றி; நின் இரு தாள் பங்கயம் சூடப்பாக்கியம் செய்யா - இறைவனாகிய நின்னுடைய இரண்டு திருவடிகளாகிய செந்தாமரை மலர்களைத் தலையின்மேற் சூட்டிக்கொண்டு பேரின்ப முற்றிருத்தற்கியன்ற அறஞ்செய்திலாமையாலே; சங்கடம் கூர்ந்த தமியேன் பாங்கு இருந்து - துன்பங்கள் மிகுந்த களைகண்ணில்லாத் தனிமையையுடைய எளியேன் பக்கத்தே எப்பொழுது மிருந்து என்க.

(வி - ம்.) மருங்கிற் புண் என்றது இடக்கரடக்கு. மாதருடைய உறுப்புக்களுள் வைத்து ஆடவரைப் பெரிதும் மயக்குவது கண்ணேயாகும்; ஆதலால் அதனைக் காதளவோடிய கண்ணென்றும் கலகக்கண் என்றும் பாதகக் கண்ணென்றும் விதந்தோதினர். உலகில் நிகழுங் கலகங்கட்கெல்லாம் - தீவினைகட்கெல்லாம் ஆழ்ந்து நோக்குவார்க்குக் காரணம் மாதர்களே என்னுங் கருத்தால் இங்ஙனம் விதந்தார்.

இனி, அம்மாதருடைய இழிதகைமை தோன்ற மருங்கிற் புண்ணுடல் என்றார். கருத்து - அவ்வுடலைப் பெற்று நுகர்வதற்கு ஆவன சிந்திக்கும் கருத்தென்க.

சங்கடம் - துன்பம். கூர்தல் - மிகுதல், பிறிதொரு துணையிலேன் என்பார் தமியேன் என்றார். எளியேனை நன்னெறிப்படுத்த வேண்டின் எப்பொழுதும் நீ என் பக்கத்திலேயே இருத்தல் வேண்டும் என்பார் பாங்கிருந்து என்றார்.

(கு) பாங்கிருந்து (௨எ) காட்டி (௨அ) ஆண்டு கொண்டருள்கை என்றியையும்.

சு—கூ. அங்கு......சீறூர்

(இ - ள்.) அங்கோடு இங்கோடு அலமரும் - அங்குமிங்குமாய்ச் சுழன்று திரிகின்ற; கள்வர் ஐவர் கலகம் இட்டு அலைக்குங் கானகம் -

ஐந்து கள்வர்கள் இடையறுது கலகஞ் செய்து துன்புறுத்தும் ஒரு காட்டினை ஒப்பதும்; சலமலப்பேழை - மூத்திரமும் மலமும் நிரப்பிய பேழை போல்வதும்; இருவினைப் பெட்டகம் - நல்வினையும் தீவினையு மாகிய இருவகை வினைகளையும் உள்ளடக்கியதொரு பெட்டகத்தையே ஒப்பதும்; வாதபித்தம் கோழை குடிபுகும் சீறூர் - வாதமும் பித்தமும் கோழையும் ஆகிய வேட்டுவர் குடியிருக்கின்ற சிறியதோர் ஊரை ஒப்பதும், என்க.

(வி - ம்.) முற்செய்யுளில் "சட்டக முடிவிற் சுட்டெலும்பாகும் உடம்பினை உள்ளுறத் தேர்ந்து கடவுளை நினை" என்று செஞ்சிற் கறி வுறுத்த அடிகளார் இச்செய்யுளின்கண் அவ்வுடலின் இழிதகைமை யையே பல்லாற்ருனும் விரித்து விளம்புகின்ருர் என்க. அங்கோடு இங்கோடு என்புழி ஓடு உம்மைப் பொருண் மேனின்றது அலமருதல் - சுழன்று திரிதல். உயிரின் அரும்பொருளாகிய மெய்யுணர் வைக் கொள்ளைகொண்டு தாம் விரும்பியவாறே அதனை ஆட்டி அலைத்த லாலே ஐம்புலன்களையும் கள்வராக உருவகித்தார். அக்கள்வர் ஞானக் கண்ணுக்குப் புலப்படாமற் கரந்துறையும் இடமாகலின் உடம்பைக் கானகமாகவும் உருவகித்தார்.

அங்கு இங்கு என்றது, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலனுகர்சசிக்குரிய இடங்களை. இவ்வைம்புலன்களும் மனத்தைத் தம் வயப்படுத்திக்கொண்டு தத்தம் வழியிலே ஈர்ப்பசன்கண் தம்முட் கலாம் விளைத்து இடையருது துன்புறுத்தலாலே அவற்றைக் கள்வர் என்ருர்.

பேழை பெட்டகம் என்பன பொருள்களை இட்டுவைக்குங் கருவி கள். வினைகளின் மிகுதி தோன்றப் பெட்டகம் என்ருர்.

வாதபித்தம் கோழை குடிபுகும் சீறூர் என்றமையால் இவற்றைக் கொடுமை செய்து கொன்ருெழிக்கும் வேட்டுவராக உருவகித்தமை பெற்ரும். என்னை? சீறூர் என்பது குறிஞ்சி நிலத்து ஊர்கள் ஆத லானும் அவற்றிற் குடி புகுவோர் வேட்டுவரே யாதலானும் என்க. இவை தம்முள்ளே மிக்கும் குறைந்தும் உடம்பினை நோய்வாய்ப் படுத் துக் கொன்றுபோடுதலால் வேடராக உருவகித்தார். ஆசிரியர் பரிமே லழகரும் "புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட் டுச்சிலிருந்த வுயிர்க்கு" எனவரும் திருக்குறள் (௩௪௦) உரையில் - "வாத முதலிய வற்றின் இல்லாய் உடம்புகளுள்" என உரை வகுத்தலும், ஆசிரியர் திருவள்ளுவனர் தாமும்,

"மிகினுங் குறையினும் நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று" —குறள், ௯௪௧

என ஓதுதலும், ஈண்டு நினைக. கோழை - கொழுவி; 'ஐ' என்க.

கo—கரு. ஊற்றை...மரக்கலம்

(இ - ள்.) ஊற்றைப் புன்தோல் உதிரக் கட்டளை - அழுக் குடைய புல்லிய தோலாற் பொதிந்த குருதியையுடையதொரு கருவி; நாற்றப்பாண்டம் - மலம் நிரப்பிய பாண்டம்; நான் முழத்து ஒன்பது பீற்றல் துண்டம் - நான்குமுழ நீளத்தையும் அதனுள்ளேயே ஒன்பது

தொளைகளையு முடையதோர் ஊன் தண்டம்; பேய்ச்சுரைத் தோட்டம் - பயன்படாத பேய்ச்சுரை மண்டிப் படரும் ஒரு தோட்டம்; அடலைச் சுடலைப் பெரிய திடருள் ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம் - சாம்பரையுடைய சுடுகாடேயாகிய இந்நிலவுலகமாகிய பெரிய திடரின் கண், அவா வென்னும் கயிற்றாலே ஆடிக் கொண்டிருக்கின்ற பம்பரம்; ஓயா நோய்க்கு இடம்-இடையறாது வருத்துகின்ற பிணிகள் தங்கும் இடம்; ஓடும் மரக்கலம் - வினையாகிய சூறைக்காற் றுந்துதலாலே திசை தப்பி ஓடுகின்ற தொகு மரக்கலம்; என்க.

(வி - ம்.) இப்பகுதியோடு,

"காலிரண்டு கிறுத்தி மேலிருகை பிணைத்தொரு புறவெலும்
பாலிணக்கி முகட்டுமேல் வளையடர் நரம்பெனு மாக்கையாற்
கோலியிட்ட பழுக்கழிக் கொரு குறைவுறாமல் வரிந்துமேற்
றோல்ணக்கிய கற்றைவேய்ந்துயர் சுவர்புலால் கொடியற்றியே"

—அவித், கஙு

எனவும்,

"வந்து போக விரண்டுவாசல் வகுத்து மற்றெழு சாளரந்
தந்து சாக்கி ரமாதியீரு தளமெடுத் ததன்மேன் மலர்க்
கொந்துலாவிய மாமுடிக் கனகும்பம் வைத்தவிர் கூந்தலா
முந்து நீள்கொடி மாட மாலு முகக்கண் மாளிகை முற்றினன்"

—அவித், கச

எனவும் வரும் மெய்ஞ்ஞான விளக்கச் செய்யுளையும் ஒப்புக்காண்க.

நான்கு முழம் என்னும் அளவிற் பட்டமையின் கட்டளை என்றார். புன்றோலாற் பொதிந்த உதிரத்தையுடைய கட்டளை யென்க.

இதன் நீளம் நான்குமுழமேயாயினும் இதன்கண் ஒன்பது தொளை உண்மையடன்பார் நான்முழத் தொன்பது பீற்றல் தண்டம் என்றார். துண்டம்-ஊன்றுண்டம. அடலை - சாம்பர். கூர்ந்து நோக்குவார்க்கு இந்நில வுலகம் முழுவதுமே சுடுகாடாகவே தோன்றுதல் உண்மையால் பெரிய சுடலைத்திடர் என்றார். வினையாகிய சூறைவளி யெடுப்பத் திசை தப்பி ஓடும் மரக்கலம் என்க.

கசு—உ0. மாயா......சட்டை

(இ - ள்.) மாயா விகாரம் - மாயையின் வேறுபாடுகளுள் ஒன்று. மரணப் பஞ்சரம்-சாவென்னும் பறவை குடியிருக்கும் கூடு; சோற்றுத் துருத்தி – சோறடைத்த துருத்தி; காற்றில் தூற்றும் பத்தம்-காற்றில் தூற்றுதற்குரிய பதர்; காற்றில் பறக்கும் கானப்பட்டம - சூறைக் காற்றிற் பறக்க விடப்பட்ட ஒலியையுடைய பட்டம்; தருமன் விதிவழி வெட்டுங் கட்டை - மறலியானவன் விதிக்கிணங்க வெட்டி வீழ்த்துதற் கியன்ற மரக்கட்டை; சதுர்முகப் பாணன் தைக்கும் சட்டை - நான்கு முகங்களையுடைய தையற்காரனால் தைக்கப்படுகின்ற சட்டை; என்க.

(வி - ம்.) விகாரம் - வேறுபாடு மாயையானது தனது காரண நிலையினின்று வேறுபட்டு வந்த காரிய நிலையே உடம்பாகலின் மாயா விகாரம், என்றார். என்னை,

"நீடு பரா சத்திநிகழ் இச்சாஞானம்.
நிறைகிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு வுருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்துவாதி
கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தநுகரண புவன போகம்
பீடுபெற நிறுவியவை யொடுக்கு மேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே"

—சிவப்பிர, சச

என்பதனானும் உடம்பு மாயையின் காரியமாதலுணர்க. பஞ்சரம் - கூடு; கூடு என்றமையால் மரணமாகிய பறவையிருக்கும் கூடு என்க. உடம்பிற்குக் கணந்தோறும் சாவுதோன்றி மறைதலாலே எண்ணிறந்த சாவுகள் இருக்கின்ற கூடு என்றார். பத்தம் - பதர். காற்றில் என் பதனை தூற்றும் என்பதன் கண்ணும் பறக்கும் என்பதன் கண்ணும் கூட்டுக. கானம்-ஒலி. தருமன்; கூற்றுவன். பாணன் - தையற்காரன்;

உக—உச. ஈம.... கொம்பு

(இ - ள்.) ஈமக்கனலில் சில இடும் விருந்து - சுடுகாட்டு நெருப் பின்கண் சிலவற்றிற்கிடுகின்ற விருந்துணவு; காமக்கனலில் கருகும் சருகு - காமமாகிய தீயிலே கருகுகின்ற சருகிலை; கிருமி கிண்டும் அம் சருமிக்கிழங்கு - புழுக்கள் கிண்டுகின்ற அழகிய தோலால் மூடப் பெற்ற கிழங்கு; பவக்கொழுந்து ஏறும் கவைக்கொழு கொம்பு - பிறப்பாகிய இளங்கொடி படர்தற்குரிய கவைத்த கொழு கொம்பு; என்க.

(வி - ம்.) ஈமக்கனல் - சுடுகாட்டிலுள்ள தீ. சில விருந்து - சிலவற்றிற்கிடுகின்ற விருந்துணவு என்க. என்னை?

"வழுவொடு கிடந்த புழுவூன் பிண்டத்து
அலத்தக மூட்டிய அடிநரி வாய்க்கொண்டு
உலப்பி லின்பமோ டுளைக்கு மோதையும்
கடகஞ் செறிந்த கையைத் தீநா
யுடையக் கவ்வி யொடுங்கா வோதையும்
சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை
காய்ந்தபசி யெருவை கவர்ந் துணோதையும்"

—மணிமேகலை-சக்கரம்

எனச் சுடுகாட்டுக் கோட்டம் வருணிக்கப் படுதலுணர்க.

இனி, அழல்வாய்ச் சுடலை தின்னும் பொருட்டு அதன் வாயிலிடும் சிலவாகிய விருந்துணவு எனினுமாம்.

அஞ்சருமிக் கிழங்கு என மாறுக. மறு பிறப்புக்குக் காரணமான வினை முளைத்துப் படர்தலாலே பவக்கொழுந்தேறும் கொழு கொம்பு என்றார். "வினையின் வந்தது வினைக்கு விளைவாயது" என்பர் மணி மேகலையுடையார்.

உரு—உஎ. மணமாய்......உபாதி

(இ - ள்.) மணம்ஆய் வடிவின் நடக்கும் பிண்டம் முடிவில் - மணம் நிகழப்பெற்ற பொழுது மணக்கோலத்தோடு நடக்கும் பிண்டம் இறுதியிலே; பிணமாய்க் கிடக்கும் பிண்டம் - உயிர் அற்ற பிணமாகிய பொழுது வாளாது கிடக்கின்ற பிண்டம்; பிணமேல் - பிணமாயினக் கால்; ஊரிற் கிடக்க வொட்டா உபாதி - தான் பிறந்த ஊரிலே கிடத்தற் கொண்ணாத பெரியதொரு துன்பம் என்க.

(வி - ம்.) மணமாய் வடிவின் நடக்கும் பிண்டம் எனப் பிண்ட மென்பதனை முன்னுங் கூட்டுக. உபாதி: ஆகுபெயர்.

உஅ—௩௪. காலெதிர்...களங்கம்

(இ - ள்.) கால் எதிர் குவித்த பூளை - காற்றின் எதிரே குவித்து வைக்கப்பட்ட பூளைப்பூ; காலைக் கதிர் எதிர்ப்பட்ட கடும்பனிக் கூட்டம் – காலையிலெழுகின்ற ஞாயிற்று மண்டிலத்தின் எதிரே அகப் பட்ட மிக்க பனியினது கூட்டம்; அந்தரத்து இயங்கும் இந்திர சாபம் - வானத்திலே இயங்காநின்ற இந்திரவில்; அதிரும் மேகத்து உருவின் அருநிழல் - முழங்கா நின்ற முகிலினது உருவத்தாலுண் டான நிலைத்தலரிய நீழல்; நீரிற் குமிழி நீர்மேல் எழுத்து - நீர்மேன் முகிழ்த்த குமிழி அந்த நீரின் மேலே எழுதப்பட்ட எழுத்துமாம்; கண் துயில் கனவில் கண்ட காட்சி - கண்மூடித் துயிலும்பொழுது கனவிலே காணப்பட்ட பொருள்; அதனினும் பொல்லா மாயக் களங்கம் - அக்கனவினும் காட்டிற் பொல்லாங்குடைய பொய்யாகிய குற்றமுடைய பொருள்; என்க.

(வி - ம்.) கால் - காற்று. பூளை - பூளைப்பூ. இப்பூ மிகவும் நொய்யதாகலின் காற்று எளிதாக அடித்துக் கொண்டுபோம்; ஆதலின் யாக்கைக்கு உவமமாயிற்று. இந்திரசாபம் - வானவில்.

(சு) கானகம் பேழை பெட்டகம் சிறார் கட்டளை பாண்டம் துண்டம் தோட்டம் பம்பரம் மரக்கலம் பஞ்சரம் துருத்தி பத்தம் பட்டம் கட்டை சட்டை விருந்து சருகு கிழங்கு பூளை பனிக் கூட்டம் இந்திரசாபம் நிழல் குமிழி எழுத்து காட்சி களங்கம் என்பன "யாக் கைக்கு வேறுபட வந்த வுவமத் தோற்றம்" என்க.

—தொல். உவம, ௩உ

௩ரு—௩அ. அமையும்......அழகே

(இ - ள்.) அமையும் அமையும் - இத்தகைய இழிதகவுடைய இவ் வுடம்பொடு அடியேனிதுகாறு மெய்திய துயரமே சாலும் சாலும்; பிரானே அமையும் - எம்பெருமானே! இனி இவ் உடலின்கண் அடி யேனுற்ற துயரமே சாலும். இமயவல்லி வாழி என்று - இமயமலையிற் றோன்றிய பூங்கொடியாகிய உமாதேவியார் எளியேனை வாழ்க! என்று

வாழ்த்துமாறு; ஆனந்தத் தாண்டவங் காட்டி - நீ இயற்றுகின்ற இன்பத்திருக்கூத்தினை எளியேனுக்குக் காட்டியருளி; ஆண்டு கொண்டு அருள்கை நின் அருளினுக்கு அழகு - நின் அடிமையாகிய அளியேனை ஆட்கொண்டருளுதலே நின்னுடைய பேரருளுக்குப் பொருந்தும் அழகாம். ஆதலால் அடியேனை ஆட்கொண்டருளுதி! என்பதாம்.

(வி - ம்.) மானிட வாழ்க்கையின்கண் பெரும்பாலும் யாக்கையே முதன்மையாக வைத்துக்கொண்டாடப்படுதலை யாரிடத்தும் காண்டல் கூடும். அந்த யாக்கையினது நிலையாமை முதலிய இழிதகைமையுணர்ந்த வழியன்றி மெய்யுணர்வு கைகூடாமையினால் அடிகளார் யான் என்னும் செருக்குக்குக் காரணமான அதனியல்பையே அவர் பாடலின்கண் யாண்டும் பல்லாற்றானும் விரித்துரைப்பதனைக் காண்கின்றோம். கோயிற்றிருவகவல் என்னும் இவ்விரண்டு பாடலினும் அதனியல்பை விரித்தோதுவாராயினர். எத்துணையும் பன்முறை பிறப்புழற்சி பெற்று அநுபவ முதிர்வார்க்கன்றி இவ்வியாக்கையின்கண் பற்றுவிடாமையால் அடிகளார் தமது அநுபவ அறிவினையே 'தாம் பெற்ற பேறு பெறுக' இவ்வையகம் என்னுங் கருத்தால் மாந்தர் குலத்திற்கு இவ்வாறு வெளிப்படுத்தோதுகின்றார் என்க.

இனி இக்கருத்தே பற்றி மணிவாசகப் பெருந்தகையாரும் மாந்தர் தம் பிறப்புழற்சியைத் தமது அநுபவ வுணர்ச்சியில் வைத்து,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

என்று திருவாய் மலர்ந்தருளுதலுங் காண்க.

இனி, அவனருளாலன்றி அவன்றாள் வணங்குதலும் உயிர்கட்குக் கைகூடுதல் இல்லையாகலின் பிரானே என் பிறப்புழற்சியிலே யான் பட்டதுயர் மிகப் மிகப் பெரிது. இத்துணையே போதும். படமுடியாது இனித்துயரம் படமுடியாது, பட்டதெல்லாம் போதும் என்பார் அமையும் அமையும் பிரானே அமையும் என்றும், இனி நின்றிருவருளே எளியேனை உய்வித்தருளுதல் வேண்டும் என்றும் வேண்டுவார் ஆனந்தத் தாண்டவம் காட்டி ஆண்டு கொண்டருள்கை நின்னருளினுக்கு அழகு என்றார்.

௬

பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்
அடங்கலு மடக்கிடுங் கடுங்கோலைக் காலனைக்

காலெடுத் தடக்கிய கடவுணின் னடைக்கலம்
உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய இறைவனின் னடைக்கலம்
செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கல மடியன்நின் னடைக்கலம்
மனவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொரு ளறியா வழக்குறு மனனும்
ஆணவ மலத்துதித் தலைந்ததி லுலைந்திடும்
நினைவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்காறு மிவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
விகலுங் கோலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரெனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்து மொழுக்குவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கோலைப்படைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றி லாடுபம் பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங்காற் றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்பக்

கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கோடு மியங்குபுற் கலனை
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
னடிமலர்க் கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழும்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுணின் ருடிக்
கருணைமொண் டலையெறி கடலே யடைக்கலம்
தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மானின் னிணையடிக் கபயம்
அம்பலத் தரசே யடைக்கல முனக்கே.

க—அ. பாற்கடல்...அடைக்கலம்

(இ – ள்.) பால்கடல் கடையப்படும் கடு வெண்ணெயைத் திருமிடற்று அடக்கிய சிவனே அடைக்கலம் - தேவரும் அசுரரும் கூடித் திருப்பாற் கடலைக் கடைந்துழி அதன்கண் கடை கயிறாகிய வாசுகி என்னும் பாம்பினாலே உமிழப்பட்டு முதலிலே திரண்டுவந்த நஞ்சாகிய வெண்ணெயை உலகத்தைப் பாதுகாத்தற் பொருட்டு வாரி உண்டு அழகிய மிடற்றின்கண் அடக்கிக்கொண்ட சிவபெருமானே அடியேன் நின் அடைக்கலங்காண்!; அடங்கலும் அடக்கிடும் கொலைக்கடுங் காலனைக் கால் எடுத்து அடக்கிய கடவுள் நின் அடைக்கலம் - தோன்றும் உயிர்களும் உயிரில் பொருள்களுமாகிய எல்லாப் பொருள்களையும் ஒடுக்கி அழித்தற்குக் காரணமான கொலைத் தொழிலையும் கடுந்திறலையுமுடைய கூற்றுவனைக் காலைத்தூக்கி உதைத்து அடக்கிய முழுமுதற் கடவுளே அடியேன் நின் அடைக்கலங்காண்!; உலகு அனைத்தையும் படைத்துடையவன் தலை பறித்து இடக்கையில் அடக்கிய இறைவநின் அடைக்கலம் - உயிரும் உயிரில் பொருளுமாகிய எல்லா உலகங்களையும் படைத்தற்றொழிலையுடையவனாகிய நான்முகக் கடவுளினது தலையைக் கிள்ளிப் பலிக்களமாக இடக்கையிலே அடக்கிக் கொண்ட முதல்வனே! அடியேன் நின் அடைக்கலங்காண்!; செய்ய பொன் அம்பலச் செல்வநின் அடைக்கலம் - சிவந்த பொன்னாலியன்ற தில்லைத் திருச்சிற்றம்பலத்தே திருக்கூத்தியற்றுகின்ற திருவருளாகிய செல்வத்தையுடைய பெருமானே! அடியேன் நின் அடைக்கலங்காண்!; ஐயநின் அடைக்கலம் - இறைவர்க் கெல்லாம் இறைவனே! எளியேன் நின் அடைக்கலங்காண்!; அடியேன்நின் அடைக்கலம் - நின்னடியார்க் கெல்லாம் அடியேனாகிய எளியேன் நின் அடைக்கலங்காண்! என்க.

(வி – ம்.) தன்பால் அடைக்கலம் புக்க தேவர் முதலியோரைப் பாதுகாத்தற் பொருட்டுத் தன்திருமிடற்றில் களங்கமேற்றுக் கொண்ட பெருந்தகைக் கடவுளாதலால் நின்பாலே அடைக்கலம் புகுந்தேன் என்பது தோன்ற 'பாற்கடல்...அடைக்கலம்' என்றார். இனி அடியேனைக் கூற்றுவன் கொடிய ஆட்சிக்குட் படுத்தாதே கொள் என்பார், 'அடங்கலும்...அடைக்கலம்' என்றார். உயிரில் பொருளும் உயிர்ப் பொருளுமாகிய எல்லாப் பொருளையும் என்பார், அடங்கலும் அடக்கிடும் காலன் என்றார். கணிச்சிக்கூர்ப்படைக் கடுந்திறல் ஒருவன் என்பார், கடுங்காலன் என்றார்.

இனி, எளியேனைப் பிறவியுட் படுத்தாதே பாதுகாத்தருள்க! என்பார் பிறப்பிக்கும் கடவுளாகிய நான்முகனுடைய தலைபறித்த பேராற்றலை விதந்தோதினர் எனவே, எளியேனை இறப்பினின்றும் பிறப்பினின்றும் எடுத்துய்யக் கொள்க என்றாராயிற்று. செல்வத்துட் சிறந்தது அருட்செல்வமேயாகலின் செல்வ நின்னடைக்கலம் என்றார்.

கூ—கக. மனவழி...ஆக்கையை

(இ – ள்.) மனவழி அலைத்திடும் கனவு எனும் வாழ்க்கையும்- புத்தி தத்துவத்தைப் பற்றி நிற்கின்ற ஊழ்வினையானது மனமென்னும் கருவியின் வாயிலாய்ச் சுவை முதலிய புலன்களைப் பற்றுவித்துத் துன்புறுத்துவதற்குக் காரணமான கனவு போன்ற பொய்யாய வாழ்க்கையினையும்; விழுப்பொருள் அறியா அழுக்குறு மனமும் - மெய்ப் பொருளாகிய நின்னை அறியாமைக்குக் காரணமான ஆணவ மலத்தால் மூடப்பெற்ற புல்லிய மனத்தையும்; ஆணவ மலத்து உதித்து அதில் அலைந்து உளைந்திடும் நிணவைப் புழு என நெளிந்திடு சிந்தையும் - அந்த ஆணவ மலத்திலேயே தோன்றி மீண்டும் நான் என்னும் அச்செருக்கிலேயே மூழ்கித் திளைக்கின்ற நிணத்தின் பாற் புழுத்த புழுப்போன்று வஞ்சகமும் தீவினையும் செய்தற்கியன்ற சான்றோரால் பழிக்கப்படும் தீய நினைவுகளாலியங்குகின்ற நெஞ்சத்தையும்; தவறும் அழுக்காறும் இவறு பொச்சாப்பும் சுவடும் பொய்யும் சுவடும் - இந்நினைவுகள் காரணமாகச் செய்கின்ற பிழைகள் பலவும் பிறர் ஆக்கங் கண்டு புழுங்குகின்ற அழுக்காறும் ஈயாமையும் மறதியும் கள்ளமும் பொய்யும் இவற்றாலாம் பழியும்; பெருஞ்சின இகலும் கொலையும் இழிப்புறு புன்மையும் - பெரிய வெகுளியில் தோன்றுகின்ற மாறுபாடும் அதனால் தோன்றுகின்ற கொலைத் தீவினையும் சான்றோரால் இகழப்படுகின்ற சிறுமைக் குணமும்; பகையும் அச்சமும் - அக்குணங் காரணமாகத் தோன்றுகின்ற பகையும் அது காரணமாக வுண்டாகின்ற அச்சமும்; துணிவும் - தேறுது தெளிதலும்; பனிப்பும் - இவற்றின் பயனாகிய துன்பம் வந்துறும்பொழுது நடுங்குகின்ற நடுக்கமும்; முக்குண மடமையும் - அமைதி முதலிய மூன்று குண வேறுபாட்டாலுண்டாகின்ற அறியாமையும்; ஐம்பொறி முயக்கமும் - அவ்வைம் பொறிகளானும் புலன்களைப் பற்றிக் கிடக்கும் பற்றும்; இடும்பையும் பிணியும் இடுக்கிய ஆக்கையை - அப்பற்றுக் காரணமாக வுண்டாகின்ற துன்பங்களும் வாத முதலியவற்றாலுண்டாகின்ற பிணியும் என்னும் இவற்றையும் சுமந்துள்ள இந்தப் பொல்லாத உடம்பினை என்க;

(வி - ம்.) மனவழி அலைப்பது வினையே ஆகலின் ஊழ்வினை என்னும் எழுவாய் வருவித்தோதுக; என்னை? வினை புத்தி தத்துவத்

தினிடமாக மாயையிற் கிடந்து சாதியும் வாணாளும் நுகர்ச்சியும் என்னும் மூன்றற்கும் ஏதுவாகிய மனத்தின்வழி வாழ்க்கையை யுண்டாக்குதலான் என்க. இவற்றின் விரிவினை விரிந்தநூலுட் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

விழுப்பொருள் - மெய்ப்பொருள். அழுக்கு - ஆணவமலம். ஙிணவை - ஙிணமுடைய புண். படிறு - வஞ்சம். இவறும் எனல் வேண்டிய உம்மை தொக்கது. பொச்சாப்பு - மறதி. கவடு - கள்ளம். சுவடு - பழி. இடுக்கிய - சுமந்த.

உ0—உக. உயிரெனும்...துருத்தியை

(இ - ள்.) உயிர் எனும் குருகு விட்டு ஓடும் குரம்பையை - உயிர் என்கின்ற பறவை மீண்டும் வந்து புகாமல் துறந்து விட்டுப் பறந்து போதற்கியன்ற கூட்டினை; எலும்பொடு நரம்பு கொண்டு இடையில் பிணித்துக் கொழுந்தசை வேய்ந்தும் ஒழுக்கு விழும் குடிலை - எலும்பாகிய கைமரத்தை நரம்பாகிய கயிற்றாலே இடையிடையே கட்டிக் கொழுவிய தசையைக் கூரையாக வேய்ந்து வைத்தும் நீர்த்துளி ஒழுகா நின்ற ஓட்டைக் குடிசையை; செழும்பு எழு வுதிரச் சிறு புழுக் குரம்பையை - செழிப்புண்டாதற்குக் காரணமான குருதி என்கின்ற சிறிய புழுக்கள் கட்டிய கூட்டினை; மலவுடல் குடத்தை - மலம் நிறைந்த உள்ளிடத்தையுடைய குடத்தை; புலவுடல் புட்டிலை - ஊனுவியன்ற வடிவத்தையுடைய புட்டிலை; தொலைவு இலாச் சோற்றுத் துன்பக்குழியை - தொலையாத சோற்றுத் துன்பத்தை விளைக்கின்ற தூராத குழியை; கொலைப்படைக்கலம் பல கிடக்கும் கூட்டை - உயிரினங்களைக் கொல்லுதற்குரிய கொடிய படைக்கலன் களாகிய அம்புகள் பலப்பல உட்கிடவா நின்ற அம்பறாக் கூட்டை; சலிப்பு உறு வினைப் பல சரக்குக் குப்பையை - மனம் இடையறாது இயங்குதற்குக் காரணமான பலவேறு வினைகளாகிய பண்டங்களின் குவியலை; கோள் சரக்கு ஒழுகும் பீறல் கோணியை - அகத்திடப் பட்ட சரக்குகள் ஒழுகுவதற்கேற்ற ஒன்பது பீற்றலையுடைய கோணிப் பையை; கொல்லன் கோபத்தீ மூட்டும் துருத்தியை - அவாவென்னும் கொல்லன் சினமாகிய தீயை மூட்டுதற்கியன்ற தோற்றுருத்தியை என்க.

(வி - ம்.) குருகு - பறவைப் பொதுப் பெயர். "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, யுடம்பொ டுயிரிடை நட்பு" என வரும் திருக்குறளும் (௩௩௮) ஈண்டு நினைவு கூர்க. இனி இதற்குப் பரிமேலழகர் கூறுமாறு தனித்துக் கிடக்கும்படி விட்டு ஓடுகின்ற முட்டை எனக் கூறலுமாம்.

எலும்பொடு......குடிலை என்னுமிதனோடு,

"என்பினை நரம்பிற் பின்னி
யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன்புறந் தோலைப் போர்த்து
மயிர்புறம் பொலிய வேய்ந்திட்
டொன்பது வாயி லாக்கி
யூன்பயில் குரம்பை செய்தான்

மன்பெருந் தச்ச னல்லன்
மயங்கினர் மருள வென்றான் "

எனவரும் சீவக சிந்தாமணி (கஙஎஎ)யும்,

" கால்கொடுத் தெலும்பு மூட்டிக்
கதிர்நரம் பாக்கை யார்த்துத்
தோலுடுத் துதிரமட்டித்
தொகுமயிர் மேய்ந்த கூரை
ஓலெடுத் துழைஞர் கூடி
ஒளிப்பதற் கஞ்சுகின்றேன்
சேலுடைப் பழனஞ் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்துளானே "

எனவரும் அப்பரடிகள் திருவாக்கும் (திருமுறை-ச) ஒப்புக்காணற் பாலன.

வேய்ந்த பின்னரும் ஒழுகும் ஓட்டைக்குடிசை என்றவாறு. ஒழுக்குவிழும் என்றது ஒழுகும் என்னும் ஒரு சொல் நீர்மைத்து. ஒழுகும் என்றது வியர்வையை. பலவுடல் என்புழி உடல் உள்ளிடம் என்னும் பொருள் குறித்தவாறு. புலவு - ஊன். சோற்றுத் துன்பத் தைச் செய்யும் தொலைவிலாக்குழி என்க; தூராத குழி என்றவாறு. கொலை செய்தற்கேதுவாகின்ற தீக்குணங்களைப் படைக்கலம் என்றார். கூடு என்றமையால் அம்பாகிய படைக்கலம் என்பது பெற்றாம். அம்பறாக் கூடு என்க. குப்பை - குவியல். கோள் - (தன்னகத்தே) கொண்ட சரக்கு என்றது உணவுப் பொருளை. கோணி - சணலா லியன்றபை. கொல்லன் - அவாவாகிய கொல்லன் என்க.

கூ0—சக. ஐம்புல...பொழுது

(இ - ள்.) ஐம்புலப் பறவை அடையும் பஞ்சரத்தை - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்துபுலன்களாகிய பறவைகள் வந்து அடைகின்ற கூட்டினை; புலராக்கவலை விளைமரப் பொதும்பை - உலராத துன்பமென்னும் கனிகள் கனிகின்ற மரங்களடர்ந்த சோலை யினை; ஆசைக்கயிற்றில் ஆடும் பம்பரத்தை - அவாவென்னும் அறாத கயிற்றாலே சுழற்றப்பட்டு இடையறாது சுழன்று கொண்டிருக்கின்ற பம்பரத்தினை; காசில் பணத்தில் சுழலுங் காற்றாடியை - செம்பொற் காசும் வெள்ளிப் பணமும் ஆகிய அச்சில் நின்று சுழலாநின்ற காற்றாடி யினை; மக்கள் வினையின் கயங்கும் திகிரியை - குழந்தைகள் என்னும் வினைப் பயனின்கண் பெரிதும் மயங்குகின்ற உருளையை; கடுவளி உருட்டிய சகடக்காலை - ஊழ்வினை என்னும் கடிய சூறைக்காற்றானது உருட்டிவிடக் கீழ்மேலாய் உருளுகின்ற தொரு சகடவுருளையினை; பாவச்சரக்கொடு பவக்கடல் புக்குக் காமக் காற்று எடுத்து அலைப்பக் கெடுவழிக் கரை சேர் கொடு மரக்கலத்தை - தீவினை என்கின்ற சரக் கினை ஏற்றிக்கொண்டு பிறவி என்கின்ற கடலிலே வீழ்ந்து காமம் என்கின்ற காற்று மோதி எழுப்பி ஆட்டி அலைத்துச் செலுத்துதலாலே கெடுதற்குக் காரணமான தீய வழிகளே மிக்குடைய (நிரயமென்னும்) கரையினை எய்துகின்ற வளைந்த மரக்கலத்தை; இருவினை விலங்

கொடும் இயங்கு புற்கலனை - நல்வினையும் தீவினையுமாகிய இரு வகை வினைகளாகிய விலங்குகளோடு தன்னுள் இயங்கிக் கொண்டிருக்கின்ற உயிரை; நடுவன் வந்து அழைத்திட நடுங்கிடும் யாக்கையை - கூற்றுவன் வந்து கூப்பிடும்போது அவனைக் கண்டு அச்சத்தாலே நடுங்குகின்ற இந்தப் பொல்லாத உடம்பினை; பிணம் எனப்படுத்து யான் புறப்படும் பொழுது - எனையோர் பிணமென்றொரு பெயரிட்டு வழங்குமாறு செய்வித்து அடியேன் அதனை விட்டுப் புறப்படுகின்ற காலத்தே; என்க.

(வி - ம்.) ஐம்புலம் என்றது சுவை முதலியவற்றை நுகரும் நுகர்ச்சியை. பஞ்சரம் - கூடு. கவலை — துன்பம். புலர்தல் - வற்றிப் போதல், துன்பம் ஒரு காலத்தும் வற்றிப்போகாமையால், புலராக் கவலை என்றார். அவலம் கவலை கையாறு அழுங்கல் என்னும் துன்ப வகைகளிலே கவலை எப்பொழுது மிருத்தலால் புலராக் கவலை என அதனையே விதந்தோதினர். "அவலக் கவலை கையாறழுங்கல் தவலாவுள்ளம் தன்பாலுடையது மக்கள் யாக்கை" என்றார் மணிமேகலையினும்; (பளிக்கறை: கக அ — உ0.) சவலை அரும்பி மலர்ந்து காய்த்து முதிர்தலிற் கனியோடொத்தலின் வினைமரப் பொதும்பு என்றார். பொதும்பு - சோலை. இஃதறியாதார் பொங்தென்று பொருள் கூறினர்.

இனி, ஆசிரியர் திருத்தக்கதேவரும்,

> "பேதைமை யென்னும் வித்திற்
> பிறந்துபின் வினைகளென்னும்
> வேதனை மரங்கள் நாறி
> வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
> காதலுங் களிப்பு மென்னுங்
> கவடுவிட் டவலம் பூத்து
> மாதுய ரிடும்பை காய்த்து
> மரணமே கனிந்து நிற்கும்" —சீவக. கரு அசு

என்றோதுதலுங் காண்க.

காசு என்றது சிறப்புப்பற்றிப் பொற் காசினையும் பணம் என்றது வெள்ளிப் பணத்தையும் குறித்து நின்றன. காசும் பணமுமாகிய அச்சின் மேனின்று சுழலும் காற்றுடி என்க. மக்களாகிய வினை என்க. மக்கள் முதலியோர் வினைக் கீடாகத் தோன்றுதலின் அங்ஙனம் கூறினர். மாந்தர் மனம் மக்களிடத்தே பெரிதும் மயங்கி அவர் நலங்கருதியே வட்டமிடுதலின் திகிரியோ டொப்பித்தார். "மயக்குறு மக்கள்" எனப் பிற சான்றோரும் ஓதுதலுணர்க. சகடக்கால் - கீழ்மேலாய் உருளுதலால் பெருமையும் சிறுமையு மெய்தும் உடலுக்குவமையாயிற்று.

பாவமாகிய சரக்கென்க. பவக்கடல் - பிறவிக்கடல். கெடுதற்குக் காரணமான தீய வழி என்க. அவ்வழி நரகிற் சேர்த்தலின் ஈண்டுக் கரை யென்றது அதனையே யென்க. கொடுமை - ஈண்டு

வளைவின்மேற்று. "பாவச்சரக்கொடு...மரக்கலத்தை" எனவரும் இதனோடு,

"மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணு
துனையுனு முணர்வை நல்காய் ஒற்றியூ ருடையகோவே"

எனவரும் அப்பரடிகளார் தேவாரம் (திருமுறை-ச.) ஒப்பு நோக்கற் பாலது. புற்கலன் - உயிர். நடுவன் - கூற்றுவன்.

சக—இஉ. நின்......உனக்கே

(இ - ள்.) நின் அடிமலர்க் கமலத்துக்கு அபயம் – பெருமானுகிய நின்னுடைய திருவடியாகிய செந்தாமரை மலர்களுக்கு அடியேன் அடைக்கலங்காண்!; நின் அடைக்கலம் நின் திருவருட்கு அடியேன் அடைக்கலங்காண்!; வெளி இடை உரும் இடி இடித்து என வெறித்து எழும் கடு நடை வெள்விடைக் கடவுள் நின் அடைக்கலம் - வானத்தின் கண் இடியானது இடி யிடித்தழி மாற்றுவிடையினது குரலென்று கருதிப் போர்வெறிகொண்டு எழாநின்ற மறப்பண்பும் விரைந்த நடையும் உடைய வெளிய காளையூர்தியையுடைய முழுமுதற் கடவுளே! எளியேன் நினக்கு அடைக்கலங்காண்!; இமையா நாட்டத்து இறையே அடைக்கலம் – எப்பொழுதும் உறங்கிக் கிடக்கின்ற திருமால் போலாது ஒரு பொழுதும் இமைத்தலில்லாத திருக்கண்களையுடைய இறைவனே எளியேன் நினக்கு அடைக்கலங்காண்!; அடியார்க்கு எளியாய் அடைக்கலம் அடைக்கலம் - மெய்யடியார்க்கு எத்துணையும் எளியோனே அடியேன் நினக்கே அடைக்கலங் கண்டாய்! அடைக் கலம் கண்டாய்!; மறையவர் தில்லை மன்றுள் நின்று ஆடி கருணை மொண்டு அலை எறி கடலே அடைக்கலம் - மறையோதுகின்ற அந்தணர் வாழ்கின்ற திருத்தில்லையின்கண் அறிவம்பலத்திலே எஞ்ஞான்றும் நிலைபெற்று இன்பக் கூத்தாடிக் காண வருகின்ற அடி யார்க்குத் திருவருளை அலை அலையாக வீசாநின்ற பேரருட் பெருங் கடலே! அடியேன் நினக்கு அடைக்கலங்காண்!; தேவரும் முனி வரும் சென்று நின்று ஏத்தப் பாசிழைக் கொடியொடு பரிந்து அருள் புரியும் எம்பெருமான் நின் இணை அடிக்கு அபயம் - திருமால் முதலிய தேவர்களும் தம்புரு நாரதர் முதலிய துறவோரும் வந்து அன்போடு நின்று வழிபடா நிற்ப அவர்க்கெல்லாம் பரிந்து இரங்கிப் பசிய அணி கலன்களையுடைய பூங்கொடியை யொத்த இறைவியோடு எளி வந்து திருவருள் புரிகின்ற எம்பெருமானே! எளியேன் நின்னுடைய இரண்டாகிய திருவடிகளுக்கு அடைக்கலங் கண்டாய்!; அம்பலத்து அரசே உனக்கே அடைக்கலம் - அறிவம்பலத்தே இறைவர்க்கெல்லாம் இறைவனுய்த் திருக்கூத்துகந்தோய்! எளியேன் பிறிதொரு தெய்வமும் வேண்டிலேன் நினக்கே எப்பொழுதும் அடைக்கலங் காண்! என்பதாம்.

(வி - ம்.) நின் மலரடிக்கமலம் என்பது கருத்து. பூவிற் சிறந்தது செந்தாமரைப் பூவே ஆதலின் மலர்க்கமலம் என்ருர். இடித் தென - இடித்தபொழுது என்றவாறு. உவமையாகக் கொள்ளினுமாம். திருமால் முதலிய கடவுளர் துயிலும் போதும் அஞ்சும் போதும்

இமைத்தலும் உண்டாகலின் இமையா நாட்டம் நினக்கே சிறந்துரிமை யுடைத் தென்பார் இமையா நாட்டத்து இறை என்றார். எத்துணையும் பெரியோய் ஆயினும் எத்துணையும் சிறிய உயிரினத்தாராகிய அடியார்க்கு நின்பேரருள் காரணமாக எளியையாகி வந்து அருள் செய்தல் நின்னியல் பென்பது கேட்டறிந்தேன் ஆதலாற்றான் யானும் நின்பால் அடைக்கலம் புகுதக்கருதினேன் என்பார், (நீ) அடியார்க் கெளியாய் (ஆதலின்) அடைக்கலம் என்றார். இறைவன் இப்பண்புடையனாதலை

"நெடியவன் பிரமன் தேடநீண்டவன் தென்னற் கேழின்
முடியதாஞ் சிவலோகத்தைக் காட்டியமுறையீ தையன்
படிமிசை நடந்துபாடிப் பாணன்றன் விறகா ளாகி [வாம்"
அடிமையென் றடிமைகொண்ட வருட்டிற மெடுத்துச் சொல்
—திருவிளை. விறகு, க.

எனவரும் பரஞ்சோதி முனிவர் திருமொழியானும் உணர்க.

பாசிழைக் கொடி - இறைவி. நின்திருவடிகள் இரண்டனுள் ஒன்று திரோதமாகவும் மற்றொன்று முத்தியாகவும் அமைதலின் இணையடிக்கு அடைக்கலம் என்று வேண்டா கூறி வேண்டியது முடித்தார். உனக்கே என்புழி ஏகாரம் வேறு கடவுளரைப் பிரித்து நிற்றலின் பிரிநிலை. என்னை?

"முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்"

எனவும்,

"உங்கையிற் பிள்ளை யுனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லாதார்தோள் சேரற்க!
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்"

எனவும்,

"கொள்ளேன் புரந்தரன் மால் அயன்
வாழ்வு குடிகெடினும்

நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப்பெறி னிறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாதெங்க ளுத்தமனே."

எனவும் எழுந்த மணிவாசகத்தினும் இக்கருத்தினைக் காண்க.

உ. கச்சித்திருவகவல்

திருமால் பயந்த திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியும் மானுடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானுடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விழிவெளி மாக்கள் தெளிவுறக் கேண்மின்
முள்ளுங் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளேலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென இயம்பியும்
நெடுமுடை தாங்கி நின்றிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி
உகிராற் கீற வுலர்ந்துள் ளுருகி
நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன்
நீட்டவும் முடக்கவும் நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவியிங் கியற்றும்

அங்கையைப் பார்த்துக் காந்தளேன் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகேனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் றூய்மல ரேன்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லே முத்தேன மோழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றேழுகும்
கூரிய மூக்கைக் குமிழேனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தோழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரேன்றும்
முள்ளுங் குறம்பி யோழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமேன வாழ்த்தியுங்
கையு மெண்ணெயுங் கலவா தோழியின்
வெய்ய வதரும் பேனும் விளையத்
தக்க தலையோட் டின்முளைத் தேழுந்த
சிக்கின் மயிரைத் திரள்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லு நரக வாயில்
தோலு மிறைச்சியுந் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தோலைபெறு வாயி
லெண்சா ணுடம்பு மிழியும் பெருவழி
மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்
நச்சிக் காமுக நாய்தா னேன்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் திருவரு ளில்லார்
தங்கித் திரியுஞ் சவலைப் பெருவழி
புண்ணிது வேன்று புடைவையை மூடி
உண்ணீர் பாயு மோசைச் சேழும்புண்
மால்கோண் டறியா மாந்தர் புகும்வழி
நோய்கோண் டோழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி

சேருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சோரிந் திழியும் வாயிற் கருகே
சலஞ்சோரிந் திழியுந் தண்ணீர் வாயில்
இத்தை நீங்க ளினிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்டமு மனைத்துள புவனமும்
கண்ட அண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே.

க—எ. திருமால்...கேண்மின்

(இ-ள்.) *திருமால் பயந்த திசைமுகன் அமைத்து வரும் எழ பிறவியுள் மானுடத் துதித்து* - காவற் கடவுளாகிய திருமால் ஈன்றருளிய நான்முகனாகிய படைப்புக் கடவுளாலே படைக்கப்பட்டு வருகின்ற தேவர் முதலிய எழுவகைப் பிறவியினுள் வைத்துப் பெறுதற்கரிய மக்கட் பிறப்பிலே பிறந்திருந்தும்; *மலைமகள் கோமான் மலரடி இறைஞ்சிக் குலவிய சிவபதம் குறுகாது* – இமவான் என்னும் மலையரசனுடைய அருமை மகளாகிய பார்ப்பதியாரின் கொழுநனாகிய சிவபெருமானுடைய செந்தாமரை மலர்போன்ற அழகிய அடிகளைத் தொழுது வணங்கி அம்மக்கட் பிறப்பின் பயனாகப் பொருந்திய சிவபதவி என்னும் வீடு பேற்றினை எய்தாமல்; *அவமே மாதரை மகிழ்ந்து காதல் கொண்டாடும் மானுடர்க் கெல்லாம் யான் எடுத்து உரைப்பேன்* - வீணாக மகளிரைப் புணர்தலின்கட் பெரிதும் களிப்படைந்து அவரோடு காதல் பேசி அவரைப் பாராட்டுகின்ற மாந்தர்க்கெல்லாம் அடியேன் ஒருறுதிப் பொருளை எடுத்துக் கூறுவேன்; *வெளிவிழி மாக்கள் தெளிவு உறக்கேண்மின்* - அகக்கண்ணின்றி புறக்கண் மட்டுமேயுடைய மக்களாகிய நீயிரெல்லாம் மெய்யுணர்வு பெறும் பொருட்டு அதனை நன்கு கேட்டுய்வீராக! என்க.

(வி-ம்.) காவற்கடவுளாகிய திருமாலீன்ற நான்முகன் படைத்த உயிர்களை எல்லாம் அழித்து, மீட்டும் பிறவாவகை பேரின்ப மளிப்பவன் சிவபெருமானே ஆவன் ஆதலால், அவனே முழுமுதற் கடவுள் கண்டீர்! என்பது குறிப்பாகத் தோன்றுமாறு திருமால் முதலிய மூன்று கடவுளரையும் எடுத்தோதினர் என்க. அழிக்குங் கடவுளே முழுமுதற் கடவுள் ஆவன் என்னுமிதனை,

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்
அந்தமாதி யென்மனார் புலவர்,"

எனவரும் சிவஞான போதத்து முதல் நூற்பாவானும் அதற்கு மாதவச் சிவஞான யோகியார் வகுத்தருளிய,

"அவன் அவள் அது என்னும் சொல்லும், அச்சொற்களாற் பெறப்படும் பொருளும் ஆகிய இருவகை யுலகங்களும் தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலுடைமையால் ஒருமுழு முதலால் தோற்று விக்கப்பட்ட என்றும் அழியாத உள் பொருள்களே யாம்; அவை எல்லாவற்றையும் ஒடுக்கும் முழுமுதற் கடவுளின் கண்ணே ஒடுங்கும்; மீளத் தோன்றுங்கால் அக்கடவுளினின்றே தோன்றும். ஆகையால், உலகிற்கு முதற் கடவுள் பேரொடுக்கத்தைச் செய்யும் முழுமுதலே என்பர் அளவை நூலுணர்ந்தோர்" எனவரும் நுண்ணிய பொழிப் புரையானும் உணர்க.

இனி, எழ்பிறவியாவன: தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, நிற்பன (மர முதலியன) என்க. மானுடத் துதித்தும் எனல் வேண்டிய சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது. எழுவகைப் பிறப்பினுள்ளும் மானிடப் பிறப்பொன்றுமே பிறவிப் பயனாகிய வீடுபேற்றினை எய்துந் தகுதியுடைத்தாகலான் அத்தகைய பிறவியுட் பிறந்திருந்தும் வீணே காலங் கழிக்கின்றீர்! என்றிரங்கிய படியாம். என்னை?

"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்
யாதினு மரிதரிது காண்
இப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ?
எது வருமோ அறிகிலேன்"

—சித்தர்கணம், ௭.

என நந் தாயுமான வடிகளாரும் அஞ்சுதலுணர்க.

இன்னும் இந்த மானிடப் பிறவியின் அருமையை, சிவஞானசித்தி யாருள்,

"அண்டசம் சுவேதசங்கள் உற்பிச்சம் சராயுசத்தோ
டெண்டரு நாலெண்பத்து நான்குநூ றுயிரத்தால்
உண்டுபல் யோனி யெல்லாம் ஒழித்துமா னிடத்துதித்தல்
கண்டிடிர் கடலைக் கையா னீந்தினன் காரியங்காண்."

—சிவஞானசித். சுப, ௧௭௯.

என்பதனலும், அரிய அந்தமானிடப் பிறவியை இறைவன் வகுத் தருளியது தானும் அவன் பணி நின்று அவனடி சேர்ந்துய்தற் பொருட்டேயாம் என்பதனை,

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக் காகவன்றே
வானிடத்தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையு முணரார் அந்தோ"

—சிவஞானசித். சுப, ௧௮௨.

என்பதனானும் உணர்க.

குலவுதல் - பொருந்துதல். பிறப்பின் பயனாகப் பொருந்திய சிவபதம் என்றவாறு. சிவபதம் - சிவசாயுச்சியம். அஃதாவது இறைவனோ டிரண்டறக் கலத்தல்.

இறைவன் உயிர்களைப் பிறப்பினுட் படுத்துதலின் நோக்கம் அவை மலநீக்கம் பெற்றுத் தன் மலரடியை மருவி என்று மிறவாப் பேரின்ப மெய்துதல் வேண்டும் என்பதே யாம். அங்ஙன மிருக்கவும் நீயிர் அவனை மறந்து வீணே கேட்டிற் செல்லாம் காரணமாகிய மாதரை விரும்பி அழிந்தொழிகின்றீர் என்பார்,

"சிவபதங் குறுகாது அவமே மாதரை மகிழ்ந்து காதல் கொண் டாடும் மானுடர்" என்றார். பின்னரும் நீயிர் மானுடத் துதித்தும் வறிய விலங்குகளாகவே வாழ்கின்றீர் என்பார்,

'மாக்கள்' என்றார். என்னை? "மாவும் மாக்களும் ஐயறி வுயிரே" (தொல் - மரபி ௩௨) என்பதற் கிணங்க நீயிரும் மாக்களே என்றார். வெளிவிழி மாக்கள் என மாறுக. இனி விளிவெளி மாக்கள் என்றும் பாட வேறுபாடுண்டு. இதற்கு இறப்பதே தொழிலாகக் கொண்ட வெள்ளையுள்ளப் பேதையீரே எனப் பொருள் கொள்க. யான் ஒன்று எடுத்துரைப்பேன் என வருவித்தோதுக. அதனை நன்கு விழிப்புடன் கேண்மின் என்று செவியறிவுறுத்துவார் 'தெளிவுறக் கேண்மின்!' என்றார்.

அ—கடு. முள்ளும் ....துதித்தும்

(இ - ள்.) முள்ளும் கல்லும் முயன்று நடக்கும் உள்ளங்காலைப் பஞ்சு என உரைத்தும் - மகளிருடைய முள்ளிலும் கல்லிலும் பெரிதும் முயன்று நடத்தற்கியன்ற வன்மையுடைய உள்ளங்காலைப் பஞ்சு போலும் மிகவும் மெல்லியது என்று கூறியும்; வெள் எலும்பாலே மேவிய கணைக்காலைத் துள்ளும்வரால் எனச் சொல்லித் துதித்தும் - வெள்ளிய எலும்பாலியன்ற கணைக்காலை நீரிலே துள்ளிப்பாய்கின்ற வரால் மீன் போன்றது என உவமை எடுத்துக் கூறிப்புகழ்ந்தும்; தசையும் எலும்பும் தக்க புன் குறங்கை கதலித்தண்டு இசையும் என இயம்பியும் - தசை மிகுத்து எலும்பு பருத்து உடலைச் சுமக்குந் தகுதி பெற்றுள்ள அம்மாதருடைய புன்மையான துடையைப் பார்த்து இதற்கு வாழையிளந்தண்டே உவமையாகப் பொருந்தும் என்று கூறியும்; நெடுமுடை தாங்கி நின்றிடும் இடையை துடி பிடி யென்று சொல்லித் துதித்தும் - அம்மகளிருடைய நெடிய ஊன் பிண்டமாகிய உடம்பைத் தாங்கி நிற்றற்கியன்ற பருமையும் வலிமையும் உடைய இடையைப் பார்த்து இஃது உடுக்கையை ஒக்கும் என்றும், ஒருகைப் பிடியுளங்கிடும் என்றும் கூறிப் பாராட்டியும்; என்க.

(வி - ம்.) மகளிரின் உறுப்புக்களை இவ்வாறு புகழ்ந்து கூறுவதனைக் காப்பியங்களிலேயும் யாண்டும் காணலாம்:

"அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்"

—குறள், ௧௧௨௦.

என்பது திருக்குறள்.

கதலி - வாழை. 'நெடுமுடல்' என்னும் பாடம் பிழையாதல் புணர்ச்சி விதி பிழையாதலால் உணர்க. தாங்கி நின்றிடுமிடை என்றது, தாங்கி நிற்றற்கேற்ற வன்மையும் பருமையுமுடைய இடையை என்பது பட நின்றது. காப்பியக் கவிஞர் இத்தகைய இடையை; உண்டோ? இல்லையோ? என்று ஐயுறும்படி நுணுகிய இடை என்றுங் கூறுவர்.

'' சில்லிய லோதி கொங்கை திரள்மணிக் கனகச் செப்பில்
வல்லியு மனங்கன் வில்லு மான்மதச் சாந்திற் றீட்டிப்
பல்லிய னெறியிற் பார்க்கும் பரம்பொரு ளென்ன யார்க்கும்
இல்லையுண் டென்ன நின்ற விடையினுக் கிடுக்கண் செய்தார்''

எனவரும் கம்பநாடர் (கோலங் - கஉ) செய்யுளை நோக்குக!

கசு—உங. மலமும்...உரைப்பேன்

(இ - ள்.) மலமும் சலமும் வழும்பும் அலையும் திரையும் வயிற்றை ஆல் இலை என்றும் - அருவருப்பான மலமும் மூத்திரமும் கொழுப்பும் அகத்தே குழம்பி அலையப்பெற்றுப் புறத்தே மடிப்பு விழுந்த அம்மங்கையருடைய வயிற்றைப் பார்த்து இஃது ஆலினது தளிர் போன்றதெனக் கூறியும்; சிலந்தி போலக் கிளைத்து முன் எழுந்து திரண்டு விம்மி உகிரால் கீறச் சீ பாய்ந்து எறி உலர்ந்து நகுவார்க்கு இடமாய் நான்று வற்றும் முலையைப் பார்த்து உள் உருகி முளரி மொட்டு என்றும் - கொப்புளம் போன்று இரட்டையாய் மார்பின்கட் டோன்றித் தசையாலே திரட்சியுற்றுப் பருத்து நிமிர்ந்து காமுகர் தம் நகத்தாலே கீறிய விடத்தே சீழ்ப்பிடித்து வீங்கிப் பின் (மருந்திடுதலாலே) காய்ந்து நகைப்போர்க்கு அந்நகையைப் பிறப்பித்தற் கியன்றதொரு நிலைக்களனாய்த் தூங்கி வற்றிக் கிடக்கின்ற இயல்பு வாய்ந்த அம்மகளிர் தம்முலையை அவாவோடு நோக்கி நெஞ்சுருகி நின்று ஆ! ஆ! இவற்றின் அழகிருந்தவாறென்னே! இவை செந்தாமரையின் நாளரும்புகளையே ஒக்கின்றன அல்லவோ என்று பிதற்றியும், குலையும் காமக் குருடர்க்கு உரைப்பேன் - மனவுறுதி குலைகின்ற காமுகராகிய குருடர்களுக்கு இன்னும் கூறுவேன், என்க.

(வி - ம்.) வழும்பு - கொழுப்பு. அலையும் வயிறு திரையும் வயிறு எனத் தனித்தனி கூட்டுக. திரைதல் - மடிப்பு விழுதல். சிலந்தி - ஒருவகைச் சிரங்கு. இரண்டாதலிற் கிளைத்து என்றார். சீ - சீழ். காமுகர் உகிராற் கீற என எழுவாய் விருவித்தோதுக. உகிராற் கீறுதல் நகக்குறி யிடுதல். உகிராற் கீறச் சீப்பாய்ந் தென்க. நான்று - தொங்கி. முலையைப் பார்த்து என்றது முலையை அவாவோடு பார்த்து என்பது பட நின்றது. அகக் கண்ணில்லாமையாற் குருடர் என்றார்.

கண் கூடாக அவற்றின் புன்மைகளைப் பார்த்தும் பாராதவராய் இவ்வாறு பொருந்தாதவற்றைக் கூறலானும் குருடர் என்றார். அதற்குக் காரணம் அவர் தம் அவாவன்றிப் பிறிதில்லையாகலின் அதனை உடம்படுத்துக் காமுகக் குருடர் என்றார்.

உச—௩௪, நீட்டவும்......கூறியும்

(இ - ள்.) இங்கு நீட்டவும்முடக்கவும் நெடும்பொருள் வாங்கவும் ஊட்டவும் பிசையவும் உதவி இயற்றும் கையைப் பார்த்து அம்காந்தள்

என்று உரைத்தும் - இவ்வுலகத்தே மடந்தையர்க்கு நீட்டி முடக்கித் தொழில் செய்யவும் காமுகர் தரும் நெடிய பொருள்களை ஏற்றுக் கொள்ளவும் காமுகர்க்கு உணவு ஊட்டவும் பிசையவும் உதவி செய்கின்ற அவர் தம் கையைப் பார்த்து இவை அழகிய செங்காந்தள் மலர்களை ஒக்கும் என்று கூறியும்; வேர்வையும் அழுக்கும் மேவிய கழுத்தைப் பாரினில் இனிய கமுகு எனப் பகர்ந்தும் - வியர்வை நீரும் அழுக்கும் பொருந்திய அவர் தம் கழுத்தைப் பார்த்து இஃதிவ்வுலகிலே காண்டற்கினிய கமுகையே ஒக்கும் என்று கூறியும்; வெப்பும் ஊத்தையும் மேவிய வாயைத் துப்பு முருக்கின் தூய்மலர் என்றும் - உடலின் வெப்பமும் ஊத்தையும் பொருந்திய அம்மகளிருடைய வாயினைப் பார்த்து பவளம் என்றும் முருக்கினது தூய மலர் போல்வதென்றும்; அன்னமும் கறியும் அசைவிட்டு இறக்கும் முன்னிய பல்லை முத்து என மொழிந்தும் - சோற்றையும் கறிகளையும் நன்கு மென்று வயிற்றினுள் இறக்கி விடுகின்ற கருவியாகி முகத்தின்கண் முற்பட்டுத் தோன்றுகின்ற அம்மகளிருடைய பற்களைப் பார்த்து இவை முத்துக்களையே ஒக்கும் என்று கூறியும்; நீரும் சளியும் நின்று நின்று ஒழுகும் கூரிய மூக்கைக் குமிழ் எனக்கூறியும் - அருவருப்பான நீரும் கோழையும் இடையறாது நிலைபெற்று நின்று ஒழுகுமியல்புடைய அவர் தம் கூர்த்த மூக்கினைப் பார்த்து இது குமிழ மலரையே ஒக்கும் என்று சொல்லியும் என்க.

(வி - ம்.) பொருள் வாங்கவும் என்றது காமுகர் தருகின்ற பொருளை வாங்கவும் என்பதுபட நின்றது. இதனால் இவர் விலைமகளிரையே பழிக்கின்றார் என்று கொள்க. துறவோர் மகளிரை இங்ஙனம் பழிக்கும் வழக்கம் நந்தமிழகத்தே பண்டைக் காலத் துறவோர்பாற் காணப்படவில்லை; இவ் வழக்கம் புத்தசமணத் துறவோரிடத்தினின்றும் சைவசமயம் முதலிய ஏனைச் சமயத்துறவோரிடத்தும் பரவுவதாயிற்று. எத்தகைய ஆற்றலுடையோரும் தத்தங்கால வழக்கங்களை முற்றிலும் ஒருவி நிற்றல் கூடாமையான் முற்றத் துறந்த பெரியோர் பலரும் நம் தமிழகத்தேயும் இவ்வாறு மகளிரை வெறுத்துக் கூறலாயினர் என்று அமைக.

இனி, ஊட்டவும் என்றது காமுகர்க் குணவூட்டவும் என்பதுபட நின்றது. அம்கையை என்றல் ஈண்டுப் பொருந்தாமையால் அம் என்பதனைக் காந்தளொடு கூட்டலாயிற்று. பாரினில் காண்டற்கினிய கமுகென்க. வெப்பு — உடலைத் தாக்குகின்ற மிகையான வெப்பம். இவ்வெப்ப நிலை மாந்தருடைய ஏனைய வுறுப்புக்களினும் பார்க்க வாயிலே நன்கு வெளிப்பட்டுத் தோன்றுதலுண்மையின் வெப்பும் ஊத்தையும் மேவிய வாய் என்றார். துப்பு - பவளம்; சிவப்புமாம். அன்னம் — சோறு. அசை விடுதல் - மாடு ஆடுகள் இரையைக் கக்கி மெல்லுதல். இழிபுபற்றி இதனை மக்கட் பிறப்பினர்க்குங் கூறினர். இழிபுபற்றி "கழிபேரிரையான்" என வள்ளுவரும் இங்ஙனங் கூறுதல் காண்க.

முன்னியபல் - முற்பட்டுத் தோன்றும் பல். காமக் குறிப்பினை முற்பட வுணர்த்துதலின் அங்ஙனம் கூறினர் எனினுமாம். குமிழ் — ஒருவகை மலர். இதனை மூக்கிற்குவமை கூறுதல் மரபு.

௧௫—௪௨. தண்ணீர்......முகிலென்றும்

(இ - ள்.) தண்ணீர் பீளை தவிராது ஒழுகுங் கண்ணைப் பார்த்துக் கழுநீர் என்றும் - குளிர்ந்த நீரும் பீளையும் இடையறாது ஒழுகுதற்கிடனான அம்மகளிருடைய கண்ணை நீவிர் காமவேட்கையோடு பார்த்து, இவை செங்கழுநீர் மலரை ஒக்கும் என்று புகழ்ந்து கூறியும்; உள்ளும் குறும்பி ஒழுகும் காதை வள்ளைத் தண்டின் வளம் என வாழ்த்தியும் - புறத்தே சீழ் ஒழுகுதலன்றியும் உட்பகுதியிலும் குறும்பி என்னும் அழுக்கொழுகுகின்ற அம்மகளிருடைய செவிகளைப் பார்த்து இவற்றின் அழகு வள்ளைத் தண்டினது அழகையே ஒக்கும் என்று நலம் பாராட்டிக் கூறியும்; கையும் எள் நெயும் கலவாது ஒழியின் வெய்ய வதரும் பேனும் விளையத்தக்க தலையோட்டின் முளைத்தெழுந்த சிக்கின் மயிரைத் திரள்முகில் என்றும் - கையினது ஒப்பனைத் தொழிலும் எண்ணெயும் கூடாத விடத்தே வெவ்விய ஈரும் பேனும் புழுத்தற்கிடனான தலையோட்டின் மேலே முளைத்து வளர்கின்ற சிக்குடைய அம்மகளிர் கூந்தலைப் பார்த்து இது வானிடத்தே திரள்கின்ற முகிலென்றும்; என்க.

(வி - ம்.) தண்ணீர் என்புழி தண்மை வாளா இயல்படை மாத்திரையாய் நின்றது. கண்ணைப் பார்த்து என்புழிக் கண்ணைக் காமுற்றுப் பார்த்து என்பதுபட நின்றது. மகளிர் உறுப்பின் அழகெல்லாம் உங்களுடைய காமமென்னும் மருளாலே தோன்றுகின்ற கற்பனைகளேயன்றி வாய்மையானவை அல்ல என்பது கருத்து. உள்ளும் என்றதனாற் புறத்தே சீழ் ஒழுகுதலன்றியும் என்பதும் கூறிக்கொள்க. வளம் என்பது ஈண்டு அழகு என்னும் பொருள்பட நின்றது. 'வெய்ய வதரும்' என்புழி வதர் என்றுதல், அதர் என்றுதல் கண்ணழிக்கலாம். ஆயினும் வதர் என்றுதல், அதர் என்றுதல் 'ஈர்' என்பதற்குப் பெயர் கண்டதுண்டாயிற் கொள்க. யாங் கண்டிலேம். ஆகவே 'வெய்ய வீரும் பேனும்' என்னும் பாடமே இவ்வாறு திரிந்தது என்று யாம் கருதுகின்றேம். இதனை ஆராய்ந்து முடிவு கொள்க. 'ஈர்', என்னும் வழக்கே பெரும்பான்மை. 'ஈருடை யிருந்தலையார்' என்பது பெரும்பாணாற்றுப்படை. ஈர் - பேன் குஞ்சு.

௪௩—௬௩. சொற்பல......வேண்டா

(இ - ள்.) நீங்கள் பல சொற் பேசித் துதித்து நச்சிச் செல்லும் நரகவாயில் - இன்னும் மாந்தர்காள்! நீங்கள் இவ்வாறு பற்பல இன்மொழிகள்பேசி மாதரை விரும்பிப் போதற்குக் காரணமான நரகவாயில் போன்ற அவர் தம் அல்குலின் தன்மையைக் கூறக் கேண்மின்! அது தான்; தோலும் இறைச்சியும் துதைந்து சீப்பாயும் காமப்பாழி - புன்தோலும் தசையும் செறிந்து சீழ்பாயா நின்றதொரு காமமென்னும் விலங்குகள் புகுதும் முழைஞ்சு என்பேன்; கருவிளை கழனி - கரு உருவாகின்றதொரு வயல் என்பேன்; தூமைக்கட வழி தொலைபெறு வாயில் - தூமை என்னும் அருவருக்கத் தக்க குருதி நிரம்பிய குடம் நழுவி வீழ்கின்ற வாயில் அக்குருதி திங்கள் தொறும் கழிந்தொழுகுகின்றதொரு வாயில் என்பேன்!; எண்சாண் உடம்பு இழியும் பெருவழி - மக்களுடைய எட்டுச்சாண் நீளமுள்ள உடல் நிலத்திலே இறங்குதற்கியன்றதொரு பெரிய வழி என்பேன்!; மண்பால் காமங்

கழிக்கும் மறைவிடம் - உலகத்தின்கண் காமுகக்கயவர் தங் காம நீர் கழிக்கும் மறைவானதொரு அங்கணம் என்பேன்; காமுக நாய்தான் என்றும் இச்சித்திருக்கும் இடைகழி-காமுகராய நாய்கள் நாடோறும் விரும்பிக் கிடத்தற்குக் காரணமான இடைகழி வாயில் என்பேன்; திங்கள் சடையோன் திருவருள் இல்லார் தங்கித் திரியும் சவலைப் பெருவழி - திங்கள் சூடிய சடையையுடைய சிவபெருமானுடைய திருவருட் பேறில்லாத சிற்றின மாக்கள் கருவினுட்டங்கி உலகிற் பிறந்து திரிவதற்கியன்றதொரு மெல்லிய பெரிய வழி என்பேன்; இது புண் என்று புடைவையை மூடி உள்நீர் பாயும் ஓசைச் செழும்புண் - அம் மகளிரே இது புண்ணென்று கருதிப் புடைவையான் மூடிவைத்தழியும் அப்புண்ணகத்துள்ள செந்நீர் பாய்கின்ற ஒலியையுடைய செழிப் புடையதோர் ஆறாத பெரும்புண் என்பேன்; அறியாமாந்தர் மால் கொண்டு புகும்வழி - மெய்யுணராத மடவோர் மயக்கங் கொண்டு புகுகின்றதொரு வழி என்பேன்; நோய்கொண்டு ஒழியா நுண்ணியர் போம்வழி - காமநோய் கொண்டு அது தீர்கிலாத சிறியோர் மீண்டும் கருவினுட்டங்குதற்குப் போகின்றதொரு வழி என்பேன்; தருக்கிய காமுகர் சாரும் படுகுழி - யான் எனது என்று செருக்குற்ற காமுகர் மீண்டும் பிறவியிற் சென்று சேர்தற்கியன்றதொரு பெரிய குழி என்பேன்; செருக்கிய காமுகர் சேரும் சிறுகுழி - யாரே எமக்கு நிகர் எனச் செருக்குற்றுத் திரிகின்ற காமுகக் கயவர் மீண்டும் பிறவியிற் சேர்தற்குக் காரணமான சிறியகுழி என்பேன்; பெண்ணும் ஆணும் பிறக்கும் பெருவழி - இத்தகைய தீவினையாளர் மீண்டும் மீண்டும் பெண்ணாகவாதல் ஆணாகவாதல் பிறத்தற்குரிய பெரியதொரு வழி என்பேன்; மலஞ் சொரிந்து இழியும் வாயிற்கு அருகே சலஞ் சொரிந்து இழியும் தண்ணீர் வாயில் - மலமானது சொரிந்திறங்கு கின்ற அருவருக்கத் தகுந்த எருவாயிலுக்கு அணித்தாக மூத்திரம் சொரிந்திறங்குகின்றதொரு தண்ணீர் வழி என்பேன்; இத்தை நீங்கள் இனிது என வேண்டா - இத்தகைய இழிதகவுடைய மகளிர் தம் அல்குலை நீங்கள் இனியதொரு பொருள் என்று கூறுதே கொண் மின் ! என்க.

(வி - ம்.) நரகவாயில் என்பது அன்மொழித் தொகையாய் 'அல்குல்' என்னும் பொருட்டு என்க. பாழி - முழைஞ்சு; என்பேன் என இசை யெச்சமாக யாண்டும் கூறிக்கொள்க. எண்சாணுடம்பு என்பது பெருவாயில் என்பதற்குக் குறிப்பேதுவாய் நின்றது. காம நீர் கழிக்கும் மறைவிடம் என்க. மலமும் மூத்திரமுங் கழிக்கு மறை விடம் போல்வது என்பது கருத்து. இடை கழிவாயில் வீட்டினுள் ளிருந்து முன்றிலுக்குச் செல்வதற்கமைந்த ஒடுங்கிய வழி. இஃது இக் காலத்தே 'ரேழி' என மருவி வழங்கும். சவலை - மென்மை. மூடி யும் எனல் வேண்டிய உம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது. மால் - மயக்கம். மால் கொண்டு வாய்மை யறியாத மாந்தர் என்ற வாறு. நுண்ணியர் - சிறியோர். தருக்கிய காமுகர் மீண்டும் கருவி னுட்சாரும் என்றும், செருக்கிய காமுகர் கருவினுட் சேரும் என்றும் விரித்துரைக்க. மலஞ் சொரிந்து இழியும் வாயில் - எருவாய். "எருவாய்க் கிருவிரல் ஏறுண்டிருக்கும் கருவாய்" எனப் பிறுண்டும் ஓதுவர். சலம்-மூத்திரம். தண்ணீர் வாயில், என்பது வாளா பெயர் மாத்திரையாய் நின்றது. இத்தை: விகாரம்.

சுச—எ0. பச்சிலை......ஒழிந்தே

(இ - ள்.) போக மாதரைப் போற்றுதல் ஒழிந்து - ஆதலால் அன்புடையீர் முற்பயக்கும் இன்பத்தினும் பிற்பயக்கும் பீழை பெரிதுடைய சிற்றின்ப நுகர்ச்சிக்குரிய மகளிரை இவ்வாறு பொருந்தாதன கூறிப்போற்றி அவர் தம் நலம் பாராட்டுதல் ஒழிந்து, நீயிர் இற்றை நாள் தொடங்கி; பச்சிலை இடினும் - வில்வ முதலிய பசிய இலைகளைத் தன் திருவடியிலே இட்டு வழிபட்ட வழியும்; பத்தர்க்கு இரங்கி மெச்சிச் சிவபத வீடு அருள்பவனை - மெய்யன்பராயினார்க்குப் பெரிதும் பரிந்து அவர்தமைப் புகழ்ந்து சிவபதமாகிய வீட்டின்பத்தை வழங்குகின்ற எண்மையுடையவனும்; முத்திநாதனை - வீட்டுலகிற்குத் தலைவனும்; மூவா முதல்வனை - எஞ்ஞான்று மூத்தலில்லாத முழுமுதற் கடவுளும்; அண்டர் அண்டமும் அனைத்து உள புவனமும் கண்ட அண்ணலை-தேவர்கள் வாழும் விண்ணுலகையுள்ளிட்ட எல்லா வுலகங்களையும் படைத்தருளிய பெரியோனும்; கச்சியில் கடவுளை - அங்ஙனம் பெரியோனாயினும் அடியார் பொருட்டுக் காஞ்சிபுரத்திலே திருக்கோயில் கொண்டிருக்கின்ற இறைவனும்; ஏகநாதனை - தனிப் பெருந் தலைவனும் ஆகிய சிவபெருமானுடைய; இணை அடி இறைஞ்சுமின் - இரண்டாகிய திருவடிகளை வணங்கி வழிபாடு செய்யுமின்; செய்வீராயின் பிறவிப் பெருங்கடல் நீந்தி உய்தல் ஒருதலை என்பதாம்.

(வி - ம்.) இறைவனை வழிபாடு செய்தலின் எளிமையையும், அவன், அடியார்க் கெளியனாதலையும் ஒருசேரக் கூறுவார் "பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி மெச்சிச் சிவபத வீடருள்பவன்" என்றார்;

"யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண் ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"

எனவரும் திருமந்திரமும் (உ௫உ) ஈண்டு நினைக. இன்னும்,

"புறம்பயும் அரன்கழல்கள் பூசிக்க வேண்டில்
பூமரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கொண்டு
சிறந்தாருஞ் சீர்ச்சிவனை ஞானத்தா லங்குச்
சிந்திக்கும் படியிங்குச் சிந்தித்துப் போற்றி
அறம்பாவங் கட்குநா மென்கடவே மென்றும்
ஆண்டவனைக் கண்டக்கா லகம்புறமென் றோதே
திறம்பாதே பணிசெய்து நிற்கை யன்றோ
சீரடியார் தம்முடைய செய்தி தானே"

—சுபக்கம்: ௬. சு

எனவருஞ் சிவஞான சித்தியாரும் காண்க.

இனி, ஏகநாதன் இணையடி இறைஞ்சுவார்க்கு அவன்பால் எழும் அன்பே தலைசிறந்த வழிபாட்டுப் பொருள் என்பது தோன்ற பித்தர்க்கு என உடம்படுத்தோதினர், என்னை?

"அன்பும் சிவமுமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே" —திருமந் - உஎ0

எனவும்,

"அன்பேயென் அன்பேயென் றன்பா லழுதரற்றி
அன்பேயன் பாக அறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்" —திருக்களிற், ௫௭

எனவும் பிரசான்றோரும் ஓதுதலுணர்க.

உயிர்கட்கு வீடருளும் இயல்பு சிவபெருமானுக்கே சிறந்துரிமையுடைய தென்பார், 'முத்திநாதன்' என்றார்.

திருமால் முதலிய ஏனைக்கடவுளர் எல்லாம் பிறந்திறந்து சுழலுங் கடவுளர் ஆவர். சிவபெருமான் ஒருவனே பிறவாயாக்கைப் பெரியோன் என்பார், 'மூவா முதல்வன்' என்றார். பச்சிலையிடினும் பத்தர்க் கெளிவருவானாயினும் அவன் சாலவும் பெரியன் என்பார், "அண்டரண்டமு மனைத்துள புவனமும் கண்ட அண்ணல்" என்றார். காணுதல் ஈண்டுப் படைத்தற் றொழிலின் மேலதாய் ஏனை நான்கு தொழிலையும் இனஞ் செப்புமாற்றாற் றழுவி நின்றதென்க.

"ஒன்றே தெய்வம்" என்னும் பண்டைத் தமிழர் மெய்க் காட்சிக்கியன்ற அவ்வொரு தெய்வமும் அவனே என்பார் 'ஏகநாதன்' என்றார். அவனை இறைஞ்சின் என்றென்றும் அழியாப் பேரின்பத்தே வைகுவிர் என்பது குறிப்பு என்க.

௨. கச்சித்திருவகவல் முற்றிற்று.

௩. திருவேகம்பமாலை

[காஞ்சிபுரத்தின்கண் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற திருவேகம்ப நாதனைப் பாடிப் பரவிய சொன்மலரானியன்ற மாலை.]

[கட்டளைக்கலித்துறை]

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை என்சொல்லு வேன்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே!—திருக்கச்சி யேகம்பம் என்னும் திருவூரில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே!; அறம் இயற்றும்

அவனிலும் இல்லம் துறந்தான் கோடி அதிகம் - நூலோர் வகுத்த இல்லற நெறி நின்று அந் நெறிக்கியன்ற அறங்களை எஞ்சாமல் செய்து வருகின்ற இல்லறத்தானினுங் காட்டில், அந்த இல்வாழ்க்கையை விடுத்துத் துறவறத்தார்க்குரிய ஒழுக்கத்தே நின்றவொரு துறவியான வன் பல நூறுயிர மடங்கு பெருமையுடையோன் ஆவன். அவனின் உள்ளத்துறவு உடையோன் சதகோடி - இனி அந்தத் துறவொழுக்க முடையவனினுங் காட்டில் உள்ளத்திலே பற்றற்றவன் பல நூறு நூறு யிர மடங்கு பெருமையுடையோன் ஆவன்; மறம் அறஅறிவோடு இருந்து கற்று இருவாதனை அற்று இறந்தான் பெருமையை என் சொல்லு வேன் - இனித் தன்னெஞ்சத்தே பற்றற்குரிய நினைவு எல்லாம் அற்றுப் போகும்படி சிவயோகத்தைப் பயின்று மெய்ப்பொருளோடு ஒன்றி யிருந்து இருள்சேர் இருவினை யானும் வரும் இன்பமும் துன்பமுங் கெட்டு, மெய்யுணர் நிலையினின்று இம்மையிலேயே கருவி கரணங் கடந்த நிலையை யெய்திய சான்றோரின் பெருமையின் அளவை என்னென்று அறுதியிட்டுக் கூறுவேன்காண் என்பதாம்.

(வி - ம்.) அறந்தான் இயற்றும் அவன் என்றது, ஒத்த அன்பு முதலியவுடைய இல்லாளோடு கூடி மனைக்கண்ணிருந்து விருந் தோம்பன் முதலாக, ஈதல் ஈறுகச் சொல்லப்பட்ட அறங்களின் வழுவா தொழுகுகின்ற இல்வாழ்வுடையானை என்க! என்னை,

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று" —குறள், ௪௯

என வள்ளுவப் பெருந்தகையாரும் பிரிநிலை ஏகாரத்தோடு கூறுதலு முணர்க.

இனி, அறந்தான் இயற்றும் அவனிலும் என்றமையால் இல்லத்தே மனைவி மக்களுடன் கூடி யிருந்தும் அறமியற்றுதாரினும் அறமியற்று வோன் பெருமையுடையோன் என்பதும் பெறப்பட்டமை யறிக.

இனி இல்லந் துறந்தான் என்றது, இல்லறத்தின்கண் வழுவா தொழுகிப் பல்வேறு பிறப்புக்களிலே அடிப்பட்டு வருகின்ற பட்டறிவு (அநுபவம்) காரணமாக,

"பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே"

என்றும், பிறந்தோருறுவது பெருகிய துன்பம், பிறவாருறுவது பெரும் பேரின்பம் என்றும் ஐயந்திரிபற மெய்யறிவு கைகூடப்பெற்றுப் பிறப் பிற்குக் காரணமான அவாவறுதற்கு இயன்ற நோன்பு முதலிய ஒழுக் கங்களைக் கடைப்பிடியாகக் கொண்டொழுகுதற் பொருட்டுத்தான் பயின்று வந்த இல்வாழ்க்கையில் உவர்ப்புத் தோன்றி மெய்யுணர்வு பின்னரும் முறுகி வளர்தற் பொருட்டு இறைவனைப் புறத்தே உருவத் திருமேனியினும் புறத்தேயும் அகத்தேயும் அருவுருவத் திருமேனி யினும் அகத்தே அருவத் திருமேனியினும் கண்டு வழிபடும் சரியை கிரியை யோகம் என்னும் மூவகை நிலையினரையும் என்க.

இனி, உள்ளத்துறவுடையோன் என்றது நாலாம் நிலையாகிய மெய்யறிவு நிலைக்கண் நிற்பாரை; என்னை? மெய்யறிவு தலைப்பட்டுழிப்

பொருளல்லவற்றைப் பொருள் என்றுணர்ந்து அவற்றைப் பற்றுதற் கேதுவாகிய மருள் துவரக் கெடுதலால் அவர் தம்முள்ளம் இயல்பாகவே பற்றறுதியை எய்துதலின் அத்தகையோரையே உள்ளத்துற வுடையோன் என்றார் என்க. இதனை,

“ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்லவா கமஞ்சொல்ல அல்லவா மென்னும்
ஊனத்தார் என்கடவர் அஞ்ஞா னத்தால்
உறுவதுதான் பந்தம் உயர் மெய்ஞ்ஞா னந்தான்
ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போல்
அஞ்ஞானம் விடப்பந்த மறும்முத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞான மென்பர்”

எனவருஞ் சிவஞானசித்தியாரானும் (சுபக்கம், உஅ0) உணர்க.

இனி, மறம் என்றது தானல்லாதவற்றைத் தானெனன எண்ணும் செருக்கும் தனதல்லாதவற்றைத் தனதென்னும் செருக்கும் இவற்றுலாம் பற்றும் பிறவுமாம். இவை அறக்கற்றலாவது, மெய்யுணர்வு தரும் நூல்களை ஓதுதலும் ஓதுவித்தலும் பிறவுமாம் என்னை?

“ஞான நூல் தனையோதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்று
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி யடைவிக்கு மெழின்ஞான பூசை
ஊனமிலாக் கன்மங்கள் தபம்செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன் றுயருமிவை யூட்டுவது போகம்
ஆனவையான் மேலான ஞானத்தா லரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோ ரெல்லாம்”

எனச் செவியறிவுறுத்துதலும் உணர்க. —சித்தியார், சுபக்-உஎச

இனி, அறிவோடிருந்து என்றது, தன்முனைப்பற்று எல்லாம் இறைவன் செயலே என்றுணர்ந்து அவன் திருவருளிலே மூழ்கி யிருத்தல். என்னை?

“மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாதம்
மேவுதலும் ஞானம்விளைந் தோர்குருவி னருளால்
புக்கனுட்டித் தேநிட்டை புரிந்து ளோர்கள்
பூதலத்திற் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி ஓட்டில்
தபனியத்தில் சமபுத்தி பண்ணிச்சங் கரனோ
டொக்கவுறைந் திவர்அவனை அவன்இவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன்தோற்ற மொன்றுமே காண்பர்”
—சித்தியார், சுபக்கம், உஅக

எனவும்,

"அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினன் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திடும்பை யாயில்
பிறியாத சிவன்றானே பிறிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தானாய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவன் நிராதார னாயே"
—சித்தியார், சுபக்கம், உஅஉ

எனவும் வரும் செய்யுள்களும் நோக்குக.

இனி, இங்ஙன மிருக்கும் நிலையைச் சீவன்முத்தி என்ப. சீவன் முத்தித்தன்மை வந்துற்றவழி இருவகை வினைத்தொடர்பும் துயரும் துவரநீங்கிப் போதலின், இருவாதனையற்று என்றார். இருவாதனை - இரண்டுவகை வினையால் நிகழும் இன்ப துன்பங்கள் என்க. என்னை?

"புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத் தினாலே
நண்ணியஞா னத்தினால் இரண்டினையும் அறுத்து
ஞாலமொடு கீழ்மேலு நண்ணா னாகி
எண்ணுமிக லோகத்தே முத்திபெறும் இவன்றான்
எங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயங்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதான்போல் நிற்பன்"
—சித்தியார், சுபக்கம், உஅங

என வருதலும் நோக்குக.

இத்தகைய சீவன் முத்தன் இகலோகத்தே முத்திபெற்றே இருத்தலின் இவனையே அடிகளார் "மறந்தான்......இறந்தான்" என்று கூறியுள்ளார். சர்வசங்க நிவர்த்தி வந்த தபோதனர்கள் என்றும்; இவர் பெருமை சொல்லொணாத் தன்மைத்து என்றும் ஞான நூல்கள் விளம்பும். இங்ஙனமே அடிகளாரும்,

"இறந்தான் பெருமையை என் சொல்லுவேன்"? என்று வினவினர். இவ்வினா அதன் எதிர்மறைப் பொருளாகிய சொல்ல வியலாமையை வற்புறுத்து நின்றது. (க)

கட்டியணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்தி விட்டாற்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகி யப்பா
லெட்டி யடிவைப்ப ரோவிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே - கடவுளே! திருக்கச்சி யேகம்பத்து எழுந்தருளிய சிவபெருமானே!; காலத்தச்சன்

வெட்டி முறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்தி விட்டால் - காலன் என்னும் தச்சனுனவன், கோடரியாலே வெட்டி முறித்து வீழ்த்தப் பட்ட மரம் போன்று இந்த வுடம்பினைத் தன் கணிச்சிக் கூர்ம்படையாலே வெட்டி வீழ்த்திவிட்ட பொழுது; கட்டி அணைத்திடும் பெண்டிரும் மக்களும் அழுவார் - காமப்பிணி வந்துற்றபோது அதனைத் தணித்துக் கோடற்பொருட்டுக் கைகளால் கட்டிப் பிடித்து இறுக அணைத்துக் கொள்கின்ற மகளிரும் அவர்பாற் பிறந்த மக்களும் கோவென்று கதறியழா நிற்பர்; கொட்டி முழக்கி மயானம் குறுகி அப்பால் எட்டி அடிவைப்பரோ - பின்னர் நெய்தற் பறையைக் கொட்டி முழக்கி ஆரவாரஞ் செய்து அந்த வுடலைச் சுமந்து நன்காடு வரையிற் போகுவர்; அதற்கு அப்பால் தம்மடியிரண்டனுள் ஒன்றனையேனும் எட்டி வைப்பரோ? வையார்காண் என்பதாம்.

(வி - ம்.) உடலை மரத்தோடொப்பித்தலின் காலனைத் தச்சன் என்றார். காலன் - கூற்றுவன். அவனது ஆற்றலுங் கொடுமையும் தோன்ற வெட்டி முறிக்கும் மரம் போல் என்றார். அடிவைப்பரோ? என்னும் வினு வையார் என அதன் எதிர்மறைப்பொருளை வலியுறுத்து நின்றது.

மயானத்திற்கு அப்பால் நின்னை யன்றி எமக்குற்றார் யாருளரோ என்பது குறிப்பெச்சம். மற்று இதனேடு,

"எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே"

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரம் ஒப்புக் காணத்தக்கதாம்.

இனி திருமந்திரத்திலும்,

"பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்
உண்டவப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமு மல்லது
மண்டி யவருடன் வழிநட வாதே" —கசசு

எனவும்,

"ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே யொழிவ ரொழிந்தபின்
வேர்த்தலைப் போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே" —கருசு

எனவும் வரும் செய்யுள்களையும் நினைக.

எனவே, உயிர்கொண்டு போம் பொழுதற்றூர் யாருளர் நீயே துணைகாண்! என்பது குறிப்பெச்சப் பொருளாயிற்றென்க. (௨)

கைப்பிடி நாயகன் றூங்கையி லேயவன் கையையெடுத்
தப்புறந் தன்னி லசையாமல் முன்வைத் தயல்வளவி
லோப்புடன் சென்று துயில்நீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படி நான்நம்பு வேனிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே - இறைவனே! திருக்கச்சி ஏகம்பத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே!; கைப்பிடி நாயகன் தூங்கையிலே – பல்லார் அறியப் பறை யறைந்து நாட் கேட்டுத் தனது கையைப்பற்றித் திருமணம் செய்து கொண்ட தன் கணவன் தன்னுடனே ஒரு பாயலிலே படுத்துறங்கும் பொழுதே; அவன் கையை அசையாமல் எடுத்து அப்புறந் தன்னில் முன் வைத்து- தன்னைத் தழுவியுள்ள அவனுடைய கையை அசையாதபடி மெல்லத் தூக்கித் தனக்கு அப்பால் அவன் முன்னிலையிலே கிடத்திவிட்டு; அயல் வளவில் ஒப்புடன் சென்று துயில் நீத்துப் பின்வந்து உறங்குவளை – அயல் வீட்டிலுள்ள தன் கள்ளக் காதலன் உடன்பாட்டோடு சென்று அவனுடன் கூடிக் களித்து நெடும்பொழுது உறங்காதிருந்து பின்னர்த் தன் வீட்டிற்கு வந்து தன் கணவனோடே முன்போலப் படுத்துறங்கு மியல்புடைய மகளிரை; நான் எப்படி நம்புவேன் - நான் எவ்வாறு நம்பி அவரோடு இல்லறம் நடத்துவேன்; நடத்த மாட்டாமையால் நின் மலரடியில் தஞ்சம் புக்கேன்! என்பதாம்.

(வி - ம்.) இது மகளிர் மனம் பெரும் பேதைமையும் வஞ்சமும் உடையது. அவருடன் கூடி வாழுமாற்றால் வீடு பெறுதல் கூடாது. ஆதலால் இல்லறத்தைத் துறந்து இறைவன் திருவடியைப் பற்றியே மாந்தர் உய்தல் கூடும் என்றறிவுறுத்தவாறு.

மகளிர் மனம் எளிதின் மாறுபடும் இயல்புடையது. என்னுமிதனை, "மகளிர் மனம்போல மாறுபடும்" எனத் திருவள்ளுவனார் உவமை எடுத்தோதுதலானும்,

" அன்பு நூலாக வின்சொ லலர்தொடுத் தமைந்த காத
லின்பஞ்செய் காமச் சாந்திற் கைபுனை ந் தேற்ற மாலை
நன்பகற் சூட்டி விள்ளா தொழுகினு நங்கை மார்க்குப்
பின்செலும் பிறர்க ளுள்ளம் பிணையனார்க் கடிய தன்றே"
—சீவக - கஙகரு

எனவும்,

" பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா
வுண்ணிறை யுடைய வல்ல வொராயிர மனத்த வாகு
மெண்ணிப்பத் தங்கையிட்டா லிந்திரன் மகளு மாங்கே[மன்றே"
வெண்ணெய்க்குன் றெரியுற்றூற்போன் மெலிந்துபின் னிற்கு
—சீவக. கஙகஎ

எனவும், வரும் சிந்தாமணிச் செய்யுள்களானும் உணர்க. (௩)

நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் னார்தப்பினாற்
றன்னாலு மாடிச் சலித்திடு மோவந்தத் தன்மையைப்போல்
உன்னாலி யானுந் திரிவதல் லால்மற் றுனைப்பிரிந்தா
லென்னாலிங் காவதுண் டோவிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா! கச்சி ஏகம்பனே:—நல் நாரில் பூட்டிய சூத்திரப்பாவை - நல்ல கயிற்றிலே கட்டப்பட்ட இயந்திரப்பாவை யானது; நல்நார் தப்பினால் - அந்த நல்ல கயிறானது அறுந்துவிட்ட பொழுது; தன்னாலும் ஆடிச் சலித்திடுமோ - தானேயும் கூத்தாடி இயங்குமோ? இயங்கமாட்டா தன்றே; அந்தத் தன்மையைப்போல் - அந்தப் பாவையின் தன்மை போலவே; யானும் உன்னால் திரிவது அல்லால் — அடியேனும் நீ இயக்குதலாலே இயங்குவதன்றி; இங்கு உனைப் பிரிந்தால் என்னால் ஆவது உண்டோ? - இவ்வுலகிலே என் உயிர்க்குயிரா யிருக்கின்ற உன்னைப் பிரிந்து விட்டால்; எளியேனாகிய என்னால் செய்யத் தகுந்த செயல் யாதேனும் ஒன்று உண்டோ; இல்லை என்பதுணர்ந்தேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) உலகெலாம் இறைவனாலேயே இயக்கப்படுகின்றன என்றுணர்கின்ற உணர்ச்சியே மெய்யுணர்ச்சி எனப்படும். இம்மெய் யுணர்வு கைவரப் பெற்றோர்க்கு யான் எனது என்னும் இருவகைச் செருக்கும் கதிரவனைக் கண்ட இருள் போலத் துவரக்கெடும். இத் தகையோரே இம்மையிலேயே வீடுபேறுற்ற மெய்க்காட்சியாளர் ஆவர் என்னும் இக்கருத்தினையே அடிகளார் தம் மேலிட்டு இறைவனை முன்னிலைப் படுத்தோதுமாற்றால் நம்மனோர்க்குச் செவியறிவுறுத்து கின்றார் என்க. இவ்வுண்மையை,

“சலமிலனாய் ஞானத்தாற் றனையடைந்தார் தம்மைத்
தானாக்கித் தலைவன் அவர் தாஞ்செய்வினை தன்னால்
நலமுடனே பிறர்செய்வினை யூட்டியொழிப் பானாய்
நணுகாமல் வினையவரை நாடிக் காப்பன்
உலகினில் என்செயலெல்லாம் உன்விதியே நீயே
உண்ணின் றுஞ் செய்வித்தும் செய்கின்றா யென்றும்
நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலே யென்றும்
நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்குந் தானே”

எனவருஞ் சிவஞானசித்தியாரானு முணர்க.

இவ்வாறுணர்ந்து ஒழுகும் ஒழுக்கத்தையே இறைபணி நிற்றல் என்று கூறுவர். ஏனைப் பேறுகளனைத்தும் ஈயவல்ல எத்துணை நன்மைகளும் இவ்வாறு இறைபணி நிற்றலாகிய மெய்த்தொண்டு செய்யும் ஞானத்தால் தரப்படும் பேற்றைக் கொடுக்கவல்லுந அல்ல; மேலும் எத்துணைத் தீமைகளும் இவ்விறை பணியாற் பெறப்படும் பேற்றைக் கெடுக்க வல்லனவுமல்ல; அத்துணைப் பெரிய சிறப்புடைய இறைபணி நிற்றலையே ஈண்டு அடிகளார் நம்மனோரும் எளிதில் உணர்ந்து கொள்ளும்படி எடுத்தோதுகின்றார் என்க.

இன்னும் அப்பரடிகளாரும் இதனையே,

" ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தா லாரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
காண்பார்யார் கண்ணுதலாய் காட்டாக் காலே"

என அழகுற அருளிச் செய்தலும் உணர்க.

" சாட்டையிற் பம்பர சாலம் போலெலாம்
ஆட்டுவிப்பான் இறையென வறிந்து நெஞ்சமே
தேட்ட மொன்றற வருட்செயலி னிற்றியேல்
வீட்டறந் துறவற மிரண்டு மேன்மையே" —ஆசை-௩

என்பது சிவாநுபூதிச்செல்வராகிய தாயுமான அடிகளார் திருவாக்கு. (௪)

நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே
யல்லாது வேறு நிலையுள தோவக மும்பொருளு
மில்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே!:—நல்லார் இணக்கமும்-நினக்கு மெய்த்தொண்டு பூண்டொழுகும் நன்மையுடைய சான்றோருடைய கேண்மையும்; நின்பூசை நேசமும் - நின்திருவடிகளை வழிபாடு செய்தலிலே பேரார்வமுடைமையும்; ஞானமுமே அல்லாது - எல்லாம் நின்செயலே என்றுணரும் மெய்க்காட்சியும் ஆகிய இவைகளையல்லாமல்; வேறு நிலை உளதோ - இவற்றின் வேறாய வழிகளிலே என் நெஞ்சம் நிலைபெற்றிருத்தற்கு இடமுள்ளதோ? இல்லை என்பதனை நன்குணர்ந்து கொண்டேன்; அகமும் பொருளும் இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும் எல்லாம் வெளி மயக்கே - இனி யான் இதுகாறும் இன்புற்றிருத்தற் பொருட்டு இயற்றிக்கொண்ட வீடும் பொன்மணி நெல் முதலிய செல்வங்களும் அவ்வீட்டிலிருந் தின்புறக்கருதி மணந்துகொண்ட மனைவியும் அவள் தலைக்கீடாக வந்த மாமன் மாமி முதலிய சுற்றத்தாரும், மக்களும் இச்சூழலிலே யான் எய்திய இன்பமும் இவற்றிற்கெல்லாம் தலை சிறந்த கருவியாயமைந்த அழகிய உடம்பும் ஆகிய இவையனைத்துமே என் உயிர்க்குப் புறம்பேயுள்ள மாயையினது மயக்கத்தாலியன்ற பொய்ம்மைகளே. இவற்றால் துன்பமல்லது தொழுதகவு சிறிதும் இல்லை என்பதாம்.

(வி - ம்.) உயிரானது தனக்கியல்பான இன்பத்தின்கண் நிலைபெற்றிருத்தற்கு நல்லார் இணக்கமும் இறைவழிபாடும் இறைபணி நிற்றலுமே வழிகளாம். இவற்றையன்றிப் பிறிதொரு வழியில்லை.

இல்லையாகவும் மக்கள் இவற்றைக் கைவிட்டு இன்புற்றிருத்தற் பொருட்டு இல்லம் இல்லாள் பொருள் முதலிய இவற்றையே பெரிதும் விரும்பி இவற்றைப் பெறப் பெரிதும் முயல்கின்றனர். முயன்றாராயினும் வாய்மையாகவே இவற்றால் அவர் எட்டுணையும் இன்பம் எய்துவதில்லை. மேலும் இவற்றால் அவர் எய்தியதெல்லாம் துன்பமே. இவை இன்பப் பொருளாகத் தோன்றுதற்குக் காரணம் அவர் தம் மயக்கமே என்றவாறு.

இனி, இவற்றுள் நல்லார் இணக்கமும் என்றது; இறைவன்பால் அன்புடைமை காரணமாக நன்மையுடையோராகிய அடியாருடைய கேண்மையும் என்பதுபட நின்றது.

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே" —கஉ-சூ.

என்பது சிவஞானபோதம்

'நன்றாரிற் பூட்டிய' என்னும் செய்யுளின்கண் எல்லாம் இறைவன் செயலென்றுணர்ந்து இறைபணி நிற்குமாற்றால் ஆணவமலத்தைக் கழுவும் பொருட்டு உயிரினது அறிவு செயற்படுமிடம் உணர்த்தியருளினார். இச்செய்யுளில் "நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும்" என்பதனால் உயிரினது இச்சை செயற்படும் இடம் கூறுகின்றார். இறைபணி நின்று மலங்கழீஇய சான்றோர் மீண்டும் அத்தூய நிலை உறுதிப்படுதற் பொருட்டு ஒருதலையாகச் செய்ய வேண்டுவன நல்லார் இணக்கமும் இறைவழிபாடுமேயாம், நல்லார் இணக்கம் எனவே அல்லாதாரோடு இணங்காமையும் கூறப்பட்டபடியேயாம். இதனை,

"மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை—அறப்பித்துப்
பத்தர் இனத்தராய்ப் பரனுணர்வி னாலுணரும்
மெய்த்தவரை மேவா வினை" —கஉஆம் சூ-உ-அதி-க

எனவரும் சிவஞானபோத வெண்பாவானும் உணர்க.

இனி, நல்லாரிணக்கத்தின் சிறப்பினைச் சுந்தரமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகையாற் பொதுவாகவும், சிறப்பாக,

"பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிசார்ந்த வடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே"

எனவரும் தேவாரத்தானும் உணர்க.

இனி, நந் தாயுமான அடிகளார் தாமும்,

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

—பராபரக்-கஙு.

எனத் திருவாய் மலர்ந்தருளுதலானும் நல்லாரிணக்கத்தானும் பயன் இற்றெனத் தெளிக.

இனி, நின்பூசை என்றமையாது நின்பூசை நேசமும் என்றார் அன்பில் வழிச் செய்யும் பூசை சிறிதும் பயன்படாமைபற்றி. சிவபூசை புறத்தொழின் மாத்திரையானே இறைவனுடைய உருவத்திருமேனி நோக்கிச் செய்யும் வழிபாடும், புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டானும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடும், அகத்தொழின் மாத்திரையானே அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடும்; இவ்விருவகைத் தொழில்களுமின்றி அறிவு மாத்திரையானே அம்மூவகைத் திருமேனிக்கும் அப்பாலாகிய மெய்ப் பொருளிடத்துச் செய்யும் வழிபாடும் என நால்வகைப்படும். இவற்றினியல்புகளை விரிந்த நூல்களுட் கண்டு தெளிக. இவற்றை, சரியை கிரியை யோகம் ஞானம் என நவிலுவர்; இவற்றின் தன்மையினை;

"விரும்பும் சரியைமுதன் மெஞ்ஞான நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே"

எனவரும் தாயுமானவர் திருவாக்கானுணர்க.

இந்த நால்வகை வழிபாட்டின்கண் முன்னைய மூன்றும் கருவியாக அவற்றாலாம் பயன் ஞானமேயாதலால் அதனைத் தனித்து வாங்கி வேறு கூறினார். என்னை?

"ஞானநூல் தனையோதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி யடைவிக்கும் எழில்ஞான பூசை
ஊனமிலாக் கன்மங்கள் தபம்செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன் றுயருமிவை ஊட்டுவது போகம்
ஆனவையான் மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோ ரெல்லாம்"

—சித்தியார், சுபக்கம்-உஎரு.

என அருணந்தி சிவாசாரியார் அருளிச்செய்தலுங் காண்க.

நிலை - உயிர் இன்பத்தே நிலைத்திருக்குமிடம்.

அகம் - இல்லம். இனி, இல்லம் பொருள் இல்லாள் முதலியன எல்லாம் வெளிமயக்கே என்னுமிதனைப் பட்டறிவுடையோர் அனைவரும் நன்குணருவர். இவற்றைப்பற்றித் தாயுமான வடிகளார் கூறுகின்ற,

"தந்தைதாய் தமர்தார மகவெனு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசா லக்கோலம்
வஞ்சனை பொருமைலோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை யி லாதகனவே
யெந்நாளுஞ் சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவுமூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே"
—தாயு: தேசோ-ந

அழகிய திருப்பாடலிலேயும், காண்க.

(இ)

போல்லா தவனெறி நில்லா தவனைம் புலன்கடமை
வெல்லா தவன்கல்வி கல்லா தவன்மெய் யடியவர்பாற்
சேல்லா தவனுண்மை சோல்லா தவனின் றிருவடிக்கன்
பில்லா தவன்மண்ணி லேன்பிறந் தேன்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே :—எளியேன்; பொல்லாதவன் - எவ்வுயிர்க்குந் துன்பமே செய்யும் பொல்லாங்கே யுடையேன்; நெறி நில்லாதவன் - சான்றோர் வகுத்த நன்னெறியிலே நிலைத்து நில்லாத புன்மையேன் !; ஐம்புலன்கள் தமை வெல்லாதவன் - மெய் முதலிய பொறிகள் சுவை முதலிய ஐம்புலன்களின் மேற்செல்லாமல் அடக்கும் ஆற்றலுமுடையே னல்லேன்; கல்வி கல்லாதவன் - மெய்ந்நூற்களைக் கற்றுத் தெளிவேனு மல்லேன் !; மெய் அடியவர்பால் செல்லாதவன் - உன்னுடைய மெய்யடியவராகிய சான்றோர்பாற் சென்று அவர் அருளுக்கு ஆளாவேனுமல்லேன் !; உண்மை சொல்லாதவன் - பொய்ம்மொழி பேசுதலன்றிச் சிறிதும் மெய்பேசு வேனுமல்லேன்; நின் திரு அடிக்கு அன்பு இல்லாதவன் - மெய்ப் பொருளாகிய நினது அழகிய அடிகளின்பால் சிறிதும் அன்பில்லாத மடமையுடையேன் !; மண்ணில் ஏன் பிறந்தேன் - இத்துணைக் கீழ்மையுடைய யான் இந்நிலவுலகத்தில் எற்றுக்குப் பிறந்தேனோ? அறிகின்றிலேன்; என்பதாம்.

(வி - ம்.) இப்பாடலின்கண் அடிகளார் மக்களாகப் பிறந்து வைத்தும் அப்பிறப்பினை அவமே கழிக்கின்ற மாந்தர்பாற் காணப்படும் திருவருட்கயலான குற்றங்களைத் தம் மேலேற்றிக்கொண்டு பெரிதும் இரங்குகின்றார் என்க. இனி இச்செய்யுளால் அடிகளார் நம்மனோர்க்கு, "மக்கட் பிறப்புடையோர் நல்லோராக விருத்தல் வேண்டும்; சான்றோர் வகுத்தோதிய நன்னெறியிலே பிறழா தொழுக வேண்டும்;

தமது ஐம்பொறிகளையும் புலன்களிலே செல்லாமல் ஒறுத்தடக்க வேண்டும்; மெய்ந் நூல்களை ஓதி மெய்யுணர்வு பெறுதல் வேண்டும்; சான்றோரிடத்தே சென்று தாமும் சால்புடையராதல் வேண்டும். எப்பொழுதும் வாய்மையே பேச வேண்டும். இறைவன் திருவடிக்கு அன்புடையராய் வழிபாடு செய்தலும் வேண்டும். இங்ஙனமின்றி இவற்றிற்கு மாறாக ஒழுகுவாராயின் அவர் மக்களாய்ப் பிறந்தும் அதன் பயனை எய்தாத வீணரேயாவர்'', என்று செவியறிவுறுத்தபடியாம்.

இனி, பொல்லாதவன் என்றது ஏனைய உயிர்கட்குத் தீமை செய்யு மியல்புடையேன் என்றவாறு. உய்தற்குரிய சான்றோர் மன மொழி மெய்களால் பிறவுயிர்க்குத் தீமை செய்யாமல் விழிப்புட னிருத்தல் வேண்டும். இதனை,

"அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்" —குறள்-௨௦௩

எனவும்,

"தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்" —குறள்-௨௦௬

எனவும்,

"தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்" —குறள்-௨௦௯

எனவும்,

"தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு" —குறள்-௨௦௧

எனவும்,

"அறிவினு ளெல்லாந் தலையென்ப..."

எனவும் வரும் அருமைத் திருக்குறள்களானுமுணர்க.

இனி நெறி நிற்றலாவது: சான்றோர் வகுத்துக் கூறிய நூனெறி பிறழாது ஒழுகுதல். இதனை, "ஒழுக்கத்து நீத்தார் பெருமை" என்னும் திருக்குறட்கு ஆசிரியர் பரிமேலழகர் தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமுரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும்; அறம் வளரப் பாவந்தேயும்; பாவந்தேய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க நித்த வநித்தங்களது வேறுபாட்டுணர்வும் அழிதன் மாலையவாய இம்மை மறுமையின்பங்களினுவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கணாசையுண்டாம்; அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமான பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோக முயற்சி யுண்டாம்; அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யானென்பதும் விடும்; ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்து விடுதலெனக் கொள்க;'' என வரைந்துள்ள

நுண்ணிய உரை விளக்கத்தால் உணர்க. புலன்களை வெல்லுதல் என்றது மனம் பொறி வழியே புலன்களிற் செல்லாது ஒறுத் தடக்குதல்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து" —குறள்-௧உ௬

எனவும்,

"அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு" —குறள்-௩௪௩

எனவும் வரும் திருக்குறள்களையும் ஈண்டு நினைக.

கல்வி கல்லாதவன் என்புழிக் கல்வி மெய்ந்நூற் கல்வி என்பது பட நின்றது. அவையாவன: திருக்குறளும் சிவஞானபோதமும் இன்னோரன்ன பிறவுமாம். அடியவர்பாற் செல்லுதலால் வரும் நன்மைகளை முன் நல்லாரிணக்கமும் என்புழிக் கூறிய விளக்கங் களான் உணர்க.

கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்பது பற்றி நின் திருவடிக்கு அன்பில்லாதவன் என்றிரங்கினர்.

என் பிறந்தேன் என்னும் வினா பிறத்தலினும் பிறவாமையே நன்று என்பதுபட நின்றது. (௬)

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்துமண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தேன்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே !:—மண்மேல் பிறக்கும் பொழுது கொடுவந்தது இல்லை - யாரும் இவ்வுலகின்கட் பிறக்குங் காலத்தே செல்வத்தைத் தம்மோடு கொண்டு வருவார் இல்லை; பிறந்து மண் மேல் இறக்கும் பொழுது கொடு போவது இல்லை - வறிதே பிறந்து பெரிதும்முயன்று தாம் ஈட்டிய செல்வத்தை இந்நிலவுலகத்தினின்றும் இறக்கும் பொழுதும் தம்முடன் கொண்டுபோவதும் இல்லையே; இடை நடுவில் குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்தது என்று - பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைக்காலமாகிய நடுவிலே தாம் பெற்றுள்ள இந்தச் செல்வமானது ஆகூழ் காரணமாகச் சிவபெருமான் நமக்கு வழங்கி யதே யாம் என்றுணர்ந்து; கொடுக்க அறியா குலாமருக்கு என் சொல்லு வேன் - அவற்றை வறியார்க்கு ஈந்துவத்தற்குரிய நல்லறிவில்லாத வச்சைமாக்கட்கு யான் எங்ஙனம் நல்லறிவு கூறுவேன்! கூறினும் அவர் கேட்குமாறில்லையே! என்பதாம்.

(வி - ம்.) மாந்தர்காள்! நீயிர் பெற்றிருக்கின்ற செல்வமெல் லாம் நுங்கள் நல்வினை காரணமாகச் சிவபெருமான் நுங்கட்கு வழங் கியதேயாம். செல்வத்துப் பயன் ஈதலே யன்றிப் பிறிதில்லை ஆதலால் எல்லோரும் ஈந்துண்டு வாழுமின் என்ற இதனை அடிகளார் அறி வுறுத்துகின்றார் என்க.

இனி உயிர்கட்குச் செல்வம் வறுமை முதலியவற்றை அவரவர் நல்வினை தீவினைக் கீடாகச் சிவபெருமானே வழங்குவார் என்னு மிதனை,

"இருவினை இன்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்தி றந்து
வருவது போவ தாகும் மன்னிய வினைப்ப லன்கள்
தரும் அரன் தரணி யோடு தராபதி போலத் தாமே
மருவிடா வடிவும் கன்மப் பலன்களும் மறுமைக் கண்ணே"
—சித்தியார், சுபக்கம்-கூ௪

எனவும்,

"ஆணையால் அவனி மன்னன் அருமறை முறைசெய் யாரை
ஆணையிற் றண்டஞ் செய்து மருஞ்சிறை யிட்டும் வைப்பன்
ஆணையின் வழிசெல் வோருக் கரும்பதி செல்வம் நல்கி
ஆணையும் வைப்பன் எங்கு மாணையே ஆணை யேகாண்"
—சித்தியார், சுபக்கம்-கஉக

எனவும்,

"அரசனுஞ் செய்வதீசன் அருள்வழி" (ஷை - கஉஉ) எனவும் வருவனவற்றா லுணர்க.

இனிச் செல்வத்துப்பயன் ஈதலே என்பதனை,

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு" —குறள் -உ௩௧

எனவும்,

"கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்" —குறள்-க00௫

எனவும்,

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றா டமியண்மூத் தற்று" —குறள்-க00எ

எனவும் வரும் வள்ளுவர் பொன்மொழியானும்,

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே"
—புறநா-கஅகூ

எனவரும் நக்கீரனா் நன்மொழியானு முணர்க.

இடைநடு: இருபெயரொட்டு. கொடுக்கறியா; விகாரம். குலாமர்-வச்சையர் (உலோபர்).

என் சொல்லுவேன் என்னும் வினா அத்தகையோர் சொன்னாலும் கேளார் ஆகலின் என் சொல்லுவேன் என்பதுபட நின்றது. (எ)

அன்ன விசார மதுவே விசார மதுவொழிந்தாற்
சொன்ன விசாரந் தொலையா விசாரநற் றேகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரமிப் பாவிநெஞ்சுக்
கென்ன விசாரம்வைத் தாயிறைவா கச்சி ஏகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே!—பாவி நெஞ்சுக்கு - தீவினையுடைய இந்த மாந்தர் நெஞ்சுக்கு; அன்ன விசார மதுவே விசாரம் - நாள்தோறும் சோறு தேடித் தின்னும் கவலையாகிய அதுவே ஒழியாத கவலையாயிற்று; அஃது ஒழிந்தால் - சோற்றுக்கவலை இல்லை என்னும் நிலையை அடைந்த காலத்தே; சொன்ன விசாரம் தொலையா விசாரம்—பொன் முதலிய பொருள்களை ஈட்டுங் கவலையோ ஒருபொழுதும் ஒழியாத கவலையாக இருக்கின்றது; நல் தோகையரைப் பன்ன விசாரம் - இக்கவலை யிருக்கவே மேலும் அழகிய மகளிரொடு காம மொழிகள் பேச வேண்டுமே என்னும் அவாவாலுண்டான கவலையும் உளது; பலகால் என்ன விசாரம் வைத்தாய் - இவ்வாறாக, பற்பல காலத்திலும் எத்துணைக் கவலைகளைத் தந்திருக்கின்றாய். இவற்றினிடையே யான் உய்யுமா றென்னையோ? என்பதாம்.

(வி - ம்.) விசாரம் - கவலை. எத்தகையோர்க்கும் இந்தக் கவலை உண்மையால் அதனையே முற்படக் கூறினர். பசி வந்துற்றபோது வேறு கவலைகள் தலைதூக்கமாட்டா. உணவின்றேல் விரைவில் சாக்காடே நேருமாகலின் அக்கவலை தலை சிறந்த கவலையாயிற்று. இனி உணவிற்குக் கவலையில்லை என்னும் நிலைமையுடையோரையும் கவலை விடுவதில்லை. பொன்னே பொருளே என்று அவாவி அவற்றை ஈட்டுந்தோறும் பின்னும் அவாமிக்குக் கவலையை மிகுவித்தலின் அது வொழிந்தாற் சொன்ன விசாரம் தொலையா விசாரம் என்றார். சொன்னம் - பொன். தலைமைபற்றிப் பொன்னொன்றே கூறினரேனும் இனம் செப்புமாற்றால் எல்லாப் பொருள்களையும் கொள்க. "அளகேசன் நிகராக அம்பொன் மிக வைத்தபேரும் ரசவாதவித்தைக் கலைந்திடுவர்" எனத் தாயுமானவரும் அது தொலையா விசாரம் என்பதனை அறிவுறுத்தினர். இனி, உணவும் பொன் முதலியனவும் நிரம்பப் பெற்ற பின்னரோ காமப்பிணி தலைதூக்கி இடையறாத கவலையே தருகின்றது. இவ்வாறு மாந்தராய்ப் பிறந்தோர் எஞ்ஞான்றும் கவலையால் நலியப்படுதலின் எம்பெருமானே! நீ இந்த எளிய மாந்தர்க்கு எத்துணை வகையான கவலைகளைப் படைத்திருக்கின்றனை என்பார், பலகாலும் என்ன விசாரம் வைத்தாய்! என்று வினவுகின்றார்.

இனி இவ்வுலகத்தே மாந்தர்க் கெய்தும் கவலையை அகற்ற ஒரே ஒரு வழிதான் உளது. அது யாதெனின் இறைவன் திருவடிகளில் புகல் புகுவதுதான். பிறிதொரு வழியும் இல்லை. இதனை,

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது" —குறள் - எ

எனவும்,

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில" —குறள் - ச

எனவும் வரும் திருக்குறள்களான் உணர்க.

ஈண்டும் பட்டினத்தடிகளார் இவ்வாறு கவலையே குடிகொண்டுள்ள இவ்வுலக வாழ்வினைப் பொருளாகக் கொள்ளா தொழிமின் இக்கவலைப் பிணிக்கெல்லாம் அருமருந்தாயமைந்த எம்பெருமான் திருவடியே புகலாகக் கொண்டுய்யப் போமின்! என்று நம்மனோர்க்குக் குறிப்பாக வுணர்த்திய படியாம் என்க. (அ)

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையு
மெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே !:—கல்லாப் பிழையும் - அடியேன் நின்னருள் நூல்களாகிய மெய்ந் நூல்களை நல்லாசிரியர்பாற் சென்று கல்லாதிருந்த குற்றமும்; கருதாப் பிழையும் - அவற்றின் பொருளை ஆராய்ந்து தெளியாத குற்றமும்; நினையாப் பிழையும் - கடவுளாகிய நீயொருவன் எங்கட்குக் களைகணுயுள்ளனை என்றுணராத குற்றமும்; கசிந்து உருகி நில்லாப் பிழையும் - நீ எளியேங்கட்குச் செய்யும் பேருதவியை நினைந்து நின்திருவடிக்கு அன்பு பூண்டு உள்ளமுருகி நின்திருமுன் தன்முனைப்பற்று நில்லாத குற்றமும், நின் அஞ்செழுத்தைச் சொல்லாப் பிழையும் - நின்னுடைய திருவைந் தெழுத்தை நாவாரச் சொல்லாத குற்றமும்; துதியாப் பிழையும் - நின் புகழை வாழ்த்தாத குற்றமும்; தொழாப் பிழையும் - நின்னைக் கைகூப்பித் தொழுது வணங்காத குற்றமும்; எல்லாப் பிழையும் பொறுத்து அருள்வாய் - என ஈண்டுக் கூறியனவும் இன்னோரன்ன பிறவுமாகிய எல்லாக் குற்றங்களையும் பொறுத்து எளியேனுக்கு நின்திருவருளை வழங்கியருள்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) அறியாமையே இயல்பாகவுள்ள சிற்றுயிராகிய யான் நின்திருவருட் டிறத்திலே செய்துள்ள குற்றங்கள் கல்லாமை முதலியனவாக எண்ணிறந்தனவாம். அவற்றை நீ குறிக்கொள்ளின் எளியேனை நீ ஆட்கொள்ள விதியில்லை. ஆயினும் நீயோ பேரருட் கடல் ஆதலின் என் குற்றமெல்லாம் பொறுத்து எனக்கும் நின்திருவருள் வழங்குவாயாக! என்று வேண்டிய படியாம்.

இனி இத்திருப்பாட்டின்கண் பெறற்கரிய மக்கட் பிறப்பினைப் பெற்றவர் அப்பிறவியின் பயனைப்பெற வேண்டுமாயின் மெய்ந் நூல்களைக் கற்றல் வேண்டும், கல்லாதிருப்பரேல் அவர் பிறப்பு விலங்குப் பிறப்போடொத்துப் பயன்படா தொழியும் ஆதலின் கல்லாமை குற்றம் என்றார். ஆசிரியர் திருவள்ளுவனாரும்,

"உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்" —குறள் - ௪0௬

எனவும்,

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்" —குறள் - ௪௧0

எனவும் ஓதுதலுமுணர்க.

இனிக் கல்வி கற்று வைத்தும் அதனை ஆராய்ந்துணராதவர்க்கு அக்கல்வியும் பயன்படாமையின் கருதாப் பிழையும் என்றார். கருதுதல் - கருத்தூன்றிக் கற்றவற்றை ஆராய்ந்து தெளிதல் என்க. ஆராய்வுழி மெய்ப்பொருள் பொய்ப் பொருள்களின் வேறுபாடும் அவற்றுள் மெய்ப்பொருள்பால் பற்றும் பொய்ப் பொருள்களின் பால் பற்றறுதியு முண்டாமாகலின் கருதாமை குற்றமாயிற் றென்க.

கற்றுவைத்தும் ஆராய்ந்துணர்ந்தும் கற்றதனாலாய பயன் வாலறிவனைத் தொழுதலே என்று அறிந்து வைத்தும் இறைவன் ஒருவன் உளன் என்று நினையாத மாந்தரும் சாலப்பலருளராகலின், நினையாப் பிழை என்றார். கடவுள் ஒருவன் உளனாக வேண்டும் என்றுணர்ந்த பின்னரும் அவன்பால் அன்பு பிறவாமையின் அவனை நினைந்து நினைந்து கசிந்துருகாப் பிழை என்றார்.

இனி, இறைவன் திருவருளைப் பெறுதற்கு அவன் திருமந்திரமாகிய திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுதலே சிறந்த வழியாகவும் அம்மந்திரத்தைச் சொல்லாமையும் பிழை யென்றார்.

இனி எப்பொருளும் இறைவன் திருவுருவமே எனக் கண்டு இறை நிறைவிலழுந்துகின்ற சிவன் முத்தராயினருக்கும் ஒரோவழிப் பழைய உலக வாதனை தோன்றுதலுண்டு, அங்ஙனம் தோன்றுங்கால் உளத்தை அவற்றின்பாற் செலுத்தாமற் றடைசெய்தற் பொருட்டு இறைவன் திருமந்திரத்தை ஓதுதல் வேண்டும் என்ப. ஆசிரியர் திருவள்ளுவனார்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" —குறள் - ௩௫0

என்றோதுதலும் இக்கருத்துடையதே யாம்.

இனி, மெய்கண்ட மரபினர் இதனை 'ஞானச் சரியை' என்றோதுப. உமாபதி சிவாசாரியாரும்.

"மண்முதற் கரண மெல்லா மறுவசத் தாக்கி ஞானக்
கண்ணினி லூன்றி யந்தக் கருத்தினா லெவையு நோக்கி
எண்ணியஞ் செழுத்து மாறி யிறைநிறை வுணர்ந்து போற்றல்
புண்ணியன் றனக்கு ஞான பூசையாய்ப் புகலு மன்றே"

என்றோதுதலு முணர்க.

இனி இறைவன் தன்னுள் இரண்டறக் கலந்து நின்றே தனக்குச் செய்து வருகின்ற உதவியை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும்

அவன்பால் நமக்கு அன்பு படிப்படியாகப் பெருகி வருவதாம், வரவே அத்தகைய பேருதவியாளனை யாம் வாயாரப் புகழ்தலும் கைகூப்பித் தொழுவதுமே இயல்பாம்; அங்ஙனம் புகழ்ந்து தொழாதவழி யாம் செய்ந்நன்றி கொன்றதொரு புன்மையையும் உடையேமாகலின் துதியாப் பிழை என்றும் தொழாப்பிழை என்றும் ஓதினர். (கூ)

மாய நட்போரையு மாயா மலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் தாயைமறந்
தேயும தேநிட்டை யென்று னெழிற்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) எழில்கச்சி ஏகம்பன் - அழகிய திருக்கச்சி ஏகம்பத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவன் எளியேனுக்கு ஞானாசிரியனாக வந்து; மாய நட்போரையும் மாயா மலம் எனும் மாதரையும்-பொய்ம்மையுடைய நண்பரையும் அழியாத மலமாகிய மகளிரையும்; வீய விட்டு ஓட்டி - இறந்தொழியும்படி துவர நீத்து; வெளியே புறப்பட்டு - வெட்ட வெளியிலே தமியனாகப் போந்து; மெய் அருளாம் தாயுடன் சென்று - உண்மையாகிய திருவருளின் பின்னே சென்று; பின் தாதையைக் கூடி - பின்னர்த் தந்தையாகிய சிவபெருமானோடு கூடி; பின் தாயை மறந்து ஏயும் அதே - பின்னர் அவ்வருட்டாயையும் மறந்து தந்தையாகிய சிவத்தோடு இரண்டறக் கலந்து விடுகின்ற அந் நிலைமையே; நிட்டை என்றான் - நிட்டையாகும் என்று செவியறிவுறுத்தனன். ஆதலால் எல்லீரும் அம்முறையே நிட்டைகூடி உய்ம்மின்! என்பதாம்.

(வி – ம்.) மாயம் – பொய். மாய நட்போர் என்றது - பொய்யன்பு காட்டும் நண்பர் என வொரு பொருள் பயந்து நின்றது. இனி இரட்டுற மொழிதலாலே இறைவன் உயிர்களை உய்விக்கும் பொருட்டுத் தன் சத்தியே வடிவாகக்கொண்டு சுத்தமாயையைப் பொருந்தி நாத முதலிய தத்துவங்களையும் அசுத்த மாயையினின்றும் உயிர்க்குடல் முதலிய கருவிகளையும் கூட்டவே அவையெல்லாம் இறைவன் தந்தவை என்றறியாமல் உயிரானது தன்னுடையதாகவே கருதுதலின் அவற்றை யெல்லாம் ஈண்டு அடிகளார் மாய நட்போர் என்றார். இங்ஙனமே மோக முதலியன ஆணவ மலத்தின் காரியமாதலின் அதனையே ஆகு பெயரால் மாயா மலமெனும் மாதர் என்றார். மாதர் என்றது ஈண்டு மனைவி என்னும் பொருடந்து நின்றது. எனவே மாய நட்போரையும் மாயாமலமெனும் மனைவியையும் வீய விட்டோட்டி என்றது. இவை யெல்லாம் அரனுடைமை என்றறிந்து அவற்றையெல்லாம் தனது என்னும் பற்றற்று நின்று என்பது கருத்தாயிற்று என்றும் கொள்க. இதனை,

“ நீடுபரா சத்திநிக ழிச்சா ஞானம்
நிறைகிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு வுருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்து வாதி

கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தனுகரண புவன போகம்
பீடுபெற நிறுவியவை யொடுக்கு மேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே''

எனவரும் சிவப்பிரகாசத்தானுணர்க.

வெளியே புறப்பட்டு என்றது அவற்றின்கட் டகன்று மெய்யுணர்ந்து நின்று என்றவாறு.

மெய்யருளாந் தாயுடன் சென்று என்றது, திருவருள் காட்டிய வழியிலேயே நின்றொழுகி என்றவாறு. என்னை, உயிர்கள் இறைவனைப் பெறுமிடத்து அவனுடைய அருட்சத்தியினிடமாகச் சென்றே பெறவேண்டுமாதலால் ''மெய்யருளாந் தாயுடன் சென்று'' என்றார். இவ்வுண்மையை,

"பவமே வியநெறி பந்திக்கும் ஈசன் பசுக்கடமை
அவமே வியநெறிப் போகங்க ளால்முற்ற வந்நிலையே
தவமே வியநெறி சத்திகண் ணுய்ச்சென்று சார்ந்துபின்னைச்
சிவமே வுவரென்று காண்கொச்சை காவலன் சித்திரிப்பே''

எனவரும் தத்துவ விளக்கத்தானும்,

"அவனருளாலே அவன்றாள் வணங்கி''

எனவரும் திருவாசகத்தானும் உணர்க. இன்னும்,

"இனையபல பிறவிகளின் இறந்துபிறந் தருளால்
இருவினைகள் புரிந்தருந்து மிதுசகலம் அகலா
முனமருவும் இருபயனும் ஒருகாலத் தருந்த
முந்தறுக ருந்துபயன் அந்தமுற வந்த
வினையுமெதிர் வினையுமுடி வினையுதவு பயனுல்
நேராக நேராதல் மேவுங் கால்முற்
சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதந் திகழு மன்றே''

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளையும் நோக்குக! சஅ

ஏயும் - இயையும். நிட்டை - அருளினமுந்தி அமைதியுறல். (௧0)

வரிக்கோல வேல்விழி யாரநு ராக மயக்கிற்சென்று
சரிக்கோது வேனெழுத் தஞ்சுஞ்சோ லேன்றமி யேனுடலம்
நரிக்கோ கழுகு பருந்தினுக் கோவெய்ய நாய்தனக்கோ
வேரிக்கோ விரையேதுக் கோவிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்) இறைவா கச்சி ஏகம்பனே!:—வரிக்கோலவேல் விழியார் அநுராக மயக்கில் சென்று சரிக்கு ஓதுவேன் - என் புல்லிய

உடலால் நுகரும் சிற்றின்பத்தையே பொருளாகக் கருதிச் செவ்வரி பரந்த அழகிய வேல் போலும் கண்களையுடைய மகளிருடைய காம வின்பமாகிய மயக்கத்திலே அழுந்தி அவர்பாற் சென்று கூடிக்குலாவு தற்கு வேண்டிய வெல்லாம் கூறுவேன் அல்லாது; எழுத்து அஞ்சும் சொலேன் - நினது திருவருளிலே அழுந்தி அழிவற்ற பேரின்பத் தமர்ந்து வாழ்தற்கு ஏதுவான நின் திருவைந்தெழுத்தை ஒரு பொழுதும் ஓதுகின்றிலேன்; தமியேன் உடல் - துணையற்ற எளி யேனாகிய என்னுடைய இந்தப் புல்லிய உடல்தான் என்றேனும் விழுந்து பிணமாதல் ஒருதலை; நரிக்கோ கழுகு பருந்தினுக்கோ வெய்ய நாய் தனக்கோ எரிக்கோ எதுக்கோ இரை - அப்பொழுது இது நரிக்கு இரையாமோ? அல்லது கழுகுக்கும் பருந்திற்கும் இரை யாமோ? அல்லது வெவ்விய நாய்க்குத் தானிரையாகுமோ? அல்லது நெருப்பிற்குத் தான் இரையாகுமோ? எதற்குத்தான் இரையாமோ அறிந்திலேனே! என்பதாம்.

(வி - ம்.) மாந்தர் நெஞ்சம் இறைவன்பாற் படர்தற்குத் தலை சிறந்த தடையாயிருப்பது காம மயக்கமே யாகும். இம்மயக்கந் தீர்ந் தோர் ஒருதலையாக இறைவன்பா லன்பு பூண்டு வீடு பெறுகுவர். என்று மழியாத பேரின்பத்தை நல்குவது திருவைந் தெழுத்தேயாம். இவ்வுண்மையை உணர்ந்து வைத்தும் மாந்தர்கள் இறுதியில் நரி முதலியவற்றிற்கு இரையாகும் இழிதகவுடைய இவ்வுடலால் வரும் காம வின்பத்திற்குப் பெரிதும் பாடுபடுகின்றார், இஃதென்ன மாயமோ? என்று அடிகளார் இப்பாடலால் நம்மனோர்க் கறிவுறுத்துகின்றார் என்க.

வரி - செவ்வரி. கோலம் - அழகு. அநுராகம் - காமம். சரிக்கு- சரித்தற்கு; அஃதாவது அவருடன் கூடிச் சஞ்சரித்தற் பொருட் டென்றவாறு. சரித்தற்கு ஆவன வெல்லாம் ஓதுவேன். ஆனால் மிகவும் எளிதான ஐந்தெழுத்தையோ ஒருபொழுதும் நாவாலும் சொல்லேன் என்றவாறு.

இனி, மாதர்தரும் சிற்றின்பத்தில் மயங்கினோர் பேரின்பம் பெறும் முயற்சியைக் கைவிடுவர் என்பதனை,

"சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப—முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில்"

—நீதிநெறி - அஅ

எனவரும் குமரகுருபர வடிகளார் திருவாக்கினும் நோக்குக.

இனி, நரி முதலியவற்றிற்கு இரையா மியல்புடைய இப்புன் புலா லுடம்பைப் பேணுதலும், அதனால் வரும் சிற்றின்பம் விரும்புதலும், பெரும்பேதைமைத்தே என்பார், தமியேனுடலம் நரிக்கோ......... இரை என்றார். (கக)

காதேன்று மூக்கேன்று கண்ணேன்று காட்டியேன் கண்ணெதிரே
மாதேன்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட
தூதேன்றெண் ணுமற் சுகமேன்று நாடுமித் துர்ப்புத்தியை
யேதேன் றெடுத்துரைப் பேனிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே—!; கண் என்று மூக்கு என்று காது என்று காட்டி - அழகிய கண்கள் என்றும் அழகிய மூக்கு என்றும் அழகிய காதுகள் என்றும் ஒருசில வுறுப்புக்களை மட்டும் காட்டி (ஒரு சில வுறுப்புக்களை மறைத்துக்கொண்டு) மாது என்று சொல்லி என் கண் எதிரே வரும் மாயை தன்னை - நானே பெண் என்று சொல்லிக் கொண்டு நங்கண்முன்னே வருகின்ற இந்த மாயையாகிய மலத்தை; மறலி விட்ட தூது என்று எண்ணுமல் - கூற்றுவன் பின்னர் நம்முயிரைக் குடித்தற்கு முற்பட நம்பால் ஏவிவிட்டதொரு தூதேயாகும் என்று எண்ணுமல்; சுகம் என்று நாடும் துர்ப்புத்தியை - இதுவே நாம் பெறவேண்டிய இன்பம் என்று அந்த மாயையோடு கூடுதற்கு விரும்புகின்ற இத்தகைய புல்லறிவிற்குவமை; ஏது என்று எடுத்து உரைப்பேன் - யாது என்று கண்டு யான் எடுத்துக் கூறுவேன் காண்! இப்புல்லறிவுக்குவமை அதுவே பிறிதொன்றில்லை என்பதாம்.

(வி - ம்.) மாதர் உறுப்பினுள் ஆடவர் மனங்கவர்வதில் கண்ணே சிறந்ததாகவும் கண்ணென்று மூக்கென்று காதென்று காட்டி என முறைப்படுத்தோதாமல் செய்யுளாகலின் காதென்று மூக்கென்று கண்ணென்று முறை பிறழ வைத்தார். உடம்பு கருவி உலகு நுகர்ச்சி என்னுமிந் நான்கும் மாயையின் கூறுகளேயாதலால் நுகர்ச்சியின் பாற்பட்ட மகளிரை மாயை என்றே கூறினர். மகளிரின் தொடர்பு பிறந்திறந்து சுழல்வதற்குரிய வினைகட்குப் பிறப்பிடமாதலன்றி வினைத்தீர்வுக்கு ஏதுவாகாமையின் மறலிவிட்ட தூது என மகளிரை உருவகித்தார். வாய்மையாக ஆராய்வார்க்கு மகளிர் கூட்டரவு மாபெருந் துன்பத்திற்கே ஏதுவாகவும் அதனையே இன்பம் என்று கருதுதற்குக் காரணம் மயக்கமே ஆதலின் சுகம் என்று நாடும் துர்ப்புத்தி என்றார்; துர்ப்புத்தி - புல்லறிவு. உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொற் கொள்ளாமையாற் றுர்ப்புத்தி என்றார். இத்துர்ப்புத்தியுடைமையால் மாந்தர் தாமே தமக்குத் துன்பம் செய்து கொள்கின்றார் என்றிரங்கிய படியாம்.

"அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழையுள்" இது தலைசிறந்த பீழையாம் என்பது கருத்து.

இனிப் பிறவிப் பெருங்கடல் நீந்துவார் இவ்வினைவிழைச்சினைத் துவரநீத்தல் வேண்டும் என்பது இப்பாடலின் குறிப்புப் பொருளென்க. என்னை?

"எவ்வினைய ரேனு மிணைவிழைச்சொன் றில்லெனின்
தெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம்—அவ்வினை
சாத்த விலரேல் எனைத்துணைய ராயினும்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர்" —நீதிநெறி - அ௬

எனவரும் சான்றோர் அறிவுரையும் நோக்குக.

எதென்றெடுத் துரைப்பேன் என்றது (இத்தூர்ப்புத்திக்கு) யாது உவமையாகும் என்று கண்டு எடுத்துக்கூறுவேன் என்றவாறு. எனவே இதற்குவமையே யில்லை என்றாராயிற்று. (௧௨)

ஊருஞ் சதமல்ல வுற்றூர் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே!:—ஊரும் சதம் அல்ல - ஒருவனுக்குத் தான் பிறந்த ஊரிலுள்ள மாந்தர் யாரும் உறுதுணையாகார்; உற்றார் சதம் அல்ல - நெருங்கிய சுற்றத்தார் தாமும் உறுதுணையாகார்; உற்றுப்பெற்ற பேரும் சதமல்ல - ஊக்கமுற்று ஈட்டிக்கொண்ட புகழும் உறுதுணையாகாது; பெண்டீர் சதமல்ல - மனைவிமாரும் உறுதுணையாகார்; பிள்ளைகளும் சீரும் சதமல்ல - அவன் ஈன்ற மக்களும் எய்திய சிறப்புக்களும் உறுதுணையாதலில்லை. செல்வம் சதம் அல்ல - ஈட்டிக் குவித்த பொருள்களும் உறுதுணையாகமாட்டா; தேசத்திலே யாரும் சதம் அல்ல - தான் பிறந்த நாட்டிலுள்ள அரசன் முதலிய யாருமே உறுதுணையாகார்; நின்தாள் சதம் — நின்னுடைய திருவடிகள் மட்டுமே எப்பொழுதும் உறுதுணையாகுங்காண்! என்பதாம்.

(வி - ம்.) சதம் - துணை. நித்தியம் எனக்கொண்டு பொருள் கூறுவாருமுளர், ஊர் : ஆகுபெயர். உற்றுப்பெற்ற பேர் - முயற்சியிற் பொருந்தி எய்திய புகழ். தேசத்திலே யாரும் சதமல்ல என்புழி நாட்டின்கட் சிறந்துள்ள அரசர் முதலிய யாரும் என்பதுபட நின்றது. நின்றாளே எப்பொழுதும் சதமென்றவாறு. இத்திருப்பாடலோடு,

"உற்றாரை யான் வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும்
கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே" —திருப்புலம்பல்.

எனவரும் மணிவாசகமும் நினைக்கத்தகும்.

இனி, திருநாவுக்கரசரும்

"உற்றாருளரோ—உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லானமக்
குற்றா ராருளரோ?"

என்றோதுதலுங் காண்க. (௧௩)

சீறும் வினையது பெண்ணுரு வாகித் திரண்டுருண்டு
கூறு முலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினாற்
பீறு மலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்
டேறுங் கரைகண்டி லேனிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா! கச்சி ஏகம்பனே!:—சீறும் வினையது கொடுமையினால் திரண்டு உருண்டு கூறும் முலையும் இறைச்சியும் ஆகி - எளியேன் முற்பிறப்புக்களிலே யான் செய்தனவும் தம் பயனை நுகர்விக்கத் தம் கொடுமையாலே சினந்து வருவனவும் ஆகிய தீவினைகளே இப்பொழுது ஒன்றாகத் திரண்டு உருண்டு காமுகராற் புகழப்படுகின்ற முலையும் தசைகளாலியன்ற பிறவுறுப்புக்களுமுடையவாய்; பெண் உருவாகி - பெண் என்கின்ற வடிவத்தை யுடையதாய் வந்து; பீறும் மலமும் உதிரமும் சாயும் - பீறிட்டு வழிகின்ற மலமும் குருதியும் சொரியா நிற்கும்; பெருங்குழி விட்டு ஏறும் கரை கண்டிலேன் - அப்பெண்டிருடைய பெரிய அல்குலாகிய குழியிலே வீழ்ந்த நான் அதனை விட்டு ஏறி உய்ந்து போதற்குரிய கரையை எளியேன் இன்னும் கண்டேனில்லை. என் செய்வேன்? என்பதாம்.

(வி - ம்.) உயிர்கள் செய்யும் தீவினையே இறைச்சியாலியன்ற முலை முதலியவற்றையுடைய பெண்ணுருவாக வந்து தனது அல்குலாகிய பெரிய குழியில் வீழ்த்தி அகப்படுத்துக் கொள்கின்றது. அவ்வல்குலாகிய குழிதானும் பெரிதும் அருவருக்கத் தகுந்ததென்பார், பீறும் மலமும் உதிரமும் சாயும் என்றார். சாயும் - சாய்க்கும். தூராக் குழியாகலின் பெருங்குழி என்றார். உய்ந்து கரையேறுதற் கியலாக் குழியாகலின் பெருங்குழி என்றார் எனினுமாம். சீறும் வினை என்றமையால் தீவினை என்பது பெற்றாம்.

"புண்ணியம் மேல் நோக்குவிக்கும் பாவம் கீழ் நூக்கும்" என்பவாகலின் அக்குழியில் வீழ்ந்தேன் என வருவித்தோதுக. (௧௭)

பொருளுடையோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்தும்
தெருளுடையோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடையோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பி
லிருளறு சொல்லினுங் காணத்தகுங் கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே!:—பொருள் உடையோரைச் செயலினும் - செல்வ மிக்கவர்களை அவர்கள் செய்கின்ற ஈகைச் செயலானும்; வீரரைப் போர்க் களத்தும் - வாய்மையான வீரப்பண்புமிக்க மறவோரைப் போர்க்களத்தின் கண்ணும்; தெருள் உடையோரை முகத்தினும் - மெய்யுணர்வுடைய மேலோரை அவர் தம் முகத்திலே காணப்படும் ஒளியாலும்; தேர்ந்து தெளிவதுபோல் - ஆராய்ந்துணர்ந்து கொள்ளுமாறு போல; அருள் உடையோரை - இறைவனுடைய திருவருட் பேறுடைய பெரியோர்களை; தவத்தில் - அவர் மேற்கொண்டொழுகுந் தவவொழுக்கத்தானும்; குணத்தில் - அவர் தம் துறவு ஈதலாதி நற்குணங்களானும்; அருளில் - மன்னுயிரிடத்தே காட்டும் இரக்கத்தாலும்; அன்பின் - தம்மோடு தொடர்

புடையார்மாட்டுக் கொள்ளும் அன்பினாலும்; இருள் அறு சொல்லினும் - அவர் கூறுகின்ற குற்றமற்ற மெய்ம் மொழிகளானும்; காணத் தகும் - எல்லோரும் அறிந்து கொள்ளக் கூடும் என்பதாம்.

(வி - ம்.) செயல் ஈண்டு ஈகையாகிய செயன் மேனின்றது. என்னை ?

> "கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய,
> கோடியுண் டாயினும் இல்" —குறள் - ௧௦௦௫.

என்பவாகலின் ஈகை யில்லாதாரைப் பொருளுடையார் என்றலும் பொருந்தாமையால் என்க. ஒப்புரவொழுகுதலும் கொள்க.

இன்னும், ஈதலாலே பேரும் புகழும் படைத்த வள்ளற் பெருமக்களை உலகத்தார் உலகுள்ள துணையும் அறிதலாலும் செயல் என்பது ஈகையைக் குறித்ததென்றே கொள்க. வீரரைப் போர்க் களத்திலே தெரிதலாவது - கூற்றுடன்று மேல் வரினும் அஞ்சாது எதிர் நின்று போர் செய்தலானும்; உற்றுழி உயிர் வழங்குதலும்; பகைவர்மேற் கண்ணோடாது போர் ஆற்றுதலும், அவர்க்குத் தாழ்வு வந்ததாயிற் கண்ணோடி அது தீர்தற்பொருட்டு அவர்க்குதவுதலாகிய ஊராண்மை செய்தலும் இன்னோரன்ன பிறவற்றாலும் அறியலாம்.

தெருள் - தெளிவு. இதனை 'நடுவுநிலை' ஒன்பது சுவையினுள் ஒன்றென நாடக நிலையுள் வேண்டப்படும் ஒரு மெய்ப்பாடு ஞானத் தெளிவுடையார் முகத்திலே தோன்றும்; இதனைச் சமநிலை என்றும் கூறுப. அஃதாவது "செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்து ஓடா நிலைமை" என்க. இதனை,

இராமாயாணத்துள் கைகேசி அன்று முடிசூடுதற்கிருந்த இராமனை நோக்கி,

> "ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே ஆள நீபோய்த்
> தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற் கொண்டு
> பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
> ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பினன் அரசன்"

என்று பணித்தபோது, அதுகேட்ட இராமன் திருமுகம்,

......"அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது" என்பதனாலுமறிக.

அருள் உடையோரை என்புழி இறைவன் திருவருளைப் பெற்றோரை என்க. பின்னரும், அருளில் என்புழி அருள் அவ்வருளுடையோர் மன்னுயிர்பால் செலுத்தும் அருட்பண்பினை என்க.

இவ்வருள் என்பது உலகிலுள்ள எல்லாவுயிர்களிடத்தும் பரந்துபட்டுச் செல்லும் இரக்கம். இனி அன்பென்பது தன்பால் தொடர்புடையார் மாட்டுச் செல்லும் இரக்கம் என வேறுபாடு கண்டு கொள்க.

இனித் தவம் என்பது, "உற்றநோய் நோன்றலும் உயிர்க்குறுகண் செய்யாமையும், விரதங்களால் உண்டி சுருக்கலும் கோடைக்கண்

வெயினிலே நிற்றலும் மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் இன்னோரன்ன பிறவுமாம் என்க.

இனி, குணம் என்றது, பண்புடைமை. இதனை,

"எவரெவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவனகூறி—லெவரெவர்க்கும்
உப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலு நிற்ப தென" —நீதிநெறி - கஅ.

என்னும் குமரகுருபரர் திருமொழியான் உணர்க.

இருளறு சொல்லென்றது, மயக்கந் தீர்ந்த மெய்ம்மொழி பேசுமியல்பினை. அருளுடையோர் மொழி அங்ஙனமாதலை மெய்ந் நூல்களிற் காண்க.

இனி, இத்திருப்பாட்டினால் அடிகளார் நம்மனோர்க்கு ஆண்டவன் திருவருட்கு ஆளாவோர் தவமுடையராய், நற்பண்புடையராய், அருளும் அன்பும் உடையராய், இருளறு சொல்லுமுடையராய் இருத்தல் வேண்டும் என அறிவுறுத்தபடியாகக் கொள்க. (கஙு)

பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத் தங்க
டுருத்திக் கறுசுவை போடுகின் றார்துறந் தோர்தமக்கு
வருத்தி யமுதிட மாட்டா ரவரையிம் மாநிலத்தி
லிருத்திக்கொண் டேனிருந் தாயிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சிஏகம்பனே!:—பருத்திப் பொதியினைப் போலே வயிறு பெருக்கத் தங்கள் துருத்திக்கு அறுசுவை போடுகின்றார் - இந்த மாநிலத்திற் பெரும்பாலோர் பஞ்சுப்பொதி போலத் தங்களுடைய வயிறு மட்டும் பருத்துப்போம்படி கொல்லன் துருத்தி போன்ற தங்கள் வயிற்றுக்குள் அறுவகைச் சுவைகளோடே சமைத்த உண்டியை ஒழிவின்றிக் கொட்டி நிரப்பிக் கொள்கின்றனர்; துறந்தோர் தமக்கு வருத்தி அமுது இடமாட்டார் - ஆனால் இவ்வுலகினைத் துறந்தொழுகுஞ் சான்றோர்க்கு வற்புறுத்தி ஒரு பொழுதேனும் உணவு கொடுத்து உண்பிக்க மாட்டார்; அவரை - அத்தகைய வச்சைமாக்களை, இம் மாநிலத்தில் ஏன் இருத்திக்கொண்டு இருந்தாய் - இந்தப் பெரிய நிலவுலகத்திற்குச் சுமையாக ஏனோ? உயிருடன் வைத்துக் கொண்டிருக்கின்றனை கூறுக! என்பதாம்.

(வி - ம்.) மக்களாய்ப் பிறந்து இல்லறம் நடத்துவோர்க்குத் துறவோர் முதலியவரை உணவு முதலியவற்றால் நன்கு பேணுவதே தலைசிறந்த கடமையாகும். இக்கடமை செய்வாராயின் அவர் பெறுகின்ற நன்மைக்கும் அளவில்லை. அங்ஙன மிருந்தும் தங்கள் வயிற்றையே பருக்கச் செய்து கொண்டிருக்கின்ற இல்வாழ்வோரோ இவ்வுலகிற்கும் சுமையா யிருப்பதோடு தங்கள் பிறவிப் பயனையும் இழந்தொழிகின்றார். இத்தகைய வீணர்கள் உயிர் வாழ்வதினுங் காட்டில் இறந்து படுதலே இவ்வுலகிற்கும் அவர்க்குமே நலமாம். ஆதலால் அத்தகையோரை எற்றுக்குநீ உயிரோடிருத்திக் கொண்டிருக்கின்றாய் என இறைவனுக்குக் குற்றங் கூறியவாறு.

இனி, இல்வாழ்வார்க்குத் துறந்தோரைப் பேணுதல் கடமை என்பதனை,

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கு
நல்லாற்றின் நின்ற துணை" —குறள் - சுக.

எனவும்,

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்க டவம்" —குறள் -உசுரு.

எனவும் வருந்திருக்குறள்களானும்,

இல்லறத்தில் விருந்தோம்பலில் துறவோரை ஓம்புதலால் மிகப் பெரிய நன்மையுண்டாம் என்பதனை,

"இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்," —குறள் - அஎ.

எனவரும் வள்ளுவர் பொன்மொழியானும்,

"சிவஞானச் செயலுடையோர் கையிற் றானந்
திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து
பவமாயக் கடலினழுந் தாதவகை எடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோகந் தன்னினுஞ்சா ராமே
நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி
நாதனடிக் கமலங்க ணணுகுவிக்குந் தானே"
—சித்தியார், சுபக்கம்-உஎஅ.

எனவரும் அருணந்தி சிவாசாரியார் அருண்மொழியானு முணர்க.

பருத்தி ஆகுபெயர். துருத்தி - உவமவாகு பெயராய் வயிற்றின் இழிவு தோன்ற நின்றது. மெய்த்துறவோர் உண்ணீர் உண்ணீர் என்றுபசரிப்பார் மனையையன்றி ஏனையோர் மனைக்குச் செல்லாமையின் வருத்தி அமுதிடல் வேண்டிற்று. வருத்துதல் - ஈண்டு வற்புறுத்தல் மேற்று. (கரு)

போல்லா விருளகற் றுங்கதிர் கூகையேன் புட்கண்ணினுக்
கல்லா யிருந்திடு மாறேக்கு மேயறி வோருளத்தில்
வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக்கங்கண்டாய்
எல்லாம் விழிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா! கச்சி ஏகம்பனே!—; அறிவோர் - மெய்ப் பொருள் பொய்ப் பொருள்களை ஆராய்ந்தறிவோருள் வைத்து; வல்லார் உளத்தில் அறிவார் - அறிவாற்றல் மிக்கோர் அறிவுக்கறிவாகிய நின்னைத் தம் நெஞ்சினுள்ளேயே காண்பவராவார்; அறியார்

தமக்கு மயக்கம் கண்டாய் — அங்ஙனம் அறியமாட்டாதார்க் கெல்லாம் பொருளல்லா தவற்றைப் பொருள் என்றுணரும் மருளே எஞ்சி நிற்கும்; இது என்போல வெனின், கூகை என் புள் கண்ணினுக்கு - கூகை என்னும் பெயரையுடைய பறவையின் கண்ணுக்கு; பொல்லா இருள் அகற்றும் கதிர் — பொல்லாப்புடைய இருளைப் போக்குகின்ற ஞாயிற்றின் ஒளியையுடைய பகற்பொழுதானது; அல்லாய் இருந்திடும் ஆறு ஒக்கும் - இருண்மிக்க இரவாக இருக்கின்ற தன்மையைப் போல்வதாம்; எல்லாம் விழிமயக்கே - அறிவிலாதார் இங்ஙனம் பொருளல்லாதவற்றைப் பொருளென்றுணருவதற்குக் காரணம் எல்லாம் அவருடைய காட்சியிலுண்டான மயக்கமே யன்றிப் பிறிதொன்று மில்லை என்பதாம்.

(வி — ம்.) பொருள்களை மறைக்கும் பொல்லாங்குடைய இருள் என்க. இஃது ஆணவமலத்திற்குவமை. கதிர் - ஆகுபெயராய்ப் பகற்பொழுது என்னும் பொருள் பயந்து நின்றது. பின்னர் அல்லாயிருந்திடும் என்பதனால் இங்ஙனம் பொருள் கூறப்பட்டது. கூகைக்குப் பகற்பொழுது இரவு போன்றிருப்பது அதன் கண்ணின் குற்றமே யன்றிப் பொருளின் குற்றமன்று. அங்ஙனமே ஒளி மயமாய் எங்குமிருக்கின்றவனை மருட் காட்சியாளர் காண்கிலர் மெய்க்காட்சியாளர் மட்டுமே உன்னைத் தம்முள்ளத்தினூடே கண்டு கொள்ள வல்லுநர் ஆவர் என்பது கருத்து; இதனை,

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே"

எனவரும் சிவஞானபோதம் ஒன்பதா நூற்பாவானும் உணர்க.

அறிவோருள் வைத்து வல்லார் நின்னை உளத்தில் அறிவார் என மாறியும் வருவித்தும் விரித்துரைத்துக் கொள்க.

இனி, வல்லார் என்றது மெய்க்காட்சி வல்லார் என்றவாறு. அவர் தாமும் இறைவனைத் தம் முள்ளத்துடேயே காண்பவராவார் என்பார் வல்லார் உளத்தில் அறிவார் என்றார். இதனை,

'பாசஞா னத்தாலும் பசுஞா னத்தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதின்
ஆசைதரு முலகமெலாம் அலகைத்தே ராமென்
றறிந்தகல வந்நிலையே யாகும் பின்னும்
ஓசைதரு மஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்க
உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலா மோட.'

எனவருஞ் சித்தியாரானும் (சுபக் - உகஉ) உணர்க.

அறியார் தமக்கு மயக்கங் கண்டாய்! அவர் காண்பன எல்லாம் விழிமயக்கே என்பது கருத்து. (கஎ)

வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவார் வழக்குரைப்பார்
தீதுக் குதவியுஞ் செய்திடு வார்தினந் தேடியொன்று
மாதுக் களித்து மயங்கிடு வார்விதி மாளுமட்டு
மேதுக் கிவர்பிறந் தாரிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா! கச்சி ஏகம்பனே!—வாதுக்குப் போவார்— இவ்வுலகத்திலே பல மாந்தர் கண்டவரோ டெல்லாம் சொற்போர் புரியப் போவார்; சண்டைக்கு வருவார் - சொற்போரிற்றோற்க நேர்ந்தாலோ கைச் சண்டைக்கும் வருவார்; வழக்குரைப்பார் - சண்டையில் தாமே வெற்றி காணுதற்கு அறங்கூறவையமேறி வழக்குந் தொடுப்பார்; தீதுக்கு உதவியும் செய்திடுவார். தீமைபயக்குஞ் செயல்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்து அதனை வளர்க்கவும் வளர்ப்பார்; தினம் தேடி ஒன்றும் மாதுக்கு அளித்து விதிமாளு மட்டும் மயங்கிடுவார் - நாள்தோறும் தீவினைகள் பலவுஞ் செய்து பொருளீட்டிக்கொண்டுபோய் தம்மோடிணங்குகின்ற விலைமாதருக்கு அவற்றை வழங்குவார், விதியால் தாம் சாகுமளவும் அவர் பால் காம மயக்கங்கொண்டு கிடப்பார்; இவர் எதுக்குப் பிறந்தார் - இத்தகைய கயமாக்கள் இவ்வுலகிலே எதற்காகப் பிறந்தாரோ? அறிகிலேனே! என்பதாம்.

(வி - ம்.) அரிய மக்கட் பிறப்பிலே பிறந்திருந்தும் அப்பிறப் பின் பயனை எய்துதற்கியன்ற நெறியிலே ஒரு சிறிதும் செல்லாமல் பெரும்பாலோர் வாதிடுதலினும் சண்டையிடுதலினும் வழக்குரைத் தலினும் தீமைகளை வளர்ப்பதிலும் பொருள் ஈட்டிக் குவித்தலினும் அப்பொருளை விலைமாதர்க்கு வழங்குவதிலும் காம மயக்கங்கொள் வதிலுமே தம் பொன் போன்ற வாழ்நாளைப் போக்குகின்றனரே! இவர் பிறத்தலினும்காட்டிற் பிறவாதிருந்தால் நன்றாகுமே என்று அடிகளார் அத்தகையோரைக் கண்டு இரங்கிக் கூறியபடியாம்.

இன்னும், பிறவிப்பயனைப் பெறக்கருதுகின்ற நல்லோர் இத் தகைய இழிதகவுடைய காரியங்களைச் செய்தலும் செய்வாரோடு கூடுதலும் கூடாது. என நம்மனோர்க் கறிவுறுத்தியபடியா மென்றும் கொள்க.

வாதுக்குப் போவார் சண்டைக்கு வருவார் என முறை நிரனிறை யாகக் கொள்க. தீதுக்குதவியும் செய்வார் என்புழி, தாங்கள் தீது செய்வதோடன்றித் தீமை செய்வார்க்குதவியும் செய்வார் என்பது கருத்தாகலின் உம்மை எச்சவும்மை என்க. ஒன்றும்மாது — தம்மோ டிணங்கும் விலைமாதர் என்க. (கஅ)

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதியாயி ரஞ்செய்வர் சாத்திரங்க
ளாயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) ஓயாமல் பொய் சொல்வர் - எப்பொழுதும் பொய்யே பேசுவார்; நல்லோரை நிந்திப்பர் - நன்மை செய்கின்ற சான்றோரை

இகழ்வார்; உற்றுப்பெற்ற தாயாரை வைவர் - பெரிதும் வருத்த முற்றுத் தம்மைப் பத்துத் திங்கள் சுமந்து பெற்றுப் பேணி வளர்த்த தாயையும் வசை கூறி வைவார்; ஆயிரம் சதி செய்வர் - எண்ணிறந்த வஞ்சனைகளையும் செய்யா நிற்பர்; சாத்திரங்கள் ஆயார் - ஒரு பொழுதேனும் மெய்ந்நூல்களைக் கற்று ஆராய்தலும் செய்யார்; பிறர்க்கு உபகாரஞ் செய்யார் - வருந்தி வருகின்ற பிறர்களுக்கு ஒரு சிறு உதவிதானும் செய்வதிலர்; தம்மை அண்டினர்க்கு ஒன்று ஈயார் - தம்மைத் தஞ்சமென்று கருதி வந்து அடைக்கலம் புகுந்தவர்க்கு அவர்க்கின்றியமையாத ஒரு பொருளையேனும் வழங்கார்; இருந்து என்ன போய் என்ன - (இத்தனைக் குணக்கேடர் இவ்வுலகில் சாலப் பலர் உளர்) இவர் இவ்வுலகில் உயிர் வாழ்ந்தாலுண்டாகும் ஊதியந்தான் யாது? அல்லது இறந்தொழிவதனாலுண்டாகும் இழப்புத்தான் யாது? என்பதாம்.

(வி - ம்.) "பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும்" —குறள், உகசு

எனவும்,

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" —குறள், உகஎ

எனவும் வள்ளுவர் அறிவுறுத்திய திருக்குறள் பிறந்த நாட்டிலே பிறந்திருந்தும் அப்பொய்யாமையின் பெருமையை ஒரு சிறிதும் உணராது இவர் ஓயாமல் பொய் சொல்வார் என்றிரங்குகின்றார்.

நல்லோர் என்றது தமக்கென வாழாப் பிறர்க் குரியாளராகிய சான்றோரை, இத்தகைய சான்றோர்க்கும் தம் புன்மையாலே ஏதேனும் பழிகண்டு வைவது கீழோரியல்பு, ஆதலின் "நல்லோரை நிந்திப்பர்" என்றார். உற்றுப்பெற்ற தாயார் என்றது தம்மை வயிற்றிற் பத்துத் திங்கள் சுமந்து வயாவும் வருத்தமு முற்றுப் பெற்ற தாயார் என அவரை வையலாகாமைக்குக் குறிப்பேதுக்கள் தோன்ற நின்றது. தாயாரையும் எனல் வேண்டிய சிறப்பும்மை தொக்கது. சதி-வஞ்சனை. ஆயிரம் என்பது அளவிறந்தமைக்கு ஓர் எண் கூறியவாறு. அண்டினவர் - அடைக்கலம் புகுந்தோர். இருந்தென்ன போயென்ன என்னும் வினாக்கள் அவர் இருப்பதனால் உலகிற்கும் அவர்க்குமே ஊதியம் என்ன இறப்பதனால் இழப்பு, என்ன இரு வழியினும் ஒன்றுமே இல்லை என்பதுபட நின்றன. (கக)

அப்பென் றும் வெண்மைய தாயினு மாங்கந் நிலத்தியல்பாத்
தப்பின்றி யேகுண வேற்றுமை தான்பல சார்தலினாற்
செப்பில பக்குவம் பக்குவ மாயுள்ள சீவரிலு
மிப்படி யேநிற்ப னெந்தை பிரான்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) என்றும் அப்பு வெண்மையது ஆயினும் ஆங்கு அந்நிலத்து இயல்பா தப்பு இன்றியே பல குண வேற்றுமைதான் சார்தலினால் - எப்பொழுதும் நீரானது வெண்மை நிறத்தையே இயல்பாக

வுடையதாம், அங்ஙனமாயினும் அந்நீர் மழையாய விடத்துத் தான் வீழ்ந்த அந்த அந்த நிலத்தின் தன்மையுடையதாகத் தவிராமல் நிறம் சுவை முதலிய பலகுண வேற்றுமை எய்துதல் காணப்படுத லாலே; எந்தைபிரான் கச்சி ஏகம்பன் - எந்தந்தையும் எல்லோர்க்கும் தலைவனும் திருக்கச்சி ஏகம்பம் என்னும் திருவூரில் எழுந்தருளி யிருப்பவனும் ஆகிய சிவபெருமான்; செப்பில் - இயல்பினை ஆராய்ந்து கூறுமிடத்து; பக்குவம் அபக்குவமாய் உள்ள சீவரிலும் இப்படியே நிற்பன் - பண்புடைமையும் பண்பில்லாமையுமாகிய பல்வேறு திறப் பட்ட உயிர்களிடத்தும் இவ்வாறே பண்புடையவனும் பண்பில்லாத வனுமாய் அவரியல்பிற் கிணங்கவே நின்றியக்கா நிற்பன் என்பதாம்.

(வி - ம்.) நீரானது தன்னியல்பால் தூய வெண்ணிறமுடைய தாயினும் அது தான் சார்ந்த நிலத்தினது நிறம் சுவை முதலியவற்றிற் கேற்பத் திரிந்து நிற்பது போல இறைவன் தன்னியல்பிற் றூயனு யினும் தான் சார்ந்து நிற்கும் அவ்வவ் வுயிர்களின் பண்புடைமைக்கும் அஃதின்மைக்கும் இணங்கியே நின்று அவரவரை இயக்குகின்றனன் என்றவாறு. இதனை,

> " அவனே தானே யாகிய வந்நெறி
> யேக னாகி யிறைபணி நிற்க
> மலமாயை தன்னொடு வல்வினை யின்றே"

எனவரும் சிவஞானபோதம் பத்தாஞற்பாவின்கண், முதல்வன் பொருட்டன்மையால் வேறாயினும் வேறு காணப்படாமல் தான் அவ் வுயிரேயாய் நிற்பன் என்பது "அவனே தானே யாகிய அந்நெறி" என்பதனாலுணர்க.

இனி,

> " இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
> இயமான னாய்எறியுங் காற்று மாகி
> அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
> ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
> பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும்
> பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
> நெருநலையா யின்றாகி நாளை யாகி
> நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே"

எனவும்,

> " நிற்பனவும் நடப்பனவு நிலனு நீரு
> நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
> அற்பமொடு பெருமையுமா யருமை யாகி
> அன்புடையார்க் கெளிமையதா யளக்க லாகாத்
> தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும்
> ஆகின்ற தன்மையனை நன்மை யோடும்

பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற் றேமே"

எனவும் வரும் அப்பரடிகளார் அருண்மொழிகளும் இக்கருத்தே பற்றிப் பிறந்தன வென்றுணர்க.

இனி அருணந்தி சிவாசாரியாரும்,

"கோலங் கொண்ட வாறுண ராதே
ஞாலங் காவலன் யானெனக் கொளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்
தோடாப் பூட்கை நாடி நாடா
என்னுட் கரந்தென் பின்வந் தருளி
என்னையுந் தன்னையு மறிவின் றியற்றி
என்னது யானெனு மகந்தையுங் கண்டு
யாவயின் யாவையும் யாங்கணுஞ் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்டு
எற்பணி யாளாய் எனைப்பிரி யாதே
ஓடி மீள்கென ஆடல்பார்த் திட்டு
என்வழி நின்றனன் எந்தை" —இருபாவிருபது - கஅ

(உ0)

என்றோதுவதுமிது.

நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியுந்
தாயார் வயிற்றி னரராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவுமேன்ன
வீயா மனிதரை யேன்படைத் தாய்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே!—; தாயார் வயிற்றின் நராய்ப் பிறந்து - யாரேனும் ஒரு தாயினுடைய வயிற்றில் பத்துத் திங்கள் கருவாகி வளர்ந்து பின்னர்; சம்பன்னராய் - ஆகூழ் காரணமாகப் பெருஞ் செல்வமுடையராக விருந்தும்; காயா மரமும் வறள் ஆம் குளமும் கல் ஆவும் என்ன - காய்த்திடாத மரத்தையும் தண்ணீர் வறண்ட குளத்தையும் கல்லாலியன்ற பசுவையும் போல; ஈயா மனிதரை என் படைத்தாய் - வறுமையுற்றோருக்கு ஒரு சிறிதும் கொடாத வச்சையரான மாந்தரை நீ எற்றுக்கு இவ்வுலகிலே படைத்திருக்கின்றனை; நாய் ஆய்ப் பிறந்திடின் - இத்தகைய வச்சை மாந்தர் உயிர் இவ்வுலகில் நாயாகப் பிறந்தாலும்; நல்வேட்டை ஆடி - தன் தலைவனுக்கு நன்மையான வேட்டையாடி; நயம்புரியும் - அவர்க்கேனும் உதவி செய்யுமே; அங்ஙனம் படைத்திருக்கலாமே என்பதாம்.

(வி - ம்.) மக்கட் பிறப்பிற்கே சிறந்துரிமையுடைய செயல் பிறர்க்கு உதவி செய்வதேயாம். இவ்வுதவி செய்யாவிடின் அவர் மக்களாய்ப் பிறந்ததனற் பயன் ஒரு சிறிதும் இல்லை. இங்ஙனமாகவும்

இவ்வுலகிலே வாழும் மாந்தர் பலர் பிறர்க்குதவி செய்வதற்கேற்ற செல்வரா யிருந்தும் மிகவும் வச்சையராகித் தம் பிறவியை வீணாக்கு கின்றனர் என்று அடிகளார் இரங்குகின்றார்.

"பொருளானு மெல்லாமென் றீயா திவறு
மருளானு மாணாப் பிறப்பு" —குறள், ௧00௨

எனவும்,

"நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று" —குறள், ௧00௮

எனவும் வள்ளுவப் பெருந்தகையாரும் ஓதுதலுணர்க.

ஈதலே அருளுடைமைக்கு அடையாளம். ஈயும் குணமுடையோர் அனைவரும் இறைவனுக்கு அணுக்கராகுவர். ஈயாதவரே இறைவனுடைய திருவருட்கு மிகவும் சேயராகுவர். நந்தாயுமான வடிகளாரும்,

"இங்கற்ற படியங்கு மெனவறியு நல்லறிஞ
ரெக்காலமு முதவுவார்
இன்சொல்தவ ரூர்பொய்ம்மை யாமிழுக் குரையார்
இரங்குவார் கொலைகள் பயிலார்
சங்கற்ப சித்தரவ ருள்ளக் கருத்திலுறை
சாட்சி நீ"

என்று திருவாய் மலர்ந்தருளுதல் காண்க. (உக)

ஆற்றிற் கரைத்த புளியாக் கிடாமலேன் னன்பையெல்லாம்
போற்றித் திருவுளம் பற்றுமை யாபுர மூன்றெரித்துக்
கூற்றைப் பணிகொளுந் தாளுடை யாய்குன்ற வில்லுடையாய்
ஏற்றுக் கொடியுடை யாயிறை வாகச்சி ஏகம்பனே.

(இ - ள்.) இறைவா - கடவுளர்க் கெல்லாம் கடவுளானவனே!; கச்சி ஏகம்பனே! திருக்கச்சியேகம்பத்து எழுந்தருளி யிருக்கின்ற முதல்வனே!; புரம் மூன்று எரித்துக் கூற்றைப் பணிகொளுந் தாளுடையாய் - நீயோ தேவர்கள் பொருட்டு அசுரருடைய மதில்கள் மூன்றனையும் நகைத்தே எரித்து மார்க்கண்டனுக்காகக் கூற்றுவனை உதைத்துத் தன் பணி கேட்கும்படி செய்த வரம்பிலாற்றலுடைய திருவடிகளையுடையை; குன்றவில் உடையாய் - மேருவைத் திருக்கையிலே வில்லாக ஏந்திய திருக்கையையுமுடையை; ஏற்றுக் கொடியுடையாய் - அன்றியும் வெற்றிக் குறிகுறியாக உயர்த்திய விடையெழுதிய கொடியையுமுடையை; என் அன்பை எல்லாம் - (இத்தகைய பெரியோரிடத்து ஆற்றவும் சிறியேனாகிய யான் செலுத்தும் அன்பெல்லாம் பொருளாகுமோ என்னும் ஐயம் பெரிதுடையேன் அங்ஙனமாயினும்,) அடியேன் நின்பாற் கொண்டுள்ள அவ்வன்பையெல்லாம்; ஆற்றில் கரைத்த புளி ஆக்கிடாமல் - பேராற்று வெள்ளத்

திலே கரைத்து விடப்பட்ட புளி போலப் பயன்படாமற் போகும்படி பண்ணுமல்; ஐயா போற்றித் திருவுளம் பற்றும் - ஐயனே! அவற்றையும் பொருளாகவே மதித்து அடியேனையும் நின் அழகிய திருவுளத்திலே நினைவு கூர்ந்தருள்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) இறைவனுடைய எல்லையில்லாத பெருமையினையும் சிற்றுயிராகிய தம்முடைய சிறுமையையும் அடிகளார் சீர்தூக்கிக் காண்புழி அடிகளார்க்கு ஆற்றவும் பெரியோனாகிய ஆண்டவன் திருவுளத்திற்கு ஆற்றவுஞ் சிறியேனாகிய எளியேனது அன்பும் வழிபாடும் பொருளாகுமோ? என்னும் ஐயந்தோன்றிற்றாக; அப்பொழுது அவ்விறைவனை இவ்வாறு வேண்டிக் கொள்கின்றனர் என்றுணர்க.

இறைவனுடைய பெருமையையும் சிற்றுயிராகிய நம்முடைய சிறுமையையும் எண்ணும்போது இவ்வாறு ஐயமுண்டாதல் எத்திறத்தார்க்கும் இயல்பேயாதல் நுண்ணறிவாலோர்ந்துணர்க.

வெள்ளம் கரைபுரண்டோடும் ஆற்றிலே கரைக்கப்படுகின்ற புளி எத்துணையும் பயனின்றிப் போமாதலின் அதனைப் பேரருட்கடலாகிய இறைவன்பாற் றும் செலுத்தும் அன்பிற்குவமையாக எடுத்தனர்.

இவ்வாறு ஐயுற்றாரேனும், இறைவன் அண்டம் ஓரணுவாம்படி பெரியோனாயினும் அவனே அணுவோர் அண்டமாம்படி நுண்ணியனும் ஆதலின் நம்மனோரையும் பொருளாகக் கொள்ளும் இயல்புடையனும் ஆதலின் நம்மையும் ஆட்கொள்ளுவன் என்னுந் துணிவுடையராய் "ஐயா! என் அன்பையெல்லாம் ஆற்றிற் கரைத்த புளியாக் கிடாமல் போற்றித் திருவுள்ளம் பற்றுக!" என்று வேண்டுகின்றார் என்க.

மாணிக்கவாசகனாரும்,

"தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்"

எனவும் யாண்டும் இறைவனுடைய அளவிலாப் பெருமையையும் தமது சிறுமையையும் சுட்டி மொழிவதனையும் திருவாசகத்தே யாண்டும் காண்க.

இறைவனுடைய வரம்பிலாற்றலுடைய கால் வண்ணமும் கை வண்ணமும் கூற்றைப்பணி கொள்ளுந் தாளுடையாய்! என்பதனானும் குன்றவில்லுடையாய் என்பதனானும் குறித்தார்; அவனுடைய வெற்றிப் பெருமையை ஏற்றுக் கொடியுடையாய் என்பதனாற் குறித்தார் என்க. (உஉ)

பெண்ணாகி வந்தொரு மாயப் பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையான் மயக்கிக் கடிதடத்துப்

புண்ணுங் குழியிடைத் தள்ளியேன் போதப் பொருள்பறிக்க
வெண்ணு துனைமறந் தேனிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே!—ஒரு மாயப் பிசாசம் - எளியேன் தீவினை காரணமாக ஒப்பற்ற மாயையின் கூறுகிய வன்பேயானது; பெண் ஆகி வந்து – பெண் என்னும் உருவத்தோடு என் முன்னே வந்து; கண்ணுல் வெருட்டி முலையால் மயக்கி - தன் கண்களாலே என்னைப்பெரிதும் அச்சுறுத்தித் தன் முலைகளாலே மயக்குவித்து; கடி தடத்துப் புண் ஆம் குழியிடைத் தள்ளி - தன்னுடைய அரையிடத்தமைந்துள்ள ஆறுப் புண்ணுகிய அல்குற் குழியிலே வீழ்த்தி; என் போதப் பொருள் பறிக்க - என்னுடைய மெய்யுணர்வாகிய அருஞ் செல்வத்தை எல்லாம் கவர்ந்துகொண்டமையாலே; உனை எண்ணுது மறந்தேன் - எம்பெருமானுகிய நின்னை எண்ணுதலும் செய்யாமல் மறந்தொழிந்தேன்; இனி நின்றிருவருளே எளியேனை உய்வித்தருளுதல் வேண்டும் என்பதாம்.

(வி - ம்.) பெண்ணுசையானது என்னை வலிந்து ஆட்கொண்டமையால் அறிவு கெட்டு உன்னை மறந்தேன் என்னை நீயே உய்விக்க வேண்டும் என்று அடிகளார் இறைவன்பால் அடைக்கலம் புகுகின்றுர் என்க.

தீவினை செய்தமை பற்றி இந்திரியங்கள் உயிரைத் தம்முள் அடக்கித் தாம் ஈர்த்த வழியெல்லாம் இயக்கிக் கொள்ளவல்லுந வாகும். அவ்விந்திரியங்கள் தாமும் முதல்வன் ஆணைவழி நிற்பன வாகலின் அவற்றை அடக்க வேண்டின், அவற்றிற்கும் தனக்கும் முதல்வனுகிய இறைவன் திருவடிகளிலே அடைக்கலம் புகுதலன்றிப் பிறிதோர் வழியில்லை ஆகலான் அடிகளார் தம்மிந்திரியம் பெண்ணின்பம் கருதி அவ்வழித் தம்மை ஈர்த்தலால் இறைவனை மறந்துழி மீண்டும் நன்னினைவு வரப்பெற்று அவனடிக்கே தம்மை அடைக்கலமாக்குகின்றுர் என்க. இதனை,

"இந்திரிய மெனைப்பற்றி நின்றேஎன் வசத்தின்
இசையாதே தன்வசத்தே எனையீர்ப்ப திவற்றைத்
தந்தவன்றன் ஞணைவழி நின்றிடலால் என்றும்
தானறிந்திட் டிவற்றினுடுந் தனையுடையான் றுள்கள்
வந்தனை செய் திவற்றின்வலி யருளினுல் வாட்டி
வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேல்
முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகள்
மூளாவங் காளாகி மீளா னன்றே"

எனவரும் சித்தியாரானும் (சுபக் - கூ0க) உணர்க.

இதனுல், பற்றற்றுன் பற்றினைப் பற்றினு லல்லது பற்றிய பற்று அறுதென்பதும் போந்தமையுணர்க.

போதப் பொருள் - மெய்யுணவாகிய செல்வம். இனி நின்றிருவருளே எளியேனை உய்வித்தருளல் வேண்டும் என்பது குறிப்பெச்சப் பொருள். (உகூ)

நாவார வேண்டு மிதஞ்சொல்லு வாருனே நான்பிரிந்தாற் [டாற்
சாவேனென் றேயிருந் தொக்கவுண் பார்கள்கை தான்வறண்
போய்வாரு மென்று நடுத்தலேக் கேகுட்டும் பூவையருக்
கீவார் தலேவிதி யோவிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே !;—நா ஆர வேண்டும் இதம் சொல்லுவார் - விலேமகளிர் உள்ளொன்று வைத்துத் தம் நா நிரம்பக் கைப்பொருளுடைய காமுகர்கள் விரும்புகின்ற அன்பு மொழிகளேப் பேசுவார்கள்; உனே நான் பிரிந்தால் சாவேன் என்று ஒக்க இருந்து உண்பார்கள் - உம்மை யான் பிரியும்படி நேர்ந்தால் ஒரு தலேயாக இறந்துபடுவேன்காண் என்று கூறி அக்காமுகரோடு கூடியிருந்து அவரோடு ஒரு காலத்திலே ஒருசேர உண்ணவும் உண்ணுவர், கை தான் வறண்டால் — அவர்க்குக் கொடுத்துக் கொடுத்து அக்காமுகருடைய கைப்பொருள் வறண்டு விட்டாலோ; போய் வாரும் என்று நடுத்தலேக்குக் குட்டும் பூவையருக்கு - இனி நீயிர் எம்மில்லத்திற்கு வாராதே கொண்மின் ! என்று கண்ணோட்டமின்றிக் கடிந்துரைத்து அக்காமுகருடைய உச்சந் தலேயிலே குட்டிப் போக்கும் இயல்புடைய அவ்விலே மகளிர்க்கு;ஈவார் - அக்காமுகர் தாம் பெரிதும் முயன்றீட்டிய பொருள்களே யெல்லாம் வழங்கா நிற்பர்; (இவ்வாறு வழங்குதற்குக் காரணம்;) தலேவிதியோ - அக்காமுகருடைய தலேயிலெழுதப்பட்ட விதியோ? பிறிதொன்றேயோ? அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) உள்ளொன்று வைத்து நாவால் மட்டும் அன்புடையோர் போன்று பேசுவார் என்பார் நெஞ்சார என்னுது நாவார வேண்டும் இதம் சொல்லுவார் என்றூர். கைவறளுதல் — கைப்பொருளற்றுப்போதல், போய் வாரும் என்பது உலக வழக்குச் சொல். போம் என்பதே பொருள்.

நடுத்தலேக்கே குட்டுவர் என்புழி ஏழாவது நான்கனுருபாய் மயங்கிற்று. நடுத்தலேயிற் குட்டுவர் என்றது மிகவும் இகழ்வர் என்றவாறு. இதனே,

"காதலன் வீயக் கடுந்துயர் எய்திப்
போதல் செய்யா வுயிரொடு புலந்து
நளியிரும் பொய்கை யாடுநர் போல
முளியெரிப் புகூஉ முதுகுடிப் பிறந்த
பத்தினிப் பெண்டி ரல்லேம் பலர்தங்
கைத்தூண் வாழ்க்கை கடவிய மன்றே
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையில்
யாழினம் போலு மியல்பின மன்றியும்
நறுந்தா துண்டு நயனில் காலே
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்"

(மணிமே-கஅ-கக-உ0)

என மணிமேகலேயில் வரும் சித்திராபதி கூற்ருனுமுணர்க.

இனி, அடிகளார் நடுத்தலைக்கே குட்டும் பூவையருக்கீவார் என்னு மிதனை எடுத்து மொழியுமாற்றால் கூறின், இரந்து கேட்கும் வறியோர்க்குச் சிறிதும் ஈயார் என்னும் பொருள் தோற்றுதலும் உணர்க. (உச)

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலுமெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங்கோ டார்குரு சொன்னபடி
நில்லா ரறத்தை நினையார்நின் னாம நினைவிற்சற்று
மில்லா ரிருந்தென் னிறந்தென் புகல்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே !;—சிவகதை கல்லார்-தீவினைகளைப் போக்குஞ் சிறப்புடைய சிவகதையாகிய நூல்களை ஒரு பொழுதேனும் கற்கிலர்; நல்லோர் தமக்குக் கனவிலும் மெய்சொல்லார் - சான்றோரிடத்தினும் தங்கனவிடத்தேயும் பொய்யே பேசுவதல்லது வாய்மை பேசுவதிலர்; பசித்தவர்க்கு அன்னம் கொடார் - தம் வயிறு பருக்கத் தாமே தின்பதன்றித் தம்பாற் பசித்து வருகின்ற வறியவர்க்கு சிறிது சோறேனும் வழங்குவதிலர்; குருசொன்னபடி நில்லார் - தம்முடைய நல்லாசிரியர் தமக்குக் கற்பித்தபடி நன்னெறியிலே ஒரு பொழுதும் நடப்பதிலர்: அறத்தை நினையார் - நல்லறஞ் செய்வதனைத் தம் நெஞ்சிலே நினைத்தல் தானுஞ் செய்கிலர்; நின் நாமம் நினைவில் சற்றும் இல்லார் - எம்பெருமானே நின்னுடைய திருப்பெயரானது தங்கள் நினைவின்கண் நொடிப் பொழுதேனும் இல்லாதவர் ஆகிய இத்தகைய புன்மாக்கள்; இருந்து என் இறந்து என் புகல் – இவ்வுலகில் உயிரோடிருந்து பெறும் ஊதியந்தான் யாது? அன்றி இறந்துபடுவதனாலுண்டாகும் இழப்புத்தான் யாது ? கூறியருள்க ! என்க.

(வி - ம்.) சிவகதை கல்லார் என்னவே அவகதையே இடையறாது பேசுவர் என்பதும், நல்லோர் தமக்குக் கனவிலும் மெய்சொல்லார் எனவே தம்போன்ற கயவர்க்கு விழிப்பு நிலையில் ஓயாது பொய் பேசிய வண்ணம் இருப்பர் என்பதும்; பசித்தவர்க்கு அன்னங்கொடார் எனவே தம்போன்ற கயவர்களோடுண்பர் என்பதும். குரு சொன்னபடி நில்லார் எனவே மடவோர் சொன்ன தீநெறியிலே நடப்பர் என்பதும்; அறத்தை நினையார் எனவே தீவினையை நயந்து செய்வார் என்பதும், நின்னாமம் நினைவிற் சற்றுமில்லார் எனவே பொய்ப் பொருளைப்பற்றியே எப்பொழுதும் நினைப்பார் என்பதும் கூறினாராயிற்று. இத்தகைய மாக்கள் பிறப்பின் பயனை ஒரு சிறிதும் பெறாராகலின் அவர் தம்பிறப்பு வீணேயாம் என்பார் இத்தகையோர் இருந்தென் இறந்தென்? என்று வினவினர் என்க.

இனி, நல்லோர் தமக்கும் எனல் வேண்டிய சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது, சற்றும் - சிறிது பொழுதேனும்.

இனி, வாழ்வின் பயனைப்பெற வேண்டுவோர். சிவகதை கற்றுணர்தல் வேண்டும் எனவும், எப்பொழுதும் எல்லோரிடத்தும் மெய்யே பேசவேண்டும் என்பதும் வறியோர்க்கு ஒல்லும் வகையால் ஓவாதே உண்டி முதலியன கொடுத்துதவ வேண்டும் என்பதும்; நல்லாசிரியர் செவியறிவுறுத்த நன்னெறி பிறழாதொழுக வேண்டும்

என்பதும், இறைவனை இடையறாது நினைத்து வழிபடுதல் வேண்டும் என்பதும் இச் செய்யுளின் அருத்தாபத்தி வகையால் அடிகளார் நம்மனோர்க்குச் செவியறிவுறுத்தமையும் நுண்ணிதிற் கண்டுகொள்க. (உரு)

வானமு தத்தின் சுவையறி யாதவர் வண்கனியின்
றனமு தத்தின் சுவையெண்ணல் போலத் தனித்தனியே
தேனமு தத்தின் றெளிவாய ஞானஞ் சிறிதுமில்லார்க்
கீனமு தச்சுவை நன்றல்ல வோகச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே!;—வான் அமுதத்தின் சுவை அறியாதவர் வண் கனியின்(தான்) அமுதச்சுவை எண்ணல்போல - வான் உலகத்துத் தேவருண்ணுகின்ற அமிழ்த உண்டியினது சுவை யறியாத மாந்தர்; வளப்பமுடைய மாவும் பலாவும் வாழையும் இன்னோரன்ன பிறவுந் தருகின்ற கனிகளினது சுவையினை உண்டுணர்ந்தமையாலே அவற்றின் சுவையையே விரும்பி நினைத்தல் இயல்பாதல் போன்று; தனித் தனியே தேன் அமுதத்தின் தெளிவு ஆய ஞானம் சிறிதும் இல்லார்க்கு – தனித்தனியே தேனினது தெளிவினது சுவையையும் தேவருணவாகிய அவ்வமுதத்தின் தெளிவினது சுவையையும் ஒப்பதாகிய மெய்யுணர்விலே பிறக்கும் சுவையானது சிறிதேனுந்தோன்றுதவில்லாத இவ்வுலகியன் மாக்கட்கு; ஈன் அமுதச் சுவை நன்று அல்லவோ - இவ்வுலகத்தே அவர் உண்டறிந்துள்ள அவிச்சுவை மட்டுமே நல்ல சுவையாதல் இயல்பே அன்றோ? இக் காரணத்தாலே தான் மாந்தருட் பெரும்பாலோர் மெய்யுணர்வு தலைப்படுதலிலர் என்பதாம்.

(வி - ம்.) மெய்யறிவினாற் கிடைக்கும் இன்பம் இவ்வுலக வின்பங்களைக் காட்டினும் மிகமிக உயர்ந்த வின்பமாகும். அங்ஙனமாயினும், பாமரமக்கட்கு அவ்வின்பத்தை நுகரும் ஆற்றலில்லாமையால் அவர்கள் இவ்வுலகத்துச் சிற்றின்பங்களையே பெரிதும் விரும்பி யுழல்கின்றார்கள் என்பதாம்.

நந் தாயுமானவரும்,

"வரும்போமென் பனவுமின்றி யென்றுமொரு படித்தாய்
வானுதி தத்துவத்தை வளைந்தருந்தி வெளியா
மிரும்போகல் லோமரமோ வென்னுநெஞ்சைக் கனன்மே
விட்டமெழு காவுருக்கு மின்பவெள்ள மாகிக்
கரும்போகண் டோசீனி சருக்கரையோ தேனோ
கனியமிர்தோ எனருசிக்குங் கருத்தவிழ்ந்தோ ருணர்வார்
அரும்போநன் மணங்காட்டுங் காமரசங் கன்னி
அறிவாளோ வபக்குவர்க்கோ வந்நலந்தான் விளங்கும்"

என்றருளிச் செய்தல் காண்க.

இனி, ஆசிரியர் திருவள்ளுவனாரும் மாந்தரை அவிச்சுவையறிவாரும் செவிச்சுவையுணர்வாரும் என இருவகைப் படுத்து அவருள்

அவிச்சுவை யுணர்வார் மக்கட் பிறப்பின் பயனெய்த மாட்டாமையின் அவர் பிறப்பு மாண்புடைத்தன் றென்றும் செவிச்சுவை யுணர்வாரோ நிலவுலகத்தினராயினும் அமிழ்த முண்ணும் அமரரோடு ஒப்பார் என்றும் கூறுவர். இவற்றை,

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்"

(குறள் - சஉ0)

எனவும்,

"செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து"

(குறள் - சகங)

எனவும் வருந் திருக்குறள்களா லுணர்க.

இனி, ஈண்டு

"போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொ ணகையினர் வாய்ச்சேரா—தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில்"

(நீதிநெறி - உச)

எனவரும் குமரகுருபர வடிகளார் பொன்மொழியும் காண்க.

தனித்தனியே தேன் அமுதத்தின் தெளிவாய ஞானம் என்றது தேன் போன்றும் அமிழ்தம் போன்றும் சுவையும் பயனும் உடைய ஞானம் என்றவாறு. ஈன் - சுட்டுச்சொல். இவ்வுலகத்து என்றவாறு. ஈனமுதம் என்றது இவ்வுலகத்துண்டியை. (உசு)

ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கோட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
யேற்றுத் திரிந்துவிட் டேனிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே !;—ஊற்றைச் சரீரத்தை - எப்பொழுதும் அழுக்கறாத புல்லிய இந்த வுடம்பை; ஆபாசக் கொட்டிலை - பொய்ம்மைகளையே நிரப்பியுள்ள புன்குடிசை (போல்வதனை); ஊன் பொதிந்த பீற்றல் துருத்தியை - தசையை மூடிக் கொண்டிருக்கின்ற பல ஓட்டைகளையுடைய துருத்தி (போல்வதனை); சோறு இடும் தோல் பையை - ஒழிவின்றிச் சோற்றினை இட்டு வைக்கு மொரு தோலாலியன்ற (பைபோல்வதனை); காற்றில் பொதிந்த நிலையற்ற பாண்டத்தை - பத்துவகைக் காற்றாலும் கட்டப்பட்ட நிலையுதலில்லாத பசுமட் பாண்டம் (போல்வதனை); பேச அரிய காதல் செய்து - என் அறியாமையாலே சொல்லொணாத பெருங்

காதல் கொண்டு; எற்றுத் திரிந்து விட்டேன் - உறுதிப்பொருள் போல ஏற்றுக்கொண்டு இதுகாறும் வீணாகத் திரிந்து விட்டேன்காண்! இனி என் செய்வேன்! என்பதாம்.

(வி - ம்.) இதன்கண் அடிகளார் பொய்யாய வுடலைப் பொருளாகக் கருதி வாணாளை வறிதே போக்கி விட்டேனே என்று கழிவிரக்கங் கொள்கின்றார்.

இனி, இப் பொய்யுடலின் இழிதகைமையை நம்மனோர்க்கு அறிவுறுத்தவாறுமாம் என்க.

ஊற்றை - அழுக்கு. ஆபாசம் — பொய்ம்மை. காற்று உயிர்க் காற்று முதலிய பத்துவகைக் காற்றுமாம். உயிர்ப்பு அடங்கி விட்டால் உடல் அழிந்து படுதலின் காற்றிற் பொதிந்த பாண்டம் என்றார். பேசரிய காதல் எனக் கூட்டுக. அருவருக்கத் தக்க தொன்றன்பால் யான் என் அறியாமையாற் பேசரிய காதல் செய்தேன் என்றவாறு. திரிந்து விட்டேன் என்றது வீணாகத் திரிந்து விட்டேன் என்பது படநின்றது. (உஎ)

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை யால்வருந் தோடஞ்செய்த
பொல்லாத தீவினைப் பார்வையிற் பாவங்கள் புண்ணியநூ
லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே !;—சொல்லால் வரும் குற்றம் - அறிவிலியாகிய என்னுடைய சொற்களாலே உண்டான தீவினைகளும்; சிந்தனையால் வரும் தோடம் - என்னுடைய நினைவுகளாலே உண்டான தீவினைகளும்; செய்த பொல்லாத தீவினை - அடியேன் உடலாலே செய்த கொடிய தீவினைகளும்; பார்வையில் பாவங்கள் - என்னுடைய விழியினாலே செய்த தீவினைகளும்; புண்ணிய நூல் அல்லாத கேள்வியைக் கேட்டிடும் தீங்குகள் - என்னுடைய செவியாலே அறநூல் அல்லாத மயக்க நூல்களைக் கற்றதனாலும் பிறர் கூறக் கேட்டதனாலும் உண்டான தீவினைகளும்; ஆயவும் மற்று எல்லாப் பிழையும் - ஆகிய இவைகளும் இன்னோரன்ன பிறவும் ஆகிய எல்லாத் தீவினைகளையும்; பொறுத்து அருள்வாய் - பொறுத்துக் கொண்டு அடியேனுக்கும் திருவருள் புரிவாயாக! என்பதாம்.

(வி - ம்.) நம்மைச் சூழ்ந்துள்ள இருளை தடி முதலிய கருவிகளைக் கொண்டு எத்துணை தாக்கினும் அகலமாட்டாது. ஆனால் விளக்கேற்றி விடுவோமாயின் அவ்விருள் தானே அகன்றுபோம். அங்ஙனமே எண்ணிறந்த பிறப்புக்களினும் இப்பிறப்பினும் யாம் அறியாமையாற் செய்த தீவினைகளுக்கு எல்லையே இல்லை - அத்தீவினைகள் எல்லாம் யாம் அறவாழி யந்தணனாகிய இறைவன்பால் அடைக்கலம் புகுந்தால் அப்பொழுதே நம்மை விட்டகன்று போய்விடும் ஆதலால் அடிகளார் தம்மையே தீவினை பெரிதும் உடையாராக வைத்து அவற்றை யெல்லாம் பொறுத்தருள வேண்டும் என்று இத்திருப்பாட்டில் இறைவன்பால் அடைக்கலம் புகுகின்றார் என்க.

தாம் செய்த தீவினைகளுக்குத் தாமே யிரங்கி இறைவன் பால் அடைக்கலம் புகுவாரை இறைவன் அவ்வினைகளைத் துடைத்துத் தூயராக்கி வீட்டின்பமும் தந்தருளுவன் என்று இதனால் நம்மனோர்க்கு அடிகள் அறிவுறுத்துகின்றார் என்க. இதனை,

"இவனுலகி லிதமகிதம் செய்த வெல்லாம்
இதமகித மிவனுக்குச் செய்தார்பா லிசையும்
அவனிவனாய் நின்றமுறை எகனாகி
அரன்பணியில் நின்றிடவு மகலுங் குற்றம்
சிவனுமிவன் செய்தியெலா மென்செய்தி யென்றுஞ்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல வுடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே"

எனவருஞ் சித்தியாரானுமுணர்க. (சுபக் - ௯0௪)

இனிச் சொல்லால் வரும் குற்றம் மனத்தால் வருங்குற்றம் செயலால் வருங்குற்றம் எனக் குற்றங்களை மூவகைப்படுத்தோதுவர். இவற்றை,

"தீவினை யென்ப தியாதென வினவி
னாய்தொடி நல்லாய் ஆங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழை
வுலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னி லுறுப்பன மூன்றுமெனப்
பத்து வகையாற் பயன்றெரி புலவர்
இத்திறம் படரார் படர்குவ ராயின்
விலங்கும் பேயும் நரகரு மாகிக்
கலங்கிய வுள்ளக் கவலையிற் றோன்றுவர்"

எனவரும் மணிமேகலையானு முணர்க.

(உ௪: ௧௨௩ - ௩௫)

புண்ணிய நூல் அல்லாத கேள்வியைக் கேட்டிடும் குற்றம் என்றாரேனும் இனஞ்செப்புமாற்றாற் கற்கும் குற்றமும் கொள்க. வள்ளுவனார் 'கற்பவை கற்க' என்றதும் கற்கப்படாத நூல்கள் உளவாதலை உணர்த்துதலறிக. (உ௮)

முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற் கூட்டி முகமினுக்கி
மேட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளை யோலை விளக்கியிட்டுப்

பட்டப் பகலில் வெளிமயக்கே செயும் பாவையர்மே
லிட்டத்தை நீதவிர்ப் பாயிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே !;—முட்டு அற்ற மஞ்சளை எண்ணெயிற் கூட்டி முகம் மினுக்கி - குறைவற்ற மஞ்சளை யரைத்து எண்ணெயில் கூட்டிக் குழைத்துத் தடவித் தம் முகத்தை மிகவும் ஒளியுடைய தாக்கியும்; மெட்டு இட்டுப் பொட்டு இட்டு பித்தளை ஓலை விளக்கியிட்டு - மெட்டு முதலிய அணிகலன்களையும் அணிந்து நுதலிலே பொட்டுமிட்டுப் பித்தளையாலியன்ற ஓலை யென்னுங் காதணியைப் புளியிட்டுத் தேய்த்துப் பொன்னோலை போன்று தோன்றும்படி செய்தணிந்துகொண்டும்; பட்டப்பகலில் வெளி மயக்கே செய்யும் - நண்பகற்பொழுதிலேயே உள்ளே வஞ்சம் உடையராயிருந்தும் புறத்தே பேரன்புடையார் போன்று நடித்துப் பெரிதும் மயக்குகின்ற அழகிய விலைமாதர் பாற் செல்லுகின்ற; இட்டத்தைத் தவிர்ப்பாய் - என்னுடைய விருப்பத்தை (என்னாற் றவிர்க்க வியலவில்லை ஆதலால்) நீயே தவிர்த்து எளியேனை ஆட்கொண்டருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ம்.) இளமையுடைய அடிகளார் சிற்சில செவ்விகளில் தம் மனம் காமமிக்கு மாதரைப் பெரிதும் விரும்புவதனை யுணர்ந்து அம் மனத்தை அச்செவ்விகளிலே தம்மா லடக்கவியலாமையும் கண்டு எல்லாத் தீமைகட்கும் காரணமாகின்ற அப்பொல்லாக் காமத் தீவிழைவு எனக்குண்டாகாமல் நீயே தவிர்த்து எளியேனை ஆட்கொண் டருளல் வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றார் என்க.

எத்துணையும் பலவாகிய பழம் பிறப்புக்களிலே அடிப்பட்டு வருகின்ற பெண்ணாசை அத்துணைப் பேராற்றலுடைய தென்பதனை,

"மின்போலு மிடையொடியு மொடியுமென மொழிதல்போன்
மென்சிலம் பொலிக ளார்ப்ப
வீங்கிப் புடைத்தவிழு சுமையன்ன கொங்கைமட
மின்னார்கள் பின்னேவலா
லென்போல் அலைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்கள்
இருவர்களி லொருவ ருண்டோ
என்செய்கே னம்மம்ம வென்பாவ மென்கொடுமை
எதென் றெடுத்துமொழிவேன்"

(தேசோமயா – கo)

எனத் தாயுமான அடிகளாரே இரங்கிப் பேதுறுதலானும், உணர்க.

ஆசிரியர் இளங்கோவடிகளாரும்,

"..
நன்னுதன் மடந்தையர்
மடங்கெழு நோக்கின் மதமுகத் திறப்புண்
டிடங்கழி நெஞ்சத் திளமை யானை

கல்விப் பாகன் கையகப் படாஅ
தொல்கா வுள்ளத் தோடு மாயினும்
ஒழுக்கொடு புணர்ந்த விழுக்குடிப் பிறந்தோர்க்கு
இழுக்கந் தராது" (உங: ௩௫ - ௪௪)

என ஓதுதலுணர்க.

இனி, இப் பெண்ணாசையை அடக்கும் ஆற்றலுடையோர் இறைவன் திருவருட்காளாதல் ஒரு தலையாகலின் அடிகளார் பிறண்டும் இதன் பொல்லாங்கினைப் பாரித்து மொழிவாராயினர். இதனை,

" எவ்வினைய ரேனு மிணைவிழைச்சொன் றில்லெனிற்
றெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம்—அவ்வினை
காத்த விலரே லெனைத்துணைய ராயினும்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர்" (நீதிநெறி - அ௬)

எனக்குமரகுருபரரும் கூறுதலுணர்க. (உ௬)

பிறந்துமண் மீதிற் பிணியே குடிகோண்டு பேரின்பத்தை
மறந்துசிற் றின்பத்தின் மேன்மய லாகிப்புன் மாதருக்குட்
பறந்துழன் றேதடு மாறிப்பொன் றேடியப் பாவையர்க்கீந்
திறந்திட வோபணித் தாயிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சி ஏகம்பனே!—மண்மீதிற் பிறந்து - இந் நிலவுலகத்திலே பெறுதற்கரிய மக்கட் பிறப்பிலே பிறந்திருந்தும்; பேரின்பத்தை மறந்து - அப்பிறப்பின் பயனாகிய வீடு பேற்றின் பத்தைத் துவர மறந்து; சிற்றின்பத்தின் மேல் மயலாகி - நிலையாமையுடைய நொடிப்பொழு தின்பமா யிருக்கின்ற காம வின்பத்திலே மயங்கி அவ்வின்பந் துய்த்தற் பொருட்டு; புன் மாதருக்குட் பறந்து உழன்று - புன்மையுடைய விலைமாதர் குழலிலே விரைந்துபோய் அவரோடு கிடந்து அல்லலுழந்து; பொன்தேடி அப்பாவையருக்கு ஈந்து - பெரிதும் முயன்று பொன் முதலிய பொருள்களை ஈட்டி அவற்றை அவ்விலை மாதருக்கு வழங்கி; தடுமாறி - பின் முதுமை வந்துறுதலாலே என் செய்வதென்று தெரியாமல் மனத் தடுமாற்றமடைந்து; பிணியே குடிகொண்டு — அவ்வொழுக்கத்தாலே நோய்களே உடம்பிலே குடிகொள்ளப்பட்டு அவற்றால் வருந்தி; இறந்திடவோ — வீணாக ஒருநாள் இறந்து படவோ; பணித்தாய் - எளியேனுக்குக் கட்டளையிட்டனை; இது நின் பேரருளுக்குத் தகுமோ காண்! என்பதாம்.

(வி - ம்.) மண்மீதிற் பிறந்து என்றது - இந்நிலவுலகத்திலே பெறுதற்கரிய மக்கட் பிறப்பிலே பிறந்திருந்தும் என்பதுபட நின்றது. மக்களாகப் பிறப்பிப்பதன் நோக்கம் மெய்யுணர்ந்து நின்திருவடி நீழலெய்திப் பேரின்ப மெய்தி யிருப்பதற்கன்றே, அதனை முழுதும் மறந்து போகவுஞ் செய்தனை என்பார். பேரின்பத்தை மறந்து என்றார். மக்கட் பிறப்பின் குறிக்கோள் அதுவேயாதலே;

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றே
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலு மூமர் ஒன்றைபு முணரார் அந்தோ"

(சுபக் - கஅஉ)

எனவருஞ் சித்தியாரானும் உணர்க.

ஏனையுலகங்களில் அரன்பணி பயன்படுதல் இல்லை என்பதனுல் இப்பாட்டில் "வானிடத்தவரும் மண்மேல் வந்தரன்றனை யர்ச்சிப்பர்" என்பதும் காண்க. இக்கருத்தேபற்றி அடிகளாரும் மண்மீதிற் பிறந்து என்பாராயினர் என்க. (கூ0)

பூதங்க ளற்றுப் பொறியற்றுச் சாரைம் புலன்களற்றுப்
பேதங் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முனற்றுக்
காதங் கரணங் களுமற்ற வானந்தக் காட்சியிலே
யேதங் களைந்திருப் பேனிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா கச்சிஎகம்பனே!;—பூதங்கள் அற்றுப் பொறிகள் அற்று - (நின் கடைக்கண் அருள் சிறிது கிடைக்குமாயின் அடியேன்) ஐம்பூதங்களானியன்ற உடலை யான் என்னும் மயக்கமும் கெட்டு அவற்றை அறிகருவியாகிய ஐந்து பொறிகளின் குறும்புகளும் கெட்டு, சார் ஐம்புலன்கள் அற்று - அந்த ஐந்து பொறிகளும் சார்தற்கிடனுயிருந்த ஐந்து புலன்களின் கவர்ச்சியும் கெட்டு; குணபேதம் அற்று-மூன்றுவகைக் குணங்களாலுண்டாகும் வேறுபாடுகளும் கெட்டு; பேராசை அற்று - இக்குணங் காரணமாகத் தோன்றுகின்ற புலன்களிடத்தே உண்டாகும் பெரிய அவாவும் அற்றுப்போக; பின்முன் அற்று - பின்முன் என்கிற இடவேற்றமை கால வேற்றுமைகளும் ஒழிந்துபோக; காத கரணங்களுமற்று - பெரிதும் துன்புறுத்துகின்ற மன முதலிய உட்கருவிகளின் குறும்பும் ஒழிந்து போதலாலே தோன்றுகின்ற; ஆனந்தக் காட்சியிலே - பேரின்பப் பார்வையிலே; ஏதம் களைந்து இருப்பேன் - பிறப்புத் துன்பம் முழுது மகற்றி என்றென்றும் நின் திருவடி நீழலிலே இனிதே மெய்வாழ்வு பெற்றிருப்பேன் காண்! என்பதாம்.

(வி - ம்.)

"பூதங்கள் அல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ளமதியின்
பேதங்களல்ல வினையன்றி நின்ற பிறிது"

(உயிர்) என்பது பரஞ்சோதியார் திருவாக்கு, திருவிளையாடற் புராணம் - நான்மாடக் கூடலான படலம் (செய் - க). ஐந்து பூதங்களின் கூட்டரவாலாய உடம்பையே தான் (உயிர்) என்று மயங்கும் மயக்கமும், இவற்றின் கண்ணுள்ள ஐந்து பொறிகளையே தான் என்று கொள்கின்ற மயக்கமும் புலன்களையே தான் என்று கொள்ளுகின்ற மயக்கமும் தம்முட் பேதமுடைய குணங்களையே தான் என்று கொள்கின்ற மயக்கமும் அந்தக் காரணங்களையே தான் என்று

கொள்கின்ற மயக்கமும் அற்று இவை யெல்லாம் மாயையின் கூறுபாடுகளே உயிராகமாட்டா என்றுணர்ந்து இவற்றின் வேருகிய உயிருண்மையை உணர்ந்து அவ்வுயிர்களுக் குயிராயிருக்கின்ற இறைவனை யுணர்ச்சியான் உள்ளுள்ளே உணர்ந்து எல்லாம் இறைவன் மயமே என்று கண்டிருக்கின்ற மெய்க் காட்சியையே ஈண்டு ஆனந்தக் காட்சி யென்கின்றுர் அடிகளார். இம்மெய்க் காட்சியாளர்க்கு உலகத்துன்ப மனைத்தும் அகன்று போதலின் ஏதம் களைந்திருப்பேன் என்ருர்.

நின் திருவருள் சிறிது கிடைப்பின் எளியேன் இத்தகைய பேரின்பப் பெருவாழ்வினை எய்துவேன்; அவ்வருள் கிடைத்திலதே என்செய்வேன்! என்று அடிகளார் இரங்கிய படியாம்.

இவ்வாறு உயிர் எய்தும் நிலைமையைத் துய்நிலை என்று சைவசித்தாந்தம் கூறும். 'சுத்தாவத்தை' என்பதுமது. இதனை,

"நாடியசத் திரிபாதம் நாலு பாதம்
நண்ணும்வகை எண்ணரிய ஞான பாதம்
கூடுமவர் தமக்குணர்வாய் நின்ற ஞானக்
கூத்தனெரு மூர்த்திகொடு குறுகி மோகம்
நீடியகே வலசகலம் நிகழா வாறு
நிறுத்திமலம் அறுக்குமிது நிலையார் சுத்தம்
கேடில்புகழ் தருஞ்சரியை கிரியா யோகக்
கேண்மையரேல் இவையுணர்த்தக் கிளக்கும் நூலே"

எனவரும் சிவப்பிரகாசத்தானு முணர்க.

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

(குறள் - ௩௫௯)

எனவருந் திருக்குறளும் நோக்குக.

"தூல வுடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல வுடம்பா முதனுன்கும்—மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் பரிசறப்பார் பார்"

(திருக்களிற்றுப் - ௩௭)

என்பதற்கிணங்கத் தத்துவவாராச்சியாலே பூத முதலிய தத்துவங்களை ஆராய்ந்து அவற்றிற்கு வேருய தன்னையுமுணர்ந்து தன்னுயிர்க்குயிராகிய தலைவனையும் உணர்ந்தவரே வீடுபெறுந் தகுதியுடையராகுவர். இதற்கும் அவன் திருவருளே கைதருதல் வேண்டும் என அடிகளார் இப்பாடலால் நம்மனோர்க்கு அறிவுறுத்தவாருகக் கொள்க. (௩௧)

நல்லா யெனக்கு மனுவொன்று தந்தருள் ஞானமிலாப்
பொல்லா வெனைக்கொன்று போடும் பொழுதியல் பூசைசெபம்

சொல்லார் நற்கோயி னியமம் பலவகைத் தோத்திரமு
மெல்லா முடிந்தபின் கொல்லுகண் டாய்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே !;—நல்லாய் – நன்மையையே இயல்பாகவுடைய எம்பெருமானே !; மனு ஒன்று எனக்கு தந்து அருள் - அடியேன் திருமுன்னர்ச் செய்யும் வேண்டுகோள் ஒன்றுளது அதனைக் கேட்டு அதன்படி அடியேனுக்கு வரந்தந்தருளல் வேண்டும்; (அது தான் யாதெனின்) ஞானமிலா பொல்லா எனைக் கொன்று போடும் பொழுது - அறிவில்லாமையாகிய குற்றமுடைய அடியேனை இப்பிறப்பிற் கொன்று பிணமாக்கிப் போகடுகின்ற அப்பொழுது; இயல்பூசை செபம் சொல் ஆர் நல்கோயில் நியமம் பலவகைத் தோத்திரமும் எல்லாம் முடிந்தபின் கொல்லு - அடியேனால் நடத்தப்படுகின்ற வழிபாடும் தியானமும் புகழ் பொருந்திய அழகிய நின்திருக் கோயிலின்கண் அடியேன் நாடொறும் செய்து வருகின்ற திருத்தொண்டுகளும் பல்வேறு வகைப்பட்ட வழிபாட்டுப் பாட்டுப் பாடுதலும் ஆகிய இவை யெல்லாம் அடியேன் செய்து முடித்த செவ்வியிலே கொன்று போகடல் வேண்டும். இதுவே அடியேன் வேண்டு கோளாகும் என்பதாம்.

(வி - ம்.) ஒருவன் செய்து வருகின்ற வினை வழியே அவனுக்கு மறுபிறப்பும் இறைவனால் வழங்கப்படும் என்பதொரு கொள்கையுண்டு. இக் கொள்கைக் கேற்ப அடிகளார் தமக்கு மீட்டும் பிறவி வருமாயின் அப்பிறப்பும் இறைவழிபாடும் தியானமும் திருக்கோயிற்றொண்டும் இறைவனைப் பாடுதலுமாகிய தொழில்கள் செய்வதற்கியன்ற பிறப்பே வருதல் வேண்டும் என்று பெரிதும் அவாவுவார் இவ்வாறு வரம் வேண்டுகின்றார், என்க.

இக்கருத்தோடு,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி இருந்தருள்செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே"

—திருமுறை - ௪

எனவரும் அப்பரடிகளார் வேண்டுகோளையும் ஒப்புநோக்குக.

இனி, இப்பிறப்பின்கண் முதன்மையாக அவாவிச் செய்கின்ற வினைக் கேற்பவே ஒருவனுக்கு மறுபிறப்பும் அமைவதாம் என்பதனை,

"இறந்த பிறப்பிற்றாஞ் செய்த வினையைப்
பிறந்த பிறப்பா லறிக—பிறந்திருந்து
செய்யும் வினையா லறிக வினிப்பிறந்
தெய்தும் வினையின் பயன்"

—அறநெறி - ௰௨

எனவரும் வெண்பாவானும்,

"இறந்த பிறப்பி னெய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணுயோ நீ"

—சிலப் - கக: கடுகூ - எ

எனவரும் கவுந்தியடிகளார் கூற்றுனும் உணர்க.

கண்டாய்: அசைச்சொல்.

இனி, "புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி அல"மரும் அச்சாக்காடு நிகழுங்கால் இந்த வரம் கேட்க வியலாமையால் அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன் என்பது குறிப்பெச்சம்.

இனி, கொன்று போடுதல் கூற்றுவன் ரெழிலாயினும் நின் ஆணைவழி நின்றே அவனும் செய்தலின் அதுவும் நின் செயலே என்னும் கருத்துத் தோன்ற அதனையும் இறைவன் செயலாகவே கூறினர். இயல்பூசை: வினைத்தொகை. செபம் - திருவைந்தெழுத் தோதுதல். சொல் - புகழ். கோயில் நியமம் திருக்கோயிலில் நாடொறும் கடைப்பிடியாகச் செய்கின்ற திருத்தொண்டு. அவை யாவன: சரியை கிரியைகள்; தோத்திரம் தேவார திருவாசகம் முதலியவற்றை அன்பு ததும்ப இறைவன் திருமுன்னின் ஞேதுதல். (௩௨)

சடக்கடத் துக்கிரை தேடிப் பலவுயிர் தம்மைக்கோன்று
விடக்கடித் துக்கோண் டிறுமாந் திருந்து மிகமெலிந்து
படக்கடித் தின்றுழல் வார்க டமைக்கரம் பற்றிநம
னிடக்கடிக் கும்பொழு தேதுசெய் வார்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே!;—சடக்கடத்துக்கு இரைதேடி - அறிவில் பொருளாகிய மட்பாண்டத்தை ஒத்த தம்முடம்பை வளர்க்கும் பொருட்டு அதற்கு நாடோறும் இரையாதற்குக் காடு முதலியவற்றில் சென்று தேடி; பலவுயிர்தம்மை மிக மெலிந்துபட அடித்துக் கொன்று விடக்குக்கொண்டு-பலவேறு உயிர்களாகிய பறவை விலங்கு முதலியவை மிகவும் வருந்திச் சாகும்படி தடி முதலியவற்றால் அடித் துக் கொன்று அவற்றின் தசைகளை இரையாகக் கைக்கொண்டு; இறு மாந்து இருந்து கடித்துத் தின்று உழல்வார்கள் தம்மை - தம்மனைவி மக்களோடே செருக்குற்றுக் கூடியிருந்து அத்தசை முதலியவற்றைக் கடித்துத் தின்றுயிர் வாழ்கின்றவர்களை; நமன் கரம்பற்றி இடக்கு அடிக்கும்பொழுது - கூற்றுவன் வந்து கைப்பற்றிப் போய் நரகில் வீழ்த்தி அவர்களுடைய செருக்குத் தீரும்படி துன்புறுத்தும்பொழுது; ஏது செய்வார் - யாது செய்ய மாட்டுவர் கூறாய் என்பதாம்.

(வி - ம்.) சடக்கடம் - சடமாகிய குடம். இஃது உடம்பிற்கு ஆகு பெயராய் நின்றது. அறிவில்லாத மட்குடம் போல எளிதில் உடைந்தொழிவது என்பது தோன்ற உடம்பைச் சடக்கடம் என்றார். ஊன் உண்பார் மாக்கள் என்பார் இரைதேடி என்றார். இரை - விலங் குணவு. மக்களாய்ப் பிறந்திருந்தும் அப்பிறப்பிற் கேற்ற தூய உணவு

கொள்ளாமல் விலங்குகட் கியன்றவுணவே கொள்வார் என்பது தோன்ற இரைதேடி என்றார். உயிர்கள் தம்மை மிக மெலிந்துபட அடித்துக் கொன்று விடக்குக்கொண்டு இறுமாந்திருந்து கடித்துத் தின்றுழல்வார் எனக்கொண்டு கூட்டிக்கொள்க. சடம்-அறிவில்லது: விடக்கு - ஊன்; தசை.

இறுமாந்திருந்து என்றது தம் மனைவி மக்களோடே செருக்குற்றுக் கூடி யிருந்து என்பதுபட நின்றது. கடித்துத் தின்று என்பது கடித் தின்று என நின்றது. செய்யுள் விகாரம். இடக்கடித்தல் - இடக் குத் தீரத் துன்புறுத்துதல். உயிர்களைக் கொன்று தின்பவர்களைக் கூற்றுவன் நரகிலிட்டு வருத்துவான் என்பது பல சமயத்தார்க்கும் உடம்பாடானதொரு கொள்கை. இதனை,

"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே"

எனவரும் திருமந்திரத்தானும் (கக௮)

"சிலையினுன் மாக்கள் கொன்று செழுங்கடல் வேட்ட மாடி
வலையினுன் மீன்கள் வாரி வாழுயிர்க் கூற்ற மான
கொலைநரைக் கும்பி தன்னுட் கொந்தழ லழுத்தி யிட்டு
நலிகுவர் நாளுநாளு நரகரை நாம வேலோய்" —உ௭௭0.

எனவருஞ் சீவகசிந்தாமணியானு முணர்க. (௩௩)

நாறு முடலை நரிப்பொதி சோற்றினை நான்தினமுஞ்
சோறுங் கறியு நிரப்பிய பாண்டத்தைத் தோகையர்தங்
கூறு மலமு மிரத்தமுஞ் சோருங் குழியில்விழா
தேறும் படியருள் வாயிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா! கச்சி ஏகம்பனே!;—நான் தினமும் சோறும் கறியும் நிரப்பிய பாண்டத்தை - மெய்யுணர்விலாத மடவோனுகிய யான் நாள்தோறும் பெரிதும் முயன்று சோறும் கறியு மாகிய உணவுப் பொருள்களை நிரப்பி வைத்துப் பேணி வருகின்ற பசுமட் பாண்டம் போன்றதும்; நரிப்பொதி சோற்றினை - நரிகள் இறுதியிலே தின்று களித்தற்கெனக் கட்டிவைக்கப்பட்ட சோற்று மூட்டையைப் போன்றதும் ஆகிய; நாறும் உடலை - தீ நாற்றம் வீசுகின்ற புன்மையுடைய என்னுடைய இந்த உடலை; தோகையர் தம் கூறும் மலமும் இரத்தமும் சோரும் குழியில் விழாது - காமப்பிணி கொண்டு மகளிருடைய அருவருப்புடைய தென்று கூறப்படுகின்ற அழுக்கும் செந்நீரும் கழிகின்ற அல்குலாகிய குழியிலே விழுந்து அழி யாதவாறு; ஏறும்படி அருள்வாய் - கரையேறி நின்திருவருளையே காடும்படி திருவருள் செய்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) உயிர்போன பின்னர் நரிகளுக்கு இரையாகுந்தன்மை யுடையதாகலின் உடம்பினை நரிப்பொதிசோறு என்றார். நான் நாள் தோறும் பெரிதும் முயன்று இதன்கண் சோறும் கறியும் நிரப்பாவிடின் அப்பொழுதே அழிந்துபடும் இயல்புடையதென்பார், நான் தினமுஞ் சோறும் கறியும் நிரப்பிய பாண்டம் என்றார். பாண்டம் என்றது பசுமட்கலத்தை.

இதன்கண் என் கருவிகளும் என் வயத்திலில்லை. ஆதலால் அவற்றை அடக்கியாளும் ஆற்றலும் என்பாலில்லை. ஆகையால் நீயே அவற்றையும் அடக்கி நன்னெறிப்படுத்தி அடியேனையும் நின் திருவருளுக்கு ஆளாக்கிக்கோடல் வேண்டும் என்று ஆண்டவனை அடிகளார் வேண்டுகின்றார் என்க.

இது, மக்கள் தம் மன மொழி மெய்களை நன்னெறிப்படுத்தவும் அவர் தம் மாற்றலால் இயல்வதில்லை ஆண்டவன்பாற் றஞ்சம் புகுந்தால் அவனே அவற்றையும் அடக்கி நன்னெறியிலுய்ப்பன் என நம்மனோர்க் கறிவுறுத்தபடியாம் என்றுணர்க.

"மருளுந் தெருளும் மறக்கு மவர்கண்
அருளை மறவாதே யுந்தீபற
அதுவே யிங்குள்ள தென்றுந் தீபற"

(திருவுந்தி - கஅ)

என்பதனால் இறைவனுடைய திருவருளை மறவாதிருப்பார்க்கு அத் திருவருளே துணையாகிப் பிறவிப் பெருங்கடனின்று கரையேற்றும் என்பது கருத்து. (க. ௬)

சொக்கிட் டரண்மனைப் புக்குட் டிருடிய துட்டர்வந்து
திக்குற்ற மன்னரைக் கேட்பது போற்சிவ நிந்தைசெய்து
மிக்குக் குருலிங்க சங்கம நிந்தித்து வீடிச்சிக்கு
மெக்குப் பெருத்தவர்க் கேன்சோல்லு வேன்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே !;—சொக்கு இட்டு அரண்மனை புக்கு உள் திருடிய திட்டர் வந்து-காவலர் மயங்கிக் கிடக்கும்படி சொக்குப் பொடி என்னும் மாயமந்திரப் பொடியைத் தூவி அக்காவலர் மயங்கிய வழி அரசனுடைய அரண்மனையிலுள்ளேயே புகுந்து அங்குள்ள பொருள்களைக் களவாடிச் சென்ற கயவர்களே மீண்டும் வந்து; திக்கு உற்ற மன்னரைக் கேட்பதுபோல் - திசையெங்கும் ஆணை செலுத்தி ஆள்கின்ற அந்த வேந்தரையே தம்மைப் பாதுகாக்க வேண்டும் என்று இரந்து கேட்பது போலே; சிவநிந்தை செய்து - முன்பு கடவுளையே பழித்துக் கூறியும், குருலிங்க சங்கமம் மிக்கு நிந்தித்து - அவ்விறைவன் திருவருட்பேற்றிற்கு இன்றியமையாத வாயில்களாகிய நல்லாசிரியனையும் இறைவன் திருவுருவத்தையும் இறைவன் அடியார்களையும் மிகுதியாகவே பழித்தும்; வீடு இச்சிக்கும் - பின்னரும் வீடுபேற்றினையே விரும்புகின்ற; எக்குப் பெருத்தவர்க்கு - செருக்குமிக்க மடவோருக்கு; என்சொல்லுவேன் - எளியேன் யாது கூறி அறி

வுறப்பேன். இத்தகையோரை நின்றிருவருளே உய்வித்தல் வேண்டும் என்பதாம்.

(வி - ம்.) சொக்கு - ஒருவகை மாயமந்திரப் பொடி. இதனைத் தூவிய வளவிலே காவலர் முதலியோர் மயங்கிக் கிடப்பர் என்ப. சொக்கு: திசைச் சொல். மயங்குதலைச் செய்யும் பொடி. சொக்குதல்- மயங்குதல். திட்டர் - கயவர். அரண்மனையிலேயே திருடிய கள்வர் அரசன்பால் வந்து தம்மைப் பாதுகாக்கும்படி வேண்டுவதுபோலக் கடவுளையும் அவர் திருவடிகளை யடைதற்கு வாயிலாவாராகிய நல்லாசிரியரையும் இறைவன் திருவுருவத்தையும் மெய்யடியாரையும் பழித்துப் பின்னும் வீட்டின்பத்தை விரும்புகின்றனர்; செருக்குமிக்க இவர்க்கு யாரே நல்லறிவு புகட்ட வல்லார்? நீயே இத்தகையோரை உய்விக்க வேண்டும் என்பது கருத்து.

குருலிங்க சங்கமம் என்றது நல்லாசிரியரையும் திருக்கோயிலுள்ளிருக்கும் திருவருட் குறியினையும் இறையன்புமிக்க அடியார் குழுவினையும் ஆண்டவன் திருவருளைப் பெறவேண்டுவோர் ஆசிரியர்பாலும் இறைவன் திருவுருவவழிபாட்டினும் அடியார்பாலும் பேரார்வமுடையரா யிருத்தல் வேண்டும். இவ்வார்வமின்றி அவன் திருவருட்காளாதல் கூடாது என்பது இதனால் யாம் அறியும் உண்மையாம்.

இதனை,

"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே"

எனவரும் சிவஞானபோதம் பன்னிரண்டாம் நூற்பாவானு முணர்க.

இனிச் சிவத்தையும் குருலிங்க சங்கமங்களையும் நிந்திப்போர் என்றது உலோகாயதரும் புத்தரும் பிறருமாகிய பிறசமயத்தோரை என்க. பிறசமயத்தோரும் வீடுபேறே விரும்புவோராதலு முணர்க.

எக்கு - செருக்கு; எக்கழுத்தம் என்பது முதல் குறுகியும் கடை குறைந்தும் நின்றவாறு.

தம் பொறிகளைப் புலன்களிற் செலுத்தித் தம் மறிவை மயக்குதலைச்செய சொக்கிட்டு மயக்கி என்றார். அரண்மனை என்றது இறைவன் எழுந்தருளி யிருக்கின்ற உடம்பினை. அதனுள்ளே புகுந்து திருடிய திட்டர் என்றது காமவெகுளி மயக்க முடையராய் அவ்வுடலைத் தம் ஆசைக்குக் கருவியாக்கிக் கொள்ளும் மடவோரை. அகப்புறக் கருவிகளும் பிறவும் இறைவழிபாட்டிற்கே அமைந்தனவாகவும் அவற்றை இறைவனுக்குப் பணி புரிய வொட்டாமல் தமதாக்கிக் கோடலின் அரண்மனைக்குட் டிருடிய கள்வர் என்றார். (௩௫)

விருந்தாக வந்தவர் தங்களுக் கன்ன மிகக்கொடுக்கப்
பொருந்தார் வளம்பெற வாழ்வார்நின் னுமத்தைப் போற்றிநித்த

மருந்தா முலைப்பங்க ரென்னுத பாதக ரம்புவியி
லிருந்தாவ தேதுகண் டாயிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா ! கச்சி ஏகம்பனே !;—விருந்து ஆக வந்தவர் தங்களுக்கு;-தம்மனைக்கு விருந்ினராக வந்த வறியோர்க்கு; மிக அன்னம் கொடுக்கப் பொருந்தார் - மிகவும் சோறு வழங்குதற்கு நெஞ்சம் ஒருப்படாதவரும்; வளம்பெற வாழ்வார் நின் நாமத்தைப் போற்றி நித்தம் அருந்தா முலைப்பங்கர் என்னுத பாதகர் - இம்மையினும் மறுமையினும் தாமே வளம்பெற்று வாழ்தற் பொருட்டேனும் நாடோறும் இறைவனுகிய நின்னுடைய திருப்பெயர்களைக் கூறி நின்னை வணங்கி உண்ணுமுலையம்மையாராகிய இறைவியை ஒரு கூற்றிலுடையோனே ! என்று கூருதவரும் ஆகிய தீவினையாளர்; அம்புவியில் இருந்து ஆவது ஏது - அழகிய இந்நிலவுலகத்திலே உயிரோடிருந்து வாழ்வதனுலே உண்டாகும் நன்மைதான் யாது ? கூறுதி என்பதாம்.

(வி – ம்.) இனி வளம்பெற வாழ்வாரா யிருந்தும் விருந்தாக வந்தவர் தங்களுக்கு அன்னங் கொடுக்கப் பொருந்தார் என மாறிக் கூட்டிப் பொருள் கூறலுமாம்;

விருந்து - விருந்தினர். அவர் பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும் அஃதின்மையிற் குறியாது வந்தாரும் என இருவகைப் படுவர். இல்லாளோடு கூடியிருந்து வாழ்வோர்க்குரிய அறங்களுள் வைத்து, விருந்தோம்பலே தலை சிறந்த அறமாம். இவ்வறஞ் செய்திலாதார் வாழ்ந்தும் வாழாதவரே யாவர்: இவ்வறத்தின் சிறப்பினை,

"இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

—குறள் - அக

என்றற்றொடக்கத்துத் திருக்குறளானும்,

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த வென்னை"

—சிலப் - கசு: எக - கூ

எனவரும் கண்ணகியார் கூற்றானு முணர்க. பொருந்தார் என்றது மனம் ஒருப்படார் என்றவாறு. அன்புபற்றி யன்றேனும் தாம் இருமையினும் வளம்பெற வேண்டியேனும் நின்னை வழிபடார் என்றிரங்கிய படியாம். இதனுல் இறைவனை வணங்குவோர் இம்மை மறுமைகளில் பெரிதும் வளம்பெற்று வாழ்வார் என்பதும் பெற்றாம். இதனை,

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்

இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
எத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற்
கியாது மையுற வில்லையே"

(திருமுறை - எ)

என்றற்றொடக்கத்துச் சுந்தரமூர்த்தி நாயனர் திருப்புகலூர்த் தேவாரப் பதிகத்தானுமுணர்க. (கசு)

எல்லா மறிந்து படித்தே யிருந்தேமக் குள்ளபடி
வல்லா னறிந்துள னென்றுண ராது மதிமயங்கிச்
சொல்லான் மலைந்துறு சூழ்விதி யின்படி துக்கித்துப்பின்
எல்லாஞ் சிவன்செய லேயேன்பர் காண்கச்சி யேகம்பனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பனே !;—எல்லாம் அறிந்து படித்தே இருந்தும் - இவ்வுலகின் வாழ்வோருட் பலர் தமது பட்டறிவினலே இவ்வுலகியல் எல்லாவற்றையும் நன்கு அறிந்திருந்தும்; படித்து இருந்தும் - மேலும் மெய்ந்நூல்களை நன்கு கற்றுணர்ந்திருந்தும், மதி மயங்கி- ஊழ்வினை காரணமாக அறிவு மயக்கமுற்று; சூழ்விதியின்படி — முன்புசெய்யப்பட்டுப் பயன்றருதற்கு வந்து சூழ்கின்ற விதிப்படி யாதானும் துன்பம் வந்துறுங் காலத்தே; எமக்கு உள்ளபடி வல்லான் அறிந்துளன் - யாம் நுகர்தற்குரியவற்றையெல்லாம் எல்லாம் வல்ல கடவுளே அறிந்து இவற்றை நுகர்வித்துளன் என்னும் மெய்ம்மையை உணர மாட்டாமல்; சொல்லான் மலைந்து - நான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்று கூறித் தா மோதிய மெய்ந்நூல்களோடு மாறுபட்டு; விதியின்படி - வந்துற்ற அந்த வினைக்கேற்பவே; துக்கித்து - துயரமுற்று. பின் எல்லாம் சிவன் செயலே என்பர் - பின்னர் இச் செயலெல்லாம் இறைவன் செயலே என்றுங் கூறுவர். இஃதொரு பேதைமை யிருந்தவாறென்னையோ? என்பதாம்.

(வி - ம்.) தீதும் நன்றும் பிறர்தர வாரா. அவ்விரண்டும் முன்பு யாம் செய்த தீவினை நல்வினைகளின் பயனே எல்லாம் அறியும் இறைவன் சான்ருகமட்டும் நின்று அவரவர் செய்த வினையின் பயனை அவரவரே நுகரும்படி கூட்டுவித்தன் மாத்திரையே யன்றி அவன் ஒருவர்க்கும் துன்பஞ் செய்வானல்லன். இவ்வுண்மையை உலகியலறிவானும் நூலறிவானும் நன்குணர்ந்திருக்கின்ற சான்றோரும் மதி மயங்கி இங்ஙனம் யாங்கள் துயருறுவதும் இறைவன் செயலே என்று இறைவன் உயிரினங்களைத் துன்புறுத்து மியல்புடையன் என்பார் போல் கூறி வருந்துவர் என்பதாம். இத்தகைய பேதைமை சில செவ்வி களில் சான்றோரிடத்தும் காணப்படுகின்றது என்று அடிகளார் இரங்குகின்ருர் என்க.

இங்ஙனம் கற்றுணர்ந்த மேலோரும் இங்ஙனம் பேதைமையுடையரா தற்கு ஆசிரியர் திருவள்ளுவனர் கூறுங் காரணம் வருமாறு:

"பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை" —குறள் - கஎஉ

என்பதாம். இனி அவ்வாசிரியரே ஊழ்வினை கல்வியானுய செயற்கை யறிவையும் கீழ்ப்படுத்தும் ஆற்றலுடைய தென்பார்,

"நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்" —குறள் - ௬எ௪

என்றோதுதலுமுணர்க.

இனி, தீயவூழின் பயனாகிய துன்பத்தை நுகருங்காலத்தும் இதுவும் நாம் முன்பு செய்யவந்ததே என்னும் மெய்யுணர்வு கைதருமாயின் அவ்வுணர்வு வன்மையால் ஊழையும் உப்பக்கம் காணும் ஆற்றல் மெய்க் காட்சியாளர்க் குண்டு. இதனை,

"யான் செய்தேன் பிறர்செய்தார் என்ன தியான் என்னும்
இக்கோணை ஞானஎரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்றான் நேரே
தனையளித்து முன்நிற்கும் வினையொளித்திட் டோடும்"
—சுபக் - ௬0௫

எனவும்;

"உலகினில்என் செயலெல்லாம் உன்விதியே நீயே
உள்நின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்றா யென்றும்
நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலே யென்றும்
நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்குந் தானே"
—சுபக் - ௬0எ

எனவும் வருஞ் சித்தியாரானும் உணர்க. (௬எ)

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் பூவையன்ன
டன்னை நினைந்து வெகுவா யுருகுவர் தாரணியி
லுன்னை நினைந்திங் குனைப்பூசி யாத வுலுத்தரேல்லா
மென்னை யிருந்துகண் டாயிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா! கச்சி ஏகம்பனே!;—தாரணியில் - இந்நில வுலகத்தின்கண் வாழும் மாந்தர் பலர்; பொன்னை நினைந்து வெகு வாகத் தேடுவர் - பொன்னையே அழியாத உறுதிப் பொருள் என்று கருதி அதனையே மிகவு முயன்று நிரம்பத் தேடிக் குவிப்பர்; பூவை யன்னாள் தன்னை நினைந்து வெகுவாய் உருகுவர் - நாகணவாய்ப்புட் போலும் மழலைமொழி பேசுகின்ற பெண்ணைப் பெரிதும் காமுற்று மிகவும் நெஞ்சம் உருகாநிற்பர்; உன்னை நினைந்து உனைப் பூசியாத உலுத்தரெல்லாம் - ஆனால் மெய்ப் பொருளாகிய உன்னை ஒரு பொழு தேனும் நினைந்து உன்னை உள்ளமுருகி நின்று வழிபாடு (செய்கிலார்) செய்யாத இத்தகைய வச்சைமாந்த ரெல்லாம்; இருந்து என்னை - இவ்வுலகிலே உயிர் வாழ்ந்திருத்தலாலே யாதுபயன்? என்பதாம்.

(வி - ம்.) நினைந்து என்பது உறுதிப் பொருளாக நினைந்து என்பதுபட நின்றது. "ஆசைக் கோரளவில்லை அகிலமெல்லாங்கட்டி

யாளினுங் கடன் மீதிலே ஆணை செலவே நினைவர், அளகேசனிகராக வம்பொன் மிக வைத்த பேரும், நேசித்து ரசவாத வித்தைக் கலைந் திடுவர்" என்பதற் கிணங்க 'வெகுவாகத் தேடுவர்' என்றார். பூவை - நாகணவாய்ப்புள்.

காமங் காழ்த்த விடத்து நெஞ்சு நிறையழிந் துருகுதலால் 'பூவை யன்னுடன்னை நினைந்து வெகுவாயுருகுவர்' என்றார். அழிந்து போவனவும் துன்பமே தருவனவுமாகிய இப்பொய்ப் பொருள்களையே தேடுவர் நின்னைத் தேட நினையார், துன்பத்திற் கெல்லாம் உறையுளா கின்ற பூவையரை நினைந்து வெகுவாய் உருகுவாரல்லது பேரின்பக் கடலாகின்ற நின்னை ஒரு பொழுதேனும் நினைந்துருகி வழிபாடு செய்கிலார் என்றவாறு.

உலுத்தர் - வச்சையர்; உலோபர். பொன்னை ஈட்டுவரேயன்றிச் சிறிதும் ஈதல் செய்யார் என்பது தோன்ற உலுத்தர் என்றார். இத் தகையோர் உயிரோடிருப்பதனால் இவர்க்கும் பிறர்க்கும் துன்பமே வளர்வதன்றி நலமோ ரெட்டுணையும் இல்லை என்பார், இருந்து என்னை? என்று வினவினர்.

பொன்னையும் பூவையரையும் பொருளாகக் கொள்பவர்க்கு இறைவன் உளன் என்னும் நினைவும் பிறத்தலரிது என்பது இதனு லறிவுறுத்த படியாம். (கூஅ)

கடுஞ்சொல்லின் வம்பரை யீனரைக் குண்டரைக் காமுகரைக்
கொடும்பாவ மேசெயு நிர்மூடர் தம்மைக் குவலயத்து
ணெடும்பனை போல வளர்ந்து நல்லோர்த நெறியறியா
விடும்பரை யேன்வகுத் தாயிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா! கச்சி ஏகம்பனே!—கடுஞ் சொல்லின் வம்பரை - கேள்விக்கின்னாதனவும் பயனற்றீயனவுமாகிய கடுமையான மொழியே பேசி எப்பொழுதும் கலகம் விளைக்கின்றவரையும்; ஈனரை - கயமாக்களையும்; குண்டரை - புறக்கூறுவோரையும்: காமுகரை - அளவிறந்த காமமுடையோரையும்; கொடும்பாவமே செயும் நிர்மூடர் தம்மை - கொலை முதலிய கொடிய தீவினைகளையே எப்பொழுதும் செய்கின்ற தீயவராகிய அறிவிலிகளையும்; குவலயத்து நெடும் பனை போல் வளர்ந்தும் நல்லோர்தம் நெறி அறியா இடும்பரை - இவ்வுலகிலே மக்கட் பிறப்பிற் பிறந்து நெடிய பனைபோல வளர்ந் திருந்தும் சான்றோர் வகுத்துள்ள நல்ல வழியைச் சிறிதும் அறிந்தி லாத செருக்குடையோரையும்; ஏன் வகுத்தாய் - இவ்வுலகிலே எற் றிற்குப் பிறப்பித்துள்ளனை? கூறுதி; என்பதாம்.

(வி - ம்.) கடுஞ்சொல் - கேட்டற்கின்னாதனவும் பயனற்றீமை யுடையனவும் ஆகிய தீச்சொல்; பொய் குறளை கடுஞ்சொல் பயனில் சொல் எனச் சொல்லின்கட் டோன்றும் தீவினைகள் நான்கனுள் கடுஞ்சொல் ஒன்றுதலால் இடையறாது இத்தீவினையையே செய்து மறுமையினும் நிரயம்புகுமிவரைப் படைப்பதினும் படையாமையே அவர்க்கும் உலகிற்கும் நன்மையாதலால் என் படைத்தாய்? என்று வினவிய படியாம். இச் செய்யுளிற் கூறப்படும் ஏனையவற்றிற்கும்

இஃதொக்கும். வம்பர்-கலகம் விளைப்போர். குண்டர் – புறங்கூறுவோர். இத் தீவினையும் பெரிதும் கொடியதாதலே,

"அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது" —குறள் - கஅக

என்றற் றொடக்கத்துத் திருக்குறள்களாலுணர்க.

இனிக் கொடும்பாவம் என்றது கொலை முதலியவற்றை என்க. நிர்மூடர்-சிறிதும் அறிவில்லாதவர். பாவமே செய்யும் என்புழி ஏகாரம் அறத்தைப் பிரித்தலின் பிரிநிலை. என கொடும்பாவஞ் செய்தலன்றிச் சிறிதும் அறஞ்செய்கிலாத மூடர் என்றாராயிற்று. நல்லோர் நெறி - சான்றோர் செல்லும் (வகுத்த)நெறி, அஃதாவது அறநெறி. இடும்பு - செருக்கு. அதனையுடையார் இடும்பர் என்க.

இதனால் அடிகளார் நம்மனோர்க்குக் கடுஞ்சொல் முதலிய தீவினைகள் திருவருள் நெறிக்கு மாறுயவை என்றும் இத்தகைய தீவினைகள் எப்பொழுதும் விழிப்புடனிருந்து தம்பால் நிகழா வண்ணம் நடத்தல் வேண்டும் என அறிவுறுத்தாருமாயிற்று. இனி நல்லோர் நெறியை,

"ஒழுக்கமன் பருளா சார முபசார முறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவ டக்க மறிவொடர்ச் சித்த லாதி
இழுக்கிலா அறங்க ளானல் இரங்குவான் பணிய றங்கள்"

எனவரும் சித்தியாராலுமுணர்க. (சுபக் - ககஙு) (ரு.கூ)

கோன்றே னநேக முயிரையெல் லாம்பின்பு கோன்றுகோன்று
தின்றே னதன்றியுந் தீங்குசெய் தேனது தீர்கவேன்றே
நின்றே னின்சன்னிதிக் கேயத ஞற்குற்ற நீபோறுப்பாய்
என்றே யுனேநம்பி னேனிறை வாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) இறைவா! கச்சி ஏகம்பனே!;—அநேக உயிரையெல்லாம் கொன்றேன் - அறிவில்லாமையாலே எளியேன் பண்டு எண்ணிறந்த உயிர்களையெல்லாம் கொன்று கொன்று தீவினையை நிரம்பத் தேடியுள்ளேன்; பின்பு தின்றேன் - கொன்ற பின்னர் அவற்றின் உடம்புகளைத் தின்றுள்ளேன்; அதன்றியும் தீங்கு செய்தேன் - அதல்லாமலும் தீவினைகள் எத்துணையுண்டோ அத்துணையும் செய்திருக்கிறேன் காண்!; அது தீர்க என்றே நின் சன்னிதிக்கு நின்றேன் - அத்தீவினைக் குவியல் அடியேன்பானின்றும் தீர்ந்தொழிக! என்னுமொரு எண்ணத்தாலே எம்பெருமானுகிய நின் திருமுன்பு வந்து நினக்கே அடைக்கலமாகி நிற்கின்றேன்; அதனால் - அங்ஙனம் நினக்கடைக்கலம் புக்கமையாலே; நீ குற்றம் பொறுப்பாய் என்று உனை நம்பினேன் - பேரருட் கடலாகிய நீ இதுகாறும் எளியேன் செய்த குற்றங்களைப் பொறுத்து எளியேனையும் ஆட்கொண்டருள்வாய் என்று நின்னையே நம்பியுள்ளேன்; இனி, நீ எனக்கு நன்றே செய்க தீதே செய்க நானே அதற்கு நாயகமே! என்பதாம்.

(வி - ம்.) ஈண்டு அடிகளார் தாமெடுத்த எத்துணையும் பல வாகிய பழைய பிறப்புக்களிலே தாம் செய்த தீவினைகளை எண்ணி உளங் கசிந்து அவற்றை யெல்லாம் பொறுத்தருள வேண்டும் என்று இறைவன் பா லடைக்கலம் புகுகின்றார் என்க.

ஒன்றறிவுயிரின முதலாக ஆறறிவுயிரினம் ஈறாக உயிர்கள் பிறந் திறந்து அறிவு வளர்ச்சி பெற்று வருகின்றன. அங்ஙனம் பிறந்த பிறப்புகளுக்கும் எல்லையில்லை. அப்பிறப்புகடோறும் செய்த தீவினை கட்கும் எல்லையில்லை. அத்தீவினைக் கீடாக மேலும் பிறந்து பிறந்து அவற்றின் பயனை நுகர்ந்தாலும் அவை தீர்வனவாகா; அன்றியும் பிறக் குந்தோறும் மேலும் மேலும் தீவினைகள் பெருகிக் கொண்டே இருக்கும். ஆதலால் அத்தீவினைகள் அனைத்தையும் ஒருசேரத் தொலைத்திடுவதற்கு இப்பொழுதுதான் அடியேனுக்கு ஒரு வழி தோன்றுவதாயிற்று; அவ்வழிதான் யாதோ எனின் நின்றிருமுன் வந்து நினக்கே அடைக்கலம் ஆகி விடுவதென்பதே யாம். அடைக் கலம் புகுந்தாரை நீ கைவிட மாட்டாய், ஒரு தலையாகப் பாதுகாத் தருள்வாய் என்னும் நம்பிக்கையும் எனக்குண்டு என்பது கருத்து.

"காகமானது கோடி கூடு கின்றாலுமொரு
கல்லின்முன் னெதிர்நிற்குமோ
கர்மமா னதுகோடி முன்னேசெய் தாலுநின்
கருணைப் பிரவாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ"

—எங்குநிறை - கூ

எனவருந் தாயுமானவர் திருவாக்கும் ஈண்டு நினைக. (சo)

திருஏகம்ப விருத்தம்

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
யப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சன்மமோ
வென்செய் வேன்கச்சி யேகம்ப நாதனே.

(இ - ள்.) கச்சி ஏகம்பநாதனே-திருக்கச்சி யேகம்பத்தில் எழுந் தருளி யிருக்கின்ற முழுமுதற் கடவுளே !; முன்னை எத்தனை எத்தனை சன்மமோ - எல்லையில்லாத இறந்த காலத்தே எளியேன் எடுத்த பிறப் புக்கள்தாம் எண்ணிறந்தனவா மல்லவோ ?; அன்னை எத்தனை எத்தனை அன்னையோ - அப்பிறப்புக்களிலே எளியேனை ஈன்று வளர்த்த அன்னையர்தாம் எத்துணையர் எத்துணையரோ ?; அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ - அங்ஙனமே எனக்குத் தந்தையாயினோர்

தாம் எத்துணையர் எத்துணையரோ?; பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ - அவ்வன்னைமாரும் அப்பன்மாரும் பெற்று வளர்த்த பின்னர் எனக்கு மனைவியாக வாய்த்த மகளிர்தாம் எத்துணைவரோ எத்துணைவரோ?; பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ - அவ் வெல்லையில்லாத பிறப்புக்களிலே யான் ஈன்ற பிள்ளைகள் தாம் எத்துணைவரோ எத்துணைவரோ; அடியேனும் மூடனாய் அறிந்திலேன் - அன்னை முதலானவரையும் பிறப்புக்களையும் நின்னடியேனாகிய யான் மூடனாக விருத்தலாலே இத்துணையென்று அறியாதிருக்கின்றேன்; இன்னம் எத்தனை எத்தனை சன்மமோ - இனி வருகின்ற எதிர்காலத்திலேயும் எளியேன் பிறத்தற்கியன்ற பிறப்புக்கள் தாம் எத்துணை எத்துணையோ?; அவற்றினும் அன்னை முதலியோர் எத்துணைவர் எத்துணைவரோ அதுவும் அறிந்திலேன்; என் செய்வேன் - அடியேன் இப்பிறவிப் பெருங் கடலில் வீழ்ந்து வருந்தாதிருக்க என் செய்ய மாட்டுவேன்; நின் திருவருளே அடியேனைக் கரையேற்றி உய்விக்க வேண்டுங்காண் என்பதாம்.

(வி - ம்.) பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் என்பது எல்லோரானும் நன்குணரப்பட்ட உண்மையே யாம். அங்ஙனமிருந்தும் இறந்த காலத்தே அடியேன் இப்பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து எல்லையற்ற காலமெல்லாம் உழன்றுள்ளேன். இப்பெருந் துன்பத்திற்கும் எல்லையில்லை என்றே தோன்றுகின்றது. இனி எதிர் காலத்தும் இங்ஙனமே அடியேன் பிறப்பென்னும் பெருங்கடலில் வீழ்ந்து பெரிதும் வருந்தவே வேண்டும் என்பதும் தெரிகின்றது. தெரிந்து மென்னை நின்றிருவருள் என்னை அக்கடல் நின்று கரையேற்றி உய்வித்தாலல்லது யான் அதனினின்றும் கரையேறும் ஆற்றலுடையேன் அல்லன் காண்! என் செய்கேன்! என்று இறைவன் திருமுன்னின்று அடிகளார் வேண்டுகின்றார்.

இதனால், இறைவன் திருவடிகளிலே புகல் புகுவார்க்கன்றி ஏனையோர்க்குப் பிறவித் துன்பத்தினின்றும் உய்தற் கியலாது என்று அடிகளார் அறிவுறுத்தவாறும் ஆயிற்று. இதனை,

> " தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்ற லரிது " —குறள் - ௭

எனவும்,

> " அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
> பிறவாழி நீந்த லரிது " —குறள் - ௮

எனவும் வருகின்ற திருக்குறள்களானு முணர்க.

'நிலைபெறுமா றெண்ணுதியேல்......அலரா நில்லே'

எனவரும் அப்பரடிகளார் அறிவுரையும் ஈண்டு நினைக.

௩. திருவேகம்ப மாலை

முற்றும்

௪. திருத்தில்லை முதலிய திருவூர்களில் திருவாய் மலர்ந்தருளியவை

திருத்தில்லை

கட்டளைக் கலித்துறை

காம்பிணங் கும்பணைத் தோளார்க்கும் பொன்னுக்குங் காசினுக்குந்
தாம்பிணங் கும்பல வாசையும் விட்டுத் தனித்துச் செத்தும்
போம்பிணந் தன்னைத் திரளாகக் கூடிப்புரண் டினிமேற்
சாம்பிணங் கத்துதை யோவென்செய் வேன்றில்லைச் சங்கரனே.

(இ - ள்.) தில்லைச் சங்கரனே - திருத்தில்லைச் சிற்றம்பலத்தில் இன்பக் கூத்தாடுகின்ற இறைவனே!; காம்பு இணங்கும் பணைத் தோளார்க்கும் - மூங்கிலை ஒக்கின்ற பருத்த தோள்களையுடைய மகளிர் பொருட்டும்; பொன்னுக்கும் காசினுக்கும் தாம் பிணங்கும் பல ஆசையும் விட்டு - பொன்னையும் காசுகளையும் பெரிதும் ஈட்டுதற்குப் பெரிதும் வருந்துகின்ற தனது பலவாகிய ஆசைகளையும் தனது போக் கறுதியினாலே ஒழித்துவிட்டு; தனித்துச் செத்துபோம் பிணம் தன்னை - தான் மட்டுமே செத்துப்போன பிணத்தை; இனி மேல் சாம் பிணம் - இன்னும் சிறிது காலங்கழித்துச் சாதற்கிருக்கின்ற பிணங்கள் பல; திரளாகக் கூடிப் புரண்டு கத்துது - கூட்டமாகக் கூடித் துன்பந்தாளாமல் நிலத்திலே வீழ்ந்து புரண்டு கதறி யழுகின் றன; ஐயோ என் செய்வேன் - அந்தோ அடியேன் இவர் திறத்திலே யாது செய்வேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) இச் செய்யுள் அடிகளார் தில்லையிலிருந்த பொழுது அங்கு ஒரு பேராசைக்காரன் இறந்தபொழுது அவன்றன் சுற்றத்தார் பெரிதும் வருந்தி நிலத்திலே வீழ்ந்து புரண்டழுவதனை அடிகளார் கண்டு அவர் தம் மறியாமைக் கிரங்கிப் பாடியது என்றுணர்க.

காம்பு - மூங்கில். பணைத்தோளார் - பருத்த தோளையுடைய மகளிர் என்க. காசு - வெள்ளி செம்பு முதலியவற்றாலியன்ற காசுகள் என்க. பிணங்கும் - வருந்துகின்ற.

மகளிர் பொருட்டும், பொன்னும் காசும் ஈட்டும் பொருட்டும் இவை காரணமாக எழுகின்ற பலவேறு ஆசைகள் என்க. அவை தம் மனக்கினிய மகளிரைக் காண்டலும் அவரை இணக்குதலும் அவரோ டிருந்து வாழ்தற்கேற்ற மாடமாளிகைகளும் பூம்பொழில்களும் தாம் ஏவிய செய்யும் ஏவலரை அமைத்துக் கோடலும் அம்மகளிரோடு உலாப்போதற்கு ஊர்தியும் இன்னோரன்ன பிறவற்றையும் அவாவுத லுண்மையின் பல ஆசையும் விட்டு என்றார். சாக்காடு நேர்ந்தழித் தாம் பின்னும் பிழைத்திருந்தாற் போதும் என்னும் ஆசை நிற்க ஏனைய ஆசைகள் தாமே மறைந்து போதலின் ஆசையும் விட்டு என ஆசையின் விளைவாகக் கூறினர். தமக்கேமமாவார் என அதுகாறும் எண்ணியிருந்த மனைமக்கள் சுற்றம் முதலியோரை எல்லாம் விட்டுத் தாம் மட்டுமே சாதலின் தனித்துச் செத்துப்போம் பிணம் என்றார்.

போம்: காலவழு. கத்துத: பால்வழு. "உற்ரூர் யாருளரோ உயிர்கொண்டு போம்பொழுது" எனத் திருநாவுக்கரசரும் ஓதுத லுணர்க.

உயிர்கள் தத்தம் வினைக்கீடாகப் பிறந்து மிருந்தும் இறந்தும் உழல்கின்றன. இறப்பாரை இறவாமற் செய்வார் யாருமிலர். எல்லாம் இறைவன் செயலே என்று எண்ணி அமைதியுறுதற்கேற்ற ஞானமின் மையால் இனிமேற் சாம்பிணம் என்றும், அறியாமையாற் றுன்புறு மித்தகையோரை அறிவுறுத்தித் தேற்றும் ஆற்றலும் தமக்கின்மையால் என் செய்வேன்! என்றும் கையறுநிலை எய்துகின்ருர் அடிகளார் என்க. (க)

சோறிடு நாடு துணிதருங் குப்பைதோண் டன்பரைக்கண்
டேறிடுங் கைகளி றங்கிடுந் தீவினை யெப்பொழுது
நீறிடு மேனியர் சிற்றம் பலவர் நிருத்தங்கண்டா
லூறிடுங் கண்க ளுருகிடு நெஞ்சமென் னுள்ளமுமே.

(இ - ள்.) நாடு சோறு இடும் - இறைவனுல் படைக்கப்பட்டிருக் கின்ற நாடுகள் யான் பசித்த பொழுதெல்லாம் அப்பசிப்பிணி தீரு மாறு எனக்குச் சோறு வழங்கும்; குப்பை துணி தரும் - குப்பைக் குழிகள் என்னுடலை மறைக்க வேண்டிய துணிகளை எனக்களியா நிற்கும்; கைகள் - அடியேனுடைய கைகளோ; தொண்டு அன்பரைக் கண்டு ஏறிடும் - இறைவன்பால் தொண்டுபூண்டொழுக மெய்யன் புடைய சான்ருேரைக் காணும் பொழுது தாமாகவே என் தலை மேலுயர்ந்து தொழா நிற்கும்; தீவினை எப்பொழுதும் இறங்கிடும் - இக் காரணத்தால் அடியேன் முன் செய்த தீவினைகள் நாடோறும் படிப் படியாகக் குறைந்து போகும்; நீறு இடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங் கண்டால் - திருநீறு சண்ணித்த திருமேனியையுடையவரும் தில்லைத் திருச்சிற்றம்பலத்தே இன்பக் கூத்திடுகின்ற வரும் ஆகிய அம்பலவாண ருடைய திருக் கூத்தினை அடியேன் காணும் பொழுதோ; என் கண்கள் ஊறிடும் - என் கண்களில் இன்பக் கண்ணீர் ஊறிப் பேரின் பஞ் செய்யும்; நெஞ்சம் உள்ளமும் உருகிடும் - அடியேன் நெஞ்சமாகிய உள்ளந்தானும் மிகவும் நெக்கு நெக்கிட்டுருகா நிற்கும்; ஆதலின் அடியேன் ஒரு சிறிதும் குறையுடையேன் அல்லேன் கண்டீர்! என்பதாம்.

(வி - ம்.) இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கு உண்டியும் உடையும் இன்றியமையாதனவே யாம். உலகமோ அன்னமயமாகவே படைக்கப் பட்டிருக்கின்றது. அதன்கண் தமக்குரிய அறத்தைக் கடைப் பிடித்து வாழும் நல்லோரும் எப்பொழுதும் இருக்கின்றனர். அந் நல்லோர் துறவோர்ப் பேணலைத் தந்தலையாய கடமையாகக் கொண் டொழுகுகின்றனர். ஆதலால் அடியேன் பசித்துறும் போதெல்லாம் அவர்கள் அன்புடன் சோறிடுவர் என்பார், நாடு சோறிடும் என்று கூறினர். இனி இடையில் உடுக்கவும் குளிர் காற்று வெய்யில் இவற் றைத் தடுக்கவும் எனக்குப் பழந்துணி ஒன்றிருந்தாலே போதியதாம். அப்பழந் துணியோ இல்வாழ்வோர் குப்பைக் குழிகளிலே மிக எளி தாகவே கிடைப்பதாம். எனவே உண்டியால் உடையால் அடியேற்குக் குறை சிறிதும் இல்லை என்பது கருத்து.

இனி, மக்களாய்ப் பிறந்தோர் இருள்சேர் இருவினையும் கெடு மாறு ஒழுகிப் பிறவிப் பெருங்கடல் நீந்துங் கடப்பாடுடையர். ஆகவே அவ்வினைத் தீர்வும் எமக்கு மிகமிக எளிதாகவே நடைபெறுகின்றது. எங்ஙனமெனில் சிவனடியாரை எதிர்கண்டபோ தெல்லாம் என் கைகள் தாமாகவே என் தலைக்கு மேலே உயர்ந்து குவிந்து தாமாகவே தொழுகின்றன. இச் செயலொன்றே என் வினை யெல்லாம் தீர்த்து விடும் என்பார், தொண்டு அன்பரைக் கண்டேறிடுங் கைகள் தீவினை யெப்பொழுதும் இறங்கிடும் என்றார்.

இனி, இவ்வுலகத்திலேயே அடியேனுக்கு வீட்டின்பம் எனப்படும் பேரின்பந்தானும் மிகவும் எளிதாகவே கிடைத்து விடுகின்றது என்பார், நீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங் கண்டால் கண்கள் ஊறிடும் உள்ளம் உருகிடும் என்றார்; எனவே அடியேன் யாதொரு குறையின்றியே இம்மையிலேயே பேரின்பப் பெருவாழ்வினை எய்தி யிருக்கின்றேன், யான்பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்பது குறிப்பெச்சப் பொருளாயிற்றென்க.

"உண்டா லம்மவிவ் வுலகம்......
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே"

—புறம், கஅஉ

என்பதனால் உலகுள்ள துணையும் துறவோரைப் பேணுவாரும் உள ராவர் என்பது பெற்றாம். தட்ப வெட்பஞ் சமமாயமைந்த இத் தமிழகத்தே குப்பையிற் கிடக்கின்ற பழந்துணிகளே போதியதாம் என்று அடிகளார் கருதியது முணர்க.

இனி, தொண்டன்பரைத் தொழுதால் எப்பொழுதுந் தீவினை இறங்கிடும் என்பதனை,

"செய்தவ வேடம் மெய்யிற் றாங்கிக்
கைதவ வொழுக்க முள்வைத்துப் பொதிந்தும்
வடதிசைக் குன்றம் வாய்பிளந் தன்ன
கடவுண் மன்றிற் றிருநடம் கும்பிட்டு
உய்வது கிடைத்தனன் யானே உய்தற்கு
ஒருபெருந் தவமும் உஞற்றிலன் உஞற்றா து
எளிதினிற் பெற்றது என்னெனக் கிளப்பின்
கூடா வொழுக்கம் பூண்டு வேடம்
கொண்டதற் கேற்பநின் தொண்டரொடு பயிறலிற்
பூண்டவவ் வேடங் காண்டொறுங் காண்டொறுங்
நின்னிலை யென்னிடத் துன்னி யுன்னிப்
பன்னாள் நோக்கின ராகலின் அன்னவர்
பாவனை முற்றியப் பாவகப் பயனின்யான்
மேவரப் பெற்றனன் போலு மாகலின்
எவ்விடத் தவருநின எண்ணினர் நீயுமற்
றவ்விடத் துளையெனற் கையம்வே றின்றே, அதனால்

இருபெருஞ் சுடரு மொருபெரும் புருடனு
மைவகைப் பூதமொ டெண்வகை யுருப்பின்
மாபெருங் காயந் தாங்கி யோய்வின்
றருள்முந் துறுத்த வைந்தொழி னடிக்கும்
பரமா னந்தக் கூத்த கருணையொடு
நிலையில் பொருளு நிலையியற் பொருளு
முலையா மரபி னுளங்கொளப் படுத்திப்
புல்லறி வகற்றி நல்லறிவு கொளீஇ
எம்ம னோரையு மிடித்து வரைநிறுத்திச்
செம்மைசெய் தருளத் திருவுருக் கொண்ட
நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகா தனவே"

—சிதம்பரமும்மணிக்கோவை - கக

எனவரும் குமரகுருபரர் திருமொழியானும் உணர்க.

இனி, நீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங் கண்டால் கண்கள் இன்ப நீர் துளிக்கும், உள்ளம் உருகிடும் என்பதனை,

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே"

என்று வரும் அப்பரடிகளார் அருண்மொழியானும் உணர்க. (உ)

அழலுக்குள் வெண்ணெய் யெனவே யுருகிப்பொன் னம்பலத்தார்
நிழலுக்கு ணின்று தவமுஞற் றாமனிட் டூரமின்னார்
குழலுக் கிசைந்த வகைமாலை கொண்டுகுற் றேவல்செய்து
விழலுக்கு முத்துலை யிட்டிறைத் தேனென் விதிவசமே.

(இ - ள்.) பொன் அம்பலத்தார் நிழலுக்குள் நின்று - திருத்தில்லையிலே பொன்னம்பலத்தே கூத்தாடுகின்ற இறைவனுடைய திருவருளாகிய நீழலிலேயே நிலைத்து, அழலுக்குள் வெண்ணெய் எனவே உருகி - தீயிலிட்ட வெண்ணெய் போல உள்ளம் உருகி; நின்று; தவம் உஞற்றாமல் - தவஞ் செய்வதை விட்டு: நிட்டூர மின்னார் குழலுக்கு இசைந்த மாலை கொண்டு - கொடியவராகிய மகளிருடைய கூந்தலுக்குப் பொருத்தமான பலவகையான மலர் மாலைகளை ஆராய்ந்து மலரங்காடியிலே வாங்கிக் கொடுபோய்க் கொடுத்து: குற்றேவல் செய்து - அம்மகளிர்க்குக் குற்றேவலும் செய்து; விழலுக்கு முத்துலை இட்டு இறைத்தேன் - பயன் சிறிதுமில்லாத விழலுக்கு மூன்று துலைகள் கட்டி நீர் இறைக்குமாறு போலே என் வாழ்நாளைப் பாழாக்கி விட்டேன்; விதி வசம் - இவ்வாறாயது எளியேனுடைய தீவினைப் பயனே போலும் என்பதாம்.

(வி - ம்.) பெறுதற்கரிய மக்கட் பிறவியைப் பெற்ற யான் அதன் பயன் கைகூடும் முறையிலே முயல வேண்டுமாயின் பொன்னம் பலத்தே இன்பக் கூத்தாடுகின்ற இறைவன் திருவருளிலே அழுந்திச் சரியை முதலிய தவங்களை இடையறுதியற்றல் வேண்டுமன்றோ? இவ்வுண்மையை நன்குணர்ந்திருந்தும் அவ்வழி முயலாமல் கொடுமை கட் கெல்லாம் உறைவிடமாகிய மகளிரைக் காமுற்று அவர்க்காவன வெல்லாம் செய்து என் வாழ்நாளைக் கெடுத்தொழிந்தேனே, இவ்வாறு அறிவுகெட்டு முயன்றமைக்குக் காரணம் என் ஊழ்வினையே ஆதல் வேண்டும் என்று அடிகளார் கழிந்த நாள்களுக்கு இரங்கிய படியாம். அடிகளார் தம் மிளமைப் பருவத்தே உலகியலில் மிகவும் ஈடுபாடுடை யராயிருந்தனர் என்பது அவர் வரலாற்று லுணரலாம்.

இறைவனை வழிபடுவார் உள்ளமுருகி வழிபடுவதே உண்மையான வழிபாடாகும் ஆதலின் அழலுக்குள் வெண்ணெய் எனவே உருகித் தவம் உஞற்றுமல் என்றார். இதனை,

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும்நீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தமை நாணியே"

எனவரும் அப்பரடிகளார் அமுதமொழியானும் உணர்க.

இனி, காமமே எல்லாத் தீவினைகட்கும் காரணமாகலின் அக்காமத் தைத் தோற்றுவிக்கும் மகளிர்க்கு அக்காமத்தின் கொடுமையை அடையாக்கினர். நிட்டூரம் - கொடுமை. மின்னார் - மின்னல் போன்ற இடையினையுடைய மகளிர். இறைவன் திருவடிகளிலே இட்டு வழிபாடு செய்ய ஒரு மலரேனும் கொண்டிலேன் என்பது தோன்ற மின்னார் குழலுக்கு வகை வகையாக மாலை கொண்டேன் என்றார்.

விழல் பயன்றராத ஒரு வகைப் புல். அந்தப் புல்லுக்கு நீர் இறைத் தல் பயனிலாச் செயலாகும். யானோ அவ்விழலுக்கு மூன்று துலை யிட்டு இறைப்பார் போன்று வீணாகப் பெரிதும் முயன்று கெட் டொழிந்தேன் என்பது கருத்து. முத்துலையிட்டிறைத்தலாவது மிகவும் ஆழமான இடத்திலுள்ள நீரை ஒரு துலை யிட்டிறைத்துச் சிறிது மேலேற்றிக்கொண்டு பின்னும் ஒரு துலை யிட்டிறைத்து அதனைப் பின்னும் உயர எற்றிக்கொண்டு பின்னரும் ஒரு துலையிட் டிறைத்தல். இங்ஙன மிறைப்பது அரியதொரு முயற்சியாதலால் மகளிர் பொருட்டு இங்ஙனம் மிகமிக முயன்றேன் என்பார்,

"விழலுக்கு முத்துலை யிட்டிறைத்தேன்" என்றார்.

இனிப் பொன்னம்பலத்தார் நிழலுக்குள் நின்று தவமியற்றுத லாவது; எல்லாம் இறைவன் செயலென்றுணர்ந்து அவன் திரு வருளின் வழியே ஒழுகுதல். இதனை,

"அவிழ விருக்கு மறிவுடன் நின்றவர்க்
கவிழுமிவ் வல்லலென் றுந்தீபற
அன்றி அவிழாதென் றுந்தீபற" —திருவுந்தி - உஎ

என்பதனானுமுணர்க. இதன்கண் அவிழவிருக்கு மறிவு என்றது திருவருளை என்க. அருளை நிழல் என்றது உவமவாகு பெயர்.

தவம் என்றது சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கனையுமாம். இறைவன் திருவருளிலே அழுந்தி நிற்பார் செயலெல்லாம் இறைவன் செயலாக ஏனையோர் செயலெல்லாம் வினையின் செயலேயாதலின் என்விதி வசமே என்றிரங்கினர். இதனை,

"நான் செய்தேன் எனுமவர்க்குத் தானங்கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்கும் கன்மம்"

எனவருஞ் சித்தியாரானுந் தெளிக.—சிவஞான-சுப-௩0௫ (௩)

ஓடாமற் பாழுக் குழையாம லோர முரைப்பவர்பாற்
கூடாம னல்லவர் கூட்டம் விடாமல்வெங் கோபநெஞ்சி
னுடாம னன்மை வழுவாம லின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

(இ - ள்.) சிதம்பர தேசிகனே-தூய அறிவு வெளியிலே இன்பக்கூத்தாடுகின்ற நல்லாசிரியனாகிய எம்பெருமானே!, ஓடாமல்-அடியேன் என் மனம் போன வழியெல்லாம் உலகெங்கும் ஓடித்திரியாமலும்; பாழுக்கு உழையாமல் - பயனற்ற பொருள்களைப் பெறுதற்குப் பெரிதும் உழைத்து வருந்தாமலும்; ஓரம் உரைப்பவர் பால் கூடாமல்-நடுவு நிலையிற் பிறழ்ந்து ஒருபாற் கோடிப் பேசுகின்ற கீழோரோடு கூடாதிருக்கவும்; நல்லவர் கூட்டம் விடாமல் - நன்மையுடைய சான்றோருடன் எப்பொழுதும் கூடி யிருக்கவும்; வெம் கோபம் நெஞ்சில் நாடாமல் - வெவ்விய சினம் என் நெஞ்சத்தில் ஒரு பொழுதும் வாராதிருக்கவும்; நன்மை வழுவாமல் - நல்லறங்களினின்றும் ஒரு பொழுதும் பிறழா தொழுகவும்; இன்றைக்கு நாளைக்கு என்று தேடாமல்-இன்றைக்கு வேண்டும் என்றும் நாளைக்கு வேண்டும் என்றும் பொய்ப் பொருள்களை விரும்பித் தேடாதிருக்கவும் காரணமான; செல்வந் தருவாய் - நினது திருவருளாகிய அழியாத செல்வத்தைத் தந்து அடியேனை உய்வித்தருள்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) ஓடாமல் என்றது புலன்களை நுகர விரும்பிப் பொறிவழியே நெஞ்சம் ஓடிய வழி யெல்லாம் உலகிலே ஓடி வீணே யுழலாமல் என்றவாறு; என்னை? மெய்ந்நெறி வாழ்க்கை தலைப்படுவார்க்குப் புலனடக்கமே தலை சிறந்த ஒழுக்க மாதலின் அதனை முற்பட வோதினர். தாயுமானவ வடிகளாரும்,

"காடுங் கரையும் மனக்குரங்கு கால்விட் டோட வதன்பிறகே
யோடுந் தொழிலாற் பயனுளதோ? ஒன்றாய்ப் பலவா யுயிர்க்குயிரா
யாடுங் கருணைப் பரஞ்சோதி அருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும் பருவ மிதுகண்டீர் சேர வாருஞ் செகத்தீரே!"

—காடுங்கரையும் - ௧

எனக் கூவி யழைத்தலுங் காண்க.

இனி ஆசிரியர் திருவள்ளுவனார் தாமும்,

"சென்ற விடத்தாற் செலாவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு" —குறள் - சஉஉ

எனவும்,

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து" —குறள் - கஉசு

எனவும், அறிவுறுத்துதலுணர்க.

பாழுக் குழைத்தலாவது - பொய்ப்பொருளீட்டுதற் பொருட்டுப் பெரிதும் வருந்தி முயறல். ஓரமுரைத்தலாவது - அறத்திற் பிறழ்ந்து ஒரு தலையாகப் பேசுதல். அஃதாவது நடுவு நிலையிற் பிறழுதல். நடுவு நிலை பிறழ்ந்து பேசுவோர் தீயவராதலின் அவரோடு கூடின் தம் மனமும் நாளடைவில் கெடுதல் ஒருதலை யாதலின் அத்தகையார் கூட்டம் கூடாதென்கின்றனர். அத்தகையோர் கூட்டம் பாவமும் பழியும் உண்டாக்குதலின் அதனை விதந்தோதினர். ஓரம் உரைப்பவர் என்றாரேனும் இனம்பற்றித் தீவினையாளர் அனைவரையும் கொள்க.

இனி நல்லவர் கூட்டம் என்புழிச் சிவனடியார் திருக் கூட்டத்தை உரைத்தபடியாம். இதற்குச் சோறிடு நாடு என்னுந் திருப்பாட்டில் தொண்டன்பரைக் கண்டேறிடும் கைகள் என்பதற்குரைத்த விளக்கம் காண்க. (உ)

இனி வெகுளியானது தவ முதலிய எல்லா நலன்களையும் கெடுக்க வல்லதாகலின் வெங்கோபம் நெஞ்சினுடாமல் என்றார். என்னை ?

"மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்" —குறள் - ௩0௩

என்பதனானும் காம வெகுளி மயக்கம் என்னும் மூவகையுயிர்க் குற்றங்களுள் அதுவுமொன்றாதலுணர்க. இனி நன்மை வழுவாமல் என்புழி நன்மை அன்பே அருளே துறவே ஈதலே என்னும் இன்னோரன்ன நன்மைகளின் மேற்றென்க.

இன்றைக்கு வேண்டும் நாளைக்கு வேண்டும் என்று எதனையும் வேண்டு மியல்பு மேலோராகிய துறவோர்க்குப் பொருந்தாது. யாதொன்றனையும் வேண்டாமையே சிறப்பாம். இதனை,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்" —குறள் - ௩சுஉ

எனவும்,

"வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்" —குறள் - ௩சு௩.

எனவும் வரும் அருமைத் திருக்குறள்களானுமுணர்க.

ஓடாமை முதலாக இன்றைக்கு நாளைக்கென்று தேடாமையீறாக வுள்ள எல்லா நன்மைகளும் ஒரு சேரத் தருகின்ற செல்வம் இறைவனுடைய திருவருட் செல்வமே யாதலின் ஈண்டு அடிகளார் வேண்டும் செல்வம் அச் செல்வமே யாம் என்று தெளிக. (௪)

பாராம லேற்பவர்க் கில்லையேன் னுமற் பழுதுசோல்லி
வாராமற் பாவங்கள் வந்தணு காமன் மனமயர்ந்து
பேராமற் சேவை பிரியாம லன்பு பெறுதவரைச்
சேராமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

(இ - ள்.) சிதம்பர தேசிகனே - தூய அறிவு வெளியாகிய அம்பலத்திலே எழுந்தருளியிருக்கின்ற அனைவர்க்கும் நல்லாசிரியனாகிய இறைவனே! இன்னுங் கேட்டருள்க!; பாராமல் - இல்லையென்றென்பால் வந்திரக்கின்ற வறியோரை இன்னார் இவர் எமக்கு என்று ஆராய்ந்து பாராமலே அவர் யாவரே யாயினும்; ஏற்பவர்க்கு - அவ்விரலவர்க்கு; இல்லை என்னுமல் - யானும் இல்லை என்று கூறாமலும்; பழுது சொல்லி வாராமல் - பிறர் குற்றங்களை யாண்டுங் கூறித்திரியாமலும்; பாவங்கள் வந்து அணுகாமல் - எனது மனம் மொழி மெய் என்னும் மூன்றானும் எனக்குத் தீவினைகள் வந்து சேராமலும்; மனம் அயர்ந்து பேராமல் - நன்னெறிக்கட் செல்லுங்கால் நெஞ்சயர்ந்து தீய நெறிகளிலே சென்று விடாமலும்; சேவை பிரியாமல் - நாடோறும் நின்னை வழிபாடு செய்தலினின்றும் பிரிந்து வீண் செயலிலே புகுந்து விடாமலும்; அன்பு பெறுதவரைச் சேராமல் - இயல்பாகவே தம் முள்ளத்தே அன்பு தோன்றப் பெறாத கயவர்களோடு கூடாமலும்; செல்வந் தருவாய் - இருத்தற்குக் காரணமான நினது திருவருட் செல்வத்தை அடியேனுக்கு அளித்தருள்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) பாராமல் என்றது இரவலர் யார் என ஆராயாமல் யாரேயாயினும் என்பதுபட நின்றது. இனி ஏற்பதிகழ்ச்சி யென்று எண்ணிப்பாராமல் ஏற்பவர்க்கு என்றலுமொன்று. பழுது சொல்லி வருதலாவது - பிறர்குற்றங்களைக் கண்டவரோ டெல்லாம் சொல்லி வருதல் என்க. அஃதாவது புறங் கூறுதல். "அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ் சொல்லும் புன்மையாற் காணப் படும்" என்றும் (குறள் - க௮௫) "கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு" (குறள் - ௯௮௪) என்றும் வள்ளுவனாரும் அறிவுறுத்துதலுணர்க. பாவங்கள் - தீவினைகள், இவை மனம் மொழி மெய் என்னும் மூன்று கருவிகளானும் செய்யப்படுவன. அவை வந்தணுகாமல் என்றது அடியேன் தீவினைகளைச் செய்யாமலிருக்கும்படி என்றவாறு. மனம் ஒன்றைவிட்டு ஒன்றுபற்றி இடையறாது சுழலுமியல்புடையதாகலின் அஃது அங்ஙனம் சுழன்று பாசக்கடலுள் வீழ்ந்து அழுந்தாமல் தூயதாய் நின்திருவடியைப்பற்றி நிற்கும் நிலையிற் பேராமலிருக்கும்படி செய்தருள்க என்பது கருத்து. சேவை - என்பது நின்னைச் சேவிக்கும் சேவை என்பதுபட நின்றது. அஃதாவது வழிபாடு. அன்பு பெறுதவரைச் சேராமல் என்றது பெரியோராகிய நின்னடியாரைச் சேர்வதல்லது, சிற்றின மாக்களைச் சேராமல் என்றதுபட நின்றது. என்னை? நல்லதன் நலனும் தீயதன் தீமையும்

இல்லை என்போரும் விடரும் தூர்த்தருமாகிய சிற்றினத்தாரோடு கூடுமிடத்து, அறிவைத் திரித்து இருமையுங் கெடுப்பராகலின் அவரோடு கூடாமை வேண்டினர். என்னை?

"நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு" —குறள் - சுடுஉ

என்றற் றொடக்கத்துத் திருக்குறள்களையும் நோக்குக. இன்னும்,

இனி, சிவபத்தர்களோடு இணங்குக என்றது,

"அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான்."

எனவரும் மெய்கண்டார் மெய்ம்மொழியுங் காண்க. (௫)

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

(இ - ள்.) சிதம்பர தேசிகனே - தில்லையி லெழுந்தருளிய நல்லாசிரியனாகிய சிவபெருமானே!; கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் - உயிரினங்களைக் கொல்லாமலும் பிறராற் கொல்லப்பட்ட உயிர்களின் ஊனைத் தின்னாமலும்; குத்திரம் கோள் களவு கல்லாமல் - வஞ்சகமும் கோட் சொல்லுதலையும் களவு கோடலையும் யான் சிறிதும் பயிலாமலும்; கைதவரோடு இணங்காமல் - வஞ்சகரோடு சேர்ந்துறவாடாமலும்; கனவினும் பொய் சொல்லாமல் சொற்களைக் கேளாமல் - கனவிலேயும் பொய் கூறாமலும் பொய் கூறுவோர் சொற்களைக் கேளாமலும்; தோகையர் மாயையிலே செல்லாமல் - மயில் போலுஞ் சாயலையுடைய விலைமகளிர் தரும் மயக்கத்திலே அகப்பட்டு அவர்பாற் செல்லாமலும்; செல்வந் தருவாய் - இருத்தற்கியன்ற நினது திருவருட் செல்வத்தை அடியேற் களித்து ஆட்கொண்டருளுவாய்! என்பதாம்.

(வி - ம்.) தீவினைகளுள் வைத்து மிகப் பெரிய தீவினை கொலை புரிதலே ஆதலின் அதனை முற்பட வோதினர். என்னை?

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று" —குறள் - ஙஉங

எனவும்,

"நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை" —குறள் - ஙஉரு

எனவும் வரும் திருக்குறள்களையும் நோக்குக.

கொன்றது - கொல்லப்பட்ட உடம்பினூன். ஊனுண்ணல் கொலைத் தீவினைக்குக் காரணமாகலானும் அருளுடையார்க்கு இயைவ

தன்றுகலானும் கொல்லாமல் என்றொழியாது கொன்றதைத் தின்னு மல் என்றும் கூறினர்.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்" —குறள் - ௨௫௧

எனவும்,

"பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு" —குறள் - ௨௫௨

எனவும் வரும் வள்ளுவப் பெருந்தகையார் அறிவுரையுங் காண்க.

குத்திரம் - வஞ்சகம். கோள் - பிறர் கூறிய மறைச்சொல்லை ஊராரிடத்தே சென்று கூறுதல். இச்செயலால் மாபெருந் தீவினைகள் விளையுமாதலின் அதனையும் எடுத்தோதினர். களவு—பிறர் பொருளை அவர் அறியாமற் கவர்ந்து கோடல். கைதவர்-வஞ்சகர். கனவினுட் பேசுபவர் தம்மை யறியாமலே பேசுவர் அந்நிலையினும் யான் பொய் பேசாதிருக்க வேண்டும் என்பதன் வாயிலாய்ப் பொய் பேசுதலின் தீமையை விளக்கினர். சொற்கள் என்றது பொய் கூறுவோர் சொற்கள் என்றவாறு. தோகையர் - மயிலன்ன மகளிர். அவர் செய்யும் மாயை என்க. மாயை - மயக்கம். வஞ்சமுமாம். (௬)

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணு வதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

(இ - ள்.) முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும்-அந்தோ இம்மண்ணுலகத்திலே பிறந்து கோமுடி சூட்டிக்கொண்டு கோலோச்சும் அரசரும் ஏனையோரும்; முடிவில் ஒரு பிடி சாம்பராய் வெந்து மண்ணுவதுங் கண்டு - தத்தம் வாழ்நாள் முடிந்த பொழுது ஒரோஒவொரு கைப்பிடியளவு சாம்பராதம்படி ஈமப்புறங் காட்டிலே தீயிலே வெந்து பின்னரும் அச்சாம்பர் தானும் இல்லையாய் வறிய மண்மாத்திரமே ஆய்விடுவதை மாந்தர் எல்லோரும் கண் கூடாகக் கண்டிருந்தும்; பின்னும் இந்தப் படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் - மீண்டும் இங்ஙனம் நிலையுதலில்லாத இந்நிலவுலகத்தேயுள்ள இவ்வாழ்க்கையையே தாமும் வாழ வேண்டும் என்றெண்ணி அவ்வழி முயல்வதல்லாமல்; நாம் பொன்னின் அம்பலவர் அடிசார்ந்து உய்ய வேண்டும் என்று அறிவார் இல்லையே - இத்தகைய பொய்வாழ்க்கையை விடுத்து இனி யாம் பொன்னுலியன்ற அம்பலத்திலே எழுந்தருளியிருக்கின்ற இறைவனுடைய அழகிய அடிகளை எய்தி அந்தமிலின்பத்து அழிவில் வீடெய்தி உய்வோம் என்று அறிந்து கொள்பவர் தாமும் யாரு மில்லையே! என்னே இவ்வுலகத்தார் பேதைமை யிருந்தவாறு! என்பதாம்.

(வி - ம்.) இவ்வுலகமானது நாடோறும் தன்பால் தோன்றுகின்ற மக்கட்கு இங்கு நீயிர் வாழும் வாழ்க்கையானது வெறும்

மாயம் என்பதனை மிகப்பெரிய வாழ்வு பெற்ற மன்னர் முதலியோர் அழிவினாலே காட்சியளவையாலே காட்டி அறிவுறுத்தி வருகின்றது. அங்ஙனம் அறிவுறுத்தவும் இவ்வுலக வாழ்வின் நிலையாமை இம்மாந்தர் மனத்திற் சிறிதும் பட்டதாகத் தோன்றவில்லை. தங்கள் முன்னே முடிவேந்தர் பிடிசாம்பராய்ப் பின்னும் வறிய மண்ணே ஆதல் கண்டிருந்தும் மீண்டும் இப்பொய் வாழ்க்கைக்கே அலமந்து சுழலுகின்றனர். இந்த நிலையாமையை யுணர்ந்து இறைவனடி சார்ந்து இனி யாமுய்வோம் என்று முயல்வார் யாருமில்லையே! என்னே இவர் தம் பேதைமை யிருந்தவாறென்று அடிகளார் இரங்குகின்றார்.

இதனோடு,

"வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின்றடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே"

—திருமுறை - எ

எனவரும் சுந்தரமூர்த்திகள் அருண்மொழியும் காண்க.

இனி, மக்கள் வாழ்க்கையின் பொய்ம்மை நன்கு யாவர்க்கும் விளங்குமிடம் சுடுகாடே யாதலின் ஆண்டைய நிகழ்ச்சியையே அடிகளார் எடுத்தோதுகின்றார். இங்ஙனமே மணிமேகலையினும் தண்டமிழாசான் சாத்தனாரும்,

"தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
முதியோ ரென்னா னிளையோ ரென்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டுங்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பா து வாழு
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ"

—மணி. சக்கர-கஎ-க0ச

என நம் உள்ளந் துணுக்குற வினவுதலுமுணர்க. (எ)

காலை யுபாதி மலஞ்சல மாமன்றிக் கட்டுச்சியிற்
சால வுபாதி பசிதாக மாகுமுற் சஞ்சிதமா
மாலை யுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்டே
யால முகந்தரு ளம்பல வாவென்னை யாண்டருளே.

(இ - ள்.) ஆலம் உகந்து அருள் அம்பலவா-திருப்பாற்கடலிலே வாசுகி யுமிழ்ந்த நஞ்சினை உணவாக விரும்பியுட்கொண்டு நின்னைத் தஞ்சம் புகுந்த அமரர் முதலியோரைக் காத்தருளிய அம்பலவாணனே!

கேட்டருள்க !; மலம் சலம் காலை உபாதி - என் வினைக்கீடாக எனக்குச் சுமையாயமைந்துள்ள இவ்வுடலாலே அடியேனுக்கு மலத்தாலும் மூத்திரத்தாலும் விடியற் காலத்திலேயே துன்பம் வந்துறுகின்றது; கடு உச்சியில் சால உபாதி பசிதாகம் ஆகும் - கடிய நண்பகலிலோ மாபெருந் துன்பம் பசியினாலும் நீர் வேட்கையாலும் உண்டாகும்; மாலை துயில் காமம் உபாதி ஆம் - இனி அந்திமாலைப் பொழுதிலேயோ உறக்கமும் காமநோயுமாகிய இவையிற்றால் துன்பம் வரும்; இவை மாற்றிவிட்டு என்னை ஆண்டு அருள் - இவ்வாறு ஒரு நாளிலேயே முப்பொழுதும் ஒழியாமல் வருகின்ற இத்துன்பமெல்லாம் இல்லாமற் செய்து அடியேனை ஆட்கொண்டருள்வாயாக ! என்பதாம்.

(வி - ம்.) இதன்கண் அடிகளார் உடலால் உயிர்கட்கு எப்பொழுதும் துன்பமேயன்றி இன்பஞ் சிறிதுமில்லை, ஆதலால் அதன்கட் பற்றுவையாதே கொண்மின் ! இறைவன் திருவடியிலே அடைக்கலம் புகுமின் ! புகுந்தால் அப்பெருமான் இனி நுங்கட்கு இவ்வுடற் சுமையால் வருந்துன்ப மில்லாதபடி நும்மைப் பேரின்பத்தே என்றுமிருத்துவன் என்பதனைத் தம் முடம்பின் மேலிட்டு அறிவுறுத்துகின்றார் என்க.

வினைக் கீடாக வந்த இவ்வுடம்பிற்கு நாடோறும் உணவு தேடுதலும் துன்பம். இத்துன்பமிருக்க உண்டபின்னரும் அவ்வுணவு மலமும் மூத்திரமுமாகி விடியற்காலத்திலேயே வருத்துகின்றது. பின்னரும் பசிப்பிணி வந்தெய்துகின்றது. அதுவோ மாபெருந் துன்பம்; நீர் வேட்கை வந்து துன்புறுத்துகின்றது. மாலையிலோ உறக்கம் வந்து வருத்துகின்றது. காமத்துன்பமோ இருக்கவே இருக்கின்றது; இங்ஙனமாக இதனால் யாம் எய்துவதெல்லாம் துன்பம் துன்பமே என்றவாறு.

தஞ்சம் புகுந்த தேவர் பொருட்டு ஆலத்தையும் உகந்தவன் என்பது, அவன் றஞ்சம் புகுவாரைத் தான் வருந்தியும் வாழவைக்கும் பெருந்தகை ஆதலால் அவனடிக்கே தஞ்சம் புகுமின் ! என்னும் குறிப்பை உள்ளடக்கி நின்றது. (அ)

ஆயும் புகழ்த்தில்லை யம்பல வாண ரருகிற்சென்றாற்
பாயு மிடபங் கடிக்கு மரவம்பின் பற்றிச்சென்றாற்
பேயுங் கணமும் பெருந்தலைப் பூதமும் பின்றொடரும்
போயென்செய் வாய்மன மேபிணக் காடவர் போமிடமே.

(இ - ள்.) மனமே — என் அன்புடைய நெஞ்சே; ஆயும் புகழ்த் தில்லை அம்பலவாணர் அருகில் சென்றால் - மெய்க்காட்சியாளரால் ஆராயப் படுகின்ற சிறந்த பெரும் புகழையுடைய திருத்தில்லைச் சிற்றம்பலத்திலே எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை நீ பெரிதும் விரும்புகின்றனையே அவ்விருப்பத்திற் கேற்ப நீதான் அவர் பக்கத்திலே சென்றால்; இடபம் பாயும் - அவர் ஊர்தியாகிய காளை நின்னைப் பாய்ந்து தன் மருப்பாலே ஊறுபடுத்தும்; அரவம் கடிக்கும் - அவர் அணிகலனாகிய பாம்புகள் நின்னைக் கடித்துக் கொன்று

விடுமே; அவர் போம் இடம் - மேலும் அப்பெருமான் விரும்பிச் செல்லும் இடமோ பிணங்களையுடைய சுடுகாடே யாகும்; பின்பற்றிச் சென்றால் – அவரைப் பின்தொடர்ந்து நீ போவாயானால்; பேயும் கணமும் பெருந்தலைப்பூதமும் பின் தொடரும் – பேய்களும் சிவகணங்களும் பெரிய தலையையுடைய பூதங்களும் நின்னைப் பின் தொடர்ந்து வந்து பெரிதும் அச்சுறுத்தும்; போய் என் செய்வாய் - இத்துணைத் தீங்குடைய அவர் பால் நீ சென்று என்னதான் செய்குவையோ? அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) இஃது அம்பலவாணர்பாற் காதல் கொண்ட நெஞ்சுடையாள் ஒருத்தி தன்னெஞ்சுக்குக் கூறியது என்க.

இதற்குப் புறத்திணைப் பாடாண் பகுதியில்,

"காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் மருங்கினு மென்மனார் புலவர்" —பாடாண் - உ அ

எனவரும் நூற்பாவின்கண் "பகுதி என்றதனால்" புரைதீர் காமமென்றதனுட் பக்கு நின்ற புணர்ச்சி வேட்கை கட்புலனாகிய கடவுளிடத்தும் நீக்கார் எனவும் பகுதி ஆகுபெயர். அது கடவுண் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பனவும், அவர் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும், கடவுண் மானிடப் பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம்" என ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும் செய்து போந்தமையானும் உணர்க.

அவ்விதிபற்றி இது கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என்று கொள்க. இன்னும்,

"நல்கெனினு நாமிசையா ளென்னுஞ் சேவடிமே
லொல்கெனி னுச்சியா ளென்னும்—அல்கிருள்
ஆட லமர்ந்தாற் கரிதா லுமையாளை
யூட லுணர்த்துவதோ ராறு"

எனவரும் புறப்பொருள் வெண்பாமாலையினையும்,

"பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றன் மேவிட்டு
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப நீரேறுங்
கொல்லேற்றுக் கறுகிடினுங் கொள்ளுமோ கொள்ளாதோ"

எனவரும் பழம் பாடலையும் நோக்குக.

இனி, இதன்கண் அடிகளார் சிவபெருமானுக்கு ஊர்தி விடையாதலையும் அரவம் அணிகலனாதலையும் அப்பெருமான் பேய்கள் பின் தொடரச் சுடுகாட்டில் கூத்தாடுவார் என்றும் கூறுகின்ற பௌராணிகர் மதத்தைத் தழுவி இவ்வாறு அப்பெருமானை இகழ்ச்சியும் நகையும் தோன்றப் பாடிப்பரவுகின்றார் என்று கொள்க.

இனி, இதனுட் கணம் என்றது சிவபெருமானுக்குக் குற்றேவல் புரியும் குழுக்களை என்க. இங்ஙனமே அடியார் பலரும் இறைவனைப்

பாடிப் பரவும் வழக்கத்தை அவர்கள் அருளிய தேவார முதலிய நூல்களுள் யாண்டுங் காணலாம். (க)

ஓடு மெடுத்தத ளாடையுஞ் சுற்றி யுலாவிமெள்ள
வீடுக டோறும் பலிவாங்கி யேவிதி யற்றவர்போ
லாடு மருட்கொண்டிங் கம்பலத் தேநிற்கு மாண்டிதன்னைத்
தேடுங் கணக்கென்ன காண்சிவ காம சவுந்தரியே.

(இ - ள்.) சிவகாம சவுந்தரி - சிவகாம சுந்தரி என்னும் எம் பெருமாட்டியே நீ தானும்; ஓடும் எடுத்து - கையிலே நான்முகனுடைய தலையோட்டினைப் பிச்சைக்கலமாகக் கையிலெடுத்துக் கொண்டு; அதள் ஆடையும் சுற்றி மெள்ள உலாவி - இடையிலே யானை புலி இவற்றின் தோலை ஆடையாகச் சுற்றிக்கொண்டு; மெல்ல நடந்து வீடுகள் தோறும் சென்று - இல்லங்கள் தோறும் தாமே சென்று; பலிவாங்கி - பிச்சை யேற்றுண்டு; விதியற்றவர் போல் - ஆகூழற்று வறியராயினர் போல; ஆடும் மருள் கொண்டு - மனம் போனபடி ஆடுதற்குக் காரணமான பித்துக்கொண்டு - இங்கு அம்பலத்தே நிற்கும் - இத்தில்லையிலே ஊர்ப் பொதுவிலே நிற்கின்ற; ஆண்டி தன்னைத் தேடும் கணக்கு என்ன - இரவலனை மிகவும் காமுற்று எப்பொழுதும் அவனையே தேடுவதற்குக் காரணந்தான் என்னையோ? நீ பெரும் பேதைகாண்! என்பதாம்.

(வி - ம்.) இதற்கும் முற்செய்யுட் கோதிய தொல்காப்பிய விதியே அமையும். இது கடவுளைக் கடவுட் பெண்டிர் நயந்தபக்கமாம். இது சிவபெருமான் பாற் பெருங் காதல் கொண்டு அவனையே தேடுகின்ற சிவகாம சௌந்தரிக்கு அவள் தோழி கூறிய கூற்றாக அமைந்துளது.

ஓடு என்றது நான்முகன் தலையோட்டினை. அதள் - தோல். ஈண்டு யானைத்தோலும் புலித்தோலும் என்க. வீடுகடோறும் பலிவாங்கி என்றது இறைவன் பிச்சாடனத் திருக் கோலங்கொண்டு தாருக வனத்திருடிகள் இல்லந்தோறுஞ் சென்று ஏற்றதனை. அம்பலம் - ஊர்ப்பொதுவிடம்; பொன்னம்பலம்; ஆண்டி - இரப்பவன். சவுந்தரி என்றாள் இறைவியின் பேரழகினைக் குறிப்பதற்கு. இத்தனைப் பேரழகுடைய நீ நினக்கேற்ற அழகனைத் தேடாமல் ஆண்டியைத் தேடுவது பேதைமையே என்பது கருத்தென்க. (க௦)

ஊட்டுவிப் பானு முறங்குவிப் பானுமிங் கொன்றேடொன்றை
மூட்டுவிப் பானு முயங்குவிப் பானு முயன்றவினை
காட்டுவிப் பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப் பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே.

(இ - ள்.) தில்லை அம்பலத்தே - மாந்தர்காள்! தில்லைத் திருச்சிற்றம்பலத்தின் கண்ணே - ஊட்டுவிப்பானும் - உயிர்களை அவரவர் வினைக்குத் தக்கவாறு படைப்பித்து அவ்வவ்வுயிர் செய்த வினையின்

பயனை அவ்வவ்வுயிரே நுகரும்படி செய்பவனும்; உறங்குவிப்பானும் எடுத்தவுடல் முகந்து கொண்ட வினைத்தீர்வின்கண் அப்பிறப்பினை அழித்து அவ்வுயிர்களைத் துயில்வித்து இளைப்பாற்றுபவனும்; இங்கு ஒன்றொடு ஒன்றை மூட்டுவிப்பானும் - இவ்வுலகின்கண் ஒரு பொருளோடு மற்றொரு பொருளைச் சேர்த்து வைப்பவனும்; முயங்குவிப்பானும் - உயிர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்து அவர்கள் காதலுற்று ஒருவரை ஒருவர் தழுவி யின்புற்று வாழும்படி செய்பவனும்; முயன்ற வினை காட்டுவிப்பானும் - நீயிர் நும் ஊழிற்கேற்ப வினையை நுங்கட்குக் காட்டித் தருபவனும்; இருவினைப் பாசக்கயிற்றின்வழி ஆட்டுவிப்பானும் - இவ்வாறு உயிர்கள் தாம் தாம் செய்த நல்வினை தீவினை என்னும் இரண்டு வகை வினைகளாகிற பாசக்கயிற்றினாலே அவைகள் இவ்வுலகிலே இயங்கும்படி இயக்குபவனும் ஆகிய கடவுள் ஒருவன் இருக்கின்றான்; இவ்வுண்மையை அனைவீரும் உணர்ந்து கொண்மின் என்பதாம்.

(வி - ம்.) அடிகளார் இவ்வழகிய செய்யுளிலே "சைவசித்தாந்தம்" என்னும் மெய்க்காட்சியை மிகவும் சுருக்கமாகவும் அழகாகவும் வெளியிட்டிருக்கின்றனர்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது தமிழகத்து மெய்க் காட்சியாளர் துணிவாம். அத்துணிவினைக் கூறுவார், தில்லை அம்பலத்தே ஒருவன் உண்டு என்றார். அந்த வொருவன்றானும் எல்லாவற்றையும் தன் அருளொளியில் இலக வைத்துக் கொண்டு நிற்கின்றான் என்பது தோன்ற அருள் அல்லது அறிவு வெளிக்கு அறிகுறியாகிய தில்லையம்பலத்தே உண்டு என்றார். அந்தக் கடவுளே நாம் வாழுகின்ற நிலம் நீர் தீ வளி வெளியாகிய ஐந்து பெரும் பூதங்களையும் படைத்து அவற்றை ஒன்றனோடொன்று இணங்கவும் வைத்து உலகத்தையே படைத்திருக்கின்றான். உயிர்கட் குடம்பு முதலிய கருவிகளாகிய பொருள்களும் அப்பூதக் கூறுகளே அவற்றை ஒன்றனோடொன்றிணக்கியே நம்மனோர்க்கு உடல் முதலியனவும் தந்துளான் என்பார்,

"இங்கு ஒன்றொடொன்றை மூட்டுவிப்பானும்" என்றார். இனி உயிரினங்களை அவற்றின் வினைக்கேற்பப் படைத்தருளி அவ்வுயிர்கள் தத்தம் வினையின் பயனைத் தாந்தாமே நுகரும்படி செய்பவனும் அவனே என்பார். "ஊட்டுவிப்பானும்' என்றார். இனி எடுத்த உடல் முகந்து கொண்ட வினைத்தீர்வின்கண் அவற்றை அழித்து இளைப்பாறச் செய்பவனும் அவனே என்பார், 'உறங்குவிப்பானும்' என்றார். உறங்குவித்தல், என்றது ஒவ்வொரு நாளும் உறங்குவித்தலாகிய துயிலையும், இறப்பின் மாயையின்கண் அடங்கிக் கிடத்தலையும், உயிர் தூய்மை எய்தியபின்னர்த் தனது திருவருளிலே அழுந்தி இன்பத்துயில் கோடலையும் ஒரு சேரக் கூறியபடியாம் என்க.

இனி, முயங்குவிப்பான் என்பது, உயிர்களை ஆணெனவும் பெண்ணெனவும் இரு வேறு வகையாகப் படைத்தருளி அவை தம்முட் காதலுற்றுத் தழுவிக் களித்து வாழச் செய்பவனும் என்றவாறு. இன்னும் இதன்கண் தந்தைதாய் தமையன் தம்பி மாமன் மாமி மைத்துனன் என்னும் உறவினராகப் படைத்து அவர்கள் ஒருவரோடொருவர் அன்பான் முயங்கி வாழ்வதும் அடங்கும்.

இனி, உயிர்களின் பழவினைக்கேற்ப அவற்றினுள் முயற்சி யுண்டாக்குபவனும் முயன்ற அந்த வினை அவர்கட்கு வாய்க்கும்படி செய்பவனும் வாய்த்த அவ்வினையின் பயனைக் காட்டுபவனும் என்னும் இன்னோரன்ன வெல்லாம் அடங்கும்படி "முயன்றவினை காட்டுவிப்பா னும்" என்றார்; இறைவன் உயிர்களின் நல்வினை தீவினைக்கேற்ப அவற்றை இயக்குவதன்றித் தானாக இயக்குவதில்லை என்பார், 'இரு வினைப் பாசக் கயிற்றின் வழி ஆட்டுவிப்பானும்' என்றார்.

இங்ஙனம் கூறவே மாந்தர்கள் யான் செய்தேன் என்னது என்று செருக்குறாதே கொண்மின். எல்லாம் இறைவன் செயலென்று அடங்கி அவன்பால் நன்றியுணர்வு தோற்றி அவனை வழிபட்டு வாழ் மின் என்றறிவுறுத்தினாராதல் குறிப்பெச்சத்தாற் போந்த பொருள் என்க. இவற்றை எல்லாம் சிவஞானபோத முதலிய மெய்ந்நூல்களில் விரிவாக உணரலாம்; ஈண்டுரைப்பின் உரை பெருகும். (௧௧)

அடியார்க் கெளியவ ரம்பல வாண ரடிபணிந்தான்
மடியாமற் செல்வ வரம்பெற லாம்வைய மேழளந்த
நெடியோனும் வேதனுங் காணாத நித்த நிமலனருட்
குடிகாணு நாங்க ளவர்காணு மெங்கள் குலதெய்வமே.

(இ - ள்.) நாங்கள் எழ்வையம் அளந்த நெடியோனும்-யாங்கள் எழுலகங்களையும் ஒரே அடியில் அளந்தருளிய நெடியவனாகிய திரு மாலும்; வேதனும் - நான்கு வேதங்களையும் திருவாய் மலர்ந்தருளிய நான்முகனும் ஆகிய தேவதேவர்களிருவரும்; காணாத - பன்றியாகி நிலத்தை அகழ்ந்தும் அன்னமாகி வானிலே எறப்பறந்தும் நெடுங் காலந் தேடியும் காணவியலாத திருவடியையும் திருமுடியையும் உடைய; நித்தன்-அழிவற்றவனும்; நிமலன் - தூய அறிவுப்பிழம்பான வனும் ஆகிய சிவபெருமானுடைய; அருட்குடிகாணும் - திருவரு ளாட்சியிலின்புற்று வாழ்கின்ற அவனுடைய வழியடிமைக் குடிமக்கள் கண்டீர். அடியார்க்கு எளியவன் - நெடியோனும் வேதனும் காணாத பெருமையனேயாயினும்; அவன்றான் தன்பால் மெய்யன்பு பூண்ட அடியார்க்கு அடியவனாகின்ற அத்துணை எளியவனும் ஆவன் காண்; அம்பலவாணன் - பின்னும் அடியவர் எப்பொழுது வந்தாலும் காட் சிக்கு எளியனாதற் பொருட்டு ஊர்ப் பொது மன்றத்திலேயே குடி யிருப்பவன் காண்; மடியாமல் அடிபணிந்தால் - நீயிர் இவ்வாறு மடிந் திராமற் சென்று; அடிபணிந்தால் - அவன் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினாற் போதியதாம் அத்துணைக்கே; செல்வம் வரம் பெறலாம் - இம்மைக்கு வேண்டிய செல்வங்களையும் மீண்டும் பிறவா வரத்தையும் ஒரு தலையாகப் பெறலாம், இப்பொழுதே போமின் என்பதாம்.

(வி - ம்.) இச்செய்யுள் ஆற்றுப்படை என்னும் புறப்பொருட் பகுதியில் பாடாண்டிணைக் கண்ணதாகிய ஒரு துறையின் பாற்படும் அஃதாவது.

'தாவி னல்லிசை' எனவரும் தொல்காப்பியத்து நூற்பாவின்கண்

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் "

எனவரும் பகுதிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்பதற்கு "இல்லறத்தை விட்டுத் துறவறமாகிய நெறியிடத்து நன்றென்று கண்ட காட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினாலே தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழியாகிய செல்வத்தை யாண்டுந் திரிந்து பெறாதார்க்கு இன்ன விடத்தே சென்றாற் பெறலாமென்று அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று அக் கந்தழியினைப்பெறும்படி சொன்ன கூறுபாடும்" என உரை விரித்து அதற்குத் திருமுருகாற்றுப் படையை எடுத்துக் காட்டுதலும் இச்செய்யுட்கும் பொருந்துதலால் இவ்விதியே இதற்கும் கொள்க.

இனி, இதனை அம்பலவாணரடி பணிந்து அவர் அருளை நிரம்பப் பெற்று வருகின்ற மெய்யடியார் குழுவினை எதிர்கண்ட வொருவன் நீயிர் யாவிர்? இத்தகைய பேறு எவ்வாறு பெற்றீர்? என வினவினனுக்கு அவ்வடியார் கூறிய கூற்றாகக் கொள்க.

இனி, இதன்கண் தமக்கிப் பேறளித்த பெருமான் நெடியோனும் வேதனுங் காணாத நித்தனேயாயினும் நம்போன்ற அடியார்க்கு மிகவும் எளியவன் என்றும், அவனுடைய அருட்குடி நாங்கள் என்றும் கூறினமை நீதானும் எம்போல அவனைக் கண்டு அவனருளைப் பெறலாம் என்றும், அதற்கு நீ செய்ய வேண்டிய முயற்சியும் பெரிதில்லை அவன் அடிபணிந்தாலே போதியதாம் என்றும், அவன் காட்சிக்கும் மிக எளியவன் என்பார் அம்பலவாணன் என்றும் அடிபணிந்தால் செல்வமும் இறவா வரமும் பெறலாம் என்றும் நீ இவ்வாறு மடிந்திருத்தல் வேண்டா என்பார் மடியாமல் அம்பலவாணர் அடிபணிக என்றும் பணிந்த பின் அவன் அருட்குடியில் நீயும் ஒருவன் ஆகுவைகாண் என்றும் இறைவனருளைப் பெறும் பக்குவம் எய்திய ஒருவனுக்கு அதனைப் பெற்ற பெரியோர் அறிவுறுத்து ஆற்றுப்படுத்தினர் என்க.

மடியாமல் அடிபணிந்தால் என மாறுக. இனி நிமலன் அருட்குடி காணும் நாங்கள் என்பதனோடு,

" நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம்என்று மீளா வாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே "

எனவரும் திருநாவுக்கரசர் திருப்பாடலையும் ஒப்பு நோக்குக.

இனி, அம்பலவாணன் நெடியோனும் வேதனுங் காணுத நித்தனு யினும் அடியார்க் கெளியவன் என்பதனை,

"நெடியவன் பிரமன் றேட நீண்டவன் தென்னற் கேழின்
முடியதாஞ் சிவலோ கத்தைக் காட்டிய முறையீ தையன்
படிமிசை நடந்து பாடிப் பாணன்றன் விறகா ளாகி
அடிமையென் றடிமை கொண்ட வருட்டிற மெடுத்துச்
[சொல்வாம்"

எனவரும் திருவிளையாடற் புராணச் செய்யுளானும், (விறகு-க.) உணர்க. (கஉ)

தெய்வச் சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பிவிட்டாற்
போய்வைத்த சோப்பன மாமன்னர் வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங் கேமண்ட லீகர்தம் மேடையெங்கே
கைவைத்த நாடக சாலையெங் கேயிது கண்மயக்கே.

(இ - ள்.) தெய்வச் சிதம்பர தேவா - கடவுட்டன்மையுடைய அறிவு வெளியிலே உறைகின்ற சிவபெருமானே!; உன் சித்தம் திரும்பி விட்டால் - உன்னுடைய திருவுள்ளமட்டும் எளியேங்கள் மீது சிறிது திரும்பி விடுமானல் அப்பொழுது; மன்னர் வாழ்வும் புவியும் எங்கே!—யாங்கள் பெரிதும் மதிக்கின்ற மன்னர்களுடைய வாழ்க்கையும் இந்நிலவுலகமும் எமக்குப் பொருளாமோ; மெய்வைத்த செல்வம் எங்கே - யாங்கள் மெய்ப்பொருள் போலக் கருதி ஈட்டி வைத்துள்ள செல்வந்தான் பின்னர்ச் செல்வமாகுமோ ?; மண்டலீகர் தம் மேடை எங்கே - யாங்கள் பேரின்ப வாழ்க்கைக் கிடமென்று கருதுகின்ற மன்னருடைய அத்தாணி மேடைதான் ஒரு பொருளாகுமோ ?; கை வைத்த நாடக சாலை எங்கே - மாதர்கள் தங்கள் கைகளாலே அபிநயம் வைத்தற்கிடனுன கூத்தாட்டரங்குதான் எமக்கின்பந்தருமிடமாகுமோ ?; பொய்வைத்த சொப்பனமாம் - இவையெல்லாம் பொய்க்கு உவமையாக வைத்துப் பேசுகின்ற வறிய கனுவாகவே முடிந்திட மாட்டாவோ ?; இது கண் மயக்கே - இவ்வாறெல்லாம் தோன்றுமிது அப்பொழுது வறிய கண்மயக்கமே ஆகிவிடும் என்பதாம்.

(வி - ம்.) இறைவனே நினது திருவருட் பார்வை எம் பக்கல் சிறிது திரும்பி விடுமாயின் அப்பொழுது யாங்கள் மெய்க்காட்சி பெற்றவராகி விடுவோமல்லமோ? அப்பொழுதும் எல்லாம் நீயேயாக யாங்கள் காண்பதல்லது தம்முள் வேற்றுமை யுடையனவாகவும் எங்களுக்கு உறுதிப் பொருள் போலவும் தோன்றுகின்ற மன்னர் வாழ்வு முதலியனவும் நிலம் நீர் முதலிய பல்வேறு பொருள்களும் யாங்கள் இன்புறுதற்கிடமான அரசமேடையும் ஆடலரங்கும் எல்லாம் அப்பொழுதே கனவு போலாகி விடும் இவை யெல்லாம் எங்கள் மருட்காட்சியாலெய்திய மயக்க மாத்திரமே என்னும் உண்மையும் எங்கட்குப் புலப்பட்டு விடும் என்பது கருத்து. என்னை?

"பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிவர்தவத்தின் கலக்கம்
தருஞானம் போகஞா திருஞான ஞேயம்
தங்கியஞா னஞ்சங்கற் பனேஞான மாகும்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞானம்
ஆதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்"

—சிவஞானசித்-சுப - ௩௧௬

எனவும்,

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே"

—திருமந்திரம் - ௨௨௯0

எனவும் வருகின்ற பிறசான்றோர் செய்யுள்களையும் நினைக.

இறைவன் திருவருள் கிடைத்து விட்டால் மெய்யுணர்வு தோன்றி விடும். அது தோன்றிய வழி இவ்வுலகமும் அதன்கண் மாந்தர் கொண்டாடும் மன்னர் வாழ்வு முதலியனவும் கனவு போலப் பொய்யென்பதும் இவை யெல்லாம் மயக்கக் காட்சிகளே என்பதும் தெற்றெனப் புலப்பட்டு விடும் என்பது கருத்து.

இனி, மன்னர் வாழ்வு முதலியன கனவும் கண் மயக்கமுமே என்பதனை,

"மண்டனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வும்
எண்டரு பூதபேத யோனிகள் யாவு மெல்லாம்
கண்டவிந் திரமா சாலம் கனக்கமு திரதங்காட்டி
உண்டுபோல் இன்றும் பண்பின் உலகினை அசத்து மென்பர்"

எனவரும் சித்தியாரானும் (சுப - உசஉ) உணர்க. (க௫)

உடுப்பானும் பாலன முண்பானு முய்வித் தோருவர்தம்மைக்
கெடுப்பானு மேதேன்று கேள்விசெய் வானுங் கெதியடங்கக்
கோடுப்பானுந் தேகியேன் றேற்பானு மேற்கக் கோடாமனின்று
தடுப்பானு நீயலே யோதில்லை யானந்தத் தாண்டவனே.

(இ - ள்.) தில்லை ஆனந்தத் தாண்டவனே - திருத்தில்லை அம்பலத்திலே இன்பக் கூத்தாடுகின்ற இறைவனே!; உடுப்பானும் - உலகின்கண் தன்நெஞ்சம் விரும்பிய பட்டுந்துகிலும் உடுத்துத் திரிகின்றவனும்; பால் அனம் உண்பானும் - தான் விரும்பியவாறு பாலும் சோறும் உண்டு மகிழ்பவனும்; ஒருவர் தம்மை உய்வித்து (ஒருவர் தம்

மைக்) கெடுப்பானும்-ஒருவனைத் தீங்குகளினின்று நீக்கி உய்விப்பவனும் அங்ஙனமே ஒருவனைத் துயரத்திலே வீழ்த்திக் கெடுப்பவனும்; ஏது என்று கேள்வி செய்வானும் - ஒருவன் செய்த குற்றத்தை யாது குற்றஞ் செய்தனை என்று கேட்பவனும்; கெதி அடங்கக் கொடுப்பானும் - ஒருவனுடைய அலைவு தீரும்படி வேண்டிய வேண்டியாங்கு வழங்குபவனும்; தேகி என்று ஏற்பானும் - ஏதேனும் இடுக என்று ஏற்பவனும்; ஏற்கக் கொடாமல் நின்று தடுப்பானும் - ஒருவன் ஒருவன் பாலிரக்குங் காலத்தே இரக்கப்படுபவன் யாதொன்றும் கொடாதபடி அவனுள் நின்று தடுப்பவனும்; நீ அலையோ - ஆகிய எல்லோரும் நீயே அல்லையோ? என்பதாம்.

(வி - ம்.) உலகின்கண் செய்வார் செயலெல்லாம் நின்னுடைய செயலே; நின்னையின்றியமைந்து ஆருயிர்கள் யாதொன்றும் செய்யும ஆற்றலுடையன அல்ல, என்றவாறு. இதனை,

"எவ்விடத்தும் இறையடியை யின்றியமைந் தொன்றை
அறிந்தியற்றி யிடாவுயிர்கள் இறைவன் றானும்
செவ்விதினின் உளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்பன்
இவ்வுயிர்கள் தோற்றும்போ தவனையின்றித் தோற்றா
இவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கும்
அவ்வுயிர்போல் நின்றிடுவன் ஆதலால் நாம்
அரனடியை அகன்றுநிற்ப தெங்கே யாமே"

எனவருஞ் சித்தியாரானும் (சுபக் - ருகசு.)

"அவனன்றி யோரணுவு மசையா தெனும்பெரிய
ஆப்தர்மொழி யொன்றுகண்டால்
அறிவாவ தேதுசில அறியாமை யேதிவை
அறிந்தார்க ளறியார்களார்
மவுனமொ டிருந்ததா ரென்போ லுடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றுமவரார்
மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்துவரும்
வன்மையொ டிரக்கமெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தவிய மெவ்விடம்
பூதபே தங்களெவிடம்
பொய்மெயித மகிதமேல் வருநன்மை தீமையொடு
பொறைபொறு மையுமெவ்விடம்
எவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவ ரெவர்பகைஞர்
யாதுமுனை யன்றியுண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே"

எனவரும் தாயுமானவ அடிகளார் திருப்பாடலாலும் (எங்குநி - க.) உணர்க. (கச)

வித்தாரம் பேசினுஞ் சோங்கே றினுங்கம்ப மீதிருந்து
தத்தாவென் றோதிப் பவுரிகொண் டாடினுந் தம்முன்றம்பி
யொத்தாசை பேசினு மாவதுண் டோதில்லை யுண்ணிறைந்த
கத்தாவின் சொற்படி யல்லாது வேறில்லை கன்மங்களே.

(இ - ள்.) கன்மங்கள் - உயிர்கள் புரிகின்ற செயல்களெல்லாம்; வித்தாரம் பேசினும் - யாமே பெரிதும் முயன்று இக்காரியத்தைச் செய்து முடித்தோம் என்று பலபடப் பாரித்துப் பேசினாலும்; சோங்கு ஏறினும் - மரக்கல மூர்ந்து வேறு நாடுகட்குச் சென்று முயன்றாலும்; கம்பமீது இருந்து தத்தா என்று ஓதிப் பவுரிகொண்டு ஆடினும் - மூங்கிற் கோலிலேறி யிருந்து தத்தாதை என்று தாளத்திற்கியையப் பாடிப்பவுரி என்னும் கூத்தினை மேற்கொண்டு ஆடினாலும்; தம்முன் தம்பி ஒத்தாசை பேசினும் - ஒருவன் காரியஞ் செய்யும்பொழுது அவனுடைய அண்ணன் தம்பி முதலியோர் அவனுக்குதவி செய்வதாகக் கூறினாலும்; காரியங்கள் அனைத்துமே; தில்லையுள் நிறைந்த கத்தாவின் சொற்படி யல்லாது - தில்லையம்பலத்திலே ஒளிப்பிழம்பாக நிறைந்துள்ள முதல்வனாகிய கடவுளின் திருவுள்ளத்தின்படியே நிகழுமே யல்லாது, வேறு இல்லை - அவர் திருவுள்ளத்திற்கு மாறாக நிகழ்வதே யில்லை; ஆவது உண்டோ - இவ்வுயிர்களின் முயற்சியாலே ஆகும் காரியம் ஒரு சிறிதும் உண்டோ? இல்லை கண்டீர் என்பதாம்.

(வி - ம்.) வித்தாரம் பேசுதல் - தம்முடைய வினைத் திறத்தைப் பலபடப் பாரித்து விளம்புதல். சோங்கு - மரக்கலம். கம்பம் - கழைக்கோல். பவுரிகொண்டு ஆடுதல் – கோல் மீதிருந்து சுழன்றாடும் ஒருவகைக் கழைக்கூத்து. தத்தா - என்பன தாளத்திற்கியைய எழுப்பும் ஒலிகள். தம்முன் - தமையன். ஒத்தாசை - உதவி.

யாவரேனும் செய்யும் செயலெல்லாம் இறைவன் கருதியபடி நடக்குமே யன்றித் தம்மெண்ணப்படி நடப்பதில்லை என்பது கருத்து.

இதற்கும் முற்செய்யுட் கோதிய விளக்கங்களே அமையும். (௧௫)

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டா
லிறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
வறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திருமன மேயது காணன் மருந்துனக்கே.

(இ - ள்.) மனமே பிறவாது இருக்க வரம்பெறல் வேண்டும் - என் நெஞ்சமே நீ அம்பலவாணரடி பணிந்து யாதேனும் வரம் பெற விரும்புவாயாயின் பிறிதோர் வரமும் கேட்டல் வேண்டா! மீட்டும் பிறவாதிருக்கும் வரம் ஒன்றனையே கேட்பாயாக; பிறந்து விட்டால் - அவ்வரம் பெற மாட்டாமையாலே மீண்டும் இவ்வுலகிலே யாம் பிறந்து விடுவோமானாலும் அஞ்சாதே கொள்; இறவாது இருக்க மருந்து உண்டு காண் - ஏதனாலெனின் இவ்வுலகிலே யாம் எப்பொழுதும் இறவாமலிருப்பதற்குரிய அருமருந்தும் ஒன்றுளது காண்!; இது

எப்படியோ - இஃது எவ்வாறியலும் என்பாயேல் அந்த மருந்தை யான் உனக்குங் கூறுவேன் கேள்!; அறம் ஆர் புகழ்த் தில்லை அம்பல வாணர் அடிக்கமலம் மறவாது இரு - பிறப்புற்ற பின்னர் நீ அறச் செயல்கள் நிரம்பிய பெரும்புகழையுடைய திருத்தில்லை அம்பலத்திலே எழுந்தருளி யிருக்கின்ற இறைவனுடைய திருவடியாகிய செந்தாமரை மலர்களை மட்டும் ஒரு பொழுதும் மறவாமல் நினைத்துக் கொண்டிருப் பாயாக!; அஃது உனக்கு நன் மருந்து காண் - அவ்வாறு நினைத்துக் கொண்டிருப்பவதுவே பின் உனக்கு இறவாமையைச் செய்கின்ற நல்ல மருந்தாகுங் காண் அறிந்து கொள்! என்பதாம்.

(வி - ம்.) இறைவன்பாற் சென்று வரங்கேட்க விழைகின்ற நெஞ்சை நோக்கிக் கூறியபடியாமிது.

மக்களாய்ப் பிறந்தோர் இறைவன் பால் ஒன்றைக் கேட்டுப் பெற வேண்டுமேல், அங்ஙனம் கேட்குந் தகுதியுடைய பொருள் மீட்டும் பிறவாமையே என்பார் பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் என்றார். என்னை? மக்கட் பிறப்பின் பயன் அதுவே ஆதலின், அதுவே கேட்டுப் பெறல் வேண்டும் என்றார். இதனை,

> "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி"
>
> —குறள் ௩௫௬

எனவும்,

> "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
> வேண்டாமை வேண்ட வரும்"

எனவும், திருவள்ளுவனாரும் அருளிச் செய்தலுணர்க.

பிறந்து விட்டாலென்பது அவ்வரம் பெற மாட்டமையால் மீண்டும் பிறந்து விட்டால் என்பது பட நின்றது.

இனிப் பிறந்தவரெல்லாம் இறந்தே தீர வேண்டும் என்பது நியதி யாகவும் பிறந்து விட்டால் இறவாதிருக்க மருந்துண்டென்றார். அஃது எங்ஙனம் இயலும் என்றொரு வினுவினை எழுப்பிக்கொண்டு அதற்கு விடை கூறுவார், இஃது எப்படியோ? என்றார். இஃது எப்படி என வினவுதியாயின் என்பது கருத்து.

அம்பலவாணர் அடிக்கமலம் மறவாதிருப்போர் இம்மையிலேயே இவ்வுடம்பிலேயே வீடு பெற்றவர் ஆகிவிடுவர். ஆகவே வீடு பெற் றோருக்கு மீண்டும் இறத்தல் நிகழ்தல் எங்ஙனம். இறப்பவர் தாம் யாவரோ எனின் உடம்பு முதலியவற்றை யான் என்று மயங்கிக் கிடப்பவரே இறத்தற்கும் மீண்டும் பிறத்தற்கும் உரியவர் ஆவர்; மற்று உயிரினது இயல்பினையும் உயிர்க்குயிராகிய இறைவன் இயல்பினையும் உணர்ந்து அவன் அருளிலே இரண்டறக் கலந்து விட்டவர் பின் இறப்பதே கிடையாது; அவர் உடம்பிலிருக்கும் பொழுதே இறந்து விட்டவரே யல்லரோ. அத்தகையோரே இறவாமை பெற்றவராவார். அத்தகையோரைச் சீவன் முத்தர் என்ப. சீவன் முத்தர் பால் பழ வினை காரணமாக எஞ்சி நிற்கின்ற உடலின் வீழ்ச்சி அவர்க்கு இறப் பாதலின்று அவ்வுடல் வீழுநாளே அவர் இறவா தென்றும் இருக்கும்

காளாகும். இவ்வுண்மையை நினைந்தே அடிகளார் இச் செய்யுளில் பிறவாதிருக்க மருந்துண்டு என்றும் அம்மருந்து தானும் இறைவன் திருவடியை மறவாதிருக்கும் இருப்பே என்பாராயினர். இந்நுணுக்கம் அறியாதார் தாம் தாம் வேண்டியவாறே இச்செய்யுட்கு உரை கூறுவா ராயினர்.

இனி, உடலை நான் என்றுணரும் மயக்க முடையோரே இறத் தற்குரியர் மெய்யுணர்வுடையோர்க்கு இறப்பென்பதில்லை என்பதனை,

" இனியே தெமக்குனருள் வருமோ எனக்கருதி
எங்குதே நெஞ்சமையோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
அநியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
மந்தகர்க் காளாகவோ
ஆடித்தி ரிந்துநான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போதனன்றோ"

எனத் தாயுமானவர் ஓதியதும் இக்கருத்துடையதே யாம். என்னை? இதன்கண் இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்ப ரென்று எண்ண வோதிடமில்லையே என்றது. இன்றிருக்கின்ற என் உயிரை நாளைக்கும் இருக்கும் என்று எண்ணுமளவிற்கும் உறுதியான மெய் யறிவு எனக்கில்லையே - அஃதாவது உயிர்நித்தியம் என்னும் அறிவு எனக்குத் திடப்படவில்லை என்பதாம். பின்னரும்,

நானல்லாத மாயையாகிய இந்தவுடலை அநியாயமாக நான் என்று நினைப்பதனாலேயே அடிக்கடி இறந்தும் பிறந்தும் சுழல்கின்றேன் என்பார், அநியாயமாயிந்தவுடலை நானென்று எண்ணுவதனால் வரும் அந்தகர்க்கு ஆளாகவோ என்றார் என்க.

நியாயமாக நினைப்பதானால் உயிரையே நான் என்று நினைத்தல் தகும். அங்ஙனம் நினைத்தால் உயிர்க்கு இறப்பின்மையின் யானும் இறப்பொழிந்தேனாவேன் என்பது தாயுமானவர் கருத்து என்க.

" சகமீதிருந்தாலும் மரணம் உண்டென்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை "

எனவரும் (தாயுமானவ) அடிகளார் திருவாக்கானும் இவ்வுண்மையை நுண்ணிதின் உணர்க. (கசு)

திருச்செங்காடு

நெருப்பான மேனியர் செங்காட்டி லாத்தி நிழலருகே
யிருப்பார் திருவுள மெப்படி யோவின்ன மென்னையன்னை
கருப்பா சயக்குழிக் கேதள்ளு மோகண்ணன் காணரிய
திருப்பாத மேதரு மோதெரி யாது சிவன்செயலே.

(இ - ள்.) நெருப்பு ஆன மேனியர் - தமது எண்வகை வடிவங்களி லொன்றாகிய நெருப்புப் போன்ற திருமேனியை உடையவரும்; செங்காட்டில் ஆத்தி அருகே நிழல் இருப்பார் சிவன் செயல் - திருச்செங்காடு என்னும் திருவூரின்கண் திருவாத்தியின் பக்கத்தேயுள்ள நிழலின்கண் எழுந்தருளி யிருப்பவரும் ஆகிய சிவபெருமானுடைய திருவுளச் செயலானது; இன்னம் - முன்போலவே இனியும்; கருப்பாசயக்குழிக்குத் தள்ளுமோ - அடியேனை ஒரு தாயினது கருக்குழியிலே தள்ளிப் பிறப்பிக்குமோ? அல்லது; கண்ணன் காண அரிய திருப்பாதம் தருமோ - திருநெடுமால் பன்றியாகி நிலத்தை நெடுங்காலம் அகழ்ந்தும் காணுதற்கு அரியவாகிய அழகிய அவனுடைய அடிகளில் இடந்தந்துய்விக்குமோ?; எப்படியோ தெரியாது - இவ்விரண்டில் யாது செய்யுமோ அடியேனுக்குத் தெரியவில்லை என்பதாம்.

(வி - ம்.) நெருப்பு - சிவபெருமானுடைய எண்வகை வடிவங்களுள் ஒன்று. அந்நெருப்பின் நிறமே, அப்பெருமானிறமுமாகும். ஆதலால் நெருப்பான மேனியர் என்றார். தீவண்ணன், அழல்வண்ணன், என்றெல்லாம் அடியார் பலரும் கூறுதலுமுணர்க. செங்காடு-திருச்செங்காடு; திருச்செங்காட்டங்குடி என்றும் வழங்குப. இத்திருவூரிலே தான் சிறுத்தொண்ட நாயனார் அடியார் கோலங்கொண்டு வந்த சிவபெருமானுக்கு வாளால் மகவரிந் தூட்டினர். இவருடைய பேரன்பினைப் பட்டினத்தடிகளார் பெரிதும் பாராட்டுவதனை "வாளான் மகவரிந்து ஊட்டவல்லேனல்லேன்" எனப் பின்னர் ஒரு செய்யுளில் ஓதுதலானும் உணரலாகும். இத்திருவூரிற் கோயின் மரம் திருவாத்தி ஆதலால் ஆத்தியருகே இருப்பார் என்றார். கருப்பாசயம் ஆகிய குழி யென்க. சிவபெருமான் செயலே எல்லாச் செயலுமாம். அச்செயல் அடியேன் திறத்திலே எங்ஙனம் நிகழுமோ பண்டுபோல மீட்டும் பிறப்பினுள் வீழ்த்தி வருத்துமோ? இறைவன் திருவடி நீழலிலே இருத்தி உய்விக்குமோ யாது செய்யுமோ? எளியேன் அறிந்திலேன் என்று ஐயுற்று வருந்திய படியாம்.

கண்ணன் காணரிய திருப்பாதம் என்றது திருமால் பன்றியாகி நிலமகழ்ந்து பன்னெடுங்கால முயன்றும் காண்டற்கரிய அழகிய அடியென அத்திருவடியின் பெருமைக்கு ஒன்றெடுத்துக் கூறிய படியாம். (க)

திருவொற்றியூர்

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவல்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

(இ - ள்.) திருவொற்றியூர் உடையீர் - திருவொற்றியூரிலே எழுந்தருளி யிருக்கின்ற தியாகப் பெருமானே! யான் ஒன்று வேண்டுவல் செய்யும் - அடியேன் அடிகள் பால் ஒரு வரம் வேண்டுகின்றேன் அதனை அருளிச் செய்தருளுக! (அதுதான் யாதெனின்) ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவழிந்து - அடியேனுக்கு மிடற்றின்

கண் கோழை தொடர்ந்து நின்றடைப்பவும் என் கண்களும் காட்சி யிழந்து மேலிமைக்குள் செருகிப் போகவும் ஐவகை யறிவும் அழிந்து போகவும்; மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது - இப்பொழுது மெய்ப்பொருள் போலத் தோன்றுகின்ற இவ்வுலக முழுவதும் எனக்குப் பொய்ப் பொருளாகி விடுகின்ற என் சாக்காட்டுப் பொழுதிலே; திருநீறும் இட்டு - நின் அடியான் எனற்கு அடையாளமாகிய திருநீற்றை உடம்பு நிறைய இட்டுக்கொண்டு; கையும் தொழப்பண்ணி - அடியேனுடைய கைகளும் குவிந்து எம்பெருமான் திருவடியை நினைந்து தொழும்படி செய்து; ஐந்தெழுத்து ஓதவும் கற்பியும்-நின் திருமந்திரமாகிய திருவைந் தெழுத்தை ஓதும்படியும் கற்பித்தருள்க! என்பதாம்.

(வி - ம்.) திருவொற்றியூரில் எழுந்தருளி யிருக்கும் இறைவன் திருப்பெயர் தியாகப் பெருமான் ஆதலின் தியாகியாகிய நீ இரவலர் வேண்டுவன வெல்லாம் வேண்டியாங்கு வழங்குமியல்புடையாய் ஆதலின் இவ்வரத்தையும் எனக்கு மறுதே வழங்குவாய் என்பது குறிப்பாகத் தோன்றும்படி திருவொற்றியுடையீர்! என விளித்தார் ஐயும் தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து அடியேன் உயிர்விடும் போது நின்னை வரங்கேட்டல் கூடாது; அப்போதைக் கிப்போதே வேண்டுவல் என்பது கருத்து.

இனி, மெய்யென்று பெயரிடப்பட்டுள்ள இவ்வுடம்பு பொய்யாகி விடுகின்ற பொழுதெனவும், மெய்போலத் தோன்றுமிவ்வுல கெல்லாம் பொய்யாகி விடுகின்ற பொழுதெனவும் இரட்டுற மொழிதல் என்னு முத்தியால் இரு பொருளும் கூறிக்கொள்க. இனி இத்திருப் பாட்டோடு,

" புலன் ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே

—திருமுறை - க.

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத்தை ஒப்பு நோக்குக. (க)

சுடப்படு வாரறி யார்புர மூன்றையுஞ் சுட்டபிரான்
விடப்படு மாமதிற் றென்னொற்றி யூரன் றெருப்பரப்பி
னடப்பவர் பொற்பத நந்தலை மேற்பட நன்குருண்டு
கிடப்பது காண்மன மேவிதி யேட்டைக் கிழிப்பதுவே.

(இ - ள்.) மனமே - என்னெஞ்சமே கேள்; புரம் மூன்றையும் சுட்டபிரான் - தேவர்கட் கிடையூறு செய்த அசுரருடைய பொன்னு

லும் வெள்ளியாலும் இரும்பாலு மியன்ற மூன்று மதில்களையும் சுட்டழித்த பெருமானாகிய தியாகப் பெருமான் எழுந்தருளியிருக் கின்ற; திடப்படும் மாமதில் தென் ஒற்றியூரன் - உறுதியுடைய பெரிய மதில்களையுடைய தென்றமிழ் நாட்டுத் திருவொற்றியூர்த் திருக்கோயி லினைச் சூழ்ந்துள்ள அகன்ற தெருவின் கண்; நடப்பவர் பொன்பதம் நம் தலைமேல்பட - நடந்து செல்லுந் திருவுடையாருடைய பெறுதற் கரியபொன் போன்ற அருமையுடைய திருவடிகள்தாம் நமது தலை மேலே படும்படி; நன்கு உருண்டு கிடப்பது - நன்றாக யாம் நம்முடல் உருளும்படி புரண்டு கொண்டு கிடக்கின்ற செய்தற் கெளிய இச்செய லானது; விதியேட்டைக் கிழிப்பது - நம்மை எல்லையற்ற பிறப்பிலே புகுத்துகின்ற நான்முகனுடைய நம் பெயர் பதிந்த கணக்கேட்டினைக் கிழித் தகற்றிவிடுகின்ற பெறுதற்கரிய பெரும்பயனைச் செய்வதே யாகும்; ஆகவே பிறிதொரு தவமும் யாம் செய்து வருந்த வேண்டா. சுடப்படுவார் அறியார்-இவ்வுபாயத்தை வாளா இறந்து சுற்றத்தாராற் சுடப்பட்டுப் பிறவியிற் சுழலும் பேதையர் அறிய மாட்டார் என்பதாம்.

(வி - ம்.) மக்கட் பிறப்பின் பயன் வீடு பேறெய்துவதன்றிப் பிறிதில்லை. அவ்வீடு பேற்றினை எய்துதற்குப் பிறரெல்லாம் காடு பற்றியும் கனவரை பற்றியும் கடுந்தவம் ஆற்ற வேண்டும் என்பர்; அவரறியார். இத்திருவொற்றியூர்த் தியாகப் பெருமான் திருக்கோயில் திருவீதியிலே யாம் வீழ்ந்து அதன்கண் நடக்கும் அறமுடையோர் திருவடி நந்தலைமேற் படும்படி உருண்டுருண்டு வலம் வருதல் ஒன்றே அவ்வீடு பேற்றினை நமக்குத் தந்தருளுவதாம். ஆகவே யாம் செயற் கரிய தவஞ்செய்து வருந்த வேண்டா என்றவாறு.

இறைவன் புரமூன்றையும் எரித்ததனை,

"ஆதி யந்தணன் அறிந்து பரிகொளுவ
வேத மாபூண் வையத்தேர் ஊர்ந்து
நாக நாணு மலைவில் லாக
மூவகை ஆரெயில் ஓரழல் அம்பின்முளிய
மாதிரம் அழலவெய் தமரர் வேள்விப்
பாகமுண்ட பைங்கண் பார்ப்பான்"

எனவரும் பரிபாடலானும் (ரு - உஉ - எ) உணர்க.

தென் ஒற்றியூர் என்றது தென்றமிழ் நாட்டுத் திருவொற்றியூர் என்றவாறு. ஒற்றியூர்த் திருக்கோயிலின் தெருவில் நடப்பவரே பெரும் புண்ணியம் செய்தவராவார்; அவர் திருவடி நந்தலை மேற் பட்டாலே நம் பிறவிப்பிணி போகும் என அத்திருவூரின் சிறப்பை விதந்தோதினர். பொற்பதம் என்றதற்குப் பெறற்கரிய பொன் போலும் திருவடி என்க.

தெருப் பரப்பில் உருண்டு கிடப்பது எத்தகையோரும் எளிதிற் செய்யத் தகுந்த செயலாதலும் விதியின் எட்டைக் கிழிப்பது எத்தகைய பெருமையுடையோர்க்கும் செய்ய வியலாத செயலாதலும் உணர்க.

இனி, துக்கத்துட் டுங்கித் துறவின்கட் சேர்கலா மக்கட் பிணத்த சுடுகாடு என்பது பற்றிப் பாமரமக்களைச் சுடப்படுவார் என்று சுட்டினர். (உ)

திருவிடை மருதூர்

காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
யோடே யெடுத்தென்ன வுள்ளன்பி லாதவ ரோங்குவிண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே.

(இ - ள்.) ஒங்கு விண்ணோர் நாடு எய் இடை மருது ஈசர்க்கு - உயர்ந்த தேவர் வாழுகின்ற மேனிலை யுலகத்தை யொத்த சிறப்புடைய திருவிடை மருதூர் என்னுந் திருவூரிலே திருக்கோயில் கொண் டருளிய சிவபெருமான் பால்; உள் அன்பு இல்லாதவர் - அகத்துறப் பாகிய அன்பில்லாத மாந்தர்; காடே திரிந்து என்ன - இல்லந் துறந்து போய்க் காய்கனியிலை சருகு முதலியவற்றை உட்கொண்டு காட்டினூடே திரிந்தாலும் யாது பயன்?; காற்றே புசித்து என்ன - அக்காய் கனி முதலியவற்றையும் விடுத்துக் காற்றையே உட்கொண்டு மலை முழைஞ்சுகளிலே கண் மூடித் தனியே இருப்பினும் யாது பயன்?; கந்தை சுற்றி ஓடே எடுத்து என்ன - அல்லது இடையிலே கந்தைத் துணியைச் சுற்றிக்கொண்டு கையிலே ஓட்டினை ஏந்தி ஊராலொரு நாள் இரந்துண்டு திரியினும் யாது பயன்; மெய் அன்பர் - அப்பெரு மான் பால் உண்மையான அன்புடைய பெரியோர்; நாரியர் பால் வீடே இருப்பினும் - மகளிரோடே மாடமாளிகையி லிருந்து வாழ்ந் தாலும்; மெய்ஞ்ஞான வீட்டு இன்பம் மேவுவர் - மெய்யுணர்வாலே எய்துகின்ற வீடு பேற்றால் ஆகின்ற பேரின்பப் பெருவாழ்வினை எய்தா நிற்பர் என்பதாம்.

(வி - ம்.) உள்ளன்பு - அகத்துறப்பாகிய அன்பு.

இறைவன் பால் அன்பில்லாதவர் துறவோர்க்கியன்ற ஏனைய புறவொழுக்கமெல்லாம் உடையராயினும் வீடு பேறெய்துகிலர். அவ் விறைவன் பால் உள்ளன்புடையோர் இவ்வுலக வாழ்வாகிய இல்லத் திருந்து மனைவி மக்களுடன் வாழ்ந்தாராயினும் ஒரு தலையாக வீடு பேறும் எய்துவர் என்பதாம்.

இக்கருத்தினை,

“ நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சரித்தும்
நாகமுழை புக்கிருந்துந் தாகமுதற் றவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தரா யிருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பின்
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர் ”

—சித்தியார். சுப - ௩0அ

எனவும்,

"சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற்
சருவசங்க நிவர்த்திவந்த தபோதனர்க ளிவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவென் இம்மையிலே உயிரின்
பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றே
ஆக்குமுடி கவித்தரசாண் டவர்களரி வையரோ
டனுபவித்தங் கிருந்திடினும் அகப்பற்றற் றிருப்பர்
நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் றாலும்
நுழைவர்பிறப் பினின்வினைகள் நுங்கி டாவே"

—சித்தியார் - சுப - உஅஎ

எனவும் வரும் அருணந்தி சிவாசாரியார் அருள்வாக்கினும் காண்க. (க)

தாயும் பகைகொண்ட பெண்டிர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுற வோரும் பகையிச் சேகமும்பகை
யாயும் பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங் காதலினாற்
றேயுநெஞ் சேமரு தீசர்பொற் பாதஞ் சுதந்திரமே.

(இ - ள்.) இங்குத் தோயும் நெஞ்சே - இவ்வுலகத்துப் பொய் வாழ்விலே அழுந்திக் கிடக்கின்ற என் நெஞ்சமே கேள்! அருஞ் செல்வம் நீங்கில் - அரிதிற் பெறத்தகுந்த கைப்பொருள் ஒருவனை விட்டுப் போய் விடுமானால்; தாயும் பகை - அவனை ஈன்ற தாய்தானும் அவனுக்குப் பகையுடையவளாவாள்; கொண்ட பெண்டிர் பெரும் பகை - அவன் விரும்பி மணந்து கொண்ட மனைவியரோ பெரிய பகை வராக மாறி விடுவர்; தன்னுடைய சேயும் பகை - அவன் ஈன்று வளர்த்த அவன் மகனும் பகைவனாவான்; ஆயும் பொழுதில் - இங்ஙனமே ஆராய்ந்து பார்க்கும் பொழுது; இச்செகமும் பகை - இவ்வுலகிலுள்ள எல்லோருமே அவனுக்குப் பகைவராகவே தோன்று வர்; ஆதலினால் - இவ்வுலகியல் இங்ஙன மிருத்தலாலே; சுதந்திரம் - நமக்கு நல்ல காலத்தேயும் அல்லற் காலத்திலேயும் இம்மையிலும் மறுமையிலும் உரிமையுடையது யாதெனின்; மருதீசர் - திருவிடை மருதூரில் திருக்கோயில் கொண்டருளியுள்ள சிவபெருமானுடைய; பொன் பாதம் - அழகிய திருவடிகளே யாம். ஆதலால் அவற்றைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுதி என்பதாம்.

(வி - ம்.) ஒருவனுக்கு நல்வினைப் பயன் விளையும் காலத்தே கூத்தாட்டவைக் குழாம் போன்று பல வழிகளானும் பொருள் தாமே வந்து குவியும். அப்பொருள் உள்ள துணையும் தமர் தாரம் மகவு உற்றார் நண்பர் முதலியோரும் பெரிதும் அன்புடையார் போன்று அவன் இன்புறும் வண்ணம் ஒழுகுவர். அந்த நல்வினை உலந்து விட்டால் கூத்து நின்ற பின்னர் அவ்வவையும் கலைந்து போமாறு போலே கைப்பொருளும் ஒழிந்துபோம்; பின் என்னும்! அவனைப் பெற்ற தாயும் கொண்ட பெண்டிரும் ஈன்ற மக்களும் ஏன் இவ்வுலகத் துள்ள அனைவருமே அவனை வேண்டாத வெம்பகைஞர் ஆவர். இவ் வுலகியலீது. ஆதலால் இம்மையிலாதல் மறுமையிலாதல் நற்காலத் தாதல் பொல்லாக் காலத்திலாதல் உயிர்கட்கு உறுதுணையாயிருப்பது

இறைவன் திருவடியே ஆம். ஆதலால் அதனையே பற்றுதி என்று தன் னெஞ்சிற் கறிவுறுத்தபடியாம்.

இனி,

" கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல் "

எனவரும் நல்வழிப் பாடலும் நினைக.

அன்னையின் அன்பு மிகவும் பெருமையுடையதாகலின் வறுமை யுற்றுழி அத்தகைய அன்புடைய அன்னை தானும் பகைமை காட்டுவாள் என்பார் தாயும் பகை என்று முற்படவோதினர். இங்ஙனமே ஆசிரியர் திருவள்ளுவனாரும்,

" அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும் "

—குறள் - ௧0௪௭.

என்றோதுதலுங் காண்க. (உ)

திருக்கழுக்குன்றம்

காடோ செடியோ கடற்புற மோகன மேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடு வோநல மேமிகுந்த
வீடோ புறந்திண்ணை யோதமி யேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றி லீசா வுயிர்த்துணை நின்பதமே.

(இ - ள்.) நீள் தோய் கழுக்குன்றில் ஈசா - நெடுமை பொருந் திய திருக்கழுக்குன்றின் மேல் திருக்கோயில் கொண்டருளிய இறை வனே! தமியேன் உடல் வீழும் இடம் - களைகணுவார் யாருமில்லாத தனிமையுடைய எளியேனுடைய இவ்வுடம்பு உயிர்நீங்கப் பெற்று வீழ்ந்து கிடக்கும் இடம்; காடோ செடியோ கடல்புறமோ - அடர்ந்த காடாகுமோ? அல்லது சின்னஞ் சிறிய செடியினது பக்கமோ? அல்லது கடற்கரையோ?; கனம் மிகுந்த நாடோ - அல்லது பெருமை மிக்க நாடுதானோ; நகரோ - அல்லது அந் நாட்டகத்துள்ள நகரத் தின் பக்கமோ?; நகர் நடுவோ - அல்லது நகரத்தின் நடுவிடமோ?; நலமே மிகுந்த வீடோ - அல்லது பணிபுரிவோருண்மையால் நன்மை மிகுந்த வீடுதானோ?; புறந்திண்ணையோ - அல்லது யாருமற்ற புறந் திண்ணைதானோ?; எவ்விடம் என்று அடியேன் அறிந்திலேன்; நின் பதம் உயிர்த்துணை - இவற்றுள் எவ்விடமாயினும் ஆகுக! எளியேன் உயிர்க்கு உயிராயிருந்து துணை செய்வது நின்றிருவடியே ஆதலான் அது பற்றி யான் சிறிதும் கவல்வேனலேன் என்பதாம்.

(வி - ம்.) இச்செய்யுள் அடிகளார் இனித் தம்முடல் நில்லாது என் றுணருமளவிற்கு நலிந்த காலத்தே திருக்கழுக் குன்றத்திற்

சென்று இறை வழிபாடு செய்தழிக் கூறியது போலும். திருக்கழுக் குன்றத்தின் வடக்கே அண்மையிற் றிருவொற்றியூரில் அடிகளார் அடக்கமாகியதும் ஈண்டு நினைவிற் கொள்க.

அடிகளார் உடல் நலிவுற்றிருந்த போதும், இறைவன் எழுந்தருளி யுள்ள திருவூர் தோறுஞ் சென்று வழிபட்டுப் போதுவார் போம் வழியில் காட்டினூடு புக்கும் செடிகளின் மருங்கிருந்தும் கடற்கரை வழியாகவும் நகர்மருங்கும் நகர்நடுவினும் செல்லுதலானும், செல்லும் வழியிலே மெய்யன்பராயினர் அடிகளாரைக்கண்டு அழைத்துப் போய் உணவு முதலியன கொடுத்துப் போற்றுவாரும் உளராதலால் அவர் தம் மனையை நினைந்து நலமே மிகுந்த வீடோ என்றும் சிற்சில செவ்வி களிலே புறந்திண்ணையிற் படுத்துறங்கிப் போதலால் புறந்திண்ணையோ என்றும் இவ்வாறு ஐயுற்றோதியவாறு போலும்.

இனி, இவ்வுலகிற் பிறந்தோர் யாவர்க்கும் தாமிறக்கும் இடம் எதுவென் றறியவாராமையால் இஃதியாவர்க்கும் ஒக்குமாறு முணர்க.

யார் எங்கு இறந்தாலும் எல்லோருக்குமே இறைவன்றுள் துணை யாதலன்றிப் பிறிதொரு துணையும் இல்லை என இதனால் அடிகளார் நம்மனோர்க் கறிவுறுத்தவாறும் ஆதலுணர்க. ஈண்டு,

"உற்றார் யாருளரோ உயிர்கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல் லானமக் குற்றார் யாருளரோ"

என்றெழுந்த திருநாவுக்கரசர் திருவாக்கும்,

அடிகளாரே, "ஊருஞ்சதமல்ல...நின்றாள் சதம் கச்சி யேகம்பனே" என்றருளிய (திருவேகம்பமாலை - கஉ) திருப்பாடலும் நினைவிற் கொள்க.

இனி, "இதுவென வரைந்து வாழு நாளுணர்ந்தோர் முதுநீருல கின் முழுவதும் இல்லை" ஆதலின் வாழ்நாளற்று யாக்கை வீழுமிடமும் இஃதென வரையறை செய்யலாகாமையின் அடிகளார் "காடோ...... உடல் வீழுமிடம் அறியேன்" என்பாராயினர். (க)

திருக்காளத்தி

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயி லாபுரிக் காளத்தியே.

(இ - ள்.) கயிலாபுரிக் காளத்தியே - தென்கயிலாயம் என்று புகழப்படுகின்ற திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கின்ற காளத்தி நாதனே !; பத்தும் புகுந்து - தாயினது கருப்பையின்கட் கிடந்தரு வாங் காலத்தே அழிந்து விடாமல் பத்துத் திங்களும் அரிதாக நிரம்பிய பின்னர் இவ்வுலகிலே; பிறந்து வளர்ந்து பட்டு ஆடை சுற்றி - பிறந்து தாயுந்தந்தையும் வளர்க்குங் குழவிப் பருவத்தே அழியாமல் ஊழ்வினை யாலே வளர்ந்து செல்வச் செழிப்பினாலே பட்டாடை முதலிய அழகிய

ஆடைகளையும் உடுத்து; முத்தும் பவளமும் பூண்டு - மணப்பருவம் எய்தியபொழுது முத்தும் பவளமும் முதலிய மணிகளாலியன்ற அணி கலன்களையும் அணிந்து; ஓடி ஆடி முடிந்த பின்பு - இவ்வுலகிலே வாழ்வெனும் மயலாலே அங்குமிங்கும் ஓடி ஆடி ஊழ் முடிந்த பின்னர்; செத்துக் கிடக்கும் பிணத்து அருகே - செத்துக் கிடக்கின்ற பிணத்தின் பக்கத்திலே கூடியிருந்து; இனிச் சாம்பிணங்கள் - இன்னுஞ் சிறிது காலந் தாழ்த்துச் சாகவிருக்கின்ற பிணங்கள் பலவும்; கத்துமகணக்கு என்ன - கா கூ வென்று கதறி அழுதற்குக் காரணந்தான் என்னையோ? கூறுதி என்பதாம்.

(வி - ம்.) பத்தும் புகுந்து என்புழி உம்மை இழிவு சிறப்பு; என்னை? கருவின்கண் ஒவ்வொரு நாளும் அதற்கு அழிவு நேர்தல் கூடுமன்றே அங்ஙனம் அழியாமல் பத்துத் திங்களும் புகுதலின் அருமை யுணர்த்தி நிற்றலான் என்க. இதனை மாணிக்கவாசகர் தாமும்,

> "மானுடப் பிறப்பினுள் மாதா வுதரத்
> தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
> ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்
> இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
> மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
> ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
> அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
> ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்
> எழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
> எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
> ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
> தக்க தசமதி தாயொடு தான்படுந்
> துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
> ஆண்டுகள் தோறு மடைந்தவக் காலை
> ஈண்டியு மிருத்தியும் எனைப்பல பிழைத்தும்"

என்றருளிச் செய்தலாலும் (போற்றித் திருவகவல்) உணர்க.

> "ஈருட் டடிமூடி யீண்டுமலப் பண்டப்
> போர்வை புழுமொய்ப்பப் பொல்லாக் குடர்சூடிச்
> சார்தற் கரிதாகித் தானின்றூ வள்ள
> னீர்வாய்ச் சுரம்போந்தார் தம்மை நினையாரோ"

எனத் திருத்தக்க தேவரும் பத்தும் புகுந்து பிறத்தலின் அருமையை அழகுற எடுத்தோதுதலும் காண்க. (சிந்தா - உஎகக.)

இனி, அடிகளார் இக்கருத்துப்படத் திருத்தில்லையினும் செய்யுள்: க). ஓதி யிருத்தலுமுணர்க.

இனி, பட்டாடைசுற்றி என்றது இளமைப் பருவத்தையும் முத்தும் பவளமும் பூண்டோடியாடி என்றது மணப்பருவந் தொடங்கி மேனிகழ்கின்ற பருவங்களையும் என்க.

"பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றார்
இறந்தார் என்கை இயல்பே"

(மணி – உச; கO௩ - ச)

ஆகவும் இனிச்சாம்பிணங்கள் எற்றுக்குக் கத்துகின்றன என்றவாறு. (௧)

பொன்னாற்பிர யோசனம் பொன்படைத்
தார்க்குண்டு பொன்படைத்தோன்
தன்னாற்பிர யோசனம் பொன்னுக்கங்
கேதுண்டத் தன்மையைப்போ
லுன்னாற்பிர யோசனம் வேணதெல்
லாமுண் டுனைப்பணியு
மென்னாற்பிர யோசன மேதுண்டு
காளத்தி யீச்சுரனே.

(இ - ள்.) காளத்தி ஈச்சுரனே-திருக்காளத்திப் பெருமானே!; பொன் படைத்தார்க்குப் பொன்னாற் பிரயோசனம் உண்டு - உலகின் கண் பொன்னைத் தேடிக் கொண்டவருக்கு அந்தப் பொன்னால் மிகவும் பயன் உண்டாகும்; பொன்னுக்கு - அந்தப் பொன்னுக்கு; பொன் படைத்தோன்றன்னால் - அதை ஈட்டியவனாலே; அங்குப் பிரயோசனம் ஏது உண்டு - அவ்விடத்தே பயன் என்ன உண்டாகும்? ஒரு பயனும் இல்லையன்றே!; அத்தன்மையைப் போல் - அது போலவே; உன்னால் பிரயோசனம் வேணது உண்டு - உன்னைப் பணிகின்ற அடியேனுக்கு உன் திருவருளாலே பயன் மிகவும் உண்டாகும்; உனைப் பணியும் என்னால் - உன்னை வணங்குகின்ற அடியேனால்; பிரயோசனம் ஏது உண்டு - உனக்குப் பயன் யாதுண்டாம். ஒன்றுமில்லையே? என்பதாம்.

(வி - ம்.) இறைவன் உயிர்கட்குச் செய்து வருகின்ற நன்மைகளுக்கு எல்லையில்லை; ஆயினும் அவனுக்கு உயிர்கள் யாதும் கைம்மாறு செய்வன அல்ல. இறைவன் தனக்கியல்பான பேரருள் காரணமாகவே இவ்வாறு உதவி செய்கின்றான், கைம்மாறு வேண்டும் புன்மை அவன்பாலில்லை என்பது கருத்து.

இனி, அன்பே கடவுள் என்பவாதலின் அன்பின் இலக்கணமும் கைம்மாறின்றி எப்பொழுதும் பிறர்க்கு நன்மை செய்தலே யாம் என்பதனை,

"அன்பிலா ரெல்லாம் தமக்குரிய ரன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

—குறள் - எஉ

எனவரும் திருக்குறளானும் உணரலாம். இவ் வன்புடைமையின் அளவிற்கே மனிதனும் கடவுட் டன்மையுடையவன் என்றுணரப் படுவான். இவ்வாற்றால் மனிதனும் ஓரளவு தந்தையாகிய இறைவன் பண்பைப் பெற்றிருக்கின்றான் என்றுணர்தல் வேண்டும். இவ் வுண்மையை,

"சொன்னவித் தொழில்க ளென்ன காரணந் தோற்ற வென்னின்
முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாமுயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவும் அருளால் முன்னே
துன்னிய மலங்க ளெல்லாந் துடைப்பதுஞ் சொல்ல லாமே.

எனவும்,

"அழிப்பிளைப் பாற்ற லாக்க மவ்வவர் கன்ம மெல்லாம்
கழித்திட னுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பில்
தெழித்திடல் மலங்க ளெல்லாம் மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே யெல்லாம்"

எனவும் வரும் சித்தியாரானும் (சுப - இசு - எ) உணர்க.

இனி, இச்சித்தியார்ச் செய்யுள்களால் இறைவன் உயிர்கட்குச் செய்து வரும் நன்மைகளையே அடிகளார் இத்திருப்பாட்டில் உன்றற் பிரயோசனம் வேணதுண்டு என்கின்றனர். வேணது - வேண்டியது என்பதன் மரூஉ. இன்னும் இறைவனால் உண்டாகும் நன்மைகளை,

"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண் டிருந்தவெமை வெளியில் விட்டல்லலாங்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருற வுறுக்கியிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்து துயில் கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்த குருவே"

—சின்மயா - சு.

எனவருந் தாயுமான வடிகளார் அருண்மொழி யானுமறிக. (உ)

வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் றேண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல ஞனினிச்சென்
றுளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே.

(இ - ள்.) நான் வாளால் மகவு அரிந்து ஊட்ட வல்லேன் அல்லன் - அடியேன் சிவனடியார் திருவேடந் தாங்கி வந்த இறைவனுக்கு வாட்படையாலே தன்னொரு மகவினை அரிந்து சமைத்து உணவூட்டிய சிறுத்தொண்ட நாயனார்க் கமைந்த அன்பு வலிமையுடையேனல்லேன்; அடியேன் மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன் - அல்லது தம் பரத்தைமை யொழுக்கங் காரணமாக ஊடல் கொண்ட மனைவியார் 'திருநீலகண்டம்' எம்மைத் தொடாதே கொண்மின் என்று கூறிய சூண்மொழி காரணமாக அற்றை நாள் தொடங்கித் தம் சிந்தையாலும் மாதரைத் தொடாமல் தமது பெறற்கரிய இளமை நலம் முழுதுந் துறந்து விட்ட திருநீலகண்ட நாயனார் கொண்டிருந்த அன்புறுதி யுடையேனு மல்லேன்; தொண்டு செய்து நாள் ஆறில் கண் இடந்து அப்ப வல்லேன் அல்லன்- அல்லது இத்திருக் காளத்தி நாதருக்கு ஆறுநாட்கள் உறங்காது நின்று தொண்டாற்றி இறுதியில் இறைவனுடைய ஊனமுடைய கண்களுக்கு மாறாகத் தமது கண்களைத் தாமே அகழ்ந்து அப்பிய கண்ணப்ப நாயனாருடைய அன்பினளவு பேராற்றல் வாய்ந்த அன்புடை யேனு மல்லேன்; இனிச் சென்று திருக்காளத்தி அப்பருக்கு ஆளாவது எப்படியோ - இத்தகைய பேரன்பிலாத யான் போய் இத்திருக்காளத்தியில் எழுந்தருளிய தந்தையாருக்கு ஆளாவது எவ்வாறியலும் என்பதாம்.

(வி - ம்.) வாளால் மகவரிந்தூட்டியவர் சிறுத்தொண்ட நாயனார். இவரன்பு போகத்தை முழுதுந் துறந்த பேரன்பு. சூளால் இளமை துறந்தவர் திருநீலகண்ட நாயனார். இவர் இறைவன்பாற் கொண்டுள்ள அன்பின் ஆற்றலாலே இளமையிலேயே காமத்தை முழுதுந் துறந்து விட்டவர்; இனிக் கண்ணப்ப நாயனார் தம் கண்களையே அகழ்ந்து இறைவன் கண்களுக்கு மாற்றாக அப்பியவர். இவரன்பு தம்மை முழுதுந் துறந்துவிட்ட ஒப்பற்ற பேரன்பு. இத்தகைய அன்புப் பெருக்க முடையாரே இறைவனுக்கு ஆளாகுந் தகுதியுடையராவார். அடியேனோ பொய்யன்புடையேன். யான் அவனுக்கு ஆளாதல் எங்ஙனம் கூடும் என்பது கருத்து. இங்ஙனமே,

மணிவாசகப் பெருமானும்,

" கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி "

(திருக்கோத்தும்பி)

என்றருளிச் செய்தலும் காண்க.

திருக்காளத்திக்குச் சென்ற அடிகளார்க்கு ஆண்டுக் கண்ணப்ப நாயனார் பேரன்பு நினைவில் வரவே அவ்வன்போடொத்த சிறந் தொண்டர் அன்பையும் திருநீல கண்டர் அன்பையும் உடனினைவாராய் இத்திருப்பாட்டினைப் பாடியருள்கின்றார் என்க.

அன்புடையார் மட்டுமே இறைவனுக்கு ஆளாதல் சாலும், அஃதிலார் எத்தகையோரேனும் அவனுக்கு ஆளாதலியலாதென்ற இதனால் அடிகளார் அறிவுறுத்தினாராதலு முணர்க.

“ என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே ”

என்பது திருமந்திரம். (ரு)

முப்போது மன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தினாற்
செப்போ திளமுலை யாருடன் சேரவுஞ் சீவன்விடு
மப்போது கண்கலக் கப்பட வுமமைத் தாயையனே
யெப்போது காணவல் லேன்றிருக் காளத்தி யீச்சுரனே.

(இ – ள்.) ஐயனே - கடவுளர்க்கெல்லாம் தலைவனே !; திருக்காளத்தி ஈச்சுரனே-திருக்காளத்தி மலையில் எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானே !; முப்போதும் அன்னம் புசிக்கவும் - ஒவ்வொரு நாளும் மூன்று பொழுது சோறு தேடித் தின்னவும்; தூங்கவும் - எஞ்சிய பொழுதில் உணர்வின்றித் துயின்று கிடப்பவும்; மோகத்தினால் - காம மயக்கம் வந்துறும் போது பெண்டிர்பாலுண்டாகும் மோகத்தாலே; செப்பு ஒது இளமுலையாருடன் சேரவும் - செப்பினை உவமையாகக் கூறப்படுகின்ற இளமையுடைய முலையையுடைய அம் மகளிரைப் புணரவும்; சீவன் விடும் அப்போது கண்கலக்கப்படவும் - உயிர் போகும்பொழுது பெரிதும் துன்பமுற்றுக் கண் கலங்கிச் சாகவுமே; அமைத்தாய் - எனக்கு ஊழினை அமைத்து வைத்துள்ளனை; எப்போது காணவல்லேன் - இத்தகைய தீவினையாளனாகிய யான் இவற்றை விட்டு நின்திருவருளை எப்பொழுதுதான் காணவியலும்; எளியேனுக்கும் சிறிது திருவருள் வழங்கி உய்வித்தருளல் வேண்டுங் காண் ! என்பதாம்;

(வி - ம்.) உண்ணலும் உறங்குதலும் இணைவிழைவுற்றுப் புணர்தலும் பிணியுற்றுத் துன்புற்றுச் சாதலும் ஆகிய இவைகள் அஃறிணை உயர்திணை என்னும் இருவகையுயிர்கட்கும் பொதுவாகிய செயலாகும். இப்பொது நெறியிலேயே எளியேன் வாழ்நாளும் கழிய வேண்டும் என்பது நின்திருவுளக் குறிப்புப் போலும்.

மக்களாகிய “பெரும் பேரியாக்கையிற் பிறந்த யான் அப்பிறப்பிற் கேற்ற துறவு ஈதல் முதலிய நற்குணங்கள் பெற்று நின்திருவடிக் கன்பு செய்து அதனை எப்பொழுதுதான் பெறவியலும்? நீயே அடியேனையும் சிறப்பு நெறியிற் செலுத்தி உய்வித்தல் வேண்டும் என்று இதனால் அடிகளார் இறைவனை வேண்டுகின்றார் என்க.

நீ நினைத்தபடியே உலகில் எல்லாம் நிகழ்வனவாகும். ஆகவே அடியேனை இவ்வாறு வீணாகக் காலங்கழிக்கும்படி நீயே அமைத்தனை, அது நின்றிருவருட் கழகாகுமோ என்றிரங்குவார் முப்போதும்...... அமைத்தாய் என்றார்.

ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்க வேண்டும், அங்ஙனம் செய்திலேன்; யானோ முப்போதும் அன்னம் புசிப்பதே தொழிலாக வுடையேன்; நின்றிருவருட் கிலக்காகுவார் தூங்காமற் றூங்குவாராக யானோ உணர்வற்றுப் பிணம்போல உறங்குகின்றேன். நின்றிரு வருளைப் பெறுவோர் இவ்வுலகத்துச் சிற்றின்பமாகிய மகளிரின்பத் தைத் துவரத் துறப்பர்; யானோ எப்பொழுதும் அம்மகளிரோடு காம நுகர்கின்றேன்; நின்றிருவருட் காளாகுவோர் பயிற்சி மிகுதியாலே சீவன் விடும்பொழுதும் நின்னையே நினைந்து நின்றிருநாமமோதி மகிழ்ச்சியுடன் சீவன் விடுவர்; யானோ இவ்வுலகத்துப் பொருள்களையும் மனைவி மக்களையும் விட்டுச் சாகின்றேனே என்னும் துன்பத்தாலே கண் கலக்கப்பட்டுச் சாகின்றேன்; இத்தகைய கீழ்மையுடைய யான் நின்றிருவருளைக் காணக் கூடுமோ என்பது கருத்து. இனி, இங்ஙனமே நந் தாயுமானப் பெருந்தகையாரும்,

"மரவுரி யுடுத்துமலை வனநெற் கொறித்துமுதிர்
வனசருகு வாயில் வந்தால்
வன்பசி தவிர்த்துமனல் வெயிலாதி மழையால்
வருந்தியு மூலவனலைச்
சிரமள வெழுப்பியு நீரினிடை மூழ்கியுந்
தேகநம தல்லவென்று
சிற்சுக வபேக்ஷையாய் நின்னன்பர் யோகம்
செலுத்தினா ரியாம்பாவியேம்
விரவுமறு சுவையினொடு வேண்டுவ புசித்தரையில்
வேண்டுவ வெலாமுடுத்து
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொரு வருத்தமின்றி
யிரவுபக லேழையர்கள் சையோக மாயினோ
மெப்படிப் பிழைப்பதுரையா
யிகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே!" —எங்குநிறை - ௧

(௪)

என இறைவன்பால் முறையிடுதலுணர்க.

இரைக்கே யிரவும் பகலுந் திரிந்திங் கிளைத்துமின்னா
ரரைக்கே யவலக் குழியரு கேயசும் பார்ந்தொழுகும்
புரைக்கே யுழலுந் தமியேனை யாண்டருள் பொன்முகலிக்
கரைக்கேகல் லாலி னிழற்கீ ழமர்ந்தருள் காளத்தியே.

(இ - ள்.) பொன் முகலிக் கரைக்கே கல்லால் நிழற்கீழ் அமர்ந் தருள் காளத்தியே - பொன்முகலி யாற்றின் கரையின்கண் கல்லால மரத்தின் நிழலின் கீழே எழுந்தருளி யிருக்கின்ற திருக்காளத்திப்

பெருமானே !; இங்குப் பகலும் இரவும் இரைக்குத் திரிந்து இளைத்தும் - இவ்வுலகத்திலே பகலும் இரவுமாகிய இருபொழுதும் திரிந்து என் வயிற்றை நிரப்பும் இரைதேடுந் தொழிலாலே பெரிதும் இளைப்பெய்தியும்; மின்னார் - காமப்பிணி வந்துறும் பொழுதெல்லாம் அது தீர்தற்கு மகளிருடைய; அரைக்கு எய் வலக்குழி அருகே அசும்பு ஆர்ந்து ஒழுகும் புரைக்கு உழலும் - இடையின்கீழ்ப் பொருந்திய எருவாய்க்கருகே செங்குருதி கசிந்து நிரம்பி ஒழுகாநின்ற புன்மையுடைய அல்குலாகிய துளையைக் கருதி அங்குமிங்குந் திரிகின்ற; தமியேனை - அறிவிலியாகிய என்னை; ஆண்டு அருள் - நினது பேரருட்டிறத்தாலே எங்ஙனமேனும் ஆட்கொண்டருளுவாயாக ! என்பதாம்.

(வி - ம்.) பெரும்பாலும் உண்டியும் பெண்டிருமே எனக்குப் பெறும் பேறுகளாகவும் அவையே பெறற்கரியனவு மாயிருத்தலின் அவற்றின் பொருட்டே யான் இவ்வுலகிலே அலைகின்றேன்; வாழ்கின்றேன் காண்! இத்தகைய கீழ்மையுடையேன் நின்திருவருட்குப் பெரிதும் அயன்மையுடையேன் ஆயினும் நீ பேரருட் கடலாதலின் அடியேனையும் ஆட்கொண்டருளுதல் நின் றகுதிக்குப் பொருந்துவதேயாம் ஆதலால் அடியேனையும் ஆட்கொண்டருளுதி என்று வேண்டியபடியாம்.

மின்னார் அரைக்கு எய் வலக்குழி என்று கண்ணழித்துக் கொள்க. வலக்குழி - மலக்குழி. இஃதறியாது அவலக்குழி என்று கண்ணழிப் பாருமுளர். அசும்பு - கசிவு. புரை - துளை; அல்குல். உழலுதல் - துன்புற்று முயலுதல்.

> " பெண்டிரு முண்டியு மின்பமென் றுலகிற்
> கொண்டோ ருறுஉங் கொள்ளாத் துன்பம் "
>
> —சிலப்-கச. ரு௧-௬௦.

என்றார் கவுந்தியடிகளாரும்;

கல்லானிழற் கீழமர்ந்தருள் காளத்தியே என்றது தக்கணாமூர்த்தியை. இனிக் காளத்தியின் கோயின்மரம் கல்லாலாயினும் கொள்க.

(௫)

நாறுங் குருதிச் சலதாரை தோற்புரை நாடோறுஞ்சீ
யூறு மலர்க்குழி காமத் துவார மொளித்திடும்புண்
தேறுந் தசைப்பிளப் பந்தரங் கத்துள சிற்றின்பம்விட்
டேறும் பதந்தரு வாய்திருக் காளத்தி யீச்சுரனே.

(இ - ள்.) திருக்காளத்தி ஈச்சுரனே - திருக்காளத்தியி லெழுந்தருளிய சிவபெருமானே !; நாறும் குருதிச் சலதாரை - என்னே மாந்தராகிய எமது அறியாமை யிருந்தபடி; மாதர்பால் எமக்கு விருப்பந் தருகின்ற அல்குலாகிய அதுதான் தன்னியல்பிலேயே பெரிதும் அருவருக்கத் தக்கதே, தீ நாற்றம் வீசும் செந்நீரும் மூத்திர நீரும் பாய்கின்றவொரு கால்வாய்; தோல்புரை - தோலிலிருக்கு

மொரு துளை; நாள்தோறும் சீ ஊறும் மலக்குழி - நாள் தோறும் சீயூறி ஒழுகுமோர் அங்கணக்குழி; காமத்துவாரம் - காமத்துன்பம் தீர்த்தற்கியன்றதொரு துளை; ஒளித்திடும் புண் - மறையாது விடின் பெரிதும் அருவருக்கத் தக்கதாமென்று கருதி எப்பொழுதும் புடைவை யாலே மூடி மறைக்குமோர் ஆருப்புண்; தேறுந் தசைப்பிளப்பு - எல்லோரானும் நன்கு தெளியப்பட்டிருக்கின்ற புல்லிய ஊனிடையே அமைந்தவொரு பிளப்பிடம்; அந்தரங்கத்து உள சிற்றின்பம் விட்டு - இத்துணை இழிதகவுடையதா யிருந்தும் என்ன மாயமோ அதன்பால் என் உள்ளுள்ளே இருக்கின்ற சிற்றின்ப வாசையினைக் கைவிட்டு; ஏறும் பதந்தருவாய் - உய்ந்து கரையேறும் ஆற்றல் எனக்கில்லை ஆதலின், அதனினின்றும் கரையேறி யுய்தற்குக் காரணமான நினது திருவடிகளை அடியேனுக்கு வழங்கியருள்வாயாக ! என்பதாம்.

(வி - ம்.) மாந்தர் பிறவிக்கடலினின்றும் உய்ந்து கரையேற வொண்ணுதபடி செய்வது மகளிர் (அல்குலின்) பாற் கிடக்கும் சிற்றின்ப வாசையையே ஆகும். அச்சிற்றின்பத்தை நுகர்தற் கிடமா யிருக்கும் அவர் தம் அல்குற்புரையோ சலதாரை முதலியவற்றை ஒத்த அருவருக்கத் தகுந்த பொருளே ஆகும். ஆயினும் அதன்பாற் கிடக்கும் ஆசையை விட்டுக் கரையேறும் ஆற்றலோ மாந்தர்பால் இல்லை; இஃதொரு மாயமே போலும். அவ்வாசையே பிறவிக் கடலில் வீழ்ந்துழல்வதற் குற்ற ஒரோவொரு காரணமாகவும் உளது; அதனைக் கைவிட்டு உய்ய உன் திருவருள் துணை செய்தல் வேண்டும். ஆதலால் அத்திருவருளை நீயே எம்மனோர்க் களித்து உய்வித்தல் வேண்டும் என்று வேண்டியபடியாம். (அ)

கைலாயம்

கான்சாயும் வெள்ளி மலைக்கர சேநின் கழனம்பினே
னூன்சாயுஞ் சென்ம மொழித்திடு வாய்கர வூரனுக்காய்
மான்சாயச் செங்கை மழுவலஞ் சாய வளைந்த கொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி சாய்த்த சிவக்கொழுந்தே.

(இ - ள்.) கான்சாயும் வெள்ளி மலைக்கு அரசே — நறுமண மிக்குக் கமழ்தற்கிடனுன வெள்ளி மலைக்கு அரசனே !; கரவூரனுக் காய் - கரவூரன் என்னும் ஒரு மெய்யன்பன் பொருட்டு; செங்கை மான்சாய மழுவலம்சாய வளைந்த கொன்றைத் தேன்சாய நல்ல திரு மேனி சாய்த்த சிவக்கொழுந்தே - நின் சிவந்த கையிலேந்திய மான் ஒரு புறத்தே சாயும்படியும் மழு வலப்பக்கத்தே சாயும்படியும் அணிந் துள்ள கொன்றை மலரினின்றும் தேன்றுளிகள் வீழும்படியும் நல மிக்க அழகிய திருமேனியை வளைத்துக் கொடுத்த சிவக்கொழுந் தென்னும் திருப்பெயர் பூண்ட பெருமானே; நின்கழல் நம்பினேன் - நின் திருவடிகளையே நம்பியுள்ளேன்; ஊன் சாயும் சென்மம் ஒழித்திடு வாய் - ஊனுகத் தோன்றி இறந்து வீழுமிப் பிறவிப் பிணியைத் தீர்த்தருள்வாயாக ! என்பதாம்.

(வி - ம்.) கான் - மணம். ஊனுய்த்தோன்றிப் பின்பு வீழும் சென்மம் என்க.

இனி, இதன்கண் காவூரன் என்னும் அடியவன் மலர் சூட்டி வழிபடுவானுக்கு இறைவனுடைய திருமுடி மலர் சூட்ட எட்டாதாக அவன் அன்பிற் குகந்து அவ்வூரிற் கோயில் கொண்டிருக்கின்ற சிவ பெருமான் தன் திருமுடியைத் தாழ்த்து மலர்சூட்டி மகிழச் செய்தார் என்னும் புராணக் கதையைக் கூறியபடியாம். காவூர் திரு விரிஞ்சி புரம் என்ப. இவ்வரலாறு திரு விரிஞ்சைத் தலபுராணத்தில் பாலனுக்குத் திருமுடி வளைத்த சருக்கத்தே காணப்படும். (க)

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்துதின்று
பல்லுங் கறையற்று வெள்வாயு மாயோன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென் றோகயி லாயத்தனே.

(இ - ள்.) கயிலாயத்தனே - திருக்கயிலாயத்தில் எழுந்தளியிருக்கின்ற சிவபெருமானே! அடியேன்; இல்லம் துறந்து - இல்லத்திலே மனைவியுடனிருந்து வாழும் வாழ்க்கையைத் துவரத் துறந்து வெளியிற் போந்து; பசி வந்தபோது அங்கு இரந்து தின்று - பசிப்பிணி வந்துற்ற காலத்தே அவ்விடத்தே எதிர்ப்பட்ட மனைகளிலே சோறிரந்து தின்று இப்பொய்யுடலைப் பேணிக்கொண்டு; பல்லும் கறையற்று வெள்வாயுமாய் - பற்களிலே வெற்றிலை பாக்கு மெல்லுதலை ஒழித்தலாலே கறையில்லா வெறுவாயோடு; ஒன்றிற் பற்றும் இன்றி - பிற எந்தப் பொருளினும் பற்றுதல் ஒரு சிறிதுமின்றி; சொல்லும் பொருளும் - சொற்களையும் அச்சொல்லாற் பெறப்படும் பொருள்களையும் மனதினின்று மகற்றி; சுக ஆனந்தத் தூக்கத்திலே - மெய்யின்பத்தாலுண்டாகின்ற அறிதுயிலின்கண் அழுந்தி; அல்லும் பகலும் இருப்பது என்றோ - இரவும் பகலுமாகிய எப்பொழுதும் இருக்கும் பேறு எய்துவது எந்தக் காலத்திற் கைகூடுமோ அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) இல்லத்திருந்து வாழ்கின்ற வாழ்க்கை எல்லாவகையான பற்றுக்களுக்கும் இடனா யிருப்பதனால் பிறப்பறுத்துப் பேரின்பத்தே வைக நினைவோர் ஒருதலையாக அவ்வில் வாழ்க்கையைத் துறக்க வேண்டுதலின் முதற்கண் இல்லந் துறந்து என்றார்.

இனி, அரிதிற் கிடைக்கின்ற இம்மக்கள் யாக்கையானது உலகியலுணர்ந்து மெய்யுணர்ச்சி கைவரப் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு எய்தற்கும் கருவியாதல் பற்றிப் பின்னும் பிழைத்திருந்து அது கைவருதற்காகும் முயற்சி செய்தல் இன்றியமையாமையின் அத்துணைக்கே இவ்வுடலை மிகவு மெளிதாகவே ஓம்புதல் வேண்டு மென்பார் பசி வந்த போது அங்கு இரந்து தின்று என்றார். துறந்தோர்க் குணவொன்றுமே வேண்டற்பாலது பிறவெல்லாம் மிகை என்பார் பல்லுங் கறையற்று வெள்வாயுமாய் என்றார். பல்லுங்கறையற்று என்றது, வெற்றிலை பாக்கு மெல்லுதலாலுண்டாகும் கறையற்று என்றவாறு. இவையே மிகை எனவே பிற நுகர்ச்சிகள் எல்லாம் மிகையினும் மிகையாம் என்றாராயிற்று. சொல்லும் அவற்றாற் குறிக்கப்படும் பொருள்கள் அனைத்துமே (அசத்துப் பொருள்) பொய்ப்பொருள்,

சொற்கள், தூய மாயையின், பரிணமம்; பொருள்கள் தூய்தல்லா மாயையின் பரிணமங்கள் எனவே இவைகளே பற்றுபொருள்களு மாதலின் இவையிற்றின் தொடர்பும் அறுதல் வேண்டும் என்பார் சொல்லும் பொருளும் இழந்து என்றார். சுகானந்தம் : இருபெய ரொட்டு. ஆக்கம் என்றது அறிதுயிலே.

இனி மெய்யுணர்வு பெறுதற்கு உடம்பு இன்றியமையாத தென் பதும் அதனை நன்கு போற்றல் வேண்டும் என்பதும்,

“ உடம்பா ரழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிரவளர்த் தேனே ”

எனவும்,

“ உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே ”

எனவும் வரும் திருமந்திரத்தானும் (எஉச - உ௫) உணர்க.

துறவோர்க்குச் சோறு மட்டுமே வேண்டும் மற்றவை வேண்டா என்பதனை,

“ அண்டாத பேராவ லமையாத தென்னே
விண்டாவு மலைபோல வேண்டுங்கொல் வெண்சோ
றுண்டாலும் வயிறுள்ள தொருசாண் இதற்கோ
கண்டார்கள் பின்சென்று கையேற்கு மாறே ”

எனவரும் மெய்ஞ்ஞான விளக்கத்தானும் (கிருபகா - சச) உணர்க.

ஒன்றிற்பற்றின்றி என்புழி முற்றும்மை தொக்கது. பற்றுவது செல் வத்தின்கண்ணுண்டாகும் புறப்பற்றும் யாக்கையின்கண்ணிகழும் அகப்பற்றும் என இருவகைப்படும். பற்றின்றியிருத்தற்கு அவை நிலையுதலுடையன அல்ல என்னும் மெய்யுணர்வே காரணமாம்.

“ இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து ”

—குறள் - ௩சச.

என்பதுபற்றி ஒன்றி(ற்)னும் பற்றுமின்றி, என்றார்.

சொல்லாற் சுட்டியுணரப்படும் பொருளெல்லாம் நிலையுதலில்லாப் பொருள்களாதலின் 'சொல்லும் பொருளும் இழந்து' என்றார். என்னை? (பதார்த்தம்) பார்க்கவரு ஞானம் அஞ்ஞான விகற்பம் வாச்சிய வாசக ஞானம் வைந்தவத்தின் கலக்கந்தரு ஞானம், போகஞா திரு ஞான ஞேயம் தங்கிய ஞானம், திருஞானம் இவை யெல்லாம் கடந்த

சிவஞானம் ஆதலால் சீவன்முத்தர் சிவமே கண்டிருப்பர் என்பது பற்றி (சித்தி-சுப: க.கக) "சொல்லும் பொருளும் இழந்து சுகானந்தத் தூக்கத்திலே அல்லும் பகலும் இருப்பது என்றோ ?" என்றார். அல் என்றது உயிரினது கேவலாவத்தையை; பகலென்றது சகலாவத்தையை; சுகானந்தத் தூக்கம் என்றது சுத்தாவத்தையை என்க. அவையாவன முறையே கருவிகளோடு கூடாத நிலையும் அவற்றோடு கூடி முயலும் நிலையும் இவ்விரு நிலையினும் அவற்றூற் றாக்குண்ணுதும் உணர்வழியாதும் நிற்கும் நிலையும் என்க. இவ்வுண்மையை,

"தீங்குறு மாலய சேரா வகைவினை திரிவி தத்தால்
நீங்கிட நீங்கா மூல நிறையிரு ளிரிய நேயத்து
ஓங்குணர் வகத்த டக்கி யுளத்திலின் பொடுங்க நேரே
தூங்குவர் தூங்கி யேகத் தொன்மையில் துகளி லோரே"

எனவரும் சிவப்பிரகாசத்தானு முணர்க.

இனி,

"ஐயந் திரிபின் றளந்துத்தி யிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார் தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்"

—நீதிநெறி - க0உ.

எனவரும் குமரகுருபரர் அருளிய ஒப்பற்ற வெண்பாவுமது.

இல்லந் துறந்து எனவரும் இச் செய்யுளிலே பட்டினத்தடிகளார் காண்டற்கரிய பொருளையும் எளிபொருளாக அமைத்திருத்த லறிந்து மகிழ்க.

(உ)

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா மையுமற்று நிர்ச்சிந்தனுய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தலி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே.

(இ - ள்.) அத்தனே கயிலாயத்தனே!-எவ்வுயிர்க்குந் தந்தையானவனே! கயிலாயத்தி லெழுந்தருளி யிருக்கின்ற கடவுளே! அடியேன்; பிரியமும் தான் அற்று சினந்தனை அற்று - காமக்குணம் சிறிது மில்லாமல் அதற்குத் தடை யுண்டாம் வழித்தோன்றும் வெகுளியும் துவரக்கெட்டு; செய்கையும் அற்று - அக்காமங் காரணமாகத் தோன்றும் செயல்களு மில்லையாய்; நினைந்ததுமற்று நினையாமையுமற்று - நினைத்தலும் மறத்தலும் இல்லாமல்; நிர்சிந்தனுய் - மனதற்றதாய்நிலையுடையேனாய்: தனந்தனியே இருந்து ஆனந்த நித்திரை தங்குகின்ற அனந்தலில் என்று இருப்பேன் — கருவி கரணங்களின் குறும்பிற் படாமல் தனித்திருந்து இன்பமான அறிதுயிலிலே உறைதலாகிய பேரின்ப நித்திரையிலே எந்த நாளிற்றான் ஆழ்ந்து கிடப்பேனோ? அறிகின்றிலேனே என்பதாம்.

(வி - ம்.) பிரியம் சினம்-எனமாறுக. மாறவே காமமும் வெகுளியும் என்றாராயிற்று, இனம் செப்புமாற்றால் இவற்றிற்கு முதலாகிய மயக்கமும் கொள்ளப்படும். ஆசிரியர் திருவள்ளுவனாரும்,

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்"

—குறள் - நிசு0.

என்றறிவுறுத்துதலுணர்க.

தான் : அசை; இனித் தானற்று என்பதற்குத் தன் முனைப் பொழிந்து எனக் கோடலுமாம். செய்கை - யான் செய்தேன் என்னும் முனைப்போடும் செய்யும் செயல்களென்க. இனிப் பின்னர் நினைந்தது மற்று நினையாமையுமற்று என்பதற்கு எற்பச் செய்கையுமற்றுச் செய்யாமையுமற்று எனக் கோடலுமாம். நிர்ச்சிந்தன்-சிந்தனையற்றவன். மன மிறந்தவன் என்பது கருத்து. மன மறுதற்குக் காரணம் அவாவறுதலே ஆதலின் அதுவும் கொள்ளப்படும். தாயுமானவர் இதனை மனதற்ற பரிசுத்த நிலை என்று பேசுவர்.

தனந்தனியே யிருந்தென்றது கருவி கரணங்களோடு கூடாதிருத்தல். இந்நிலையினைச் 'சாக்கிராதீத நிலை' என்று நூல்கள் கூறும். இதனை,

"இந்நிலைதான் இல்லையேல் எல்லா மீசன்
இடத்தினினும் ஈசனெல்லா விடத்தினினும் நின்ற
அந்நிலையை யறிந்தந்தக் கரணங்க ளடக்கி
அறிவதொரு குறிகுருவின் அருளினா லறிந்து
மன்னுசிவன் தனையடைந்து நின்றவன்ற னாலே
மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னியசாக் கிரமதனில் துரியா தீதம்
தோன்றமுயல் சிவானுபவம் சுவானுபூ திகமாம்"

—சுப - உஅ

எனவரும் சித்தியாரானும் உணர்க.

ஆனந்த நித்திரை என்பதற்கு முற்செய்யுட்கண் சுகானந்தத் தூக்கம் என்பதற்கோதிய விளக்கங் காண்க.

அனந்தல் — இன்பத்தாலுண்டாகும் மயக்கம். (ந)

கையார வேற்றுநின் றங்ஙனந் தின்று கரித்துணியைத்
தையா துடுத்துநின் சந்நிதிக்கே வந்து சந்ததமு
மெய்யார நிற்பணிந் துள்ளே யுரோமம் விதிர்விதிர்ப்ப
வையாவென் றோல மிடுவதேன் றோகயி லாயத்தனே.

(இ - ள்.) கயிலாயத்தனே - திருக்கயிலாயத்தி லெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே !; கையார எற்றுநின்று அங்ஙனம்

தின்று-பசி வந்துற்றபோது நல்லோரில்லங்களிற் சென்று கைநிரம்பச் சோறிரந்து சோறிட்டோர் முன்றிலிலேயே நின்று அச்சோற்றினைத் தின்றுட லோம்பிக்கொண்டு; கரித்துணியைத் தையாது உடுத்து - குப்பையி லெறியப்பட்ட கரிபடிந்த துணியை அதன்கண்ணுள்ள பீற்றலைத் தையாமலே இடையிற் சுற்றிக்கொண்டு; நின் சந்நிதிக்கே சந்ததமும் வந்து - எதிர்ப்பட்ட நின்னுடைய திருக்கோயிலுள் எப்பொழுதும் வந்து; மெய் உரோமம் ஆரநின் பணிந்து உள்ளே விதிர் விதிர்ப்ப - எளியேனுடல் மயிர் சிலிர்த்துச் சிறப்ப நின்றிருவடிகளிலே வீழ்ந்து வணங்கி என்னுள்ளமானது அன்புடைமையாலே விதிர் விதிர்ப்பெய்தும்படி; ஐயா என்று ஓலம் இடுவது என்றோ - ஐயா! ஐயா! என்று கண் கனிந்து நின்னைக் கூவி என் துன்பங்களை முறையிட்டு நிற்றல் எந்த நாளில் வாய்க்குமோ அறிந்திலேனே? என்பதாம்.

(வி - ம்.) பலிக்கலம் திருவோடு முதலியனவும் பற்றுதற்குரிய பொருளாய்த் துயர் தருவனவே ஆதலால் அவையும் மிகையே என்பார் கையார ஏற்று நின்று என்றார், பிச்சைக் கலங்களுந் துயர்தருவனவே யாகும் என்பதனை,

"இழுக்கினு மிழத்தியா விடறினு மதுவேயால்
விழுக்கலமால் விலைபெரிதால் வினைக்கேடாம் தொழில் தருமால்
ஒழுக்கிற்கு முரித்தன்றா ணோரிடையூ றுடன்கொடுக்கும்
வழுக்கின்றித் தவஞ்செய்யின் மண்டையாற் பயனென்னோ?"

—மொக்கல - கக

எனவரும் நீலகேசியானும்,

தபசு பண்ணுவார்க்கு இவ்வாறு பருதுக்க நிமித்தமாகிய மண்டையாற் பயன் என் என்றவாறு. எனவரும் அதன் உரையானும் உணர்க.

இனி,

"சிறந்தாய்க்கீ துரைக்கலாம் சிந்தனையை முடிப்பதே
துறந்தார்க்குக் கடனாகிற் சோறலாற் பிறவேண்டா"

—நீலகே - உ௮க

என்பதனால் ஈண்டு அடிகளார் ஏற்றுநின்று அங்ஙனம் தின்று என்பராயினர். இரந்த சோற்றினைக் குளக்கரை தேடியும் மடமுதலிய இடங்கள் தேடியும் சென்றிருந்து உண்ணலும் மிகை என்பார் அங்ஙனம் தின்று என்றார். அங்ஙனம் என்றது சோறிரந்து பெற்ற இல்லத்து முன்றிலை. கரித்துணி என்றார் எளிதிற் பெறுதல் கருதி. மெய் உரோமம் ஆர எனமாறி உடலில் மயிர் சிலிர்த்து நிரம்ப என்க. விதிர் விதிர்த்தல் - நெஞ்சம் ஆராமையாற் படபடத்தல். இவை மெய்யன்பின் மெய்ப்பாடுகள்.

"என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்பவுட
விளகமன தழலின்மெழுகா
யிடையறா துருகவரு மழைபோ லிரங்கியே
யிருவிழிக ணீரிறைப்ப

அன்பினுன் மூர்ச்சித்த வன்பருக் கங்ஙனே
யமிர்தசஞ் சீவிபோல்வந்
தானந்த மழைபொழிவை"

—சுகவாரி - ச

எனவருந் தாயுமானவர் திருப்பாடலாலும் அன்பின் மெய்ப்பாடுக ளுணர்க. (ச)

நீறார்த்த மேனி யுரோமஞ் சிலிர்த்துள நெக்கு நெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தே யுருகிநின் சீரடிக்கே
மாறாத் தியானமுற் றானந்த மேற்கொண்டு மார்பிற்கண்ணீ
ராறாய்ப் பெருகக் கிடப்பதென் றேகயி லாயத்தனே.

(இ - ள்.) கயிலாயத்தனே - திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனே; நீறு ஆர்த்த மேனி யுரோமஞ் சிலிர்த்து உளம் நெக்கு நெக்குச் சேறு ஆய் கசிந்து கசிந்து உருகி – திருநீறு சண்ணித்த என் உடலானது நின்பால் அன்புணர்ச்சியினாலே மயிர்க்கூச்செறிந்து நெஞ்சமானது நின்னை நினைந்து நினைந்து குழம்பாக நெகிழ்ந்து நெகிழ்ந்துருகா நிற்கும்படி; நின் திருவடிக்கு மாறாத் தியானம் உற்று-நின் அழகிய திருவடிகளை ஒழியாத நினைப்பெய்தி, ஆனந்தமேற் கொண்டு அதனால் பேரின்பத்தை மேற்கொள்வதனாலே; மார்பிற் கண்ணீர் ஆறாய்ப்பெருக-என் மார்பிலே இன்பக்கண்ணீர் வார்ந்து ஆறு போலப் பெருகியொழுகா நிற்க; கிடப்பது என்றோ-நின் திருவருளிலே மூழ்கிக் கிடக்கும்படி வாய்க்குந் திருநாள் எந்தநாளோ? அறிகின்றிலேன், என்பதாம்.

(வி – ம்.) நீறு - திருநீறு. சீரடிக்கு: உருபு மயக்கம். இதுவும் அடிகளாரின் ஆர்வத்தைப் புலப்படுத்தியவாறு. இதற்கும் முற் செய்யுளின் விளக்கமே அமையும். கிடப்பது என்றது நின் திருவருளிலே மூழ்கிக் கிடப்பதென்பது பட நின்றது. (ரு)

செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தி
னெல்லையிற் புக்கிட வேகாந்த மாயெனக் காமிடத்தே
யல்லலற் றென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே.

(இ - ள்.) கயிலாயத்தனே - திருக்கயிலாயத்தி லெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே; செல்வரைப் பின் சென்று சங்கடம் பேசி-இந்தச் சாண் வயிற்றைத் தூர்க்கும் பொருட்டுச் செல்வமுடைய மாந்தர் பாற் சென்று அவர்க்கிச்சகம் பேசி அவரைப் பின் தொடர்ந்து போய்ச் செவ்வி தேர்ந்து வறுமையால் யான் எய்துகின்ற பசி முதலிய துன்பங்களை அவர்க் கெடுத்துக் கூறி; தினந்தினமும் பல்லினைக் காட்டிப் பரிதவியாமல் - நாடோறும் என் பல்லெலாம் அவர்க்குத் தோன்றும்படி காட்டி நின்று; எனக்கே யான் வருந்தாமல்; பரானந்

தத்தின் எல்லையில் புக்கிட - சிவானந்தம் என்னும் அநுபூதி உணர்வின் எல்லையிலே புகுதலாலே; ஏகாந்தமாய் - யான் நீயேயாகி யிருக்கின்ற; எனக்கு ஆம் இடத்தே - யானிருத்தற்கியன்ற இடத்தின்கண்; அல்லல் அற்று என்று இருப்பேன் - துயர் தீர்ந்து என்று தான் இருப்பேனோ அறிகின்றிலேனே! என்பதாம்.

(வி - ம்.) செல்வர் பின் சென்று அவர்மகிழ இச்சகம் பேசித் தந்துன்பத்தைக் கூறிப் பல்லிளித்து நிற்பது வயிற்றுப் பெருமான் பொருட்டேயாம். இதனைவிடக் கீழ்மையான தொழில் பிறிதொன்றில்லை ஆதலால் அடியேனுக்கு அந்த இழிதகவினைச் செய்துவிடேற்க என்பது குறிப்பு. சங்கடம் - துன்பம். மக்கள் பரிதவிக்கவேண்டுமாயிற் பிறர் துன்பங் கண்டே பரிதவிக்க வேண்டும் தன் துயர்க்குத் தானே பரிதவித்தல் கீழ்மையான தொழிலாகலின் பரிதவியாமல் என்றார் ஆதலின் அஃது என் பொருட்டே யான் பரிதவியாமல் என்பது பட நின்றது. பரானந்தம் - சிவானந்தம். ஏகாந்தம் என்றது நீயும் நானும் என இரண்டாகாது நீயே யானாகி என்றவாறு.

இதனை,

"கண்டவிவை யல்லேன்நான் என்றகன்று காணுக்
 கழிபரமும் நானல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினொடும் உளத்தவன்றான் நின்றகலப் பாலே
 சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலும் மலங்களெல்லாம் கருடதியா னத்தால்
 விடமொழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டைமறை களும்அதுநா னானேனென் றது
 பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே."

—சுப - உகஅ.

எனவரும் சித்தியாரானும் உணர்க.

இனி, எனக்காமிடம் என்றதும் இந்நிலையினையே யாம். நந் தாயுமானப் பெருந்தகையாரும்,

"நில்லாத வாக்கைநிலை யன்றெனவே கண்டாய்
 நேயவருண் மெய்யன்றோ நிலயமதா நிற்கக்
கல்லாதே யேன்படித்தாய் கற்றதெல்லா மூடங்
 கற்றதெல்லா மூடமென்றே கண்டனையு மன்று
சொல்லாலே பயனில்லை சொன்முடிவைத் தானே
 தொடர்ந்துபிடி மர்க்கடம்போற் றொட்டதுபற் றுநில்
லெல்லாரு மதிர்ந்திடவே வாய்ப்பறைகொண் டடிநீ
 யிராப்பகல்இல் லாவிடமே எமக்கிடமென் றறிந்தே"

—நினைவொன்று - ங.

என்றருளிச் செய்தலுமுணர்க.

இவ்வாறு உயர்ந்த நிலையைப் பெற்றவருள் பட்டினத்தடிகளாரே தலைசிறந்தவராவார் எனவும் தாயுமானவர் போற்றிப் புகழ்வதனை,

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல்
ஆருந் துறக்கை யரிதரிது—நேரே
மனத்துறவு மப்படியே மாணு விவற்றி
லுனக்கிசைந்த வாறென்றே யோர்"

எனவரும் அவரது வெண்பாவனும் (உடல்பொய்-இள) உணர்க. (௬)

மந்திக் குருளையொத் தேனில்லை நாயேன் வழக்கறிந்தும்
சிந்திக்குஞ் சிந்தையை யானென்செய் வேனெனைத் தீதகற்றிப்
புந்திப் பரிவிற் குருளையை யேந்திய பூசையைப்போ
லெந்தைக் குரியவன் காணத்த னேகயி லாயத்தனே.

(இ - ள்.) அத்தனே கயிலாயத்தனே-எந்தையே! திருக்கயிலாயத்
தில் எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானே; நாயேன் - நாய்
போலுங் கீழோனாகிய அடியேன், வழக்கு அறிந்தும் - நின் அன்ப
ருடைய மரபினை உணர்ந்திருந்தும், சிந்திக்கும் சிந்தையை யான்
என் செய்வேன் - என் வயத்ததாகாது தானே தலைமை செய்து தான்
செல்லுதற்கு விரும்பிய புலன்களையே பற்றி அவற்றை நினைக்கின்ற
என் மனத்தை யான் என்ன செய்து மடக்கி நின்னையே பற்றுமாறு
செய்வேன்; அங்ஙனம் செய்யமாட்டாமையால் யான்; மந்திக்
குருளையை ஒத்தேன் இல்லை - தன் தாயாகிய குரங்கு தன்னைப்
பற்றாமல் எவ்வாறியங்கினும் தானே அத்தாயினை இறுகப்பற்றிக்
கொள்கின்ற குரங்குக் குட்டியைப் போல்வேனல்லேன்; புந்திப்
பரிவில் - அடியேன் தன்னெஞ்சத்திலெழும் அன்பினாலே, குருளையை
ஏந்திய பூசையைப்போல் - தன் குட்டியைத் தன் வாயாற் கௌவிக்
கொண்டு போகின்ற பூனையைப் போன்று: எனைத் தீது அகற்றி
எந்தைக்கு உரியவன் காண் - அடியேன் தீமைகளை நீயே அறிந்து
அவற்றை அகற்றி நின்றிருவருளாகிய வாயாலே கௌவி எடுத்துப்
போகுமியல்புடைய நினக்கே உரியவன் ஆகின்றேன் காண் ஆதலால்
நன்றே செய்க தீதே செய்க நானோ அதற்கு நாயகமே என்பதாம்.

(வி - ம்) தாய் தன்னைப் பற்றாது தன் மனம்போனவாறியங்
கினும் குரங்குக்குட்டி தாயைப்பற்றிக் கொள்ளுமாறு போல இறைவ
னியல் புணர்ந்து அவன் திருவடிகளை இன்பப் போதினும் தீமைப்
போதினும் விடாமல் அன்பாலே பற்றிக்கொள்ள வேண்டும் என்ப.
இதனை மர்க்கட நியாயம் என்பர். இனி, தன் குட்டியானது சிறிதும்
தன்னைப்பற்றிக் கொள்ளாதாகவும் தன் அன்புடைமை காரணமாகத்
தாய்ப் பூனை அக்குட்டியைத் தன் வாயாற் பற்றிக்கொண்டு இடந்
தொறும் சென்று உய்விக்குமாறு போலே இறைவனே உயிர்களின்
செவ்வி தேர்ந்து தன்னருளாலே எடுத்துய்விப்பன் என்ப. இதனை
மார்ச்சால நியாயம் என்பர். ஈண்டு அடிகளார் தாம் குரங்குக்குட்டிபோல்
கிலேன்; பூனைக் குட்டியையே ஒத்திருக்கின்றேன் ஆதலால் நீயே
அடியேனை எடுத்துய்வித்தல் வேண்டும். தன் விருப்பப்படி என் மனம்

போகின்றது, அதனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் தானும் எனக்கில்லை, யான் என்செய்வேன் காண் என்று கூறுகின்றனர். (எ)

வருந்தேன் பிறந்து பிறந்து மயக்கும் புலன்வழிப்போய்ப்
பொருந்தே னரகிற் புகுகின் றிலேன்புகழ் வாரிடத்தி
லிருந்தே னினியவர் கூட்டம் விடேனிய லஞ்செழுத்தாம்
அருந்தே னருந்துவ னின்னரு ளாற்கயி லாயத்தனே.

(இ - ள்.) கயிலாயத்தனே - திருக்கயிலாயத்தி லெழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானே; நின் அருளால் – அடியேன் நின்னுடைய திருவருட்கு ஆளாய் விட்டமையாலே; பிறந்தும் இறந்தும் வருந் தேன் – பிறப்பினுட்பட்டும் இறப்பினுட்பட்டும் துன்புறுவேனல் லேன்; மயக்கும் புலன் வழிப்போய்ப் பொருந்தேன் - மனத்தை மயக்கித் தம்பாலீர்க்கின்ற ஐம்புலன்களின் வழியே சென்று அவற்றி லழுந்தியிட ரெய்தேன்; நரகில் புகுகின்றிலேன் - தீவினைகள் செய்து அதன் பயனாகிய நரகங்களிலே சென்று வீழ்வேனல்லேன்; புகழ்வார் இடத்திலிருந்தேனினி அவர் கூட்டம் விடேன் - நின்னைப் புகழ்ந்து பரவுகின்ற நின் மெய்யடியார் கூட்டத்திலே இதுகாறும் இருந்த யான் இனியும் அவ்வடியார் கூட்டத்திருக்கும் பேற்றினை விட மாட்டேன்; இயல் அஞ்சு எழுத்து ஆம் அருந் தேன் அருந்துவன் - நின்னியல்பெலா மமைந்த நின் திருமந்திரமாகிய திருவைந் தெழுத் தாகும் பெறுதற்கரிய தேனை இடையறாது பருகிப் பேரின்பத்தே இனிது வாழ்வேன் காண்; என்பதாம்.

இத்திருப்பாட்டு உவகைச் சுவைக்கு எடுத்துக் காட்டாம் சிறப் புடைத்து. என்னை? இறைவனுடைய திருவருட் செல்வம் கைவரப் பெற்ற அடிகளார் உவகையை இனிது வெளிப்படுத்துதலான் என்க. என்னை?

"செல்வம் புலனே புணர்வு விளையாட் டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே"

—மெய்ப்பாட்டியல் - கக.

எனவரும் தொல்காப்பியனார் கூற்றுங் காண்க.

பிறந்தும் இறந்தும் வருந்தேன் என மாறுக. புலன் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. புகழ்வார் என்றது - நின்னைப் புகழ் கின்ற மெய்யடியார் குழுவினை. இவர் தம் கூட்டரவாலேயே இத் தகைய பெரும்பேறு பெற்றுள்ளேன் ஆதலின் இனியும் அவர் கூட்டம் விடேன் என்பது கருத்து.

'அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

—பராபரக் - கருடு

எனவரும் தாயுமானவர் அருண் மொழியானும் புகழ்வார் கூட்டத் திருக்கும் பயன் உணர்க. புகழ்வாரிடத்தி லிருந்தேன் என்பது

பெயர்த்தன்மை எய்தி எழுவாயாயிற்று. இயலஞ்செழுத்து: வினைத்தொகை; ஓதுந்தோறும் பேரின்பம் பயத்தலின் அஞ்செழுத்தாம் அருந்தேன் என்றார். இனி இச்செய்யுளோடு, 'நாமார்க்கும் குடியல்லோம்' எனவரும் அப்பரடிகளார் திருத்தாண்டகம் நினைவிற் கொள்ளற்பாலது. (அ)

மதுரை

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனந்
திடப்படு மோநின் னருளின்றி யேதின மேயலையக்
கடப்படு மோவற்பர் வாயிலிற் சென்றுகண் ணீர்ததும்பிப்
படப்படு மோசொக்க நாதா சவுந்தர பாண்டியனே !

(இ - ள்.) சொக்கநாதா சவுந்தர பாண்டியனே - திருமதுரையில் திருக்கோயில் கொண்டருளிய சொக்கலிங்கப் பெருமானே அம் மாமதுரையில் அரசு கட்டிலேறித் தென்றமிழ் நாட்டை அருளாட்சி புரிந்த சவுந்தர பாண்டியன் என்னும் வேந்தனே !; நின் அருள் இன்றி - நினது திருவருட் பேறில்லாமல்; இப்பிரபஞ்ச வாழ்க்கையை விடப்படுமோ - இவ்வுலகத்துச் சிற்றின்ப வாழ்க்கையை எளியேமால் துறந்துவிட வியலுமோ ?; விட்டு மனந்திடப்படுமோ - ஒரோவழித் துன்பம் வறுமை முதலிய காரணங்களால் இவ்வுலக வாழ்வில் வெறுப்புற்றுத் துறந்து விட்டாலும் அக்காரணங்கள் ஒழிந்தவழி மீண்டும் மணம் அவ்வாழ்க்கையிற் புகுவதன்றி அத்துறவு நிலையிலேயே நிற்குமளவு எம்மனந்தான் உறுதியுடையதாமோ ? தினமே யலையக்கடப்படுமோ - உறுதியில்லாமையால் பொய்த்துறவுடையேமாய்க் கூடாவொழுக்கமுடையேமாய் இப்பேருலகத்தே ஓரிடத்தும் நிலையின்றி அலைந்துழல்வதற்குத் தான் எம்மால் இயலுமோ ?; அற்பர் வாயிலில் சென்று கண்ணீர் ததும்பிப் படப்படுமோ - கீழ்மக்கள் முற்றத்தே சென்று பசி முதலியவற்றைப் பொறுமையால் கண்ணீர் ததும்ப நின்று துன்பப் படத்தான் இயலுமோ? இயலாதாகலின் நின்றிருவருளைத் தந்து அடியேனை உய்வித்தருள்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) இதன்கண் இறைவன் திருவருள் கிடைக்கப் பெறுதார் இவ்வுலகத்துச் சிற்றின்ப வாழ்க்கையை விட்டுவிடும் ஆற்றலுடையவராகார். ஒரோவழி பொருளிழப்பு, காதல் ஏமாற்றம், மனைமக்கள் இறப்பு நல்குரவு முதலியவற்றால் மனம் வாழ்க்கையை வெறுப்பதுண்டு. அக்காரணங்களால் வாழ்வினைத் துறந்து போவாருமுளர். அங்ஙனம் போகுமவர் அக்காரணங்கள் காலத்தாலும் மறதியாலும் அகன்றவழி மீண்டும் இவ்வுலக வாழ்க்கையே அவாவி அதனுட் புகுவாரல்லது துறவுக்குரிய மனவுறுதியைப் பெறுவாரல்லர். மனவுறுதியின்மையால் வறிய துறவு வேடமாத்திரமே மேற்கொண்டு ஓரிடத்தே நிலைத்திருப்பதற்கும் வழியின்றி இப்பேருலகில் மனம் போன வழியெல்லாம் திரிந்து கூடா வொழுக்கமும் உடையராகுவர். உணவின் பொருட்டுச் சிற்றினமாக்கள் முற்றத்தே சென்று கண்ணீர் ததும்பிப் பெரிதும் வருந்துவார். ஆகவே நின் திருவருளே உயிர்கட்குத் துணையாம். அவ்வருளை எளியேனுக்கு வழங்கி ஆட்கொண்டருள்க என்று அடிகளார் இறைவனை வேண்டுகின்றனர்.

இறைவன் திருவருளாலன்றி உயிர்கள் தாமே உய்ந்து கரை யேறும் ஆற்றலுடையனவல்ல என்பதனை,

" அவனிவ னான தவனருளா லல்லது
இவனவ னாகானென் றுந்தீபற
என்றும் இவனேயென் றுந்தீபற"

எனவரும் மணிவாசகத்தானும், (௬0)

" நானாரென் உள்ளமார் ஞானங்க ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரான்என்னை யாண்டிலனேல் மதிமயங்கி
ஊனார் உடைதலையில் உண்பலிதே ரம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ"

எனவரும் மணிவாசகத்தானும் உணர்க. (க)

ரு. பொது

உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம முண்டிந்த மேதினியில்
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்
[பிறைக்கே.

(இ - ள்) உடைகோவணம் உண்டு - நெஞ்சமே! நமக்கு உடுத்தவோ குப்பைகளில் கிடைக்கின்ற கோவணத் துணியுண்டு, அதற்குப் பஞ்சமில்லை; உறங்கப் புறந்திண்ணை யுண்டு - உறங்குவதற்கோ வீடுகள்தோறும் புறந்திண்ணை எங்கெங்கு முண்டு, அதற்கும் பஞ்சமில்லை; உணவு அடைகாய் இலை உண்டு - இனி பசிப்பிணி தீர உண்ணும் உணவோ எளிதில் கிடைக்கின்ற காய்களும் இலைகளும் கிழங்குகளும் பிறவும் எங்கும் உண்டு; அருந்தத் தண்ணீர் உண்டு - நீர் வேட்கை வந்துழிப் பருகுதற்கு நீர் நிலைகளிலே குளிர்ந்த நீர் எவ்விடத்தும் உளது; அருந் துணைக்கு விடையேறும் ஈசர் திருநாமம் உண்டு - இனிய எப்போதும் நமக்குப் பெறலருந் துணையாதற்கோ எருதேறும் நம்பெருமான் திருப்பெயர்கள் எண்ணிறந்தன நம்பாலே உண்டு; இந்த மேதினியில் வான்பிறைக்கு வடகோடு உயர்ந்து என்ன தென்கோடு சாய்ந்து என்ன - இந்த உலகின்கண் வானத்திலே தோன்றுகின்ற பிறைத்திங்களின் வடப்பக்கத்து நுனி உயர்ந்திருத்தலால் நமக்காவது யாது? அல்லது அதன் தென் பக்கத்து நுனி தாழ்ந்திருத்தலால் நமக்கு ஆவது யாது? நீ கவலையற்றிருப்பாயாக! என்பதாம்.

(வி - ம்.) உலகத்து மாந்தர் மாசித்திங்கள் முதலிய ஒரு சில திங்களில் மூன்றும் பிறைத்திங்களைக் கூர்ந்து நோக்குவர். அப்பிறைக்கோடு உயர்ந்திருக்குந் திசையிலுள்ள நாடுகளில் வருகின்ற யாண்டு வளமுடையனவா யிருக்கும் என்றும் தாழ்ந்திருக்குந் திசையிலுள்ள நாடுகள் பஞ்சம் உடையனவா யிருக்கும் என்றும் நம்புவர்.

வடகோடியரின் வட நாட்டினர் மகிழ்வர், தாழின் வருந்துவர்; தென் கோடியரின் தென்னாட்டவர் மகிழ்வர், தாழின் வருந்துவர்.

அடிகளார் ஒரூரில் இருந்தபொழுது மாந்தர் பிறை நோக்கி வருந்துதலையோ அல்லது மகிழ்தலையோ கண்டனராக அப்பொழுது அவர் தம் நெஞ்சிற்குக் கூறியது இத் திருப்பாட்டெனவுணர்க.

துறவியாய் இறைவன் அருளி லழுந்தி யிருக்கும் பெரியோர்க்கு இவ்வுலகத்துத் தோன்றும் இத்தகைய நிகழ்ச்சிகளால் இன்பமோ துன்பமோ உண்டாதலில்லை என்பது இதனாற் போந்த பொருள் என்க.

இக்கருத்தோடு,

“வானந் துளங்கிலென் மண் கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே”

எனவரும் அப்பரடிகள் அருண்மொழியும் (திருமுறை - ௪) ஒப்புக் காணற்பாலதாம். (க)

வீடு நமக்குத் திருவாலங் காடு விமலர்தந்த
வோடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்குசெல்வ
நாடு நமக்குண்டு கேட்டதெல் லாந்தர நன்னெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவோ வொருவரு மிங்கில்லையே.

(இ - ள்.) நல் நெஞ்சமே - நலமிக்க என் நெஞ்சமே கேள்!; நமக்கு திருவாலங்காடு வீடு - நாம் எப்பொழுதும் விரும்பி யுறைதற்கு நமக்குத் திருவாலங்காடு என்னும் இத்திருவூரே இனிய வீடாகும்; நமக்கு விமலர் தந்த வற்றாத பாத்திரம் ஓடு உண்டு - இனி பசித்தக்கால் உண்டிதருதற்கோ வாலறிவனாகிய இறைவனே நமக்கென்று நம் கையிலே கொடுத்தருளிய எப்பொழுதும் உணவு அறுதலில்லாத கலமாகிய திருவோடு நம்பாலுளது; நமக்கு கேட்டது எல்லாம் தர செல்வம் ஓங்கு நாடு உண்டு - இனி நாம் விரும்பிக் கேட்கும் பொருள்களை எல்லாம் நமக்கு வழங்குதற்கோ செல்வத்தாற் சிறப்புற்றுயர்ந்த நாடுகள் பல நம்முடையனவாகவே இருக்கின்றன. நமக்கு ஈடு சொல ஒருவரும் இங்கு இலை - இங்ஙனம் எதனாலும் குறைவற்றிருக்கின்ற நமக்கு உவமையாக எடுத்துச் சொல்வதற்கும் இவ்வுலகில் பிறர் யாரும் இல்லைகாண்! என்பதாம்.

மெய்யாய துறவறத் தொழுகுவார்க்கு இந்நிலவுலகம் முழுவதுமே வீடாக இருக்கின்றது. அவர்க்கு உணவிடுகின்ற இல்லத்தாரும் எண்ணிறந்தவராகலின் அவர்க்கு எப்பொழுதும் ஓடே உணவு தருவதாகும்; பின்னும் ஏதேனும் வேண்டுமாயின் கேட்டதெல்லாம் வழங்குஞ் செல்வச் செழிப்புடைய நாடுகள் பலவும் அவர்க்கிருக்கின்றன. ஆகவே அவர்க்கு இவ்வுலகில் உயிரோம்புதற்குச் சிறிதும் கவலை வேண்டுவதில்லை என்றவாறு.

இந்நில வுலகத்தில் கவலையின்றி வாழ்பவரைக்காணவே இயலாது; தனக்குவமை யில்லான் தாள் சேர்ந்தார்க் கல்லது மனக்கவலை மாற்ற லரிது என்பவாகலின் ஈண்டு அடிகளார் நமக்கு ஈடு சொல்ல இங்கு ஒருவரும் இல்லை என்றது புனைந்துரையன்று முற்றிலும் வாய்மையே யாதலறிக. (உ)

நாடிக்கோண் டீசரை நாட்டமுற் றுயிலை நாதரடி
தேடிக்கோண் டாடித் தெளிந்தா யிலைசெக மாயைவந்து
மூடிக்கோண் டோமென்றுங் காமா யுதங்கண் முனிந்தவென்றும்
பீடிப்பை யோநெஞ்ச மேயுனைப் போலில்லை பித்தர்களே.

(இ - ள்.) நெஞ்சமே - பேதை நெஞ்சே!; நாடிக்கொண்டு - நீயே அவாவினால் இதுவே இன்ப வாழ்க்கையென்று மகளிர் முதலிய மாயைக் கூறுகளை விரும்பி வலிந்திழுத்து நின் மேலதாக்கிக்கொண்டு பின்னர் அவற்றால் துன்புறும் பொழுது, செகமாயை வந்து மூடிக் கொண்டோம் என்றும் - அந்தோ என் செய்வோம்! நாம் இவ்வுலக மாகிய மாயை வந்து மூடிக்கொள்ளப் பட்டேமே!; காம ஆயுதங்கள் - காமவேளின் படைக்கலங்களாகிய மலர்க்கணைகள் நம்மேற்பட்டுப் பெரிதும் வருத்துகின்றனவே என்றும் நீ வருந்துதலன்றியும்; பீடிப்பை - நின்னைச் சேர்ந்துள்ள என்னையும் வருத்துகின்றனையல்லையோ; ஈசரை நாட்டம் உற்றாய் இலை - இந்த மாயையை நாடுமளவுதானும் நம் சிவபெருமான் திருவருளின் மேல் நாட்டங் கொண்டாயில்லை; நாதர் அடி தேடிக் கொண்டாடித் தெளிந்தாய் இல்லை - அவ்விறைவன் திருவடிகளைத் தேடிச்சென்று அவற்றைக் கண்டு வணங்கிப் புகழ்ந்து பாடி அத்திருவடிகளே இச்செக மாயையாகிய நோய்க்கு நன் மருந்தாம் என்று யான் அறிவுறுத்ததனை உணர்ந்து கொண்டாயுமல்லை; உனைப்போல் பித்தர்கள் இல்லை - அறிவோடிருந்தும் இவ்வாறு பிதற்றுகின்ற உன்னைப் போன்ற பித்தர் இவ்வுலகிலில்லை என்பதாம்.

(வி - ம்.) நாடிக்கொண்டு செகமாயை வந்து மூடிக்கொண்டோ மென்றும் எனக் கூட்டி, நீயே விரும்பி மாயையை ஏற்றுக்கொண்டு பின்னர் வருந்துகின்றாய் என்பது கருத்தாகக் கொள்க. என்னை, மக்கள் தாமே இன்பப் பொருள்கள் என்று கருதிப் பெண்டிரையும் பிறவற்றையும் விரும்பி யேற்றுக் கொள்கின்றனர்; நாளடைவிலே அவைகளே துன்பந் தருவனவாகி நலிகின்றன ஆதலான் இங்ஙனம் கூறினர் என்க.

இச்செக மாயைக்கு ஈசன் அடியே நன் மருந்தாம் என்று யான் உனக்கு அறிவித்திருந்தும் நீ ஈசனடியை நாடினாயில்லை; யான் கூறியதனைத் தெளிந்தாயில்லை என்பது கருத்தாகக் கொள்க. இச் செகமாயை தரும் துயரகன்று இன்பத்தே நிலைபெற வேண்டுமாயின் இறைவன் திருவடிகளை வணங்குதலே வழியாகும் என்பதனை,

“ இடர்கெடுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
ஈண்டொளிசேர் கங்கைச் சடையாய் என்றும்
சுடர் ஒளியாய் உள்விளங்கு சோதீ என்றும்
தூநீறு சேர்ந்திலங்கு தோளாய் என்றும்

கடல்விடம துண்டிருண்ட கண்டா என்றும்
கலைமான் மறியேந்து கையா வென்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே ''

என்றற்றொடக்கத்து அப்பரருளிய திருத் தாண்டகங்களானும் உணர்க. (௯)

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே.

(இ - ள்.) வினை தீர்த்தவனே - மெய்யன்பராயினூர் தம் இருள் சேர் இருவினையுந் தீர்த்தருளும் சிவபெருமானே!; (யான்) கை ஒன்று செய்ய - (அறிவிலியாகிய யான்) நின்னை வழிபாடு செய்யும் பொழுது என் கைகள் அவ்வழி பாட்டிற் கொவ்வாத யாதானும் பிறி தொரு செயலைச் செய்து கொண்டிருப்பவும்; விழி ஒன்று நாட - என் கண்கள் தமக்கு விருப்பமான யாதானுமொரு காட்சியைக் காணுநிற்பவும்; கருத்து ஒன்று எண்ண - என் நெஞ்சம் தனக்கினிய யாதானும் பிறிதொன்றனை நினையாநிற்பவும்; வஞ்சக நா ஒன்று பேச - வஞ்சகமே பயின்றுள்ள என்னுடைய நாவானது யாதானும் பிறிதொன்றனைப் பேசாநிற்பவும்; புலால் கமழும் மெய் ஒன்று சார - புலால் நாறுகின்ற புன்மையையுடைய என் உடம்புதானும் தனக்கினி தான யாதானுமோர் ஊற்றின்பப் பொருளை யுறுநிற்பவும்; செவி ஒன்று கேட்க - என்னுடைய செவிகள் தமக்கினிய யாதானுமோர் ஒலியினைக் கேட்பவும்; விரும்பும் யான் - விரும்புகின்ற இயல்புடைய யான்; செய்கின்ற பூசை - வறிதே செய்கின்ற வழிபாட்டினை; எவ்வாறு கொள்வாய் - எவ்வாறு ஏற்றுக்கொள்ள விரும்புவாய்;

(வி - ம்.) ஐம்புலன்களாகிய ஐந்திருளகற்றி நின்றிருவடியொன் றனையே பற்றி நின்னை வழிபடுகின்ற மெய்யடியார் வழிபாடே நீ விரும்பி ஏற்குந்தகுதி யுடையதாம். எளியேன் நின்னை வழிபடப் புகுந்த காலத்தே என் ஐம்பொறிகளும் அதனதற்கு விருப்பமான புலன்களிற் சென்று விடுதலாலே அடியேன் நின்னை வழிபடுங்காலும் அவ்வழிபாடு பொய் வழிபாடே ஆகின்றது. ஆகவே அதனை நீ எங்ஙனம் ஏற்றுக்கொள்வாய்? என்றிரங்கிய படியாம்.

மனம் என்பது ஒன்றே யன்றே? அம்மனம் புலன்களிற் பொருந் துதலன்றி நின்றிருவடிகளிலே பொருந்தி நிற்றவில்லை. நின்றிரு வருளே அந்த மனத்தையும் நின்பாலதாக்கி அடியேனை ஆட்கொள்க என்பது கருத்து. ஆண்டவன் அருள் வேண்டுவோர் தமது மனத்தை ஒருவழிப்படுத்த வேண்டும் என்பதனை,

" அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்கும்—சென்று

கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு"

எனவரும் திருக்களிற்றுப் படியாரானும் (௩௪) உணர்க. (௪)

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடு வீர்ந்த மானுடமே.

(இ - ள்.) கெடுவீர் - கெட்டழிதற்கே பிறந்த பேதை மாந்தர் காள்; காணக் கண் உண்டு — பெறற்கரிய இந்த மானிடப் பிறப்பிலே திருக்கோயில்கடோறும் நம்மை ஆட்கொள்ளும் பொருட்டு எழுந்தருளி யிருக்கின்ற இறைவனுடைய திருவுருவத்தைக் கண்டு களித்தற் கேற்ற கண்களிருக்கின்றன; நோக்கக் கருத்துண்டு - அவனுடைய பெருமைகளை ஆராய்ந்துணர்தற்கேற்ற நெஞ்சமும் இருக்கின்றது; கசிந்து உருகிப் பாடப் பண் உண்டு - அப்பெருமான் புகழைக் கேட்டு மனங் கசிந்து பாடுதற்கோ இனிய பண்கள் பற்பலவுள்ளன; கேட்கச் செவி உண்டு - அவ்விறைவனியல்பினை உணர்ந்த சான்றோர் கூறும் அவன் பெருமைகளைக் கேட்பதற்கேற்ற செவிகளும் இருக்கின்றன; பச்சிலையால் சாத்த எண் உண்டு - வில்வ முதலிய பசிய இலைகளை அவன் திருவடிகளிலே இடுதற்கேற்ற அவன் திருப்பெயர்த் தொகைகளும் இருக்கின்றன; எதிர்நிற்க ஈசன் இருக்கையிலே - இவ்வாறு கண்டும் கேட்டும் கசிந்துருகிப் பாடி வழிபடுங்கால் நம்மெதிரே வந்து நிற்பதற்கு அவ்விறைவன் எதிர்பார்த்திருப்பவும்; இந்த மானுடம் - பெறுதற்கரிய இந்த மனித வுடம்பானது; ஐயோ மண் உண்டு போகுது-அந்தோ அதன் பயனை நமக்குத் தாராமல் வீணே மண்ணால் தின்னப்பட்டு அழிந்து போகின்றதே! என்பதாம்.

(வி - ம்.) இந்த மக்கள் யாக்கை பெறுவதே சாலவும் அரிதாம். அத்தகைய யாக்கை பெற்றுள்ள நீயிர் அதனுலாம் பயனை எய்துதலே அறிவுடைமையாம். இம்மக்கள் யாக்கை இறைவனை வழிபாடு செய்து அவன் திருவருளுக்கு ஆளாக வேண்டும் என்னும் கருத்தினாலேதான் அவ்விறைவனால் நமக்குத் தரப்பட்டுளது. இந்த யாக்கையின்கண் அமைந்துள்ள விழிகள் இறைவனைக் கண்டு களிப்பதற் கேற்றனவாக இருப்பதும் காண்மின்! மக்கள் மனம் காட்சி முதலிய அளவைகளால் இறைவன் உயிர் மாயை முதலிய பொருள்களை ஆராய்ந்து தெளிதற் கேற்றதாக அமைந்திருத்தலும் காண்மின். இறைவனைப் பாடுதற்கென்றே பண்கள் உளவாயிருத்தலும் காண்மின், இறைவன் திருப்பெயர்த் தொகைகள் நூற்றெட்டு முதலியனவாகப் பல விருத்தலும் காண்மின். அவற்றைக் கூறி எளிய பச்சிலையால் வழிபடினும் அவன் நும்மகக் கண்முன் தோன்றி நும்மையாட் கோடற்கு எப்பொழுதுமே காத்திருக்கின்றான், அத்துணைப் பேரருளாளன் நம் பெருமான். இவ்வாக்கையாலே அவனைக் கண்டு கேட்டுக் கசிந்துருகிப் பாடி வழிபடுவீராயின் என்று மழிவில்லாத பேரின்பப் பெருவாழ்வினைப் பெறுதல் திண்ணம். இங்ஙனமாகவும் நீயிர் விலங்குகள்

போலவே வாழ்தலால் இந்த மக்கள் யாக்கை பயனின்றிக் கழிகின்றது கண்டீர் என அடிகளார் நம்மனோர்க் கறிவுறுத்துகின்றார் என்க. (௫)

சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லிலு மாசற்ற வாகாயந் தன்னிலும் ஆய்ந்துவிட்டோர்
இல்லிலு மன்ப ரிடத்திலு மீச னிருக்குமிடம்
கல்லிலுஞ் செம்பிலு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே.

(இ - ள்.) ஈசன் இருக்கும் இடம் - இறைவன் இருத்தற்கேற்ற விடங்கள் எவை எனின்; சொல்லிலும் சொல்லின் முடிவிலும் - மறைமொழியாகிய மந்திரங்களிலும் அந்த மந்திரங்கட்கு அப்பாலும்; வேதச் சுருதியிலும் — அறிவாகிய கேள்வியிலும்; அல்லிலும் - மனத்திற்கு அப்பாற்பட்ட மறை விடத்தினும்; மாசு அற்ற ஆகாயந் தன்னிலும் — தூய அறிவாகிய வானத்திலும்; ஆய்ந்து விட்டோரில்லிலும் - பொருளியல்பை ஆராய்ந்து உலகைத் துறந்தவரிடத்தும்; அன்பர் இடத்திலும் - மெய்யன்பர் நெஞ்சத்தினும் என்றுணர்க; எங்கள் கண்ணுதல் - எம்மையாளுடைய சிவபெருமான்; கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் - ஊனக்கண் கொண்டு காண்டற்கியன்ற கல்லாலியன்ற படிமங்களினும் செம்பு முதலிய உலோகங்களாலியன்ற படிமங்களிலும் மட்டுமோ அடங்கி யிருப்பான்! அங்ஙனம் கருதுதல் அறியாமை என்பதாம்.

(வி - ம்.) எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவிக்கு மட்டுந் தான் 'சொல்' என்னும் வியத்தகு கருவி இறைவனால் அருளப்பட்டுளது. அச்சொற்களைக் கற்று அவன் எய்த வேண்டிய பயன் கடவுளைத் தொழுவ தொன்றுமே என்பதை வள்ளுவர்,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்" —குறள் - உ

என்னுமருமைத் திருக்குறளில் ஐயந்திரிபற ஓதியுள்ளனர். இறைவன் மனமொழிகளைக் கடந்தவன் என்றாலும் அவன் மனிதனுடைய மனத்தின் வழியே தான் அவனுக்கு வெளிப்பட்டருள்கின்றான். மனிதருள்ளும் கல்லாதார் விலங்கோ டொப்பர். கற்றவர் மனத்திலே சொல் வழியாகவே இறைவன் மனிதனை அணுகி அவனோடு தொடர்புடையவனாகின்றான். ஆதலால் இறைவன் சொல்லின் இருக்கின்றான் என ஈண்டு அடிகளார் முதற்கண் அருளிச் செய்தார். சொற்களுள் வைத்து அவனையே வாழ்த்துகின்ற மந்திரச் சொற்களிலே தான் நன்கு வெளிப்படுகின்றான் ஆதலால் ஈண்டுச் சொல் என்றது மந்திரச் சொல்லையே என்றுணர்க. இதனை,

"மந்திர மத்து வாவின் மிகுத்தொரு வடிவ மாகத்
தந்ததென் அரனுக் கென்னிற் சகத்தினுக் குபாதா னங்கள்
விந்துமோ கினிமான் மூன்று மிவற்றின்மே லாகி விந்துச்
சிந்தையா ரதீத மான சிவசத்தி சேர்ந்து நிற்கும்"

எனவும்,

"சுத்தமாம் விந்துத் தன்னில் தோன்றிய நாத லானும்
சத்திதான் பிரேரித் தப்பின் தானதிட் டித்துக் கொண்டே
அத்தினற் புத்தி முத்தி அளித்தலால் அரனுக் கென்றே
வைத்தவாம் மந்தி ரங்கள் வடிவென மறைக ளெல்லாம்"

எனவும்,

"மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரஞ் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக் கேள்நீ
முந்திய தோற்றத் தாலும் மந்திர மூலத் தாலும்
அந்தமில் சத்தி யாதிக் கிசைத்தலு மாகு மன்றே"

எனவும் வரும் சித்தியாரானும் (எஎ - அ - க) தெளிக.

சொல்லின் முடிவிலும் என்றது அம்மந்திரச் சொல்லின் முடிவாகிய பொருளின்கண்ணும் என்றவாறு. இனி வேதச்சுருதி என்றது உபதேசச் சொல்லினை. சுருதி - கேட்கப்படுவது. சிவானுபூதிச் செல்வராகிய தாயுமானவரும்,

"பொருளாகக் கண்டபொருள் எவைக்கும் முதற்
பொருளாகி"

எனவும்,

"துரியநடு வூடிருந்த பெரியபொருள்"

எனவும்,

"விண்ணே விணுதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே அவ்வித்தின் முளையே
கண்ணே கருத்தேயென் எண்ணே எழுத்தே
கதிக்கான மோனவடிவே"

எனவும் திருவாய் மலர்ந்தருளுதலும் காண்க.

அல் - இரவு. அஃதாவது மானிட மனமும் சொல்லும் கடந்த இடம். அஃதின்ன தன்மைத்தென்று அறிய வொண்ணுமையால் இரவோடுவமித்தனர். இனி மாசற்ற ஆகாயம் என்றது தூய அறிவு வெளியினை. இதனையே சிதாகாயம் என்ப. சிதம்பரம் என்பதுமது. இனி ஆய்ந்து விட்டோர் இல்லிலும் என்றது மெய்ந்நூலை ஆராய்ந்து மெய்யுணர்வு பிறந்த மேலோரிடத்திலும் என்றவாறு. இல்லிலும் என்றது வாளா இடம் என்னும் பொருட்டாய் நின்றது. விட்டோருடைய நெஞ்சமாகிய உறையுளிலும் எனினுமாம். என்னை? மெய்யுணர்ந்தோர் நெஞ்சமே இறைவன் நீங்காதுறையும் இடமாகலின் என்க.

ஆய்ந்து விட்டோரில்லிலும் என்றது ஞானியரிடத்திலும் என்றும் அன்பரிடத்திலும் என்றது மெய்யன்பரிடத்திலும் என்றும் வேறுபாடு

கண்டு கொள்க. அஃதாவது மெய்ந்நூலோதி ஞானநெறி நிற்பாரிடத்திலும், கல்வி கேள்வியிலராயினும் கண்ணப்பர் போன்று மெய்யன்புடையாரிடத்தும் என்றவாறு.

இனிக் கல்லிலும் செம்பிலும் இறைவன் உருவமைத்திருத்தல் அவன் நினைவின் பொருட்டாய அறிகுறி மாத்திரையே அன்றி அவற்றூடே இறைவன் அடங்கி யிருப்பன் என்று எண்ணற்க. இதனை உணர்த்தவே அருணந்தி சிவாசாரியரும்,

"திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவன் எனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே"

எனத் தெரித் தோதுவாராயினர். அஃதாவது திருமேனியைக் கல்லெனக் காண்பவர்க்கும் செம்பெனக் காண்பவர்க்கும் அங்குக் கல் அல்லது செம்பே உறையும் சிவன் உறைவானல்லன் என்றவாறு. இக் கருத்துப் படவே ஈண்டுப் பட்டினத்தடிகளும் "கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே" என்றூர் என்க. (சு)

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தால்
தினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதநினை
நினைப்போரை மேவு நினையாரை நீங்கிந் நெறியினின்றூல்
உனைப்போ லொருவருண் டோமன மேயெனக் குற்றவரே.

(இ - ள்.) மனமே - என் நெஞ்சமே!; ஒரு தேகம் வினைப் போகமே கண்டாய் - ஒருவனுக் குண்டா யிருக்கின்ற உடம்பானது அவன் முற்செய்த இருவகை வினை நுகர்ச்சிப் பொருட்டேயாம்; வினை தான் ஒழிந்தால் - அவ்வுடம்பு அப்பிறப்பிற்கென முகந்து கொண்டு வந்துள்ள இருவகை வினைகளின் பயனை நுகர்ந்து விட்டால் பின்னர்; தினைப்போது அளவும் நில்லாது கண்டாய் - தினைத்துணைச் சிறிதாகிய பொழுதுதானும் உயிரோடு இராதுகாண்; சிவன்பாதம் நினை - இதனியல் பிங்ஙன மிருத்தலான் நின்முன் வினைப் பலனுக வருவனவற்றை நீ ஏற்று நுகருமிப்பொழுதே நங்கள் சிவபெருமானை இடையறுது நினைந்து வணங்குவாயாக!; நினைப்போரை மேவு நினையாரை நீங்கு - அப்பெருமானை நினைத்து வழிபடுகின்ற நல்லோரோடு இணங்கி யிருப்பாயாக! நினையாத மடவோர் கண்ணிற் காணுத தூரத்தே நீங்கி யிருப்பாயாக! இந்நெறியில் நின்றூல் - யான் இங்கு நினக்குக் கூறிய செல்லுதற் கெளிய இந்நெறியிலே செல்வதினை நீ கடைப்பிடியாகக் கொண்டு செல்லுவாயாயின்; உனைப்போல் எனக்கு உற்றவர் ஒருவர் உண்டோ - உன்னைப் போல் எனக்குச் சிறந்த உறவினர் பிறர் யாரும் உளரோ என்பதாம்.

(வி - ம்.) இதன்கண் அடிகளார் உயிர்கட்கு உடம்பு வருகின்ற வரலாறும் அவ்வுடம்பின் நிலையாமையும் தந்நெஞ்சினுக்குக் கூறு மாற்றூல் கூறி, அரிதாகப் பெறப்படுகின்ற இம்மக்கள் யாக்கை பெற்றவர், அது நுகர்ச்சிக்கென முகந்து கொண்டு வந்துள்ள நல்வினை தீவினைகளின் பயனுகிய இன்ப துன்பங்களை ஒரு தலையாக நுகர்ந்தே தீரவேண்டும். ஆதலின் இம்மை வாழ்க்கையில் இன்ப

துன்பங்கள் வருவனவாக; வந்துழி இன்பமாயினும் துன்பமாயினும் இவற்றி னுகர்ச்சியிடையிலேதான் அம்மக்கள் யாக்கையின் பயனை யாம் பெறுமாறு முயலுதல் வேண்டும். முயலாது விடுவோமாயின் வினைமுடிவில் அழிகின்ற இதனாலாம் பயனை யாம் இழந்து விடுவோம். மக்கள் யாக்கையினை லெய்துதற்குரிய பயன் எய்தும்படி முயல்வது தானும் மிக மிக எளிய முயற்சியே ஆகும். எங்ஙனமெனின் சிவ பெருமானை எப்பொழுதும் நினைத்துத் தொழுவதும் அவனை நினைக்கும் அடியாரோடு இணங்கி யிருத்தலும் நினையாத மடவோ ரொடு கூடாதிருத்தலும் ஆகிய இத்துணையேயாம். இவற்றை மட்டும் கடைப்பிடியாக நீ செய்து வருவாயானால் யான் பேரின்பப் பெருவாழ்வு பெறுதலும் ஒருதலை. ஆதலால் நின்னைப் போன்ற உறவினர் பிறர் யாரே எனக்கு உளராதல் கூடும் என்று அறிவுறுத்து கின்றார்.

இதனால் நம்மனோர்க்கு இறைவன் திருவருளைப் பெறுதற்கு மிக மிக எளிய வழியை அறிவுறுத்தினாராகக் கொள்க.

> "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற் குரு"

எனவும்,

> "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு"

எனவும்,

> "மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
> மினநலத்தி னேமாப் புடைத்து"

எனவும், வருகின்ற இம்மூன்று திருக்குறள்களின்பாற் கிடக்கும் அறிவுரைகள் இவ்வொரு திருப்பாட்டின்கண் அடங்கிக் கிடத்தலை ஆய்ந்துணர்க.

இனி, வினைப் போகமே இத்தேகம் வினை ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது என்பதனை,

> "உடற்செயல் கன்மம் இந்த வுடல்வந்த வாறே தென்னின்
> விடப்படு முன்னு டம்பின் வினையிந்த உடல்வி ளைக்கும்
> தொடர்ச்சியா லொன்றுக் கொன்று தொன்றுதொட் டநாதிவித்தின்
> இடத்தினின் மரம்ம ரத்தின் வித்தும்வந் திடையு மாபோல்"

எனவருஞ் சித்தியாரானும் (சுப - கOO) உணர்க. (எ)

பட்டைக் கிழித்துப் பருவூசி தன்னைப் பரிந்தெடுத்து
முட்டச் சுருட்டியென் மொய்குழ லாள்கையின் முன்கொடுத்துக்
கட்டி யிருந்த கனமாயக் காரிதன் காம மெல்லாம்
விட்டுப் பிரியவென் றேலிங்க னேசிவன் மீண்டதுவே.

(இ - ள்.) சிவன் - சிவபெருமானாகிய எம்மிறைவன்; பட்டைக் கிழித்துப் பரு ஊசி தன்னைப் பரிந்தெடுத்து - கிழிக்கத்தகாத பட்டாடை யொன்றனைக் கிழித்து அப்பட்டுத் துண்டிலே; பரிய ஊசி யொன்றனை அன்போடு ஆராய்ந்து எடுத்து வைத்து; முட்டச் சுருட்டி - அதனைச் செறியும்படி சுருட்டி; என் மொய் குழலாள் முன் கையில் கொடுத்து இங்ஙனே மீண்டது - என் மனைவியாகிய செறிந்த கூந்தலையுடையாள் முன் சென்று அதனை அவள் கையிலே கொடுத்து விட்டு இவ்வாறு மீண்டு போனது; கட்டி யிருந்த கன மாயக் காரிதன் காமம் எல்லாம் - அடியேன் மணஞ் செய்து கொண்டு வாழ்ந்திருந்த பெரிய மாயத்தையுடையவளாகிய என் மனைவியின் பால் யான் கொண்டிருந்த காம மயக்கத்தை முழுவதும்; விட்டுப் பிரிய என்றோ - கை விட்டு அடியேன் துறந்துபோக வேண்டு மென்று தன்றிருவுளத்திற் கருதித்தானோ? யாதோ அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) இச் செய்யுள் தொடங்கி ஐந்து செய்யுள்களிலே அடிகளார் ஒரேரெலன "பாரனைத்தும் பொய்யென' உணர்ந்து இல்லற வாழ்வினைக்கை விட்டுத் துறவியானதற்குரிய சூழ்நிலையையும் அப்பொழுது அவர் உள்ளத்தெழுந்த நினைவுகளையும் தாமே திருவாய் மலர்ந்தருளுகின்றார். இவற்றை இந்நூன் முகப்பில் அடிகளார் வரலாற்றின்கண் விரிவாகக் கண்டு கொள்க.

பட்டைக் கிழித்து என்றது கிழிக்கத்தகாத புதிய விலைமிக்க நல்ல பட்டாடையைக் கிழித்து என்பது படநின்றது. அங்ஙனம் பெறலரிய பட்டினைக் கிழித்தது எத்தகைய செல்வமும் அழியு மியல் புடையனவே என்றறிவுறுத்தற்குப் போலும் என்க. பரிந்து என்றது தம்மேல் அன்புற்று என்றவாறு.

முட்டச் சுருட்டுதல் - நன்கு செறியச் சுருட்டுதல். இங்ஙனம் (காதற்ற) ஊசியை முட்டச் சுருட்டியது பயனற்ற பொருள்களைத் தேடி அவற்றை இம்மியும் விடாமற் பாதுகாத்துக் கிடக்கின்ற அறியா மையை அறிவுறுத்தற்குப் போலும். அடிகளார் மனைவியார் பேரழகு வாய்ந்தவர் என்பதும் தம்பாற் பேரன்பு கொண்டவர் என்பதும் உணர்த்தவே 'என் மொய் குழலாள், என்றும் 'கனமாயக்காரி' என்றும் ஓதுவாராயினர் என்க.

தாம் திருமணம் செய்து கொண்ட பேதைமையை நினைந்து திருமணம் செய்திருந்த என்னாது 'கட்டியிருந்த' என இகழ்ச்சி தோன்றக் கூறினர். அடியேனைத் தன் மாயத்தாலே கட்டுப்படுத்தி வைத்திருந்த கனமாயக்காரி எனவும் ஒரு பொருள் தோன்றுத லுணர்க. அடிகளார் தம்மனைவியாரிடம் பெரிதும் அவாவுடையரா யிருந்தமையும், கனமாயக்காரி தன் காம மெல்லாம் என்பதனு லுணரலாம். இவ்வாறு பொருளே மனைவியே வாழ்க்கையே என்று மிகவும் மயங்கிக் கிடந்த அடிகளார் சுட்ட சட்டியைக் கைவிடுமாறு ஒரு நொடிப் போதிற் கைவிட்டுத் துறந்தமையைக் கருதியன்றோ நந் தாயுமான அடிகளார் "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆருந் துறக்கை அரிதரிது" (உடல் பொய் யுறவு - ருஎ) என ஆற்றவும் வியந்து பாராட்டுவாராயினர் என்க. பின்னும் "ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப் பட்டினத் தார்" என்றும் பாராட்டுவர். (எந்நாட் கண்ணி - ரு) (அ)

சூதுற்ற கொங்கையு மானார் கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்ற பூசலுக் கென்செய வாஞ்செய்த புண்ணியத்தால்
தீதற்ற மன்னவன் சிந்தையி னின்று தெளிவதற்கோ
காதற்ற வூசியைத் தந்துவிட் டானென்றன் கைதனிலே.

(இ - ள்.) மானார் சூது உற்ற கொங்கையும் கலவியும் சூழ் பொருளும் – மான் போன்ற விழிகளையுடைய மகளிரின் சூதாடு கருவி போன்ற முலைகளும் அவர் தருகின்ற புணர்ச்சியின்பமும் ஈட்டிய பொருள்களும்; போது உற்ற பூசலுக்கு என்செய ஆம் – தம் இறத்தற்குரிய காலத்தில் நமக்குண்டாகும் கலக்கத்திற்கு என்ன உதவியைச் செய்தற்கு உதவும். அவை அப்பொழுது சிறிதும் உதவாவன்றே. செய்த புண்ணியத்தால் சிந்தையில் தெளிவதற்கோ - அடியேம் முன் செய்த நல்வினை காரணமாக நமது நெஞ்சத்தில் இந்த வுண்மையைத் தெளிந்து கொள்ள வேண்டும் என்று தானோ; தீது அற்ற மன்னவன் - தீமை சிறிது மில்லாத இறைவன்; என்றன் கைதனில் இன்று காது அற்ற வூசியைத் தந்து விட்டான் – எளியேன் கையில் இன்று ஆடை கிழியுங்கால் தைத்தற்குச் சிறிதும் உதவாததாகிய காது அற்றுப்போன இந்த வூசியைக் கொடுத்து விட்டுப் போயினன் போலும் என்பதாம்.

(வி - ம்.) சூதற்ற மானார் எனக்கூட்டி வஞ்சகமுடைய மகளிர் எனலுமாம். சூழ் பொருள் : வினைத்தொகை. போது - இறப்பு வருங்காலம். என்செயலாம் என்றும் பாடம். யாம் செய்த புண்ணியத்தால் என வருவித்தோதுக. இன்று காதற்ற வூசியைத் தந்து விட்டான் எனக் கொண்டு கூட்டுக.

மகளிர் கொங்கையும் அவர் தரும் கலவியும் உயிர்போம் பொழுதுண்டாகும் நம் கலக்கத்திற்கு என்ன உதவி செய்வன ஆகும்! ஒரு சிறிதும் உதவமாட்டா அன்றோ? இந்த வுண்மையை யாம் உணர்ந்து கொள்ளும் பொருட்டே ஆடை கிழியுங்கால் அதனைத் தைத்தற்குச் சிறிதும் பயன்படாத காதற்ற வூசியை இன்று நம் கையிலே இறைவன் தந்து போயினனாதல் வேண்டும் என்று அடிகளார் இறைவன் காதற்ற வூசியைத் தம் கையிற் கொடுத்துப் போயதன் குறிப்பினை ஊகித்துக் கூறியவாறும். (க)

வாதுற்ற திண்புய ரண்ணு மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப்புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே.

(இ - ள்.) நெஞ்சே வாது உற்ற திண்பு உயர் அண்ணுமலையர் - என் நெஞ்சமே! திருநெடுமாலும் நான்முகனும் தம்முள் சொற்போர் புரிந்து அடிமுடி தேடுதற்குக் காரணமான திண்மையாலுயர்ந்த திருவண்ணு மலையில் எழுந்தருளிய நம் சிவபெருமானின்; மலர்ப்பதத்தை போதற்று எப்போதும் புகலு - செந்தாமரை மலர் போன்ற அழகிய திருவடியைக் காண அவன் திருமுன் போய் எப்பொழுதும் வாழ்த்தி

வணங்குவாயாக !; இந்தப் பூதலத்தில் தீதுற்ற செல்வம் என் - இந் நிலவுலகத்திலே தீமையே பெரிதமுடைய பல்வேறு வகைப்பட்ட பொருள்கள்தாம் என்பதென்னை; தேடிப் புதைத்த திரவியம் என் - பாடுபட்டுத் தேடி வறியவர்க்கு மீயாது பிற்றைக் காலத்திற்கு வேண்டும் என்று கருதிப் பிறர் அறியாமற் புதைத்து வைத்திருக்கின்ற பொன்னும் வெள்ளியும் மணியும் பிறவுமாகிய நிதிகள்தாம் என்பதென்னை; காது அற்ற ஊசியும் கடைவழிக்கு வாராது காணும் - நம் பெருமான் நங்கையிற் றந்து விட்ட இந்தக் காதற்றுப்போன ஊசி தானும் நீ இறந்துபோகின்ற இறுதி வழியில் உன்னோடு வரமாட்டாது இந்த உண்மையை நன்றாக உணர்ந்து கொள்வாயாக! என்பதாம்.

திருமாலும் நான்முகனும் செருக்குற்றுச் சொற்போர் செய்த இடம் ஆதலின் அண்ணமலையை வாதுற்ற அண்ணமலை என்றார். திண்பு உயர் அண்ணமலை எனக் கண்ணழித்துக் கொள்க. திண்புயர் அண்ணமலையர் என்பதன்கண் சிறப்பின்மையும் தெரிக. திண்மை மைவிகுதி பெறாது புவ்விகுதி பெற்றமைக்குப் புறனடையா லமைதி காண்க. மேலும் வாது - சொற்போர்க்கன்றி மற்போர் முதலியவற்றைக் குறியாமையும் காண்க. போதுற்று - போய். இகழ்ச்சியால் புகலும் என்றும் காணும் என்றும் பன்மையாற் கூறினர். செல்வம் பெரும்பாலும் தீமை தருமியல்புடைய தென்பதனை ஊசித்துளையில் ஒட்டகம் புகினும் புகும் செல்வன் சுவர்க்கம்புகான் என்ற இயேசு கூறிய வாற்றானும் உணர்க. அல்லதூஉம் 'அல்கா வியல்பிற்றுச் செல்வம்' என்பது பற்றியும் தீதுற்ற செல்வம் என்றாரெனினுமாம்.

இனி, செல்வம் என் திரவியம் என் என்றது, செல்வம் கடைவழிக்கு வாராது என்பானேன் திரவியம் வாராது என்பானேன் இந்தக் காதற்ற வூசியும் வாராது காணும் என்றற்பொருட்டு என்க.

இச் செய்யுள் முன் செய்யுளில் காதற்ற வூசியைத் தந்து விட்டான் என்பதனைத் தொடர்ந்து அடிகளார் தம் நெஞ்சிற்கு அவ்வூசியை எதுவாகக் கொண்டறிவுறுத்த படியாம் என்க. அடுத்துவருஞ் செய்யுளுக்கும் இஃதொக்கும். (க0)

வேதத்தி னுட்பொருள் மண்ணசை மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலை யோசெய்த புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன்போலே வெளிச்சம தாம்பொழுது
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே.

(இ - ள்.) வேதத்தின் உட்பொருள் - வேதங்களிற் கூறப்படுகின்ற பொருள்களின் உட்பொருளா யிருப்பவனும்; மண் ஆசை மங்கையை விட்டுவிடப் போதித்தவன் - (பட்டைக் கிழித்துக் காதற்ற ஊசியைப் பரிந்தெடுத்து முட்டச் சுருட்டி நம் கையில் தந்து விட்டமையாலே) நம்மை மண்ணசை பெண்ணசை பொன்னசை ஆகிய இவற்றை நமக்குணர்த்திய, வன்மொழி கேட்டிலையோ-உறுதி மொழியினை நீ உணர்ந்தா யல்லையோ ? செய்த புண்ணியத்தால் - யாம் முன் செய்த நல்வினையாலே வலிய வந்து அவனறிவுறுத்தபடியே யாம் அம் மூவாசைகளையும் துறந்து; ஆதித்தன் சந்திரன் போலே வெளிச்சமது

ஆம்பொழுது - நம்முயிரானது மூலமலம் நீங்கப்பெற்று ஞாயிறுந் திங்களும் போலே தூய ஒளிப்பிழம்பேயாகி இவ்வுலகிலிருந்து போகும் பொழுது; கடைவழிக்கு - அந்த இறுதியான வழிக்கு உதவியாக; காதற்ற ஊசியும் வாராது காணும் - அப்பெருமான் நம்கையிற் றந்துவிட்ட இந்தக் காதற்றுப்போன ஊசிதானும் வாராது இதனைக் கண்டு கொண்மின் என்பதே இச்செயலால் அவன் நமக்குக் கூறிய மொழியாம் என்பதாம்.

(வி - ம்.) வேதத்தின் உட்பொருளாகிய சிவபெருமான் என்க. சிவபெருமான் இக்காதற்ற ஆசியைத் தந்து விட்டமையாலே அவன் நமக்குணர்த்திய வன்மொழியை நீ கேட்டிலேயோ ? கேட்டிலே எனின் அவன் இச்செயலால் நமக்குணர்த்திய சொல் வருமாறு: நீயிர் முன் செய்த புண்ணியத்தால் மலநீக்கம் பெற்று ஒளியாகும் பொழுது இக்காதற்ற ஆசியும் அக்கடைவழிக்கு வாராது ஆதலின் மண்ணாசை மங்கையாசை பொன்னாசை யாகிய மூன்றையும் துவரத் துறந்து விடுமின் என்பதே அவன் நமக்குணர்த்திய உறுதிமொழி என்றவாறு. மண்ணாசை மங்கையாசை என்றதனால் இனம்பற்றிப் பொன்னாசையும் கொள்க. இனி, பொன்னும் வெள்ளியும் பிறவும் மண்ணேயாதலின் மண்ணாசை என்பதனுள் அஃது அடங்கு மெனினுமாம்.

வன்மொழி - உறுதிமொழி. இனி ஆதித்தன் சந்திரன்போலே வெளிச்சமதாம் பொழுது என்பதற்கு ஞாயிற்றின் ஒளியானது திங்கள் ஒளிபோலத் தோன்றும்படி கண்ணொளி மயங்கி உயிர் விடும்பொழுது எனப்பொருள் கோடலுமாம்.

இனி மண்ணாசை முதலிய மூவாசைகளினும் அழுந்திக் கிடக்கும் தம் மனத்திற்கு அடிகளார் இவ்வாறு பலபடியானும் அறிவுறுத்திய வாறும். (கக)

மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயின்மட்டே
இனமான சுற்ற மயானமட் டேவழிக் கேதுதுணை
தினையா மளவேனு ளளவா கிலுமுன்பு செய்ததவம்
தனையாள வேன்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே.

(இ - ள்.) மனையாளும் மக்களும் வாழ்வும் தனமும் தன் வாயில் மட்டே - என் பேதை நெஞ்சமே கேள்! நீ பற்றிக் கொண்டு கிடக்கின்ற இந்தக் கனமாயக் காரியாகிய நம்மனைவியும் அவளீன்ற மக்களும் இவர்களோடிருந்து நாம் இறுமாந்து வாழ்கின்ற இன்ப வாழ்க்கையும் இந்த வாழ்க்கையின் பொருட்டு நாம் ஈட்டிக் குவித்துள்ள பொருட்குவையும் நாம் இறந்து போகின்ற அந்த இறுதி வழிக்குத் துணையாக வரமாட்டா, இவை எல்லாம் நம் முற்றத்தளவிலேயே நம்மைக் கைவிட்டொழியுங்காண்!; இனம் ஆன சுற்றம் மயானம் மட்டே - நம்முறவினரும் நம் மனைவியின் உறவினரும் என இந்த இருவகையினும் நமக்கினமான சுற்றத்தார்களோ நாம் இறந்து போம் பொழுது சுடுகாடு வரையில் வந்து போவர்; வழிக்குத் துணை எது - சுடுகாட்டிற்கு அப்பால் நீ செல்கின்ற அந்த(க்கடை) வழிக்கு உனக்குற்ற துணையேது? இம்மனைவி முதல் சுற்றமீறாகவுள்ள இவருள்

யாரேனும் ஒருவர் துணை வருவார் உளரோ? கூறுதி; முன்பு செய்த தவம் தினையாம் அளவு எள் அளவு ஆகிலும் - ஆயினும் கூற்றங் கொண்டோடும் அக் கொடுநெறிக்கண் யாம் முன்னரே செய்துள்ள தவமானது தினையளவு எள்ளளவு என்னும்படி மிகச் சிறிதாக இருப் பினும்; தனை ஆள என்றும் பரலோகம் சித்திக்கும் - உன்னைக் குறிக்கொண்டு பாதுகாத்துய்ப்ப ஒரு தலையாக நினக்கு மேனிலையுலக வாழ்க்கை கை கூடுவதாம்; சத்தியம் - என் அறிவுரையை ஐயுறுதே கொள் அது முழு வாய்மைமையே காண்! என்பதாம்.

(வி - ம்.) இனம் - நம்மினமும் மனைவியினமுமாகிய இருவகை இனமும் என்க. வழி - இறந்த பின்னர் உயிர்போகு நெறி. ஏது துணை என்னும் வினு துணையின்மையை வற்புறுத்து நின்றது. தினை யளவு எள்ளளவு என்றது சிறுமைக்கு ஒரு சில எடுத்துக் காட்டிய வாறும். மனைவி முதலியோரும் பிறவும் உயிர்போம் நெறித்துணை யாதவில்லை. சிறிதேனும் தவம் செய்திருந்தால் அஃது ஒரு தலையாக அப்பொழுது துணையாய் வந்து மேனிலை உலகிற் சேர்க்கும், என்ற வாறு. எனவே இம்மனைவி முதலியோரைத் துறந்து தவஞ் செய்தலே செய்யற்பாலது என்றாராயிற்று. ஆசிரியர் திருவள்ளுவனாரும்,

" தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு" —குறள் - உசுசு

என்றறிவுறுத்துதலு முணர்க.

" ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரு மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலைப் போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே."

என்பது (திருமந்திரம் - கஙஎ) திருமூலர் திருமொழி. (கஉ)

அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.

(இ - ள்.) அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே - ஒருவன் இறந்த காலத்து அவன் தேடிவைத்த பொருள்களும் அவற்றுலியன்ற வாழ்க் கையும் வீட்டிலேயே தங்கிவிடும், பின் தொடர்ந்து வரமாட்டா; விழி அம்பு ஒழுக மெத்திய மாதரும் வீதி மட்டே - கண்களினின்றும் நீர் ஒழுக அழுது நிரம்பிய மனைவியையுள்ளிட்ட மகளிர் தாமும் வீதியளவு வந்து நின்று விடுவர், அதற்கு அப்பால் வருதலிலர்; இரு கைத்தலம் மேல் வைத்து விம்மி விம்மி அழும் மைந்தருஞ் சுடுகாடு மட்டே - தம்மிரண்டு கைகளையும் தலைமேலே வைத்துக்கொண்டு துயரம் பொறுமல் விம்மி விம்மி அழுகின்ற அவனுடைய மக்கள் தாமும் சுடுகாடு வரையில் வருகுவர். அப்பால் வருவாரல்லர்; புண்ணியம் பாவம் இருவினையுமே பற்றித் தொடரும் — அவன் அந்தப் பிறப்பிலே

செய்துள்ள நல்வினையும் தீவினையுமாகிய இருவகை வினைகள் மட்டுமே அவனுயிரைப் பற்றிக்கொண்டு சுடுகாட்டிற்கு அப்பால் அவ்வுயிரைத் தொடர்ந்து செல்வனவாம் என்பதாம்.

(வி - ம்.) ஒருவன் இறக்கும்பொழுது அவன் தேடிய பொருள்களும் வாழ்க்கையும் அவன் வீட்டிலேயே தங்கிவிடும், பின்வரமாட்டா; பெரிதும் கண்ணீருகுத்தழுகின்ற மனைவி முதலிய பெண்டிர் வீதி வரையில் வருகுவர், அப்பால் வாரார்; துயர்கொண்டு அழுகின்ற மக்கள் சுடுகாடு வரையில் வருகுவர், அப்பால் வருவார் யாருமிலர். இறந்தவன் செய்த இருவகை வினைகள் மட்டும் அவனுயிரைப் பற்றிக் கொண்டு பின் தொடர்ந்து போய் தத்தம் பயனை மறுமையினும் அவ்வுயிர்க்கு ஊட்டும என்பதாம்.

இருவினையுமே என்றொழியாது புண்ணிய பாவமுமே என்று விதந்தமை அவற்றுள் புண்ணியம் மறுமையில் நன்மையையும் பாவந் தீமையையும் விளைக்கும். ஆதலால் இல்வாழ்வாரும் நல்லறமே நாளும் செய்யக் கடவர் என்றுணர்த்தற் கென்க.

இச் செய்யுளோடு,

"அறவிய மனத்த ராகி யாருயிர்க் கருளைச் செய்யிற்
பறவையு நிழலும் போலப் பழவினை யுயிரோ டாடி
மறவியொன் றுனுமின்றி மனத்ததே சுரக்கும் பால
கறவையிற் கறக்குந் தம்மாற் காமுறப் பட்டவெல்லாம்"

சீவகசிந். —உஅஎஎ.

எனவும்,

"அல்லித்தா ளற்றபோது மறுதநூ லதனைப் போலத்
தொல்லைத்தம் முடம்பு நீங்கத் தீவினை தொடர்ந்து நீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச் சூழ்ந்து புக்குழிப்புக்குப் பின்னின்
றெல்லையி றன்ப வெந்தீச் சுட்டெரித் திடுங்க ளன்றே"

சீவகசிந். —உஅஎக.

எனவும் வரும் திருத்தக்கதேவர் செம்மொழிகளையும் நினைக. (கஉ)

சீயுங் குருதிச் செழுநீர் வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும் புடைவையொன் றில்லாத போது பகலிரவாய்
ஈயு மெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவுபகன்
மாயு மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே.

(இ - ள்.) சீயும் குருதிச் செழுநீர் வழும்பும் செறிந்து எழுந்து பாயும் - அருவருக்கத்தக்க சீழும் குருதியாகிய மிக்க நீரும் வழும்பும் நெருங்கிப் புறப்பட்டுப் பாயா நிற்றற்கு இடனாயதும்; புடைவை ஒன்று இல்லாத போது - புடைவை என்று கூறுகின்ற மறைப்பு ஒன்று இல்லாதிருக்கும் பொழுது; பகல் இரவா ஈயும் எறும்பும் புகுகின்ற

யோனிக்கு - பகலிலும் இரவிலும் ஈக்களும் எறும்புகளும் வந்து புகுதற் கிடனானதுமாகிய மகளிருடைய அல்குலாகிய துளையின் பொருட்டு, இரவு பகல் மாயும் மனிதரை மாயாமல் வைக்க மருந்து இல்லையே - இரவும் பகலுமாகிய எப்பொழுதும் உழன்று அழிகின்ற மாக்களை அவ்வாறு அழியாமல் நன்னிலையிலே நிலைக்க வைப்பதற்கு இப்பேருலகில் ஒரு மருந்தில்லாமற் போயிற்றே! என் செய்தும்; என்பதாம்.

(வி - ம்.) உலகத்து மாந்தர் பெரும்பாலோர் உண்டியும் பெண்டிருமே இவ்வுலகத்தேயுள்ள இன்பப் பொருள் என்று கருதி உழல்பவர் ஆவர். அவ்விரண்டனுள்ளும் பெண்டிர் இன்பமே அவர்களைப் பெரிதும் கவரும் ஆற்றலுடையதாம். ஆகவே அப்பெண்டிர் இன்பமே கருதிப் பெருந்துயர்க்கு ஆளாகுமிவர் அப்பெண்டிரின் இழிதகைமையுடைய அல்குலின் இயல்பைச் சிறிது ஆராயினும் அவரை அருவருத்தொதுக்குவரே - இங்ஙனமாகவும் இப்பெண்டிரின்பத்தாற் கெடுகின்ற மாந்தரை நன்னிலையில் நிற்கச் செய்வது யாராலும் இயலாத அருஞ்செயலாக இருக்கின்றது என்று அடிகளார் வியந்து கூறிய படியாம் இப்பாட்டென்க. (கசு)

சீதப் பனிக்குண்டு சிக்கெனக் கந்தை தினமிரந்து
நீதுய்க்கச் சோறு மனைதோறு முண்டு நினைவெழுந்தால்
வீதிக்கு ணல்ல விலைமாத ருண்டிந்த மேதினியில்
ஏதுக்கு நீசலித் தாய்மனமே யென்றும் புண்படவே.

(இ - ள்.) மனமே - என் நெஞ்சமே! இந்த மேதினியில் - இந்நிலவுலகத்திலே உயிர் வாழ்தற் கின்றியமையாத; சோறு - சோறாகிய உணவோ. நீ தினம் இரந்து துய்க்க மனைதோறும் உண்டு - நீ நாடோறும் பசி வந்துற்ற போதெல்லாம் இரந்து தின்பதற்கு இல்லங்களிலெல்லாம் இருக்கின்றது காண்!; சீதப் பனிக்கு கந்தை சிக்கென உண்டு - மற்றுக் குளிர் செய்கின்ற பனிக்குத் தப்புதற்கோ கந்தைத் துணி உனக்கு எப்பொழுதும் உறுதியாக உண்டென்பதும் அறிகுவை; நினைவு எழுந்தால் வீதிக்குள் நல்ல விலைமாதர் உண்டு - நம்மனோர் நினைக்கக் கூடாத காம வெண்ணம் பற்றி உனக்கு எப்பொழுதேனும் நினைப்புண்டாகி வருத்துமானால்; பரத்தையர் தெருவிலே அழகான விலைமகளிரும் இருக்கவே இருக்கின்றனர்; என்றும் புண்பட ஏதுக்கு நீ சலித்தாய் - இங்ஙனமிருக்க நீ எதன் பொருட்டு நாள்தோறும் புண்படும்படி வருந்துகின்றாய், அதனை எனக்குக் கூறிக்காண்! என்பதாம்.

(வி - ம்.) துறவறத்தினின் றொழுகுவோர்க்கு ஒரு தலையாக வேண்டப்படுவது உணவு மட்டுமே. ஒரோவழி குளிர் முதலிய வற்றைத் தடுத்தற்கு ஆடையும் வேண்டும். இவற்றையன்றி பிற வொன்றும் வேண்டா. இவ்விரண்டும் இவ்வுலகில் மிக எளிதாகவே கிடைப்பனவாம். இனி, துறவோர்க்கு ஒவ்வாத இணைவிழைச்சினை நீ எப்பொழுதேனும் விரும்புவாயானாலும் விரும்புக; அது தானும் இவ்வுலகில் கிடைக்காத தன்று; பரத்தையர் சேரியில் அழகான விலைமகளிர் உளரல்லரோ அவர் வாயிலாய் அவ்விருப்பத்தையும் நிறைவு

செய்து கொள்ளலாமே! இங்ஙன மிருக்க, நீ எப்பொழுதும் கவல்வானேன்? கவலற்க. என்று அடிகளார் தம்மனத்திற்கு ஆறுதல் கூறுகின்றார்.

இதன் கண் துறவிகள் மாதரின்பத்தை நினைத்தலும் கூடாது என்பது தோன்ற நினை வெழுந்தால் வீதிக்குள் நல்ல விலைமாதருண்டு என்றனர். மாதரின்பம் கணிகமாத்திரமே. அது வாழ்க்கைக்கு இன்றியமையாததும் அன்று, என்பது இதனுலறிவுறுத்தபடியாம்.

இனி, பற்றறுத்தலே துறவோர் குறிக்கோளாதலால் மனம் காமங் காழ் கொள்ளின் ஒரோவழி இவ்வாற்ருல் அத்துன்பத்தைத் தவிர்த்துக் கோடலும் பெரியதோர் இழுக்கன்று. என்னை? விலைமாதர்பாற் செல்வோர்க்குப் பற்றுண்டாதல் இல்லையாகலான் என அடிகளார் கருதினர் என்று கோடலுமாம். (கரு)

ஆறுண்டு தோப்புண் டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோ வணமுண்டு நித்தநித்த
மாறுண் டுலாவி மயங்குநெஞ் சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மா விருக்கச் சுகமுமுண்டே.

(இ - ள்.) மயங்கும் நெஞ்சே - என் செய்கோம் என்று மயங்குகின்ற என்பேதை நெஞ்சமே கேள்! ஆறு உண்டு தோப்பு உண்டு நீறு உண்டு அணிவீதி அம்பலம் தானும் உண்டு – நீராடுதற்கும் நீர்பருகுதற்கும் நன்னீரையுடைய ஆறுகள் உள்ளன; இளைப்பாறி இனிதிருத்தற்கு அழகிய சோலைகளும் இருக்கின்றன. மெய்யார அணிந்து மகிழ்வதற்கோ திருநீறு இருக்கின்றது; இறைவனை வலம் வருதற்கும் வீழ்ந்து வணங்குதற்கும் அழகிய வீதிகளும் தில்லைத் திருச்சிற்றம்பலமும் இருக்கின்றன; கந்தை நெடுங் கோவணம் உண்டு - உடுத்துக் கோடற்கும் அரையிற் கட்டிக் கோடற்கும் கந்தையும் நெடிய கோவணத் துணியும் இருக்கின்றன; நித்தம் நித்தம் மாறுண்டு உலாவி மனைதோறும் சென்று சோறு உண்டு – நாள்தோறும் மாறி மாறித் திரிந்து இல்லங்கள் தோறுஞ் சென்று இருகையானும் இரந்து பெற்ற சோற்றைப் பசிதீரத் தின்றதற்பின் உறக்கம் வந்துழி; தூங்கி - புறந் திண்ணையிலே படுத்துறங்கி; பின் சும்மா இருக்கச் சுகமும் உண்டு - பின்னர் எஞ்சிய பொழுதெல்லாம் கருவி கரணங்களோடு கூடாமல் தனித்துச் சும்மா இருந்தால் பேரின்பமும் நமக்குண்டாகுமே; இங்ஙனமிருக்க நீ எற்றுக்கு மயங்குகின்றாய்? என்பதாம்.

(வி - ம்.) இத் திருப்பாட்டுத் தில்லையிற் பாடியதாதல் கூடும், அல்லது தில்லையை நினைந்து பாடியதெனினுமாம்.

இனி அம்பலம் என்பதற்கு ஊர்ப்பொதுவாகிய மன்றம் என்றலுமொன்று. மாறுண்டு உலாவி மயங்கும் மனம் எனச் சொற்கிடந்தவாறே கொண்டு என்னோடு மாறுபட்டு நீ நினைத்தபடி சுற்றி மயங்குகின்ற மனமே எனினுமாம்.

சும்மா இருத்தல் - கருவி கரணங்களோடு கூடாமல் திருவருளிலே மூழ்கியிருத்தல். என்னை?

" கருத்தினுட் கருத்தா யிருந்துநீ யுணர்த்துங்
காரணங்கண்டு ' சும்மாதான் '
வருத்தமற்றிருந்து சுகம்பெறுவண்ணம்
வருந்தினேன் "

எனவும்,

" சும்மா விருக்கச் சுகஞ் சுகமென்று சுருதி யெல்லா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென் பேதைமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தேன்அந் தோவென் விதிவசமே "

எனவும், தாயுமானவரும் திருவாய் மலர்ந்தருளுதலுங் காண்க.

" வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே "

எனவரும் திருமந்திரமும் (கஉக) இக்கருத்திலெழுந்ததேயாம். (கசு)

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யில் ஒடுங்கிவந்தால்
தடுக்கப் பழைய வோருவேட்டி யுண்டு சகமுழுதும்
படுக்கப் புறந்திண்ணை யெங்கெங்கு முண்டு பசித்துவந்தால்
கோடுக்கச் சிவனுண்டு நெஞ்சே நமக்குக் குறைவில்லையே.

(இ - ள்.) நெஞ்சே - என் நெஞ்சமே!; உடுக்க - இடையிலே உடுத்துக் கொள்ளுதற்கும்; குளிர் காற்று வந்தால் கவிக்க - குளிரும காற்றும் வந்தால் உடலைப் போர்த்துக் கொள்ளுதற்கும்; வெய்யில் வந்தால் ஒடுங்கித் தடுக்க - வெய்யில் மிகுதியாக வந்தால் நிழலில் ஒடுங்கித் தடுத்துக் கொள்ளவும் தகுந்த; ஒரு பழைய வேட்டி உண்டு - நம்மிடத்திலே ஒரு பழைய ஆடையும் உளது; படுக்க - உறக்கம் வந்த பொழுது படுத்துறங்கவோ; சகமுழுதும் எங்கு எங்கும் புறந்திண்ணை உண்டு - இவ்வுலக முழுவதுமுள்ள வீடுகள் தோறும் எங்கு பார்த்தாலும் புறந்திண்ணைகளும் உள்ளன; பசித்து வந்தால் கொடுக்கச் சிவன் உண்டு - நீ பசித்துவரும்போதெல்லாம் உணவு கொடுப்பதற்கோ நம் சிவபெருமான் எங்கும் இருக்கின்றனன்; நமக்குக் குறைவு இல்லையே- பின்னர் நமக்கு யாதொரு குறைவும் இல்லையன்றோ? நீ எற்றுக்கு மயங்குகின்றனை? என்பதாம்.

(வி - ம்.) துறவிகளுக்கு இவ்வுலகத்தில் யாதொரு குறைவும் உண்டாகமாட்டாது. குறைவருமாயின் அது அவர் தம் அவாவாலே தான் வருதல் கூடும். அவாவற்றோர்க்குத் துன்பம் வாராதென அடிகளார் இதனால் அறிவுறுத்துகின்றார்.

கவிக்க - போர்க்க வெய்யில் வந்தால் ஆடைநிழலில் ஒடுங்கித் தடுக்க என்பது கருத்து. எல்லாவுயிர்க்கும் எப்பொழுதும் இறைவனே

உணவளித்துக் காப்பாற்றுகின்ருன் என்பார். பசித்து வந்தால் கொடுக்கச் சிவன் உண்டு என்ருர். (கஎ)

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டேன்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டே னும்படி கேட்டுவிட் டோமினிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே.

(இ - ள்.) மனமே கேள்!-என் மனமே கேட்பாயாக!; மாடு உண்டு கன்று உண்டு மக்கள் உண்டு என்று மகிழ்வது எல்லாம் கேடு உண்டு எனும்படி கேட்டு - நமக்கு மாடுகள் பற்பலவுள்ளன என்றும் கன்றுகளும் பலவுள்ளன என்றும் அறிவறிந்த மக்களும் இருக்கின்றனர் என்றும் செருக்குற்று நாம் மகிழ்வதற்கெல்லாம் ஈடாக நமக்கு அவற்ருல் துன்பமும் உண்டு என்று நாம் தெளியும் வண்ணம் கேட்டு நன்குணர்ந்து; விட்டோம் - அவற்றை யெல்லாம் துவரத் துறந்து புறப்பட்டு விட்டோம்; இனி நமக்கு ஓடு உண்டு – இனி நமக்குப் பசி வந்தபோது இரந்துண்ணுதற்கு நம் கையில் ஓடு உளது; கந்தை உண்டு - உடுத்தக் கந்தையும் இருக்கின்றது; உள்ளே ஓத - துறந்தவற்றை மீண்டும் சென்று பற்ருமல் நம்மைப் பாதுகாக்கும் பொருட்டு நம்முள்ளத்தினுடே இடையருது ஓதி மகிழ்வதற்கோ திருவைந்தெழுத்து நம்பாலுளது; நமக்குத் துணை - இனி இத்தவநெறி பிறழாமல் நம்மை அழைத்தேகும் துணையாக; தோடு உண்ட கண்டன் அடியார் உண்டு - தோடுடைய செவியையும் நஞ்சுண்ட மிடற்றினையும் உடைய சிவபெருமான் மெய்யடியார்கள் இருக்கின்றனர். ஆதலால் இனி யாம் இப்பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரை சேர்ந்து வீடுபேறு எய்துதல் ஒரு தலையாம் என்பதாம்.

(வி - ம்.) செல்வத்துட் பாற்செல்வம் சிறந்தமைபற்றி அதற்குக் காரணமான மாடு கன்றுகளை விதந்தெடுத் தோதினர். மாடு கன்றுண்டு என்று மகிழ்வது என்றது சிறந்த செல்வமுடையேம் என்று மகிழ்வது என்னும் கருத்துப்படக் கூறிய படியாம்.

இனி, பெருஞ்செல்வராய வழியும் மக்கட் செல்வம் இல்லை எனின் அச்செல்வமுடைமை சிறவாமையின் பின்னர் அம்மக்கள் உண்டென்று மகிழ்வது என்ருர்; மக்களின்றேல் செல்வஞ் சிறவாதென்பதனை,

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே"

எனவரும் புறப்பாட்டானும் (கஅஅ) உணர்க.

இனிச் செல்வமுடைமையானும் மக்கள் உடைமையானும் அவற்றது நிலையாமையானும் அவற்றை உடையானது யாக்கை இளமை முதலியவற்றின் நிலையாமையானும் உண்டாகின்ற துன்பங்களை நோக்கியும் அவற்றின்பாற் பற்றுவைத்தலானும் கேடுண்டு என்னும்படி கேட்டு - என்றார் எனும்படி - என்று யாம் தெளிந்து கொள்ளுமளவு என்க. விட்டோம் - அவற்றைத் துவரத் துறந்து விட்டோம் என்பதுபட நின்றது. இனி, செல்வம் மக்கள் இன்னோரன்ன வெல்லாம் புறப்பற்றுக்குக் காரணமாதலாலும் பற்றுதற்கியன்ற பொருளைப்பற்றிக் கிடப்போர்க்கு அவற்றால் கேடு வருதல் நன்கு தெளியப்பட்ட உண்மையே ஆதலின் அவற்றில் மகிழ்வதற்குக் கேடுண்டு என்றார். இதனை,

> "பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
> பற்றி விடாஅ தவர்க்கு" —குறள் - ௩௪௭

எனவும்,

> "இயல்பாகு நோன்பிற் கொன்றின்மை யுடைமை
> மயலாகு மற்றும் பெயர்த்து" —குறள் - ௩௪௪

எனவும் வருகின்ற அருமைத் திருக்குறள்களானு முணர்க.

கேட்டு விட்டோம் என்றதனால் திருவருளாலே இவ்வுண்மைகளை ஐயந்திரிபறக் கேட்டு மெய்யுணர்வு கைவரப் பெற்றேம் என்பது பட நின்றது. கேட்டு என்றமையால் "ஒருமொழி யொழிதன்னினங் கொளற் குரித்தே" என்னும் விதிபற்றி ஆராய்தல் தெளிதல் நிட்டை கூடல்களும் கொள்ளப்படும்; படவே அடிகளார் நான்குவகை நெறிகளிலே ஞான நெறியினின்றவர் என்பதும் புலப்படும்: என்னை ?

> "ஞான நூல்தனை யோதல் ஓதுவித்தல்
> நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
> ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
> இறைவனடி யடைவிக்கும் எழின்ஞான பூசை"

எனவரும் சித்தியாருங் (௨௭௯) காண்க.

இனி ஞானக் கேள்வியானே மெய்யுணர்வு கைவந்த மெய்ஞ்ஞானியர்க்கும் அந்த மெய்ஞ்ஞானம் உறுதிப்படுதற் பொருட்டும் பிராரத்த வினையுள்ள துணையும் உடம்பு நிற்றலானும் உடம்பைப் போற்றுதல் இன்றியமையாததாகும். ஆகவே அடிகளார் இனி ஓடுண்டு கந்தையுண்டு இவ்விரண்டுமே இவ்வுடம்பைப் பேணுதற்குப் போதியதாம் என்பதுபட ஓதினர். இனித் திருவைந்தெழுத்தோதுதற்கும் அடியார் கூட்டத்திலிருத்தற்கும் முற்கூறிப்போந்த விளக்கங்கள் உண்மையான் அவற்றைக் கண்டு கொள்க. (௧அ)

மாத்தா னவத்தையு மாயா புரியின் மயக்கத்தையு
நீத்தார் தமக்கொரு நிட்டையுண் டோநித்த னன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர்பற் றற்றவரே.

(இ - ள்.) மா தான வத்தையும் மாயா புரியின் மயக்கத்தையும் நீத்தார் தமக்கு - பெரிய இந்நிலவுலகத்திலுள்ள பொன்னும் மணியு முதலாகிய பொருள்களேயும் மாயையின் விளைவாகிய மகளிரின்பா லுண்டாகும் காம மயக்கத்தையும் துவரத் துறந்து விட்ட பெரி யோர்க்கு; ஒரு நிட்டை உண்டோ - இப்பற்றறுதியினும் வேருக மேற்கொள்ள வேண்டிய ஆழ்தல் ஒன்றுளதேயோ? இல்லையா மன்றே? ஆகவே; பற்றற்றவர் நித்தன் அன்புகொண்டு - பற்றற்றவ ராகிய அத்தகைய சான்றோர் இயல்பாகவே இறையன்பு மீதூரப் பட்டு; வேர்த்தால் குளித்துப் பசித்தால் புசித்து விழிதுயின்று - அவ் வுடல் முகந்து கொண்டுள்ள பிராரத்தவினை யொழியுந் துணையும் தம்முடம்பு வேர்த்துழி நீரிற் குளித்தும் பசிவந்துற்றுழி உணவுண்டும் உறக்கம் வந்துறும்போது உறங்கியும்; பார்த்தால் உலகத்தவர் போல் இருப்பர் - பிறர் பார்த்தால் அவர் பார்வைக்கு இவ்வுலகத்திற் பற்றோடு வாழுகின்ற மாந்தர் போலவே காணப்படுவர்; தமக்கெனச் சிறப்பாக வேறுபாடுடையராகக் காணப்படார் என்பதாம்.

(வி - ம்.) பற்றற்ற துறவோர் தம்முளத்தால் மாறுபட்டிருப்பார் உடம்பினல் உலகத்து மாந்தர் போலவே காணப்படுவர். தமக்கெனச் சிறப்பாக வேடம் ஒன்றும் புனைந்திரார் என்றவாறு.

மாத்தானம் - என்பது மாயிருஞாலம் என்பது போல இந்தப் பேருலகத்தைக் குறிப்பதாகவே கோடலே அமையும். இதற்குத்தேவ லோகம் என்றுரைப்பாரு முளர். அவ்வுரை மிகையாம். வத்து- பொருள் - அவை பொன் மணி நெல் முதலியனவாகவும் மணி மாட மாளிகையும் பிறவுமாக எண்ணிறந்தனவாம்.

நிட்டை - இறைவன் திருவருளில் சிறிதும் செருக்கின்றி அழுந்தி யிருத்தல்.

இனி, பற்றறுதியே வீடுபேறுமாகலின்-பற்றற்றவர் இயல்பாகவே வீடுபேறெய்துதலின் அவர்க்கு அதனின் வேருகச் செய்யுமொரு செயலுமில்லை யென்பார், "நீத்தார் தமக்கு ஒரு நிட்டையுண்டோ" என்றார். அற்றது பற்றெனின் உற்றது வீடு எனவரும் ஆழ்வார் திரு வாக்கும் காண்க. இன்னும்,

"குறித்தடியி னின்றட்ட குணமெட்டுச் சித்தி
கோகனதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்
வெறுத்துநெறி மறுவகையும் மேலொடுகீ ழடங்க
வெறும்பொயென நினைந்திருக்க மேலோடுகீ ழில்லான்
நிறுத்துவதோர் குணமில்லான் தன்னையொரு வர்க்கு
நினைப்பரியான் ஒன்றுமிலான் நேர்படவந் துள்ளே
பொறுப்பரிய பேரன்பை அருளியதன் வழியே
புகுந்திடுவன் எங்குமிலாப் போகத்தைப் புரிந்தே"

எனவருஞ் சித்தியாரையும் (சுப - உ௬எ) காண்க.

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்"

என்பது மது. (குறள் - ௩௪௯.) (௬௧)

ஒன்றென் றிருதெய்வ முண்டேன் றிருவுயர் செல்வமெல்லா
மன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பு
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே.

(இ - ள்.) மனமே - என் நெஞ்சமே கேள்; தெய்வம் உண்டு என்று இரு - கடவுள் உண்டு என்று நம்பியிரு; ஒன்று என்று இரு - அக்கடவுள்தானும் ஒன்றேயாகும் பலப்பல அன்று என்று தெளிந்து கொண்டிருப்பாயாக; உயர் செல்வம் எல்லாம் அன்று என்று இரு - இவ்வுலகத்தோர் உயர்வாக மதிக்கின்ற செல்வங்கள் எல்லாம் நிலையுதலுடையன அல்லவாகலின் வெறும் பொய்யென்றே நன்குணர்ந்திருப்பாயாக !; பசித்தோர் முகம்பார் - நின்பால் பசியால் வந்தோருடைய முகத்தைப் பார்த்திரங்கி அவர்க்கு உணவு கொடுப்பாயாக !; நல்அறமும் நட்பும் நன்று என்று இரு - அன்புடைமை காரணமாகச் செய்கின்ற உண்டி கொடுத்தல் முதலிய சிறந்த அறச்செயல்களும் பிறரோடு நட்புக் கோடலுமாகிய இச்செயல்கள் பெரிதும் நல்ல செயல்களே என்றுணர்ந்து கொள்; நடு நீங்காமல் - நடுவுநிலையினின்றும் பிறழாமல்; நமக்கு இட்டபடி - இறைவன் உனக்களித்தவற்றைக் கொண்டு இவ்வளவே கடவுள் நமக்களித்ததென்று என்று கருதி அமைதியாக இருப்பாயாக !; இது உனக்கு உபதேசம் - இங்குக் கூறியவைகள் அனைத்தும் யான் உனக்கறிவுறுத்தும் அறிவுரைகள் காண் ! என்பதாம்.

(வி - ம்.) இந்த மானிட விலங்கின் நெஞ்சிலே கடவுள் என்னும் ஓரெண்ணம் புகுந்ததே மிகமிக வியத்தகு நிகழ்ச்சியாகும். அக்கடவுள் தானும் மக்கள் மனமொழிகளைக் கடந்த பொருளாகலின் அதனை உண்டென்பார்க்கு அஃதுள் பொருளாகவே இருக்கும், அங்ஙனமே இல்லை யென்பார்க்கும் இல்பொருளாகவே காணப்படும். இங்ஙனமிருத்தலால் நாம் செய்த தவப்பயனாக யாம் கடவுள் உண்டென்றே நம்புகின்றோம். இல்லை யென்பார் மொழிகளைக் கேட்டு நீயும் கடவுள் இல்லை போலும் என்று எண்ணி விடாதே என்பார் தெய்வம் உண்டு என்று இரு என்றார்.

இனி அவ்வாறு தெய்வம் உண்டென்று நம்புமிடத்தும் அத்தெய்வத்தின் உருவம் பெயர் செயல் இன்னோரன்ன வெல்லாம் பலவேறு வகைப்பட்டிருத்தலாலே அவ்வாறு பலவேறு தெய்வங்கள் உண்டென்று எண்ணற்க. இவை யெல்லாம் காலம் இடம் சமயம் சாதி மொழி முதலியவற்றின் வேற்றுமை காரணமாக வந்த வேறுபாடுகளே யன்றி வாய்மையில் ஒரு தெய்வமே உண்டு என்று தெளிந்து கொள் என்பார் தெய்வம் ஒன்றென்றிரு என்றார். இதனை,

“ ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் ”

எனவரும் திருமூலர் திருமந்திரத்தானும்,

“ யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர் ”

எனவரும் சித்தியாரானும் (ககரு) உணர்க.

இனி, "சாட்டையிற் பம்பர சாலம் போலெல்லாம் ஆட்டுவான் இறையென" நன்குணர்ந்து பற்றற்றவர்க்கு "வீட்டறம் துறவறம் இரண்டும்" ஒப்பனவாதலின் பற்றற்று வீட்டறத்தின் நிற்பார்க்குக் கூறுதற்கு அடிகளார் "பசித்தோர் முகம்பார்" என்றருளிச் செய்வாராயினர். அறங்களுட் டலைசிறந்தமைபற்றிப் பசித்தோர் முகம்பார்த்து அவர்க்குண்டி கொடுத்தலைத் தனித்தெடுத்தோதி ஏனைய அறங்களை நல்லறமும் நட்பும் நன்றென்றிரு என்கின்றனர். அல்லதூஉம் நல்லறமும் நட்பும் வீட்டறந் துறவறம் இரண்டற்கும் ஒக்க ஆக்கமாதல்பற்றி அங்ஙனம் கூறினர் என்று கோடலுமாம். இனித் துறவறத்தார் தாமும் தாமிரந்து வரும் சோற்றைப் பசித்தோர் முகம் பார்த்து அவர்க்கு வழங்கி யுண்டலும் வேண்டுமாதலின் அதுவும் துறவோர்க்கும் பொருந்துமாறும் உணர்க. துறந்தோர் அவ்வாறு பசித்தோர் முகம் பார்த்து அவரொடு பகுத்துண்ணுதலை,

" ஐயக் கடிஞை கையி னேந்தி
மையறு சிறப்பின் மனைதொறு மறுகிக்
காணுர் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றேர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி
யுண்டொழி மிச்சிலுண் டோடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளும் காவலன் ருனென் "

எனவரும் மணிமேகலையானும் (கஅ - க0கூ - ககடு) உணர்க.

அல்லதூஉம் திருஞான சம்பந்தர் சிவனடியார்க்கு உண்டி வழங்குதற் பொருட்டுத் திருவீழிமிழலைப் பெருமான் பால் "வாசி தீரவே காசு நல்குவீர்" எனத் தொடங்கிப் பதிகம் பாடுமாற்ருனும் துறவோரும் பசித்தோர் முகம் பார்த்துப் பரிந்து உணவளிக்க வேண்டும் என்பது வலியுறுதலுணர்க.

நடு நீங்காமல் என்றது பகை நட்பு நொதுமல் என்னும் முத்திறத்தார்பாலும் நீதிபற்றி ஒப்பநிற்கும் நிலைமை. இதுவும் துறவோர்க்கு வேண்டும். என்னை? இவன் நம் சமயத்துத் துறவோன் அவன் வேறு மதத்துத் துறவோன் என விருப்பும் வெறுப்புமின்றி ஒழுகுதல் வேண்டுமாகலின் என்க.

நமக்கிட்டபடி என்று என்றிரு என்றது பிறர் ஆக்கம் கண்டு பொருமை யுருமைக்கும் உள்ளதே போதும் என அமைதிகோடற்கும் அறிவுறுத்தபடியாம். இத்திருப்பாட்டிற் கூறியவற்றைக் கடைப்பிடித்தொழுகுவோர் வீடு பேறெய்துதல் ஒருதலையாகலின் உனக்கு இஃது உபதேசம் என்ருர் என்க. இது: சாதியொருமை. (உ0)

நாட்டமேன் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்ம
லாட்டமேன் றேயிரு பொல்லா உடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமேன் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமேன் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே.

(இ - ள்.) நெஞ்சே சற்குரு பாதத்தை நாட்டம் என்று இரு நம்பு - என் நெஞ்சமே உண்மையான நல்லாசிரியனுடைய திருவடிகளை எய்துதலே உன்னுடைய ஒரே குறிக்கோள் என்று உறுதியாக இரு, அந்நல்லாசிரியன் உனக்கறிவுறுத்த அறிவுரைகளை ஐயுறாமல் உண்மை யென்றே நம்புவாயாக !; பொல்லா உடலை பொம்மலாட்டம் என்று இரு - இந்தப் பொல்லாங்கு மிக்க உடலின் செயலைத் தோற்பாவைக் கூத்துப் போல்வதென்றுணர்ந்து கொண்டிரு; சுற்றத்தை அடர்சந்தைக் கூட்டம் என்று இரு - உன் சுற்றத்தார் கூட்டரவினை நான்கு திசைகளினும் நின்று வந்து ஓரிடத்தே நெருங்குகின்ற சந்தையிற் கூடுவார் கூட்டரவு போன்றே கருதியிரு; வாழ்வை- உன் வாழ்நாளை; குடம் கவிழ் நீர் ஓட்டம் என்று இரு - குடத்தைக் கவிழ்த்துழி அதனினின்று இடையறாது ஓடிக் கழிகின்ற நீரினது ஓட்டம் போல்வ தென்றுணர்ந்திரு; இது உனக்கு உபதேசம் - இவையும் யான் உன் நலங்கருதிக் கூறிய அறிவுரைகளே யாம் என்றதாம்.

(வி-ம்.) சற்குரு-நல்லாசிரியன். மெய்யுணர்த்துவோர் யாவரேயாயினும் அவர்பால் இறைவனே நின்று அவரைக் கருவியாகக் கொண்டுணர்த்துவானாகக் கருதவேண்டும். இங்ஙனம் கருதுவார்க்கு மெய்யுணர்த்தும் நல்லாசிரியன் சிவபெருமானே ஆதல் தேற்றம். எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்பது மதம். ஆதலால் சற்குருவாக வந்து அல்லது ஒருவன் உண்ணின்று மெய்யுணர்த்தும் இறைவனடியை எய்துவதே நினது குறிக்கோளாகக் கொண்டிரு என்பார் குரு பாதத்தை நாட்டம் என்றேயிரு என்றார். நாட்டம் எனினும் குறிக்கோள் எனினும் ஒக்கும்.

நல்லாசிரியரின் சொல்லில் நம்பிக்கை பிறவாவிடின் அச்சொற்படி நிற்றலும் பயன்கோடலும் கூடாவாகலின், சற்குரு மொழியை நம்பு என்றார். மொழியை என்னும் செயப்படு பொருள் வருவித்தோதுக.

பொம்மலாட்டம் - பொம்மையாட்டம் என்பதன் மரூஉ. இதனைப் பாவைக்கூத்தென்றும் வழங்குப; இதனை,

"தோற்பாவை கூத்துந் தோல்லை மரப்பாவை இயக்க முஞ்சேர்த்
தேர்ப்பாரிற் செலவும் வேறாய்ச் செலுத்துவோர் செய்தி தானும்
பார்ப்பாய வேடங் கட்டி ஆடுவார் பரிசு போலும்
ஆர்ப்பாய காயந் தன்னை ஆன்மாவின் றாட்டு மாறே"

—சுப. - உகச

எனவருஞ் சித்தியாரினும் இவ்வுவமை கூறப்படுதலறிக.

ஈண்டுப் பட்டினத்தடிகளார் இறைவனே உண்ணின்று செய்தும் செய்வித்தும் வருவதனால் உடலின் இயக்கத்தைக் கூத்தாட்டுவோன் கயிற்றிற் பிணித்து ஆட்டுவிக்குமாறு பாவையியங்குதல் போன்று இவ்வுடலும் இறைவன் ஆட்ட ஆடுகின்றதென்பார் உடலைப் பொம்மலாட்டம் என்றிரு என்றார். உடல்: ஆகுபெயர்; உடலின் செயலை என்க. மணிவாசகப் பெருமானும்,

"அறம்பாவம் என்னும் அருங்கயிற்ருற் கட்டிப் புறந்தோல் போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி, மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய விலங்கு மனம்" என்றும் "யானென தென்றவரவரைக் கூத்தாட்டுவானுகி" என்றும் ஓதியருளுதல் காண்க.

இனிச் சந்தைக்கு வருவோர் பல திசைகளினின்றும் வந்து கூடி ஒருவர்க்கொருவர் அண்ணன் என்றும் தம்பி என்றும் இன்னோரன்ன முறை கூறி அளவளாவி அவரவர் வந்த காரியம் முடியுந்துணை நின்று அது முடிந்தவுடனே ஒருவர்க்கொருவர் விடை பெருமலே தாம் தாம் வந்த வழியிலே போதல்போன்று சுற்றத்தாரும் தாந்தாம் செய்த வினைக் கீடாகக் கேளாதே வந்து கிளைகளாய் இற்ருேன்றி வாளாதே போதலின் சுற்றத்தை அடர்ந்த சந்தைக் கூட்ட மென்றேயிரு என்றறி வுறுத்தார். இவ்வாறே நந்தாயுமானவரும்,

> " தந்தை தாய் தமர்தார மகவென்னும் இவையெலாம்
> சந்தையிற் கூட்டம் இதிலோ
> சந்தேகமில்லை" —தேசோமயா - ௩.

எனவும்,

> " தந்தைதாய் மகவுமனை வாழ்க்கை யாக்கை
> சகமனைத்தும் மௌனியருட் டழைத்த போதே
> இந்திரசாலங் கனவு கானனீரா
> யிருந்ததுவே யிவ்வியற்கை என்னே! என்னே!
> —தந்தை - க.

எனவும் ஓதுதலுணர்க.

வாழ்வு என்பதன்கண் சிறப்பாக வாழ்நாளும் இளமை பொருள் நுகர்ச்சி முதலியனவும் அடங்கும்.

நொடி நொடியாகப் பிறந்த நாள் தொட்டு வாழ்நாள் இடையருது கழிந்து போதலின் குடங் கவிழ்நீரை உவமை எடுத்தார். இந்த நிலை யாமை உணர்வார்க்கல்லது மெய்யுணர்வு பிறவாமையின் இங்ஙனம் விதந்தோதினர்.

இனி, சற்குருவே இறைவனுவான் என்பதனை,

> "பரம்பிரமம் இவனென்றும் பரசிவன்தா னென்றும்
> பரஞானம் இவனென்றும் பராபரன்தா னென்றும்
> அரன்தருஞ்சீர் நிலையெல்லாம் இவனே என்றும்
> அருட்குருவை வழிபடவே அவனிவன்ரு னுயே
> இரங்கியவா ரணம்யாமை மீனண்டம் சினையை
> இயல்பினுெடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
> பரிந்திவைதா மாக்குமா போல்சிவமே யாக்கும்
> பரிசித்தும் சிந்தித்தும் பார்த்துந் தானே"

எனவருஞ் சித்தியாரானும் (சுப - ௬உஅ) உணர்க.

இனி, சற்குரு என்றமையால் பொய்க்குருவைக் கொள்ளலாகா தென்பதும் போந்தமை யறிக.

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே" —கசுஅ0

என்பது திருமந்திரம். (உக)

என்சேய லாவதி யாதோன்று மில்லை யினித்தேய்வமே
உன்சேய லேயேன் றுணரப்பேற் றேனிந்த வூனேடுத்த
பின்சேய்த தீவினை யாதோன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்சேய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே.

(இ - ள்.) தெய்வமே இனி என் செயல் ஆவது யாது ஒன்றும் இல்லை - இறைவனே! இப்பொழுது அடியேன் என்னுடைய செயலாக நிகழ்வது யாதொரு செயலுமே இல்லை என்றும்; உன் செயலே என்று உணரப் பெற்றேன் – இவ்வுலகின்கண் நிகழும் செயலனைத்தும் உன்னுடைய செயலே என்றும் நன்கு உணரும் பேறு பெற்றுள்ளேன்; இந்த ஊன் எடுத்த பின் செய்த தீவினை யாது ஒன்றும் இல்லை - அடியேன் இந்த மானிட யாக்கை எடுத்த இப்பிறப்பிலே என் நெஞ்சறியச் செய்த தீவினை யாதொன்றும் இல்லை; இங்ஙனம் மூண்டது - அங்ஙன மிருப்பவும் (அரசனாற் கள்வன் என்று கருதப் பட்டு அவன் கட்டளையாலே அடியேன் கழுவேறும்படி) இவ்வாறு நிகழ்ச்சி தோன்றியதற்குக் காரணம்; பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ - அடியேன் இப்பிறப்பெடுத்தற்கு முன்பு கழிந்த பிறப்புக் களிலே செய்த தீவினையோ யாதோ அறிகின்றிலேன். எதுவாயினும் நின் திருவுளப்படி நிகழ்வதாக! என்பதாம்.

(வி - ம்.) இத்திருப்பாட்டு அடிகளாரைக் கள்வன் என்று கருதி அரசன் கழுவேற்றுமாறு கட்டளையிட்டபொழுது கொலைவினைஞர் கழுமரத்தருகே அடிகளாரைக் கொணர அடிகளார் அக்கழுமரத் தைக் கண்டுழிப் பாடினர் என்றும் அப்பொழுது அக்கழுமரந் தீப்பற்றி எரிந்து சாம்பலாயிற்று என்றும் கூறுவர். இச் செய்தியை நூன் முகப்பில் அடிகளார் வரலாற்றில் விரிவாகக் கண்டு கொள்க.

எல்லாம் இறைவன் செயலே என்றுணர்வதே ஒரு பெரும் பேறுகும் என்பது தோன்ற 'உன் செயலே என்றுணரப் பெற்றேன்' என்றனர். இங்ஙனம் உணர்தலே மெய்யுணர்தல் என்று கூறுவர். இதனை,

"யான் செய்தேன் பிறர்செய்தார் என்னதியான் என்னும்
இக்கோணை ஞானவெறி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்தான் நேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித் திட்டோடும்

நான்செய்தேன் எனுமவர்க்குத் தானங் கின்றி
கண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம்
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பி னல்லால்
ஒருவருக்கும் யானென திங் கொழியா தன்றே"

—சுப - ௩0௫.

எனவருஞ் சித்தியாரானும் உணர்க.

இனி, ஒரு பிறப்பின்கண் ஒருவன் குறிக்கொண்டு தீவினை சிறிதும் செய்யாமல் எல்லாம் அவன் செயலே என்னும் மெய்யுணர்வு பிறந்தொழுகு மிடத்தும் அவன் முற்பிறப்பிற் செய்த வினைகள் தத்தம் பயனை ஊட்டாமற் கழிதலருமையாம் ஆதலால் அடிகளார் அப் பிறப்பிலே தம் நெஞ்சறிந்த தீவினை யாதொன்றும் செய்யாதிருக்கவும் தீவினையாளர்க்கே வருதற்குரிய கழுவேறுதல் தமக்கெங்ஙனம் வந்த தென்று ஆராய்ந்து இது நாம் முற்பிறப்பிற் செய்த தீவினைப்பயன் என்று தெளிந்து கொள்வாராயினர். இவ்வுலகின்கண் இங்ஙனம் நல்லோர்க்கும் கேடு வருதலுண்டென்பதனையும் அது பழவினைப்பயன் என்றுணர வேண்டும் என்பதனையும் ஆசிரியர் திருவள்ளுவனாரும்,

"அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்"

—குறள் - ககசு.

எனவருந் திருக்குறளா லறிவுறுத்துப் போந்தார். இவ்வருமைத் திருக்குறட்கு நல்லுரை வகுத்த ஆசிரியர் பரிமேலழகர்தாமும்,

"இம்மைச் செய்தன யானறி நல்வினை
யும்மைப் பயன்கொல் ஒருதனியுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது'

என நினைக்கப்பட்ட வாறறிக" எனச் சிலப்பதிகாரத்தில் மாடலமறை யோன் கோவலற்குக் கூறியதனை (அடைக்கல - கூக - கூ௩) எடுத்துக் காட்டியதும் காண்க.

'இங்ஙனே வந்து மூண்டது' என்றது தாம் கழுவேறுமாறு வந்துற்ற நிகழ்ச்சியினை என்க. (உஉ)

திருவேடமாகித் தெருவிற் பயின்றெனைத் தேடிவந்து
பரிவாகப் பிச்சை பகருமென் றூனைப் பதம்பணிந்தேன்
கருவாகு மேதக் கடற்கரை மேவக் கருதுமென்னை
உருவாக்கிக் கொள்ளவல் லோவிங்ங னேசிவ னுற்றதுவே.

(இ - ள்.) சிவன் - சிவபெருமான்; திருவேடம் ஆகித் தெருவிற் பயின்று எனைத் தேடிவந்து - அழகிய அடியார் கோலங்கொண்டு பிச்சை எற்றற்காகத் தெருவிலே திரிந்து பிச்சை கிடைக்கப் பெறு தான் போல எளியேனைத் தேடி என்னிடத்தே வந்து; பிச்சை பகரும் என்றூனை - நும்முடைய பிச்சைச் சோற்றினை எனக்கும் பகிர்ந்து

கொடும் என்று இரந்து நின்றவனைக் கண்டு; பதம் பணிந்தேன் - அங்ஙனம் வந்து நின்றவன் இறைவனே என்றுணர்ந்து அடியேன் அவனுடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினேன்; இங்ஙன் உற்றது - இறைவன் இவ்வாறு அடியேன்பால் எளி வந்தருளியது; கரு ஆகும் ஏதக்கடற்கரை மேவக் கருதும் என்னை - பிறவி எடுத்துழலுதற்கிடனான பெரிய கடலினின்றும் கரையேறுதற் கெண்ணியிருக்கின்ற எளியேனையும்; உருவு ஆக்கிக்கொள்ள அல்லோ - தன்னுருவாக்கிக் கோடற் பொருட்டே யன்றோ? என்பதாம்.

(வி - ம்.) இச் செய்யுளும் அடிகளார் வரலாற்றில் நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியே என்பர். அடிகளார் பிச்சை யேற்றுண்ணப்புகுமளவில் இறைவனும் ஒரு துறவிக் கோலத்தே வந்து பிச்சை யேற்றும் அது கிடைக்கப் பெறாதார் போல அடிகளாரிடம் வந்து நீயிருண்ணப் போகும் பிச்சைச் சோற்றினை எமக்கும் பகிர்ந்தளிப்பீரென்று இரந்தனராக, அப்பொழுது அடிகளார் அத்துறவியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கிப் பிச்சையைப் பகுத்துக் கொடுப்புழி அத்துறவி மறைந்தருளினர். ஆகவின் இவ்வாறு வந்தவர் சிவபெருமானே என்று துணிந்த அடிகளார் இறைவன் தமக்கிவ்வா றெளிவந்து காட்சி நல்கி மறைந்தமை எளியேனையும் ஆட்கொள்ளக் கருதியே என்று உவந்து கூறுகின்றார் என்க.

கருவாகும் ஏதக்கடலின் கரைமேவக் கருதும் என்னை என்க. பிறப்புறும் அல்லல் மிக்க பிறவிக் கடலினின்றும் கரையேறக் கருதியிருக்கின்ற அடியேனை என்பது கருத்து.

இறைவன் உயிர்களை உய்விக்குங் காலத்தே தன்றிருவுருவோடு இரண்டறக் கலந்து கொள்ளும்படி செய்தலால் என்னை உருவாக்கிக் கொள்ள அல்லவோ சிவன் இங்ஙனே உற்றது என்றார். இதனை,

"இந்தனத்தின் எரிபாலின் நெய்பழத்தின் இரதம்
எள்ளின்க ணெண்ணெயும்போல் எங்குமுள னிறைவன்
வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவே யருளும்
மலமறுப்போ ரான்மாவின் மலரடிஞா னத்தாற்
சிந்தனைசெய் தர்ச்சிக்கச் சிவனுளத்தே தோன்றித்
தீயிரும்பைச் செய்வதுபோற் சீவன் றன்னைப்
பந்தனையை யறுத்துத்தா னாக்கித்தன் னுருவப்
பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே"

எனவருஞ் சித்தியாரானும் (சுப - கூ0கூ) உணர்க. (உகூ)

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணருடன்
கிட்டே னவருரை கேட்டுமி ரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்க மற்றுவிட் டேன்றொல்லை நான்மறைக்கு
மெட்டே னெனும்பர மென்னிடத் தேவந்திங் கெய்தியதே.

(இ - ள்.) தொல்லை நால் மறைக்கும் எட்டேன் எனும் பரம் இங்கு என்னிடத்தே வந்து எய்தியது - பழைய நான்கு வேதங்

களுக்கும் அகப்படேன் என்று அவற்றிற்கும் அப்பாலாகின்ற இறைப் பொருள் இப்பொழுது எளியேன் உள்ளத்தினூடேதானே வந்து குடி கொண்டு விட்டது; மெய் கெடாத நிலை தொட்டேன் - அம்மெய்ப் பொருள் என்னுள்ளத்தினின்றும் மறைந்தொழியாத உயர்ந்ததொரு நிலைமையினையும் அடியேன் இப்பொழுது எய்தி விட்டேன்; சுக துக்கம் அற்றுவிட்டேன் - ஆதலால் இந் நிலவுலகத்தார்க்கியன்ற இன்ப துன்பங்களும் இல்லையாய் ஒழியப் பெற்றேன்; உலகம் விரும் பேன் - எனவே இனி யான் இவ்வுலக வாழ்வினைச் சிறிதும் விரும்புவே னல்லேன்; இருவினை வீணருடன் கிட்டேன் - பிறவிக்குக் காரண மாகிய நல்வினை தீவினை என்னும் இருவகை வினைகளையும் செய்துழல் கின்ற பயனற்ற மாக்களுடன் சேர்கிலேன்; அவர் உரை கேட்டும் இரேன் - அம்மாக்கள் கூறுகின்ற மயக்க மொழிகளைக் கேட்டிருத் தலும் செய்யேன்; என்பதாம்.

(வி - ம்.) உலகம் - ஆகுபெயர்; உலகத்துச் சிற்றின்பம். இரு வினை - நல்வினை தீவினைகள். நல்வினையும் பிறப்பிற் கேதுவாதலின் இருவினை வீணர் என்றார். "இருள்சேர் இருவினையும் சேரா" என வள்ளுவனாரும் ஓதுதல் காண்க. இதற்குப் பரிமேலழகர் கூறும் விளக்கமுங் காண்க. "தவம் செய்வார் தங்கருமம் செய்வார் மற்றல் லார் அவஞ் செய்வார் ஆசையுட் பட்டு" (உசசு) என்பது பற்றி இரு வினை வீணர் என்றார். கிட்டேன் என்றது அவர் கண் காணுந் தூரத்தே செல்வேனல்லது அணுகேன் என்பது தோற்றி நின்றது.

மக்கள் மனம் அவர் பயிலும் இனத்தினியல்பாகத் திரிதலால் வீணருடன் கிட்டேன் என்றொழியாது அவருரை கேட்டுமிரேன் என்றார்.

இதனை,

"மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை—அறப்பித்துப்
பத்தர் இனத்தராய்ப் பரனுணர்வி னாலுணரும்
மெய்த்தவரை மேவா வினை"

—சிவஞானபோத வெண்பா-எகூ.

என்பதனாலும்,

"ஈசனுக்கன் பில்லார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும்அன் பில்லார்
பேசுவதென் அறிவிலாப் பிணங்களை நாம் இணங்கிற்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ
ஆசையொடும் அரனடியார் அடியாரை யடைந்திட்
டவர்கருமம் உன்கரும மாகச் செய்து
கூசிமொழிந் தருள்ஞானக் குறியி னின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே"

எனவருஞ் சித்தியாரானும் (சுப - கஉக) உணர்க.

இனி மெய் கெடாத நிலைதொட்டேன் - யான் மெய்யுணர்வு இனி அழியாத உயர்நிலையை எய்திவிட்டேன் என்றவாறு. அஃதாவது - இறைபணி நிற்றல் என்க. என்னை,

“ அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகும்
ஔடதமந் திரமுடையார்க் கருவிடங்க ளேறு
எங்கித்தைக் கன்மமெல்லாஞ் செய்தாலும் ஞானிக்
கிருவினைகள் சென்றணையா முற்செய்வினை யிங்குத்
தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன்வினை தவிர்ந்த
சக்கரமுங் கந்தித்துச் சுழலு மாபோல்
மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கும் எல்லா
மலங்களும்பின் காயமொடு மாயு மன்றே”

எனவருஞ் சித்தியாரானும் (சுப - ௩0௧) உணர்க.

“ எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண் டேநின்றார்
விட்டார் உலகமென் றுந்தீபற
வீடேவீ டாகுமென் றுந்தீபற” (உச)

எனவரும் திருவுந்தியாருமிக் கருத்துடையதே யாம்.

சுகதுக்கம் என்றது அலைபோன்று மாறி மாறி வருகின்ற இவ்வுலகத்தின்பதுன்பங்களை. மெய்ப்பொருள் ஒருவரால் தேடிக் காணத்தகுந்த பொருள் அன்றாகலான் அதன் செயலாக்கிப் பரம் இங்கு என்னிடத்தே வந்தெய்தியது என்றார்.

என்னை ?

“ ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற இடஞ்சிவமாம்—நாட்டற்று
நாடும் பொருளனைத்து நாண விதமாகத்
தேடுமிட மன்று சிவம்”

எனவருந் திருக்களிற்றுப்படியாரானும் (உக) உணர்க. (உச)

அட்டாங்க யோகமு மாதார மாறு மவத்தையைந்தும்
விட்டேறிப் போன வெளிதனி லேவியப் பொன்று கண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூற லுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்ப மென்னை விழுங்கி யிருக்கின்றதே.

(இ - ள்.) அட்டாங்க யோகமும் ஆறு ஆதாரமும் ஐந்து அவத்தையும் விட்டு - எண்வகை யுறுப்புக்களையுடைய யோக நிலையினையும் ஆறு வகையான ஆதாரங்களையும் ஐந்து வகையான உயிர் நிலைகளையும் கடந்து அவற்றிற்கு அப்பாலாய் ஏறிப்போன வெளிதனிலே - உயிரானது உயர்ந்து சென்ற அறிவு வெளியின்கண் அடியேன்; வியப்பு ஒன்று கண்டேன் - வியத்தகு நிகழ்ச்சி யொன்றனை நுகர்ச்சி

வாயிலாய் உணர்ந்தேன், அதுதான் யாதோ வெனின்; செம்மதி வட்டு ஆகிப் பால் ஊறல் உண்டு - என்னுடைய செவ்விய அறிவானது வட்டவடிவிற்றாகி அவ்விடத்திலே இடையறாது ஊறி வருகின்ற பாலினது ஊறலைப் பருகி மகிழ்ந்திருக்கும்படி என்னை எட்டாத பேரின்பம் விழுங்கி யிருக்கின்றது - எளியேனை மக்கட்குக் கிடைக்காத பேரின்பம் ஒன்று விழுங்கியிரா நின்றது என்பதாம்.

(வி - ம்.) அட்டாங்கயோகம் - எண்வகை யுறுப்புக்களையுடைய யோகம்; அவையாவன - இயமம் நியமம் ஆசனம் வளிநிலை தொகைநிலை பொறை நிலை நினைதல் சமாதி என்பன. அவற்றை,

"பொய்கொலை களவே காமம் பொருணசை
யிவ்வகை ஐந்தும் அடக்கிய தியமம்"

என்பதனானும்,

"பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு
நயனுடை மரபி னியம மைந்தே"

என்பதனானும்,

"நிற்ற லிருத்தல் கிடத்தல் நடத்தலென்
றுரைத்த நான்கி னெல்கா நிலைமையோ
டின்பம் பயக்குஞ் சமய முதலிய
வந்தமில் சிறப்பி னாசன மாகும்"

என்பதனானும்,

"உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந்
தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை"

என்பதனானும்,

"பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாம
லொருவழிப் படுப்பது தொகைநிலை யாமே"

என்பதனானும்,

"மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை"

என்பதனானும்,

"நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்த நினைவே"

என்பதனானும்,

"ஆங்ஙனம் குறித்த வாய்முதற் பொருளொடு
தான்பிற னாகாத் தகையது சமாதி"

என்பதனானும், உணர்க.

—தொல், புறத் - சூ - ௨௦ நச். உரை மேற்கோள்.

இனி ஆதாரம் ஆறுவன - உடம்பின் கண்ணமைந்த ஆறு ஆதாரங்கள். அவை, மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆஞ்ஞை என்பன.

அவத்தை - உயிர் எய்தும் நிலைகள். ஐந்தவத்தைகள் ஆவன - நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படங்குதல் என்பன. இவற்றை சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்றும் கூறுப.

எண்வகை யோகங்கள் முதலியவற்றைக் கடந்து சென்ற உயிரானது தனது மெய்யின்பத்தைத் தலைப்படுதலையே ஈண்டு அடிகளார் எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி யிருக்கின்றதே என்றார். இது புத்துணர்வாகலின் வியப்பு ஒன்று கண்டேன் என்றார். என்னை? புதுமைபற்றி மருட்கை பிறத்தலான் வியப்பு ஒன்று கண்டேன் என்றார், வியப்பு எனினும் மருட்கை எனினும் ஒக்கும்.

"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"

—மெய்ப் - எ.

என்பர் தொல்காப்பியனார்,

இந்நிலையிலுறுகின்ற பேரின்பம் நுகர்வார்க்கன்றிப் பிறர்க்கறிவுறுத்த வொண்ணாது. இது பற்றியே நந் தாயுமானவரும், "மௌனியாய்க் கண்மூடி ஒடு மூச்சைக்கட்டி கலாமதியை முட்டவே மூல வெங்கனலினை எழுப்ப நினைவும் பூணிலேன்" எனவும், தசநாடி முற்றும் சுத்தி செய்தும் மூலப்ராணனோடங்கியைச் சோமவட்டத் தடைத்துஞ் சொல்லரிய அமுதுண்டு எனவும் ஓதுவனவும் ஈண்டு அடிகளார் கூறுகின்ற எட்டாத பேரின்பநிலை யினையே என்க. அறிவுக்கு மதி என்னும் பெயருண்மையால் அறிவு வெளியாகிய வட்டத்தையே சந்திரகலை யென்றும், சோமவட்டம் என்றும் கூறுப. வட்டாகி - வட்டவடி விற்றாகி.

செம்மதிப் பால் ஊறல் உண்டு என்றது யோக நூன்மரபில் செவ்விய சந்திரகலையினின்றும் ஊறுகின்ற அமிழ்தம் என்றும் அறிவு வகையில் மெய்யுணர்வினாலுண்டாகின்ற பேரின்பம் என்றும் பொருள் கொள்க. (உ௫)

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கெனு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக் கென்னுமிந் நாறுடலைப்
பிரியமு டன்வளர்த் தேனித னாலென்ன பேறெனக்கே.

(இ - ள்.) இந்நாறு உடலை - இந்தத் தீ நாற்றங் கமழுகின்ற என்னுடைய உடம்பை; எரி எனக்கு என்னும் - நெருப்பானது இறுதியில் யான் தின்னற்குரிய இரை என்று கருதும்; புழு எனக்கு எனும் - மற்றுப் புழுக்கூட்டமோ எமக்குரிய இரையாகும் என்று கருதியிருக்கும்; இந்த மண்ணும் எனக்குச் சரி என்னும் - இவ்வுடல்

தோன்றுதற்கிடமா யிருந்த இந்த நிலமோ எனக்குத் தகுதியான இரை யாகும் என்றிருக்கும்; பருந்தோ எனக்கு என்னும் - பருந்து கழுகு முதலிய பறவைகளோ இது வீழ்ந்தழி எமக்கு இரை யாகும் என்று எதிர்பார்த்திருக்கும்; நரிதான் புசிக்க எனக்கு என்னும் - இனி நரி தான் தின்னுதற்குச் சிறந்த இரையாகும் என்று கருதியிருக்கும்; புல் நாய் எனக்கு என்னும் - புல்லிய நாய் இஃதெனக்கு இரையாகு மென்றிருக்கும்; இந் நாறுடலைப் பிரியமுடன் வளர்த்தேன் – இத் தகைய புலால் நாறுகின்ற இழிதகவுடைய இந்த வுடம்பை யான் பெரிதும் முயன்று அன்போடு வளர்த்து வந்தேன்; இதனால் எனக்கு என்னபேறு - இங்ஙனம் வளர்க்கப்பட்ட இந்த வுடம்பாலே அடியே னுக்கு யாது பயன்? என்பதாம்.

(வி - ம்.) இந்த மானிடவுடம்பு பெறற் கரிதாயினும் அது பெற்ற தற்காய பயனைப் பெறுவிடின் இதனால் உயிர்க்கு ஒரு சிறிதும் பயன் இல்லை. இறுதியில் இஃது ஒரோ வழி நாய் நரி பருந்து முதலிய வற்றிற்கு இரையாகி அவற்றிற்கே பயன்படக் கூடும் என்றவாறு.

உடம்பினை இறுதியிற் சுடுதலுண்மையானும் தொடுகுழியிற் புதைத்தலுண்மையானும் எரி எனக்கென்னும் மண்ணும் எனக் கென்னும் என்றார். இஃதை,

" உண்டற் குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே''
—தொல், பொருளியல் - கக.

என்னும் மரபுபற்றிக் கூறியவாறு என்க.

இங்ஙனம் கூறியதனாற் போந்த பொருள் இம்மானுட யாக்கை பெற்றோர் அதனாலாம் பயனையும் பெறுதல் வேண்டும் என்பதாம். யாக்கையாலாம் பயன் இஃதென்பதனை, "மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம். ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றே'' எனப் பிரண்டும் காட்டிய சித்தியாரான் உணர்க.

(உசு)

அண்ணறன் வீதி யரசிருப் பாகு மணிபடையோர்
நண்ணொரு நாலோன்ப தாமவ ரேவலு நண்ணுமிவ்வூர்
துண்ணேன் பசிக்கு மடைப்பள்ளி யான சுகமுமெல்லா
மேண்ணிலி கால மவமே விடுத்தன மேண்ணரிதே.

(இ - ள்.) இவ்வூர் – மானிட யாக்கையாகிய இந்த ஊரானது; அண்ணல்தன் வீதி அரசு இருப்பு ஆகும் - சிவபெருமானாகிய நம்மிறை வனார் அரசுகட்டிலேறி யிருந்து அருளாட்சி நடாத்துதற்கும் திரு வுலாப்போதற்கும் தகுதியான வீதிகளையும் அத்தாணி மண்டபத்தை யும் உடையதாகும்; இவ்வூர் ஒரு நால் ஒன்பதும் அணி நண்ணும் படையோர் ஆம் அவர் - மேலும் இவ்வூர் முப்பத்தறுவர் ஆகின்ற அணிவகுத்து வருகின்ற படைவீரர் ஆகின்ற; அவர் ஏவலும் நண்ணும்- அவரியற்றுகின்ற குற்றேவற் றொழிலையும் உடைத்தாம்; இவ்வூர்

துண் என் பசிக்கு மடைப்பள்ளி - மேலும் அடியேனைத் துண்ணென்று வருத்துகின்ற என்னுடைய பசிக்கு உணவு தருகின்ற மடைப்பள்ளியு மாகும்; ஆன சுகமும் எல்லாம் - அவ்வுண வுண்ணுதலாலுண்டாகின்ற பிற வின்பமுமாகிய எல்லா இன்பங்களையும், எண்ணிலி காலம் அவமே விடுத்தனம் - அளவிறந்த காலம் நுகராமல் வறிதே விட்டொழிந் தோம், என் அரிது - அவற்றை இப்பொழுது எண்ணிப் பார்த்தலும் இயலாதே என் செய்வாம் என்பதாம்.

(வி - ம்.) இத்திருப்பாடல் முற்போன செய்யுளுக்கு மாறாகப் பாடப்பெற்றதென்க. மானிட யாக்கை பயன் படாமற் கழியுங்கால் எரி எனக்கென்னும் என்பது முதலியவற்றால் அதன் இழிதகைமை தெரித் தோதிய அடிகளார் மற்று அவ்வுடல் தானே பயன்படுங் காலத்தே அதன் மாண்பித் தன்மைத்தென இவ்வழகிய பாடலிலே திருவாய் மலர்ந்தருளுகின்றனர்.

இவ்வூர் என்பதனை இடை நிலை விளக்காகக் கொண்டு வேண்டு மிட னெல்லாம் எடுத்துக் கூட்டிக்கொள்க. கூட்டுமாறுவது,

இவ்வூர் அண்ணல் தன் வீதி யரசிருப்பு ஆகும், எனவும், இவ் வூரில் அணிபடைஞர் நாலொன்பது எனவும், இவ்வூர் அவர் ஏவலும் நண்ணும் எனவும், இவ்வூர் துண்ணென் பசிக்கு மடைப்பள்ளி என்றும், இவ்வூராலான சுகமெல்லாம் எண்ணிலி காலம் அவமே விடுத்தனம் எனவும் விடுத்தமையை எண்ணரிது என்றும் ஏற்ற பெற்றி இயைத்துக் கொள்க.

அண்ணல் - என்றது இறைவனை, இவ்வூர் என்றது அவ்வண்ண லும் உயிரும் இருந்து வாழத்தற்கியன்ற உடம்பினை. அரசிருப்பு என்றது - மெய்யடியார் அன்புடைய உள்ளத்தை அவ்விறைவன் எழுந் தருளியிருக்கும் அரியணை என்றவாறு. படையோர் நாலொன் பதின்மர் என்றது. தத்துவம் முப்பத்தாறனையும் பண்டும் பண்டும் அடிப்பட்டு வந்த பழம் பிறப்புக்களிற் செய்த இருவகை வினைகளும் பக்குவப்பட்டு நுகர்ச்சிக்கு வரும் இடம் இந்த உடலே யாதலின் இதனைத் தமக்கு உணவு அடுகின்ற மடைப்பள்ளி என்றார். இனி, நல்வினையின் பயனாகப் பேரின்பமும் ஈண்டே நுகர்ச்சிக்கு வருத லானும் இது சிவானந்தம் என்னும் இன்பவுணவைச் சமைத்துண்ணு கின்ற மடைப்பள்ளியும் ஆயிற்றென்றார் என்க. இத்தகைய சிவா னந்தத்தை உண்ணுதற்கியன்ற உடம்பாகிய மானிடவுடல் எண் ணிறந்தனவற்றை யான் இதுகாறும் என் அறிவின்மையால் இழந்து விட்டேனே என்று கழிந்ததற்கிரங்குவார் மடைப்பள்ளியான சுகமும் எல்லாம் எண்ணிலி காலம் அவமே விடுத்தனம் அஃது எண்ணரிது என்றார். இனி இவ்வாறே, திருமந்திரத்தும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணி விளக்கே" (உஎ)

எனவருதலுமுணர்க.

என்பெற்ற தாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய வொருபற்று மில்லை யுடையவனே.

(இ - ள்.) உடையவனே - எல்லாப் பொருளையும் தனக்கே யுரிமையுடையவனாகிய சிவபெருமானே !; என் பெற்ற தாயரும் என்னைப் பிணம் என்று இகழ்ந்து விட்டார் - அடியேனை மகவாகப் பெற்று வளர்த்தவராகிய என் தாயர் தாமும் என்னுயிர் நீத்த பொழுதே இஃதொரு பிணம் என்று சொல்லி இகழ்ந்து கைவிட்டகன்றார்; பொன் பெற்ற மாதரும் போ என்று சொல்லிப் புலம்பி விட்டார் - அடியேனாற் பொற்றாலி கட்டப்பெற்ற என் மனைவியாரோ இனி நீ சுடுகாட்டிற்குப் போயொழிவாயாக ! என்று வெறுத்துக் கூறித் தனதின்பம் ஒழிந்தமைக்காக அழுது கைவிட்டகன்று போனார்; கொன் பெற்ற மைந்தரும் பின் வலம் வந்து குடம் உடைத்தார் - இல் வாழ்வார்க்கும் பெருமை தருபவர் என்னும் சிறப்புப் பெற்ற என் மக்கள் தாமும் சுடுகாட்டிற்கு என் உடம்பு போன பின்னர் வலஞ் சுற்றி வந்து குடமுடைத்துக் கொள்ளியும் வைத்தகன்று போயினர்; உன் பற்று ஒழிய ஒரு பற்றும் இல்லை – என் தாய் முதலாக மக்களீறாக அமைந்த என் சுற்றத்தார் செயல் இங்ஙனம் இருத்தலால்; அடியேனுக்கு உன் திருவடிகளே எப்பொழுதும் பற்றுக்கோடாதலன்றிப் பிறிதொரு பற்றுக்கோடும் இல்லை. ஆதலால் அடியேனைப் பாதுகாத்தருள்க என்பதாம்.

(வி – ம்.) உலகத்தே பிறந்த மாந்தர் யாரும் சிறு பருவத்தே தமக்குத் தாயே பற்றுக் கோடாவள் என்று கருதுகின்றனர்; காளைப் பருவத்திலோ தாம் மணந்து கொண்ட காரிகையரே தமக்குப் பெரிதும் பற்றுக் கோடாவார் என்று கருதுகின்றனர். முதுமையில் தாம் பெற்ற மக்களே தமக்குற்ற பற்றுக் கோடென்று கருதி யிருக்கின்றனர். உயிர்போங் காலத்திலோ தாய் முதலிய அனைவரும் கைவிட்டகன்று போகின்றனர். வாய்மையாக நோக்குமிடத்து இம்மையிலும் மறுமையிலும் எப்பொழுதும் உறுதுணையா யிருப்பவன் இறைவன் ஒருவனே, பிறர் யாருமிலர் என்றவாறு.

பொன் - பொன்னாலியன்ற தாலி. கொன் - பெருமை. (உஅ)

கறையற்ற பல்லும் கரித்துணி யாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்ற நெஞ்சமும் பொல்லாத வூணும் புறந்திண்ணையும்
தறையிற் கிடப்பு மிரந்துண்ணு மோடும் சகமறியக்
குறைவற்ற செல்வமென் றேகோல மாமறை கூப்பிடுமே.

(இ - ள்.) கோல மா மறை - அழகிய பெரிய மெய்ந்நூல்கள்; கறை அற்ற பல்லும் – துறவோராகிய நமக்கு வெள்ளடை மெல்லாமையால் களங்கமற்ற வெள்ளிய வாயுடைமையும்; கரித்துணி ஆடையும் – கரிபடிந்த அழுக்குத் துணியாகிய ஆடையுடைமையும்; கள்ளம்

இன்றிப் பொறை உற்ற நெஞ்சமும் - வஞ்சகம் சிறிதுமில்லாமல் பெரிதும் பொறுமையுடைய நெஞ்ச முடைமையும்; பொல்லாத ஊணும் - பிறர் தீய வுணவென்று வெறுக்கின்ற பழஞ்சோறு முதலிய உணவுடைமையும்; புறந்திண்ணையும் தறையிற் கிடப்பும் - புறந்திண்ணையிலாதல் வறுநிலத்திலாதல் படுத்தலுடைமையும்; சகம் அறிய இரந்து உண்ணும் ஓடும் - இவ்வுலகத்தார் அறியும்படி பிச்சை எற்றுண்ணற்கியன்றதோர் ஓடுடைமையும் ஆகிய இவைகளே; குறைவு அற்ற செல்வம் என்று கூப்பிடும் - யாதொரு குறைவுமற்ற பெருஞ் செல்வங்களாகும் என்று நுங்களை அழைத்துச் சொல்லுங் கண்டீர்! என்பதாம்.

(வி - ம்) பிறப்பறுக்கலுற்ருர்க்கு உடம்பும் மிகையாயினும் அவ் வுடம்பு கொண்டே மெய்யுணர்வு பெறவேண்டும் ஆதலால் அதனைப் பேணுதலும் வேண்டப்படும்; படவே உடம்பைப்பேணுதற்கு வெற்றிலை பாக்கு மெல்லுதல் வேண்டா ஆதலின் கறையற்ற பல்லும் இடையிலுடுத்தற்குக் கரித்துணியும் கள்ளமில்லாததும் பொறுமை மிக்கதுமாகிய நன்னர் நெஞ்சமும் மிகமிக இன்றியமையாதாகலின் அத்தகைய நெஞ்சமும் பழஞ்சோறும் காய் கனி இலை முதலிய எளியவுணவும் உறக்கம் வந்தால் படுத்துறங்கப் பூவணையும் பிறவும் வேண்டுமே! புறந்திண்ணையிலாதல் வறுநிலத்திலாதல் சிறிதிடம் போதியதாமே? ஆதலால் அத்தகைய இடமும் பசிவர்தாவிரத்தற்கொரு மட்கலமும் இருந்தால் பின்னர் அவர்க்கு யாது வேண்டும்? இவைகளே குறைவற்ற செல்வமாம் என்று மெய்ந்நூல்கள் கூறுகின்றன. ஆதலின் அவை கொண்டே உடலோம்பித் தவநெறி நின்மின் என்றவாறு.

இதனால் அடிகளார் துறவியர் வாழ்க்கையின் எளிமையை அழகுற எடுத்தோதுகின்றனர் எனக. (உசு)

எட்டுத் திசையும் பதினறு கோணமு மெங்கு மொன்ருய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங்
கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே.

(இ - ள்.) மூடர் எல்லாம் - அறியாமையுடைய மாக்கள் அனைவரும்; எட்டுத்திசையும் பதினறு கோணமும் எங்கும் ஒன்ருய் முளைத்து - எட்டாகிய திசையும் அவற்றிடையிடையே அமைந்த பதினறு மூலைகளும் என்று மாந்தர் வழங்குகின்ற எல்லா விடத்தும் ஒரே படித்தாகத் தோன்றி; முட்டித் ததும்பி - நிறைந்து அப்பாலும் துளும்பி நிற்கின்ற; ஓங்கும் சோதியை - உயர்கின்ற பூதவொளி போலாது அறிவொளியாகிய கடவுளை; கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைப்பர்-சுவடியிலே இருப்பதாகக் கருதி அவற்றைக் கயிற்ருற் கட்டிப் பட்டு முதலியவற்றில் வைத்துச் சுருட்டி எடுத்துத் தம் அக்குளில் வைத்து இடுக்கிக் கொள்ளாநிற்பர்; கருத்தில் வையார் - அக்கடவுளை வைத்து வழிபடுதற் கேற்ற விடமாகிய தங்கள் நெஞ்சிலே வைத்துக் கொள்ளார். பட்டப்பகலை இரவு என்று கூறும் பாதகரே - இவர்கள் நண்பகலை நள்ளிரவு என்று கூறுமளவிற்கு மயக்கமுடைய தீவினையாளர்களே யாவர் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் அங்குளன் இங்குளன் அங்கிலன் இங்கிலன் என்றியம்ப வொண்ணாதபடி அவன் எங்குமுளன் என்பார், "எட்டுத் திசையும் பதினாறு கோணமும் என்று மக்கள் கூறுகின்ற எங்கும் ஓங் கும் சோதி" என்றார். இறைவன் ஞாயிறு முதலியவற்றின் ஒளிபோன்ற ஒளி யல்லன் அறிவொளி என்பது தோன்ற ஓங்கு சோதி என்றார். இறைவனை இங்ஙனம் கூறுதலே சான்றோர் மரபாகும் என்பதனை, "ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தியாகி" எனவும் (சிவப்பிரகா சம்-க.) "பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானை" எனவும், (தேவா ரம்-சு-க-கo) "மெய்ச்சுடருக் கெல்லாம் ஒளிவந்த பூங்கழல்" எனவும், (திருவாசகம்-அ-சு-கரு) எனவும், "தங்க அரன் ஞானக்கண் கொடுத்தருளினாலே சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே" எனவும், (சித்தி - சுப - ஙடகள) பிறசான்றோரும் ஓதுதல் உணர்க.

இனி இறைவன் எங்குமுளன் என்பதனை, "எங்குந்தான் நிறைந்து சிவன் நின்றான்" எனவும் (சித்தி-சுப-ஙடகள). "எவ்விடத்தும் இறையடியை யின்றியமைந் தொன்றை யியற்றியிடா வுயிர்கள்" எனவும் (சித்தி-சுப-ஙடகள) "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாச மாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது" எனவும், (தாயு மானவர்-க) "பார்க்கு மிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே" எனவும் (தாயுமா - பரிபூரணானந்தம் க-கo) "இகபரமிரண்டினிலு முயிருக்குயிராகி எங்கு நிறைகின்ற பொருளே" (தாயுமா-எங்குநிறை-க-கo) எனவும் சிவானுபூதிச் செல்வர் பலருந் திருவாய் மலர்ந்தருளுதலானும் உணர்க. மூளைத்து என்றது உயிர் கட்கு அருள் வழங்குதற் பொருட்டு மூவகைத் திருமேனி கொண்டு தோன்றுதலை என்க.

மூடர் என்றது அறியாமையையுடைய மாக்களை. அவர் இறைவன் நூல்களுள் இருப்பதாகக் கருதி அதனைக் கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைப்பர் என்றனர். மக்கட் பிறப்பில் வந்தவர் அவனைத் தம் முள்ளத் தூடேயே கண்டு வழிபடுதல் வேண்டும். வேறிடத்திற் காணவியலாது. அங்ஙனமாகவும் இம்மூடர் உள்ளத்தில் அவனை வைத்துக் காண மாட்டாராய்க் கக்கத்தில் வைப்பர் என்றிகழ்ந்த படியாம். இனி இறைவன் உள்ளத்தினுள்ளே தான் தோன்றுவன் என்பதனை, "இறைவன் வந்தனை செய்து எவ்விடத்தும் வழிபடவே அருளும் மலமறுப்போர் ஆன்மாவின் மலரடி ஞானத்தாற் சிந்தனை செய்து அர்ச்சிக்க சிவன் உளத்தே தோன்றித் தீ இரும்பைச் செய்வது போற் சீவன்றன்னைப் பந்தனையை அறுத்துத் தானாக்கித் தன்னுருவப் பரப் பெல்லாம் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே" எனவரும் சித்தி யாரானும் (சுப-ஙOங), "மலர்மிசை ஏகினான்" என்னும் திரு வள்ளுவர் பொன் மொழியானும் (குறள்-ங) தெளிக. இந்த மூடர் பெரிதும் மயக்கறிவுடையார் என்றற்கு இவர் "பட்டப்பகலை இர வென்று கூறிடும் பாதகர்" என்றார்.

(ஙO)

வாய்நாறு முழல் மயிர்ச்சிக்கு நாறிடும் மையிடுங்கண்
பீணாறு மங்கம் பிணவெடி நாறும் பெருங்குழிவாய்ச்

சீநாறும் யோனி யழனாறு மிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறு மங்கையர்க் கோவிங்ஙனே மனம் பற்றியதே.

(இ - ள்.) (மகளிருடைய) வாய் ஊழல் நாறும் - வாயோ ஊத்தை நாற்றம் நாறு நிற்கும்; மயிர் சிக்கு நாறிடும் - அவர் தம் கூந்தலோ சிக்கு நாற்றம் நாறு நிற்கும்; மையிடுங்கண் பீள் நாறும் - அவர் மையிடுகின்ற கண்களோ பீளை நாற்ற முடையன; அங்கம் பிண வெடி நாறும் - அவர் தம் உடம்போ பிணம் போன்று வெடி நாற்றம் நாறுவதாம்; பெருங்குழிவாய்ச் சீ நாறும் யோனி அழல் நாறும் - அவருடைய பெரிய குழியாகிய எப்பொழுதும் சீ நாற்றமுடைய அல் குலோ அழனாற்றம் நாறு நிற்கும்; பாய் இந்தியச் சேறு சிந்தி - அவர் படுத்திருக்கின்ற பாய்தானும் ஆணிந்திரியமும் பெண்ணிந்திரியமுமா கிய இருவகை யுறுப்புக்களும் சொரிந்த சுக்கிலமும் சுரோணிதமுமாகிய குழம்புகள் சிந்தப்பெற்று நாறு நிற்கும்; மங்கையர்க்கு இங்ஙனமே மனம் பற்றியது - இவ்வாறு பெரிதும அருவருக்கத்தக்க அம்மங்கை யர் பொருட்டோ அறிவிலியாகிய என் பேதை நெஞ்சம் இத்தகைய பெரும் பற்றுக் கொண்டுளது. இஃதொரு வியப்பேயாம் என்பதாம்.

(வி - ம்.) பற்றுதற் கேற்ற பண்பு மங்கையர்பாற் சிறிதும் இல்லை. ஆனல் பெரிதும் அருவருக்கத்தக்க தீ நாற்றமே அவர்பால் யாண்டு முளது. இதனை அறிந்து வைத்தும் என் மனம் அவரைப் பற்றிக் கிடப்பது ஒரு வியப்பே யன்றோ என்றவாறு.

இதனல் அடிகளார் பெண்ணாசையை விட்டொழிக்க முயலும் நல்லோர் அவர்பாலமைந்த இத்தீய பண்புகளை நினைத்து நினைத்துக் காண்பாரேல் அவ்வாசை தானே அகன்று விடும் என நம்மனோர்க்கறி வுறுத்தியவாறுகக் கொள்க.

இச்செய்யுளில் ஊழல் சிக்கு வெடி என்பன தீ நாற்றங்களின் வகை. இவற்றுள் ஊழல் என்றது ஊத்தையை. ஏனைய இக் காலத்தும வழக்கிலுள்ளன. (நூக)

உரைக்கைக்கு நல்ல திருவெழுத் தைந்துண் டுரைப்படியே
செருக்கித் தரிக்கத் திருநீறு முண்டு தெருக் குப்பையிற்
றரிக்கக் கரித்துணி யாடையு முண்டெந்தச் சாதியிலு
மிரக்கத் துணிந்துகோண் டேன்குறை யேது மெனக்கில்லையே.

(இ - ள்.) உரைக்கைக்கு நல்ல திரு எழுத்து ஐந்து உண்டு - யான் இடையரு தி ஓதி யின்ப மெய்துதற்கோ நன்மைமிக்க அழகிய எழுத்துக்கள் ஐந்தும இருக்கவே இருக்கின்றன; உரைப்படியே செருக்கித் தரிக்கத திருநீறும் உண்டு - இனி என் ஞானசிரியர் கூறிய படியே யான் எப்பொழுதும் செருக்குற்று அணிந்து கோடற்கு வேண்டிய திருநீறுதானும என்பாலுளது; தரிக்கத் தெருக்குப்பையிற் கரித்துணி ஆடையுப உண்டு - இனி யான் உடுப்பதற்கோ தெருக் களிலே யாண்டும் காணப்படுகின்ற குப்பையிலே கிடக்கின்ற கரித் துணியாகிய ஆடையும் நிரம்பவுண்டு; எந்தச் சாதியிலும் இரக்கத்

துணிந்து கொண்டேன் - இனிப் பசிப்பிணி தீர்ப்பதற்கோ உயர்வும் தாழ்வும் பாராமல் எந்தச் சாதியார் மனையினும் சென்று சோறு இரந்துண்ணுதற்கும் நன்கு துணிவு பெற்றிருக்கின்றேன் ஆதலால்; எனக்கு ஏதும் குறைவு இல்லை - இப்பொழுது இவ்வுலகத்தில் எனக்கு குறைவு யாதொன்றுமில்லை என்பதாம்.

(வி - ம்.) ஓதுதற்குப் பெரிதும் இனியதும் ஓதுவார்க்குப்பேரின்பந் தருவதும் அழகியதும் ஆகிய எழுத்தென்பார் நல்ல திருவெழுத்து என்றார்.

இனி, திருவைந் தெழுத்தாலாம் நன்மையை,

"... ... ... நாடறிய
அஞ்செழுத்தின் உள்ளீ டறிவித்தான் அஞ்செழுத்தை
நெஞ்சழுத்தி நேய மயலாக்கி—அஞ்செழுத்தை
உச்சரிக்கும் கேண்மை யுணர்த்தி யதனுச்சரிப்பு
வைச்சிருக்கும் அந்த வழியாக்கி—அச்சமறச்
சென்று விளக்கை எழத்தூண்டிச் செஞ்சுடரின்
ஒன்றி ஒருவிளக்கின் உள்ளொளியாய்—நின்ற
பெருவிளக்கின் பேரொளியாய் உள்ளே பிரசம்
மருவும் மலர்போல் மதித்து அங்—கருவினுருக்
கொள்ளா அருளைக் கொளுத்திக் குணங்குறியொன்
றில்லா விடத்தே யிளைப்பாற்றி—விள்ளாத
உள்ளம் முதலாக உள்ளதெலாம் வாங்கவருள்
வெள்ள மயலளித்து மேவினன்"

எனவரும் நெஞ்சுவிடுதூதானும் (கூகு-கoஎ) உணர்க.

இனி உரைப்படி யென்றது ஞானாசிரியர் கூறிய முறைப்படியே என்றவாறு. யாமார்க்கும் குடியல்லோம் என்றெழும் திருவருட் பேற்றாலாய செருக்குடையேமாய் என்பார் செருக்கித் தரிக்க என்றார்.

முற்றத் துறந்த முனிவர்கட்குச் சாதிமத முதலிய வேற்றுமை தோன்றாமையின் எந்தச் சாதியிலும் இரக்கத் துணிந்து கொண்டேன் என்றார். துணிந்து கொண்டேன் என்றது அங்ஙனம் துணிதலின் அருமை தோன்ற நின்றது. (கஉ)

ஏதப்பட் டாயினி மேற்படும் பாட்டையி தேன்றறிந்து
போதப்பட் டாயில்லை நல்லோரிடஞ் சேன்று புல்லறிவால்
வாதைப்பட் டாய்மட மானர் கலவி மயக்கத்திலே
பேதைப்பட் டாய்நேஞ்ச மேயுனைப் போலில்லை பித்தருமே.

(இ - ள்.) நெஞ்சமே - என் நெஞ்சமே!; ஏதப்பட்டாய் - நீ பிறவி யெடுத்த காலந் தொடங்கித் துன்பமே பட்டதன்றி இன்பந்தான் யாது பெற்றனைகாண்!; நல்லோரிடம் சென்று மேல்படும் பாட்டை இது என்று அறிந்து போதப்பட்டாய் இல்லை - அன்றியும்

நன்மையுடைய சான்றோரிடம் சென்று இனி இம்மையினும் மேல் வருகின்ற மறுமையினும் நீ அடைதற்கிருக்கின்ற துன்பம் இத்தகையதென்று கேட்டறிந்து இத்துன்பங்கள் தவிர்தற்குரிய மெய்யறிவும் பெற்றாயில்லையே!; புல் அறிவால் வாதைப்பட்டாய் - பின்னும் பின்னும் உனக்கியல்பாகவுள்ள புல்லிய அறிவு காரணமாகத் துன்பமே பட்டனை; மடமானார் கலவி மயக்கத்திலே பேதைப் பட்டாய் - எல்லாத் துன்பத்திற்கும் காரணமா யிருக்கின்ற மடப்பமுடைய மான் போலும் விழியுடைய மகளிரைப் புணர்தலாலுண்டாகும் சிற்றின்பத்தையே விரும்பி மேலும் அறிவின்மையையே உடையையாயினாய்; பித்தரும் உனைப்போல் இல்லையே - இவ்வுலகில் பித்தேறியவர் தாமும் உன்னைப்போல அறிவு மயக்கங் கொள்வார் இல்லையே! என்பதாம்.

(வி - ம்.) ''பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்'' என்பது வாய்மையாகலின் நீ பிறந்த நாள் தொடங்கித் துன்பப்பட்டா யல்லது இன்பம் யாதுற்றனை காண் என்பார் ஏதப்பட்டாய் என்றார். நல்லோர் - ஆன்றவிந்தடங்கிய சான்றோர். அவர் இனி இம்மையினும் மறுமையினும் உயிர் உறுந் துன்பங்களை யுணர்த்துதலோடன்றி அத் துன்பத்தினின்றும் அகன்று உயிர் இன்புறுதற்கியன்ற நெறிகளையும் உணர்த்தி உய்விப்பராகலான், நல்லோரிடஞ் சென்று மேற்படும் பாட்டை இஃது என்றறிந்து போதப்பட்டாயில்லை என்றிகழ்ந்தார். போதம் – மெய்யறிவு.

புல்லறிவு - புல்லிய அறிவுடைமை; அஃதாவது தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொற் கொள்ளாமை.

> " அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
> செறுவார்க்குஞ் செய்த லரிது "
>
> —குறள் - அசஅ

என்பது பற்றிப் புல்லறிவால் வாதைப்பட்டாய் என்றார். வாதை - துன்பம்.

மடமானார் கலவி என்பது எல்லாத் துன்பங்கட்கும் காரணமாயிருக்கின்ற மடமானார் கலவி என்பதுபட நின்றது. என்னை?

> " கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமு மோம்பார்
> களவொன்றோ வேனையவுஞ் செய்வார் பழியொடு
> பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
> காமங் கதுவப் பட்டார் " —நீதிநெறி எக.

எனவும்,

> " பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
> நாணாக நாணுத் தரும்''
>
> —குறள் - கoஉ.

எனவும் வரும் ஆன்றோர் பொன்மொழியும் நினைக. (கக)

சுரப்பற்று வல்வினை சுற்றமு மற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்று மங்கையர் கையிணக் கற்றுக் கவலையற்று
வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி மனமடங்கப்
பரப்பற் றிருப்பதன் றோபர மாபர மானந்தமே.

(இ - ள்.) *பரமா - இறைவனே !; வல்வினைச் சுரப்பு அற்று - வன்மையுடைய இருள்சேர் இருவினையும் மேன்மேலும் பெருகுத லொழிந்து; சுற்றமும் அற்று-தமர் தார மகவு முதலிய சுற்றத்தார்பாற் பற்றொழிந்து; தொழில்கள் அற்று - அவாவின் தூண்டுதலாலே தன்முனைப்புற்றுச் செய்கின்ற தொழில்களும் ஒழிந்து, கரப்புஅற்று- நெஞ்சின்கண் கள்ளமும் ஒழிந்து; மங்கையர் கை இணக்கு அற்று - மகளிரைக் காமுற்றுக் கையாற்றழுவுதலும் ஒழிந்து; கவலைஅற்று - யாதொரு கவலையும் இல்லாமல்; நாதனை வாயார வரம்பு அற்று வாழ்த்தி - எல்லாவுலகங்கட்கும் தலைவனுகிய நின்னை என் வாயார வரையறையின்றி எப்பொழுதும் வாழ்த்தி வணங்கி; மனம் பரப்பு அற்று அடங்க - மனமானது புலன்களிலே பரந்து செல்லுதல் ஒழிந்து தன்னிலே தானுய் அடங்கிக் கிடக்கும்படி; இருப்பது அன்றோ பரமா ஆனந்தம்-நின் றிருவடி நீழலிலே இருப்பதன்றோ மேலான வீட்டின்பம் என்று கூறப்படுவது. இந்நிலை எளியேனுக்கு என்று வருமோ? அறிகிலேன் என்பதாம்.*

(வி - ம்.) *வல்வினைச் சுரப்பற்று என மாறுக. ஊழிற் பெரு வலி யாவுள என்பதுபற்றி வல்வினை என்றார். சுரப்பு -மேன்மேலும் பெருகுதல். புலன்களிலே விருப்பு வெறுப்புக்கள் இலராய் இறைபணி நிற்பார்க்கு வினையின் சுரப்பும் அற்றொழியும் என்க.*

இதனை,

"சலமிலனுய் ஞானத்தால் தனையடைந்தார் தம்மைத்
　　தானுக்கித் தலைவன் அவர் தாஞ்செய்வினை தன்னுல்
நலமுடனே பிறர்செய்வினை யூட்டியொழிப் பானுய்
　　நணுகாமல் வினையவரை நாடிக் காப்பன்
உலகினில்என் செயலெல்லாம் உன்விதியே நீயே
　　உள்நின்றும் செய்வித்தும் செய்கின்ருய் என்றும்
நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலே யென்றும்
　　நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்குந் தானே"

எனவருஞ் சித்தியாரானும் (சுப - கூ0எ),

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனுகி இறைபணி நிற்க
மலமாயை தன்னெடு வல்வினை யின்றே"

எனவரும் சிவஞானபோதத்தானும் (க0) உணர்க.

சுற்றம் - தமர்தாரம் மகவும் பிறரும். தொழில்கள் அற்று என்றது தன்முனைப்பாற் பயன் கருதிச் செய்கின்ற தொழில்கள் அற்று என்றவாறு.

கையிணக்கு - கையாற் றழுவுதல், வரம்பு - வரப்பு என வலிந்து நின்றது. பரப்பு - பரவுதல். பரபரப்பு எனினுமாம்.

என்னை ?

" பரபரப்பி னோடே பலப்பல செய்தாங்(கு)
இரவுபகல் பாழுக் கிறைப்ப—ஒருவாற்றான்
நல்லாற்றி னூக்கிற் பதறிக் குலைகுலைப
எவ்வாற்று னுய்வா ரிவர் "

—நீதிநெறி - ௯0.

எனவரும் குமரகுருபரர் அருண்மொழியுங் காண்க.

அடிகளார் அரும்பொருளையும் எண்பொருளவாகக் கூறி அறிவுறுத்தும் அழகுணர்க. (௩௪)

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சைஎல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மை சொல்லிச்
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை ஞானந் தெளிந்தவரே.

(இ - ள்.) உண்மை ஞானம் தெளிந்தவர் - மெய்புணர்வுண்மையால் தெளிவடைந்த சான்றோர்; பேய் போல் திரிந்து - இவ்வுலகின் கண் பேய்கள் போன்று திரிந்து; பிணம்போல் கிடந்து - உறங்கிக் கிடக்கும் பொழுது உயிரற்ற பிணம் கிடக்குமாறு கிடந்து; இட்ட பிச்சை எல்லாம்-இல்லறத்தோர் தமக்கு வழங்கிய பிச்சையாகிய உணவினை; நாய்போல் அருந்தி - நாய்கள் தின்னுமாறு பெற்ற விடத்திலேயே தின்று; நரிபோல் உழன்று - நரிகளைப் போன்று காடு மலை முதலிய விடங்களிலெல்லாம் சென்றுழன்று; நல் மங்கையரைத் தாய் போல் கருதி - அழகுடைய மகளிரைத் தம்மை ஈன்ற தாயைப் போல் எண்ணி; அனைவர்க்கும் தமர்போல் தாழ்மை சொல்லி - உலகிலுள்ள மாந்தர் அனைவருக்கும் அவரவர் உறவினர் போன்று பணிவுடன் தாம் சொல்லத் தக்கவற்றைச் சொல்லி; சேய் போல் இருப்பர் - விரகறியாத இளஞ்சிறுஅர் போன்று கள்ளமும் வஞ்சமும் இல்லாது இருப்பார் என்பதாம்.

(வி - ம்.) மெய்த்துறவோர் தம்முடம்பை ஆடை அணிகலன்களால் ஒப்பனை செய்து கொள்ளாமற்றிரிதலின் பேய்போல் திரிந்தென்றும், துயிலுங்கால் கவலையின்றியும் கனவு காணாமையும் கிடத்தலிற் பிணம்போற் கிடந்து என்றும் கூறினர். இன்னும் பஞ்சணை முதலியவற்றிற் கிடவாமல் உறக்கம் வந்த விடத்தே தரைமேலே கிடத்தலானும் பிணம்போற் கிடந்து என்றாரெனினுமாம்; துறந்தோர் பிச்சையாகக் கிடைத்த உணவின் உயர்பிழிவு நோக்காது கிடைத்த விடத்திலேயே தின்றலின் நாய்போலருந்தி யென்றும் காடு மேடு முதலிய யாண்டும் செல்லுதலின் நரி போலுழன்றென்றும் தாம் காணும் மகளிரைக் காமுற்று நோக்காது அன்புடன் நோக்குதலின் மங்கையரைத் தாய்போற் கருதியும் என்றார். இனி உலகீன்ற

தாயாகிய உமையம்மையாரைப் போன்று கருதியும் எனலுமாம். யாவருங் கேளிர் என்னும் உணர்ச்சி கைவரப் பெற்றவராகலின் எல்லோருக்கும் பணிவுடன் நல்லன பேசுதலின் அனைவர்க்கும் தாழ்மை சொல்லி என்றார். சிறுவர்கள் சாதிமதம் செல்வம் நல்குரவு உயர்வு இழிவு முதலிய வேறுபாடு காணாது அனைவரையும் சமமாகக் கருதுத லோடு கள்ளம் வஞ்சகம் முதலியன அறியாமையானும் சேய்போலிருப் பர் என்றார். இதனால் உண்மை ஞானந் தெளிந்தவரியல்புணர்த்திய படியாம்.

துறவோர் இவ்வாறு ஒழுகுதல் வேண்டும் என அறிவுறுத்த வாறுமாம். (௫௫)

விடக்கே பருந்தின் விருந்தே கமண்டல வீனனிட்ட
முடக்கே புழுவந் துறைவிட மேநல முற்றுமிலாச்
சடக்கே கருவி தளர்ந்துவிட் டாற்பெற்ற தாயுந்தொடாத்
தொடக்கே யுனைச்சுமந் தேனின்னி னேது சுகமெனக்கே.

(இ - ள்.) விடக்கே பருந்தின் விருந்தே-ஊன்திரளே !; பருந்து முதலிய பறவைகட்கு எப்பொழுதேனும் கிடைக்கின்ற புத்துணவே; கமண்டல|ஈனன் இட்டமுடக்கே-கமண்டலத்தையுடைய குற்றமுடைய பிரமனாற் சமைக்கப்பட்ட சிறு குடிசையே!; புழு வந்து உறையும் இடமே - புழுக்கள் தேடி வந்து குடியிருக்கும் கூடே !; முற்றும் நலம் இலாச் சடக்கே - முழுப்பகுதியாலும் நன்மை ஒரு சிறிதும் இல்லாத உயிரிலியே !; கருவி தளர்ந்து விட்டால் - அகப்புறக் கருவிகள் தளர்ச்சியுற்று உயிர்ப்படங்கிப் பிணமாகி விட்டால்; பெற்ற தாயும் தொடாத தொடக்கே - நின்னைப் பெற்ற தாய் தானுந் தொட வொண்ணாத வாலாமையே!, உனைச் சுமந்தேன் - தீவினையாளனாகிய யான் உன்னை ஒரு பொருளாகக் கருதி இதுகாறும் சுமந்து கொண்டு திரிந்தேனே; நின்னில் எனக்கு சுகம் ஏது - உன்பால் எனக்குண்டா கின்ற இன்பம் யாது? ஒன்றுமில்லையே என்பதாம்.

(வி - ம்.) இஃதடிகளார் உடம்பைத் தனித்துப் பார்த்து அதன் இயல்பு கூறி அதனைத் தாம் பொருளாகக் கருதியதற்கு வருந்திக் கூறியபடியாம்.

விடக்கு - ஊன். மானிட உடம்பு பறவைகட்கு இரையாதல் அரிதாகலின் கிடைக்குங்கால் அஃது அவற்றிற்கு விருந்துணவாதல் பற்றிப் பருந்தின் விருந்து என்றார். கமண்டல ஈனன் என்றது, நான்முகனாகிய படைப்புக் கடவுளை. இத்தகைய இழிபொருளைப் படைத்தலின் ஈனன் என்றார். முடக்கு - முடக்கிக் கட்டிய சிறு குடிசை. குடிசை முடக்கினான் என்னும் உலக வழக்கு முணர்க. கருவி – அகக்கருவியாகிய மன முதலியனவும் புறக்கருவியாகிய கண் முதலியனவுமாம். கருவி தளர்ந்து விட்டால் என்றது பிணமாகி விட்டால் என்றவாறு, தொடக்கு - வாலாமை; தீண்டாமை.

உடம்பு வீட்டின்பத்தைப் பெறுதற்குரிய கருவி மாத்திரையே யன்றி அதுவே இன்பமுடையதன்று ஆதலால் அதனைப் பெற்றவர்

அதன் பயனைப் பெறுதல் வேண்டும். பெறாவிடின் ஒரு பெருஞ் சுமையைச் சுமந்து திரிந்தவராதலன்றி வேறில்லை என்பது கருத்து. மெய்த்துறவோர் பயன் கருதிப் பேணுவரேனும் உடம்பினைத் தாம் வருந்திச் சுமக்குமொரு சுமையாகவே கருதுவர் என்பதனை,

"புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
களியார் சுமைபோடு தற்கு."

—நீதிநெறி - ௯௩

எனவரும் குமரகுருபரர் மெய்ம்மொழியுங் காண்க. (௩௬)

அழுதாற் பயனென்ன நோந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப் படிவரு மோசலி யாதிரேன் னேழைநெஞ்சே.

(இ - ள்.) என் ஏழை நெஞ்சே - என்னுடைய எளிய நெஞ்சமே! உனக்குத் துன்பம் வருங்காலத்தில் நீ பெரிதும் வருந்தி; அழுதால் பயன் என்ன - அழுவதனால் உனக்குண்டாகும் பயன்தான் என்ன? யாதொன்றுமில்லை; நொந்தால் பயன் என்ன - அல்லது உனக்குத் தீங்கு செய்தாரை நோவதாற்றான் யாது பயன்!; ஆவது இல்லை - அவற்றால் உண்டாகும் நன்மை ஒன்றும் இல்லை; தொழுதால் பயன் என்ன - அன்றி உன்னைப் புகழ்ந்து பிறர் தொழுவதனாற்றான் யாது பயன்; நின்னை ஒருவர் சுடவுரைத்த பழுதால் பயன் என்ன - அல்லது உன்னை யாரேனும் ஒருவர் நினது உள்ளத்திற் சுடும்படிகூறிய வசைச்சொல் வாற்றான் உனக் குண்டாகும் பயன் யாது; நன்மையும் தீமையும் பங்கயத்தோன் எழுதாப்படி வருமோ - உலகில் உனக்கு நிகழுகின்ற நன்மையாதல் தீமையாதல் தாமரை மலரில் இருக்கும் நான்முகன் உன் பழவினைக் கீடாக உன் தலையில் எழுதியவாறே நிகழும அன்றி அவை அவன் எழுதாதபடி வருவதில்லை; ஆதலால், சலியாது இரு - துன்பம் வந்தபொழுது நீ சிறிதும் அவற்றை வெறுமலேற்று நுகர்வாயாக! என்பதாம்;

(வி - ம்.) இன்பத் துன்பங்கள் முற்செய்த பழவினைக் கீடாகப் படைப்புக் கடவுளால் விதிக்கப்பட்டு வருவதல்லாமல் அவை தாமே வருவன அல்ல, ஆதலால் அவை வந்துற்றபொழுது அவற்றை ஏற்றுப் பொறுமையோடு நுகர்வதே அறிவுடைமை யாகும். அவ்வாறன்றித் துன்பம் வந்துற்றபோது வருந்துதலும் இன்பம் வந்துற்றபோது களித்தலும் பேதைமை என்று அடிகளார் அறிவுறுத்துகின்றனர். இவ்வுண்மையை,

"மறைகளீ சன்சொல் அச்சொல் வழிவரா வுயிரை வைக்கும்
சிறைகள்மா நிரைய மிட்ட பணிசெய்வோர் செல்வத் தோடும்

உறையும்மா பதிகள் உம்ப ருலகங்கள் யோனிக் கெல்லாம்
இறைவனு ணையினல் இன்பத் துன்பங்கள் இயைவ தாகும்''

எனவும் சித்தியார் (சுப - கஉ0)

"பேறிழ வின்பமோடு பிணிமூப்புச் சாக்கா டென்னும்
ஆறமுன் கருவுட்பட்டது''

—சித்தி - சுப - கக.

எனவும்,

"யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் று மிலமே முனிவின்
இன்னு தென்றலு மிலமே''

எனவும் (புறநா-ககஉ) பிற சான்ரோர் கூறுமாற்ருனு முணர்க. (கஎ)

செல்வரைப் பின்சேன் றுபசாரம் பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தி
னெல்லையிற் புக்குநல் லேகாந்த மாயெனக் காமிடத்தே
யல்லலற் றென்றிருப் பேனுல நீழ லரும்பொருளே.

(இ - ள்.) ஆல நீழல் அரும் பொருளே - கல்லால் நீழலின் கண் எழுந்தருளிய பெறுதற்கரிய மெய்ப்பொருளே!; செல்வரைப் பின் சென்று உபசாரம் பேசி - அடியேன் எனது வயிற்றை நிரப்பும் பொருட்டு இவ்வுலகத்திற் பொருள் மிக்க மாந்தரின் பின்னே சென்று அவர் மகிழுமாறு இச்சகம் பேசி; பல்லினைக் காட்டிப் பரிதவியாமல் - என்பெல்லாம் அவர்க்குத் தெரியக்காட்டி வருந்தாமல்; பர ஆனந்தத்தின் எல்லையில்புக்கு - மேலான வீட்டின்பத்தின் எல்லையிலே புகுந்து; நல் ஏகாந்தமாய் எனக்கு ஆம் இடத்தே - நன்மையுடைய தனிமையை எய்தி அடியேன் இருப்பதற்கியன்ற இடத்திலே; என்று அல்லல் அற்று இருப்பேன் - எந்த நாளிலே இப்பிறவித் துன்ப மொழிந்து நிலைபெற்றிருப்பேனே? அறிகின்றிலேனே என்பதாம்.

(வி - ம்.) செல்வரைப் பின் செல்லுதற்குக் காரணம் வயிறோம்பு தலேயாம். அவர் பின் சென்ற துணையானே ஈவாரும் அச்செல்வருள் அரியாராகலான் அவர்க்குபசாரமும் பேசிப் பின்னரும் பல்லைக் காட்டிப் பரிதவித்தும் நிற்றல் வேண்டும் என்கின்றார். இஃது இராப் பினிழிவு கூறியபடியாம். பரானந்தம்-மேலான இன்பம்; அஃதாவது-வீட்டின்பம். ஏகாந்தம் என்றது கருவி கரணங்களொடு கூடாது தனித்திருத்தலை. எனக்காமிடம் என்றது திருவருளை. நீயே யானுகி யிருக்குமிடம் என்றவாறுமாம். அல்லல் - பிறவித் துன்பங்கள். இத்தகைய நிலை எய்துதல் அரிதாகலின் என்று அல்லல்

அற்றிருப்பேன் என்றார். ஆலநீழல் அரும்பொருள் என்றது தக்கணா மூர்த்தியை. அம்மூர்த்தி ஞானாசிரியராகலின் அத்தகைய மெய்யுணர் வினை அடியேனுக்ுச் செவியறிவுறுத்துவாயாக! என்று வேண்டிய வாறுமாம். (௩அ)

ஊரீ ருமக்கோ ருபதேசங் கேளு முடம்படங்கப்
போரீர் சமணைக் கழுவேற்று நீற்றைப் புறந்திண்ணையிற்
சாரீ ரனந்தலைச் சுற்றத்தை நீக்கிச் சகநகைக்க
ஏரீ ருமக்கவர் தாமே தருவ ரிணையடியே.

(இ - ள்.) ஊரீர் உமக்கு ஓர் உபதேசம் கேளும்-ஊரிலே வாழு கின்ற அன்பர்களே! உங்களுக்கு அடியேன் அறிவுறுத்துமோர் அறி வுரையைக் கேளுங்கள்; உடம்பு அடங்கச் சமணைக் கழுவேற்றும் நீற்றைப் போரீர் - உங்கள் உடம்பு முழுவதும் மதுரையில் சமணரைக் கழுவேற்றிச் சைவசமயத்தைச் செழிக்கச் செய்த திருவெண்ணீற்றை நிரம்ப அணிந்து கொள்ளுங்கள்; சுற்றத்தை நீக்கி - சுற்றத்தாரைத் துறந்து விடுமின்; நும் முறவினர்பாற் சகம் நகைக்க ஏரீர் - பசித்தால் இந்த வுலகத்து மக்கள் நுங்களை இகழ்ந்து சிரிக்கும்படி பிறர் மனை தொறுஞ் சென்று சோறிரந்து தின்னுங்கள்; அனந்தலைப் புறந் திண்ணையில் சாரீர்-உமக்கு வரும் உறக்கத்தை ஒழிக்கப் புறந்திண்ணை யிலே படுத்துறங்குமின்; உமக்கு அவர் தாமே இணை அடிதருவர் - இவ்வாறு செய்வீர்களாயின் உங்களுக்கு நம் சிவபெருமானே எளிவந்து தமது இரண்டு திருவடிகளையும் வழங்கா நிற்பர்; ஆதலின் எளியவிச் செயல்களைச் செய்து பெறுதற்கரிய அந்தப் பேற்றினைப் பெற்றுய் வீர்களாக! என்பதாம்.

(வி - ம்.) இறைவனருளைப் பெறுதல் மிகவும் எளிதேயாம். அதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் நாம் பற்றி யிருக்கின்ற பொருள்கள் அனைத்தும் ஒரு சேரத் துறந்து விடவேண்டும். அவன் திருப்பெயரை ஓதி உடல் நிரம்ப அவன் திருவெண்ணீற்றை அணிந்து கொள்ளல் வேண்டும். பசித்த பொழுது பிறர் மனையில் இரந்துண்ண வேண்டும். உறக்கம் வரும்பொழுது புறந்திண்ணையிற் படுத்துறங்க வேண்டும். பின்னர் யாதொன்றும் செய்தல் வேண்டா. அக்கடவுள் தாமே வந்து நம்மை ஆட்கொண்டருளுவர் என்றவாறு.

அனந்தலை ஒழிக்கப் புறந்திண்ணையிற் சாரீர் என்றும், பசிவந்துழிச் சுற்றத்தார் மனையை நீக்கி என்றும் பிறர்மனையில் ஏரீர் என்றும் ஆங்காங்கு ஏற்ற பெற்றி வருவித்துக் கொள்க. இங்ஙனம் வருவித் தோதுதல் இசை யெச்சம் என்ப. அனந்தல் - உறக்கம். ஏரீர்-ஏற்பீர் என்னும் சொல்லின் மருவு வழக்காகக் கொள்க.

இனி இதன்கண் சமணைக் கழுவேற்று நீற்றைப் போரீர் என்றதனோடு,

"முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு

பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே"

எனவரும் திருஞான சம்பந்தர் திருப்பதிகத்தையும் நினைக.

சமணரைக் கழுவேற்றிய வரலாற்றினைத் திருவிளையாடற் புராணம், திருத்தொண்டர் புராணம் இவற்றில் விரிவாகக் காண்க.

இனி இதன்கண் புறந்திண்ணையிற் சாரீர் என்றது நமக்குரிய புறப்பற்றுக்களுக்குக் காரணமான பொருளனைத்தும் துறந்து போய் எதிலார் புறந்திண்ணையிற் சாரீர் என்பதுபட நின்றமையும், சகம் சிரிக்க ஏரீர் என்றது அகப்பற்றை ஒழித்தற்குக் காரணமாதலையும் அறிந்து கொள்க. நீற்றைப் போரீர் என்றது பற்றற்றான் பற்றினை பற்றுக என்றறிவுறுத்த படியாம். இவ்வாற்றால் இத்திருப் பாட்டின் கண் வீடுபேற்றிற்கு வேண்டிய அனைத்தும் எஞ்சாது அறிவுறுத்தப் பட்டமை அறிக. (கூக)

நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூ
லேற்றிக் கிடக்கு மெழுகோடி மந்திர மென்னகண்டாய்
ஆற்றிற் கிடந்துந் துறையறி யாம லலைகின்றையே.

(இ - ள்.) மனமே - என்னெஞ்சமே!; நீ நீற்றைப் புனைந்து என்ன - நீ தான் யான்முற் கூறியபடி சமணைக் கழுவேற்றிய திரு வெண்ணீற்றை உடம்பு நிறைய அணிந்து கொள்கின்றனை ஆயினும் அதனால் யாது பயன்?; நீர் ஆடப்போய் என்ன - கங்கையினும் காவிரி யினும் கடலிடத்தும் நீராடப் போகின்றனை. அதனாலும் பயன் ஒன்றும் இல்லை; மாமறைநூல் கிடக்கும் எழுகோடி மந்திரம் ஏற்றி என்ன கண்டாய் - பெரிய வேதநூல்களிலே கூறப்பட்டிருக்கின்ற எண்ணிறந்த மந்திரங்களை உருவேற்றுகின்றாய் அதனாலும் பயன் யாது தான் கண்டனை? ஒன்றுமில்லை; மாற்றிப் பிறக்க வகை யறிந்தாய் இல்லை – (இவையெல்லாம் பயனற்றுப் போயதற்குக் காரணம் உண்டு) நீ இவ்வுலக வாழ்வினைப்பற்றிக் கிடக்கின்ற மனப்பான்மையை மாற்றி ஒன்றனையும் பற்றாது நிற்கின்ற உயரிய மனப்பான்மையோடு தோன்று கின்ற நிலைமையை உணர்ந்து கொண்டாயில்லை; (அதுவே பயன் பெறுமைக்குக் காரணம்) ஆற்றில் கிடந்தும் துறை அறியாமல் அலை கின்றனை - இவ்வாற்றால் நீ ஆற்று வெள்ளத்தி லகப்பட்டுக்கொண்டு அல்லலுற்றும் அதன் கரையிலேறுதற்கியன்ற துறையினைத் தெரிந்து கொள்ளாமல் அவ்வெள்ளததில் நீந்தி அலைகின்றாய் காண் என்பதாம்.

(வி - ம்.) நீறு பூசுதலும் நீராடுதலும் மந்திரமோதுதலும் கருவி கள் ஆதல் மாத்திரையே யன்றி அவைகளே பயன்கள் ஆகமாட்டா. நீயோ கருவிகளைக் கையாளுகின்றனை; பயனெய்தும் வழியினை உணர்ந்து கொள்கின்றிலை. நீ பயன் எய்த வேண்டுமானால் நின் பற்றுள்ளத்தை மாற்றி உலகப் பொருளைப் பற்றாததும் இறைவன் திருவடிகளை நன்கு பற்றிக் கோடலும் உடைய ஒரு புதிய உள்ளத்தைப் பெற்றாக வேண்டும். ஒரு புதிய பிறப்பைப் பெறுவதனையே ஒக்கும் அந்த மனமாற்றம். அங்ஙனம் மாறிப்பிறவாமையில் நீ மீண்டும் மீண்டும் இவ்வுலகத் துன்பத்திலே அழுந்துகின்றாய். ஆதலால் நீ

வெள்ளத்திற் சிக்கி வருந்து மொருவன் கரையேறுதற்குரிய நீந்துதல் முதலியவற்றைச் செய்தும் ஏறுந்துறை யறியாமல் அலைவானையே ஒக்கின்றனே; என்றவாறு.

இதன்கண் அடிகளார் கருவிகளின் இன்றியமையாமையையும் அவற்றை நெறியறிந்து கையாள வேண்டும் என்றும் அறிவுறுத்த படியாம். இதனல் கருவியிருந்தும் நெறியறியாத வழியும் நெறி யறிந்தும் கருவி பெருதவழியும் பயன் பெறமுடியா தென்றும் இரண்டுமே இன்றியமையாதனவாகும் என்று நம்மனோர்க் கறிவுறுத்து கின்றார் என்க. (சo)

ஓங்கார மாய்நின்ற வத்துவி லேயோரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயனறிந் தாற்பதி னுலகு
நீங்காம னீங்கி நிறையா நிறைந்து நிறையுருவா
யாங்கார மானவர்க் கெட்டாக் கனிவந் தமர்ந்திடுமே.

(இ - ள்.) ஓங்காரமாய் நின்ற வத்துவிலே - ஓம் என்னும் பிரணவ மந்திரமாக அங்கு இங்கு எனதபடி அருளொடு நிறைந்து நின்ற ஒன்றேயாகிய பொருளினின்றும்; ஒரு வித்து வந்து பாங்காய் முளைத்த பயன் அறிந்தால் - திருவைந் தெழுத்து மந்திரம் என்கிற விதையானது தோன்றி உயிரின் நெஞ்சமாகிய நிலத்திலே அழகாய் முளைத்திருப்பதனல் அதன் பயனை அவ்வுயிர் நன்குணர்ந்து கொள்ளு மாயின், பதினலு உலகும் நீங்காமல் நீங்கி நிறையா நிறைந்து நிறை உருவாய் - பதினன்கு என்னும் எண்ணுற் குறிப்பிடுகின்ற எல்லா வுலகுகளும் தன்னுள்ளிருந்தும் அவற்றைப் பற்றின்றிப்பற்றி அவற்றி னூடே நிறையாமால் நிறைந்துள்ள முழுமுதலுருவாகி இறையின்பம் என்னும்; ஆங்காரம் ஆனவர்க்கு எட்டாக் கனி - செருக்குடையார்க்கு ஒரு காலத்தும் கிடைக்கப்பெருத கனி; வந்து அமர்ந்திடும் - தானே எளிவந்து இடையருது தங்கியிருக்கும் என்பதாம்.

(வி - ம்.) ஓங்காரம் - பிரணவ மந்திரம். இதுவே இறைவ னுடைய உருவம் ஆதலின் - ஓங்காரமாய் நின்ற ஒருவத்து. வத்து - பொருள். ஈண்டு மெய்ப்பொருள். வித்து என்றது திருவைந்தெழுத் தினை. அது மக்கள் மனதிற்குள் தானே வந்து தோன்றி யிருத்தலால் ஒருவித்து வந்து பாங்காய் முளைத்ததனை அறிந்தால் என்றார். திரு வைந்தெழுத்து ஓங்காரத்தினின்றும் பிறந்ததென்பதனை,

"பிரணவ முதலாய்ச் சிவாய வென்பதுபின்
பிணைந்துறக் கிளக்கு மாறெழுத்தும்
விரவுமந் நூலி னெவ்வகை மனுக்கு
மேலதா மவைதரு பொருள்கள்
பரனெடு பஞ்ச சத்திக ளிரண்டு
பயனுமாம் பயின்றவர்க் காதி
மருவிய பதத்தின் வித்தின் ஆவென
மறைமுத லனைத்துந் தோன்றினவால்"

எனவரும் தணிகைப் புராணத்தானும் (அகத்திய - கடு0) உணர்க.

இனி வித்தென்னும் ஐந்தெழுத்தின் பயனை,

"அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையு மறிந்திட்டு
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத் தர்ச்சித்
தஞ்செழுத்தாற் குண்டலியின் அனலை யோம்பி
அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்
றஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்கன்
அணையரவம் போற்றோன்றும் ஆன்மாவில் அரனே"

எனவருஞ் சித்தியாரானும் (சுப - உகூக) உணர்க.

இனி இச்சித்தியாரின்கண் ஆன்மாவில் அரன் தோன்றும் என்பதனையே ஈண்டு அடிகளார் நிறையுநவாய் ஆங்காரமானவர்க்கு எட்டாக்கனி வந்தமர்ந்திடும் என்றருளிச் செய்தனர் என்க. (சக)

விதியார் படைப்பு மரியா ரளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்புநம் பாலணு காது பரானந்தமே
கதியாகக் கோண்டுமற் றெல்லாந் துயிலிற் கனவெனநீ
மதியா திருமன மேயிது காணன் மருந்துனக்கே.

(இ - ள்.) மனமே - என் நெஞ்சமே!; பரானந்தமே - சிவானந்தம் என்னும் அழியாத பேரின்பமே; கதியாகக்கொண்டு - யாம் பெறுதற்குரிய பேறுகும் என்று உறுதியாக எண்ணிக்கொண்டு; மற்று எல்லாம் துயிலில் கனவு என நீ மதியாது இரு - இவ்வுலகிலாதல் மறுமையுலகிலாதல் உண்டாகிய ஏனைய எல்லா இன்பங்களும் உறக்கத்தே காணுகின்ற கனவு போன்று வரும் பொய் என்று ஒரு தலையாக உணர்ந்துகொண்டு அவற்றை மதியாமல் இருப்பாயாக!; உனக்கு இது நல் மருந்துகாண் - இங்ஙனம் இருப்பதுவே நினக்கெய்திய பிறவிப் பிணி தீர்க்கும் சிறந்த மருந்தாகுங் காண்! இங்ஙன மிருப்பின்; விதியார் படைப்பும் அரியார் அளிப்பும் வியன் கயிலைப்பதியார் துடைப்பும் - பின்னர்ப் பிரமனுடைய படைத்தற்றொழிலும் திருமாலுடைய பாதுகாத்தற்றொழிலும் அகன்ற கயிலைமலையினை இருப்பிடமாகக் கொண்ட உருத்திரனுடைய அழித்தற் றொழிலுமாகிய முத்தொழில்களுமே நம்பால் நிகழமாட்டா என்பதாம்.

(வி - ம்.) மக்கள் யாக்கை பெற்றவர் அதனாற் பெறும் பயன் வீடுபேறு எய்துதலேயாகும். அவ்வீடு பேறுதான் மெய்யுணர்ந்து பற்றறுத்தலாலே உண்டாவதாம். இவ்வாற்றாற் பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பும் மிகையாதலின் அவர் இம்மை மறுமை யின்பங்கள் கனவு போன்று விரைந்து மறைந்து போகும் என நன்குணர்ந்து கொண்டு பற்றறுத்தலாகிய தமது குறிக்கோ ளொன்றிலேயே உறுதியாக இருக்கக் கடவர், அங்ஙனம் இருப்பின் அத்தகையோர்க்குப் பின்னர்ப் பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டு இறத்தலும் ஆகிய பிறவித் துன்பங்

கள் ஒழிந்துபோம் என்று அடிகளார் இத்திருப் பாட்டில் அறிவுறுத்த வாறும்.

விதியார் - பிரமன். அரியார் - திருமால். கயிலைப்பதியார் - உருத்திரன். படைத்தலும் காத்தலும் துடைத்தலுமாகிய இவர் தொழில்கள் நம்பாலணுகா எனவே வீடு பெறுவேம் என்றவாறுயிற்று. (சஉ)

நாய்க்குண்டு தெண்டு நமக்குண்டு பிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டு மந்திர பஞ்சாட் சரமதி யாமல்வரும்
பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டு தேசிகன் றன்னரு ணோக்கங்க ணோக்குதற்கே.

(இ - ள்.) நமக்குப் பிச்சை உண்டு-நெஞ்சமே நம்மை வருத்தும் பசி தீர்த்தற்கு நமக்கு எங்கும் பிச்சைச் சோறுண்டு; நாய்க்குத் தெண்டு உண்டு - பிச்சைபுகுங்கால் நம் காலைக் கௌவச் சினந்து வருகின்ற நாய்களை அச்சுறுத்தி வெருட்டவோ நம்மிடத்துத் தடியும் ஒன்று உண்டு ஆதலால் அவற்றிற்கும் அஞ்ச வேண்டா; நமனை வெல்ல - இறுதியில் நம்முயிரைக் கவர்ந்து போதற்கு வருகின்ற கூற்றுவனை வெல்லுதற்கோ: வாய்க்கு பஞ்சாட்சர மந்திரம் உண்டு - நம் வாயின்கண் திருவைந்தெழுத்து மந்திரம் எப்பொழுதும் உளது; மதியாமல் வரும் பேய்க்கு நீறு உண்டு-நம்மைச் சிறிதும் மதியாமல் நம்பால் வருகின்ற பேய்களை வெருட்டுதற்கோ நம்பால் எப்பொழுதும் திருவெண்ணீறுளது; திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி நோய்க்கு - யாம் தீர்த்தற்கு வழி தெரியாது திகைத்து நிற்றற்குக் காரணமான நமது பிறப்புப் பிணி என்கின்ற நோய் தீரும்படி; நோக்குதற்கு - நம்மைப் பரிவுடன் நோக்குவதற்கோ; தேசிகன் தன் அருள் நோக்கங்கள் உண்டு - நம் ஞானசிரியருடைய அருள் நிரம்பிய பார்வை களும் உள்ளன. ஆதலால் யாம் எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை யன்றோ என்பதாம்.

(வி - ம்.) நமக்குண்டு பிச்சை நாய்க்குண்டு தெண்டு என மாறுக. பிச்சைபுகுவாரை மனைகளில் வளர்க்கப்படும் நாய்கள் சினத்தலும் கடித்தலும் உண்டு அவற்றை அச்சுறுத்தி ஓட்டுதற்குப் பிச்சை புகுவோர் தம் கையில் ஒரு தடியுடன் வருவா. இத்திருப் பாட்டில் அடிகளார் தம்மைத் துன்புறுத்துவனவற்றை யெல்லாம் அகற்றுதற்கு நம்பால் கருவிகளும் உள்ளன ஆதலால் நாம் அஞ்ச வேண்டுவதில்லை என்று நெஞ்சிற் கறிவுறுத்துகின்றனர். ஆதலால் இடையறாது வந்து வருத்தும் பசிப்பிணியை அகற்றுதற்கு நமக்குப் பிச்சைச் சோறுண்டு என்றும், பிச்சை புகுங்கால் நம்மைக் கடிக்க வரும் நாயை வெருட்டு தற்கு நம்பால்தண்டு மிருக்கின்றது. நம்முயிர் கவரவரும் நமனை வெல்லு தற்கு நம் வாயில் எப்பொழுதும் திருவைந்தெழுத்துண்டு; நம்மை மதியாமல் வருகின்ற பேய்களை வெருட்டத் திருவெண்ணீறும் நம்பா லுளது. பிறவிப் பிணியை அகற்ற நம்மைப் பரிவுடன் நோக்கத் தேசிகன் அருணோக்கங்கள் உண்டு ஆதலால் நாம் எற்றிற்கு அஞ்ச வேண்டும் என்றவாறு.

இங்ஙனம் செம்பொருள் காணமாட்டாராய்ப் பிறரெல்லாம் நாய்க் குண்டு தெண்டு என்பதற்குத் தத்தமக்குத் தோன்றியவாறே பொருந்தாவுரை கூறினர். அவற்றை அவருரையிற் காண்க.

தேசிகன் ஞானசிரியன். ஆசிரியர் நோக்கால் செய்யும் தீக்கையை நயன தீக்கை என்பர்.

இதனை,

"பலவிதம் ஆசான்பாச மோசனந்தான் பண்ணும்
படி'நயனத் தருள்'பரிசம் வாசகமா னதமும்
அலகில்சாத் திரம்யோகம் ஔத்தி ராதி
அநேகமுள"

—சித்தியார் - சுப - உஉரு.

எனவும்,

"அருட்குருவை வழிபடவே அவனிவன்ரு னுயே
இரங்கிய வாரணம் யாமை மீனண்டம் சினையை
இயல்பினெடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே"

எனவும் வரும் சித்தியாரானும் (சுப - நஉஅ) உணர்க.

ஈண்டு அடிகளார் தேசிகன் திருவருணோக்கம் உண்டு நோக்கு தற்கே என்றது நயனதீக்கையை என்க. (சரு)

நேமங்க ணிட்டைகள் வேதங்க ளாகம நீதிநெறி
யோமங்க டர்ப்பணஞ் சந்தி செபமந்த்ர யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே
சாமங்க டோறு மிவர்செய்யும் பூசைகள் சர்ப்பனையே.

(இ - ள்.) இவர் - இவ்வுலகத்திற் சிலர்; நாமங்கள் - திருமால் அடியார் போன்று பட்டை நாமங்களைப் பல்வேறிடங்களினும் இட்டுக் கொண்டும்; சந்தனம் - சந்தனத்தைப் பூசிக்கொண்டும்; வெண்ணீறு பூசி - திருவெண்ணீற்றை நிரம்பப் பூசிக்கொண்டும்; நேமங்கள் நிட்டைகள் - முறையாகச் செய்கின்ற இறை வழிபாடுகளும் நிட்டைகள் புரிவார் போன்று கண்மூடி அமர்ந்திருக்கின்ற செயல்களும்; வேதங்கள் ஆகமங்கள் நீதிநெறி - வேதங்களையும் ஆகமங்களையும் ஓதுதலும் அவற்றிற் கூறியிருக்கின்ற நீதிகளையும் நெறிகளையும் எடுத்துப் பிறர்க்கோதுதலும்; ஓமங்கள் தர்ப்பணம் சந்தி - வேள்வி செய்தலும் தர்ப்பணம் செய்தலும் சந்தியா வந்தனஞ் செய்தலும்; மந்த்ர செபம் யோகநிலை - மந்திரங்களை உருவேற்றலும் தாமரை முதலிய ஆசனங்களிட்டு யோகநிலையி லிருப்பதுவும்; சாமங்கள் தோறும் செய்யும் பூசனை - வைகறை முதலிய சிறு பொழுதுகள் தோறும் செய்கின்ற தெய்வ வழிபாடுகளும் ஆகிய இவை யெல்லாம்;

சர்ப்பனை - வஞ்சகச் செயல்களேயன்றி வாய்மையானவைகளல்ல; என்பதாம்.

(வி - ம்.) உலகில் இறைவன்பால் மெய்யன்பு கொண்டு பிறப் பறுத்தற் பொருட்டு நியமநிட்டைகள் முதலியன செய்வோர் மிகவுஞ் சிலரேயாவர். ஆனல் மிகப் பலர் இவற்றைப் புகழ் பொருள் முதலிய வற்றைக் கருதியே வஞ்சகமாகவே செய்கின்றனர். இச்செயல் களுக்குரிய பயனை இவர் எய்துதல் இல்லை என்பதாம்.

இதனை,

"தூசுநீர்க் காவி யுறப்புனைந் தணிந்து
துளசிதா மரைமணி தோண்மே
லாசின்மூப் பிளமை சாதிவேற் றுமைக
ளகன்றவர்க் காயினு மடியேன்
தாசனென் றிறைஞ்சிப் பிறர்பொருள்
கவர்ந்து சாத்திமேன் மூத்திராதன
மாசிலா தவர்போ லிருந்தன ரிவர்போல்
வஞ்சனை யாவரே வல்லார்.''

எனவும்,

"இரவெலாங் காமக் கணிகையர் முயக்கி
லின்பமுற் றியற்பக லெல்லாம்
குரவரா யணிவெண்ணீற் றுருத்தி ராட்சக்
கோலமார்ச் சாலமாங் குழைவும்
பரவுபா வனையுந் தேவதார்ச் சனைதாம்
பண்ணல்போ லுருப்பல பரப்பி
விரவுமா மணிதொட் டாட்டலும் பார்க்கின்
மிகக்கொடி திவர்வஞ்ச வேடம்''

எனவும்,

"திருத்தகு மூவர் புகறிருப் பாட்டுத்
தெள்ளமு தத்தையுந் தேக்கா
துருக்கெடுத் தகற்று நற்றிரு மூல
ரோதுமந் திரத்தையு முணரா
தருட்கொடுத் தறங் காட்டுவோர் தமைப்போன்
றரும்பொருள் கவர்ந்தவ ரவர்க்குக்
குருக்கொடுத் தொருசாண் கும்பினூர்க் கின்ற
கொடியரா லிங்கின்ற குழுவோர்"

எனவும்,

"நிறைந்திடக் குடத்தின் மலமுறப் புறத்தி
னீர்கொடு கழுவினு னிகர்ப்ப
வறந்துடைத் தன்புந் துடைத்ததம் முளத்தி
லருமல மிருக்கத்தண் புனலாற்

புறந்துடைத் தங்க முழுதும்வெண் ணீற்றைப்
பூசணிக் காயெனப் பொதிந்து
பறந்துபற் பலர்கைப் பொருள்கொளச் சைவப்
பழங்கள் போன்றவ ரிவரால்"

எனவும்,

"அட்டிடு வெண்சோ றவரவரிடச்சென்
றருந்தலா முலகினை யதுபோல்
தெட்டிய திலையென் றரனடி யாற்
றெரிந்திடப் பன்மயிர் திரட்டி
நெட்டியற் கொன்றைக் காய்கள்போ னீட்டி
நிமிர்தலைச் சுமையென நிரப்பிக்
கட்டிய சடையின் கொழுந்தினு நெடிதாற்
கண்டக ரிவர்மனக் காதல்"

எனவும்,

"புரத்தினீண் மடக்க டொறும்புரா ணிகராய்ப்
போயிருந் தறஞ் சொல்வார் போலக்
கரத்திலே டெடுத்தே தோசில புகன்று
காய்கனி தண்டுலங் கொணர்வார்
வரத்திலே கண்ணும் வாக்கிலிச் சகமு
மனத்துளே வஞ்சமுமாகிப்
பரத்திரவியமேல் விருப்பமா மினையர்
பாவனை யாவரே படித்தார்"

—இடம்பாங் - கக - சு.

எனவும்; இன்னோரன்ன பிறவுமாய் வருகின்ற மெய்ஞ்ஞான விளக்கத் தானு முணர்க.

இனி, ஆசிரியர் திருவள்ளுவனூர் தாமும்,

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்"

—குறள் - உஎசு.

என்றற் றொடக்கத்துத் திருக்குறள்களால் இத்தகைய வஞ்சகத்தைப் பெரிதும் கூடா வொழுக்கமாகக் கூறியிருத்தலு முணர்க. (சச)

நானேத் தனைபுத்தி சொன்னுலுங் கேட்கிலை நன்னெஞ்சமே
யேனிப் படிக்கெட் டுழலுகின் றுயினி யேதுமில்லா
வானத்தின் மீனுக்கு வன்றூண்டி லிட்ட வகையதுபோற்
போனத்தை மீள நினைக்கின் றனையென்ன புத்தியிதே.

(இ - ள்.) நல் நெஞ்சமே - எனக்குப் பெரிதும் நன்மையே செய்கின்ற என் நெஞ்சே கேள் !; இனி எதும் இல்லா வானத்தின்

மீனுக்கு வல்தூண்டில் இட்ட வகையதுபோல் - இப்பொழுது நீ ஒரு சிறிதும் பயன்படாத வானத்தில் தோன்றுகின்ற மீனைப் பிடித்துச் சமைத்துண்ணும் பொருட்டு வலிய தூண்டிலை இட்ட ஒரு மடவோன் செயல் போலவே; போனத்தை மீள நினைக்கின்றனை - நம்மை விட்ட கன்று போனவற்றையே மீண்டு மீண்டு நினைந்து வருந்தா நின்றனை; இது என்ன புத்தி - இவ்வாறு வருந்துதற்குக் காரணமான உன்னுடைய அறிவு தான் எத்தகையதோ? அறிகிலேன்; நான் எத்தனை புத்தி சொன்னாலுங் கேட்கிலை - உன்பாற் பரிவுடைய யான் எத்தனை வகையான அறிவுரைகளைக் கூறினாலும் நீ அவற்றையும் கேட்கின்றாயில்லையே!; என் இப்படிக் கெட்டு உழலுகின்றாய் - நீ ஏனோ இவ்வாறு கெட்டுப் போய்ப் பயனின்றி வருந்துகின்றாயோ? யான் அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) சிலர் இயற்கையிலேயே துறவு மனப்பான்மையோ பிறப்பறுக்க வேண்டும் என்னும் குறிக்கோளோ இன்றிச் சூழ்நிலை காரணமாக மெய்யுணர்வு கைவந்தவர் போல இல்லத்தை விட்டு வெளியேறித் துறவு வேடம் புனைந்து கொள்வர். இத்தகையோர் தாம் வெளியேறுதற்குரிய காரணம் சிறிது காலத்தி லொழிந்து போகவே மீண்டும் தாந் துறந்துவிட்ட பொருள்களையும் பெறவும் வழியிலராய் எஞ்சிய தம் வாழ்நாள் முழுவதும் அவற்றையே நினைந்து நினைந்து வருந்தியே சாவர்.

இனி, கை கடந்து போனவற்றை எண்ணி வருந்துதல் இல்லறத்தார்க்கும் கூடாததேயாகவும் துறந்து போனவர் தாம் துணிந்து துறந்தவற்றை நினைத்து வருந்துவது பேதைமையிலும் பேதைமையையே யாம். இன்னும் கடந்து போனவற்றை மீளவும் பெற நினைப்பது விண்மீனைப் பிடித்தற்குத் தூண்டிலிடுவதையே ஒக்கும். இறந்த காலத் திறந்தவை எல்லாம் என்றும் மீளா திறந்தவையே யாம் அவற்றை எண்ணி வருந்துவது பற்றிக் கவிவரர் சுப்பிரமணிய பாரதியார் கூறும் அழகிய செய்யுளொன்று இச்செய்யுளோடு நினைக்கத் தகுந்த சிறப்புடைத்தாம். அது வருமாறு :—

> "சென்றதினி மீளாது மூடரே நீர்
> சென்றதனை மீளவுமே சிந்தை செய்து
> கொன்றழிக்குங் கவலையெனுங் குழியில் வீழ்ந்து
> குமையாதீர் சென்றதனைக் குறித்தல் வேண்டா
> இன்றுபுதி தாகப் பிறந்தோ மென்
> றெண்ணந் தைத்திண்ணமுற இசைத்துக்கொண்டு
> தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்
> தீமையெலாம் ஒழிந்துபோம் திரும்பிவாரா"

எனவரும்.

இனி இவ்வாறு போனதை நினைத்துக் கெட்டுழலுதல் பெரும் பேதைமை யாதல் தோன்ற ஏனிப்படிக் கெட்டுழலுகின்றாய்? என்று வினவினர்.

விண்மீனை, மீனென்று கேள்விப்பட்டவன் அதனைப் பிடித்துண்ணக் கருதித் தூண்டிலிடும் அத்துணைப் பேதைமை யுடைத்து

கின் செயலு மென்பார், அங்ஙனம் உவமை எடுத்தோதினர். இராம கிருட்டினபரமகம்சரும் இதற்கு இந்த வுவமையையே கூறி யிருக்கின் றனர். இவ்வாறு ஒத்திருப்பது ஒரு வியப்பே ஆகும். (சகூ)

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்காட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே.

(இ - ள்.) அஞ்சு அக்கரம் என்னும் கோடாலி கொண்டு - அடியேன் என் உள்ளமாகிய நிலத்தின்கண்; திருவைந் தெழுத்தென்கிற கோடரியைக் கைக்கொண்டு; ஐம்புலன் ஆம் வஞ்சப் புலக்காட்டை - அதன்கட் பண்டு அடர்ந்திருந்த சுவை ஒளி யூறு ஓசை நாற்றம் என்கிற வஞ்சகமுடைய புலமாகிய காட்டினை; வேர்அற வெட்டி - அவற்றின் வேரும் அற்றுப்போம்படி வெட்டி அகற்றி; விஞ்ச வளங்கள் செய்து திருத்தி - அந்த நெஞ்ச நிலத்தின்கண் மிகுதியாகவே வளம்பல செய்து மேடு பள்ளமின்றிச் சமமாகத் திருத்தி; சதாசிவம் என்கின்ற வித்தை இட்டு - சதாசிவம் என்று கூறப்படுகின்ற திருவருட்டிரு மேனியாகிய விதையை நட்டு; புஞ்சக்களை பறித்தேன் சிவபோகத்தை வளர்த்தேன் - கூட்டமான காம முதலிய களைகளையும் பறித்து அந் நெஞ்சத்தின்கண் சிவானந்தம் என்னும் மெய்யுணர் வின்பமாகிய பயிரை நன்கு வளர்த்துக் கொண்டேன்; ஆதலால் இனி எப் பொழுதும் அதனையே உண்டு மகிழ்வேன் கண்டீர்! என்பதாம்.

(வி - ம்.) அஞ்சு அக்கரம் - திருவைந் தெழுத்தாகிய மந்திரம். இத் திருமந்திரத்தை அன்புடன் ஓதுவார்க் கன்றி மெய்யுணர்வு கை கூடாதாகலின் அஞ்சக்கர மெனும் கோடாலி என்றுரு வகித்தார். பெரிதும் முயன்று மெய்யுணர்வு பெற்ற வழியும் பற்பல பிறப்புக் களிலே அடிப்பட்டு வருகின்ற பாசமானது பயிற்சி காரணமாக மீண்டும் வந்து நெஞ்சின்கண் அடர்ந்து அம்மெய்யுணர்வைக் கெடுக்கு மாதலான் அப்பாசங்கள் மீண்டு மணுகாமைப் பொருட்டே இடை யறாது திருவைந்தெழுத் தோதுதல் வேண்டும் என்பது சைவசித் தாந்தமாம். ஆதலின் பாசமென்பது சுவை முதலிய ஐந்துமே யாகலின் அவைதாம் ஒவ்வொன்றும் பற்பலவாக விரிந்து நெஞ்ச முழு வதையும் தம் வயப்படுத்திக் கோடலான் அவற்றைக் காடு என்றுரு வகித்தார். புலக்கட்டை என்றும் பாடம். இதனை விகாரமாகக் கொள்க. புலக்காட்டை எனற்பாலது புலக்கட்டை எனக் குறுகியது செய்யுள் விகாரம். இக்கருத்தறியார் கட்டை என்றே பொருள் கூறுப. அவரறியார். என்னை? பட்ட மரத்தையே கட்டை என்பது வழக்காதலான் பட்ட மரத்தை வேரற வெட்டினேன் என்றலும் பொருந்தாமை யுணர்க. சுவை முதலிய ஒவ்வொன்றும் பற்பலவாய்ப் பெருகி அடர்தலால் காடென்றலே அடிகள் கருத்துமாதல் வேண்டும் என்ப.

இவ்வாறு திருவைந் தெழுத்தோதுமாற்றால் மலமறுத்தலே உயிர்த் தூய்மை செய்தல் என்பர் சான்றோர்.

இதனை,

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே"

எனவரும் சிவஞானபோதம் ஒன்பதாம் நூற்பாவானும்,

அந்நூற்பாவின் மூன்றுங் கூற்றில்

"இனி இவ்விடத்து ஶ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க என்றது"—

"இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கு எனக்கொள்க"

எனவரும் விளக்கங்களானும்,

"அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு"

எனவரும் எடுத்துக்காட்டு வெண்பாவானும் உணர்க.

இனி, ஈண்டு,

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

—குறள் - ௨௭.

என்று பாசக்கூட்டமாகிய உலகம் உயிரைத்தாக்க வருகின்ற ஐம்புலன்களை மட்டுமே தொகுத்தோதியாங்கு அடிகளாரும் ஈண்டு ஐம்புலனும் வஞ்சப் புலக்காடு என்றலும் உணர்க.

ஐந்து புலன்களும் தாம் தாமே மெய்ப்பொருள் போன்று நின்று உயிரை மயக்கித் தம் வயப்படுத்துக் கோடலால் வஞ்சப் புலக்காடு என்றனர். மணிவாசக வடிகளாரும்,

"......புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி"

என்றருளிச் செய்தலும் (திருவா - சிவபுரா - ௫௫ - அ) உணர்க.

இனி, அன்புநீர் பாய்ச்சித் துறவீதல் முதலிய நற்குணங்களாகிய எருப்பெய்து வளங்கள் செய்து என்க. திருத்தி என்றது எவ்வுயிரும் தம் முயிர்போ லெண்ணி யுள்ளே ஒத்தலை என்க.

சதாசிவம் - அடியார்க்கு அருள் வழங்கும் அருட்டிருமேனி ஆகலின் அத்திருமேனியையே வித்தாக உருவகித்தார். மலங்கள் பல வாகலின் அவற்றைப் புஞ்சக்களை என்றார். புஞ்சம் கொத்து - கூட்டம்.

இத்திருப்பாட்டினால் அடிகளார் மெய்யின்பம் விழைவோர் செயற்பாலன இவை என்று சுருக்கமாகச் சொல்லி விளங்க வைத்திருத்தலை யுணர்க. (சூசு)

தாயாருஞ் சுற்றமும் பேண்டீருங் கைவிட்டுத் தாழ்ந்திடுநாள்
நீயாரு நானு ரேனப்பகர் வாரந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகோள்வ ரேகோண்ட நோயுமோரு
பாயாரு நீயுமல் லாற்பின்னை யேதுநட் பாமுடலே.

(இ - ள்.) உடலே - இந்த உடம்பினையே நானென்று கொண்டு இற்றைநாள் இறுமாந்து திரிகின்ற நெஞ்சமே கேள்!; தாழ்ந்திடும் நாள் – நின் கைப்பொருள் தொலைந்து நீ வறுமையாலே தாழ் வெய்து கின்ற பிற்றைநாளிலே; தாயாரும் சுற்றமும் பெண்டிரும் கைவிட்டு நீ யார் நான் யார் எனப் பகர்வர் - நின்னைப் பெற்ற தாயும் இற்றைநாட் பெரிதும் உரிமை பாராட்டுகின்ற நின் உறவினரும் நீ திருமணஞ் செய்து கொண்ட மனைவிமாரும் உன்னைச் சிறிதும் பேணாமல் கை விட்டு உனக்கும் எனக்கும் என்ன தொடர்புளது நீ யாரோ நான் யாரோ? என்று இகழ்ந்து கூறா நிற்பர்; அந்த நேரத்திலே - வறுமையும் முதுமையும் ஒரு சேர வந்துறுகின்ற அக் காலத்திலே தான்; நோயாரும் வந்து குடி கொள்வர் - காலம் பார்த்துறைகின்ற கடிய நோய்களும் நின்னிடத்தே வந்து குடி கொள்வனவாம்; பின்னை - அவ்வாறாய பின்னர்; பாயாரும் நீயும் அல்லால் ஏது நட்பு ஆம் - நீ கிடக்கின்ற பழம்பாயும் நீயுமே கேண்மை கொண்டிருப்பதன்றி இப் பேருலகத்தில் பிறிதியாதுதான் உனக்கு நட்பாகும்? இப்பொழுதே அதனை எண்ணிப் பார்த்து இம்மைக்கும் மறுமைக்கும் நமக்குத் தோன்றாத் துணையாகின்ற இறைவன் திருவடிகளைப் பற்றிக் கொண் டுய்வாயாக! என்பதாம்.

(வி – ம்.) உயிர் தன்னியல்பையு மறியாது பூதக் கூட்டமாகிய உடலையே தான் என்று கருதி அவ்வுடற்கு வேண்டுவனவற்றையே செய்துகொண்டு அவமே வாழ்நாளைப் போக்குதலான் அவ்விழி தகைமை தோன்ற அடிகளார் ஈண்டு நெஞ்சத்தையே உடலே என்று விளிப்பாராயினர் என்க.

உற்றாருட் டலைசிறந்தவள் பெற்ற தாயே யாகலின் அவளையே முற்படக் கிளந்தெடுத்தோதினர்.

தாழ்ந்திடு நாள்-என்றது வறுமையால் தாழ்வுறுகின்ற காலத்தை. வறியவரைத் தாய் முதலியோர் இகழ்ந்து கைவிடுவர் என்பதனை முற் கூறிய விளக்கங்களானு முணர்க.

அல்லதூஉம்,

"பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினின் அஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை யிலராயின்
மண்டினர் போவர்தம் மக்களும் ஒட்டார்"

எனவும்,

"தொழுமக னாயினும் துற்றுடை யானைப்
பழுமரம் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தால்
பழுமரம் வீழ்ந்த பறவையிற் போப"

எனவும் வருகின்ற வளையாபதிச் செய்யுள்களையும் ஈண்டு நினைக. (சுங - சுச) நோயாரும் பாயாரும் என இளிவின்கண் அஃறிணை உயர்திணையாயின.

இனி வறுமை வந்துழி நல்லுணவு பெருமையானும் கவலையானும் உடல் நலங் குன்றுதலும் பல்வேறு நோய்கட்கும் ஆளாதலின், அந்த நேரத்திலே நோயாரும் குடி கொள்வர் என்றார். கெட்டோர்க்கில்லை கேளும் கிளையும் என்பதுபற்றி பாயாரும் நீயும் அல்லால் ஏது நட்பாம் என்றார். எனவே ஆகூழ் காரணமாக இளமையும் செல்வமும் எய்தியிருக்கும் பொழுதே அவற்றின் நிலையாமை யுணர்ந்து இறைவனுக்கு அன்பு பூண்டொழுகி அவன் திருவருட்காளாதல் வேண்டும் என்று இதனால் அடிகளார் அறிவுறுத்தாராதலு முணர்க.

இனி நீ யாரு என்புழி உகரம் சாரியை. உலக வழக்குமாம்.

(சஎ)

ஆயும் பொழுது மயிர்க்கால்கடோறு மருங்கிருமி
தோயு மலக்குட்டை யாகிய காயத்தைச் சுட்டுவிட்டாற்
பேயு நடன மிடுங்கட மாமென்று பேசுவதை
நீயு மறிந்திலை யோபொரு டேட நினைந்தனையே.

(இ - ள்.) ஆயும் பொழுது நீயும்-இப் பொய்யுடலையே நானென்று செருக்குற்றிருக்கின்ற நெஞ்சமே சான்றோர் இவ்வுடம்பியல்பினை ஆராய்ந்து கூறும்பொழுது நீதானும்; மயிர்க்கால்கள் தோறும் அரும் கிருமி தோயும் - அச்சான்றோர் இந்த வுடம்பானது தனது மயிர்க் கால்கள் எல்லாவற்றினும் காண்டற்கியலாத நுண்ணிய புழுக்கள் திளைத்தற்குக் காரணமான; மலக்குட்டை ஆகிய காயத்தைச் சுட்டு விட்டால் - அழுக்குக் குட்டை போல்வதாகிய இந்த உடம்பை இறுதியில் சுடுகாட்டிற் கொடுபோய்ச் சுட்டுவிட்ட பின்னர்; பேய் நடனம் இடும் கடமாம் - இதுதான் தனக்கென்றோருருவமு மின்றிப் பேய்கள் கூத்தாடுகின்ற வறிய சுடுகாடு மாத்திரையே ஆகும் என்று கூறுவதனை; அறிந்து இலையோ - உணர்ந்து கொள்ள வில்லையோ?; பொருள் தேட நினைந்தனையே - இங்ஙனம் இறுதியிற் சுடுகாடாகவே முடிகின்ற இவ்வுடம்பினைப் பேணும் பொருட்டு நீ பெரிதும் பொரு

தேடிக் குவிக்க வேண்டும் என்று நினைக்கின்றனை யல்லையோ? இப் பேதைமை உனக்கெவ்வாறு வந்தது? என்பதாம்.

(வி - ம்.) முற்செய்யுளிலே உடம்பு உயிர் வாழுங்கால் உண்டாகும் இழிதகைமையை எடுத்துக் கூறிய அடிகளார் அவ்வுடம்பி லுயிர் போயபின் என்னும் என்று இச் செய்யுளால் அறிவுறுத்து கின்றார்.

பூதங்களின் கூட்டரவாலே உருவாகிய இவ்வுடம்பு உயிர் நீங்கிய பின்னர்ச் சுடப்படும். சுட்ட பின்னர் இதற்கெனப் பின்னர் யாதோ ருருவமும் இல்லை. சுடுகாடு என்னும் பெயர்தான் எஞ்சி நிற்கும். இங்ஙனமாகின்ற இவ்வுடம்பைப் பொருளாகக் கருதி இதன்பொருட்டு நிரம்பப் பொருள் தேட வேண்டும் என்றெண்ணுகின்ற நின் மடமை மிகவும் பெரிதுகாண் என்றவாறு.

பேயும் - என்புழி உம்மை சாரியை. கடம்-காடு; சுடுகாடு. (௨௮)

பூணும் பணிக்கல்ல போன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவேன் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே.

(இ - ள்.) அடியேன் – இறைவனே! உன் அடிமையாகிய யான்; என் சிந்தை கெட்டு படுந்துயர் சற்று அல்ல - என் நெஞ்சழிந்து நாள் தோறும் படுகின்ற துன்பம் சிறிதல்ல மிகவும் பெரிது காண்!; பூணும் பணிக்கு அல்ல - அத்துணைத் துன்பமும் எதற்காகப் படுகின்றாய்? எனின், அஃது அடியேன் அழகுக்குப் பூண்டு கொள்கின்ற பொன்மணி முதலியவற்றாலாய அணிகலன் பெறுதற்கு மன்று; பொன்னுக்கு அல்ல - அல்லது பொன்னை நிரம்ப ஈட்டி வைத்துக் கொள்ள வேண்டு மென்று மன்றுகாண்; பூமிதனைக் காணும்படிக்கு அல்ல - அல்லது நிலத்தை விரிவாக்கிப் பெருநிலக் கிழாராக வேண்டும் என்று மன்று காண்; மங்கையர்க்கு அல்ல – அல்லது அழகிய மகளிர்க்குக் கொடுத்து அவரோடு இன்புறுதற்கு மன்றுகாண்!; நல் காட்சிக்கு அல்ல - அல்லது கூத்தாடுதல் முதலிய அழகிய காட்சிகளைக்கண்டு களிக்க வேண்டுமென்று மன்று; சேணும் கிடந்த சிவன் அடிக்கு அல்ல - அல்லது மனமொழிகட் கெட்டாத சிவபெருமானே உன் திருவடி கட்கு நாள் வழி பாடும் சிறப்பு வழிபாடும் செய்து நின்திருவருளைப் பெற வேண்டும் என்பதற்கு மன்றுகாண்!; சாணும் வளர்க்க - என் னுடைய ஒரு சாண் அளவுள்ள இந்தப் பாழும் வயிற்றை வளர்த்துக் கொள்ளவே தான்: என்பதாம்.

(வி - ம்.) நாள்தோறும் பன் முறையும் பசிப்பிணி வந்து வந்து நலிதலாலே பிச்சையேற்று அதனை நிரப்பிக் கோடற்கு முஞ்சர்மனை வாயில்தோறும் சென்று சென்று மாபெருந்துயர் எய்துகின்றேன் காண்! என்று தான் இறைவனே நீ எளியேனை ஆட்கொள்வையோ அறிகிலேன் என்று அடிகளார் வருந்திக் கூறியதிது வென்க.

பசிப்பிணி அத்துணைக் கொடுமை யுடைத்து அதனை ஆற்றும் ஆற்றவிலேன் என் செய்கோ? என்றவாறு. "ஆற்றுவாராற்றல் பசி

யாற்றல்" என ஆசிரியர் திருவள்ளுவரும் அதன் கொடுமை கூறுத லுணர்க.

இவ்வாறு முற்றத் துறந்த முனிவரும் ஒவ்வொரு பொழுதில் சலிப்படைத லுண்டென்பதைத் திருப்புகழ் முதலிய சான்றோர் நூல் களினும் பரக்கக் காணலாம். பசிப்பிணியின் கொடுமையை,

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்" —நல்வழி - ௨௬.

எனவும்,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி"
—மணி - ௧௧: ௭௬ - ௮0.

எனவும் பிறசான்றோரும் ஓதுதலுணர்க. (௬௧)

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடிந்து
கட்டாத லிங்கம் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசையன் றேகுரு நாதன் மொழிந்ததுவே.

(இ - ள்.) வெட்டாத சக்கரம் - நெஞ்சமே உலோகங்களிலே பொறிக்கப்படாத சக்கரமும்; பேசாத மந்திரம்—ஒலியாத மந்திரமும்; வேறு ஒருவர்க்கும் எட்டாத புட்பம் - மற்றொருவருக்கும் எட்டாதிருக் கின்ற மலரும்; இறையாத தீர்த்தம் - தெளிக்கப்படாத நீரும்; இனி முடிந்து கட்டாத லிங்கம் - வழிபாடு முடிந்த பின் பட்டாடையிற் பொதிந்து வையாத சிவலிங்கமும்; கருதாத நெஞ்சம் - இறைவனை நினையாத நெஞ்சமும் கொண்டு; கருத்தினுள்ளே முட்டாத பூசை யன்றே - நெஞ்சினுள்ளே தடைப்படாத வழிபாடு மல்லவோ; குரு நாதன் மொழிந்ததுவே - நமக்கு நம்மாசிரியர் செவியறிவுறுத்தது? அதனையே கடைப்பிடியாகக் கொள்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) இதன்கண் அடிகளார் தம்மாசிரியர் தம்மை ஞான நிட்டை எய்தும்படி செவியறிவுறுத்தனர் ஆதலான் சக்கரம் பொறித்து மந்திரம் கூறி மலர்தூவி நீராட்டி இலிங்கத்தை வைத்து வழிபடுகின்ற வழிபாடுகள் நமக்கு இனி வேண்டா என்று நெஞ்சிற் கறிவுறுத்துகின்றார்.

இதன்கண் வெட்டாத சக்கரம் என்றது திருவருளை; பேசாத மந்திரம் என்றது அவ்வருளின்கண் தான் என்பதறவே மூழ்கி

விடுதலே. பிறர்க்கு எட்டாத புட்பம் என்றது மெய்யுணர்வை; முடிந்து கட்டாத லிங்கம் என்றது தம் மெய்யுணர்விற்குப் புலப்பட்டு அங்கிங் கெனுதபடி எங்கு நிறைந்துள்ள மெய்ப்பொருளே அந்நிலேயில் அவன் என்றுந் தானென்றும் இரண்டாகக் கருத இடனின்றித் தானே அவனய் விடுதலால் கருதாத நெஞ்சம் என்ருர். முட்டாத பூசை என்றது அம்மெய்க் காட்சி எப்பொழுதும் மாருதிருத்தலே. இத் தகைய நிலேயுடையோரையே சீவன் முத்தர் என்ப.

இதனே,

"ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலே நாடுவதொன் றில்லே
சீலமிலே தவமில்லே விரதமொடாச் சிரமச்
செயலில்லே தியானமில்லே சித்தமல மில்லே
கோலமில்லே புலனில்லே கரண மில்லே
குணமில்லே குறியில்லே குலமு மில்லே
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினே டாடலிவை பயின்றிடினும் பயில்வர்"

எனவரும் சித்தியாரானும் (சப - உஅச) உணர்க.

இனி,

"தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம் வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டித்—தம்மையொரு
பூவாகப் பூவழியா மேகொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே யுளன்"

எனவருந் திருக்களிற்றுப்படியாரானும் முடியாத லிங்கம் இறையாத நீர் வேறெருவர்க்கு எட்டாத புட்பம் முட்டாத பூசை முதலியவற்றை உணர்க. இனி

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற இடம் சிவமாம்-நாட்டற்று
நாடும் பொருளனைத்தும் நானவிதமாகத்
தேடும்இடம் அன்று சிவம்.

என்பதனல், சக்கரம் வெட்ட வேண்டாமையும் மந்திரம் ஓத வேண்டாமையும் பிறவும் நுண்ணுணர்வாற் கண்டு கொள்க. (௬0)

எருமுட்டை பிட்கி லுதிர்ந்திடுஞ் செல்லுக் கேவரமுவார்
கருமுட்டை புக்குக் கழலுமேன் ருற்கன துக்கமதாய்ப்
பெருமுட்டுப் பட்டவர் போலழும் பேதையீர் பேத்துகிறீ
ரோருமுட்டும் வீட்டு மரணம மென்றைக்கு மோதுமினே.

(இ - ள்.) கருமுட்டை புக்குக் கழலுமென்றால் - உயிரானது கருவாகிய முட்டையுட் புகுந்து கருவினுள்ளேயே உயிர் அகலுதலாலே

அப்பிண்டம் உயிரின்றிக் கழன்று விழுமாயின் அதன் பொருட்டு; கனதுக்கம் அதாய் - பெருந்துன்பத்தோடே; பெருமுட்டுப் பட்டவர் போல் அழும் பேதையீர் - மிகவும் வாழ்க்கையிற் றடையுண்டவர் போலே அழுகின்ற அறிவிலிகளே! எருமுட்டை பிட்கில் - சாணத் தாலியன்ற எருமுட்டையைப் பிட்டால், உதிர்ந்திடும் செல்லுக்கு எவர் அழுவார் - அதனுட் புக்கிருந்து அப்பொழுது உதிர்ந்து வீழ்கின்ற சிதலுக்காக யார்தாம் அழுவார்? அது போலவே கருவினுள்ளிருக்கும் பொழுதே அழிதலும் உயிர்க்கியல்பே காண்!; அழாதே கொண் மின்! அரன் நாமம் என்றைக்கும் ஓதுமின் - நீயிர் சிவபெருமா னுடைய திருப்பெயரை நாள்தோறும் ஓதுமின்; ஒரு முட்டும் வீட்டும் - அங்ஙனம் ஓதின் உங்கள் வாழ்க்கையில் ஒரு குறையும் வாராமல் அவ்விறைவன் அகற்றுவான் என்பதாம்.

(வி - ம்.) இஃது அடிகளார் ஓரூரில் புகுந்து போம்பொழுது ஓரில்லத்தில் மக்கள் கூடி காகூ என்று கதறி யழுதல் கண்டு அங்ஙனம் அழுவதற்குக் காரணம் யாதென வினவ அவர்கள் இவ்வில்லக் கிழத்தி கருவுற்றிருந்தாள் குழந்தை வயிற்றினுள்ளேயே இறந்து பிறந்தது அதற்கு அழுகின்றேம் என்றாராக அது கேட்ட அடிகளார் அவர்களை நோக்கிக் கூறியது என்றுணர்க.

எரு முட்டையுள் சிதல் புக்கிருத்தல் இயல்பு. அவ்வெரு முட்டை யைப் பிட்டால் அச்சிதல் உதிர்ந்து போகும்; அது போன்ற நிகழ்ச்சியே இந்நிகழ்ச்சியுமாம், இதற்கு அழுவானேன்? இறைவன் திருப்பெயரை நாள் தோறும் ஓதுமின் ஓதின் உங்களுக்குக் குறையொன்றும் வாராது கண்டீர் என்று தேற்றியவாறும் என்க. "பீட்பிதுக்கித் தாயலறக் கோடலால் மற்றதன் கள்ளங் கடைப்பிடித்தல் நன்று" எனவரும் நாலடி நானூறும் காண்க. செல்-சிதல்; கறையான்.

"கருவினுள் அழிவ தாயும் கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனாய் அழிவ தாயும்
தருணனா யழிவ தாயும் தானரைத் தழிவ தாயும்
உருவமே யழிவே யானால் உள்ளபோ தேபார் உய்ய"
—சித்தி - சுப - கஅங.

என்பது அருணந்தி சிவாசாரியார் அருள்மொழி. (ருக)

மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ் செந்தீ
யையாநின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன வாய்மெல்லப் போனதுவே.

(இ - ள்.) செந்தீ ஐயா - சிவந்த தீ வண்ணனாகிய இறைவனே! நின்மாயை நினக்குப்பரிக்கிரக சத்தி மாத்திரையாய்க் காரண நிலையில் ஒன்றாய் அருவமாகிய மாயையினின்றும் நீ உருவாக்கி வெளியே தோற்றுவித்த அம்மாயையின் காரியம். அகிலத்துள்ளே - இவ்வுலகத் துடே; மை ஆடு கண்ணியும் மைந்தரும் வாழ்வும் மனையும் - மை எழுதுகின்ற கண்களையுடைய மனைவியும் அவளீன்ற மக்களும் அவ

ரோடு கூடி வாழ்கின்ற வாழ்க்கையும் அவ்வாழ்க்கைக் கிடனான இல்லமும் இன்னோரன்ன பிறவுமாகிய பலவேறு பொருள்களாகி; மெய்யாயிருந்தது-என் னெஞ்சிற்கு நிலையுதலுடைய பொருள்போலத்தோன்றியிருந்ததுகாண்; நாள் செல நாள் செல - நின்திருவருள் பெற்ற பின்னர் நாட்கள் கழிய நாட்கள் கழிய; வெட்ட வெறும் பொய்யாய் - மிகவும் வறிய பொய்யாகி; பழங்கதையாய் - சுவையற்ற பழங்கதைகளுமாகி; கனவாய் - கனாக்காட்சிப் பொருள்களுமாகி; மெல்லப் போனது - மெல்ல மெல்ல இல்பொருளேயாய் மறைந்து போயிற்றுக் காண் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் உயிர்களை உணர்வில்லாத நிலையினின்றும் படிப்படியாக உணர்ச்சி யுண்டாகி வளரும் பொருட்டு மாயையினின்றும் அவற்றிற்கு உடம்பும் கருவிகளும் இடமும் மனைவிமக்களோடு கூடி நுகர்கின்ற வாழ்க்கையும் படைத்தளித் திருக்கின்றான்.

அவ்வுயிர்கள் அவன் திருவுளப்படியே

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லா மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்"

அநாதிகாலந் தொட்டு எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து அவற்றினூடே தாம் பட்ட பட்டறிவு காரணமாக மெய்யுணர்வு தலைப்பட்டு இறை உயிர் உலகு என்னும் இம்முப்பொருள்களின் இயல்புகளையும் ஆராய்ந்துணர வுணர ஈண்டு மனைவி யென்றும் மக்கள் என்றும் வாழ்க்கை என்றும் இல்ல மென்றும் மெய்ப்பொருள் போன்று காணப்பட்டன எல்லாம் காரண நிலையில் அருவப் பொருளாய் ஒன்றேயாயிருந்த மாயையின் பரிணமங்களேயன்றி உண்மையான பொருள்கள் அன்றென்றும் உணர்ந்து கொள்ளுகின்றன. அந்த நிலையில் இவையெல்லாம் வெட்ட வெறும் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்ல மெல்ல அவ்வுயிருணர்ச்சியினின்றும் கழிந்தொழிந்து போம் ஆதலின் அடிகளார் யான் காணுமனைத்தும் பொய் இவை யெல்லாம் மாயையே என்று மெல்ல மெல்ல உணர்ந்து கொண்டேன் என்று கூறுகின்றனர்.

மாயையினின்றும் இறைவன் உலக முதலியவற்றைப் படைத்தருளுமாற்றைச் சிவஞானபோத முதலிய மெய்ந் நூல்களுள் விரிவாகக் கண்டு கொள்க.

(௬உ)

ஆயாய் பலகலை யாய்ந்திடுந் தூய வருந்தவர்பாற்
போயா கிலுமுண்மை யைத்தெரிந் தாயில்லை பூதலத்தில்
வேயார்ந்த தோளியர் காமவி காரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய் விழிக்கின் றனைமனமே யென்ன பித்துனக்கே.

(இ - ள்.) மனமே என் நெஞ்சமே!; பலகலை ஆயாய் - மெய்யுணர்தற்குக் காரணமான மெய்ந்நூல் பலவற்றையும் கற்று ஆராய்ந்து

தெளிந்தாயுமல்லை; ஆய்ந்திடும் தூய அருந்தவர் பால் போயாகிலும் - நீ கற்று ஆய்கின்றாயில்லை எனினும், மெய்ந் நூல்களை இடையறாது ஆய்ந்து தெளிவு பெற்றுள்ள செயற்கரிய தவவொழுக்க மேற்கொண்ட துறவோர் பாற் சென்று அவரடிகளை வணங்கி அவர்பாற் கேட்டாகிலும்; உண்மையைத் தெரிந்தாய் இல்லை - மெய்ப் பொருளியல் பின்னதென்று தெரிந்து கொண்டாயும் இல்லை; பூதலத்தில் வேய் ஆர்ந்த தோளியர் காம விகாரத்தில் வீழ்ந்து அழுந்தி - அன்றியும் நீயோ மூங்கிலை ஒத்த தோள்களையுடைய மகளிர்பாலுண்டான காம மயக்கமாகிய கடலிலே விழுந்து முழுகி; பேய் ஆய் - பேய்போல மாறி; விழிக்கின்றனை - அதனாலுண்டான துன்பத்தைப் போக்கும் வழி தெரியாமல் திகைக்கின்றாய்; உனக்கு என்ன பித்து - உனக்கு இவ்வாறாயதற்குக் காரணமான பித்துத்தான் யாதோ அறிகின்றிலேனே! என்க.

(வி - ம்.) மக்களாய்ப் பிறந்தவர் அவர்க்கே சிறந்துரிமையுடைய பலவேறு கலைகளையும் கற்றுணர்ந்து மெய்ம்மை யுணர்ந்து உணர்ந்தாங்கு ஒழுகி அப்பிறப்பின் பயனையும் பெற்றுய்தல் வேண்டும். ஒரோவழி தாமே கற்கும் வாய்ப்பிலாதவர் கற்றுணர்ந்து தவவொழுக்கத்தே நிற்கின்ற சான்றோரிடம் சென்று அவரை வணங்கிக் கேட்டாயினும் உண்மையை உணர்ந்து கொள்ளல் வேண்டும். உணர்ந்தவாறொழுகி மக்கட் பிறப்பின் பயனைப் பெறலாம்.

இனி இவ்வாறன்றி, கல்லாமலே வளர்ந்து காளைப் பருவ மெய்திக் காரிகையர்பாற் கழிபெருங் காமமுடையராய் அம்மயக்கத்திலே பெரிதும் அழுந்திப் போனவர் மிகப்பெருந் துயரத்திற்கே ஆளாகிவிடுவர். அத் துயரத்தினின்று தப்புதற்கும் வழி காணாமல் விழிப்பர். இவ்வாறுதல் காமப் பித்தர்க் கியல்பு என்றுணர்த்திய படியாம்.

மக்களாய்ப் பிறந்து வைத்தும் கல்லாதார் காட்டகத் துறைகின்ற கடிய விலங்குகளையே ஒப்பாவார் என்பதனை,

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்" —குறள் - சக0.

எனவருந் திருக்குறளானும்

கற்கும் வாய்ப்பிலாமையாற் கல்லாது விட்டவர் கற்றவர்பாற் சென்று கேட்டு உண்மையுணர்வு பேறுதல் வேண்டும் என்பதனை,

"கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை" —குறள் - சகச.

எனவருந் திருக்குறளானும் உணர்க.

இனி ஈண்டு அடிகளார் கலை என்றது ஞான நூல்களை; ஞான நூல்களைத் தாமே ஓதியும், ஓதுவித்தும், தம்மின் மிக்கார்பாற் சென்று கேட்டும், ஆராய்ந்தும், தெளிவதே மெய்யுணர்வு பெறுதற்கு வழியாகும். இஃதொன்றே வீடு பயப்பதாம். மற்றைய சரியை கிரியை என்பன வீடு பேறு நல்கமாட்டா. ஆதலின் இதனையே ஞானநெறியென்று (சன்மார்க்கம்) கூறுப. இவ்வுண்மைகளை,

" சன்மார்க்கம் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கம் பொருள்பலவும் கீழாக மேலாம்
பதிபசுபா சந்தெரிந்தும் பரசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே "

—சித்தி - சுப - உஎச.

எனவருஞ் சித்தியாரானு முணர்க.

இனி, கழி காமமுற்றோர் பின்னர் உய்தற்கரிய தீமைகளைச் செய்து பெருங்கே டெய்துவார் என்பதனை,

" தீமை யுள்ளன யாவையுந் தந்திடும் சிறப்பும்
தோமில் செல்வமுங் கெடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கும்
ஏம நன்னெறி தடுத்திரு ளுய்த்திடு மிதனுற்
காம மன்றியே யொருபகை யுண்டுகொல் கருதின் "

எனவரும் கந்தபுராணச் செய்யுளானு முணர்க.

பேயாகி என்றது பெறற்கரிய மக்கள் யாக்கை பெற்றும் நின் மருட்சியாலே பேய்ப்பிறப்புற்றாய் என்றிடித்துரைத்த படியாம்.

என்னை ?

" பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு "

எனவரும் திருக்குறளும் காண்க. (இ௩)

அடியா ருறவு மரன்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுள தோபங் கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியா லடியுண்ட வாறேக்கு மேன்றினஞ் சார்ந்திலரே.

(இ – ள்.) படிமீதில் - நெஞ்சமே இந்நிலவுலகத்திலே மக்கள் யாக்கை பெற்ற திருவுடையார்க்கு; அடியார் உறவும் அரன்பூசை நேசமும் அன்பும் அன்றி - சிவனடியாரோடு கேண்மை கோடலும் அச்சிவபெருமானை வழிபாடு செய்தலில் ஆர்வமுடைமையும் இறைவன் பாலும் உயிர்களிடத்தும் அன்பு செய்தலுமாகிய இவைகளே அப் பிறப்பின் பயன் ஆதலல்லது; வேறு பயன் உளதோ - பிறிதொரு பயனும் உண்டோ ? இல்லை; பங்கயன் வகுத்த குடியான சுற்றமும் தாரமும் வாழ்வும் - இவ்வுண்மையை யுணர்ந்தமையானும் இவற்றை யன்றித் தாமரை மலர் மேலிருக்கின்ற நான்முகன் படைத்துள்ள

குடிகளாக வாழ்கின்ற சுற்றத்தாரும் மனைவியும் இவர்களோடு கூடி வாழ்கின்ற வாழ்க்கைக் கியன்ற பிற பொருள்களும்; குயக்கலங்கள் தடியால் அடியுண்டவாறு ஒக்கும் - குயவனால் வனையப்பட்ட மட்பாண்டங்கள் வலியான் தன் கைத்தடியாலடித் திடைப்பதைப் போல ஒரு நொடிப் பொழுதில் அழிந்து விடும்; என்று - என்றுணர்ந்து கொண்டமையானும்; இனம் சார்ந்திலர் - சான்றோர்கள் இவ்வுறவினர் முதலிய தம்மினத்தாரோடு கூடி வாழ்ந்திலர்; துறவு பூண்பாராயினர் என்பதாம்.

(வி - ம்.) படி - நிலவுலகம். உலகில் மக்களாகப் பிறந்தவர்க்கு...வேறுபயனுளதோ என்பது கருத்து. அடியாருறவு ஆண்டவன்பால் ஆற்றுப்படுத்தி விடுதலால் அதனை முற்படவோதினர்.

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

—பராபரக் - கஙுகூ.

என்பது தாயுமானவர் திருவாக்கு.

அன்பு என்றது இறைவன்பாலன்பும் உயிர்களிடத்து அன்பும் என்னும் இருவகை யன்பினையும் குறித்தவாறு.

என்னை?

"ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்"

எனவரும் சித்தியாருங் காண்க. (சுப - கஉக) உயிர்கள்மாட் டன்பில்லாதார் ஈசன்மாட் டன்புடையேம் யாம் எனல் வெட்டவெறும் பொய்யே என்றறிக.

பயனுளதோ என்னும் வினா அதன் எதிர்மறைப் பொருளை வற்புறுத்து நின்றது. ஒருவனுக்குண்டாகின்ற சுற்றமும் மனைவி மக்களும் வாழ்வும் பிறவும் அவரவர் வினைக் கீடாகப் பிரமனாற் படைக்கப்படுதலின் பங்கயன் வகுத்த என்றார். குயக்கலம்-குயவன் வனைந்த மட்கலங்கள். மட்கலங்கள் பலவாயினும் தடியுடையான் ஒரு நொடிப் பொழுதில் அடித்து நுறுக்கி விடுதல் போன்று ஒருவனுக்கு வாய்த்துள்ள சுற்றம் முதலியவற்றைப் போகூழ் ஒரு நொடிப் பொழுதிலே அழித்து விடுதலும் உண்டாகலின் இத்தகையோரைப்பற்றி யிருத்தல் பேதைமையாம் என்று கருதியே பெரியோர் சுற்ற முதலிய இனத்தாரை நீத்துப் போகின்றனர் என்பார் பங்கயன்......சார்ந்திலரே என்றார். (கூச)

ஆங்காரப் போக்கசம் கோபக் களஞ்சிய மாணவந்தா
னீங்கா வரண்மனை போய்வைத்த கூடம்விண் ணீடிவளர்
தேங்கார் பெருமதிற் காமவிலாசமித் தேகங் கந்தல்
பாங்கா யுனைப்பணிந் தேப்படி ஞானம் பலிப்பதுவே.

(இ - ள்.) இத்தேகம் - அடியேனுக்கு வாய்த்துள்ள இந்த உடம்போ; ஆங்காரப் பொக்கசம் – செருக்கு என்கின்ற பொருள் நிரம்பிய ஒரு கருவூலமாகும்; கோபக் களஞ்சியம் - சினமென்னும் சரக்கு நிரம்பிய ஒரு பண்டகசாலையுமாகும்; ஆணவம் தான் நீங்கா அரண்மனை - மேலும் ஆணவமலம் என்னும் அரசன் சிறிது பொழுதேனும் புறம் போகாமல் கொலுவீற்றிருக்குமொரு வலிய அரண்மனையுமாகும்; பொய் வைத்த கூடம் - பொய்யான பொய்யையெல்லாம் குவித்து வைத்துள்ள ஒரு கூடமுமாகும்; விண் நீடி வளர் தேங்கு ஆர் பெருமதில் காமவிலாசம் - வானளாவ உயர்ந்து வளர்ந்த பகைவர் தம்மைக் கண்டு தேங்கி நிற்றலையுடைய பெரிய மதிலையுடைய காமவேள் விளையாட்டயரு மிடமுமாம்; கந்தல்-இவற்றிற்கு மேலும் பழைய கந்தல் போன்றதுமாம்; உனைப் பாங்காய்ப் பணிந்து - எம்மையாளுடைய இறைவனே! இத்துணை இழுக்குடைய இந்த உடம்பைக் கருவியாகக் கொண்டு உன்னை முறைப்படி வழிபாடு செய்து; ஞானம் பலிப்பது எப்படி - எளியேனுக்கு மெய்யுணர்வு கைகூடுவ் தெங்ஙனம்? என்பதாம்.

(வி - ம்.) இறைவனை முறைப்படி வழிபாடு செய்து மெய்ஞ்ஞானம் பெறவேண்டுமானல் சிறிதேனும் செருக்கியிருத்தல் கூடாது. சினம் சிறிதும் இருத்தல் கூடாது. அறியாமை அகன்றிருத்தல் வேண்டும். மறந்தும் பொய்யைப் பேசுதலும் பேணுதலும் கூடாது. ஒரு சிறிதும் காமமிருத்தல் கூடாது. இளமையும் வேண்டும். என்னிடம் மேற் கூறிய தீமை முழுவதும் நிரம்பி யுள்ளன. முதுமையும் வந்தெய்தியது. நான் உன்னை முறைப்படி வழிபாடு செய்து மெய்யுணர்வு பெறுதல் எங்ஙனம் நின் திருவருளே என்னை ஆட்கொண்டருள வேண்டும் என்றவாறு.

ஆங்காரம் அகங்காரம் யான் என்னும் செருக்கு. இனம்பற்றி எனதென்னும் புறப்பற்றும் கொள்க. பொக்கசம் - கருவூலம். களஞ்சியம் - சரக்கறை. காமவிலாசம் - காமக்களியாட்டாடுமிடம். மூப்பினைக் குறிப்பார், கந்தல் - என்றார். ஞானம் கைகூடுதற்கு இளமைப்பருவம் இன்றியமையாதாகும். இது குறித்தே,

“ மூப்பதாம் ஆண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறுருயிற்—செப்பும்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமாம் மூப்பு ”

என ஓதப்பட்டதென்க.

பாங்கு - முறை. அவை: சரியை கிரியை யோகங்கள். இம்மூன்றும் ஞானம் பெறுதற்குக் காரணமாம். இவற்றை விரிந்த நூல்களுட் காண்க. (௩௩)

ஒழியாப் பிறவி யெடுத்தேங்கி யேங்கி யுழன்றநெஞ்சே
யழியாப் பதவிக் கவுடதங் கேட்டி யநாதியனை
மழுமான் கரத்தனை மால்விடை யானை மனத்திலுன்னி
விழியாற் புனல்சிந்தி விம்மி யழுநன்மை வேண்டுமென்றே.

(இ-ள்.) ஒழியாப் பிறவி எடுத்து ஏங்கி ஏங்கி உழன்ற நெஞ்சே- ஓய்வில்லாமல் உலகின்கண் துன்பமல்லது தொழுதக வில்லாத பிறப்பினை எடுத்து அதனாலுறுகின்ற துன்பங்காரணமாகப் பெரிதும் ஏக்கமுற்றுப் பிறப்புத் தோறும் பிணிமூப்புச் சாக்காடுகளிலே எண்ணிறந்த காலங்கள் வருந்திய என் பேதை நெஞ்சமே!; அழியாப் பதவிக்கு அவுடதம் கேட்டி - அப்பிறவிப்பிணி தீர்ந்து அழிவில்லாத வீடுபேற்றினை யுற்றுப் பேரின்பத் தமர்ந்து வாழ்தற்கியன்ற மருந்தொன்றுளது அதனைக் கூறுவேன் கேட்டுய்வாயாக! அதுதான் யாதெனின்; அநாதியனை - தோற்றமில்லாதவனும்; மழுமான் கரத்தனை - தீயையும் மானையும் ஏந்தியுள்ள திருக்கைகளை யுடையவனும்; மால் விடையானை - பெரிய எருதாகிய ஊர்தியை யுடையவனும்; மனத்தில் உன்னி-ஆகிய சிவபெருமானைப் பேரன்போடு நின் உள்ளத்திலே நினைந்து நினைந்து; விழியால் புனல் சிந்தி - ஆராமையால் நின் கண்களினின்றும் கண்ணீருகுத்து; விம்மி - உள்ளம் விம்மி விம்மி; நன்மை வேண்டும் என்று அழு - நின் திருவருட் பேறாகிய நலம் அடியேற் களித்தருள வேண்டும் என்று இரந்து இடையறாது அழுவாயாக. அவ்வாறழுவதே அந்த மருந்தாகுங் காண்! என்பதாம்.

(வி - ம்.) பிறவிப்பிணியிற் பட்டு அளவில்லாத காலமாகத் துன்புற்றுழன்று கையறவெய்திக் கலங்குகின்ற நெஞ்சே, இப் பெரும்பிணி தீர்த்தற்கு மருந்தொன்றுளது காண். அம்மருந்தினை உட்கொண்டால் இப்பிறவிப்பிணி தீர்ந்து அழிவில்லாத பேரின்பப் பெருவாழ் வெய்துவை. அஃதியாதெனின், சிவபெருமானை உள்ளத்திலன்போடு நினைந்து உள்ளுருகி அவன் திரு முன்னர்க் கண்ணீர் சிந்தி நின்று அவனருள் வேண்டு மென்று அழுவதே யாம். இங்ஙனம் அழுதால் நீ நின் பிறப்புழற்சியாகிய பிணி தீரப்பெற்று அவன் திருவடி நீழலிலிருத்தலாகிய அழியாப் பதவியை அடைவது திண்ணம் என்று அறிவுறுத்தவாறு.

இனி ஆசிரியர் திருவள்ளுவனார்

> "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
> மனக்கவலை மாற்ற லரிது"

எனவும்,

> "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடுவாழ் வார்"

எனவும், அறிவுறுத்தலும் ஈண்டு அடிகளார் அறிவுறுத்துதலும் ஒரே கருத்தாம் என்க.

அழுதல், அன்புடைமையின் மெய்ப்பாடாகும். அன்பின்றிச் செய்யும் வழிபாடு வறிய நடிப்பே; பயன் சிறிதுமில்லை. ஆதலின் அழுதலையே மருந்தென்றார்.

> "அழவல் லவராடியும் பாடியும்
> எழவல்லவ ரெந்தை யடிமேல்

விழவல்லவர் வீழிம் மிழலை
தொழவல்லவர் நல்லவர் தொண்டே"

எனத் திருஞானசம்பந்தரும்,

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப்
போற்றிசயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே"

எனவும், "அழுதால் உன்னைப் பெறலாமே" எனவும் மணிவாசகப் பெருந்தகையாரும் ஓதியருளுதலு முணர்க. (இசு)

நாய்க்கோரு சூலு மதற்கோர் மருத்துவ நாட்டிலுண்டோ
பேய்க்கோரு ஞானம் பிடிபடு மோபெருங் காஞ்சிரங்காய்
ஆக்குவ ரார தருந்துவ ராரது போலுடம்பு
தீக்கிரை யாவதல் லாலேதுக் காமிதைச் சேப்புமினே.

(இ - ள்.) நாய்க்கு ஒரு சூலும் அதற்கு ஓர் மருத்துவம் நாட்டில் உண்டோ-அன்பர்களே நாய் கருவுற்றமை கருதி அதற்கு ஒரு சீமந்தச் சடங்கு செய்வாரும் அந்நாய் யீன்பதற்கு ஒரு மருத்துவம் பார்ப் போரும் உலகத்திலுளரோ?; பேய்க்கு-பேய்களுக்கு எத்தனை அறிவுரை கூறினும்; ஒரு ஞானம் பிடிபடுமோ - ஏதேனும் ஒரு மெய்யறிவு அவற்றின் உளத்தில் பதியுமோ?; பெருங் காஞ்சிரங்காய் ஆக்குவர் ஆர் அது அருந்துவர் ஆர் அதுபோல் - நச்சுத்தன்மையுடைய பெருங் காஞ்சிரையின் காயைக் கறி சமைப்பவர் தாம் யாருளர்; சமைத்தாலும் அதனை யார் தாம் உண்பார்; அங்ஙனமே: உடம்பு தீக்கிரை ஆவ தல்லால் - இந்த உடம்பானது இறுதியில் நெருப்புக் குணவாவதல்லது; ஏதுக்கு ஆம் - எதற்கேனும் பயன்படுமோ? படாதன்றே? இதற்கு மறுமொழி சொல்லுங்கள் என்பதாம்.

(வி - ம்.) இத்திருப்பாடல் பத்ரகிரியார் என்னும் அரசத்துற விக்கு அடிகளார் செவியறி வுறுத்திய தென்பர். உடம்பினை அணி செய்வதும் அதற்குச் சுவையுடைய உணவு தேடித்தருதலும்; நாய் சூல் கொண்டதற்காகச் சீமந்தம் என்னும் சடங்கு செய்வது போலாகும். இவ்வுடம்பிற்குச் சிறப்புச் செய்தல். நாய் குட்டியீன்றுழி மருத்துவஞ் செய்தலோடொக்கும். இவ்வுடம்பு நோய்வாய்ப்பட்டுழி மருந்துண்ணல் முதலியன. அறிவிலிகளுக்கு மெய்யறிவு கூறுதல் பேய்க்கு அறிவுரை கூறுதலோடொக்கும். அவர்க்கு அறிவுரை சிறிதும் உளத்தில் பதியாது. இவ்வுடம்பு என்றேனும் தீக்கிரையாவதன்றி இதனால் ஒருபயனும் உண்டாகாது. காஞ்சிரங்காய்க்கறி போல இவ்வுடம்பு அணி செய்தாலும் பயன் படாது என்றறிவுறுத்தபடியாம்.

சூல் - ஆகு பெயராய் சூல் கருதிச் செய்யுஞ் சடங்கினைக் குறித்து நின்றது. (௫௭)

கச்சிற் கிடக்குங் கனதனத் திற்கடைக் கண்கள்பட்டே
இச்சித் திருக்கின்ற வேழைநெஞ் சேயிம வான்பயந்த
பச்சைப் பசுங்கொடி யுண்ணு முலைபங்கர் பாதத்திலே
தைச்சுக் கிடமன மேயொரு காலுந் தவறில்லையே.

(இ - ள்.) கச்சில் கிடக்கும் கன தனத்தில் கடைக்கண்கள் பட்டு - இளமகளிரின் முலைக்கட்டாகிய கச்சின் உள்ளே இருக்கின்ற பருத்த முலைகளின் மேல் நீ கள்ளமாக நோக்கிய நின்னுடைய கடைக் கண் பார்வை வீழ்ந்தமையாலே; இச்சித்து இருக்கின்ற ஏழை நெஞ்சே - அவற்றை நுகர்தற்குப் பெரிதும் அவாவி யிருக்கின்ற எளிமையுடைய என் நெஞ்சமே கேள்; அவற்றை விரும்புதல் பெரிதும் பிழையாங் காண் !; மனமே - நெஞ்சே கேள் ! நீ அவற்றை மறந்து; இமவான் பயந்த பச்சைப் பசுங்கொடி உண்ணுமுலை பங்கர் - இமயம் என்னும் மலையரசன் தவஞ்செய்தீன்ற மிகவும் பசுமையான பூங்கொடி போல்வாளாகிய உண்ணுமுலை யம்மை என்னும் உமாதேவியாரைத் தனதொரு கூற்றிலே கொண்டருளிய சிவபெருமானுடைய; பாதத்திலே தைச்சுக்கிட - திருவடிகளிலே எப்பொழுதும் பதிந்திருப்பாயாக !; ஒரு காலும் தவறு இல்லை - அங்ஙனம் அவன் திருவடியிலே பதிந்திருப்பாயாயின் உனக்கு ஒரு பொழுதும் தீவினை சிறிதும் உண்டாடாகாது காண் என்பதாம்.

(வி - ம்.) கச்சு - மகளிர் முலைக்கட்டு. கடைக்கண்கள் பட்டே என்றது நீ கள்ளமாக நோக்கிய கடைக்கண்கள் பட்டே என்பது பட நின்றது. அங்ஙனம் நோக்குதற்குக் காரணம் அதன்கட் பாயும் தன் மனத்தை அடக்கும் ஆற்றலின்மையே யாதலின் ஏழை நெஞ்சே என்று விளித்தார்.

இங்ஙனமே,

" கோட்டியுட் கொம்பர் குவிமுலை நோக்குவோன்
ஒட்டை மனவன் உரமிலி என்மரும் "

எனவரும் பரிபாடலும் (௧௨ : ௫௦ - ௧.) நோக்குக.

மகளிர் உறுப்புக்களில் ஆடவரைப் பெரிதும் கவரும் ஆற்றலுடையவை அவர் தம் கனதனங்களே ஆதலான் அவற்றை விதந்தெடுத்தோதினர்.

இனி இறைவன் திருவடிகளிலே பதிந்து கிடப்பின் தவறு ஒரு காலும் இல்லையே என அறிவுறுத்தினமையின் கனதனத்தை இச்சித்திருப்போர்க்கு எப்பொழுதும் தவறுகள் உண்டாகும் என்றறிவுறுத்தாருமாயிற்று. தவறு - தீவினை. இவற்றை இச்சித்தலாலுண்டாகும் தீவினைகளை இராமாவதாரம் முதலிய காப்பியங்களினும் உலகியலினும் நன்கு காணலாம்.

இனி மன முதலிய அகக்கருவிகள் ஒருவனுடைய ஊழ்வினைக் கேற்ப இயங்குவனவன்றி அவன் அறிவின் வயப்பட்டியங்குதலின்று. ஆகவே நன்னெறி நிற்போர் தம்மன முதலியன தீநெறிக்கட் செல்லுங் கால் அவற்றின் வலியடக்கித் தம்மை நன்னெறியினுய்த்து ஆட் கொள்ள வேண்டும் என இறைவன்பாற் றஞ்சம் புகுதல் வேண்டும். அங்ஙனம் தஞ்சம் புகுவார் கருவிகளைத் தீ நெறிக்கட் செல்லாமல் இறைவன் தடுத்தாள்வான் என்பர் சான்றோர். இக் கருத்தே பற்றி ஈண்டு அடிகளார் தம் நெஞ்சம் மகளிர் கனதனத்திற்பட் டிச்சித்துத் தீ நெறி புகாமைக்கு வழி கூறுவார், நீ உண்ணு முலைபங்கர் பாதத் திலே தைச்சுக்கிட என்றறிவுறுத்தனர். தைச்சுக்கிட என்பது உறுதி யாகப் பற்றிக்கொள் என்றவாறு. இவ்வுண்மைகளை அருணந்தி சிவா சாரியார்,

"இந்திரிய மெனைப்பற்றி நின்றே என்வசத்தின்
 இசையாதே தன்வசத்தே யெனையீர்த் திவற்றைத்
தந்தவன்றன் ஆணைவழி நின்றிடலால் என்றும்
 தானறிந்திட் டிவற்றினோடுந் தனையுடையான் றாள்கள்
வந்தனைசெய் திவற்றின்வலி யருளினால் வாட்டி
 வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேல்
மூர்த்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகள்
 மூளாவங் காளாகி மீளா னன்றே"

என்றருளிச் செய்தலானும் (சித்தி - சுப - கூ0க.) உணர்க. (கூஅ)

மானார் விழியைக் கடந்தேறி வந்தனன் வாழ்குருவுங்
கோனாகி யென்னைக் குடியேற்றிக் கொண்டனன் குற்றமில்லை
போனாலும் பேறிருந் தாலுநற் பேறிது பொய்யன்றுகாண்
ஆனாலு மிந்த வுடம்போ டிருப்ப தருவருப்பே.

(இ - ள்.) மானார் விழியைக் கடந்து ஏறி வந்தனன் - திரு வருட்டுணை கொண்டு அடியேன் மான்விழி போன்ற மகளிருடைய விழியின் அழகினைக் கண்டு மயங்கும் நிலையினைக் கடந்து தெய்வம் என்னும் ஒரு நினைவு தோன்றப்பெற்று உயரிய அந்த நிலையிலேறி வந்தேன்; கோன் வாழ்குருவும் ஆகி - என்னுள்ளத்திற் புகுந்து வாழ் கின்ற இறைவன்றானே ஞானாசிரியரும் ஆகி என்னெதிர் வந்து; என்னைக் குடியேற்றிக் கொண்டனன் - தமது திருவருட் பார்வை யாலே அடியேனைத் தமது திருவருளுலகத்துக் குடியேறச் செய்து ஆட் கொண்டருளினன், போனாலும் குற்றமில்லை - இனி இந்தவுடல் அழிந்து போனாலும் அதனால் குற்றம் யாதுமில்லை; பேறு - (யான் இவ்வுடம்பு கருவியாகப் பெற்றுள்ள பேறு இனி என்று மழியாத பேறேயாம் என்பதில் ஐயமில்லை; ஆதலால் இத்தகைய இவ்வுடல் அழியாதிருப்பினும் அதுவும் நற்பேறேயாம் என்று எண்ணவும் இட முளது; இது பொய் அன்று காண் - யான் கூறுமிது புனைந்துரை யன்று வாய்மையேயாம்; ஆனாலும் - அப்படி யிருந்தாலும்; இந்த வுடம்போடு இருப்பது அருவருப்பே - இந்த உடலோடு யான் கூடி

யிருப்பது மட்டும் எனக்கு அருவருப்பாகவே இருக்கிறது. அதற்குக் காரணம் கூற வறியேன் என்பதாம்.

(வி - ம்.) இத்திருப்பாடல் அடிகளார் தம்முட லிருக்கவே வீடு பேறெய்திய பின்னரும் அவ்வுடல் தான் நுகர்ச்சிக்கென முகர்ந்து கொண்டுள்ள பிராரத்த வினை காரணமாக உயிர்த்திருத்தல் கருதிக் கூறியபடியாம் என்றுணர்க. பிராரத்த வினையாவது சஞ்சித வினைக் குவியலினின்றும் உயிர்தான் எடுக்கும் ஒரு பிறப்பு மாத்திரைக்கே முகந்து கொண்டுள்ள வினைப்பகுதி.

உயிர் உடலின் கண்ணதாயினும் பற்றற்ற பொழுதே வீடு எய்தி விடும். வீடு பெற்ற பின்னரும் அவ்வுடலின் பிராரத்தம் இருக்குந் துணையும் அவ்வுடம்போடே உயிரும் இருப்பதாகும். இத்தகைய நிலையினை எய்தியவரைச் சீவன் முத்தர் என்று கூறுவர்.

ஈண்டு அடிகளார் புல்லாகிப் பூடாய்ப் பிறவுமாய் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து இவ்வுடம்பிலேயே வீடு பேறெய்தினமை கருதின் இவ்வுடல் நன்றிகூறுந் தகுதியுடையதாகும். இனி, இவ்வுடல் அழிவதனால் இழப்பும் இல்லை. அழியா திருப்பதனால் ஊதியமும் இல்லை. அங்ஙனமாயினும் என்னவோ இவ் உடலோடிருப்பது அடியேனுக்கு அருவருப்பாகவே உளது எனத் தமது அனுபவ வுண்மையைக் கூறுகின்றனர். அந்த அருவருப்பிற்குக் காரணம் கண்டு கூறுதல் நம்மனோர்க்கு அரிதா மென்றமைக.

ஈண்டு அடிகளார் மக்கள் பிறப்பாகிய பெருங்கடலில் வீழ்ந்து துன்புறுவதற் கெல்லாம் தலைசிறந்த காரணம் அவர் மாதர்பால் மயங்கிக் கிடக்கும் காமமே யாகும்; அந்தக் காமம் ஒன்றும் ஒழியின் ஏனைய தடைகள் எல்லாம் தாமே அழிந்தொழியும் என்னும் தமது கருத்துத் தோன்றுமாறு மாஞர் விழியைக் கடந்து ஏறிவந்தனன் என்றருளிச் செய்தலுணர்க. உலகியல் நிலையினின்றும் திருவருள் நிலைக்கு உயர்ந்தேன் என்பது தோன்றக் 'கடந்து' என்றொழியாது ஏறி என்றும் கூறினர்.

இனி இவ்வாறு பக்குவமுற்ற நிலையினைச் சத்திநிபாத மெய்திய நிலை என்பர். இச் சத்திநிபாத மேவும் நிலைவந்தெய்தியவர்க்கு ஞானசிரியர் தாமே வலிய வந்து திருவருள் பாலிப்பர் என்ப. அந்த நிலையில் வலிய வந்து மெய்யுணர்வு விளக்கஞ் செய்வார் மாந்தருள் ஒருவராக விருப்பினும் அவர் வாயிலாய் இறைவனே எதிர்வந்து அருள் செய்தனன் என்றும் அவனே தனக்கு முழுமுதலாகிய இறைவனும் ஆவன் என்றும் கருதுதல் நன்மாணுக்கரியல்பாம். இவ்வியல்பு தோன்ற ஈண்டு அடிகளாரும் வாழ் குருவும் வந்து என்னைக் குடியேற்றிக் கொண்டனன் என்னாது வாழ்கோன் குருவுமாகி வந்து என்னைக் குடியேற்றிக் கொண்டனன் என்றருளிச் செய்தலுணர்க.

இனி இத்திருப்பாட்டின் கருத்துக்களை.

"சூரியகாந் தக்கல்வி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்
ஆரியனும் ஆசான்வந் தருளாற் றோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றுந் தோன்றத்

தூரியனுஞ் சிவன்தோன் றுந் தானுந் தோன்றும்
தொல்லுலக மெல்லாந்தன் னுள்ளே தோன்றும்
நேரியனுய்ப் பரியனுமாய் உயிர்க்குயிரா யெங்கும்
நின்றநிலை யெல்லாமுன் னிகழ்ந்து தோன்றும்"

—சித்தி - சுப - உ௮௦.

எனவும்,

"மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாதம்
மேவுதலும் ஞானம்விளைந் தோர்குருவின் அருளால்
புக்கறுட்டித் தேநிட்டை புரிந்து ளோர்கள்
பூதலத்தில் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டில்
தபனியத்தில் சமபுத்தி பண்ணிச்சங் கரனே
டொக்கவுரைத் திவரவனே அவன்இவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன்தோற்ற மொன்றுமே காண்பர்"

எனவும் வரும் அருணந்தி சிவாசாரியார் திருவாக்கானும் (சுப - உ௮க.) உணர்க. (௫க)

சற்றுகினுந் தன்னைத் தானறி யாய்தனை யாய்ந்தவரை
யுற்று கிலுமுரைக் கப்போருந் தாயுனக் கானநிலை
பற்றுய் குருவைப் பணியாய் பரத்தையர் பாலிற்சென்றேன்
பேற்றுய் மடநேஞ்ச மேயுனைப் போலில்லை பித்தனுமே.

(இ - ள்.) மடநெஞ்சே - அறியாமையுடைய என் நெஞ்சமே நீதான், தன்னைத் தான் சற்று ஆகினும் அறியாய் - உன்னை வறிய பூதக் கூட்டமாகிய இந்த உடலாகவே நினைத்து அதற்காவன செய்த லன்றி உனதியல்பினை ஒரு சிறிதேனும் ஆராய்ந்து அறிந்திலை; தனை ஆய்ந்தவரை உற்று ஆகிலும்-அங்ஙனம் அறியாயாயினும் தனதியல்பினை ஆராய்ந்துணர்ந்த சான்றோர்பாற் சென்று வழிபட்டு நின்னியல்பிஃ தென்று, உரைக்கப் பொருந்தாய் - அவர் அறிவுறுத்தவும் நீ கேட் டமைந்தாயில்லை; உனக்கு ஆனநிலை பற்றுய் - உனது செவ்விக்கேற்ற தொரு நெறிபற்றி நின்றுயுமல்லை; குருவைப் பணியாய் - உனக்குச் செவியறிவுறுக்கின்ற ஞானசிரியரையே கடவுளாகக் கருதி வணங்கு வாயுமல்லை; பரத்தையர்பாலிற் சென்று என் பெற்றுய் - இவ்வாறு செய்யக் கடவனவற்றுள் யாதொன்றுஞ் செய்யாமல் காமமே கன்றி விலைமகளிர்பால் சென்று சென்று நீ இற்றைநாள்காறும் என்ன பேறு பெற்றனை; பித்தனுமே உனைப்போலில்லை - உலகின்கட் பித்தேறியவன்றானும் உன்னைப் போலக் கெட்டவனில்லை; என்பதாம்.

(வி - ம்.) தன்னைத்தான் அறிதலாவது:—இறை உயிர் உலகு என்னும் முப்பொருள்களுள் நடுவணதாகிய உயிர்ப் பொருளாகிய தன்னியல்பினை ஆராய்ந்தறித லென்க. தன்னைத்தானறியுமாற்றை,

"உளதில தென்றவி னெனதுட லென்றலின்
ஐம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையின் உணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தநுவினு ளான்மா"

எனவரும் சிவஞானபோதம் (நூற்பா - ௩) முதலிய மெய்கண்ட நூல்களுள் ஆங்காங் குணர்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

கற்றிலனாயினும் கேட்க என்பது பற்றி, தனை ஆய்ந்தவரை உற்றுகிலும் உரைக்கப் பொருந்தாய்; ஆய்ந்தவர்பாற் கேட்டலும் அருமைத்தென்பது தோன்ற உரைக்கப் பொருந்தாய் என்றவாறு. உரைக்கப் பொருந்துதலாவது: நல்லாசிரியர் இரங்கி இவனுக் குரைத்தல் வேண்டும் என்றியையுமாறு அவர்பால் மெய்யன்போடு சென்று ஆர்வத்தோடு வழிபட்டிருத்தல் என்க. உனக்கான நிலை என்றது உன் தகுதிக் கேற்றதொரு நெறியில் என்றவாறு. இறைவனருள் வேட்டோர் அவ்விறைவனைச் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வகை நெறியினுள் தன்னியல்பிற் கேற்றதொரு நெறி பற்றி வழிபடுதல் வேண்டுமாகலின் அங்ஙனம் கூறினர்.

இனி தனக்கானதொரு நெறியை அறிதற்கும் நல்லாசிரியன் வாயிலாகவே வேண்டுமாகலின் குருவைப்பணியாய் என்றார்.

இவற்றை,

"ஞானயோ கக்கிரியா சரியை நாலும்
நாதன்றன் பணிஞானி நாலினுக்கு முரியன்
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கும் உரியன்
யோககிரி யாவான்றான் ஒண்கிரியை யாதி
ஆனவிரண் டினுக்குரியன் சரியையினி னின்றோன்
அச்சரியைக் கேயுரியன் ஆதலினால் யார்க்கும்
ஈனமிலா ஞானகுரு வேகுருவும் இவனே
ஈசனிவன் றானென்றும் இறைஞ்சி யேத்தே"

எனவரும் சித்தியாரானும் (சுப - ௩உசு) உணர்க.

இனி இவ்வாறு நன்னெறிக்கண் நடவாமல் பரத்தையர்பால் நீ சென்று பெற்றது பெரும்பழியே யன்றிப் பேறுதான் யாது என்பார் என் பெற்றாய் என்று வினவினர். பித்தர் செயலுக்குப் பழியில்லை நின் செயலுக்குப் பழியுண்மையின் பித்தனும் உனைப்போலில்லை என்றிகழ்ந்தார். (௬௦)

உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட சாந்தையு மூத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகி லேனுயர் பொன்னெனவே
ஒளியிட்ட தாளிரண் டுள்ளே யிருத்துவ துண்மையென்று
வெளியிட் டடைத்துவைத் தேனினி மேலொன்றும்
வேண்டிலனே.

(இ - ள்.) உளியிட்ட கல்லேயும் ஒப்பு இட்ட சாந்தையும் - அன்புடையீர்! அடியேன், கற்றச்சர்கள் தம்முளிகொண் டடித்தியற்றிய இறைவன் திருவுருவங்களென்னும் கல்லேயும், சிற்பிகள் அவ்விறைவன் திருவுருவத்திற்கு ஒப்பாகத் தங் கலைத்திறத்தாலியற்றிவைத்த சுண்ணத்தையும்; ஊத்தை அறப்புளி இட்ட செம்பையும் - களிம்பு நீங்கும்படி புளிச்சாத்திட்டுத் துலக்கிய செம்பாலியன்ற உருவத்தினையும்; போற்றகிலேன் - யானிப்பொழுது வழிபாடு செய்யும் வழக்கத்தைக் கைவிட்டு விட்டேன்; அங்ஙனம் கைவிட்டமைக்குக் காரணம் அவையிற்றை வணங்குதல் அறியாமை யென்பதன்று. அவற்றை வணங்கலும் பலர்க்கு இன்றியமையாததே ஆயினும்; உயர் பொன் எனவே ஒளியிட்ட தாள் இரண்டு உள்ளே இருத்துவது உண்மை என்று - அவ்விறைவனுடைய உயரிய பொன் போன்று ஒளிவிடுகின்ற திருவடிகளிரண்டனையும் அடியேன் நெஞ்சமாகிய தாமரை மலரின் மேல் இருத்திவைத்தலே வாய்மையான இறை வழிபாடு என்றுணர்ந்து; வெளியிட்டு - அன்பராயினர்க்கும் இக்கருத்தை வெளியிட்டு; அடைத்து வைத்தேன் - அத்திருவடிகளை என் நெஞ்சத்தாமரையின்மே லெப்பொழுதும் அகலாதவாறு நன்கு இருத்தி வைத்துள்ளேன்; மேல் ஒன்றும் வேண்டிலேன் - இதற்குமேல் இறை வழிபாடாக யாதொன்றனையும் விரும்புகிலேன். இதுவே யான் கல் முதலியவற்றாலியன்ற திருவுருவங்களைத் தொழாது விட்டமைக்குக் காரணம் என்றுணர்மின் என்பதாம்.

(வி - ம்) இத்திருப்பாட்டு அடிகளார் சீவன் முத்தராம் நிலைமை எய்திய பின்னர், திருக்கோயில் வழிபாடு முதலியன இன்றி வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்துப் பார்த்தால் உலகத்தவர் போன்று திரிகின்ற காலத்தே சிலர் அடிகளாரைக் கண்டு நீயிர் திருக்கோயில் புக்கு இறைவன் திருவுருவத்தை வணங்கா திங்ஙனம் வாழ்நாளை வீணுக்குவானேன்! என்று வினவ அவர்களுக்கு விடையாகத் திருவாய் மலர்ந்தருளப்பட்டது என்றுணர்க.

இதனுல் அடிகளார் திருக்கோயில் முதலியவற்றிலுள்ள கல் முதலியவற்றுலாய இறைவன் திருவுருவங்களைப் போற்றும் வாயிலாகவே மக்கள் இறைவன் திருவடிகளை அடைதல் கூடும். ஆயினும் அவற்றை வழிபடுதல் உபாயங்களே அல்லது அவ்வழிபாடுகளே உண்மையான வழிபாடாக மாட்டாது. அடியேன் எத்துணையும் பல பழைய பிறப்புக்களிலே அத்திருவுருவ வழிபாடு செய்து செய்து உயர் நிலையை எய்தி விட்டேன். அஃதாவது அவ்விறைவன் அருளாலே அவன்றாள் வணங்குதலாலே அவ்விரண்டு திருவடிகளும் என் நெஞ்சத்தாமரை மேல் தாமே விரைந்து எழுந்தருளப் பெற்றேன். இங்ஙனம் பெற்றமையால் அவற்றை யான் அன்பெனுங் கைகளாலே சிக்கெனப் பிடித்து அவ்வகத் தாமரையிலேயே இருத்திக்கொண்டு விட்டேன். இனி அவை அகலவும் மாட்டா. ஆண்டவன் திருவடிகளை இவ்வாறு என்னுள்ளேயே அகப்படுத்திய யான் அவற்றை வழிபட வேறெங்குப் போவேன். இங்ஙனமாதலின் அடியேன் ஆண்டவனை வழிபடும் பொருட்டுக் கல் முதலியவற்றை வணங்குகின்றிலேன் என்று அவர்கட்குச் செவியறிவுறுத்தார் என்க. இத்திருப்பாட்டிற்கு இவ்வாறு செம்பொருள் காணமாட்டாதார் தாந்தாங் கண்டவாறே உரைகூறுவாராயினர்.

கல் - கல்லாலியன்ற இறையுருவம். சாந்து - சுண்ணம். சுண்ணத்தாலியன்ற திருவுருவம். செம்பு - செம்பாலியன்ற திருவுருவம். சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு நிலையிலுள்ளாரும் திருக்கோயிலுள்ளிருக்கும் திருவுருவத்தைச் சிவன் எனவே கண்டு வழிபாடு செய்வது முறையேயாயினும் ஞான முதிர்ந்த சீவன் முத்தராயினர் அவ்வழிபாடு செய்யினும் செய்வர் செய்யாது விடினும் விடுவர் என்க. அத்தகையோர்க்குத் திருக்கோயில் வழிபாட்டினால் வரும் ஊதியமும் இல்லை வழிபடாமையா லுண்டாகும் இழப்பு மில்லை என்றறிக.

இவற்றை;

"பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற—பற்றதனைப்
பற்றிவிடில் அந்நிலையே தானே பரமாகும்
அற்றமிது சொன்னேன் அறி"

எனவருந் திருக்களிற்றுப் படியாரானும் (௯௦) உணர்க. (சுக)

அடிகளார் தம்மன்னையார்க்கு இறுதிக் கடனியற்றுங்கால் அன்னையார் பூதவுடலுக்குத் தீயிட்ட பொழுதும் வாய்க்கரிசி யிடும் பொழுதும் திருவாய் மலர்ந்தருளிய வெண்பாக்கள் பின்வரும் பத்து மென்ப.

இஃது அன்னையுடம்பினை ஈமவிறகின் மேல் கிடத்தியபொழுது பாடியது.

வெண்பா

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி.

(இ - ள்.) ஐயிரண்டு திங்களா - பத்துத் திங்கள்காறும் தன் வயிற்றிலே சுமந்திருந்து; அங்கம் எலாம் நொந்து பெற்று - கருவுயிர்க்குங் காலத்திலே தன்னுடம்பு முழுதும் மிகவும் நோதலாலே பெரிதும் வருந்தி; பையல் என்ற போதே பரிந்து எடுத்து - பிறந்த மகவு ஆண் மகவு என்று அருகிலிருந்தோர் கூறக்கேட்ட வுடனேயே தனது வருத்த மெல்லாம் மறந்து என்பால் அன்பு கூர்ந்து; இரு செய்ய கைப்புறத்தில் ஏந்தி - தனது இரண்டு கைகளாலும் எடுத்து; கனகமுலை தந்தாளை - பொன்னிறமமைந்த தன் முலைப்பாலை ஊட்டி என்னைப் பேணி வளர்த்த என் அருமை அன்னையை; இனி எப்பிறப்பில் காண்பேன் - இனி அளியேன் எந்தப் பிறப்பிலே பார்ப்பேன்மன்! என்பதாம்.

(வி - ம்.) முற்றத் துறந்த முனிவராயினும் அன்பைத் துறக்க லாகாமையின் அடிகளார் அன்பு கடலெனப் பொங்கி எழுதலாலே ஆற்றுமையுற்று இவ்வாறு வாய்திறந்து கூறி யரற்றினர் என்க.

என்னை ?

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

—குறள் - எக.

எனவரும் அருமைத் திருக்குறளும் காண்க.

இனி அன்னைதானும் முன்னறி தெய்வம் ஆதலின் அவள்பால் கொண்டுள்ள அன்பு இறையன்பிற் பிறிதாகாது. ஆதலின் அடிகளார் தம் அன்னையைக் கண்கண்ட கடவுளாகக் கருதி யிருந்தமையால் அக்கடவுள் தம் காட்சியினின்றும் மறைந்துழி அன்பினுல் ஆராமை கொண்டு இனி எப்பிறப்பிற் காண்பேன்! என்று எங்குவாராயினர் என்க.

கருவுயிர்க்கும் மகளிர் பெரிதும் துன்புறுதலியல்பாயினும் மகப் பிறந்துழி ஆண்மகவென் றறிந்தவுடன் தாமுழந்த துன்பமெலாந் துவர மறந்து மகவினை எடுத்து மகிழ்தல் இயல்பு. இக்காரணத்தால் கருவுயிர்க்கும் அறையி லிருக்கின்ற ஏனைய மகளிர் பிறந்தது ஆண் மகவாயின் உடனே அந்நற்செய்தியை அறிவித்தலும் பெண் மகவாயின் வாய் வாளாதிருத்தலும் உலகியலிற் காணலாம். அடிகளாரும் இக் கருத்துத் தோன்றவே 'பையல் என்றபோதே பரிந்தெடுத்து" என் ருேதுகின்றூர். பையல் - ஆண்மகவு. பரிந்து என்றது தன் துயர் மறந்து எனக்குப் பரிந்து என்பதுபட நின்றது. (க)

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழன்மூட்டு வேன்.

(இ - ள்.) முந்தித் தவம் கிடந்து - கருவுறுதற்கு முன்னர்த் தமக்கு ஆண் மகவு பிறக்க வேண்டு மென்று பெரிதும் விரும்பி விரதங் களை மேற்கொண்டு; முந்நூறு நாள் சுமந்து - அத்தவப்பயனுகத் தாம் கருவுற்று அதனை முந்நூறு நாட்கள் தம் வயிற்றிலே சுமந் திருந்து; அந்தி பகலா சிவனை ஆதரித்து-இரவும் பகலுமாகிய இரு பொழுதினும் பிறக்கும் மகவு ஆணுக விருத்தல் வேண்டு மெனச் சிவ பெருமானை வழிபாடு செய்து; தொந்தி சரியச் சுமந்து பெற்ற - கருவளருந்தொறும் வயிறு சரிந்து வருத்தவும் பொறுமையுடன் சுமந்திருந்து பெற்றெடுத்த; தாயார் தமக்கோ - என் அருமைத் தாயாருக்கோ அளியேன்; எரியத்தழல் மூட்டுவேன் - அவரருமை உடலம் பற்றி எரியும்படி தீயை மூட்ட வேண்டும். ஆ! ஈதென்ன கொடுமை! என்பதாம்.

(வி - ம்.) இஃது அடிகளார் அன்னையார் ஈமத்திற்குத் தீ மூட்டு தற்குத் தயங்கி நிற்ப அயனின்றேர் தீ மூட்டுக என்று கூற அதி

கேட்ட அடிகளார் என்தாய் எனக்குச் செய்த நன்றிக்குக் கைம்மாருக யான் தீ மூட்டத்தான் வேண்டுமா? என்று கையறவு கொண்டு கூறியதா மென்க.

அன்னையார் மகப்பேறின்றி யிருந்த பின்னர் மகப்பேறு பெறுதற் பொருட்டுப் பற்பல விரதங்களை மேற்கொண்டனர் என்பதும், அத் தவப் பயனாகத் தாம் கருவுற்றிருத்த லறிந்த பின்னரும் கருவிலிருக்கும் மகவும் ஆண்மகவாகப் பிறத்தல் வேண்டும் என்று அவாவி அவ்வாறு தற்குச் சிவபெருமானை இரவிலும் பகலினும் வழிபாடு செய்து வந்தனர் என்பதும் அவ்வழிபாட்டின் பயனாகவே அடிகளார் பிறந்தனர் என்பதும் அடிகளார் அவ்வன்னையாரும் சுற்றத்தாரும் பிற்காலத்தே கூறக்கேட்டிருந்தமையால் அச்செய்திகளை இப்பொழுது நினைவுகூர்ந்து இவ்வாறு கூறி வருந்துகின்றனர் என்பது தேற்றம். எனவே அடிகளார் அன்னையார் மகப்பேறின்றி இருந்தனர் என்பதும் பிறவும் அவர் கூற்றாலேயே யாம் உணர்வோம் ஆயினேம். அத்தகைய தவமும் சிவபெருமான்பாலன்பும் உடையரா யிருந்தமையா லன்றோ அடிகளாரைப் பெறுகின்ற சிறப்பும் அவர்க்குளதாயிற்று என்க. (உ)

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

(இ - ள்.) காதலித்து - அடியேனைப் பெரிதும் விரும்பி; வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் - துணியாலியன்ற ஏணையிலும் மரத்தாலியன்ற தொட்டிலிலும் தன் மார்பின்மேலும்; கட்டிலிலும் வைத்து - பஞ்சணையிலிட்ட கட்டிலிடத்தும் செவ்வி தேர்ந்து கிடத்தியும்; முட்டச்சிறகில் இட்டு - பெரும்பாலும் தன் பக்கத்திலே இருத்தி வைத்தும்; காப்பாற்றி - பசி தீர்த்தும் பிணி தீர்த்தும் பாதுகாத்தும், சீராட்டும்-சிறப்புச் செய்யும்; தாய்க்கோ - என் அன்பு கெழுமிய அன்னைக்கு அந்நன்றிக்குக் கைம்மாருக அவளை சுமவிறகின் மேற்கிடத்தித் தீமூட்டுவேன் – தீக்கொளுவுவேன்! நன்று நன்று என் கைம்மாறு! என்பதாம்.

(வி - ம்.) இதன்கண் அடிகளார் தம் அன்னை தம்மை வட்டில் முதலியவற்றிற் கிடத்தியும் பசி முதலியவற்றால் அழியாமற் சிறப்புச் செய்தவளாக, அந்நன்றிக்குக் கைம்மாருக அன்பார்ந்த அவளுடலை விறகின்மேற் கிடத்தி அதனை அழித்தற்குத் தீமூட்டவும் துணிகின் றேனே! என்றிரங்குதலுணர்க.

வட்டில் - துணியாற் கட்டுந்தொட்டில். முட்ட - முழுதும்; பெரும்பாலும் என்றவாறு. சிறகு - பக்கம். (௩)

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே—அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

(இ - ள்.) நொந்து என்னை சுமந்து பெற்று - அந்தோ தன்னுடம்பு மிகவும் வருந்தும்படி என்னைத் தன் வயிற்றிலே பத்துத் திங்கள் சுமந்திருந்து பெற்ற பின்னர்; நோவாமல் ஏந்தி – என்னுடம்பு சிறிதும் வருந்தாவண்ணம் தன் கையிலே மெல்லெனத் தாங்கிக்கொண்டு; முலைதந்து – யான் பசித்த போதெல்லாம் பாலூட்டி; வளர்த்து எடுத்து - நன்கு வளர்த்து ஓடியாடும் பருவத்திலும்; தாழாமல் - காலந் தாழ்த்திராமல்; அந்திபகல் கையிலே கொண்டு காப்பாற்றுந் தாய் தனக்கோ – இரவு பகலாகத் தன் கையிலேயே தழுவிக்கொண்டு பாதுகாத்தருளிய என் அன்புமிக்க அன்னை செய்த நன்றிக்குக் கைமாறாகவோ?; மெய்யிலே தீமூட்டுவேன் - அவள் உடம்பிலே யான் தீக்கொளுவுவேன்! என்பதாம்.

(வி - ம்.) அடிகளார் அருளிச்செய்த இந்த நான்கு வெண்பாவாலும் அன்னைபால் அவர் கொண்டிருந்த பேரன்பை நன்கு விளக்குவதோடு தாயன்பினை இயற்கை நவிற்சியணியாக மிகமிக வெளிப்படுத்தி யிருத்தலு முணர்க. (௭)

(பின்வரு மிரண்டு வெண்பாவும் அன்னையார் வாய்க்கரிசி யிட்ட பொழுது கூறப்பட்டவை.)

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்—உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பு
மானே வேனவழைத்த வாய்க்கு.

(இ – ள்.) உருசியுள்ள தேனே அமிர்தமே செல்வத் திரவியப் புமானே - ஐயகோ! அன்புப் பெருக்குடைமையானே அடியேனைக் காணுந்தோறும் மகிழ்ந்து சுவைமிக்க தேனே! வருக! என்றும் அமிழ்தமே - பெறலரிய அமிழ்தமே! வருக! என்றும், செல்வத்தானும் திரவியத்தானும் சிறந்த என் அரசே வருக! என்றும், அழைத்த ஆத்தாள் தனக்கு - அழைத்தருளிய என் அன்பு கெழுமிய அன்னைக்குக் கைம்மாறாக அளியேன்; வரிசை இட்டுப் பார்த்து - தகுதியான சிறந்த உணவுகளையிட்டு அவள் உண்ணுதலைப் பார்த்து; மகிழாமல் - மகிழ்ச்சி யடையாமல்; வாய்க்கு - அத்தகைய அவளுடைய திருவாய்க்கு; நான் அரிசியோ இடுவேன் - நான் இந்த வறிய அரிசியைத்தான் இடுகின்றேன்; நன்று நன்று என் கைம்மாறிருந்த வண்ணம்! என்பதாம்.

(வி - ம்.) ஐயகோ அன்புப் பெருக்கினாலே அடியேனைத் தேன் என்றும் அமிழ்தமே என்றும் அரசே என்றும் உவந்தழைத்த என் அன்னைக்கு அவ்வன்பிற் கேற்ற வரிசையிட்டுப் பார்த்து மகிழ வேண்டாவோ! அவள்வாய்க்கு இந்த வறிய அரிசியை அள்ளி யிடுகின்றேனே! என்று அவள் திருவாய் வழங்கிய அன்பினை நினைந்து நினைந்து அடிகளார் அரற்றுகின்றார் என்க.

இதன்கண் வரிசை என்றது தகுதிக்கேற்பச் செய்யும் சிறப்பினை. செல்வம் என்றது நிலம் முதலியவற்றையும் திரவியம் என்றது பொன்

மணி முதலியவற்றையும் என்க. கட்டித்திரவியம் என்னும் வழக்கும் நோக்குக. புமான் - அரசன். (கூ)

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனே கூசாமன்—மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

(இ - ள்.) தாய் தலைமேல் கூசாமல் கொள்ளிதனை வைப்பேனே - என் அன்புடைய தாயின் தலையின்மேல் அடியேன் சிறிதும் கூச்சமில்லாமல் இந்தக் கொள்ளியைத் துணிந்து வைக்கும் வன் கண்ணனே யான்; முகமேல் மெள்ள முகம் வைத்து - அடியேனை வாரியணைத்து என் முகத்தின் மேலே மெல்லெனத் தன் முகத்தை வைத்து; முத்தாடி - ஆர்வத்தோடு முத்தமிட்டு; என்றன் மகனே என அழைத்த வாய்க்கு - என் அருமை மகனே என்று அழைத்த அவளுடைய இத் திருவாய்க்கு; அரிசியோ அள்ளி இடுவது - இந்த வறிய அரிசிதானோ யான் என் கையால் அள்ளியிடுதற்கு வாய்த்த பொருள்; என்பதாம்.

(வி - ம்.) தாய் தலைமேல் கொள்ளிதனை வைப்பேனே-என்பது எல்லையிலாத நன்மைகளைச் செய்த தாய்க்குக் கைம்மாருக யான் செய்வது இக்கொள்ளியை அவள் தலையில் வைப்பதுதானே என்பது படநின்றது. நன்றி செய்தவர்க்குத் தீமை செய்யுங்கால் கூசுதல் இயல்பாகலின் கூசாமல் வைப்பேனே என்ருர். முத்து - முத்தம். (சு)

விருத்தம்

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே.

(இ - ள்.) முன்னை இட்ட தீ முப்புரத்திலே - முன்னொரு காலத்தில் சிவபெருமான் தன்நகைப்பினலே கொளுவிய நெருப்பு அசுரரின் மூன்று மதில்களினும் பற்றி எரிவதாயிற்று; பின்னை இட்ட தீ - பின்னர் அச் சிவபெருமானே மாருதியாக வந்து கொளுவிய நெருப்பு; தென் இலங்கையில் - தென்றிசையிலுள்ள இலங்கை நகரத்திலே பற்றி எரிவதாயிற்று; அன்னை யிட்ட தீ அடிவயிற்றிலே - என் அன்னையார் தம் சாக்காட்டினுற் கொளுவிய நெருப்பு என் அடி வயிற்றிலே பற்றி எரிகின்றது; யானும் இட்ட தீ - அடியேன் அவருடலுக்குக் கொளுவிய நெருப்பும் பற்றி நன்கு எரிவதாக! என்பதாம்.

(வி - ம்.) இறைவன் இட்ட நெருப்பு மூன்று அசுரராலே - உலகிற் குண்டான துயரத்தைப் போக்கியது. மாருதி வைத்த தீ அரக்கரால் விளைந்த துன்பத்தைப் போக்கியது; அன்னை மறைவினுல் என் அடிவயிற்றிற் பற்றிய தீ இவ்வுலக நிலையாமை யுணர்த்தி

என் பிறவி நோயைத் தீர்க்கும். அடியேன் அவள் உடம்பிற்கிட்ட தீ நன்கு மூண்டெரிந்து அவட்கு மீண்டும் உடல் வாராமற் செய்வதாக என்பது குறிப்புப் பொருளாகக் கொள்க. (எ)

வெண்பா

வேகுதே தீயதனில் வேந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியே னையகோ—மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

(இ - ள்.) ஐயகோ மாகக் குருவி பறவாமற் கோதாட்டி - அந்தோ! எனக்கு மேலுள்ள வானிலே பறக்கும் சிறு குருவிகளும் பறவாமல் விழிப்புடன் பேணிப் பாராட்டி; கருதி - இடையறாது நினைத்திருந்து: வளர்த்து எடுத்த கை - காளைப்பருவ முறும்படி வளர்த்து விட்ட கையானது; பாவியேன் தீயதனில் - தீவினையாள னாகிய யான் இட்ட தீயினால்; வேகுதே - வேகின்றதே!; வெந்து பொடி சாம்பல் ஆகுதே - வெந்து நுண்ணிய சாம்பலுமாகி விட்டதே! இதனை யான் எங்ஙனம் பொறுப்பேன்! என்பதாம்.

(வி - ம்.) பாவியேன் இட்ட தீயதனில் என்க. மாகக்குருவி - விண்ணிற் பறக்கும் குருவி. கோதாட்டுதல் - பாராட்டுதல். (அ)

வேந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ—சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தேன்
தன்னையே யீன்றெடுத்த தாய்.

(இ - ள்.) சோணகிரி வித்தகா - திருவண்ணாமலையி லெழுந் தருளிய வித்தகமுடைய சிவபெருமானே!; சந்ததமும் உன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்து - எப்பொழுதும் உன்னையே தன் அகக் கண்ணால் பார்த்து மகிழ்ந்து மகப்பேற்று வரம் வேண்டித் தவம் கிடந்து; என்றன்னையே ஈன்று எடுத்த தாய் - உன் திருவருளாலே அடியேனை மகவாகப் பெற்று வளர்த்த என் அன்னையானவள்; வெந்தாளோ - யானிட்ட தீயினால் வெந்து சாம்பராயினளோ; என்னை மறந்தாளோ - அவள் அன்பிற்குரிய என்னை மறந்து விட்டாளோ?; நின்பதத்தில் வந்தாளோ - நின்னை மறவாத பேரன் புடையாளாதலின் நின்திருவடி நீழலிலே புகுந்து பேரின்பமுற் றனளோ? என்னையினள் கூறாய்! என்பதாம்.

(வி - ம்.) சோணகிரி - திருவண்ணாமலை. வித்தகன் - எல்லாம் வல்லவன். நின்பதத்தில் வந்தாளோ என்றது நின்பால் பேரன் புடையள் ஆதலின் அவள் நின்திருவடி நீழலில் வரத்தகுந்தவளாதலால் அந் நீழலில் வந்தனளோ? என்பதுபட நின்றது. (கூ)

அடிகளார் அன்னையின் சாம்பலில் பால்தெளிக்க அன்பரை அழைத்தல்

வீற்றிருந் தாளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறனாள்—பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்க ளேதேன் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

(இ - ள்.) அன்னை வீற்றிருந்தாள் - அன்னை நேற்றுத் திண்ணையிலே அமர்ந்திருந்தனள் என்றும், வீதி தன்னில் இருந்தாள்-நேற்றுத் தெருவிலே அமர்ந்திருந்தாள் என்றும்; நேற்று இருந்தாள் இன்று வெந்து நீறு ஆனாள்-நேற்று உயிரோடிருந்தவள் இற்றைநாள் வெந்து சாம்பராயினளே என்றும்; ஏது என்று இரங்காமல் - இவள் இவ்வாறாயினதற்குக் காரணம் யாதென்று கூறி அழாமல்; எல்லீரும் பால் தெளிக்க வாருங்கள் — நீங்கள் எல்லோரும் இன்று நாம் செய்தற்குரிய கடனாகிய பாலைத் தெளித்தற்கு என்னோடு வாருங்கள், எல்லாம் சிவமயமே யாம் - உலகில் நிகழ்வன அனைத்தும் சிவன் செயலே யாகும். இதனை அறிந்து கொண்மின்! என்பதாம்.

(வி - ம்.) சுற்றத்தார்கள் அடிகளார் அன்னையைப்பற்றி அவள் நேற்றுத் திண்ணையிலிருந்தா ளென்றும், தெருவிலிருந்தாள் என்றும், நேற்றுப் பிணியொன்று மில்லாதிருந்தவள் இறந்து இன்று நீறாயினளே என்றும் பலரும் பல சொல்லி யழுதிருக்கக்கண்ட அடிகளார் இவ்வாறு பேசவேண்டா எல்லாம் சிவன் செயலே என்றிருங்கள் இன்று நாம் அவள் திறத்திற் செய்ய வேண்டிய சடங்கினைச் செய்வோம் வாருங்கள் என்று அழைத்தபடியாம் என்க. (௯0)

திருவிடை மருதூர்

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேடல்
என்று விடியுமெனக் கென்கோவே—நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து.

(இ - ள்.) நன்றி கருதார் புரமூன்றும் கட்டழலால் செற்ற மருதா - நீ செய்த நன்றியை நினையாமல் தீமையே செய்துழன்ற அசுரருடைய பொன்னாலும் வெள்ளியாலும் இரும்பாலுமியன்ற மூன்று மதில்களையும் கடிய தீயினாலே அழித்தருளிய திருவிடை மருதூரின் கண் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே; என்கோவே உன் சந்நிதிக்கே வந்து - என் தலைவனே! உனது திருமுன் வந்தும்; தீர்ந்திலாத; மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர் தேடல் - நாள் தோறும் ஏற்ற பிச்சையுணவினை மென்று விழுங்கியபின் எழுகின்ற நீர் வேட்கையைத் தணித்துக் கொள்ளுதற் பொருட்டு உண்ணீர் தேடித் திரிகின்ற இந்தத் துன்பம்; எனக்கு என்று விடியும்-எனக்கு என்றுதான் ஒழியுமோ அறிகிலேனே! என்பதாம்.

(வி - ம்.) இஃது அடிகளார் நீர் வறந்த கோடைக் காலத்திலே திருவிடை மருதூரில் இறைவன் சந்நிதியில் சென்று வழிபாடு செய்து சின்னாள் உறைந்தனராக, அக்காலத்தே பசிவந் துற்றபோது மனையறத்தோரில்லத்தே சென்று அவரிடம் உணவைக் கையிலே ஏற்று அவ்விடத்திலேயே விழுங்கிப் பின்னர் நீர் வேட்கையுற்று நீர் நிலைகளைத் தேடித் திரிந்தமையால் இவ்வாறலைவது எனக்கு என்று தான் ஒழியுமோ என்று இறைவன் திருமுன்னின்று முறையிட்டவா றென்க.

சந்நிதிக்கே வந்தும் எனல் வேண்டிய சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது. நன்றி கருதார் என்றது அசுரர்களை. நன்றி என்றது இறைவன் உடம்பு முதலியவற்றை வழங்கி உய்ந்துபோமா றுதவியதனை என்க.

இனி நன்றி கருதார் மண் பொன் பொருள் என்னும் மூவாசை களையுடையராய், தீவினை நயந்து செய்துழல்வதனை அசுரராகவும் முப்புரமாகவும் உருவகித் துரைத்தல் பௌராணிகர் மரபு என்க. உயிர்களின் அறியாமையால் தோன்றுகின்ற இவ்வாசைகளை இறைவன் தனது மறவருளாலே ஒழித்தலை, கட்டழலால் செற்றதாகப் புராணங் கூறும். (கக)

திருவொற்றியூர்

கண்டங் கரியதாம் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல வழகியதாம்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு.

(இ - ள்.) ஓங்கு புகழ் ஒற்றிக் கடல் அருகே நிற்குங் கரும்பு - உயர்ந்த புகழையுடைய திருவொற்றியூர் என்னும் மூதூர்க் கடற்கரை யருகிலே என்றும் நிலைத்து நிற்கின்ற (சிவபெருமானாகிய) கரும் பானது; கண்டம் கரியதாம் - தன் துண்டத்தில் கருநிறமுடைய தாகும்; மூன்று கண் உடையதாம் - மூன்று கணுக்களை யுடைய தாகும்; அண்டத்தைப்போல அழகியதாம் - இவ்வுலகத்தைப் போன்ற அழகினையுடையதாம்; தொண்டர் உடல் உருகத் தித்திக்கும் - தனக்குத் தொண்டு செய்பவருடைய உடலுருகும்படி மிகவும் இனிப்பதாம் என்பதாம்.

(வி-ம்.) இது சிவனுக்கும் கரும்பிற்கும் சிலேடை. கண்டம் என்பது கரும்பிற்குத் துண்டம் என்றும் சிவனுக்கு மிடறு என்றும் பொருள் கொள்க. கண் - கணுவும் கண்ணுமாம். உலகம் இறைவன் வடிவமே யாதலானும் அது காண்போர் உளங்கவரும் அழகுடைய தாதலானும் அண்டத்தை அரனாகக் காண்பவர்க்கு எல்லையற்ற அழகே தானாகிய அரனாகவே காணப்படுதலாலும்; அண்டத்தைப் போல அழகியதாம் என்றார். ஊனினை உருக்குவார்க்கே உள்ளொளி பெருகிப் பேரின்பஞ் செய்யுமாகலின் சிவபெருமானுக்குக் கொள்ளுங்கால் அடியாருடைய மலந்தேயத் தேயத் தித்திக்கும் என்றும் கரும்பிற்குத் தனக்கு நீர்கால், யாத்தல் எருப்பெய்தல் முதலியன இயற்றும் தொழிலாளர்

உண்ணும் போது உடலுருகும்படி மிகவும் தித்திக்கும் என்றும் கொள்க. (கஉ)

இதுவுமது

ஓடுவிழுந்து சீப்பாயு மோன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கோண்டேன்—கடுவருந்துந்
தேவாதி தேவன் திருவோற்றி யூர்த்தேருவில்
போவா ரடியிற் போடி.

(இ - ள்.) ஓடு விழுந்து சீப்பாயும் ஒன்பது வாய்ப் புண்ணுக்கு - கழலை கட்டிக்கொண்டு சீ ஒழுகுகின்ற ஒன்பது ஓட்டைகளையுடைய உடம்பாகிய இந்தப் பெரிய புண் ஆறி யொழிந்து போதற்கு; இடும் மருந்தை யான் அறிந்து கொண்டேன் - பூசுகின்ற நல்ல மருந்தினை யான் இப்பொழுது நன்கு தெரிந்து கொண்டுள்ளேன்; கடு அருந்தும் தேவாதி தேவன் திருஒற்றி ஊர்த் தெருவில்-அம்மருந்து யாதெனின் நஞ்சினை உண்பவனும் தேவர்கட்கும் தேவனு யிருக்கின்றவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற திருவொற்றியூர்த் திருக் கோயிலின் திருவீதிகளிலே; போவார் அடியில் பொடி - நடந்து போகின்ற மாந்தருடைய அடிகளால் மிதியுண்டு கிடக்கும் புழுதியே யாம் என்பதாம்.

(வி - ம்.) திருவொற்றியூர்த் திருவீதியிற் கிடந்து புரண்டு ஆங்கெழுந்தருளியுள்ள தியாகப்பெருமானை வலம் வருவாருடைய பிறவிப்பிணி தீரும்; எற்றுலெனின் அத்திருவீதியில் கிடக்கும் புழுதி பல மெய்யன்பர்களின் அடியிற் பட்டுக்கிடக்கின்றமையால் அவற்றிற்கு அவ்வாற்றலுண்டு ஆதலின் என்றவாறு.

ஓடு - கழலைக்கட்டி. உடம்பிற்குக் கழலைகட்டிக் கிடந்து ஒன்பது ஓட்டைகளின் வழியாகச் சீப்பாய்கின்ற புண் உவமம். இக்கருத்தோடு முன்னர்ச் "சுடப்படுவா ரறியார்" எனவரும் செய்யுளை ஒப்பு நோக்குக. (கந)

இதுவுமது

வாவியேல்லாந் தீர்த்தம் மணலேல்லாம் வேண்ணீறு
காவனங்க ளேல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈதுசிவ லோக மேன்றேன்றே மேய்த்தவத்தோர்
ஓதுந் திருவோற்றி யூர்.

(இ - ள்.) மெய்த்தவத்தோர் - மெய்யுணர்வுடைய தவத்தினையுடைய சான்றோர்; வாவி யெல்லாம் தீர்த்தம் - இம்மூதூரிலமைந்த நீர் நிலைகள் எல்லாமே தீவினை தீர்க்கின்ற தீர்த்தங்களே யாம்; மணல் எல்லாம் வெண்ணீறு - புழுதி யெல்லாம் திருவெண்ணீறு போன்ற சிறப்புடையதகுாம்; கா வனங்கள் எல்லாம் கணநாதர் - பூம்பொழில்களிலும் காட்டிலுமுள்ள மரஞ் செடி கொடி முதலியன வெல்லாம் சிவகணத் தலைவர்கள் ஆகும்; பூ உலகில் ஈது-நிலவுலகத்தின் கண்ணதாயினும் இத்திருவூர்; சிவலோகம்-சிவலோகமே யாம்; என்று என்று -

என்றுஎன்று எப்பொழுதுமே; ஓதுந் திருவொற்றியூர் - கூறுகின்ற மாண்புடையதாம் இத் திருவொற்றியூர்! என்பதாம்.

(வி - ம்.) எனவே இத் திருவொற்றியூரை எய்தி இறைவழிபாடு செய்தோர் பேராவியற்கையாகிய வீடுபேறு எய்துதல் ஒருதலையாம் என்பது குறிப்புப் பொருளாயிற்று என்க.

தீர்த்தம் - தீவினை தீர்க்கும் இயல்புடைய தெய்வத்தன்மையுடைய நீர். வெண்ணீறு என்றது, திருவெண்ணீற்றிற்குரிய மாண்பெலாம் உடையது என்றவாறு. கா - பூம் பொழில்கள்; செயற்கையா லியன்ற சிறுகாடு. வனம் - இயற்கையி லமைந்த காடு. இவை ஆகு பெயரால் அவற்றிலுள்ள மரமுதலியவற்றைக் குறித்து நின்றன. (கசு)

திருவாரூர்

ஆரூர ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளேன்
றூரூர்க டோறு முழலுவீர்—நேரே
உளக்குறிப்பை நாடாத வூமர்கா ணீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர்.

(இ - ள்.) உளக்குறிப்பை நேரே நாடாத ஊமர்காள் - நெஞ்சின் கண் நீயிர் நினைக்கின்ற நினைவினுக்கும் நினைவாக இறைவனிருக்கின்ற குறிப்பை நேருக்கு நேராக ஆராய்ந்தறிதலில்லாத ஊமைகள் போன்ற மக்களே நீங்கள்; ஆரூரர் இங்கு இருக்க - திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற தியாகப்பெருமான் இவ்விடத்திலே நுங்கள் உள்ளத்திலே இடையறாது வீற்றிருப்பாராகவும்; அவ்வூர்த் திருநாள் என்று - அந்த ஊரில் திருவிழா நடக்கின்றது, அங்குச் சென்றால் இறைவனைக் காணலாம் என்று எண்ணிக்கொண்டு; ஊர் ஊர்கள் தோறும் முழலுவீர் - விழா நிகழ்கின்ற ஊர்தோறும் ஊர்தோறும் சென்று சென்று வருந்துகின்றீர்கள் ஆதலால்; நீவிர் விளக்கிருக்கத் தீத்தேடுவீர் - நும்மகத்திலேயே விளக்கு எரிந்து கொண்டிருக்கவே நெருப்பைப் பெறல் வேண்டி வீடு வீடாகத் தேடுபவர்களே ஆவீர்காண்! என்பதாம்.

(வி - ம்.) ஆரூரர் - ஆரூரில் எழுந்தருளியிருக்கின்ற தியாகப் பெருமான். இறைவன் தன்னையே உங்கட்குப் பரிசிலாக வழங்கி நும்முள்ளேயே எழுந்தருளி யிருக்கும் வள்ளன்மை யுடையான் என்னும் குறிப்புத் தோன்றுமாறு ஆரூரர் என்றனர். என்னை? அவன் பெயரே அவனுடைய வள்ளன்மையைக் குறித்து நிற்றலால் என்க. இங்கு என்றது நுங்கள் நெஞ்சாகிய இவ்விடத்தில் என்றவாறு.

உளக் குறிப்பு நெஞ்சு கருதுங் கருத்து. அக்கருத்திற்கும் உள்ளீடாய் நிற்றலின் அதனை ஆராயின் அவனை உணரலாம் என்பது கருத்து. தாயுமானாரும்,

"யாது மனநினைவுமந்த நினைவுக்கு நினைவாகி
யாதின்பாலும்
பேதமற நின்றுயிர்க் குயிராகி யன்பருக்கே
பேரானந்தக்

கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறி யொன்றறத்தன்னைக்
கொடுத்துக் காட்டுந்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம்''

—பொருள் வணக்கம் - உ

என்றருளிச் செய்தல் காண்க. திருநாவுக்கரசர் தாமும்,

"தேடிக்கண்டு கொண்டேன்—திரு
மாலொடு நான்முகனும்
தேடித்தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்றோதுதலு முணர்க. இனி, 'உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி'' என்பதும் அவர் திருவாய் மலர்ந்த பொன்மொழியே யாம். திருமந்திரத்தினும்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே"

எனவருதலு முணர்க. (௧௫)

எருவாய்க் கிருவிரன்மே லேறுண் டிருக்குங்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்—திருவாரூர்த்
தேரோடும் வீதியிலே சேத்துக் கிடக்கின்றாய்
நீரோடுந் தாரைக்கே நீ.

(இ - ள்.) நீ - காளைப்பருவமுடையோய்! நீதான்; எருவாய்க்கு இருவ்ரல் மேல் ஏறுண்டு இருக்கும் கருவாய்க்கோ - மலங்கழிகின்ற தொளைக்கு இரண்டுவிரற்கிடை மேலே உயர்ந்திருக்கின்ற கருவுயிர்த் தற்குரிய அருவருப்பான தொளையின் பொருட்டோ? கண் கலக்கப் பட்டாய் - மிகவும் கண்கலங்கி இத்துணைப் பெருந்துன்ப முற்றனை; மேலும், திருவாரூர்த் தேரோடும் வீதியிலே - நீ திருவாரூரி லெழுந் தருளி யிருக்கின்ற தியாகப் பெருமான் ஏறுகின்ற திருத்தேர் ஓடு கின்ற சிறப்பமைந்த இத்திரு வீதியை எய்தியும்; நீரோடும் தாரைக் குச் செத்துக் கிடக்கின்றாய் - மூத்திரங் கழிக்கின்ற ஓரங்கணக் குழியின் பொருட்டு இவ்வாறு செத்துக் கிடக்கின்றாயே! இது தகுமோ? என்பதாம்.

(வி - ம்.) ஒரு காமுகன் பிறர்மனை நயந்து அப்பிறராற் கொலை புண்டு திருவாரூர்த் தேர் வீதியிற் கிடத்தலைக் கண்ட அடிகளார் அச் செய்தியைக் கேள்வியுற்ற பொழுது அவ்விளைஞனுக் கிரங்கிக் கூறியது இத்திருப்பாட் டென்பா.

இதன்கண் வேண்டுவார் வேண்டுவன வெல்லாம் வழங்குகின்ற தியாகப் பெருமான் தேரேறி வருகின்ற இத்திரு வீதியை எய்தியதே முற்பிறப்பிற் செய்த தவப்பயனுதல் வேண்டும். அத்தகைய வீதியை எய்திய நீ அவன்றாள் வணங்கி என்றும் இறவாத பேரின்ப வாழ்வை எய்தி யிருக்கலாமே. அங்ஙனமின்றி இழிதகவுடைய மகளிரின் நீர்த் தாரைக்கு அவாப் பெரிதும் கொண்டு இவ்வாறு கண் கலக்கப்பட்டுச் செத்துக் கிடக்கின்றாயே இங்ஙன மிருந்தது போலும் உன் ஊழ்வினை என்று அடிகளார் இரங்குகின்றார் என்க. இனி இத்திருப்பாட்டிற்கு வேறு வரலாறு கூறுவாரு முளர். இருவிரன்மே லேறு புழுக் கூண்டுக்கு என்பதும் பாடம். (கசு)

திருவேகம்பம்

எத்தனையூர் எத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபே ரிட்டழைக்க வேனென்றேன்—நித்தம்
எனக்குக் களையாற்று யேகம்பா கம்பா
வுனக்குத் திருவிளையாட் டோ.

(இ - ள்.) ஏகம்பா கம்பா - திருவேகம்பத்திலெழுந்தருளி யிருப்பவனே! கம்பைப் பேரியாற்றை யுடையோனே!; எத்தனை ஊர் - அடியேன் எத்தனையோ ஊர்களிலே பிறப்பெடுத்தேன்; எத்தனை வீடு - எத்தனையோ வீடுகளிலோ பிறப்பெடுத்தேன்; பெற்றவர்கள் எத்தனை தாய் - அடியேனை மகவாகப் பெற்றெடுத்த தாய்மார்கள் தாம் எத்தனையும் பலராவரோ; பேர் எத்தனை இட்டு அழைக்க - அத்தாய் மார்கள் தனித்தனியே எனக்கு இட்டு அழைத்த பெயர்கள் தாம் எத்தனை எத்தனையோ; நித்தம் அழைக்க - அவர்கள் நாடோறும் என்னை அழைக்கும் போதெல்லாம் யான் ஏன்? என்று வினவி அவரெதிர் சென்றேன்; எனக்கு - இவ்வாறு எண்ணிறந்த பிறப்புக்களிலே பட்டு உழலுகின்ற அடியேனுக்கு இரங்கி; களை ஆற்றாய் - என் இளைப்பை ஆற்றுகின்றாயில்லை; உனக்குத் திருவிளையாட்டோ - இவ்வாறு எம்மைப் பிறப்பினுட் படுத்து எம்மலலல் காண்பது உனக்குவப்பான விளையாட்டோ காண்! என்பதாம்.

(வி - ம்.) ஏகம்பவாண! அடியேன் எத்தனையோ பிறப்புக்களை அடைந்து மாபெருந் துன்பப்படுகின்றேன். நீயோ சிறிது மிரங்கிலை- எம்மைத் துன்புறுத்திப் பார்ப்பது உனக்கு விளையாட்டுப் போலும் என்றவாறு. (கஎ)

திருக்கச்சிக்காரோணம்

அத்திமுத லெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளித்த தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
இசிக்குதையா காரோண ரே.

(இ - ள்.) காரோணரே ஐயா - திருக்காரோணத்தி லெழுந் தருளி யிருக்கின்றவனே! முழு முதல்வனே!; அத்தி முதல் எறும்பு

ஈறு ஆன உயிர் அத்தனைக்கும் - யானை முதலாக எறும்பு ஈறாகவுள்ள உயிரினங்கள் அத்தனைக்கும்; சித்தம் மகிழ்ந்து அளித்த தேசிகா - திருவுள்ளம் மகிழ்ந்து உணவளித்துப் பாதுகாக்கின்ற என் ஞானாசிரியனே !; ஐயா மெத்தப் பசிக்குது பாழ் வயிற்றைப்பற்றி இழுக்குது - அடியேனுக்கு மிகவும் பசிக்கின்றது வறிய வயிற்றைப்பற்றி இசிவுண்டாக்குகின்றது; பாவியேன் - எனக்குண வளியாமைக்குக் காரணம் யான் அத்துணைப் பெருந் தீவினையாளன் போலும் என்பதாம்.

(வி - ம்.) அடிகளார் திருக்காரோணத்திலிருந்த காலத்தே ஒரு நாள் பசிப்பிணி மிக்குத் தம்மைப் பெரிதும் வருத்திய பொழுது இறைவனை நோக்கி எம்பெருமானே உலகிலுள்ள எல்லாவுயிர்க்கும் உணவளித்துப் பாதுகாக்கின்ற நீ அடியேனைமட்டும் பசியால் வருந்தும்படி செய்ததேன்? என் தீவினை அத்துணைப் பெரிது போலும் என்று கூறியவாறு. காரோணம் - காயாரோகணம் என்பதன் மரூஉ. ஒரு பதிப்பில் திருக்கச்சிக் காரோணம் என்று காணப்படுகின்றது. இன்னும் திருக்குடந்தைக் காரோணம் திருநாகைக் காரோணம் என்றும் இப்பெயர் வேறு அடையடுத்தும் வழங்கப்படும். ஈண்டு அடிகளார் அடையின்றிப் பெயர் மாத்திரையாகவே கூறுகின்றார் எனினுமாம். காரோணம் என்பதே ஒரு திருவூர்ப் பெயர் என்பாருமுளர். இறைவன் ஓர் அடியாரைக் காயத்தோடு (உடம்போடு) கைலைக்கு எழுந்தருளுவித்தலால் இறைவனுக்குக் காயாரோகணர் என்று பெயருண்டாயிற்று; அது காரோணர் என்று மருவி வழங்கும் என்பாருமுளர்.

உடற்பெருமைக்கு யானையையும் சிறுமைக்கு எறும்பையும் எடுத்துக் கூறுவார் அத்திமுத லெறும்பீறான வுயிர் என்றார். (கஅ)

திருக்காளத்தி

பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
யையரை யெண்ணு யறஞ்செய்யாய்—வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத்தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு.

(இ - ள்.) மனமே பொய்யை ஒழியாய் – என் நெஞ்சமே நீ நிலையுதவில்லாத பொருள்களைப் பற்றுமல் விடுகின்றிலை; புலாலை விடாய் - புலாலுண்டலையும் விடுகின்றிலை; காளத்தி ஐயரை எண்ணாய் - திருக்காளத்தியிலெழுந்தருளிய முதல்வனை ஒரு பொழுதும் நினைக்கின்றாயுமில்லை; அறம் செய்யாய் – ஈதல் முதலிய நல்லறங்களையும் செய்கிலை; வெய்ய சினம் ஒழியாய் - வெவ்விய வெகுளியையும் விடுகின்றிலை. திரு எழுத்து ஐந்து ஓதாய் - திருவைந் தெழுத்தாலியன்ற மறைமொழியையும் ஓதுகின்றாயில்லை; உனக்கு மாண்பு என்ன - இத்தகைய உனக்குப் பெருமைதான் யாதுளது கூறாய்! என்பதாம்.

(வி - ம்.) அடிகளார் இதன்கண் மக்கள்மனம் மாண்பறவேண்டுமானால் பொய்ப்பொருளின்கட் பற்றொழித்தல் வேண்டும். புலாலுண்ணுதிருத்தல் வேண்டும்; மெய்ப்பொருளைப்பற்றி சிற்றல்

வேண்டும்; அறச்செயல்களையே செய்தல் வேண்டும் சின முதலிய தீக்குணங்களை முழுதும் விட்டுவிட வேண்டும்; இறைவனை இடையறாது நினைத்து வழிபாடு செய்தல் வேண்டும். இத்துணையும் செய்யாவிடின் மனம் மாண்புறமாட்டா தென்று தம் மனத்திற்குக் கூறுமாற்றால் நம்மனோர்க்கு அறிவுறுத்துகின்றார் என்றுணர்க.

இவற்றோடு,

"பொருளலல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானா மாணாப் பிறப்பு"

—குறள் - ௩௫௧.

எனவும்,

"செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்"

—குறள் - ௨௫௮.

எனவும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

—குறள் - ௩௫௦.

எனவும்,

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்"

—குறள் - ௩௮.

எனவும்,

"இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை"

குறள் - ௩௧௦.

எனவும்,

"கற்றதனா லாயபய னென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்"

—குறள் - ௨.

எனவும் வருந் திருக்குறட் கருத்துக்களையும் ஒப்பு நோக்குக. (௧௧)

திருவிருப்பையூர்

மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

(இ - ள்.) இருப்பையூர் வாழ்சிவனே—திருவிருப்பையூரி லெழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானே!; மாதா உடல் சலித்தாள் - எண்ணிறந்த பிறப்புக்களிலே என்னை ஈன்றெடுத்து எனக்குத் தாயாகியவரும் தமது உடம்பு நொந்து சலிப்படைந்து விட்டனர்; வல்வினையேன் - வன்மைமிக்க தீவினையாளனாகிய யானும் அப்பிறப்புக்களிலே பிறந்தும் உழன்றும் இறந்தும் அலைந்தலைந்து கால்கள் சலிப்படையப் பெற்றேன்; வேதாவும் கைசலித்து விட்டானே - என்னை எண்ணிலாப் பிறவிகளினும் படைத்துப் படைத்து நான்முகனும் தன் கைகள் சலிப்படைந்து போயினன்; நாதா - தலைவனே!; அடியேன் இன்னும் பிறந்துழலுதலாற்றேன்; இன்னம் ஓர் அன்னை கருப்பை ஊர் வாராமல் கா - ஆதலால் மீண்டும் ஒரு தாயினது கருப்பையாகிய ஊர் அடியேனுக்கு வாராதபடி காப்பாற்றியருள்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) மாதா ஈண்டுச் சாதி யொருமை. உடல் சலித்தாள் என்றது எத்துணையும் பன்முறை என்னைக் கருவிற் சுமந்தும் வளர்த்தும் சலிப்படைந்தாள் என்றவாறு. யானும் பிறவியிலுழன்றமையாற் கால் சலிக்கப் பெற்றேன் என்க. வேதா - படைப்புக் கடவுள். அவன் எண்ணிறந்த உடம்புகளைச் செய்து செய்து சலிப்படைந்து விட்டான் என்றவாறு. ஆதலால் அடியேனை மீண்டும் பிறவியில் தள்ளாதே என்று வேண்டியவாறும். (உ0)

திருவையாறு

மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாயு மிளைப்பாறப்—பண்ணுமயன்
கையா றவுமடியேன் காலாற வுங்கண்பார்
ஐயா திருவையா று.

(இ - ள்.) திரு ஐ ஆறு-திருவையாற்றில் திருக்கோயில் கொண்டருளியவனே; ஐயா - தேவர்கட்கும் தலைவனாயவனே!; மண்ணும் தணல் ஆற - இந்நிலவுலகமும் அடியேனுடைய உடல்கள் எண்ணிறந்தவற்றைச் சுட்டமையால் உண்டான வெப்பந் தணியுமாறும்; வானும் புகை ஆற - இவ்வான வெளியும் என்னுடம்புகளைச் சுடுவதனா லெழுகின்ற புகையின்றித் தூய்தாகுமாறும்; எண்ணரிய தாயும் இளைப்பு ஆற - என் பிறவிகடோறும் என்னை மகவாகப்பெற்று வளர்த்து வருந்துகின்ற எண்ணிறந்த தாய்மார்களும் இனி இளைப்பாறி யிருக்குமாறும்; பண்ணும் அயன் கை ஆறவும் - எனக்கு எண்ணற்ற உடல்களைப் படைக்கின்ற நான்முகனுடைய கைகள் இளைப்பாறுமாறும், அடியேன் காலாறவும் - அடியேனுடைய கால்கள் இளைப்பாறுமாறும்; கண்பார் - நின்னுடைய அருட்கண்ணாலே சிறிது பார்த்தருள்வாயாக!; என்பதாம்.

(வி - ம்.) இவ்வெண்பாவும் திருவிருப்பையூரிற் பாடிய வெண்பாவும் கருத்தால் ஒன்றுபட்டுச் சொல்வகையான் மட்டும் வேறுபட்டுள்ளன. ஆதலின் அதன் விளக்கவுரையே இதற்கும் அமையும். (உக)

திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்ரு ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்ருலத் தானையே கூறு.

(இ - ள்.) காலன் வருமுன்னே - நெஞ்சமே நம்முயிர் கவர்ந்து கொண்டு போதற்குக் கூற்றுவன் வருமுன்பே; கண் பஞ்சடை முன்னே - நம் கண்கள் ஒளியிழந்து பஞ்சடைந்து போதற்கு முன்பே; உண்பால் கடைவாய் படுமுன்னே - உண்டற்கினிய பால்மிடற்றுட் புகாமல் கடைவாய் வழியே ஒழுகிப் போதற்கு முன்பே; உற்ரார்மேல் விழுந்து அழுமுன்னே - சுற்றத்தார்கள் நம்மாவி போயிற்றென்றறிந்து நம்முடம்பின் மேல் விழுந்து அழுதற்கு முன்பே; ஊரார் சுடு முன்னே - ஊரிலுள்ளோர் இந்த வுடம்பைச் சுமந்துபோய் ஈமக் காட்டிற் சுட்டழித்தற்கு முன்பே; குற்ருலத்தானையே கூறு - இம்மை யினும் மறுமையினும் நமக்குறு துணையாயிருக்கின்ற இத்திருக்குற்ரு லத்தி லெழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானையே நினைத்து இவற்றிற் கெல்லாம் தீர்வாக வமைந்த அவன் திருப்பெயரையே ஓதி யுய்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) இவ்வுடலிலிருந்து நாம் வாழ்கின்ற வாழ்க்கை இன் றில்லையேனும் ஒருநாள் இறந்துபடுதல் ஒருதலையே யன்ரே? அப் பொழுது இறைவனை நினைத்தலுமியலாது. சாவின் அறிகுறிகளாய்க் கண் பஞ்சடைந்துபோம் பொழுதும் கடைவாய் வழியாக உண்ணும் பால் வெளிவரும் பொழுதும் அவனை நினைத்தற்கியலாது. ஆவியார் போயபின் அகத்தார் கூடி அழும்போதோ இவ்வுடம்பை ஊரார் சுடும் போதோ யாம் அவனை நினைத்தல் கூடும். ஆதலால் கண்ணும் கருத்து மிருக்கும் இப்பொழுதே அவன் திருப்பெயரை மறவாதே கூறுதி, கூறிஞல் அவன் அத்தகைய அல்லல் வரும்போது நமக்குத் துணையாகி நம்மைக் காப்பாற்றுவான் என்று இதனுல் அடிகளார் நம்மனோர்க் கறிவுறுத்துகின்ருர் என்க. (உஉ)

பொது

சிற்றம் பலமுஞ் சிவனு மருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே—நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சம்
கறந்திடத்தை நாடுதே கண்.

(இ - ள்.) சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க - அறிவு வெளியும் அதற்கு முதலாகிய சிவபெருமானும் எனக்கு மிகமிக அண்மையில் இருக்கவே அவற்றைத் தேடிக் கண்டு கொள்ளாமல்; வெற்றம்பலம் தேடி விட்டோமே - எளியேமாகிய யாம் அறிவற்ற வறும்பாழ் வெளி யாகிய மாயையைப் பெரிதும் விரும்பித் தேடி அதனோடு கலந்து விட்டோமே; நித்தம் பேதை மட நெஞ்சம் - இக்காரணத்தால் அறி

யாமையாகிய மடமையுடைய எமது நெஞ்சம் நாள்தோறும் தான் பிறந்த இடமாகிய மாதருடைய அல்குற்றடத்தையே ஆர்வத்துடன் தேடாநின்றது; கண் கறந்திடத்தை நாடுது - எமது கண்ணோ தான் பால் கறந்துண்ட இடமாகிய அம்மாதருடைய முலைகளையே பெரிதும் ஆர்வத்துடன் தேடுகின்றது; இதற்கு யாமென் செய்கோம்! என்பதாம்

(வி - ம்.) உயிர்க்கு இறைவன் உறைவிடமாக விருக்கின்முன். மாயையோ அவ்வுயிரின்கண் உறைகின்றது. ஆதலால் உயிர் தனக்கு மிக அணுக்கமாயிருப்பது இறைப் பொருளாகவும் அத னிருப்பை யறிந்து அதனுடன் உறவு கொள்ளாமல் தன்னைப்பற்றி யிருக்கின்ற மாயையையே தானும் பற்றிக்கொண்டு இடையரு து பிறந்துழல்கின்றது. மாயையை உயிர் பற்றிக் கொண்டுழல்தற்கு அதற்கியல்பாயுள்ள அறியாமையாகிற ஆணவமலம் காரணம். ஆதலின் பேதைமட நெஞ்சம் என்றூர். உயிர்க்கு நுகர்பொருளா யிருப்பன அனைத்துமே மாயையே யன்றிப் பிறிதில்லை. ஆணவ மலத்தின் குண மாகிய காமமே அம்மாயைபற்றி நிற்றதற்குக் காரணம் ஆகலின் ஆணவ மலத்தின் வீக்கத்தால் உயிர் தன்னருகிருக்கின்ற மெய்ப் பொருளை அறியாமல் காமத்தால் பெண்ணுகிய மாயையையே பற்றிக் கிடக்கின்றது என்பது இதன் கருத்தாகும்.

இனி, சிற்றம்பலம் என்பது அறிவின் எல்லையற்ற பரப்பினை. சிவன் என்றது அதற்குக் குணிப் பொருளாகிய இறைப்பொருளை.

சிறப்புப்பற்றிக் காமத்தின் செயல்களில் மாதர் அல்குலையும் முலை யையும் தேடுதல்களை மட்டுமே கூறினர். இவ்வாறு தேடுவதே அவ் வுயிர் கெடுவது காட்டுங் குறியாம் என்பது கருத்து. வெற்றம்பலம் என்பது மாயையை.

இனி ஆணவ மலத்திலழுந்திக் கிடக்கும் உயிர் தன்னையுணர்ந்து தலைவனையு முணர்ந்து மலமற்றுத் தலைவனோடு கலத்தற்கே தலைவன் அதற்கு நெஞ்சும் கண்ணும் முதலிய அகப்புறக் கருவிகளை வழங் கினன், அங்ஙனமாகவும் உயிர் அக்கருவிகளையும் தான் அழுந்திக் கிடக்கும் மாயையிலே பின்னும் மிகவும் அழுந்தவே பயன்படுத்து கின்றது. இதுவும் அம்மூல மலத்தின் காரியமேயாம் என்று அறி வுறுத்தவாறுமாயிற்று. நெஞ்சம் முதலிய கருவிகள் அவனை நினைந் துணர்தற்கே இறைவனால் அளிக்கப்பட்டன என்பதனை,

> “ வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
> தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
> சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
> வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே ”

எனவரும் தேவாரத்தானு முணர்க. (உ௩)

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு—நாடிநீ

என்னை நினைத்தா லிடுப்பி லுதைப்பேனுன்
உன்னை நினைத்தா லுதை.

(இ - ள்.) தோடு அவிழும் பூங்கோதைத் தோகை - இதழ் விரிந்து மலருகின்ற நாளரும்புகளாலியன்ற மலர்மாலை யணிந்த மயில் போலும் சாயலையுடைய நங்காய்!; உனைத் தேடினவர் இப்போது போய் விட்டார் - உன்னைப் பெரிதும் விரும்பித் தேடியவர் இப்பொழுது போய் விட்டனர். இனி மீண்டு வரவும் மாட்டார்; தேறியிரு - ஆதலால் நீ தானும் அவர்பாற் கொண்டுள்ள காமமயக்கந் தீர்ந்து மனந்தெளிந்து அமைதி யுற்றிருப்பாயாக!; நீ என்னை நாடி நினைத்தால் இடுப்பில் உதைப்பேன் - நீ அமைதியுறாது அந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுதற்குக் கருவியாகக் கருதி என்னை நினைப்பாயாயின் யான் உன்னுடைய இடையொடிய என் காலா லுதைப்பேன் காண்!; நான் உன்னை நினைத்தால் உதை - இனி யான் உன்னை அவாவி நினைத்தால் நீயும் அவ்வாறே என்னையும் உதைப்பாயாக! என்பதாம்.

(வி - ம்.) இனிக் கட்டிளமையும் பேரெழிலும் படைத்த அடிகளார் ஓர் ஊரிற் பிச்சைபுக்கபொழுது ஓரில்லத்திலிருந்த ஓரிளமங்கை அடிகளாரின் எழிலில் மயங்கிக் காமுற்று நோக்கினளாக அடிகளார் தாமும் அவள் நோக்கெதிர் நோக்கி அவளுடைய பேரெழிலிற் ருமும் நெஞ்சம் பறி கொடுத்துக் காமுற்று அவ்விடத்தினின்றும் சென்று இறைவன் திருவைந் தெழுத்தோதித் தம் நெஞ்சை அமைதி செய்து தம் பேதைமைக்கு வருந்தித் தனித்தொரு திருமடத்திலே உறைவாராயினர். அடிகளார்பால் நெஞ்சு பறிகொடுத்த அம்மடந்தை தானும் அவரையே நினைந்து வருந்தி அவரைத் திரு மடத்திலே சென்று காணவும் துணிந்து தன்னை மலர் முதலியவற்றால் அழகு செய்து கொண்டு அடிகளார்பால் தமியளாய் வந்து தன் கருத்தினை ஒல்லுமாற்றால் உணர்த்தி நிற்ப; அவளுக்கிரங்கிய அடிகளார் தமது பிழையையும் அவட்குக் குறிப்பு வகையா லறிவித்து யாம் முன்பு விரும்பினேமாயினும் அது தவறென்று இப்பொழுது நன்குணர்ந்து இறைவனருளால் நெஞ்சந் தெளிந்திருக்கின்றேம். இனி யாம் உன்னை ஒருபொழுதும் நினையேம். நங்காய் நீயும் எம்மைப்போலவே நல்லறிவு வரப்பெற்று அமைதி பெறுவாயாக! என்று இனிதின் அறிவுறுத்திய படியாம்; என்று கொள்க.

இனி மெய்யுணர்வு கைவரப்பெற்ற சான்றோரும் ஒவ்வொரு பொழுதில் பழைய பழக்கங் காரணமாகக் காம வுணர்ச்சி யுடையராய்ப் பிழை செய்தலும் அல்லது பிழை செய்யாமலே மீண்டும் தெளிவு பெறுதலும் உண்டு; இதனாலன்றோ இவ்வாறு நிகழும்போது அப்பிழை செய்யாமல் உய்தற்கும் மெய்ந்நூல்கள்வழி கூறுகின்றன.

இதனை,

சிவஞான போதத்தின் ஒன்பதாஞ் சூத்திரத்திறுதியில் மூன்ருமதி கரணமாக நின்ற "விதி எண்ணுமஞ் செழுத்தே" என்பதற்கு விளக்கமாக ஆசிரியர் மெய்கண்டார் தந்திரு மொழியாலேயே,

"இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க வென்றது :—இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ் ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கி நோக்கி நிற்கு மாகலின், அது நீக்குதற்கு எனக் கொள்க" என அறிவுறுத்தமையானு முணர்க.

இனி, இவ்வெண்பாவின் கண் அப்பெண்ணைத்தாம் காமுறுதற்கு அவள்பாலமைந்த பேரழகே காரணம் என்பதைக் குறிப்பாக உணர்த்துவார் அவளை "தோடவிழும் பூங்கோதைத் தோகை" என விளிப்பாராயினர். உனைத் தேடியவர் இப்போது போய் விட்டார் என்பதனால் அடிகளார் தமது பிழையையும் அதனைப் பொய் கூறி மறைக்கத் துணியாத அவர் தம் நேர்மையையும் உணர்த்துதலுணர்க ஆசிரியர் திருவள்ளுவனார் தலையல்லார் கண்ணும் தமது தோல்வியை ஒப்புக் கொள்ளுதலே சால்புடைமையை அறிவிக்கும் கட்டளைக்கல் என்றோதியதற்கு இச்செய்யுள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாதலு முணர்க.

உன்னைத் தேடினவர் என்றது தமது அறியாமையை. அவர் இப் போது போய்விட்டார் எனவே யாமும் உன்னைக் கண்டுழி அறியாமை யால் மயங்கினேமாயினும் இப்பொழுது அவ்வறியாமை அகன்றது நல்லுணர்வு பெற்றேம் என்றறிவுறுத்தவாறும். நீயும் எம்மைப் போன்றே மயங்கினையேனும் இனியேனும் இறைவனருளால் நல் லுணர்வு பெற்று அமைதி பெற்றிருப்பாயாக! என்பார் 'தேறியிரு' என்று தாமே வரமளிப்பாராயினர். அடிகளார் கூறிய இவ்வருண் மொழியே அவளுக்குந் தெளிவு தந்துய்வித்திருக்கும் என்பது தேற்றம்.

இனி மீண்டும் அம்மடந்தை காம மயக்க முற்றுத் தம்மை யடை தற்கு முயற்சியாமைப் பொருட்டு 'என்னை நினைத்தால் இடுப்பி லுதைப்பேன்' என்று சிறிது கடிந்தும் கூறுவாராயினர். இந்நிகழ்ச்சி யில் நின்னைக் காட்டினும் பெருந்தவறு செய்தது யாமே என்பது தோன்ற "யான் உன்னை நினைத்தால் உதை" என்றனர்.

இனி இச்செய்யுளாற் குறிப்பிடப் படுகின்ற பெண் அருணகிரி யாரின் தாய் என்றும், இந்நிகழ்ச்சியாலே அருணகிரியார் பிறந்தனர் என்றும் கூறும் கதையும் உண்டு. அதனை நம்புவார் நம்புக. (உச)

வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை யண்ணலே—யாசைதனைப்
பட்டிருந்த காலமெல்லாம் போதும் பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல்.

(இ - ள்.) அண்ணலே - எம் பெருமானே !; வாசல்படி கடந்து வாராத பிச்சைக்கு ஆசைப்படுவது இல்லை - அடியேன் பிச்சை புகுந் தாலும் இடுவோர் அன்போடு தமது வாசற்படியைக் கடந்து யான் நிற்குமிடத்தே வந்திடுகின்ற பிச்சையை ஏற்றுண்பதல்லது அங்ஙனம் வாசற்படி கடந்து வாராத பிச்சையை யானே சென்று ஏற்

றண்டற்கு ஆசைப்படுவதில்லை; ஆசைதனைப்பட்டு இறந்த காலம் எல்லாம் போதும் - அடியேன் ஆசைப்பட்டு ஆசைப்பட்டு அல்லலுறக் கழிந்த காலத்திற்கோ கணக்கில்லையே! அவை யெல்லாம் போதும், இனி எதற்கும் ஆசை கொள்ளாதிருக்கும்படி; சுட்டிறந்த ஞானத்தைச் சொல் - யாதொன்றனையும் சுட்டி நோக்காத மெய்யுணர்வினை அடியேனுக் கறிவுறுத்தியருள்க! என்பதாம்.

(வி - ம்.) சுட்டிறந்த ஞானம் - அகம்புறம் என்றும் அது வென்றும் இது வென்றும் தனக்கு அயலாக யாதொன்றனையும் சுட்டி யறியாமல் எல்லாம் தானேயா யிருக்கும் மெய்யுணர்வு.

இதனை,

" சிவமே சிவமாக யான் நினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருத்த லன்றிச்—சிவமென்
றுணர்வாரும் அங்கே யுணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி "

—திருக்களிற்று - அச.

என்பதனாலும் உணர்க. (உ௯)

நச்சரவம் பூண்டானை நன்றாய்த் தொழுவதுவும்
இச்சையிலே தானிங் கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவது முண்பதுவும் வந்துதிரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம்.

(இ - ள்.) நச்சரவம் பூண்டானை - நெஞ்சமே (யாமறிந்த வரையில்) நஞ்சுடைய பாம்பை அணிகலனாகப் பூண்டிருக்கின்ற சிவபெருமானை; நன்றாய்த் தொழுவதுவும் - நன்கு வழிபாடு செய்தலும்; இச்சையிலே தான் இங்கிருப்பதுவும் - நாம் விரும்பியவாறே இறைவன் திருமுன்பிருத்தலும்; பிச்சைதனை வாங்குவதும் உண்பதுவும் - பசி வந்தற்றபோது இல்லத்தே சென்று பிச்சை ஏற்பதும் ஏற்ற அப்பிச்சை யுண்டியை அவ்விடத்திலேயே உண்பதும்; வந்து திருவாயிலிலே - பசிதணிந்தவுடன் மீண்டும் இறைவன் திருக்கோயில் வாயிலிலே வந்து; தூங்குவதும் தானே சுகம் - தூங்காமற்றூங்குவதுந்தானே உண்மையான இன்பம் என்றறிந்து கொண்டோம், இனி நமக்குக் குறை யாது? என்பதாம்.

(வி - ம்.) திருவாயிலிலே தூங்குவதென்றது கருவிகளோடு புணராமல் தனித்திருத்தல்.

இதனை,

" ஐயந்திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார்—தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள் "

எனவரும் நீதிநெறி விளக்கத்தானு முணர்க. (உ௰)

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகே னரனேயென் றேக
மிளைத்தாலும் போகே னினி.

(இ - ள்) அரனே-சிவபெருமானே !; இனி என்பசிக்கு அன்னம் இருக்கும் இடம் தேடி உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன் - அடியேன் இற்றைநாள் தொடங்கி ஒரு விரதம் மேற்கொள்வல், அஃதி யாதெனின் என் பசிப்பிணிக் காற்றுமல் யானிதுகாறும் பிச்சைபுக் குண்டாற் போன்று இனிப் பிச்சை புகேன் காண் ! என் பசிப்பிணியை யாரேனும் குறிப்பாலுணர்ந்து யான் இருக்குமிடத்தைத் தேடிச் சோறு அன்போடு கொணர்ந்தூட்டினுலுண்பதல்லது; பெருக்க அழைத் தாலும் போகேன் - யாரேனும் எனக்கிரங்கிப் பெரிதும் விரும்பித் தம்மில்லத்துண்ண அழைத்தாலும் யான் உண்ணப் போகேன் காண் ! என் தேகம் இளைத்தாலும் போகேன் - என்னுடல் உணவின்றிப் பெரிதும் மெலிந்தாலும் பிச்சை புகேன் காண் ! என்பதாம்.

(வி - ம்.) பொய்யுடனிமித்தம் நாடோறும் புசிப்பிற் கலைந்த அடிகளார், அச்செயற்கு நாணி இறைவனை நோக்கி எம்பெருமானே இனி நின் திருவருளானது என்பசி யறிந்து யானிருக்குமிடத்தே உணவு கொடு வந்து அன்போடு ஊட்டுவித்தாலன்றி இனி யான் உணவிரந்திடப் போவதில்லை யென்றும், அன் தன்முனைப்பாலே உணவிரந்திடப் போவதில்லை யென்றும், புடையோர் தம்மில்லத்திற்கு அழைத்தாலும் போவதில்லை யென்றும், இவ்விரதத்தால் யான் உடல் மெலிந்து இறக்க நேரினும் நேர்க ! பிச்சைபுகேன் என்றும் அடியேன் உறுதி பூண்டுள்ளேன் ! என்று கூறியவாறு.

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்ருர்க் குடம்பு மிகை"

—குறள் - ௩௪௫.

என்பதுபற்றி அடிகளார் மிகையாய இவ்வுடம்பின் பொருட்டு யாம் இவ்வாறு பிச்சைபுகுதலும் வேண்டுமோ ! திருவருள் ஊட்டி இருப் பித்தாலிருக்க இன்றேல் ஒழிக ! என்று கூறுகின்ருர். (உஎ)

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகின்ருர் சுற்றத்தார்—பட்டதுபட்
டேங்நேர முஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம்.

(இ - ள்.) உயிர்விட்டு விடப்போகுது - நமரங்காள் என்றேனும் ஒருநாள் நம்முயிர் இந்த உடம்பை விட்டு விடுதல் நாமெல்லாம் நன் கறிந்த வுண்மையே யன்றோ; விட்டவுடனே சுற்றத்தார் உடலைச் சுட்டு விடப் போகின்ருர் - அங்ஙனம் இவ்வுயிர் இவ்வுடம்பை விட்டுப் புறப் பட்டவுடனேயே நம் சுற்றத்தார் பிணமாகிய அந்த வுடம்பைச் சுடு காட்டிற் கொடுபோய்ச் சுட்டு விடுவார் என்பதும் தேற்றமே ! ஆதலின்

இவ்வுடம்பைப் பொருளாகக் கொண்டு அதற்கே ஆவன செய்யன் மின்; பட்டது பட்டு - இவ்வுடம்பாற் படுந்துன்பத்தைப் பட்டுக் கொண்டே; சிவனை எந்நேரமும் எத்துங்கள் - ஆயினும் இவ்வுடம்பாலுறுபயன் கோடல் வேண்டும் அன்றே நீயிர் எப்பொழுதும் சிவபெருமானைப் புகழ்பாடி வாழ்த்துமின் !; போற்றுங்கள் - வழிபாடு செய்ம்மின்; அதுவே சுகம் - அதுவே இவ்வுடலால் நாம் பெற வேண்டிய இன்பமாகும்; சொன்னேன் - உங்கள்பாலன்புடைமையால் இதனை உங்கட்குக் கூறினேன் என்பதாம்.

(வி - ம்.) மக்கள் யாக்கை பெறுதல் அரிதேயாயினும் அரும் பெறல் அவ்வியாக்கைதானும் அழிந்து போதலும் தேற்றம். அந்த யாக்கையா லாய பயன் இறைவனை இடையறாது வாழ்த்தி வணங்குதலே யாம். அச்செயலே பேரின்பமுமாகும் என்றறிவுறுத்த படியாம். (௨௮)

ஆவியோடு காய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
சேத்தாரைப் போலே திரி.

(இ - ள்.) மடநெஞ்சே - அறியாமையுடைய என் நெஞ்சமே கேள் !; ஆவியொடு காயம் அழிந்தாலும் - நீ உன்னுடைய உயிரும் உடலும் அழிய நேர்ந்த விடத்தும்; மேதினியில் பாவி என்ற நாமம் படையாதே - இந்நிலவுலகத்தின்கண் எனையோர் இவன் பாவி யென்று நின்னைக் கூறுமாறு கெட்ட பெயர் எடாமலிருப்பாயாக ! மேலும்; வித்தாரமும் கடம்பும் வேண்டா - உனக்குப் பொருள் முதலியவற்றின் மிகுதியாலுண்டாகும் பெருமையும் உலகியலோர் உறவும் ஒரு சிறிதும் வேண்டா, அவற்றை விரும்பாதே கொள் !; சேத்தாரைப் போலே திரி - இவ்வுலகிலிருந்தும் இறந்தவர் போன்று இவ்வுலகத்தோடு சிறிதும் தொடர்பின்றித் திரிவாயாக ! என்பதாம்.

(வி - ம்.) பிறவுயிரைக் கொல்லுதல் முதலிய தீவினை செய்து நின்னைக் கண்டோர் இவன் ஒரு தீவினையாளன் என்று கூறும்படி நடவாதே என்பார் மேதினியில் பாவி என்று நாமம் படையாதே என்றார். மேலும் உன் உயிரே போவதாயினும் அக்கேட்டினின்றும் தப்புதற்கு யாதேனும் ஒருயிரைக் கொல்வது இன்றியமையாதாய விடத்தும் அத்தீவினையைச் செய்யாது இறப்பதே மேல் என்பார் ஆவியொடு காய மழிந்தாலும் பாவி யென்று நாமம் படையாதே என்றார்.

இதனோடு,

" தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை " —குறள் ௩௨௭.

எனவருந் திருக்குறளையும் நினைக.

வித்தாரம் - பெருமை, அது செல்வம் கல்வி முதலியவற்றுலாவது. அப்பெருமைதானும் செருக்குண்டாக்குதலால் வேண்டா என்றார். கடம்பு - கடும்பு என்பதன் மரூஉ. உறவு என்னும் பொருட்டு. இது பற்றுண்டாக்குதலின் வேண்டா என்றார். இறந்து போனவர் இவ்வுலகத்தாரோடு சிறிதும் தொடர்பில்லா திருத்தல் போன்று நீயும் இவ்வுலகத்துச் சிறிதும் தொடர்ப்பாடு கொள்ளாதிரு என்பார் செத்தாரைப்போலே திரி என்றார். இனி, கருவிகளோடு கூடாதிருந்திடுக என்பார் செத்தாரைப் போலே திரி என்றாரெனினுமாம்.

என்னை ?

" வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயி ரொன்றா யுடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யாரே " கஉசு.

எனவருந் திருமந்திரமுங் காண்க. (உக)

வெட்டவெளி யான வெளிக்குந் தெரியாது
கட்டளையுங் கைப்பணமுங் காணுதே—இட்டமுடன்
பற்றென்றுற் பற்றுது பாவியே னெஞ்சிலவன்
இற்றெனவே வைத்த வினிப்பு.

(இ - ள்.) பாவியேன் நெஞ்சில் அவன் இற்று எனவே வைத்த இனிப்பு - தீவினையாளனுயிருந்தும் என்னுடைய உள்ளத்தின்கண் பேரருட் கடலாகிய அவ்விறைவன் வைத்துள்ள சிவானந்தத்தின் இனிய சுவையானது; வெட்ட வெளியான வெளிக்கும் தெரியாது - வெறும்பாழாகிய வெளியிடத்தும் இத்தன்மைத்தெனத் தெரிய மாட்டாது; கட்டளையும் கைப்பணமும் காணுதே - வேந்தருடைய ஆணையினாலும் கைப்பொருளாலும் காணப்பட மாட்டாது; இட்டமுடன் பற்று என்றால் பற்றுது - அவ்வின்பத்தை விருப்பத்தோடு பற்றிக் கொள்ளக் கடவாய் என யான் என்னெஞ்சிற்குக் கூறினாலும் அந்நெஞ்சமும் அதனியல்பறிந்து பற்றிக் கொள்ளமாட்டாது; என்பதாம்.

(வி - ம்.) வெட்ட வெளியான வெளி யென்றது புலன்களிலே செல்லாது வறும்பாழாகிய மனவெளி. இஃதென் கூறியவாறெனின் மெய்யுணர்வின்றி ஐயுணர்வும் அடங்கிய விடத்தும் அவ்வின்பம் உண்டாகாது என்றவாறு.

இதனையே ஆசிரியர் திருவள்ளுவனாரும்,

" ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வில்லா தவர்க்கு "

—குறள் - ஙஙசு.

எனவரும் அருமைத் திருக்குறளால் அறிவுறுத்துகின்றார்.

கட்டளை என்றது அரசர் ஆணையை. கைப்பணம் என்றது - பொருளை. இறைவன் தந்த இன்பத்தை அரசர் தம் அதிகாரத்தாலும் செல்வர் தம் செல்வத்தாலும் காணமாட்டார் என்பது கருத்து.

அவ்வின்பம் மனதாற் றேடிப் பற்றப் படாதது என்பார் பற்றென் ஞற் பற்ருது என்ருர். பற்ருது என்பதற்கு எழுவாய் வருவித் தோதுக.

மனத்தாலும் பற்றப்படாதெனவே அது சொல்லுதலும் கூடாப் பெருமைத்து என்பதாயிற்று.

இதனை,

"உள்ள முதலனைத்தும் ஒன்ருய் ஒருவவரின்
உள்ளம் உருவவந் துன்னுடனும்—தெள்ளி
உணருமவர் தாங்கள் உளராக என்றும்
புணருவா னில்லாப் பொருள்" (கசு)

எனவரும் திருக்களிற்றுப் படியாரானும் உணர்க.

சிவானந்தம் கருவிகளா லுணரப்படாத தொன்று என்பது இதனுற் போந்த பொருள் என்க. (ருO)

இப்பிறப்பை நம்பி யிருப்பாரோ நெஞ்சகமே
வைப்பிருக்க வாயின் மனையிருக்கச்—சோப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மேத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்சேத் துக்கோட்டக் கண்டு.

(இ - ள்.) நெஞ்சமே - என் நெஞ்சமே!; வைப்பு இருக்க - ஒருவன் ஈட்டிப் பிற்காலத்திற்கு வேண்டும் என்று குவித்துவைத்த பொருள்கள் இருக்கவும்; வாயில் மனை யிருக்க - அழகிய முகப்பமைந்த தனது மாளிகை யிருக்கவும்; அவனுடைய வாழ்க்கையானது கனுப்போன்று வெறும் பொய்யாகி விடுமாறு; விக்கிப் பல்கிட்டக் கண்மெத்தப் பஞ்சிட்டு - ஞெரேலென்று விக்கலுண்டாகிப் பற்கள் கிட்டிப்போகவும் கண்களில் மிகுதியாகப் பஞ்சடையவும்; அப்பைக் கக்கிச் செத்து - கோழை நீரைக் கக்கிச் செத்துக் கிடத்தலால்; கொட்டக் கண்டு – சாப்பறை முழக்கா நிற்றலைப் பன்முறையும் பல விடங்களினும் கண் கூடாகக் கண்டு வைத்தும் இப்பிறப்பையும் நம்பி இருப்பாரோ – இந்த வுடலை ஓர் உறுதிப் பொருளாகக் கருதி அதனை நம்பி யிருப்பாரு முளரோ? கூறுதி.

(வி - ம்.) இவ்வுலக வாழ்க்கை ஒரு நொடிப் பொழுதில் கனவுப் போலவறும் பொய்யாகும்படி இறந்தொழிகின்றவரை நாடோறும் கண் கூடாகக் காண்பவர் இந்தப் பிறப்பை நம்பியிரார். இதன் நிலையாமை யுணர்ந்தோர் மீண்டும் பிறவாமையையே விரும்பி அந் நெறியிலே நின்று முயல்வர் என்பது கருத்து,

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

—குறள் - ௩௫௬.

என ஆசிரியர் திருவள்ளுவனாரும் அறிவுறுத்துத லுணர்க. (௩௧)

மேலு மிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீல மறிந்திலையே சிந்தையே—கால்கைக்குக்
கோட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமோத்தப் பட்டவுடல்
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு.

(இ - ள்.) சிந்தையே - நெஞ்சமே; கால்கைக்குக் கொட்டை இட்டு - கால்களுக்கும் கைகளுக்கும் சிற்றணைகளிட்டும்; மெத்தை இட்டுக் குத்தி மொத்தப் பட்ட வடல் - படுத்தற்குப் பஞ்சணையிட்டும் திமிர் தீர்தற் பொருட்டுக் குற்றேவலரால் கையாற் குத்தப்பட்டும் மோதப்பட்டும் இன்புற்றுக் கிடந்த உடம்பினை; கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு - விறகின்மேல் வைத்துச் சுட்டுச் சாம்பராக்கி விடுவதனைக் கண்டு வைத்தும்; மேலும் இருக்க விரும்பினையே - இவ் வுடம்போடு மேலும் நெடுங்காலம் இவ்வுலகிலே வாழ்ந்திருக்க விரும்பினையே!; வெள்விடையோன் சீலம் அறிந்திலையே - வெள்ளிய விடையூர்தியையுடைய இறைவனடி சேர்தற்கியன்ற ஒழுக்கத்தைச் சிறிதும் அறிந்தாயல்லையே! இஃதென் பேதைமை காண்! என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சே! இவ்வுலகின்கண் பஞ்சணையிற் படுத்துக் குற்றேவல் செய்வோர் உடம்பினைக் குத்தவும் மொத்தவும் இனிது துயின்றவருடைய உடம்பையும் விறகிலிட்டுச் சுட்டுச் சாம்பராக்கி விடுவதனையும் நீ நாடோறும் காண்கின்றனை யல்லையோ? நிலை யுதலில்லா இவ்வுலகில் மேலும் இருந்து வாழ விரும்புகின்றனையே இறைவன் திருவடியை எய்தும் தவவொழுக்கத்தைக் கேட்டேயு மறிந்திலை, என்னே! உன் பேதைமை யிருந்தவாறு என்றவாறு.

வெள்விடையோன் சீலம் - வெள்விடையோனாற் சொல்லப்பட்ட சீலம் எனப் "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்கம்" என்றாற் போலக் கொள்க. (௩௨)

ஒன்பதுவாய்த் தோற்பைக் கோருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே!—வன்கழுக்கள்
தத்தித்தத் திச்செட்டை தட்டிக்கட் டிப்பிட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு.

(இ - ள்.) நெஞ்சே - என் பேதை நெஞ்சமே!; வன்கழுக்கள் - வலிய கழுகுகள் இவ்வுடம்பு பிணமாகிய பொழுது நமக்கு நல்ல இரை கிடைத்தது என்று மகிழ்ந்து; தத்தித்தத்தி - தத்தித்தத்திச் சென்று; செட்டை தட்டிக்கட்டி — தம் சிறகுகளைத் தட்டிக்கொண்டு வளைத்து; பிட்டுக் கத்திக் குத்தித் தின்னக் கண்டு - தமதலகால் தசையினைப்

பிட்டுப் பின்னும் மகிழ்ந்து கத்திக்கொண்டு அலகினாலே குத்திக் குடைந்து தின்பதனைக் கண்டிருந்தும்; ஒன்பது வாய்த்தோல் பைக்கு - மலஞ்சோரும் ஒன்பது துளைகளையுடைய அருவருக்கத் தகுந்த வறிய தோற்பையேயாகிய இவ்வுடம்பின்பால்; ஒரு நாளைப் போலவே அன்பு வைத்து அலைந்தாயே - ஒரு நாளைப் போலவே நாடோறும் அன்பு வைத்து அதற்கின்பம் செய்தற்குப் பெரிதும் அலைந்தாயே இஃதென்ன பேதைமை! என்பதாம்.

(வி - ம்.) மலஞ்சோரும் ஒன்பது வாய்த்தோற்பை யென்றும், அதற்கின்பந்தேடி அலைந்தாயே என்றும் கூறிக்கொள்க. இதன்கண் கழுகுகள் பிணந்தின்னுங் காட்சியை இயற்கை நவிற்சியாக அடிகளார் ஓதியிருத்தலுணர்க. (கக)

இன்னம் பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ ரென்றிருந்து வாழ்ந்தவரை—முன்னம்
எரிந்தகட்டை மீதி லிணைக்கோ வணத்தை
உரிந்துருட்டிப் போட்டது கண்டு.

(இ - ள்.) நெஞ்சமே - என் நெஞ்சமே நீ; முன்னம் இவர் மன்னவர் என்று இருந்து வாழ்ந்தவரை - நினக்கு முன்னரே உலகத்தார் இவர் எம்மரசர் என்று புகழ்ந்து பாராட்டுமாறு அரசு கட்டிவிலிருந்து இன்பம் பலவும் எய்தி வாழ்ந்திருந்தவர் பலரையும்; அவரவர் போரின்கண் இறந்துழி எரிந்த கட்டை மீதில் - பகைவர் அவருடலைப் பண்டெரிந்த குறைக்கட்டைகளை அடுக்கி அதன்மேல்; இணைக் கோவணத்தை - அம்மன்னவர் தம் மரையிலிணைத்திருந்த கோவணத்தையும்; உரிந்து உருட்டிப் போட்டது கண்டு - உரிந்துகொண்டு உருட்டிப் போட்ட செயலைக் கண்கூடாகக் கண்டிருந்தும்; இன்னம் பிறக்க இசைவையோ - நீ இத்தகைய உலகின்கண் இன்னும் பிறந்து வாழ விரும்புகின்றனையோ! இஃதென்ன பேதைமை என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சமே இவ்வுலகில் முடிமன்னர் உடலையும் குறைக் கொள்ளியின் மேல் பகைவர் கோவணத்தையும் உரிந்து உருட்டிப் போட்டுச் சுட்டழித்தலைக் கண்டும் நீ மீண்டும் இவ்வுலகில் பிறந்து வாழ விரும்புகின்றனையே இது மடமை என்றவாறு.

எரிந்த கட்டை மீதில் என்றமையால் போரில் இறந்த மன்னர் உடம்பென்பதும் உருட்டிப் போட்டது என்பதனால் பகைவர் அங்ஙனம் உருட்டிப் போட்டனர் என்பதும் பெற்றாம். போரில் இறந்துபட்ட மன்னர் முதலியோருடலைப் பகைவர் எரிப்பது வழக்கம். இங்ஙனம் ஆதலின் பண்டிறந்த மறவரை எரித்தமையால் குறைக் கொள்ளியாய்க் கிடந்தமை போன்ற எரிந்த கட்டை என்றார். உருட்டிப் போட்டது பகைவர் இகழ்ச்சியால் விளைந்தது என்க. (கஉ)

முதற்சங் கமுதூட்டு மோய்குழலா ராசை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டும்—கடைச்சங்கம்
ஆம்போ ததவூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம்.

(இ - ள்.) முதல் சங்கு அமுது ஊட்டும் - நெஞ்சமே கேள்!— நாம் பிறப்புற்ற பின்னர் நமக்கு முதன் முதலாகப் பயன்படுத்துகின்ற சங்கு நம்முடம்பு வளர்தற் பொருட்டு நமக்குப் பாலூட்டா நிற்கும்; மொய்குழலார் ஆசை நடுச்சங்கம் - வளர்ந்து காளைப்பருவமுற்ற போது செறிந்த கூந்தலையுடைய மகளிர்பால், நமக்குண்டாகின்ற காமங் காரணமாக நிகழ்கின்ற திருமணச் சடங்கில் ஊதப்படுகின்ற நடுவணதாகிய சங்கு; நல்விலங்கு பூட்டும் - நமக்கு உறுதியான விலங்கினைப் பூட்டி விடும்; ஆம்போது கடைச்சங்கம் அது ஊதும் அம்மட்டு-பின்னர் நம் வாழ்வு முடிவாகும்போது ஊதப்படுகின்ற இறுதிச் சங்காக அச்சங்கே ஊதப்படும் அவ்வளவு தான் நம் வாழ்வு காண்!; நாம் பூமி வாழ்ந்த நலம் இம்மட்டு - நாம் இந்நில வுலகிலே பிறந்து வாழ்ந்த நன்மையும் இவ்வளவே காண்!; என்பதாம்.

(வி - ம்.) முதற் சங்கம் என்றது தாய் மகவிற்குப் பாலூட்டக் கைக்கொள்ளும் சங்காகிய பாலடையை. ஆசை காரணமாகத் திருமணத்தில் ஊதப்படும் நடுச்சங்கம் எனக. நல்விலங்கு என்புழி — நன்மை உறுதி என்னும் பொருட்டு. வாழ்க்கையைத் தோற்றுவிக்கின்ற நடுச்சங்கே கடைச்சங்காகவும் ஊதப்படுகின்றது என்பது கருத்து. ஆம்போது - வாழ்க்கை முடிவாகும் பொழுது; சாக்காடாம்போது எனினுமாம். மக்கள் வாழ்க்கை எல்லாம் இந்த மூன்று சங்குகளுக்குள்ளே அடங்கிவிடும் அம்மட்டே என்க. நலம் என்றது - இகழ்ச்சி. (கூ)

எத்தனைநாள் கூடி யெடுத்த சரீரமிவை
அத்தனையு மண்டின்ப தல்லவோ—வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப்போ மே.

(இ – ள்.) இவை எத்தனை நாள் யாம் கூடி எடுத்த சரீரம் — நெஞ்சமே! இதுகாறும் எய்திய உடம்புகளாகிய இவை எத்துணையும் பல காலங்களாக யாம் இவற்றோடு கூடி எடுத்தவைகளாம்; அத்தனையும் மண் தின்பதலலவோ - அத்துணை உடம்பு மண்ணுக்கே இரையாயினவல்லவோ?; வித்தகனார் காலைப் பிடித்து - இன்னும் இவ்வீனுடம்புகளை எய்தாமல் இனி யாம் - எல்லாம்வல்ல இறைவனுடைய திருவடிகளையே உறுதியாகப் பற்றிக்கொண்டு. மெல்லக் கங்குல்பகல் அற்ற இடத்தே, மெள்ள மெள்ளச் சென்று; இராப் பகலல்லாத; மேலைக்குடி யிருப்போமே - மேலான குடியிலே புகுந்து பிறவாமை பெற்றிருப்போம்; என்னெறிபற்றி வருக! என்பதாம்.

(வி - ம்.) உயிர் கேவலாவத்தையினின்றும் சகலாவத்தை எய்துங் காலத்தே எண்ணிறந்த பிறப்புக்களை எய்தி மிக நீண்ட காலம் உழன்று படிப்படியாக அறிவு வளர்ச்சி யெய்தி மக்கட் பிறப்பில் வந்தும் எண்ணிறந்த பிறப்புற்றுழலுதலாலும் எந்தப் பிறப்பினும் எடுத்த எடுத்த உடலெல்லாம் மீண்டும் மண்புக்கே அழிதலாலும் நெடிய இப்பிறப்புழற்சியின் காலத்தைக் கருதி எத்தனை நாள் கூடி எடுத்த சரீரம் இவை அத்தனையும் மண்டின்பதல்லவோ? என்றார்.

இவ்வாறு பிறப்பிற் பட்டுழலும் பெருந்துயர்தீர அவன் திருவடியிற் றஞ்சம் புகுதலன்றி வேறுவழி யில்லையாகலானும் அவன் திருவடி பிடித்த பின்னர்க் காலம் பெரிதும் கழியினும் கழிக யாம் எப்படியாவது மெல்ல மெல்லப் பின்னர் வீடு பெற்றுய்தல் தேற்றம் என்பார். வித்தகனுர் காலைப் பிடித்து மெள்ளக் கங்குல் பகலற்ற இடத்தே மேலைக் குடியிருப்போம் என்ருர். கங்குல் பகலற்ற இடமாவது கேவலாவத்தையும் தீர்ந்த இடம் என்க. அஃதாவது சுத்தாவத்தை - இதுவே உயிர்க்கு மேனிலையாகவின் இதனை மேலைக்குடி என்ருர். இருப்போம் என்றது அழியாது பேரின்ப மெய்தியிருப்போம் என்பதுபட நின்றது.

இனி இதன்கண் உயிர் எண்ணிறந்த உடலெடுத்து இறைவன் திருவருளாலே மேலைக் குடிபுகும் என்று அடிகளார் கூறிய கருத்தினை,

"இனையபல பிறவிகளின் இறந்துபிறந் தருளால்
இருவினைகள் புரிந்தருந்தும் இதுசகலம் அகலா
முனம் மருவும் இருபயனு மொருகாலத் தருந்த
முந்தநுக ருந்துபயன் அந்தமுற வந்த
வினையும்எதிர் வினையும்முடி வினையுதவு பயனுல்
நேராக நேராதன் மேவுங் கால்முற்
சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதந் திகழு மன்றே." (சஅ)

என்றற்ருெடக்கத்துச் சிவப்பிரகாசச் செய்யுள்களாலுணர்க. (கூகூ)

எச்சிலேன்று சோல்லி யிதமகிதம் பேசாதீர்
எச்சிலிருக்கு மிடமறியீர்—எச்சிறனை
உய்த்திருந்து பார்த்தா லோருமை வெளிப்படும்பின்
சித்த நிராமய மே.

(இ - ள்.) எச்சில் என்று சொல்லி இதம் அகிதம் பேசாதீர் - இவை எச்சில் என்றும் (வேறு சில தூயனவென்றும்) இவை இன்பம் என்றும் இவை துன்பம் என்றும் வேறுபடுத்திப்பேசாதே கொண்மின்; எச்சில் இருக்கும் இடம் அறியீர் - இங்ஙனம் பேசுகின்ற நீங்களே அந்த எச்சில் இருக்கின்ற இடம் எது என்று அறிவீரல்லீர்; எச்சில்தனை உய்த்து இருந்து பார்த்தால் ஒருமை வெளிப்படும் - நீயிர் கூறுகின்ற எச்சிலையும் (தூயதனையும்) கூர்ந்து இருந்து ஆராய்ந்து பார்ப்பின் அவை யெல்லாம் ஒன்றே என்னும் உண்மை உங்களுக்கே தெரிந்து விடும்; பின் சித்தம் நிராமயமே - அவ்வாறு தெரிந்த பின்னர் உங்கள் உள்ளமே இன்பமயமாம் என்பதாம்.

(வி - ம்.) உலகத்தார் சில பொருளை எச்சில் என்று ஒதுக்குவர். வேறு சிலவற்றைத் தூயது என்று விரும்புவர். இங்ஙனம் ஒதுக்குவோர் எச்சிலால் துன்பமுண்டென்றும் தூயதால் இன்பமுண்டென்றும் விளம்புவர். வாய்மையாகவே இவர் அந்த எச்சில் எங்குளது என்று

அறியாத மடவோரே யாவர். இவற்றை ஆராய்ந்து காண்போர், இவர் எச்சிலென்பதும் தூய தென்பதும் ஒரே பொருள்தான் என்னும் உண்மையை உணரலாம். அங்ஙனம் உணர்ந்தவர், அந்த ஒரு பொருளே இன்பதுன்பங்கட்கும் காரணம் ஆதலையும் அறிவர். அறிந்து அக்காரணத்தை அகற்றி விடுவர். பின்னர் அவர் உள்ளமே இன்ப மயமாயிருத்தலையும் உணர்வர். அத்தகையோர் எச்சிலை எங்கும் காணமாட்டார் என்பதாம்.

இதென் சொல்லியவாறோ வெனின், இன்பம் துன்பம் எச்சில் தூய்மை என்னும் இவற்றிற் கெல்லாம் முதல் மலம் என்னும் ஒரு பொருளே; வாய்மையில் இது முழுதுமே எச்சிலே யாம். இன்பம் துன்பம் இரண்டிற்கும் இம்மல மயக்கமே காரணம் உண்மையின்ப மாவது மல நீங்கிய உள்ளமே என்றவாறு. (கஎ)

எத்தனைபேர் நட்டகுழி எத்தனைபேர் தொட்டமுலை
எத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்—நித்தநித்தம்
பொய்யடா பேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா உய்.

(இ - ள்.) அடா - அடாஎன் அன்பனே!; எத்தனைபேர் நட்ட குழி - நீ விரும்புகின்ற விலைமகளிருடைய அல்குலாகிய குழி எத்தனைக் காமுகர்களால் நடப்பட்டது; எத்தனைபேர் தொட்ட முலை - அவர் தம் முலைதானும் எத்தனை காமுகர்களால் தொடப்பட்டது; எத்தனை பேர் பற்றி இழுத்த இதழ் - எத்தனை காமுகர்களால் அவர் தம் இதழ் கடித்திழுக்கப்பட்டன; இத்தனை இழிதகவுடையவரும்; நித்தம் நித்தம் பொய் பேசும் மாதரை - நாள்தோறும் பொய்யே பேசுபவரும் ஆகிய அவ்விலை மாதர்பாற் செல்லும் நின் அவாவினை; விட்டு உய்யடா உய்யடா உய் – துவரநீத்து நன்னெறிச் சென்று நரகில் வீழாது தப்பிவிடு! தப்பிவிடு! தப்பிவிடு! என்பதாம்.

(வி - ம்.) இது விலைமாதர்பாற் காமங்கொண்டுழலும் ஒருவனுக்கு அவர் தம்மிழிவு தோன்ற அறிவுறுத்து உய்வித்தபடியாம். (கஅ)

இருப்பதுபோய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினையுன் னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்.

(இ – ள்.) நெஞ்சே இருப்பது பொய் போவது மெய் என்று எண்ணி–என் நெஞ்சமே கேள்! இவ்வுலகிலே பிறந்துவிட்ட நாம் இனி எப்பொழுதும் உயிர் வாழ்ந்திருப்பது என்பது பொய் யென்றும் ஒரு நாள் இறந்து போவது என்பதே மெய்யென்றும் தேற்றமாக நினைத்து; ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே - இவ்வுலகில் ஒருயிர்க்கேனும் தீங்குசெய்ய நினையாமல் விழிப்புடன் இருப்பாயாக!; பருத்த தொந்தி நம்மது என்று நாம் இருப்ப - பருத்துள்ள தொந்தியை யுடைய இந்த உடம்பு நம்முடையது என்று நாம் நினைத்திருக்கவும்; நாய் நரிகள் பேய்கழுகு தம்மது என்று இருக்கும்-இந்த வுடம்பினையே

நாய்களும் நரிகளும் பேய்களும் கழுகு முதலிய பறவைகளும் தம்முடைய உணவுப் பிண்டம் என்று எண்ணி யிருக்குங்காண். ஆதலால் இந்த உடம்பு முதலியவற்று லுண்டான அகப்புறப் பற்றுக்களையும் விட்டொழித் திருப்பாயாக! என்பதாம்.

(வி - ம்.) ஈண்டு அடிகளார் தவவொழுக்கத்தை எண் பொருளவாக அறிவுறுத்துகின்றார். பெரும்பாலும் மாந்தர் பிற வுயிர்க்குத் தீங்கு செய்யப்புகுதல் தமக்குத் துன்பம் வாராமைப் பொருட்டேயாகும். ஆகவே எத்துணை இன்னல் வரினும் யான் பிறிதோர் உயிர்க்குத் தீங்கு செய்யாமலிருக்கக் கடவேன் என்னும் உறுதியோடு வாழ்தலே 'தவம்' என்பதாம்.

இதனை,

"உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

—குறள் - உகூஉ.

என்றார் திருவள்ளுவனாரும், ஈண்டு அடிகளாரும் இத்தவத்தையே இங்ஙனம் எளிய சொற்களால் அறிவுறுத்தினர்.

இனி இத்தவத்தோடு யான் எனது என்னும் அகப்புறப்பற்றுக்களையும் விடவேண்டும் என்பதனை, 'பருத்த......தான்' என்பதனால் அறிவுறுத்தினார். உடம்பே யான் எனது என்னும் இருவகைப் பற்றிற்கும் எடுத்துக் காட்டாக நிற்றலின் பருத்ததொந்தி நம்மது என அகப்பற்றிற்குரிய உடம்பினைப் புறப்பற்றிற்குரிய நம்மது என்னும் வாய்பாட்டாலோதினர்.

இனி, சிறப்புப்பற்றி ஒருத்தருக்கும் என உயர்திணையாகக் கூறினரேனும் ஒருயிர்க்கும் என்பதே கருத்தாகக் கொள்க.

ஒருயிர்க்குந் தீங்கிழைத்தல் கூடா தென்னும் எண்ணம் அருளுடைமையாற் பிறப்பதாம். அஃதுண்டாகவே பிறவுயிரை ஓம்பும் அருள் தானே தோன்றுமாகலின் இவற்றுள் ஒன்றே கூறி விடுத்தார்.

என்னை?

"பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே"

எனவரும் புறப்பாடலும் (கூகூ) நினைக. (கக)

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்.

(இ - ள்.) முத்தர் எத்தொழிலைச் செய்தாலும் அவத்தை எது பட்டாலும் - இம்மையிலேயே வீடு பெற்றவர் எந்தத் தொழிலைச் செய்தாலும் இன்ப துன்பங்களில் எந்த நிலையை எய்தினாலும்; மனம் மோனத்தே இருக்கும் - அவர் உள்ளம் தூய நிலையிலேயே இருக்கும்; எங்ஙனமெனின், தாதி வித்தகமாய் விளையாடி இருகை வீசி வந்தாலும் மனம் நீர்க்குடத்தேதான் - நீர்க்குடஞ் சுமந்து வருகின்ற குற்றேவல் மகளானவள் சதுரப்பாட்டுடனே இயங்கித் தன் இரண்டு கைகளையும் வீசி விளையாடி வரும்பொழுதும் அவள் உள்ளம்தான் சுமந்துள்ள நீர்க்குடத்தின் பாலே இருத்தல் போன்று என்பதாம்.

(வி - ம்.) முத்தர் இம்மையிலேயே பற்றற்றுத் தூய்மையுடைய சான்றோர். இவர் பிறர் நலங்கருதித் தொழில் செய்தலும் பிராரத்த வினை காரணமாக எதிர்ப்பட்ட தொழிலைத் தம் முனைப்பின்றியே செய்தலும் உற்றநோய் நோன்றலும் உற்ற வின்பத்தை நுகர்தலும் செய்வர். அங்ஙனம் செய்தாலும் இன்ப துன்பங்களை நுகர்ந்தாலும் அவற்றாற் றாக்குண்ணாதிருப்பர். அவர் உள்ளம் திருவருளிலேயே நிலைத்திருக்கும் என்பதாம்.

இதற்கு நீர் சுமந்து வருகின்றவள் விளையாடிக் கைவீசி வரும் பொழுதும் அவள் மனம் நீர்க்குடத்தின் பாலதாகவே இருத்தல் உவமை. இனி முத்தர் மனம் இவ்வாறிருத்தலை,

"தேசமிடம் காலந்திக் காசனங்க ளின்றிச்
  செய்வதொன்று போல்செய்யாச் செயலதனைச் செய்தங்
கூசல்படு மனமின்றி யுலாவ னிற்றல்
  உறக்கமுணர் வுண்டிபட் டினியிருத்தல் கிடத்தல்
மாசதனிற் றூய்மையினின் வறுமை வாழ்வின்
  வருத்தத்தில் திருத்தத்தில் மைதுனத்திற் சினத்தி
னாசையினின் வெறுப்பினிவை யல்லா தெல்லாம்
  அடைந்தாலும் ஞானிகடா மரனடியை யகலார்"

எனவரும் சித்தியாரானும் (சுப - உஅ) உணர்க. (௬௦)

மாலைப் பொழுதினறு மஞ்சளரைத் தேகுளித்து
வேலைமினக்கிட்டு விழித்திருந்து—சூலாகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானா லென்செய்வாள் பின்.

(இ - ள்.) மாலைப் பொழுதில் நறு மஞ்சள் அரைத்து குளித்து - காம மலருகின்ற அந்திமாலைப் பொழுதிலேயே தன் கணவனோடு

அற்றையிரவிற் புணரும் கருத்துடையளாய் நறுமணமுடைய மஞ்சளை அரைத்து முக முதலிய உறுப்புக்களில் நீவி நீராடி; வேலை மினக் கெட்டு விழித்திருந்து - இரவில் வேறு தொழில்களை விட்டு நீண்ட பொழுது விழித்திருந்து (கணவனோடு கலவியும் செய்தமையால்) சூல்ஆகி - கருவுற்று; பெற்றாள் - ஒருத்தி ஒரு பிள்ளையைப் பெற்றனள்; வளர்த்தாள் பெயர் இட்டாள் - அப்பிள்ளையை நன்கு பேணியும் வளர்த்தனள் அவனுக்கேற்றதொரு பெயரையும் இட்டு அழைத்து மகிழ்ந்தாள்; பெற்ற பிள்ளை பித்து ஆனால்-இங்ஙனம் அருமையாகப் பெற்று வளர்த்த அந்தப் பிள்ளைதானும் பித்தனாகி விட்டால்; பின் என் செய்வாள் — அத்தாயானவள் அப்பிள்ளையின் திறத்திலே என் செய்ய மாட்டுவள் என்பதாம்.

(வி - ம்.) இத்திருப்பாட்டு அன்புடைய ஒருதாய் தான் முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்து ஈன்று இனிதின் வளர்த்த மகன் காளைப் பருவம் எய்திய பொழுது பித்தனாயினன். அவள் அடிகளார் திருமுன்பு அம்மகனை அழைத்து வந்து விடுத்து அவன் பிணி தீர்க்குமாறு இரந்து வேண்டினளாக. அவள் நிலைக்கு இரங்கிய அடிகளார் அவன் பிணியைப் போக்கியருள வேண்டும் என்று ஆண்டவனை நினைத்து ஓதியது என்றும் அவன் அப்பொழுதே பித்துத் தெளிந்து உய்ந்தான் என்றும் உணர்க.

இதன்கண் அடிகளார் ஆண்டவனை நோக்கி எம்பெருமானே எல்லாம் நின் செயலேயன்றோ? இப்பெண் மாலைப் பொழுதில் காமமுற்று நீராடிக் கணவனை இரவிற் கூடிச் சூலாகி இவனைப் பெற்றாள் பேரிட்டாள். இவன் பித்தன் ஆயினன். அந்தோ! இவள் இனி இவன் திறத்தில் என் செய்வள்? நின் திருவருளே இவனை உய்வித்து இவள் துயரமும் போக்கவல்லது என்றிரந்து கூறியபடியாம். (சக)

வேறு

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலனொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட் டீரே.

(இ - ள்.) நாபிளக்கப் பொய் உரைத்து-உலகத்தீரே! உடலிற் சூடேறி நாவெந்து பிளந்து போமளவு பொய்களையே பேசி; நவநிதியம் தேடி —ஒன்பான் வகை மணிகள் உட்படப் பெரிதும் பொருள்களை யீட்டி; நலன் ஒன்றும் அறியாத நாரியரைக் கூடி - நன்மை சிறிதும் அறிந்திலாத மகளிரை மணந்து; பூ பிளக்க வருகின்ற புற்று ஈசல்போல - நிலத்தைப் பிளத்தலாலே உண்டாகின்ற புற்றுக்களி

னின்றும் புறப்படுகின்ற ஈசல்போன்று; புலபுல எனக் கலகல எனப் புதல்வர்களைப் பெறுவீர் - புலபுல வென்றும் கலகல வென்றும் ஒலியுண்டாக்குகின்ற எண்ணிறந்த குழந்தைகளையும் பெற்று விடுவீர்; காப்பதற்கும் வகையறியீர் - இவ்வாற்றால் வறுமை வந்துற்ற பொழுது அந்த மக்களைப் பாதுகாக்கவும் வழி தெரியாமல் வருந்துவீர்; கைவிடவும் மாட்டீர் - அம்மக்களையும் அம்மாதரையும் கைவிட்டுத் துறந்து போகவும் துணியீர்; கவர் பிளந்த மரத்துளையில் கால் நுழைத்துக்கொண்டே - ஒரு பக்கத்தே இரண்டாகப் பிளந்த (மற்றொரு பக்கம் பிளவுபடா முன் ஆப்பு வைத்து விடப்பட்ட) மரத்தின் இடுக்கிலே தனது காலை வலிய நுழைத்துக்கொண்டு; ஆப்பு அதனை அசைத்து விட்ட குரங்கதனைப் போல - அவ்விடுக்கிலறைந்துள்ள ஆப்பினைத் தனது அறியாமையால் அசைத்து எடுத்துவிட்ட குரங்கானது அவ்விடுக்கிலகப்பட்டுக்கொண்டு துன்புறுதல் போலே; அகப்பட்டீர் கிடந்து உழல அகப்பட்டீர் - நீயிரும் இவ்வுலக மாயையிலே அகப்பட்டுக் கொண்டீர் அந்தோ மாபெருந் துன்பக் கடலிலே கிடந்து துன்புறும்படி அகப்பட்டுக் கொண்டீரே; இனி என் செய்வீர்? என்பதாம்.

(வி - ம்.) இஃது உலகியலில் அகப்பட்டுக்கொண்டு தாம் பெற்ற மக்களைக் காக்குந் திறனுமின்றி அல்லலுற்று வருந்துகின்ற மாக்களை நோக்கிக் கூறுமாற்றால் பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை முதலிய ஆசைகள் தொடக்கத்தே பொன் மண் பெண் முதலியன இன்பப்பொருள் போன்று காட்டுதலாலே உலக வாழ்க்கையிற் புகுந்து பின்னர் அவைகளே ஆற்றொணாத் துன்பப் பொருளாகி விடுதலை உலகத்தே காண்மின் என்றும் அத்துன்பத்தினின்றும் தப்புதற்கு இவற்றை விடுத்து இறைவன் திருவடிகளைப் பற்றுமின் என்றும் குறிப்பாக அறிவுறுத்தவா றென்க.

இதன்கண் அடிகளார் சிறந்ததோருவமை தேர்ந்து கூறுதலுணர்ந்து மகிழ்க. (சஉ)

வேறு

வடிவந் தானும் வாலிப மகளுந் தாயும் மாமியும்
படிகோண் டாரு மூரிலே பழிகோண் டாட னீதியோ
குடிவந் தானு மேழையோ குயவன் றானுங் கூழையோ
நடுநின் றானும் வீணனோ நகரஞ் சூறை யானதே.

(இ - ள்.) வடிவந்தானும் வாலிபம் - இந்நகரத்தில் வாழ்ந்த குடிமகனுடைய வடிவமோ அழியாத காளைப் பருவமாம்; மகளும் தாயும் மாமியும் - இவன் மகளும் தாயும் மாமியும்; படிகொண்டு ஆரும் ஊரிலே - தத்தமக்குரிய உணவினைக்கொண்டு உண்ணுகின்ற இந்த ஊரிலே; பழிகொண்டாடல் நீதியோ - பழிச்சொல்லைத் தூற்றித் திரிவது அறமாகுமா; குடி வந்தானும் ஏழையோ - இந்நகரிற் குடியிருக்க வந்த அந்த இளைஞனும் ஏழையல்லனோ; குயவன்றானும் கூழையோ - அவனுக்குக் குடில் வனைந்து கொடுத்த குயவனும் திறனில்லாதவனோ? ஆற்றல் உடையவனேயன்றோ? நடு நின்றானும் வீணனோ - அல்லது இவ்வூர் நீதிபதியும் மிகவும் நேர்மை யுடையனே;

வீணன் அல்லனே; நகரம் சூறை ஆனதே - அங்ஙனமிருந்தும் இந்த நகரத்தே அவன் சிறுகுடில் கொள்ளை கொள்ளப்பட்டு விட்டதே அதற்குக் காரணம் என்னையோ? என்பதாம்.

(வி - ம்.) குடிவந்தான் வடிவம் வாலிபம் என்க. குடிவந்தவன் வாலிபன் என்றது உயிர் நித்தியம் என்றவாறு. மகள் என்றது – அவ்வுயிரிற் றோன்றும் ஆணவ மலத்தை. உயிர்க்குத் தநுகரண புவனங்களைத் தருதலால் தாய் என்றது மாயையை. நுகர்ச்சிப்பயனைத் தருதலால் கன்ம மலத்தை மாமி என்றார்.

இனிக் குயவன் என்றது, படைப்புக் கடவுளை. நடுநின்றான் என்றது மறலியை. உயிர் ஆணவம் மாயை கன்ம முதலியவற்றோடு எடுத்த உடம்பு அழிந்தமையைச் சூறையானது என்றார். இஃது ஒருவன் இறந்து பட்டமை கருதிக் கூறியவாறு.

ஊழ்வினையாகிய கள்வன் புகுந்து கொள்ளை கொண்டு போயினன் என்பது கருத்து. (௬௩)

மண்ணு முருகு மரமுருகு மாயை யுருகு மாலுருகும்
பேண்ணு முருகு மாணுருகும் பேதா பேத வகையுருகும்
அண்ண லுருகு மிடத்தமர்ந்த வரத்தா லுருகு மரவணையான்
எண்ணி யுருகுங் குருநாத னேன்பா லுரைத்த வோர்மொழியே.

(இ - ள்.) குருநாதன் என்பால் உரைத்த ஓர் மொழி-அடியேன் ஞானாசிரியப் பெருந்தகையார் அடியேனுக்குச் செவியறிவுறுத்த ஒப்பற்ற மறைமொழியினாலே; மண்ணும் உருகும் – இந்நிலவுலகமே உருகிக் கரைந்துபோம்; மரம் உருகும் - மர முதலிய ஓன்றறியுயிர் முதலிய உயிரினங்கள் எல்லாம் கரைந்துருகும்; மாயை உருகும் - மாயையுருகிக் கரைந்துபோம்; மாலும் உருகும் - மயக்கமும் உருகிப் போம்; பெண்ணும் உருகும் ஆணும் உருகும் - பெண்மையும் உருகிவிடும் ஆண்மையும் உருகி யொழியும்; பேதம் அபேத வகையுருகும் – வேற்றுமையும் ஒற்றுமையும் ஆகிய பண்புகளும் உருகிப்போம்; அண்ணல் உருகும் சிவபெருமானும் உருகுவான்; இடத்து அமர்ந்த ஆத்தாள் உருகும்-அவன் இடப்பாகத்தே அமர்ந்த இறைவியும் உருகி விடுவாள்; அரவணையான் எண்ணி உருகும் - திருமால் முதலிய கடவுளரும் யான் பெற்ற பேற்றினை நினைந்து உள்ள முருகா நிற்பர். அத்துணைப் பெருமை யுடையது என்பதாம்.

(வி - ம்:) இதனால் நல்லாசிரியரின் உரையினால் மெய்ஞ்ஞானம் பிறந்தவுடன் அகம் புறம் என்னாமல் எங்கணும் ஒரே நிலையாய்க் கண்டு இறை நிறைவிலழுந்துதலாலே - தாமிருக்கும் உலகமும் உயிரினங்கள் ஆண் பெண் வேற்றுமைகளும் சாதி வேற்றுமையும் சிவசத்திவேற்றுமைகளும் இல்லையாய் அதுவே தானாகக் காணப்படும் இந்நிலையை எய்தினோர் திருமால் முதலியோராற் போற்றப்படுவர் என்பதனை இவ்வாறு ஆசிரியரின் உரை அத்துணை இன்பமுடையது எனவும் ஒரு பொருள் தோன்றுமாறு அடிகளார் திருவாய் மலர்ந்தருளினா ரென்க. (௬௪)

திருப்பாடற்றிரட்டு முற்றிற்று.

பட்டினத்தடிகளார் திருவாய் மலர்ந்தருளிய

அருட் புலம்பல்

முதல்வன் முறையிடு

(அஃதாவது அடிகளார் தாம் படுகின்ற பிறப்பின்னல்களை இறைவன்பாற் கூறித் தம்மைப் பாதுகாக்க வேண்டுதல் என்றவாறு.)

பெரும்பாலும் இனிவரும் பகுதிகள் அடிகளார் சீவன் முத்தராய பின்னர்ப் பாடப் பெற்றன ஆதலால் சொற்கள் கல்லாச்சிறுஅர் சொற்கள் போலவும் ஆங்காங்கே வருவனவுள; அவை யெல்லாம் நம்மால் வழுவமைதியாகவே கொண்டு ஆங்காங்குக் கிடைக்கின்ற கருத்துக்கள் மட்டும் பொன்னேபோல் போற்றிக் கொள்ளப்படற்பாலனவாம் என்றுணர்க.

கன்னி வனநாதா கன்னி வனநாதா

(இ - ள்.) மதுரையிலெழுந்தருளி யிருக்கின்ற இறைவனே! கேள்!; மதுரையிலெழுந்தருளி யிருக்கின்ற இறைவனே கேள்! என்பதாம்.

(வி - ம்.) கன்னிவனம் - மதுரையின் பெயர்களுள் ஒன்று. முன்னர்க் காடாயிருந்து பின் நகராக்கிக் கன்னிகையாகிய அங்கயற் கண்ணியால் ஆட்சி செய்யப்பட்டமையின் மதுரை அப்பெயர் பெற்றது என்ப. (க)

மூலமறி யேன்முடியு முடி வறியேன்
ஞாலத்துட் பட்டதுயர் நாட நடக்குதடா

(இ - ள்.) பட்டதுயர் நாட மூலம் அறியேன் முடியும் முடிவு அறியேன் - அடியேன் பட்டதுயரத்தை ஆராய்ந்தறியுங்கால் அதற்குக் காரணம் யாதென்றும் அறிகின்றிலேன் இத்துயரம் சென்று முடியும் முடிவுதான் யாது என்றும் அறிகின்றிலேன்; ஞாலத்துள் நடக்குதடா - இவ்வாறு இரண்டு முனையும் காணப்படாவாகவும் இவ்வுலகத்தில் அதுதானே நிகழ்கின்றதடா! இதனை யான் எவ்வாறு மாற்றுவேன்!

(வி - ம்.) துன்பத்திற்கு முதலும் முடிவும் அறிகிலேன் ஆயினும் அது நிகழ்கின்றது. ஆகலின் எல்லாம் நின் செயலே போலும் என்றவாறு. (உ)

அறியாமையா மலத்தா லறிவுமுதற் கெட்டேனடா
பிறியா வினைப்பயனாற் பித்துப் பிடித்தேனடா.

(இ - ள்.) அறியாமை ஆம் மலத்தால் - அறியாமையே தன் றன்மையாகின்ற ஆணவ மல மறைப்பினாலே; அறிவு முதல் கெட்

டேனடா - என் அறிவாகிய பொருள் கெடப்பெற்றேன்; பிறியா வினைப்பயனல் - என்னைப் பிறியாதுறைகின்ற கன்ம மலத்தின் பயனாக அடியேன்; பித்துப் பிடித்தேனடா - பித்தனாகி உழல்கின்றேன்; இவற்றிற்கு யான் என் செய்கோ; என்பதாம்.

(வி - ம்.) ஆணவ மலத்தால் அறிவு கெட்டுக் கன்ம மலத்தாலே பித்தனாகி யுழல்கின்றேன்; என்றவாறு. (ட)

தனுவாதி நான்குந் தானாய் மயங்கினேனடா
மனுவாதி சத்தி வலையிலகப் பட்டேனடா.

(இ - ள்.) தனு ஆதி நான்குந் தானாய் மயங்கினேனடா - உடல் கருவி இடம் நுகர்ச்சி என்னும் இந்த நான்கும் மாயையாகவும் இவற்றையே உயிராகிய யான் என்று கருதி மயக்கமுற்றேன்; மனு ஆதிசத்தி வலையில் அகப்பட்டேனடா - மறைமொழியின் பொருளாகிய முதன்மையுடைய மறைப்புச் சத்தியின் வலையிலே சிக்கிக் கொண்டேனடா.

(வி - ம்.) தனுவாதி நான்கு - தநுகரண புவன போகங்கள். இவை மாயையாகவும் இவற்றை யான் எனது என்று செருக்குற்று மயங்கினேன். மனு-மந்திரம்; மறைமொழி. ஆதிசத்தி ஈண்டு திரோதாயிசத்தி. அது மலத்தின் வழி நின்று மோக முதலியவற்றைக் காரியப் படுத்தலான் அதன் வலையிலகப்பட்டேன் என்றவாறு. (௬)

மாமாயை என்னும் வனத்தி லலைகிறண்டா
தாமா யுலகனைத்துந் தாது கலங்கிறண்டா.

(இ - ள்.) மாமாயை என்னும் வனத்தில் அலைகிறண்டா - பெரிய மாயை என்கின்ற காட்டினூடே திசை யறியாமலும் வழி தெரியாமலும் அலைகின்றேன். தாம் ஆய் உலகு அனைத்தும் தாது கலங்கிறண்டா - அம்மாயைகளே யான் ஆகி எல்லாவுலகத்தும் திரிந்து பெரும்பிணி எய்துகின்றேனே என்பதாம்.

(வி - ம்.) திசையும் வழியும் தெரியாமையால் மாயையை வனம் என்றார். தாம் என்றது மாயைகளை. அசுத்தமாயை சுத்தமாயை என இரண்டாகலின் தாம் என்றார். தாது கலங்குதல் பிணிவாய்ப்படுதல். (௬)

(கன்னி வனநாதா கன்னி வனநாதா):—

மண்ணாசைப் பட்டேனை மண்ணுண்டு போட்டதடா
பொன்னாசை பெண்ணாசை போகேனே என்குதே.

(இ - ள்.) மண் ஆசைப் பட்டேனை மண் உண்டு போட்டது அடா - மண் மிகவும் வேண்டுமென்று ஆசைப்பட்ட அறிவிலியாகிய என்னை அந்த மண்ணே தின்றொழித்தது. மேலும் பொன்னாசையும் பெண்ணாசையும் என்னை விட்டுப் போகேம் என்று என்னிடத்திலேயே இருக்கின்றன காண்.

(வி - ம்.) தெளிவுபற்றி மண்ணுண்டு போட்டதென எதிர் காலம் இறந்த காலமாயிற்று. (௬)

மக்கள் சுற்றத்தாரை மறக்கேனே யென்குதே
திக்கரசா மாசையது தீரேனே யென்குதே.

(இ - ள்.) மக்கள் சுற்றத்தாரை மறக்கேன் என்குது - அந்தோ! என்னெஞ்சம் துறந்த பின்னரும் மக்களையும் உறவினரையும் மறவாது அவரைக் காண விரும்புகின்றதே; திக்கு அரசு ஆம் ஆசையது தீரேனே என்குது - எட்டுத்திசைகளையும் சேர ஆளும் அரசனாக வேண்டும் என்னும் தனது பேராசையை விடேன் என்கின்றதே; என் செய்கேன்!

(வி - ம்.) துறந்த பின்னரும் என வருவித்துக் கொள்க. திக்கரசு - திசைகளை ஒரு சேர ஆளும் அரசன். (௭)

வித்தைகற்கு மாசையது விட்டொழியே னென்குதே
சித்துகற்கு மாசை சிதையேனே யென்குதே.

(இ - ள்.) வித்தை கற்கும் ஆசையது விட்டொழியேன் என்குது - கற்றனவே அமையும் என்னாது மேலும் மேலும் கற்க வேண்டும் என ஆசை என்னை விடாது வருத்துகின்றதே! அம்மட்டோ? சித்து கற்கும் ஆசை சிதையேன் என்குது - எண்வகைச் சித்திகளைக் கற்கவேண்டும் என்னும் ஆசையும் அழியவில்லையே? என்செய்கேன்!

(வி - ம்.) கல்வி கரையில ஆராய்ந்து அமையுடையவே கற்றலே அமைவதாக என் மனம் மேலும் மேலும் கற்க வேண்டும் என்றும் மேலும் சித்திகளையும் கற்கவேண்டும் என்றும் அவாவுகின்றது என்றவாறு. (௮)

மந்திரத்தி லாசை மறக்கேனே யென்குதே
சுந்தரத்தி லாசை துறக்கேனே யென்குதே.

(இ - ள்.) மந்திரத்தில் ஆசை மறக்கேனே என்குது - என் மனம் மந்திரஞ் செய்து மக்களை வியக்கச் செய்ய வேண்டும் என்னும் ஆசையை விடேன் என்கின்றதே!; சுந்தரத்தில் ஆசை துறக்கேனே என்குதே - அழகிய வேடம் புனைந்து கொண்டு மக்களை மயக்கவேண்டும் என்னும் ஆசையை துறந்துவிடேன் என்கின்றதே! எங்ஙனம் உய்குவேன் என்பதாம்.

(வி : ம்.) மந்திரவாதியாகி மக்களை அச்சுறுத்தவும், பொய் வேடம் பூண்டு மக்களை ஏமாற்றவும் என் மனந் துணிகின்றது. யான் எப்படி உய்வேன் என்றவாறு. (௯)

கட்டுவர்க்கத் தாசை கழலேனே யென்குதே
செட்டுதனி லாசை சிதையேனே யென்குதே.

(இ - ள்.) கட்டுவர்க்கத்து ஆசை கழலேனே என்குதே - கண்டோர் மருளும்படி தலைப்பாகை கட்டுதல் காவியுடுத்தல் முழு மெய்யும் போர்த்துதல் முதலிய ஆடைகட்டும் வகைகளிலே எனக்குள்ள ஆசை பெயர்ந்துபோக வில்லையே!; செட்டுதனில் ஆசை சிதையேனே என்குது - பிறரை ஏமாற்றிக் கவர்ந்த பொருளைப் பிறர்க்கு இம்மியும் ஈயாது சேர்த்து வைப்பதிலும் என் ஆசை அழிந்திலதே! என்பதாம்.

(வி - ம்.) துறவியாகியும் ஆடைகட்டும் ஆசையும் பொருளை ஈயாது சேர்த்து வைக்கும் ஆசையும் அழியவில்லை என்றவாறு. (௧0)

மாற்றுஞ் சலவை மறக்கேனே யென்குதே
சோற்றுக் குழியுமின்னந் தூரேனே யென்குதே.

(இ - ள்.) மாற்றுஞ் சலவை மறக்கேனே என்குதே - அழுக்காடையை மாற்றி அடிக்கடி ஒலித்துச் சலவை செய்த தூய ஆடையுடுக்கும் வழக்கத்தை மறவேன் என்கின்றது; சோற்றுக் குழியும் இன்னந் தூரேனே என்குது - பாவியேன் விரும்பியவற்றை யெல்லாம் நாடோறும் தின்னும் என் வயிறோ ஒரு சிறிதும் தூர்ந்திலது! என்பதாம்.

(வி - ம்.) துறவியாகியும் அடிக்கடி ஆடை மாற்றும் வழக்கமும் வேண்டும் உணவை யெல்லாம் விரும்பி யுண்ணும் வழக்கமும் என்னை விட்டபாடில்லை என்றவாறு. (௧௧)

கன்னி வனநாதா கன்னி வனநாதா.

(இ - ள்.) மதுரைக் கடவுளே! மதுரைக் கடவுளே இன்னும் கேட்டருள்க! என்பதாம்.

(வி - ம்.) இதுகாறும் உடலின் புறநிகழ்ச்சி கூறி மேலே உள்ளத்தினியல்பையும் ஓதுகின்றார் என்க. (௧௨)

ஐந்து புலனு மடங்கேனே யென்குதே
சிந்தை தவிக்கிறதுந் தேறேனே என்குதே.

(இ - ள்.) ஐந்து புலனும் அடங்கேனே என்குதே-சுவை முதலிய புலன்கள் ஐந்தும் என் மனத்தை இழுக்குந் தொழிலில் அடங்க மாட்டோம் என்கின்றனவே; தவிக்கிற சிந்தையும் தேறேன் என்குதே - அவற்றை அவாவித் தவிக்கும் என் மனந்தானும் அவற்றின் பொல்லாங்கினை அறிந்து தெளிகின்றிலதே என் செய்வேன்! என்பதாம்.

(வி - ம்.) சுவை ஒளியூறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து புலன்களாகிய மாயைகள் என் மனத்தைக் கவருகின்ற தன்மை மாறவில்லை. மனமும் அவற்றினியல் பறிந்து தெளிவுபெறவில்லை என்றவாறு. (௧௩)

காமக்குரோதம் கடக்கேனே என்குதே
நாமே யரசென்று நாடோறும் எண்ணுதே.

(இ - ள்) காமக்குரோதம் கடக்கேன் என்குது-என் நெஞ்சிலே காமமும் வெகுளியும் அகல்வே மல்லேம் என்று நிலை பெற்றுள்ளன; நாமே அரசு என்று நாடோறும் எண்ணுது - அந்த மனமோ யாமே அனைவரினும் பெரியேம் என்று எப்பொழுதும் செருக்குற்றுளது என்பதாம்.

(வி - ம்.) என் மனத்தினுள் காமமும் வெகுளியும் குடிகொண் டுள்ளன. மனமோ யாமே பெரியம் என்று செருக்குற்றுளது என்றவாறு. (௧௪)

அச்ச மாங்காரம் அடங்கேனே என்குதே
கைச்சு மின்னுமானங் கழலேனே யென்குதே.

(இ - ள்.) அச்சம் ஆங்காரம் அடங்கேனே என்குது - என் நெஞ்சத்தே வலியாரைக் கண்டு உண்டாகும் அச்சமும், எளியாரைக் கண்டுழி எழுகின்ற செருக்கும் அடங்கிற்றில; கைச்சும் இன்னும் மானம் கழலேனே என்குது - உலகியலுணர்ந்து அதன்கண் உவர்ப் புண்டாகியும் இன்னும் மானக்குணம் என்னை விட்டிலது; என்பதாம்.

(வி - ம்.) அச்சம் வலியாரைக் கண்டபோதுண்டாவது. செருக்கு எளியாரைக் கண்டுழித் தோன்றுவது. மானம் - தந்நிலையில் தாழாமை. (௧௫)

நீர்க்குமிழி யாமுடலை நித்தியமா யெண்ணுதே
ஆர்க்கு முயராசை யழியேனே யென்குதே.

(இ - ள்.) நீர்க்குமிழி ஆம் உடலை நித்தியமாய் எண்ணுதே. இப்பேதை நெஞ்சம் நீர்மேற் குமிழிபோலத் தோன்றி யழியும் இந்த உடம்பினை அழிவற்றதாகக் கருதுகின்றதே. ஆர்க்கும் உயிர் ஆசை அழியேனே என்குதே· அம் மனத்தை தன்னதாகக் கட்டுகின்றதும் மேலும் மேலும் உயர்கின்றதுமாகிய அவாவோ ஒரு சிறிதும் அழிய மாட்டேன் என்கின்றதே என்பதாம்.

(வி - ம்.) மனம் உடலை நித்தியமாக நினைக்கிறது அவ்வுடம்பின் பால் உள்ள ஆசையும் அழிகின்றிலது எனினுமாம். (௧௬)

கண்ணுக்குக் கண்ணெதிரே கட்டையில் வேகக்கண்டும்
எண்ணுந் திரமா யிருப்போமேன் றெண்ணுதே.

(இ - ள்.) கண்ணுக்கு கண் எதிரே கட்டையில் வேகக்கண்டும்- கண்கூடாகக் காணும்படி தன் கண்ணெதிரிலே மக்கள் உடம்பு விறகி டைப்பட்டு வெந்து சாம்பராவதைப் பார்த்திருந்தும்; எண்ணும் திரமாய் இருப்போம் என்று எண்ணுதே. நாம் என்றென்றும் நிலைத் திருப்போம் என்று இந்த மடநெஞ்சம் நினைக்கின்றதே இஃதென்ன பேதைமை? என்பதாம்.

(வி - ம்.) மனமானது தன் கண்ணெதிரிலேயே தன்னை யொத்த மாந்தர் உடம்பு எரிந்து சாம்பராகவும் தான் மாத்திரம் சாகா திருப்போம் என்று நினைக்கின்றது. என்னே பேதைமையிது! என்று வியந்தவாறு.

எண்ணும் - என்றும் என்பதன் மரூஉ. (௧௭)

அநித்தியத்தை நித்தியமேன் ருதரவா யெண்ணுதே
தனித்திருக்கே னென்குதே தனைமறக்கே னென்குதே.

(இ - ள்.) அநித்தியத்தை நித்தியமென்று ஆதரவாய் எண்ணுதே- என் மனம் நிலையாப் பொருளை நிலையுதலுடைய பொருளென்று கருதி அதனையே தனக்குப் பற்றுக்கோடாகவும் கருதுகின்றதே!; தனித் திருக்கேன் என்குதே - நிலையுதலில்லாக் கருவி கரணங்களோடு கூடாமல் தான் தனித்திருக்க உடம்படுகின்றிலதே. தனை மறக்கேன் என்குது-தன் முனைப்பை விடுகின்றிலதே! என்செய்கோ? என்பதாம்.

(வி - ம்.) அநித்தியம் என்பது உடல் கருவி உலகம் நுகர்ச்சி களை. கருவி கரணங்களோடு கூடாது தனித்திருக்கேன் என்றவாறு. தனை மறத்தல் - செருக்கற்றுப் போதல். (௧௮)

நரகக் குழியுமின்னு நான்புசிப்பே னென்குதே
உரகப் படத்தல்கு லுனைக் கெடுப்பே னென்குதே.

(இ - ள்.) உரகப் படத்து அல்குல் உனைக்கெடுப்பேன் என்குது- பாம்பின் படம் போன்ற பாவைமார் அல்குலும் யான் உன்னைக்கெடுத் தொழிப்பேன் என்று என் மனத்தை கவர்கின்றது; நரகக் குழியும் இன்னும் நான் புசிப்பேன் என்குதே - அந்த மனந்தானும் நரகக் குழியை யொத்த அந்த அல்குற் குழியின்பத்தை இன்னும் யானுகர் வேன் என்று அவாவுகின்றதே; என் செய்கோ!

(வி - ம்.) இச்செய்யுள் அடிகளை முன் பின்னுகமாறுக. (௧௯)

குரும்பை முலையுங் குடிகெடுப்பே னென்குதே
அரும்பு விழியுமென்ற னுவியுண்பே னென்குதே.

(இ - ள்.) குரும்பை முலையும் குடிகெடுப்பேன் என்குது - மடந்தையர் அல்குலேயன்றி அவருடைய பனங்குரும்பைகளை ஒத்த முலைகளும் என்னெஞ்சத்தைக் கவர்ந்து நின் திருவடிகளை நினையாமற் செய்து எனது குடியையே கெடுத்து விடுவேன் என்கின்றன; அரும்பு விழியும் என்றன் ஆவி உண்பேன் என்குது - அம்மட்டோ, அவர் தம் மலர்போன்ற கண்களும் அடியேன் உயிரையே பருகி விடுகின்றனவே எங்ஙனம் உய்குவேன் என்பதாம்.

(வி - ம்.) என்னெஞ்சம் மகளிர் இன்பத்தில் பெரிதும் அழுந் திக்கிடக்கின்றது அடியேன் எவ்வாறுய்வேன்! என்றவாறு. (௨0)

மாதருருக் கொண்டு மறலிவஞ்ச மெண்ணுதே
ஆதரவு மற்றிங் கரக்கா யுருகிறண்டா

(இ - ள்.) மறலி மாதர் உருக்கொண்டு வஞ்சம் எண்ணுது - கூற்றுவன் தன்னுருவோடு வரின் யான் அஞ்சி நின்பாற் றஞ்சம்புக்குய் வேன் என்று கருதி மகளிர் உருக்கொண்டு வந்து வஞ்சகமாக என்னுயிரைக் கவர நினைக்கின்றதே; இவ்வஞ்சகச் செயலிற் றப்புவிக்கும்; ஆதரவும் அற்று இங்கு அரக்கா உருகிறண்டா - பற்றுக்கோடும் பெருமல் துன்ப நெருப்பில் அரக்குப் போன்றுருகி நிற்கிறேன்! என் செய்கோ? என்பதாம்.

(வி - ம்.) மறலி - கூற்றுவன். கூற்றுவன் தன்னுருவோடு வரின் யான் அஞ்சி மார்க்கண்டனைப் போன்று நின்னைத் தஞ்சம் புகுந்துய்வேன் என்று கருதி மாதருருக்கொண்டு வந்து வஞ்சிக்கின்றான் என்பது கருத்து.

"பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு"

—குறள் - ௧0அ௩.

எனவருந் திருக்குறளையும் ஈண்டு நினைக. (உ௧)

கந்தனை யீன்றருளும் கன்னிவன நாதா
எந்த விதத்திஞ னேறிப் படருவண்டா.

(இ - ள்.) கந்தனை ஈன்றருளும் கன்னி வனநாதா - முருகப் பெருமானை உக்கிரபாண்டியனாக இந்திரசாலம் போலக் கருப்ப மெய்தாது அந்தமில் உயிரும் ஞாலம் அனைத்தும் ஈன்ற தாயாம் சுந்தர வல்லியாகிய தடாதகையார் ஈன்றருளுதற்கிடனான மதுரைப் பெருமானே! நான் - மேலே கூறிய இத்துணை இடையூறுடைய எளியேன்; எந்த விதத்தின் எறிப்படரு வணடா - எவ்வாற்ருன் நின் திருவருளுலகிலேறி வருவேன்! என்பதாம்.

(வி - ம்.) கந்தனை ஈன்றருளும் கன்னி எனக் கன்னிக்கு அடையாக்கி அதற்கிணங்க விரித்தோதுக. ஈன்றருளும் என்றமையால் இவ்வாறு கூறல் சிறப்பென்க. இனி, கந்தனை ஈன்றருளுசலே நாதனுக்கேற்றலுமாம். மேலே இடையூறுகள் பல கூறினமையின் இத்துணை இடையூறுடைய நான் எந்த விதத்தில் எறிப்படருவேன் என்பது கருத்தென்க. (உஉ)

கன்னி வனநாதா கன்னி வனநாதா

(இ - ள்.) மேலுரைத் தாங்குரைத்துக் கொள்க.

புல்லாகிப் பூடாய்ப் புலந்தநாள் போதாதோ
கல்லாய் மரமாய்க் கழிந்த நாள் போதாதோ.

(இ - ள்.) புல் ஆகி பூடு ஆய்ப் புலந்த நாள் போதாதோ - அடியேன் ஓன்றறிவுயிராகிய புற்களாய் முளைத்தும் பூடுகளாய் முளைத்தும் அழிந்த காலங்கள் அமையாவோ?; கல்லாய் மரமாய்க் கழிந்த நாள் போதாதோ - கல்லாகவும் மரமாகவும் தோன்றிக் கழிந்த காலங்கள் அமையாவோ? என்பதாம்.

இது முதல் வருகின்ற பல கண்ணிகள் மணிவாசக அடிகளார் சிவபுராணத்தின்கண் "புல்லாகிப் பூடாய் .... எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" எனவரும் திருவாசகம் அடிகளார் நினைவின் முகிழ்த்தமை காரணமாகத் திருவாய் மலர்ந்தருளியபடியாம்.

இனி, கல்லாய்க் கழிந்தநாள் என்றது கேவலாவத்தையிற் கழிந்த நாள் என்று கொள்க. திருவாசகத்தினும் இப்பொருளே கொள்க. என்னை? உயிர்கள் கல்லாகவும் பிறக்குமென்றல் சைவசித்தாந்தத்திற் கொள்வாமையான் என்க. (உக)

கீரியாய்க் கீடமாய்க் கேட்டநாள் போதாதோ
நீரியாய் யூர்வனவாய் நின்றநாள் போதாதோ.

(இ - ள்.) கீரியாய் - கீரிப்பிள்ளையாய்; கீடமாய் - புழுவாய்ப் பிறந்து; கெட்டநாள் போதாதோ - கழிந்த காலம் அமையாதோ?; நீரியாய் - நீர் வாழ்வனவாகிய மீன் முதலியனவாகவும்; ஊர்வன வாய் - ஊர்ந்து செல்லும் பாம்பு முதலியனவாகவும்; நின்ற நாள் போதாதோ - பிறந்துழன்ற காலமே அமையாதோ? என்பதாம்.

(வி - ம்.) கீடம் - புழு. கெட்டநாள் - கழிந்தநாள். நீரி - நீர் வாழ்வன. (உஉ)

பூதமோடு தேவருமாய்ப் போனநாள் போதாதோ
வேதனைசெய் தானவராய் வீழ்ந்தநாள் போதாதோ.

(இ - ள்.) பூதமொடு தேவருமாய்ப் போனநாள் போதாதோ - பூதகணத்தினும் தேவகணத்தினும் பிறந்து கழிந்தநாள் அமையாதோ? வேதனை செய் தானவராய் வீழந்தநாள் போதாதோ - பிறவுயிர்க்குத் துன்பமே செய்கின்ற அரக்கராய்ப் பிறந்து கழிந்த நாள் அமையாதோ?; என்பதாம்.

(வி - ம்.) பூதம் - ஒருவகைத் தேவகணம். நரகருமாம் (உ௩)

அன்னை வயிற்றி லழிந்தநாள் போதாதோ
மன்னவனாய் வாழ்ந்து மரித்தநாள் போதாதோ.

(இ - ள்.) அன்னை வயிற்றில் அழிந்த நாள் போதாதோ - தாயினது கருவிலிருக்கும் பொழுதே அழிந்தொழியக் கழிந்தநாள் அமையாதோ?; மன்னவனாய் வாழ்ந்து மரித்த நாள் போதாதோ - அரசனாய்ப் பிறந்து வாழ்ந்து இறந்தநாள் அமையாதோ?; என்பதாம்.

(வி - ம்.) பத்துத் திங்களும் முற்று முன்னரே இடைத் திங்களிலும் கருச்சிதைதலுண்மையின் அன்னை வயிற்றி லழிந்தநாள் என்றார். இனி ஒவ்வொரு பிறப்பிலும் தாய் கருப்பத் திருக்கை போல வீணே கழிந்த நாளும் எண்ணிலவே அவை போதாவோ எனினு (உச)

தாயாகித் தாரமாய்த் தாழ்ந்தநாள் போதாதோ?
சேயாய்ப் புருடனுமாய்ச் சென்றநாள் போதாதோ.

(இ - ள்.) தாயாகி தாரமாய் தாழ்ந்த நாள் போதாதோ – சில உயிர்கட்குத் தாயாகியும் சில வுயிர்கட்கு மனைவியாகவும் இருந்து கழித்த நாள் அமையாதோ?; சேயாய் புருடனுமாய்ச் சென்ற நாள் போதாதோ - சில வயிர்கட்கு மகவாகவும் சில வுயிர்க்குக் கணவனாகவு மிருந்திருந்து கழித்த நாள் அமையாதோ? என்பதாம்.

(வி - ம்.) உயிர்கள் மாறிப்பிறக்குங்கால் வினைக்கேற்ப ஆண் பெண்ணுதலும் பெண் ஆணுதலும் உண்டு என்பது தோன்ற இவ்வாறு கூறினர். (உஎ)

நோயுண்ண வேமெலிந்து நொந்த நாள் போதாதோ
பேயுண்ணப் பேயாய்ப் பிறந்தநாள் போதாதோ.

(இ - ள்.) நோய் உண்ணவே மெலிந்து நொந்தநாள் போதாதோ - இவ்வாறு பிறந்துழன்ற எண்ணிறந்த பிறவிகளினும் நோய்வாய்ப்பட்டு அடியேன் துன்புற்ற காலம் அமையாதோ; பேய் உண்ணப் பேயாய்ப் பிறந்த நாள் போதாதோ - பேயாலறையுண் டிறந்து யானும் பேயாகவே பிறந்து கழித்த நாள் அமையாதோ? என்பதாம்.

(வி - ம்.) பேய்களால் அறையுண்டிறப்போரும் துட்ட தெய்வங்களால் கொல்லப் பட்டோரும் பேய்ப் பிறப்பெய்துவர் என்னும் உலகுரைபற்றிப் பேயுண்ணப் பேயாய்ப் பிறந்தநாள் என்றார். (உஅ)

ஊனவுடல் கூன்குருடா யுற்றநாள் போதாதோ
ஈனப்புசிப்பி லிளைத்த நாள் போதாதோ.

(இ - ள்) கூன் குருடா ஊன உடல் உற்ற நாள் போதாதோ - கூன் குருடு செவிடு முடம் முதலிய உறுப்புக் குறையுடைய பிறப்பு களிலே பிறந்துழன்ற நாள் அமையாதோ?; புலாலுண்ணும் பிறப் புற்றுழன்ற நாள் அமையாதோ என்பதாம்.

(வி - ம்.) கூன் குருடா ஊனவுடலுற்ற என மாறுக. ஈனப் புசிப்பு-புலாலுண்ணல். இனி விலைமாதராகிப் பொருளீட்டி யுண்ணல் முதலியனவுமாம்; குறைந்த உணவுண்ணலுமாம். (உக)

பட்ட களையும் பரதவிப்பும் போதாதோ
கெட்டநாள் கெட்டேனென்று கேளாதும் போதாதோ.

(இ - ள்.) பட்ட களையும் பரதவிப்பும் போதாதோ - எண்ணத் தொலையாத பிறப்புக்களிலே அடியேன் இதுகாறும் பட்ட துயரமும் அலமரலும் அமையாவோ? கெட்ட நாள் கெட்டே னென்று கேளாதும் போதாதோ - அடியேன் கெட்டொழிந்த நாள் களிலெல்லாம் யான் கெட்டே யொழிந்தேன். இவன் ஒழிக என்று நீ ஏன் என்று கேளாது வாய் வாளாதிருந்த நாள் அமையாதோ? என்பதாம்.

(வி - ம்.) களை - துன்பத்தா லெய்து மிளைப்பு. பரதவித்தல் - அலமருதல். கெட்டே போயினன் இனி உய்யான் என்று கருதி நீ கேளாது இருந்ததும் போதாதோ என்றவாறு. (௩௦)

நில்லாமைக் கேயழுது நின்ற நாள் போதாதோ
எல்லாரு மேன்பார மேடுத்தநாள் போதாதோ.

(இ – ள்.) நில்லாமைக்கு அழுது நின்ற நாள் போதாதோ - என் இளமை செல்வம் நில்லா தழிந்தமைக்கும் இனி இந்த யாக்கையும் நில்லாதென்று கருதியும் வருந்தி யான் அழுது நின்ற நாள் அமையாதோ? என் பாரம் எல்லாரும் எடுத்த நாள் போதாதோ – பிறப்புக் கடோறும் யான் பிணமாய பொழுது யான் சுமக்கும் என் உடற் சுமையைப் பிறரெல்லாம் சுமந்து கொடு போன நாள் அமையாதோ? என்பதாம்.

(வி - ம்.) நில்லாமைக் கழுதல் - இளமை நில்லாமைக்கும் யாக்கை நில்லாமைக்கும் அழுதல். பாரம் - உடற்சுமை. (௯௧)

காமன் கணையாற் கடைபட்டல் போதாதோ
எமன் கரத்தா லிடியுண்டல் போதாதோ.

(இ - ள்.) காமன் கணையால் கடைபட்டல் போதாதோ - எண்ணிறந்த பிறப்புக்களினும் காமவேளின் மலரம்புகளால் துளைக்கப் பட்டு வருந்தியது அமையாதோ?; எமன் கரத்தால் இடியுண்டல் போதாதோ - பிறவிகடோறும் சாக்காடு வந்துற்ற பொழுதெல்லாம் கூற்றுவன் கைகளாற் புடையுண்டு பட்டதுன்பம் அமையாதோ? என்பதாம்.

(வி - ம்.) எண்ணிறந்த பிறப்புக்களினும் காம நோயால் வருந்தியதும் சாதற்றுன்பத்தால் வருந்தியதும் அமையாவோ? என்றவாறு. (௯௨)

நான்முகன் பட்டோலை நறுக்குண்டல் போதாதோ
தேன்றுளபத் தான்நேமி தேக்குண்டல் போதாதோ.

(இ - ள்.) நான்முகன் பட்டோலை நறுக்குண்டல் போதாதோ - பிரமனுடைய கணக்கோலையில் எண்ணிறந்த முறை வரைந்து கிழி பட்டது அமையாதோ; தேன் துளபத்தான் நேமி தேக்குண்டல் போதாதோ - தேன் பொருந்திய துளசி மாலை சூடும் திருமாலுடைய ஆணைச்சக்கரத்தால் பிறவி தோறும் என் வாழ் நாள் தேங்கி நின்றது அமையாதோ? என்பதாம்.

(வி - ம்.) பிரமனால் எண்ணிறந்த முறை என் பொருட்டு எழுதி எழுதிக் கிழிக்கப்பட்ட ஏடுகள் அமையாவோ? திருமாலாற் பாது காக்கப்பட்டு இவ்வுலகில் தேங்கி நின்ற வாழ்நாள்கள் அமையாவோ என்றவாறு. (௯௩)

உருத்திரனுர் சங்காரத் துற்றநாள் போதாதோ
வருத்த மறிந்தையிலை வாவேன் றழைத்தையிலே.

(இ - ள்.) உருத்திரனுர் சங்காரத்து உற்றநாள் போதாதோ - பிறவி கடோறும் உருத்திரன் அழிக்க அவ்வழிவிலகப்பட்டு அடைந்த

துயரம் அமையாதோ? வருத்தம் அறிந்தையிலை வா என்று அழைத்தையிலை - எம்பெருமானே நீ அருட்கடலாயிருந்தும் அடியேன் இவ்வாறு எல்லையற்ற துயரங்கள் பட்ட எனது வருத்தத்தை நீ அறிந்தாயுமில்லை; அறிந்து இங்கு வா என்று அழைத்தாயுமில்லை; இது நினக்குத் தகுமோ காண்! என்பதாம்.

(வி - ம்.) அருட்கடலாகிய நினக்கு அடியேன் படுந்துயரெலாம் கண்டு வைத்தும் வாளாதிருப்பது தகுமோ? என்றவாறு. (௩௪)

பிறப்பைத் தவிர்த்தையிலை பின்னாகக் கொண்டையிலை
இறப்பைத் தவிர்த்தையிலை யென்னேன்று கேட்டையிலை.

(இ - ள்.) பிறப்பைத் தவிர்த்தையிலை - இத்துயரத்திற்கெல்லாம் காரணமான அடியேன் பிறப்புக்களை ஒழித்தாயுமில்லை; பின்னாகக் கொண்டையிலை - நின்திருவருள் வழிப்பட்டு நின்னைப் பின்தொடரவும் செய்தாயுமில்லை; இறப்பைத் தவிர்த்தையிலை - எளியேன் இறத்தற்றுயரத்தைப் போக்கினையுமல்லை; என் என்று கேட்டையிலை - என் இவ்வாறு துயருறுகின்றனை? என்று கேட்கவும் திருவுளங்கொண்டாயிலை; இது நின்னருட் கழகேயோ? என்பதாம்.

(வி - ம்.) அருட்கடலாகிய உனக்கு என் பிறப்புத் துயரத்தைப் போக்காமையும் நின் அருள் வழிப்படுத்திக் கொள்ளாமையும் என் இறப்புத் துயரத்தைப் போக்காமையும் கிடக்க ஏனென்று கேளாதிருத்தலும் தகுமோ காண் என்றவாறு. (௩௫)

பாச மெரித்தையிலை பரதவிப்பைத் தீர்த்தையிலை
பூசிய நீற்றைப் புனையென் றளித்தையிலை.

(இ - ள்.) பாசம் எரித்தையிலை - நகைத்து முப்புர மெரித்த நீ எளியேன் பாசம் மூன்றனையும் எரித்தருளினையுமல்லை. பரதவிப்பைத் தீர்த்தையிலை-தேவர்களின் அலமரலகற்றிய நீ அடியேன் அலமரலகற்றினையில்லை. பூசிய நீற்றைப் புனை என்று அளித்தையிலை - அலமரல் தீர நீ பூசிய திருவெண்ணீற்றை அடியேனுக்கு வழங்கினையுமல்லை.

(வி - ம்.) எரித்த என்றமையாலும் பரதவிப்பு என்றமையானும் இவ்வாறு விரித்துரைத்துக் கொள்க. என் அலமரல் தீர்த்தற்கு நீறளித்த லொன்றமே அமையுமே அதுவும் அளித்திலை என்றவாறு. (௩௬)

அடிமையென்று சொன்னையிலை யக்கமணி தந்தையிலை
விடுமுலகம் போக்கியுன்றன் வேட மளித்தையிலை.

(இ - ள்.) அடிமை என்று சொன்னையிலை - இவன் என் அடியவன் என்று ஒரு சொல்லேனும் சொன்னையிலையே!; அக்கமணி தந்தையிலை - உன் அடியவருக்கு அடையாளமாகிய அக்கமணி மாலையேனும் அளித்தாயுமில்லை; விடும் உலகம் போக்கி உன்றன் வேடம் அளித்தையிலை - விடவேண்டிய இவ்வுலக வாழ்வினை அகற்றி உன் அடியார் வேடத்தை எனக்களித்தாயுமல்லை என்பதாம்.

(வி - ம்.) நீ அடிமை என்று சொன்னாலே என் அலமரல் நீரும் அதுவும் சொன்னாயில்லை; உன்னடியார்க் கடையாளமாகிய அக்க மணி என்க. வேடம் – உன் அடியார் வேடம் என்க. (கூஎ)

உன்னி லழைத்தையிலை யொன்றாக்கிக் கொண்டையிலை
நின்னடியார் கூட்டத்தி னீயழைத்து வைத்தையிலை.

(இ - ள்.) உன்னில் அழைத்தயிலை - என்னுள் நீ மூழ்கியிருக்கு மாறு போலே என்னை உன் திருவருளுக்குள் அழைத்து மூழ்குவித்தா யிலை; ஒன்று ஆக்கிக் கொண்டையிலை - நீயும் யானும் என வேறாக இல்லாமல் நானும் நீயும் ஒன்றேயாகும்படி செய்திலை; நின் அடியார் கூட்டத்தில் நீ அழைத்து வைத்தையிலை - நின்னுடைய பழவடியார் திருக் கூட்டத்துள் அடியேனும் ஒருவனாகி இறுமாந்திருக்கும்படி நீயே என்னை அழைத்து இருத்தினாயுமல்லை. அடியேன் எவ்வாறுய்வேன் என்பதாம்.

(வி - ம்.) உன்னருளிலே மூழ்கி யிருக்கச் செய்திலை எனது சீவனிலைபோய் யானே சிவமாகிய நீயாம் படியும் செய்திலை. நின் பழ வடியார் கூட்டத்துள்ளும் என்னை அழைத்து இருத்தினாயல்லை. எவ்வா றுய்வேன் என்றவாறு. (கூஅ)

ஓங்கு பரத்து ளொளித்தவடி யார்க்கடியான்
ஈங்கோ ரடியா னெமக்கேன் றுரைத்தையிலை.

(இ - ள்.) ஓங்கு பரத்துள் ஒளித்த அடியார்க்கு அடியான் - உயர்ந்த திருவடி ஞானத்திலே மூழ்கித் தம்மூனைப் பொழிந்த மெய் யடியார்க்கெல்லாம் அடியான்; ஈங்கு எமக்கு ஓர் அடியான் என்று உரைத்தையிலை - இவ்விடத்தே எமக்கும் ஓர் அடியவன் இருக்கின்றான் என எளியேனைச் சுட்டிக் கூறினாயுமல்லை என்பதாம்.

(வி - ம்.) பரத்தில் ஒளித்தல் தற்போதங்கெட்டுச் சிவபோதமே மேலிடப் பெறுதல். மெய்யடியார்க் கடியவன் சிவபெருமானுக்கும் அடியவன் ஆதலின் அடியார்க் கடியான் எமக்கு மடியான் ஈங்கு ஒருவன் உளன் என்னாய் என்று புலந்து கூறியபடியாம். இருக் கின்றான் என வருவித்தோதுக. (கூகூ)

நாமந் தரித்தையிலை நானொழிய நின்றையிலை
சேம வருளிலெனைச் சிந்தித் தழைத்தையிலை.

(இ - ள்.) நாமம் தரித்தையிலை - சீவன் என்னும் என் பெயரை மாற்றி என்னை நீயாக்கி சிவம் என்னும் நின் பெயரையே எனக்குத் தரித்தாயுமல்லை. நானொழிய நின்றையிலை - நான் அழிந்தொழிய நீயேயாகி நின்றாயுமல்லை; சேம அருளில் எனைச் சிந்தித்துச் சேம அருளில் அழைத்தையிலை - இவன் ஓர் அடியவன் உளன் இவனையும் உய்விப்பேம் என்று நின்றிருவுளத்தில் நினைந்து எவற்றிற்கும் பாது காவலாகிய நின் திருவருளினூடே என்னை அழைத்துக் கொண்டாயு மல்லை என்பதாம்.

(வி - ம்.) யானே நீயாகி நின்பெயரையே தரித்தாயில்லை. நான் என்பது அழிய நீயேயாகி நின்றாயுமல்லை என்க. (சo)

முத்தி யளித்தையிலை மோனங் கொடுத்தையிலை
சித்தி யளித்தையிலை சீராட்டிக் கொண்டையிலை.

(இ - ள்.) முத்தி அளித்தையிலை-அடியேனுக்கு வீடுபேறளித்தாயல்லை; மோனம் கொடுத்தையிலை - அவ்வீடுபேற்றிற்குக் காரணமான மோன நிலையையேனும் தந்தருளினையில்லை. சித்தி அளித்தையிலை - நின் அருட் சித்தியைத் தந்தாயில்லை; சீராட்டிக் கொண்டையிலை – அடியேன் தகுதியில்லேனாயினும் தகுதிகளை யெல்லாம் தந்து ஆட்கொண்டாயுமல்லை என்பதாம்.

(வி – ம்) முத்தி - வீடுபேறு. மோனம் உலகத்தை இறைவனாகக் காணுங்காட்சி பெறுதல். பாராதி யறியாத மோனம் என்பர் தாயுமானவர். (சக)

தவிப்பைத் தவிர்த்தையிலை தானாக்கிக் கொண்டையிலை
அவிப்பரிய தீயா மென்னாசை தவிர்த்தையிலை.

(இ - ள்.) தவிப்பைத் தவிர்த்தை இலை – அடியேன் அலமரலை அகற்றியருளினையில்லை; தான் ஆக்கிக் கொண்டையிலை - அடியேனை நின்னோடு இரண்டறக் கலப்பித்துக் கொண்டாயில்லை. அவிப்பு அரிய தீயாம் என் ஆசை தவிர்த்தை இலை - அடியேனால் அவித்தற்கியலாத நெருப்பை ஒத்த என் அவாவினை அகற்றினாயுமல்லை என்பதாம்.

(வி - ம்.) அவா ஆராவியற்கைத்தாகலானும் எல்லாத்துன்பங்கட்கும் அதுவே காரணமாகலானும் இறைவனருளாலன்றி உயிர்கள் தம்மாற்றலால் போக்குதல் கூடாமையானும் அவிப்பரிய தீயாம் என் ஆசை தவிர்த்திலை என்றார். (சஉ)

நின்ற நிலையி னிறுத்தியெனை வைத்தையிலை
துன்றுங் கரணமொடு தொக்கழியப் பார்த்தையிலை.

(இ – ள்.) நின்ற நிலையில் எனை நிறுத்தி வைத்தை இலை - யாதொன்றினும் பற்றின்றிநின்ற உனது நிலையிலே அடியேனையும் நிறுத்தி வைத்தாயுமல்லை?; துன்றுங் கரணமொடு தொக்கு அழியப் பார்த்தை இலை - அழியுமியல்புடைய மன முதலிய கருவிகளோடு அடியேனுக் கியன்ற கட்டு அழியும்படி திருக்கண்ணோக் கருளினையுமல்லை; என்பதாம்.

(வி - ம்.) நின்றநிலையில்-நீ நின்ற நிலையில்; அஃதாவது இறைவன் பற்றின்றி நின்ற நிலையில். துன்றும் கரணம் - அழிகின்ற மன முதலிய கருவிகள். தொக்கு - துவக்கு,கட்டு. (சஙு)

கட்டவுல கக்காட்சி கட்டொழியப் பார்த்தையிலை
நிட்டையிலே நில்லென்று நீநிறுத்திக் கொண்டையிலை.

(இ - ள்.) கட்ட உலகக்காட்சி கட்டு ஒழியப் பார்த்தையிலை - துன்பமேயான உலகமாகக் காணுகின்ற பொய்க்காட்சியா லுண்டா

கின்ற தளை அற்றொழியும்படி நீ நின் அருட்கணோக்கம் செய்தாயில்லை; நிட்டையிலே நில்லென்று நீ நிறுத்திக் கொண்டை இலை - அங்ஙனம் என் கட்டற நோக்கி இனி நீ எப்பொழுதும் எம்மருளில் மூழ்கியிருப்பாயாக என்று நீ அவ்வருளினூடே அடியேனை நிறுத்திக் கொண்டாயுமல்லை.

(வி - ம்.) கட்டம் - துன்பம். உலகக் காட்சி எல்லாம் நீயே என்று காணாமல் உலகத்தைச் சுவை முதலிய பொருள்களின் கூட்டமாகக் காண்டல். இங்ஙனம் காணுங்கால் அப்புலன்களிற் பற்றுண்டாதலையே கட்டு என்றார். இக்கட்டு அறுதற்கு இறைவன் அருள் நோக்கமே வேண்டுமாதலின் உலகக் காட்சிக்கட்டு ஒழியப் பார்த்தையில்லை என்றார்.

நிட்டை - இறைவன் திருவருளிலே அழுந்தி யிருத்தல். (௬௪)

கடைக்கணருள் தாடா கன்னிவன நாதா
கேடுக்குமல மொருக்கிக் கிட்டிவரப் பாரேடா.

(இ - ள்.) கன்னிவன நாதா - மதுரையிலெழுந்தருளி யிருக்கின்ற முதல்வனே!; கடைக்கண் அருள்தாடா - இவ்வாறு எண்ணிறந்த பிறப்புற்று எல்லையிலாக் காலமெல்லாம் இயம்ப வொண்ணாத் துன்பம் நுகர்கின்ற அடியேன் உய்யும்படி நின் கடைக்கண் அருள் சிறிது தந்தருள்க; கெடுக்கும் மலம் ஒருக்கிக் கிட்டி வரப்பாரேடா - அடியேனை இவ்வாறு கெடுக்கின்ற ஆணவ முதலிய அழுக்குக்களை அகற்றி அடியேன் நின் திருவருளுக்கு அணுக்கனாய் வருமாறு நின் கடைக்கண்ணால் அடியேனைச் சிறிது பார்த்தருள்வாயாக!;

(வி - ம்.) அடியேன் படுதுயர் அனைத்திற்கும் ஒரே மருந்து நின் கடைக்கணோக்கமே அதனைத் தந்தால் அடியேன் மலமெலாமகன்று நின்னருள் நீழலிலே இனிது வாழ்வேன். ஆதலின் அக்கடைக்கண்ணா லென்னைச் சிறிது நோக்குதி என்றவாறு. (௬௫)

காதல் தணியேனோ கண்டு மகிழேனோ
சாதல் தவிரேனோ சங்கடந்தான் றீரேனோ.

(இ - ள்.) காதல் தணியேனோ - எம்பெருமானே இப்பொய்யுலக வாழ்க்கையின்கண் எனக்குண்டாகும் ஆசை நின் கடைக்கணோக்கம் பெற்றுத் தீரப்பெறேனோ?; கண்டு மகிழேனோ - தீர்ந்த வழி, பெருமானை என் கண்ணாரக்கண்டு மகிழப் பெறேனோ?; சாதல் தவிரேனோ - அங்ஙனம் கண்டு மகிழ்ந்த பின்னர் இது காறும் நிகழ்ந்து வந்த பிறப்பிறப்பினின்றும் தப்பி உய்யப்பெறேனோ? சங்கடம் தீரேனோ - அவற்றாலெய்துகின்ற துன்பந் தீரப் பெறேனோ? என்பதாம்.

(வி - ம்.) காதல் - அவா. நின் கடைக்கணருள் பெற்று அவாத் தணியேனோ என்றவாறு. அவாத் தணிந்தவழி ஆண்டவனைக் காண்டலும் கண்டவழி சாதல் தவிர்தலும் அது தவிர்ந்த வழிச் சங்கடந் தீர்தலும் உண்டாதலின் காரண காரிய முறையாற் கூறினர் என்க. (௬௬)

உன்னைத் துதியேனோ வூர்நாடி வாரேனோ
பொன்னடியைப் பாரேனோ பூரித்து நில்லேனோ.

(இ - ள்.) உன்னைத் துதியேனோ - அழிவில்லாப் பேரின்பமே நல்கும் பெருமானாகிய உன்னையே இடையறாது வாழ்த்தி மகிழேனோ?; ஊர் நாடி வாரேனோ - நீ எழுந்தருளி யிருக்கின்ற திருவூர்களையே காண்டற்கு விரும்பி வர மாட்டேனோ?; பொன்னடியைப் பாரேனோ- திருவூர் புகுந்து அங்கு நின் அழகிய திருவடிகளைக் கண்டு வணங்க மாட்டேனோ?; பூரித்து நில்லேனோ - வணங்கிய மகிழ்ச்சியால் என் உடல் புளகித்து நிற்க மாட்டேனோ? என்பதாம்.

(வி - ம்.) உன்னை என்பது சுடைக்கணேக்கத்தாலேயே வீடு நல்கும் பெருமையுடைய உன்னை என்பது பட நின்றது. ஊர் - இறைவன் திருக்கோயில் கொண்டருளிய திருவூர்கள் என்க. (௩௭)

(பாதாதிகேசவருணனை)

ஓங்காரப் போற்சிலம்பி னுல்லாசம் பாரேனோ
பாங்கான தண்டை பலபணியும் பாரேனோ.

(இ - ள்.) ஓங்காரப் பொன் சிலம்பின் உல்லாசம் பாரேனோ - நின்னுடைய திருவடியிலே அணியப் பெற்றுள்ள ஓங்காரமாகிய அழகிய சிலம்பின் ஒலியாகிய ஒளியைக் கண்டு மகிழமாட்டேனோ; பாங்கான தண்டை பலபணியும் பாரேனோ - அவ்வோங்காரத்திற் கிணங்கிய வேதாகமங்களினொலியன்ற தண்டையும் பிறபல அணிகலன் களுடையவும் அழகைப் பார்த்து மகிழமாட்டேனோ? என்பதாம்.

(வி - ம்.) ஓங்காரம் - பிரணவ மந்திரம்; உல்லாசம் - ஒளி. இறைவனுடைய ஒரு கூறு இறைவி கூருதலின் சிலம்பு கூறினர். சிலம்பென்றது - திருவருளை. சிலம்பென்றதற் கேற்பப் பாரேனோ என்றாராயினும் ஓங்கார மென்றதற் கேற்பக் கேளேனோ என்பது கருத்தாகக் கொள்க. என்னை? ‘‘ஓசையெலாம் அற்றால் ஒலிக்குந் திருச் சிலம்பின் ஓசை வழிச் சென்றங் கொத்தொடுங்கில் - ஓசையினின் அந்தத்தானத்தான் அரிவையுடன் அம்பலத்தே, வந்தொத்தாளத்தான் மகிழ்ந்து’’, எனவரும் திருக்களிற்றுப் படியாரும்(௩௩)காண்க. (௩௮)

வீரகண் டாமணியின் வெற்றிதனைப் பாரேனோ
சூரர் கண்டு போற்றுமந்தச் சுந்தரத்தைப் பாரேனோ.

(இ - ள்.) வீரகண்டா மணியின் வெற்றிதனைப் பாரேனோ - நின் மறத்திருவருட் கறிகுறியாகக் கணைக்காலிற் கட்டப்பட்ட வீர கண்டாமணியின் வெற்றியழகைக் கண்டு களியேனோ?; சூரர் கண்டு போற்றும் அந்தச் சுந்தரத்தைப் பாரேனோ - மறவோரெல்லாம் கண்டு தொழுகின்ற உனது அந்த மறத்திருவருட் பொலிவைக் கண்டு மகிழேனோ?; என்பதாம்.

(வி - ம்.) வீரகண்டாமணி - வெற்றிக்கு அறிகுறியாக அணியும் ஓரணிகலன். சூரர் கண்டு போற்றும் சுந்தரம் என்றது. இறைவனது தெறலாற்றலின் மெய்ப்பாட்டினை. (௩௯)

இடையிற் புலித்தோ லிருந்தநலம் பாரேனே
விடையி லெழுந்தருளும் வெற்றியினைப் பாரேனே.

(இ - ள்.) இடையில் புலித்தோல் இருந்த நலம் பாரேனே - எம்பெருமானே நின் இடையிலே புலித்தோலுடுத்தமையா லுண்டான அழகைக்கண்டு மகிழேனே?; விடையிலெழுந்தருளும் வெற்றியினைப் பாரேனே - நீ அறத்தின் பிழம்பாகிய நினது விடையூர்தியி லெழுந்தருளுகின்ற வெற்றியழகைக் கண்டு களியேனே என்பதாம்.

(வி - ம்.) புலித்தோல் மறத்தினாலுற்ற அழகு. விடை யேறுதல் அறத்தினால் உற்ற வெற்றியின் அழகு என்க. (௬0)

ஆனை யுரிபோர்த்த வழகுதனைப் பாரேனே
மானைப் பிடித்தேந்து மலர்க்கரத்தைப் பாரேனே.

(இ - ள்.) ஆனை யுரிபோர்த்த அழகுதனைப் பாரேனே - ஆனைத் தோலை நீ போர்த்திருத்தலால் உண்டாகும் அழகினைக் கண்டு களியேனே? மானைப்பிடித்தேந்து மலர்க்கரத்தைப் பாரேனே - மானைப் பற்றி ஏந்தியிருக்கின்ற நினது மலர்போன்ற கையின் அழகைக் கண்டு மகிழேனே என்பதாம்.

(வி - ம்.) யானைத்தோல்-தெறலுடைமைக்கும் மானை ஏந்துதல் அளியுடைமைக்கும் அறிகுறிகள் என்க. (௬௧)

மாண்டார் தலைபூண்ட மார்பழகைப் பாரேனே
ஆண்டார் நமக்கென் றறைந்து திரியேனே.

(இ - ள்.) மாண்டார் தலைபூண்ட மார்பழகைப் பாரேனே - பேரழிவுக் காலத்தே இறந்துபட்ட திருமால் முதலிய தேவர்கள் தலைகளாற் றொடுத்தணிந்த நினது திருமார்பின் அழகைக் கண்டு களியேனே?; நமக்கு ஆண்டார் என்று அறைந்து திரியேனே - தலைமாலை பூண்டாரேனும் நம்மை ஆண்டவர் இவரே எனப் பலரும் அறிய பறைசாற்றித் திரிந்து மகிழேனே?; என்பதாம்.

(வி - ம்.) திருமால் முதலியோரையும் அழிப்பவன் ஆயினும் நம்மை ஆண்டவனும் இவனே என்று அறைகுவன் என்றவாறு. (௬௨)

கண்டங் கறுத்துநின்ற காரணத்தைப் பாரேனே
தொண்டர் குழுவினின்ற தோற்றமதைப் பாரேனே.

(இ - ள்.) கண்டங் கறுத்து நின்ற காரணத்தைப் பாரேனே - நின் அழகிய மிடறு கறுத்து நின்றதற்குக் காரணம் யாதென்று ஆராய்ந்துணர்ந்து மகிழேனே?; தொண்டர் குழுவில் நின்ற தோற்றமதைப் பாரேனே - நின் அடியவர் கூட்டத்தினுள் அவரோடு சமனிலையில் நீயும் ஓர் அடியவனாகவே வீற்றிருக்கின்ற அழகைக் கண்டு அகமகிழ மாட்டேனே? என்பதாம்.

(வி - ம்.) கண்டம் கறுத்து நின்றமைக்குக் காரணம் தன்பால் தஞ்ச மடைவோரைக் காத்தல். தான் தேவதேவனாயிருந்தும்

தொண்டர் கூட்டத்தில் அவருள் ஒரு தொண்டனாகவே இருக்கும் பெருந்தகைமையைத் தொண்டர் குழுவில் நின்ற தோற்றம் என்றார். (ருங)

அருள்பழுத்த மாமதியா மானனத்தைப் பாரேனோ
திருநயனஞ் சடையோளிருஞ் செழுங்கோழுமை பாரேனோ.

(இ - ள்.) அருள் பழுத்த மாமதியாம் ஆனனத்தைப் பாரேனோ - திருவருளாகிய பேரொளி முதிர்ந்துள்ள முழுத்திங்கள் மண்டிலத்தை யொத்த நினது திருமுகத்தின் அழகைக் கண்டு களியேனோ?; திரு நயனம் சடை ஒளிரும் செழுங்கொழுமை பாரேனோ - நின்னுடைய அழகிய கண்களினும் சடையினுந் திகழாநின்ற மிக்க வளத்தைக் கண்டு மகிழேனோ?; என்பதாம்.

(வி - ம்.) விண்ணகத்துத் திங்களிற் போலாது இத்திங்கள் பரப்பும் ஒளி திருவருளொளி என்பார், அருள்பழுத்த மாமதியாம் ஆனனம் என்றார்.

ஆனனம் - முகம். நயனம்—அம்முகத்திலகும் முக்கண்கள். (ருச)

செங்குமிழின் றுண்டம்வளர் சிங்காரம் பாரேனோ
அங்கனியை வென்ற வதரத்தைப் பாரேனோ.

(இ - ள்.) செங்குமிழின் துண்டம் வளர்சிங்காரம் பாரேனோ - சிவந்த குமிழமலர் போன்று நீண்டுள்ள நினது மூக்கின் அழகைக் கண்டு அகம் மகிழேனோ?; அங்கனியை வென்ற அதரத்தைப் பாரேனோ - அழகிய கொவ்வைப் பழத்தை அழகினால் வெற்றி கொண்ட நின் திருவாயிதழ்களைக் கண்டு களியேனோ; என்பதாம்.

(வி - ம்.) குமிழ் - குமிழமலர். துண்டம் - மூக்கு. கனி - கொவ்வைக் கனி. அதரம் - உதடு. (ருரு)

முல்லை நிலவெறிக்கு மூரலொளி பாரேனோ
அல்லார் புருவத் தழகுதனைப் பாரேனோ.

(இ - ள்.) முல்லை நிலவு எறிக்கும் மூரல் ஒளி பாரேனோ - முல்லையரும்பை ஒத்து நிலவொளி பரப்புகின்ற நின் பல்லொளி அழகைப் பார்த்து மகிழேனோ? அல் ஆர் புருவத்து அழகுதனைப் பாரேனோ - இருளை நிகர்த்த நின் கரிய புருவங்களின் அழகைக் கண்டு களியேனோ?; என்பதாம்.

(வி - ம்.) முல்லை: ஆகுபெயர். மூரல் - பல். அல்: ஆகு பெயர். (ருசு)

மகரங் கிடந்தோளிரும் வண்மைதனைப் பாரேனோ
சிகரமுடி யழகுஞ் செஞ்சடையும் பாரேனோ!

(இ - ள்.) மகரம் கிடந்து ஒளிரும் வண்மைதனைப் பாரேனோ - மகர குண்டலங்கள் நின் திருச்செவியிற் கிடந்து ஒளிபரப்புகின்ற

வளமிக்க அழகைக் கண்டு மகிழமாட்டேனோ? சிகரமுடி அழகுஞ் செஞ்சடையும் பாரேனோ - நினது உச்சிக் கொண்டையின் அழகையும் விரித்த சிவந்த சடையின் அழகையும் கண்டு களியேனோ? என்பதாம்.

(வி - ம்.) மகரமீன் வடிவிற்குயியன்ற குண்டலம். சிகரம் - உச்சி. (௩எ)

கங்கையோடு திங்கணின்ற காட்சிதனைப் பாரேனோ
போங்கரவைத் தான்சடையிற் பூண்டவிதம் பாரேனோ.

(இ - ள்.) கங்கையொடு திங்கள் நின்ற காட்சிதனைப் பாரேனோ? - நினது சடைமுடியின்மேல் கங்கையும் பிறைத்திங்களும் நிலைத்திருந்த இனிய காட்சியைக் கண்டு களியேனோ?; பொங்கு அரவைத்தான் சடையில் பூண்ட விதம் பாரேனோ - சினக்கின்ற பாம்பினை அத்திருச்சடையி லணிந்துள்ள அழகைக் கண்டு களியேனோ? என்பதாம்.

(வி - ம்.) திங்கள் - பிறைத்திங்கள், பொங்குதல் - சினத்தல். (௩அ)

சரக்கோன்றை பூத்த சடைக்காட்டைப் பாரேனோ
எருக்கறு கூமத்தையணி ஏகாந்தம் பாரேனோ.

(இ - ள்.) சரக்கொன்றை பூத்த சடைக்காட்டைப் பாரேனோ - மாலை போன்று மலரும் கொன்றை மலர் மலர்ந்திருக்கின்ற நின் திருச்சடையாகிய காட்டின் அழலகைக் கண்டு களியேனோ?; எருக்கு அறுகு ஊமத்தை அணி ஏகாந்தம் பாரேனோ -வெள்ளெருக்க மலரையும் அறுகம்புல்லையும் ஊமத்தை மலரையும் அணிந்திருக்கின்ற சிறப்பழகைக் கண்டு மகிழேனோ?; என்பதாம்.

(வி - ம்.) சரம் - மாலை. சரம் போன்று மலரும் கொன்றை என்க. காடு - மிகுதி குறித்து நின்றது. பூத்த தொழிலுக்கியையக் காடென்றபடியாம். எருக்கு அறுகு ஊமத்தை என்னுமிவை சிவபெருமானுக்கே சிறந்துரிமையுடையன வாகலின் ஏகாந்தம் என்றார். ஏக + அந்தம் - தனியழகு. (௩௯)

கோக்கிறகு சூடிநின்ற கோண்டாட்டம் பாரேனோ
அக்கினியை யேந்திநின்ற ஆநந்தம் பாரேனோ.

(இ - ள்.) கொக்கு இறகு சூடிநின்ற கொண்டாட்டம் பாரேனோ- தன் வெற்றிக் கறிகுறியாகக் கொக்கினது இறகு சூடிய வெற்றிவிழாக் கொண்டாட்டத்தைக் கண்டு களியேனோ - அக்கினியை யேந்திநின்ற ஆனந்தம் பாரேனோ - தனது அழித்தற்றொழிலுக்கு அறிகுறியாகத் திருக்கையில் அனலேந்தி நின்று ஆடுகின்ற நின்னின்பக் கூத்தினைக் கண்டு பேரின்ப மெய்தேனோ? என்பதாம்.

(வி - ம்.) கொக்குருக்கொடு வந்த அசுரனைக் கொன்று அவ் வெற்றிக் கறிகுறியாக அக்கொக்கிறகினைச் சூடிக் கொண்டாடும் விழா

என்க. இறைவன் தனது அழித்தற்றொழிலுக் கறிகுறியாகக் கையி லேந்திய மழுவோடு ஆநந்தக் கூத்தாடுதலைக் காணேனோ? என்றவாறு. (கூ0)

தூக்கிய காலும் துடியிடையும் பாரேனோ
தாக்கு முயலகன்மேற் றாண்டவத்தைப் பாரேனோ.

(இ - ள்.) தூக்கிய காலும் துடியிடையும் பாரேனோ - எம் பெருமானே! உயிரினங்கட்கு வீடு தருதற் பொருட்டாக நினது தூக்கிய திருவடியின் அழகையும் உடுக்கை போலும் உன் இடையழகினையும் கண்டு களியேனோ; தாக்கும் முயலகன் மேல் தாண்டவத்தைப் பாரேனோ - நின்னோடு போரிட வந்த முயலகன் மேனின்றாடுகின்ற நின் வீரக்கூத்தினைக் கண்டு களியேனோ? என்பதாம்.

(வி - ம்.) தூக்கிய கால்-எடுத்த திருவடி. துடிபோலும் இடை என்க. தாண்டவம் - கூத்து. (கூக)

வீசு கரமும் விகசிதமும் பாரேனோ
ஆசை யளிக்கு மபயகரம் பாரேனோ.

(இ - ள்.) வீசு கரமும் விகசிதமும் பாரேனோ - பெருமானே! நீ கூத்திடுங் காலத்தே வீசி நின்றாடும் எண்டோளழகையும் நினது திருமுக மலர்ச்சியையும் கண்டு மகிழேனோ?; ஆசை அளிக்கும் அபயகரம் பாரேனோ - உயிர்கட்கு வேண்டுவன நல்குதற் கறிகுறியாக அமைத்த நின் கையினழகைக் கண்டு மகிழேனோ? என்பதாம்.

(வி - ம்.) வீசுகரம் - திருகூத்தாடுங்கால் வீசிய கைகள்; "எண்டோள் வீசி நின்றாடும்பிரான்" என்பர் திருநாவுக்கரசர். விகசிதம் - மலர்ச்சி. முகமலர்ச்சி என்க. அபயகரம் - அஞ்சற்க வென்று அமைத்த கை. (கூஉ)

அரிபிரமர் போற்ற வமரர் சயசயெனப்
பெரியம்மை பாகம்வளர் பேரழகைப் பாரேனோ.

(இ - ள்.) அரிபிரமர் போற்ற அமரர் சயசய என - திருமாலும் நான்முகனும் வாழ்த்தா நிற்பவும் இந்திரனை யுள்ளிட்ட தேவர்கள் வெல்க! வெல்க! என்று வெற்றி கூறா நிற்பவும்; பெரியம்மை பாகம் வளர் பேரழகைப் பாரேனோ - உலகப் பேரன்னையாகிய இறைவி நின்னொடு கூற்றிலே பொருந்தி வளருகின்ற அம்மையப்பனாகிய நினது பெரிய பேரழகைக் கண்டு களியேனோ என்பதாம்.

(வி - ம்.) உலக முழுவதும் மீன்றமையால் இறைவியைப் பெரியம்மை என்ப. பெரிய நாயகி என்னும் பெயர் குறித்தவாறுமாம். (கூ௩)

சுந்தர நீற்றின் சோதுசுதனைப் பாரேனோ
சந்திர சேகரனைத் தயவுசெய்தல் பாரேனோ.

(இ - ள்.) சுந்தர நீற்றின் சொகுசுதனைப் பாரேனோ - அழகிய திருவெண்ணீறு சண்ணித்தமையா லுண்டான நின்றிருமேனியினழ

யைக் கண்டு மகிழேனோ?; சந்திரசேகரனைத் தயவு செய்தல் பாரேனோ - பிறை சூடும் பெருமானை எழுந்தருளி மெய்யடியார்க்குத் திருவருள் வழங்கும் வண்மையைக் கண்டு மகிழேனோ?

(வி - ம்.) சுந்தரம் - அழகு. சொகுசு - அழகு. சந்திரசேகரன்-பிறைசூடி. சந்திரனுக்குத் தயவு செய்தல் எனினுமாம். (சு௪)

கெட்டநாள் கெட்டாலும் கிருபையினிப் பாரேடா
பட்டநாள் பட்டாலும் பதமெனக்குக் கிட்டாதோ.

(இ - ள்.) கெட்டநாள் கெட்டாலும் இனி கிருபை பாரேடா - எம்மிறைவனே அடியேன் கெட்டொழிந்த காலமெல்லாம் ஒழிக, இனியேனும் அடியேன் கெட்டொழியாதபடி நின் அருட்கண்ணாலே சிறிது பார்த்தருள்க !; பட்டநாள் பட்டாலும் பதம் எனக்குக் கிட்டாதோ - வந்துற்ற காலமெல்லாம் அடியேன் இங்ஙனமே துன்பப் பட்டாலும் நின் திருவடிப் பேறு எளியேனுக்கு எய்தாதோ ? இயம்புக ! என்பதாம்.

(வி - ம்.) இனி கிருபை பாரேடா என மாறுக. பதம் வீடுபேறு மாம். (சுரு)

நற்பருவ மாக்குமந்த நாளெனக்குக் கிட்டாதோ
எப்பருவ முங்கழன்ற வேதாந்தங் கிட்டாதோ.

(இ - ள்.) நற்பருவம் ஆக்கும் அந்த நாள் எனக்குக் கிட்டாதோ - எம்பெருமானே நின்னோடு கூடுதற்கியன்ற நல்ல செவ்வியை யுண்டாக்கும் அந்த நல்ல நாள் எனக்கு உண்டாகவே மாட்டாதோ ? எப்பருவமும் கழன்ற ஏகாந்தம் கிட்டாதோ - எல்லாக் காலங்களையும் கடந்து அப்பாலாய் நிற்கின்ற தனிநிலை எனக்கு ஒரு காலத்தும் தோன்றாதோ காண் ! என்பதாம்.

(வி - ம்.) நற்பருவம் - இறைவனோடிரண்டறக் கலத்தற் கேற்ற நல்ல பக்குவம். எப்பருவம் - எல்லாக் காலங்களையும் என்க. ஏகாந்தம் - உயிரின் தூய்நிலை. கருவிகளோடு கூடாத்தனி நிலை. (சுசு)

வாக்கிறந்து நின்ற மவுனமது கிட்டாதோ
தாக்கிறந்து நிற்குமந்தத் தற்சுத்தி கிட்டாதோ.

(இ - ள்.) வாக்கு இறந்து நின்ற மவுனமது கிட்டாதோ - வாய் பேசாதமைகின்ற நன்னிலை அடியேனுக்கு எய்த மாட்டாதோ ; தாக்கு இறந்து நிற்கும் அந்தத் தற்சுத்தி கிட்டாதோ - மனம் புலன்களாற் றாக்கப்படாமல் நிற்கின்ற அந்த உயிர்த் தூய்மை நிலை அடியேனுக்கு ஒரு பொழுதும் வந்துறாதோ ? என்பதாம்.

(வி - ம்.) வாக்கிறந்து நின்ற மவுனம் என்ற பேசாமைபெற்ற நிலை. தாக்குதல் - புலன்களாற் றாக்கப்படுதல். உள்ளம் புலன்களிற் பற்றின்றி நின்ற நிலையே தூய் நிலை. ஆதலின் இதனையே தற்சுத்தி என்றனர். தன் முனைப்பற்று நின்றவழி அருளின்கண் அழுந்தி நிற்பதனையே ஆன்மசுத்தி என்று நூல்கள் கூறும் என்க. (சுஎ)

வேந்துயரைத் தீர்க்குமந்த வெட்டவெளி கிட்டாதோ
சிந்தையைத் தீர்க்குமந்தத் தேறலது கிட்டாதோ.

(இ - ள்.) வெந்துயரைத் தீர்க்கும் அந்த வெட்ட வெளி கிட்டாதோ – என் பிறப்பாலுறுகின்ற வெவ்விய துன்பத்தைத் தீர்க்கும் அந்த வெறும் பாழாகிய அருள் வெளி எனக்குக் கிடைக்க மாட்டாதோ?; சிந்தையைத் தீர்க்கும் அந்தத் தேறல் கிட்டாதோ ? - என் மனம் ஒன்றைவிட்டொன்று பற்றியுழலாமற் செய்கின்ற அந்தத் திருவருளாகிய தேன் எனக்குக் கிடைக்க மாட்டாதோ? என்பதாம்.

(வி - ம்.) பற்றுபொருளொன்றுமின்மையால் அருள் வெளியை வெட்ட வெளி என்றார். சிந்தை - நினைவு. பற்றற்ற விடத்தே நினைத்தற்கு ஒன்றுமின்மையால் பற்றறுதிக்குப் பற்றுக் கோடாகிய திருவருளினைத் தேறல் என்றார். தேறல் – தேன். (சுஅ)

ஆன வடியார்க் கடிமைகொளக் கிட்டாதோ
ஊனமற வென்னை யுணர்த்துவித்தல் கிட்டாதோ.

(இ - ள்.) ஆன அடியார்க்கு அடிமை கொளக் கிட்டாதோ – எம்பெருமானே! நினக்கான மெய்யடியார்க்குக் குற்றேவல் செய்தலை மேற்கொள்ளும் பேறு அடியேனுக்குக் கிடைக்க மாட்டாதோ?; ஊனம் அற என்னை உணர்த்துவித்தல் கிட்டாதோ-குற்றந்தீர என்னை யான் உணர்ந்து கொள்ளும்படி உன் திருவருள் செய்கின்ற பேறு எனக்குக் கிடைக்க மாட்டாதோ? என்பதாம்.

(வி – ம்.) அடிமை கொள்ளலாவது – அடிமைத் தொழிலை மேற்கோடல். திருவருளானது தன்னையும் உயிரையும் அதன் அழுக்குகளையும் காட்ட உயிர் தன்னியல்பு கண்டு நிற்றலின் உணர்த்துவித்தல் எனப் பிறவினையாகக் கூறினர். (சுகூ)

என்னேன்று சொல்லுவண்டா வேன்குருவே கேளேடா
பின்னை எனக்கு நீயல்லாற் பிறிதிலையே.

(இ - ள்.) என் குருவே கேள் - என் நல்லாசிரியனே என் குறையை நீயே கேட்பாயாக!; என் என்று சொல்லுவன் - அவற்றின் கொடுமையை அடியேன் என்ன வென்று தான் சொல்லுவேன்; பின்னை எனக்கு நீ அல்லால் பிறிது இலை - அவை என் சொல்லிலடங்காவேனும் ஒல்லும் வகையுரைத்தேன். என் குறையைக் கூறி முறையிடுதற்கு எனக்கு உன்னையல்லாது வேறொரு பற்றுக்கோடும் இல்லையே ஆதலாற்றான் இவற்றை நின்பாற் கூறினேன்; என்பதாம்.

(வி - ம்.) யான்பட்ட துயரம் என் ஒரு நாவால் சொல்லற்பாலன அல்ல என்பார். என்னென்று சொல்லுவன் என்றார். சொலமாட்டாமையால் விடவும் மனமில்லை. நீ ஒருவனே எனக்குத் துணைவனாகலின் இயன்றவரையில் கூறினேன் என்பது கருத்து. (எ0)

(கன்னி வனநாதா கன்னி வனநாதா!)

அன்ன விசாரமது வற்றவிடங் கிட்டாதோ
சொன்ன விசாரந் தொலைந்தவிடம் கிட்டாதோ.

(இ - ள்.) அன்ன விசாரம் அற்ற இடம் கிட்டாதோ - இந்தப் பொய்யுடலைப் பேணும் பொருட்டுக் காலமெல்லாம் அடியேன் படுகின்ற சோற்றுக் கவலை தொலைந்த மெய் உணர்வுநிலை எனக்குக் கிடைக்க மாட்டாதோ; சொன்ன விசாரம் தொலைந்த விடம் கிட்டாதோ - அடியேன் பொன் முதலிய பொருள் வேண்டு மென்று படுகின்ற கவலை யொழிந்த அமைதிநிலை எனக்கு வரமாட்டாதோ என்பதாம்.

(வி - ம்.) இக்கருத்தமைந்த செய்யுள் பலமுன்னும் வந்தமை யுணர்க. (எக)

உலக விசார மொழிந்தவிடங் கிட்டாதோ
மலக்குழுவின் மின்னார் வசியாதுங் கிட்டாதோ.

(இ - ள்.) உலக விசாரம் ஒழிந்த இடம் கிட்டாதோ - நிலையுத வில்லாத இந்த வுலகப் பொருள்களைப்பற்றிக் கிடந்து யான் படுங் கவலை யனைத்துந் தீர்ந்த இடமாகிய சாக்கிராதீத நிலை அடியேனுக்கு வரமாட்டாதோ?; மலக்குழுவின் மின்னார் வசியாதும் கிட்டாதோ - மலக் கூட்டமே போன்ற மகளிர் என்னுள்ளத்தைக் கவரமாட்டாமை தானும் எனக்கு எய்தாதோ? என்பதாம்.

(வி - ம்.) மின்னார் - மகளிர். வசியாதும் - வசியாமைதானும் வசித்தல் வயப்படுத்தல். மாதர் வயப்படாத மாட்சிமை எனக்குக் கிட்டாதோ என்றவாறு. (எஉ)

ஒப்புவமை பற்றே டொழிந்தவிடங் கிட்டாதோ
செப்புதற்கு மெட்டாத் தெளிந்தவிடங் கிட்டாதோ.

(இ - ள்.) ஒப்பு உவமை பற்றோடு ஒழிந்த இடம் கிட்டாதோ - தனக்கு ஒப்பும் உயர்வும் கட்டும் இல்லாத வீடுபேறு அடியேனுக்குக் கிடைக்க மாட்டாதோ?; செப்புதற்கும் எட்டாத் தெளிந்த இடம் கிட்டாதோ - நுகர்ந்தும் இவ்வாறிருந்த தென்று பிறர்க்குக் கூற வொண்ணாததும் உண்மை தெளியப் பெற்றதும் ஆகிய பேரின்ப நிலை அடியேனுக்கு எய்திட மாட்டாதோ? என்பதாம்.

(வி - ம்.) ஒப்பு என்பது தனக்குச் சமமானது என்றவாறு. உவமை என்பது தனக்குயர்ந்தது என்றவாறு. என்னை உவமை உயர்ந்ததன் மேற்றே என்பவாகலின் ஈண்டு அதற்கு அப்பொருளே கூறப்பட்டது. ஒப்பாகிய உவமை எனக்கோடலுமாம். சிவம் நுகர்ச்சி யாலுணரப்படினும் சொல்ல மாட்டாமையால், இரண்டற்ற பேரின்ப நிலையைச் செப்புதற்கு மெட்டாத் தெளிந்த இடம் என்றார். செப்பு தற்கு மெட்டா இடம் தெளிந்த இடம் எனத் தனித்தனி கூட்டுக. (எ௩)

வாக்கு மனாதீத வகோசரத்திற் செல்லவெனைத்
தாக்குமருட் குருவே நின் றாளிணைக்கே யான்போற்றி.

(இ - ள்.) வாக்குமன அதீத அகோசரத்தில் செல்ல-சொல்லுக் கும் மனத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில் அடியேன் எதும்படியாக

என்னைத் தாக்கும் அருட்குருவே - அறிவிலியாகிய என்னை உந்தி யேற்றிய திருவருளையுடைய நல்லாசிரியனே !; நின்தாள் இணைக்குப் போற்றி - நின் திருவடிகளிரண்டற்கும் அடியேன் தஞ்சம் எனைப் போற்றிக் கொள்வாயாக! என்பதாம்.

(வி - ம்.) வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத மெய்ப்பொருளினூடேபுக்குக் கலத்தலே, வாக்கு மனாதீத வகோசரத்தில் செல்ல எனைத்தாக்கிய அருட்குரு என்றார். தாக்குதல் - உந்தி விடுதல். குருவின் அருள அந்தப் பெரு நிலையில் தன்னை எற்றியது என்பது கருத்து. நின்றாளிணைக்கே தஞ்சம் எனைப்போற்றி எனப் போற்றி என்பதை வியங்கோளாக்குக. (எச)

முதல்வன் முறையீடு முற்றிற்று.

மகடூஉ முன்னிலையாகத் திருவாய் மலர்ந்தருளியது

இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்

ஐங்கரனைத் தெண்டனிட்டே னருளடைய வேண்டுமென்று
தங்காமல் வந்தொருவன் றற்சொரூபங் காட்டியெனை.

(இ - ள்.) அருள் அடைய வேண்டும் என்று – அடியேன் இறைவன் திருவருளைப்பெற வேண்டுமென்று கருதி; ஐங்கரனைத் தெண்டன் இட்டேன் - மூத்த பிள்ளையாரைத் தொழுது வணங்கினேன்; தங்காமல் ஒருவன் வந்து - காலந்தாழ்க்காமல் அப்பொழுதே ஒரு சான்றோன் என் முன்னர் வந்து; எனை தற்சொரூபம் காட்டி - உயிராகிய எனக்கு எனது இயல்பினை நன்கு விளக்கிக் காட்டி; என்பதாம்.

(வி - ம்.) இஃது அடிகளார் தமக்கொரு நல்லாசிரியரைக் காண வேண்டுமென்றும் அவன் அருளால் திருவருட்கு ஆளாதல் வேண்டும் என்றும் கருதியவராய் அக்கருத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கணபதியைத் தொழுது நின்றாராக அப்பொழுதே அவ்விடத்திலேயே ஒரு நல்லாசிரியரைக் காணப்பெற்ற செய்தியை அறிவித்தபடியாம். ஒருவன் என்றது ஆசிரியரை. தற்சொரூபம் என்றது உயிரியல்பினை. இனி ஆசிரியரே இறைவனாதலால் தனது இறையியல்பைக் காட்டி எனவுமாம். (க)

கோள்ளைப் பிறப்பறுக்கக் கோண்டான் குருவடிவம்
கள்ளப் புலனறுக்கக் காரணமாய் வந்தாண்டி.

(இ - ள்) கொள்ளைப் பிறப்பு அறுக்கக் குருவடிவம் கொண்டான் - அடியேனது எல்லையற்ற பிறப்புழற்சியை விலக்குதற்கு நல்லாசிரியன் வடிவங்கொண்டு வந்தவன்; கள்ளப்புலன் அறுக்கக் காரண

மாய் வந்தாண்டி - வஞ்சமே செய்யும் ஐம்புலவாசைகளை அறுத்து யான் உய்தற்குக் காரணமாகவே வந்தருளினன் காண்! என்பதாம்.

(வி - ம்.) கொள்ளை, மிகுதிப் பொருட்டு. குருவடிவம் கொண்டவன் என மாறுக. கள்ளம் - வஞ்சகம். "புலனைந்தும் வஞ்சனையைச்செய்ய விலங்கு மனத்தால்" என்பது திருவாசகம் (சிவபுராணம்- ௩௭ - ௬.) (௨)

ஆதார மோராறு மைம்பத்தோ ரட்சரமுஞ்
சூதான கோட்டையெல்லாம் சுட்டான் றுரிசறவே.

(இ - ள்.) ஆதாரம் ஓர் ஆறும் - ஆதாரங்களாகிய ஆறிடங்களையும்; ஐம்பத்தோர் அட்சரமும்-அவ்விடங்களினமைந்துள்ள ஐம்பத்தோரெழுத்துக்களும் உடையதாய்; சூது ஆன கோட்டை எல்லாம் - மாயையாலியன்ற கோட்டை முழுவதும்; துரிசு அற - அழுக்ககன்று தூய்மை பெறுமாறு; சுட்டான் - தனது அறிவுத் தீயினுற் சுட்டழித்தனன்; என்பதாம்.

(வி - ம்.) ஆறு ஆதாரமாவன - மூலாதாரம் முதலிய ஆறுமாம். ஐம்பத்தோ ரெழுத்துக்கள் இவையென விரிந்த நூலுட்கண்டு கொள்க. ஈண்டுரைப்பிற் பெருகும். சூது - ஈண்டு மாயை. (௩)

மெத்த விகாரம் விளைக்கும் பலப்பலவாம்
தத்துவங்க ளெல்லாந் தலைகெட்டு வேந்ததடி.

(இ - ள்.) மெத்த விகாரம் விளைக்கும் - பெரிதும் வேறுபாட்டைச் செய்கின்ற; பலப்பலவாம் - பற்பலவாகிய; தத்துவங்கள் எல்லாம் - தத்துவங்கள் முழுவதும்; தலை கெட்டு வெந்ததடி - தந்தலைமைத்தன்மை கெட்டு வெந்தொழிந்தன காண் என்பதாம்.

(வி - ம்.) விகாரம் - வேறுபாடு. தம்முள் ஒன்றற்கொன்று முரண்படுதல். தத்துவங்கள் - சுத்தமாயா தத்துவங்களும் அசுத்த மாயா தத்துவங்களும். தலை கெடுதல் - முதன்மைத் தன்மை கெடுதல். வெந்தது என்றது - மெய்யுணர்வு பெற்ற வழி அவை யெல்லாம் பொய்யாயின என்றவாறு. (௪)

என்னோ டுடன்பிறந்தா ரெல்லாரும் பட்டார்கள்
தன்னந் தனியே தனித்திருக்க மாட்டேண்டி.

(இ - ள்.) என்னோடு உடன்பிறந்தார் எல்லாரும் பட்டார்கள் - ஏடி தோழி! என்னோடு பிறந்த உடன் பிறந்தார் அனைவருமே அந் நல்லாசிரியன் ஞானத்தீயினுல் சுடப்பட்டு இறந்தொழிந்தார்; தன்னந் தனியே தனித்திருக்க மாட்டேண்டி - இனி நான் மட்டுந் தன்னந் தனியாக இங்குத் தமியளாய் இருப்பேனோ இரேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) உடன் பிறந்தார் என்றது பாசக் கூட்டங்களை. இனி யான் தனித்திரேன் என்றது அவர்க ளிறந்தாற் போன்று யானும் இறந்து படுவேன் என்றொரு பொருள் தோற்றி நின்றது. ஆயினும்

இனி யான் என் கணவனேடு கூடி யிருப்பேன் என்பது கருத்தாகக் கொள்க. கணவன் - இறைவன். (௬)

எல்லாரும் பட்டகளை யென்று தொலையுமடி
சொல்லி யழுதாற் றுயரமெனக் காறுமடி.

(இ - ள்.) அடி எல்லாரும் பட்ட களை என்று தொலையும் - ஏடி தோழி! என் உடன் பிறந்தாரனைவரும் ஒருசேர மாண்டதனால் எனக்குண்டான துயரம் எப்பொழுதுதான் என்னை விட்டு நீங்குமோ? அறிகின்றிலேன்; துயரம் சொல்லி அழுதால் எனக்கு ஆறும் - அந்தத் துன்பத்தை வாய்விட்டுக் கூறியழுதால் ஒரோ வழி, தணிந்தாலுந் தணியும் என்பதாம்.

(வி - ம்.) இனி உடன்பிறந்த தத்துவம் எல்லாவற்றாலும் யான் பட்ட துன்பத்தாலுண்டான களை எனக்கு எப்பொழுது தீரும். ஒரோ வழி இறைவன திரு முன்னின்று அவற்றைச் சொல்லி அழுதால் தீரவதாம் என்பது கருத்தாகக் கொள்க. (௬)

மண்முதலா மைம்பூதம் மாண்டுவிழக் கண்டேண்டி
விண் முதலா மைம்பொறிகள் வேந்துவிழக் கண்டேண்டி.

(இ - ள்) மண் முதலாம் ஐம்பூதம் மாண்டு விழக் கண்டேண்டி - ஏ்தோழி என் நல்லாசிரியனுடைய அறிவுத்தீ பற்றியவுடன் நிலம் முதலிய ஐம்பெரும பூதங்களும் உயிரற்று வீழ்தலைக் கண்டேன் காண்!; விண முதலாம் ஐமபொறிகள் வெந்துவிழக் கண்டேண்டி - வெளி முதலிய ஐந்து பூதங்களிடமாக நின்றறிகின்ற ஐந்து பொறிகளும் வெந்து வீழ்வதனைக் கணடேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) ஆசிரியர் அறிவுறுத்தவுடன் மண் முதலாம் ஐம்பூதம் - நிலம் நீர் தீ வளி வெளி எனனும் ஐவகைப் பூதங்களாலியன்ற இந்த உடலை உயிர் என்றிருந்த என் அறியாமை நீஙகுதலாலே அவ்வுடல் உயிரல் பொருள் எனபது விளங்கி விட்டது என்பது கருத்து. விண் முதலிய ஐந்து பூதஙகளுமிட மாக நின்று ஒலி முதலியவற்றைக் கொண்ட நின்ற செவி முதலிய ஐம்பொறிகள் என்க. தேகான்மவாதியையும் இந்திரியமே உயிர் எனனும் இந்திரியான்மவாதியையும் பொய்யர் என்பார் பூதம் மாண்டு விழக்கண்டேன் என்றும் ஐம்பொறிகள் வெந்து விழககணடேன் எனறும் ஓதியருளினர் என்க. (எ)

நீக்காப் புலன்களைந்து நீறாக வேந்ததடி
வாக்காதி யைவரைபு மாண்டுவிழக் கண்டேண்டி.

(இ - ம்.) அடி நீக்காப் புலன்கள் ஐந்தும் நீறு ஆக வெந்தது - ஏடி தோழி! என் ஆற்றல் கொண்டு அகற்ற வொண்ணாத சுவை முதலிய ஐம்புலன்களும வறிய சாம்பராக வெந்தழிந்தன காண்!; வாககு ஆதி ஐவரையுமு மாண்டு விழக் கண்டேண்டி - மொழி முதலிய தொழிற கருவிகள் ஐந்தும வறிய சடங்களா யொழிக்கண்டேன் காண்!; என்பதாம்.

(வி – ம்.) புலன்கள் ஐந்தாவன - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. இவை உயிராற்றலால் நீக்கப்படா ஆற்றலுடையன என்பார் நீக்காப்புலன் என்றார். வாக்காதி ஐவர் என்றது - மொழி கால் கை எருவாய் கருவாய் என்னும் தொழிற் கருவிகள் ஐந்தனையும். இவை தம்மாற்றல் கெட்டமையின் மாண்டன என்றார். (அ)

மனக்கரண மத்தனையும் வகைவகையே பட்டழிய
இனக் கரணத்தோடே எரிந்துவிழக் கண்டேண்டி.

(இ - ள்.) மனக்கரணம் அத்தனையும் வகை வகை பட்டு அழிய- தோழி அந்நல்லாசிரியர் ஒரு சொல் சொன்ன மாத்திரையே மனத்தைச் சார்ந்த உட்கருவிகள் எல்லாம் முறை முறையாக இறந்து ஒழியும்படி; இனக்கரணத்தோடே எரிந்து விழக் கண்டேண்டி - அவற்றின் இனமாகிய மெய் முதலிய புறக்கருவிகளோடு எரிந்து நீறாகி விழுவதைக் கண்டேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) மனக்கரணம் - மனம் சித்தம் புத்தி அகங்காரம் என்னும் உட்கருவிகள்; இனக்கரணம் என்றது மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் புறக்கருவிகளை என்க. (கூ)

ஆத்தும தத்துவங்கள் அடுக்கழிய வேந்ததடி
போற்றும்வகை எப்படியோ போத மிழந்தானே.

(இ - ள்.) ஆத்தும தத்துவங்கள் அடுக்கு அழிய வெந்ததடி - தோழி! இவ்வாறாக என்னுடைய ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும் தமது நிலை குலையும்படி அழிந்தனகாண்!; போதம் இழந்தானே - இனி தன் முனைப்பற்ற இறைவனை இத்தத்துவ மிழந்த யான் வணங்குவ தெங்ஙனம்? என்பதாம்.

(வி - ம்:) ஆத்தும தத்துவங்கள் இருபத்து நான்கு. அவை யாவன :—மெய் முதலிய அறிவுக் கருவிகள் ஐந்தும், மொழி முதலிய தொழிற் கருவிகள் ஐந்தும், சுவை முதலிய புலன்கள் ஐந்தும், மனம் முதலிய உட்கருவிகள் நான்கும், நில முதலிய பூதங்கள் ஐந்தும் ஆக இவ்விருபத்து நாலுமாம். கருவிகள் இன்மையான் இறைவனைத் தொழுதல் எங்ஙனம் என்றவாறு. போத மிழந்தேனே எனப் பாட மிருப்பின் நன்றாம். (௧0)

வித்தியா தத்துவங்கள் வேந்துவிழக் கண்டேண்டி
சுத்தவித்தை யைந்தினையுஞ் சுட்டான் றுரிசறவே.

(இ - ள்.) வித்தியா தத்துவங்கள் வெந்து விழக் கண்டேண்டி- தோழி ஞானாசிரியன் கொளுவிய அறிவுத் தீயினால் வித்தியா தத்துவங்களும் வெந்து சாம்பராகக் கண்டேன் காண்!; சுத்த வித்தைஐந்தினையும் துரிசு அறச் சுட்டான் - அவற்றிற்கும் அப்பாலாகிய சுத்த வித்தை முதலிய ஐந்து தத்துவங்களையும் அடியேன் அழுக்கற்றுப் போம்படி சுட்டழித்தனன் காண்! என்பதாம்.

(வி - ம்.) வித்தியா தத்துவங்களாவன - கலை காலம் நியதி வித்தை அராகம் புருடன் மாயை என்னும் இவ்வேழுமாம்; சுத்த

வித்தை முதலியன என்க. இவற்றைச் சிவ தத்துவம் என்றும் கூறுப. அவையாவன - சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னுமிவ்வைந்துமாம். துரிசு - அழுக்கு. (கக)

மூன்று வகைக்கிளையும் முப்பத் தறுவரையும்
கான்று விழச்சுட்டுக் கருவே ரறுத்தாண்டி.

(இ - ள்.) மூன்று வகைக் கிளையும் முப்பத்தறு வரையும் - ஆத்தும தத்துவம் வித்தியாதத்துவம் சுத்ததத்துவம் என மூன்றுவகைப்பட்ட கிளைகளா யமைந்த முப்பத்தாறு தத்துவங்களாகிய என் உடன் பிறந்தாரை யெல்லாம்; கான்று விழச்சுட்டு - தத்தமக்குரிய ஆற்றல் களை வீசி விட்டு விழும்படி சுட்டு வீழ்த்தி அடியேன் பிறப்பினது வேரினையும் அறுத்தொழித்தான் காண் என்பதாம்.

(வி - ம்.) மூன்றுவகை என்றது ஆத்தும தத்துவம் வித்தியா தத்துவம் சுத்த தத்துவம் என்னும் மூன்று வகைப்பட்டிருத்தலே. மூன்று வகையினின்றும் தத்துவங்கள் ஒன்றினொன்று தோன்று தலால் கிளை என்றார். (கஉ)

குருவாகி வந்தானோ குலமறுக்க வந்தானோ
உருவாகி வந்தானோ வுருவழிக்க வந்தானோ.

(இ - ள்.) குருவாகி வந்தானோ குலமறுக்க வந்தானோ - எடி தோழி ! என் முன்னே வந்த அப்பெருமான்றான் என்னை வாழ்விக்கு நல்லாசிரியனாக வந்தானோ? அல்லது என் குலத்தை வேரறுக்கும் பகைவனாய் வந்தானோ? அறிகிலேனடி !; உருவு ஆகி வந்தானோ - அவன்றான் அடியேன் பொருட்டு மனமிரங்கி உருவங்கொண்டு என் முன்னே வந்தனனோ? அல்லது என் மீது செற்றங்கொண்டு என் உடம்பினை அழிக்க வந்தனனோ? அறிகிலேனடி ! என்பதாம்.

(வி - ம்.) குருவாக வந்தானோ அல்லது என் குலப்பகைவனாய் வந்தானோ அருளால் உருவாகி வந்தானோ? செற்றத்தால் என்னைக் கொல்ல வந்தானோ? என்று சிலேடை வகையாற் கூறிய படியாம். (கங)

கேடுவரு மென்றறியேன் கெடுமதிகண் டோன்றமல்
பாடுவரு மென்றறியேன் பதியாண் டிருந்தேண்டி.

(இ - ள்.) கேடு வரும் என்று அறியேன் - எடி தோழி. எனக் கிங்ஙனம் முழுக்கேடு வந்தெய்தும் என்று முன்னர்ச் சிறிதேனும் அறிந்திலேனே !; பாடுவரும் என்று அறியேன் - எனக்கு இவ்வாறு சாக்காடுவரும் என்பதனைச் சிறிதும் அறிந்திலேனே !; கெடுமதி கண் தோன்றமல் - இவ்வாறு கெடுதற்குரிய ஊழ் என் கண்ணுக்குத் தோன்றமையால்; பதி ஆண்டிருந்தேண்டி - யான் என் நகரத்தைச் செருக்கோடு ஆட்சி புரிந்து கொண்டிருந்தேனடி ! என்பதாம்.

(வி - ம்.) இஃது அடிகளார் வருந்துவார் போன்று மகிழ்ந்து கூறியது. பிறப்புத் துவரக் கெட்டமையை கேடு என்றும், 'கெடுமதி

கண்டோன்றுது' என்பது ஒரு பழமொழி. அதற்கிணங்க யான் இப்படிப் பாடுவரு மென்றறியேன் என்றார். இனி இவ்வாறு தமக்குய்தி வந்தமைக்கு அருளே காரணம் ஆதலின் அது தமக்குத் தோன்றுமற் றுமே வந்து ஆண்டமை தோன்றக் கூறிய படியாம். பாடு - சாக்காடு. பிறப்பின் அழிவினை இவ்வாறோதினர். பதி என்றது - உடம்பினை. இச்சிறு செய்யுள் அடிகளாரின் புலமைத் திறத்தைப் புலப்படுத்துதலு முணர்க. (கச)

எல்லாரும் பட்டகள மின்னவிட மேன்றறியேன்
பொல்லாங்கு தீர்க்கும் பொறியிலியைக் கண்டேண்டி.

(இ - ள்.) எல்லாரும்பட்ட களம் இன்ன இடம் என்று அறியேன் - தோழி என்னுடன் பிறந்தோர் எல்லாரும் இறந்த போர்க்களந்தான் எங்குளது என்றுதானும் யான் அறிந்திலேன். ஆனல் எனக்குற்ற தீமையை எல்லாம் போக்குவதாகக் கூறி வந்த அந்தப் பொறியில்லாதவனை மட்டுமே யான் கண்டேனடி என்பதாம்.

(வி - ம்.) எல்லாரும் என்றது என்னுடன் பிறந்தா ரெல்லாரும் என்றும் அங்ஙனம் கூறியது தத்துவக் கூட்டத்தை என்று மறிக. இனி இதன்கண் உடன் பிறந்தாரை யெல்லாம் அழித்தான் ஆதல் பற்றிப் பொறியிலி என்பதற்கு அறிவிலி என்றும் தத்துவங்களை அழித்துப் பிறப்பாகிய பொல்லாங்கு தவிர்த்த கடவுள் எனக் கொள்ளுங்கால் - பொறியிலி என்பது பொறிவாயிலைந்து மில்லாத கடவுள் என்றும் இரட்டுற மொழிந்து கொள்க. இரண்டிற்கு மேற்பப் பொல்லாங்கு தீர்ப்பதாகக் கூறிவந்த என விரித்தோதிக் கொள்க. (கரு)

உட்கோட்டைக் குள்ளிருந்தா ரொக்க மடிந்தார்கள்
அக்கோட்டைக் குள்ளிருந்தா ரறுபதுபேர் பட்டார்கள்.

(இ - ள்.) உட்கோட்டைக் குள்ளிருந்தார் ஒக்க மடிந்தார்கள் - தோழி! கோட்டையினகத்திருந்த வென்னுடன் பிறந்தார் முப்பத்தறுவரும் ஒருசேர மாண்டனராக; அக்கோட்டைக் குள்ளிருந்தார் அறுபது பேர் பட்டார்கள் - பின்னும் அவர்க்குதவியாக அக்கோட்டைக் குள்ளிருந்த அவரேவலர் அறுபது பேரும் அவரோடு மாண்டு போயினர் காண் என்பதாம்.

(வி - ம்.) உட்கோட்டை என்றது உடம்பினுள் என்றவாறு. அறுபது பேர் என்றது தத்துவம் தொண்ணூற்றாறு என்பதுபற்றி, எஞ்சிய அறுபது தத்துவங்களையும் கூறியபடியாம். (கசு)

ஒக்க மடிந்ததடி யூடுருவ வேந்ததடி
கற்கோட்டை யெல்லாம் கரிக்கோட்டை யாச்சுதடி.

(இ - ள்.) ஒக்க மடிந்ததடி - தோழி தத்துவக் கூட்டம் ஞானாசிரியன் கொளுவிய ஞானத் தீயினால் ஒரு சேர அழிந்தது காண்! ஊடு உருவ வெந்ததடி - அதுபின்னொரு காலத்தே தோன்ற வியலாதபடி ஊடுருவி வெந்தொழிந்தது காண்! கற்கோட்டை எல்லாம்

கரிக்கோட்டை யாச்சுதடி - யான் அவற்றுள் வாழ்ந்த பொழுது கற்கோட்டை போன்று உறுதியுடையனவாகத் தோன்றிய உடம் பெல்லாம் இப்பொழுது வறிய சாம்பற் குவியலாய் முடிந்தன காண்! என்பதாம்.

(வி - ம்.) மெய்யுணர்வு தோன்றிய பொழுதே எல்லாம் பொய் யாய் விடுதல்பற்றி, ஒக்க மடிந்ததடி என்றார். அறியாமைக் காலத்தே உடம்பை உறுதியுடையதாகக் கருதுதல் பற்றிக் கற்கோட்டை என்றார். கரிக்கோட்டை-கரிக்குவியல். (கஎ)

தோண்ணூற் றறுவரையுஞ் சுட்டான் றரிசறவே
கண்ணேறு பட்டதடி கருவே ரறுத்தாண்டி.

(இ - ள்.) துரிசு அற தொண்ணூற்று அறுவரையும் சுட்டான் - தோழி என் ஆசிரியன் என் அழுக்கறம்படி தொண்ணூற்றாறு தத்து வங்களையும் தனது அறிவுரையாகிய தீயினாற் சுட்டழித்தனன்; கண் ஏறுபட்டதடி - பின்னர் அவன் திருக்கண்ணோக்கம் அடியேன் மீது விழுந்தது; கருவேர் அறுத்தாண்டி - அந்நோக்கத்தாலேயே அடி யேன் பிறப்பின் வேரினையும் அறுத்தொழித்தான் காண்.

(வி - ம்.) நல்லாசிரியன் தன் அறிவுரையால் தத்துவங்கள் அனைத்தும் பொய்யென்று விளக்கினன்; தன் அருட்பார்வையால் மீண்டும் பிறவாப்பேற்றை அளித்தான் என்றவாறு. (க௮)

ஓங்காரங் கேட்டதடி யுள்ளதெல்லாம் போச்சுதடி
ஆங்காரங் கேட்டதடி அடியோ டறுத்தாண்டி.

(இ - ள்.) ஓங்காரம் கெட்டதடி - பொருள் உலகத்திற் கேது வாகிய தத்துவங்கள் அழிந்தபொழுதே ஒலியுலகத்திற்கு முதலாகிய ஓங்காரமும் ஒடுங்கிப் போயிற்று. உள்ளதெல்லாம் போச்சுதடி - அதனாலுண்டான சாத்திரங்கள் எல்லாம் ஒழிந்து போயினகாண். ஆங்காரம் கெட்டது - நான் என்னும் செருக்கு மழிந்தது; அடியோடு அறுத்தாண்டி - அவ்வகங்காரத்தின் கிழங்கையும் அகழ்ந்தெறிந் தாண்டி! என்பதாம்.

(வி - ம்.) ஓங்காரம் என்றது - நாதத்தத்துவத்தை. அதனால் உள்ள நூல்கள் என்க. ஆங்காரம் - செருக்கு. (கக)

தரையாங் குடிலைமுதல் தட்டுருவ வேந்ததடி
இரையும் மனத்திடும்பை யெல்லா மறுத்தாண்டி.

(இ - ள்.) தரை ஆம் குடிலை முதல் தட்டுருவ வெந்ததடி - தோழி! இறைவனுடைய இலயம் போகம் அதிகாரங்களுக்கும் சுத்த தத்துவங்கள் தோன்றுதற்கும் இடமாகிய சுத்தமாயை முதலியன அடி யோடு வெந்தழிந்தனகாண்!; இரையும் மனத்து இடும்பை எல்லாம் அறுத்தாண்டி - உள்ளே முழங்குகின்ற துன்ப மனைத்தையும் அகற்றி விட்டானடி என்பதாம்.

(வி - ம்.) குடிலை - சுத்தமாயை. இஃது இறைவனுடைய இலய முதலிய மூன்று நிலைகளும் சுத்த தத்துவங்களும் தோன்றுதற்கு இடமாதல் பற்றித் தரை ஆம் குடிலை என்றார். தரை - நிலம். இரையும் - முழங்குகின்ற. (உ0)

முன்னை வினையெல்லா முழுது மறுத்தாண்டி
தன்னை யறியவே தாளொருத்தி யானேனண்டி.

(இ - ள்.) முன்னை வினை எல்லாம் முழுதும் அறுத்தாண்டி - தோழி என் ஞானாசிரியன் தன் திருவருணோக்காலேயே என் பழவினை அனைத்தையும் அறத்தொழித்தான் காண் !; தன்னை யறியவே தான் ஒருத்தி ஆனேனண்டி - அந்த ஞானாசிரியன் இயல்பை யான் அறிந்த வளவிலே அவன் என் கணவனாகவும் யான் அவனுக்கேற்ற ஒரு காதலியாகி விட்டேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) முன்னைவினை - பழவினை (சஞ்சிதம்) தன்னை - அவனை. அவனியல்பறிய அவன் ஆடவனாகவும் யான் அவனுக்குக் காதலியாகிய ஒரு பெண்ணாகி விட்டேன் என்றவாறு. (உக)

என்னையே யானறிய விருவினையு மீடழித்துத்
தன்னை யறியத் தலமெனக்குச் சொன்னாண்டி.

(இ - ள்.) என்னையே யான் அறிய - உயிராகிய என்னியல்பை யானே அறிந்து கொள்ளும்படி; இருவினையும் ஈடழித்து - எனது இருவகை வினைகளையும் கெடுத்துத் தூயேனாக்கி; தன்னை அறியத் தலம் எனக்குச் சொன்னான் - பின்னர்த் தலைவனாகிய அவனை யான் அறிந்து கொள்ளுதற்குரிய இடத்தையும் தானே எனக்குணர்த்தினான் காண்! என்பதாம்.

(வி - ம்.) என்னை என்றது உயிராகிய என்னியல்பை என்றவாறு. இருவினை - நல்வினை தீவினையாகிய இரண்டும். ஈடழித்தல்- பெருமையை அழித்தல், தன்னை என்றது இறைவனாகிய அவனை; தன்னையறியத் தலம் சொன்னான் என்றதனை,

> "ஊனக்கண் பாசம் உணராப்பதியை
> ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
> உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ
> 'தண்ணிழலாம்பதி' விதி எண்ணுமஞ் செழுத்தே."

எனவரும் சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திர முதலியவற்றால் உணர்க. ஈண்டுரைப்பிற் பெருகும். (உஉ)

தன்னை யறிந்தேனண்டி தனிக்குமரி யானேனண்டி
தன்னந் தனியே தனியிருக்கும் பக்குவமோ.

(இ - ள்.) தன்னை அறிந்தேனண்டி - தோழி! அவன் அருளாலே என்னியல்பை உணர்ந்து கொண்டேன்; தனிக்குமரி ஆனேனண்டி -

உணர்ந்த வழி யான் தனித்திருக்கின்ற பெதும்பைப் பருவத்தானா யிருத்தலையும் அறிந்தேனடி; தன்னந்தனியே தனி யிருக்கும் பக்குவமோ - இப்பருவந்தான் ஒருத்தி தமியளாயிருத்தற்கியன்ற பருவம் ஆமோ? கூறுதி என்பதாம்.

(வி - ம்.) தன்னை அறிந்தேனடி, என்றது உயிராகிய என் னியல்பை அறிந்தேன் என்றவாறு; மேலும் என்னுயிர் தானும் தான் பிறந்து வளர்ந்த உலகை வெறுத்துத் தன் தலைவனை அடையப் பெரிதும் அவாவுகின்றது காண் என்பார் தனிக்குமரியானேனடி என்றார். குமரி - பெதும்பைப் பருவம். மணப்பருவம், ஆதலால் இனி யான் தலைவனைக் காணாது தனித்திருக்க வல்லேன் அல்லேன் என்பார் தனியிருக்கும் பக்குவமோ என்றார். (உ௩)

வீட்டி லொருவரில்லை வெட்டவெளி யானேனடி
காட்டுக் கெறித்தநிலா கனவாச்சே கண்டதெலாம்.

(இ - ள்.) வீட்டில் ஒருவரில்லை - யான் பிறந்த வீட்டில் எனக் கினியார் ஒருவரேனுமிலர்; கண்டது எல்லாம் - யான் எனது பேதைப் பருவத்தே கண்ட காட்சி யெல்லாம்; கனவாச்சு - வறிய கனவுகளாகி விட்டன; காட்டுக்கு எறித்த நிலா - யான் இதுகாறும் செய்த செயலெல்லாம், காட்டில் எறித்த நிலவொளி போலப் பயனில் செயலாயின காண்!; வெட்டவெளி ஆனேனடி - ஆகவே யான் வெறும் பாழ் வெளிபோலாகி விட்டேன் என்பதாம்.

(வி - ம்.) எனக்கிதுகாறும் பொருளாகத் தோன்றிய உலகத் தில் எனக்கு யாருமில்லை. இவ்வுலகத்தில் யானிதுகாறும் கண்ட காட்சி யெல்லாம் பொய்யாயின. செய்தனவும் பயனிலாச் செய லாயின. இனி யான் என் பருவத்திற் கேற்பப் பெரிதும் அவாவு கின்ற தலைவனையும் கண்டிலேன். ஆதலின் யானிப்பொழுது வெறும் பாழாகி விட்டேன் என்றவாறு.

இனி, இதன்கண் அடிகளார் உயிரானது பக்குவமடைந்து உலகை வெறுத்துத் தன்னுள்ளிருந்து தான் காண விரும்புகின்ற இறைவனையும் காணப் பெறாதிருக்கின்ற அவல நிலையை மிகவும் நுண்ணிதாக அறிவுறுத்துகின்றார் என்க. (உ௪)

நகையாரோ கண்டவர்கள் நாட்டுக்குப் பாட்டலவோ
பகையாரோ கண்டவர்கள் பார்த்தாருக் கேச்சலவோ.

(இ - ள்.) கண்டவர்கள் நகையாரோ - ஏடி தோழி! இவ்வாறு இரண்டுங்கெட்டு வறியளாகிய என்னைக் கண்ட ஏதிலாரெல்லாம் நகைக்க மாட்டாரோ?; நாட்டுக்குப் பாட்டு அலவோ - என்னிலைமை இந்த நாட்டுக்குப் பாட்டாகப்பாடி நகைத்தற் கேற்றதன்றோ?; கண் டவர்கள் பகையாரோ-என்னிலையைக் கண்ட என் சுற்றத்தார் எல்லாம் என்னைப் பகைக்க மாட்டாரோ?; பார்த்தார்க்கு - என்னைப் பார்ப் பவர்க்கெல்லாம்; ஏச்சு அலவோ - என்னிலைமை பழித்தற் கிடமன்றோ? என்பதாம்.

(வி - ம்.) துறவோரைக் கண்டு நகைப்பாரும், அவர் செயலை நகைச்சுவை தோன்றப்பாடுவாரும், பழிப்பாரும் உலகிலுண்மையை இதனால் அறிவுறுத்துகின்றார் என்க. (௨௫)

இந்நிலைமை கண்டாண்டி யெங்கு மிருந்தாண்டி
கன்னி யழித்தாண்டி கற்பைக் குலைத்தாண்டி.

(இ - ள்.) இந்நிலைமை கண்டாண்டி - தோழி அடிச்சியின் இந்த இரண்டுங் கெட்ட நிலையை அவனே கண் கூடாகக் கண்டான்; எங்கும் இருந்தாண்டி - அவன் அங்கிங்கெனாதபடி எங்கு மிருந்தானாகலின் (கண்டான்); கன்னி யழித்தாண்டி - எனக்கிரங்கி என் கன்னிமையைக் கட்டழித்தான்; கற்பைக் குலைத்தான் - தானே வலிய வந்து என்னைப் புணர்ந்து என் தனிமையையும் அகற்றினான்;

(வி - ம்.) இறைவன் உயிரின் பக்குவமறிந்து தானே வந்து புணர்ந்து அதன் தனிமை தவிர்த்துப் பேரின்பம் நல்குதலை அடிகளார் இவ்வாறு அழகுற வோதுகின்றார். கற்பு என்றது கணவனைப் பிரிந்திருக்கும் இருத்தல் என்னும் ஒழுக்கத்தை. இதற்கு இதுவே பொருள் என்பதனை அகத்திணையியலுட் காண்க. (தொல்காப்பியம்) (௨௬)

கற்புக் குலைத்தமையுங் கருவே ரறுத்தமையும்
பொற்புக் குலைத்தமையும் போத மிழந்தமையும்.

(இ - ள்.) கற்புக் குலைத்தமையும் கருவேர் அறுத்தமையும் - அக்கள்வன் என் கற்பொழுக்கத்தை கெடுத்ததும்; மேலும் என் கருவையும் வேரோடு அழித்ததும்; பொற்புக் குலைத்தமையும் - என் கன்னிமைப் பொலிவினைக் கெடுத்ததும்; போதம் இழந்தமையும் - யான் அறிவு கெட்டுப் போனதும்; என்பதாம்.

(வி - ம்.) இச்செய்யுள் அடுத்த செய்யுளோடு தொடரும். இச்செய்யுள் சொற்கள் இரட்டுற மொழியப்பட்டன. கற்புக் குலைத்தமை என்பது - கற்பைக் கெடுத்தான் என்ற பழிச் சொல்லும்; கருவேர் அறுத்தான் என்றது-என் வயிற்றிலுண்டான கருவையும் அழித்தான் என்ற பழிச் சொல்லும், பொற்பு-என்கன்னிமைப் பொலிவைக்கெடுத்தான் என்ற பழிச்சொல்லும் போதமிழந்தமை என்றது நான் அறிவிழந்தேன் என்ற பழிச் சொல்லுமாய் நிற்றலும். மீண்டும் அவற்றில் கற்புக் குலைத்தமை உயிரின் தனிமை போக்கலும், கருவேர் அறுத்தல் உயிரின், பிறப்பறுத்தலும் பொற்புக் குலைத்தமை உயிரியல்பை மாற்றிச் சிவமாக்கலும் போதமிழத்தல் தன்முனைப் பறுதலுமாய்ச் சிறந்த பொருள் குறித்து நிற்றலும் உணர்க. (௨௭)

என்ன வினைவருமோ வின்னமெனக் கேன்றறியேன்
சோன்னசோல் லெல்லாம் பலித்ததடி சோர்வறவே.

(இ - ள்.) இன்னம் எனக்கு என்ன வினை வருமோ என்று அறியேன் - தோழி! இவைகளே யன்றி இன்னும் என்ன என்ன நிகழ்ச்சிகள் உண்டாகுமோ? யாதொன்றும் அறிகின்றிலேன் காண்

சொன்ன சொல் எல்லாம் சோர்வு அறப்பலித்ததடி - அந்த ஞாஞசிரியன் என் திறத்திலே கூறிய சொல்லெல்லாம் சிறிதும் பிழைபடாமற் பலித்தே விட்டன காண்! என்பதாம்.

(வி - ம்.) வினை என்றது - புதிய நுகர்ச்சியை. (உஅ)

கங்குல்பக லற்றிடத்தைக் காட்டிக் கோடுத்தாண்டி
பங்க மழித்தாண்டி பார்த்தானைப் பார்த்திருந்தேன்.

(இ - ள்.) கங்குல் பகல் அற்றிடத்தைக் காட்டிக் கொடுத்தாண்டி – இரவும் பகலும் இல்லாத இடம் இஃதென்று எனக்குணர்த்தினன்; பங்கம் அழித்தாண்டி - எனக்கு அறிவில்லாதபடி செய்தனன் காண்!; பார்த்தானைப் பார்த்திருந்தேன் - யானோ பின் யாதொன்றனையுங் காணேனாகி யான் இவ்வாறுகும்படி என்னைத் தன்னருட் கண்ணாற் பார்த்த அவனையே பார்த்திருப்பேனாயினேன் என்பதாம்.

(வி - ம்.) கங்குல் பகல் அற்ற இடம், ஆணவமும் மாயையும் அற்றுத் திருவருளே இடமாதல். அஃதாவது சாக்கிராதீத நிலை என்க. பங்கம் - அறிவு. பார்த்தானைப் பார்த்திருந்தேன் – சிவாநுபவம் பெற்றேன் என்றவாறு. (உக)

சாதியிற் கூட்டுவரோ சாத்திரத்துக் குள்ளாமோ
ஓதியுணர்ந்த தெல்லாம் உள்ளபடி யாச்சுதடி.

(இ - ள்.) சாதியில் கூட்டுவரோ - ஏடி தோழி இவ்வாறாகி விட்ட என்னை இந்த வுலகத்து மாந்தர் தங்கள் சாதியிலே என்னைச் சேர்த்துக் கொள்வரோ காண்!; சாத்திரத்துக்குள் ஆமோ - என்னொழுக்கம் அவர்கள் நூல் கூறும் ஒழுக்கத்துள் அடங்குமோ? ஓதி உணர்ந்த தெல்லாம்-யான் இவ்வுலகியலுக்கு மாறாக அந்த ஞானசிரியனிடத்திலே பயின்றுணர்ந்தன அனைத்தும்; உள்ளபடி ஆச்சுதடி - உண்மையாகவே ஆகி விட்டன காண் என்பதாம்.

(வி - ம்.) துறவோர் ஒழுக்கம் சாதி சமயங்களையும் உலக நூன் முறையும் கடந்து நிற்றலையும் திருவடிஞானம் நல்லாசான் திருவருளாலன்றி நூலறிவாற் பெற வொண்ணமையும் இவ்வாறு கூறினர் என்க. (௩0)

என்ன குற்றஞ் செய்தேனோ எல்லாருங் காணமல்
அன்னைசுற்ற மேல்லாம் அறியாரோ வம்புவியில்.

(இ - ள்.) எல்லாருங் காணமல் என்ன குற்றம் செய்தேனோ - தோழி! சாதியிற் சேர்த்துக் கொள்ளாதபடி யான் இவ்வுலகத்தார் காணதபடி என்ன குற்றந்தான் செய்து விட்டேன் நீயே கூறுவாயாக!; அம்புவியில் அன்னை சுற்றம் எல்லாம் அறியாரோ - உலகத்தே அவ்வாறு யான் குற்றஞ் செய்திருந்தால் உலகத்தார் அறியாமற் போயினும் என் தாயும் சுற்றத்தாரும் அறிந்து கொள்ளாரோ கூறுவாய் என்பதாம்.

(வி - ம்.) உயிர் இறைவனோடு இரண்டறக் கலந்ததனை உலகத்தாரும் தத்துவக் கூட்டமும் அறிய வொண்ணாது என்பது இதன் கருத்து என்க. (௯௧)

கொன்றாரைத் தின்றேனோ தின்றாரைக் கொன்றேனோ
எண்ணாதெல் லாமெண்ணு மிச்சை மறந்தேனோ.

(இ - ள்.) கொன்றாரைத் தின்றேனோ - தோழி யான் உலகத்தார் போலத் தன்னைக் கொன்று தின்றவர்களை யானும் கொன்று தின்றேனோ? தின்றாரைக் கொன்றேனோ - உண்டவர்களைக் கொலை செய்தேனோ? எண்ணாது எல்லாம் எண்ணும் இச்சை மறந்தேனோ - அல்லது எண்ணாத எல்லாம் எண்ணுகின்ற ஆசையை மறந்தேனோ கூறாய்! என்பதாம்.

(வி - ம்.) உலகத்தார் தம்மைக் கொன்றாரைக் கொல்வர் தின்றாரைக்கொல்வர். யான் இத்தகைய குற்றம் புரிகின்றிலேன். அவர்களும் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ண அவாவுவர். யானும் எண்ணவியலாத என் தலைவனை எண்ணவே விரும்புவன் இது குற்றமன்றே என்றவாறு. (௯௨)

சாதியிற் கூட்டுவரோ சமயத்தோ ரெண்ணுவரோ
பேதித்து வாழ்ந்ததெல்லாம் பேச்சுக்கிட மாச்சுதடி.

(இ - ள்.) சாதியில் கூட்டுவரோ - தோழி உலகத்தார் இனி என்னைத் தம் சாதியிலே சேர்ப்பாரோ கூறாய்!; சமயத்தோ ரெண்ணுவரோ - சமயவாதிகள் ஆசாரத்தைக் கை விட்டமையால் அவர் தம் சமயத்தினராக என்னை நினைப்பாரோ கூறதி!; பேதித்து வாழ்ந்ததெல்லாம் - எடி அவரோடு வேற்றுமைப்பட்டு நான் வாழ்ந்த வாழ்வெல்லாம்; பேச்சுக் கிடம் ஆச்சுதடி - முடிவில் அவருடைய பேச்சிற்கே இடமாகி விட்டதடி! என்பதாம்.

(வி - ம்.) மெய்யாய துறவியாகிய சீவன் முத்தர் வாழ்க்கை சாதி சமயங்களைக் கடந்து நிற்கும் என்பதும் உலகத்தார் அவர் தம் பெருமையே பேசுவர் என்பதும் இதன் கருத்தாம் என்க. (௯௩)

கண்டார்க்குப் பெண்ணலவோ காணார்க்குக் காமமடி
உண்டார்க ளுண்டதெலாம் ஊணல்ல துண்பர்களோ.

(இ - ள்.) கண்டார்க்குப் பெண் அலவோ - தம்மியல்பை ஆராய்ந்து கண்டவர்க்குத் தாம் பெண் என்பது தெரியும்; காணார்க்குக் காமம் - இவ்வுண்மை காணாதவர்க் கெல்லாம் காமமே ஒழியாது நிற்கும். உண்டார்கள் உண்டது எலாம் - காமம் நிற்பினும் அவர்கள் காமுற்று உண்டதெல்லாம்; ஊணல்லது - அவர்கள் தாமே விளைவித்துக் கொண்ட உணவன்றி; உண்பர்களோ - வேறு உணவுகளை உண்ண மாட்டுவரோ? என்பதாம்.

(வி - ம்.) மெய்யுணர்ந்த உயிர்கள் தாம் பெண்மைத் தன்மையுடையன ஆதலை அறியும்; அறியவே தமக்கினிய தலைவனையுமுணர்ந்து

அவனை அடையவே பெரிதும் முயல்வனவாம். மெய்யுணர்வில்லா வுயிர்களோ தம்மையும் தலைவனையும் உணர மாட்டாவாய் உலகத்துப் பொய்ப் பொருளைக் காமுற்றுழலா நிற்கும். காமுற்ற விடத்தும் அப்பொருள்கள் தாமும் தம் பழவினைப் பயனுமளவே அவற்றின் நுகர்ச்சி வருவன, காமுற்ற எல்லாம் கிடைக்கவும் பெறா என்பது கருத்தென்க. (௩௪)

கொண்டவர்கள் கொண்டதெல்லாங் கொள்ளாதார்
கொள்ளுவரோ
விண்டவர்கள் கண்டவரோ கண்டவர்கள் விண்டவரோ?

(இ - ள்.) கொண்டவர்கள் கொண்டதெல்லாம் கொள்ளாதார் கொள்ளுவரோ - சிவாநுபவத்தைத் தம்முள் பெற்றவர் பெற்ற அநுபவத்தை யெல்லாம்; அவ்வநுபவ மில்லாதார் அநுபவிப்பரோ காண்!; விண்டவர்கள் கண்டவரோ - சிவாநுபவம் இவ்வாறிருந்ததெனச் சொல்லுபவர் அதனைத் தம்மநுபவத்திற் கண்டவராகார்; கண்டவர்கள் விண்டவரோ-சிவாநுபவத்தை எய்தியவர் அதுபற்றியாதொன்றும் சொல்லவும் வல்லுநராகார் என்பதாம்.

(வி - ம்.) இறையநுபவம் அநுபவித்தவர் உணர்ச்சிக்கே புலனும் அது பற்றிப் பேசுவோர் அதனைக் கண்டவரல்லர். கண்டவர் தாமும் இதுகாறும் அது பற்றிக் கூறியதுமில்லை என்பதாம். "ஞாணுகாரத்திறைடு ஞேயமற்ற ஞாதுருவு நழுவாமனழுவி நிற்கும் ஆனாலுமிதன் பெருமை யெவர்க்கார் சொல்வார் அதுவாகு லதுவாவரதுவே சொல்லும்" என்னும் தாயுமானவர் திருவாக்கும் ஈண்டு நினைக. (௩௫)

பண்டாய நான்மறைகள் பாடும் பரிசலவோ
தொண்டாய தொண்டருளந் தோற்றி யொடுங்குமதோ.

(இ - ள்.) பண்டு ஆய நால் மறைகள் பாடும் பரிசு அலவோ - மிகப்பழங் காலத்தே தோன்றிய நான்கு மறைகளும் பாடிப்போற்றும் பெற்றியுடைய தன்றோ அம்மெய்ப் பொருள்; தொண்டு ஆய தொண்டர் உளந்தோற்றி ஒடுங்குமதோ - அது தனக்கடிமையாகிய அடியவர் உள்ளத்தே தோன்றி மறையும் சிறுமையுடைத்தாமோ? ஆகாதன்றே என்பதாம்.

(வி - ம்.) மெய்ப்பொருள் வேதங்களால் எக்காலத்தும் பாடும் பெருமைத்து. அடியவர் நெஞ்சிற்றோன்றி மறையும் சிறுமைத்தன்று. எனவே, இறைவன் அடியவரை ஆளுமிடத்தும் அவர் நெஞ்சிற்குச் சேயனாய் நின்றே ஆட் கொள்வன் என்பதாயிற்று. மாற்றமும் மனமும் கடந்தவன் என்பது கருத்தாகக் கொள்க. (௩௬)

ஓத வெளிதோ வொருவருணர் வரிதோ
பேதமற வெங்கும் விளங்கும் பெருமையன்காண்.

(இ - ள்.) பேதமற விளங்கும் பெருமையன்காண் - (தோழி! மாற்றமும் மனமுங் கடந்து நிற்பதாயினும் எங்கும் எப்பொருளினும்)

வேற்றுமையின்றி நின்று விளங்குகின்ற பெருமையுடையது ஆதலால்; ஓத எளியதோ ஒருவர் உணர்வரிதோ - அவன் திருவருட்கண் கொண்டு காண்பார்க்கு ஓதவும் உணரவும் எளிதாக விருக்குங் காண் !; என்பதாம்.

(வி - ம்.) பரம்பொருள் மாற்றமும் மனமுங் கடந்து நிற்பினும் எங்கும் எவற்றின் பாலும் பேதமறக் கலந்திருத்தலால் அருட்கண்ணாற் காண்பார்க்கு ஓத எளியதும் உணர எளியதும் ஆகுங்காண் என்பது கருத்து. (கஎ)

வாக்கு மனமுங் கடந்த மனோலயன்காண்
நோக்க வரியவன்காண் நுண்ணியரி னுண்ணியன் காண்.

(இ - ள்.) வாக்கும் மனமும் கடந்த மனோலயன்காண் - தோழி மொழிக்கும் மனத்திற்கும் அப்பாற்பட்டவனாயினும் அந்த மனத் தூடேயே உறைபவன் காண்; நோக்க அரியவன்காண் - கண்ணி லிருந்தானேனும் காண்டற்கரியவன் காண் !; நுண்ணியரின் நுண் ணியன் - நுண்மாணுழை புலத்தினையுடையாரினும் காட்டில் அவன் மிகவும் நுண்மையுடையன் ஆதலால் என்பதாம்.

(வி - ம்.) நோக்க வரியவன் காண் நுண்ணியரின் நுண்ணியன் காண் என்னும் இவ்வாக்கு, "கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண் டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் ணுணர்வே" எனவரும் திருவாசகப் பொருளையுட் கொண்டு நின்றமையுணர்க. (கஅ)

சொல்லுக் கடங்கான்காண் சொல்லிறந்து நின்றவன்காண்
கல்லுளிருந்த கனலொளிபோ னின்றவன் காண்.

(இ - ள்.) சொல்லுக்கடங்கான் காண் சொல்லிறந்து நின்றவன் காண் - தோழி நம் பெருமான் சொல்லாற் சொல்லப்படுமியல் புடை யான் அல்லன் சொற்களுக்கு அப்பாற் பட்டவன். ஆதலால் அவ னியல்பை யாரே சொல்லவல்லுநர் ஆவார் ?; கல்லுள் இருந்த கனல் ஒளிபோல் நின்றவன் காண் !; சொற்கடந்து நின்றானாயினும் மணியி லிருக்கின்ற தீச்சுடர் போன்று உலகங்களின் அகத்தும் புறத்தும் எப் பொழுது மிருப்பவன் காண் ! என்பதாம்.

(வி - ம்.) இறைவன் கல்லிலொளிபோல் அகத்தும் புறத்து முளன் ஆயினும் மாந்தர் அவனியல்பைச் சொல்லிக் காட்டவல்ல ரல்லர் என்றவாறு. (கக)

சுட்டிறந்த பாழதனில் சுகித்திருக்கச் சொன்னவன்காண்
எட்டி லெழுத்தோ வெழுதினவன் கைப்பிழையோ.

(இ - ள்.) சுட்டு இறந்த பாழ் அதனில் சுகித்திருக்கச் சொன் னவன் - தோழி அவன் அவள் அது என்று பொருளைச் சுட்டி யுணர்த லில்லாத அருளாகிய வெட்ட வெளியிலே என்னை எப்பொழுதும் இன்புற்றிருக்கும்படி எனக்கு அறிவுறுத்தியவன் காண் !; எட்டில் எழுத்தோ எழுதினவன் கைப்பிழையோ - இவ்வாறு யான் வெறும்

பாழிலே சும்மா இருக்க வேண்டும் என்பது எனது விதியேட்டில் எழுதப்பட்டுளதோ? அல்லது அதனை எழுதியவன் கையின் பிழையாக அவ்வாறு எழுதப்பட்டுளதோ யான் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) எம்பெருமான் என்னை யாதொன்றனையும் சுட்டிப் பாராமல் வெறும் பாழிலே இன்பமுற்றிரு என்று கூறினன். இவ்வாறு கூறியதற்குக் காரணம் என் விதியேட்டில் அங்ஙனம் எழுதப்பட்டிருக்கின்றதோ? அல்லது எழுதியவன் தவறாக எழுதி விட்டானோ என்றவாறு இஃது இகழ்வது போன்று தாம் பெற்ற பேற்றினைப் புகழ்ந்த படியாம். (சo)

சும்மா விருக்கவைத்தான் சூத்திரத்தை நானறியேன்
அம்மா பொருளிதென வடைய விழுங்கினண்டி.

(இ - ள்.) சும்மா இருக்க வைத்தான் சூத்திரத்தை நான் அறியேன் - எடி தோழி அடியேனை வெறும் பாழிடத்தே சும்மா இரு என்று அறிவுறுத்த அந்த நல்லாசிரியனுடைய சூழ்ச்சி இன்னது என்று யான் அறிந்திலேன்; அம்மா இது பொருள் என அடைய விழுங்கினண்டி - அங்ஙனம் யான் அவன் ஆணைப்படி சும்மா இருந்த பொழுது அடியேன் அம்மவோ இதுவே யாம் தேடிய மெய்ப்பொருள் என்று யான் வியப்பெய்தும்படி என்னை எஞ்சாது அவன் விழுங்கி விட்டானடி!

(வி - ம்.) "சும்மா விருக்கச் சுகம் உதயம் ஆகுமே" என்பது தாயுமானவர் திருவாக்கு. அச்சுகோதயம் வியத்தகு நிகழ்ச்சியாகலானும் அதுவே சிவமும் ஆகலினானும் என்னைச் சும்மா விருக்க வைத்து என்னைத் தானே விழுங்கினன் என்றார். (சக)

பார்த்த விடமெல்லாம் பரமாகக் கண்டேண்டி
கோர்த்த நிலைகுலைத்த கோள்கை யறியேண்டி.

(இ - ள்.) பார்த்த இடமெல்லாம் பரமாகக் கண்டேண்டி - தோழி என்னை அவன் விழுங்கிய பின்னர் யான் பார்த்த இடம் எல்லாம் சிவமாகவே இருத்தலை யுணர்ந்தேன்; கோர்த்த நிலை குலைத்த கொள்கை அறியேண்டி - பண்டு அடியேனை தநுகரணபுவன போகங்களோடு இணைத்த இணைப்பினை அழித்து விட்ட அவன் குறிப்பு யாதென்றும் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) இதனை "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்;" எனவரும் சித்தியாரானு முணர்க. (சுப: ருகக) (சஉ)

மஞ்சன மாட்டி மலர்பறித்துச் சாத்தாமல்
நெஞ்சுவெறும் பாழானே னின்றநிலை காணேண்டி.

(இ - ள்.) மஞ்சனம் ஆட்டி மலர்பறித்துச் சாத்தாமல் - தோழி பார்த்த இடமெல்லாம் சிவமாகவே கண்டதனால் அச்சிவத்தின் திருவடியும் முடியும் காணப்படாமையாலும் மலர் முதலியவும் காணப்

படாமையாலும் அடியேன் அதுகாறும் செய்தபடி அவனை நீராட்டலும் மலர்சாத்தி வழிபாடு செய்தலு மில்லாதபடி; நெஞ்சு வெறும் பாழ் ஆனேன் நின்ற நிலை காணேண்டி - என் நெஞ்சம் வெறும் பாழாகப் பெற்றேன் மேலும் அஃதிருந்த இடத்தைத் தானும் அறிந்திலேன் காண்; என்பதாம்.

(வி - ம்.) தான் என்றும் அவன் என்றும் இரண்டாகாமல் தானே அவனாகி விட்ட படியால் வழிபாடு செய்தற் கிடனில்லாது போயிற்று. அவ்வாறு கருதுவதற்குரிய மனமும் இறந்தொழிந்தது என்பது கருத்து. (சஉ)

பாடிப் படித்திருந்தும் பன்மலர்கள் சாத்தாமல்
ஓடித் திரியாம லுருக்கெட்டு விட்டேண்டி.

(இ - ள்.) பாடிப் படித்திருந்தும் - தோழி! அறிவிலியாகிய யான் நல்ல நூல்களைப் பாடும் ஆற்றல் பெற்றிருந்தும் சான்றோர் நூல்களைப் பயின்றிருந்தும்; பல் மலர்கள் சாத்தாமல் - இறைவன் திருவுருவத்திற்குப் பல்வேறு மலர்களையும் அணிந்து வணங்காமலும்; ஓடித் திரியாமல் - அவன் எழுந்தருளி யிருக்கின்ற திருவூர்களிற் சென்று வழிபடற் பொருட்டு அங்கு ஓடி யுழலாமலும்; உருக்கெட்டு விட்டேண்டி - உடம்பு முதிர்ந்து கெடப்பெற்றேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) இறைவனை வழிபடற் பொருட்டே கல்வி என்றான் ஆளது. அதனைப் பெற்றிருந்தும் பயனின்றி மூத்துவிட்டேன் என்றும், அவனை வழிபாடு செய்யாதிருந்தும் அவன் அருளால் பிறவி தீரப் பெற்றேன் என்றும், சீவன் முத்தர் ஆயினோர் நூன்முறைப்படி ஒழுகுதலிலர் என்றும் பல்வேறு பொருள்களும் தோன்றுதலுணர்க. உருக்கெடுதல் — முதுமையுறுதல்; பிறவி தீர்தல். (சச)

மாணிக்கத் துள்ளொளிபோல் மருவி யிருந்தாண்டி
பேணித் தொழுமடியார் பேசாப் பெருமையன்காண்.

(இ - ள்.) மாணிக்கத்துள் ஒளிபோல் மருவி இருந்தாண்டி - தோழி எம்பெருமான் மாணிக்க மணியின்கண் ஒளியானது உள்ளும் புறமும் ஒருபடித்தா யிருப்பதுபோல உயிர்களிடத்தும் உயிரில் பொருளிடத்தும் ஒருபடித்தா யிருக்கின்றான் காண் ஆதலால்! பேணித் தொழும் அடியார் - அவன் திருவருளைப் பெறுதற்குரிய நெறியைப் பேணி அவனைத் தொழுகின்ற அவன் அடியார்; பேசாப் பெருமையன்காண்; அவனியல் பறிந்து யாதொன்றும் கூறவியலாத பெருமையுடையவனாக விருக்கின்றான் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் எல்லாப் பொருளிடத்தும் அகத்தும் புறத்து மிருத்தலால் அவனியல் பறிந்து கூற வொண்ணாது காண். என்றவாறு. (சஞ)

அன்றமுத லின்றளவு மறியாப் பருவமதில்
என்றும் போதுவா யிருந்த கிராமயன்காண்.

(இ - ள்.) அறியாப் பருவம் அதில் - யான் ஏதுமறியா திருந்த காலத்திலும் அவன் இருப்பினை ஒரு சிறிது அறிந்திருக்கின்ற காலத்திலுமாக; அன்று முதல் இன்று அளவும் என்றும் - அற்றை நாளி விருந்து இற்றை நாள்காறும் கழிந்த எக்காலத்தினும்; பொதுவாய் இருந்த நிராமயன் காண் - அவன் அடியேன் நடுகின்ற பிணியிலாப் பெருமையுடையன் காண்.

(வி - ம்.) அவன் அநாதி காலமாக என்னுள் இருந்த உறவுடையன். நோயுடைய என்னுள்ளிருந்தும் தூயனாகவே இருந்தனன் என்றவாறு. (சகூ)

சித்தவிகா ரத்தாலே சின்மயனைக் காணமல்
புத்தி கலங்கிப் புகுந்தேன் பொறிவழியே.

(இ - ள்.) சித்த விகாரத்தாலே சின்மயனைக் காணமல் - தோழி எப்பொழுதும் என்னகுவுள் இருப்பானாகவும் அடியேன் என மனமாறுபாட்டாலே அறிவுப் பிழம்பாகிய எம்பெருமானைக் காண மாட்டாமல்; புத்தி கலங்கி - என் நெஞ்சு தடுமாறி; பொறி வழியே புகுந்தேன் — ஐம்பொறி வழியாய் ஐம்புலன்களிலுஞ் சென்று அளவிறந்த அல்லலுற்றேன் காண் !; என்பதாம்.

(வி - ம்.) சித்த விகாரம் - மனமயக்கத்தாலுண்டாகும் மாறுபாடுகள்; அவை பொய்யை மெய்யென்றுணர்தல் என்க. சின்மயன் - அறிவுப்பிழம்பான இறைவன். பொறிவழியாகப் புலன்களிற் புகுந்தேன் என்க. (சஎ)

பத்தி யறியாமற் பாழிற் கவிழ்த்தேண்டி
ஒத்தவிட நித்திரையென் றொத்து மிருந்தேண்டி.

(இ - ள்.) பத்தி அறியாமல் பாழில் கவிழ்த்தேண்டி - தோழி ! எளியேன் அன்பு நெறியே நன்னெறி யென்றறியாமையாலே என் வாழ்நாளனைத்தும் வீணுக்கித் தொலைத்து விட்டேன் காண் !; ஒத்த இடம் நித்திரை என்று ஒத்தும் இருந்தேண்டி - மயக்கமுடைய என்னெஞ்சிற்குப் பொருந்திய இடமே துயிலும் இடமாகும் என்று அந்நெஞ்சுடனே ஒத்தும் நீண்ட நாள் இருந்தொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) பத்தி - இறைவன்பாற் செலுத்தும் அன்பு, அன்பு நெறி. அன்பு நெறியறியாமையால் அவா நெறியிலே வறிதே கிடந்தொழிந்தேன் என்றவாறு. (சஅ)

செத்தாரை யொத்தேண்டி சிந்தை தெளிந்தேண்டி
மற்றுரு மில்லையடி மறுமாற்றங் காணேண்டி;

(இ - ள்.) சிந்தை தெளிந்தேண்டி – பின்னர் என் நல்லாசிரியன் திருவருளாலே என் மன மயக்கொழிந்து மெய்யுணர்வு கைவரப் பெற்றேன் காண்! மற்று யாரும் இல்லை அடி - அப்பொழுது என் நல்லாசிரியனையன்றிப் பிறர் யாரும் எனக்குத் துணையாவார் இலர்

ஆதல் அறிந்தேன்; மறுமாற்றம் காணேண்டி - அவன் அறிவுறுத்த மொழிகட்கு மாறுய சொல் ஒன்றேனுங் கண்டேனிலலை; செத்தாரை ஒத்தேண்டி - பின்னர்க் கருவிகளின் குறும்பியாது மின்மையால் யான் இறந்தாரையே ஒத்துத் திரியலானேன் காண்!

(வி - ம்.) ஆசிரியனருளால் சிந்தை தெளிந்தேன் என்றவாறு. மற்று ஆருமில்லை என்றமையால் அவன் ஒருவனே எனக்குளனு யினன் என்பது பெற்றும். அவன் கூற்றிற்கு மறுமாற்றம் காணேன் என்றவாறு. கருவிகள் ஒழிந்தமையால் சிவயோக மெய்தினேன் என்பார் செத்தாரை ஒத்தேன் என்றுர். (சக)

கல்வியல்ல கேள்வியல்ல கைகாட்டுங் காரணங்காண்
எல்லையள வற்றதடி யெங்கு நிறைந்ததடி.

(இ - ள்.) கை காட்டும் காரணம் - என் ஞானசிரியன் தன் கையாற் காட்டுதற்குக் காரணம் யாதென்னின்; கல்வியல்ல கேள்வி யல்ல - அம்மெய்ப்பொருள் நூற்கல்வியாலாதல் கேள்வியினுலாதல் காணப்படுவதன்றுதலும்; எல்லையும் அளவும் இல்லாததாதலும்; எங் கும் நிறைந்தது அடி. அங்கிங்கெனுதபடி யாண்டும் நிறைந்திருப்பதா தலுமே காண் என்பதாம்.

(வி - ம்.) மெய்ப்பொருள் நூலாலும் கேள்வியாலும் உணர்தற் கியலாப் பொருள் ஆதலானும் எல்லையும் அளவும் இன்றி எங்கும் நிறைந்திருப்பதாதலானும் ஞானசிரியன் கையாற் காட்டுகின்ற அடையாளத்தால் அறிவுறுத்தினன் என்றவாறு. (ந௦)

வாசாம கோசரத்தை மருவியிடங் கோண்டாண்டி
ஆசூச மில்லாண்டி யறிவுக் கறிவாண்டி.

(இ - ள்.) வாசாமகோசரத்தை மருவி இடம் கொண்டாண்டி - நம்பெருமான் நம் மொழியாற் கூற வியலாத திருவருளோடு கூடி அதனையே தனக்கிடமாகவும் கொண்டிருக்கின்றுன் காண்; ஆசூசம் இல்லாண்டி - ஒரு சிறிதும் அழுக்கில்லாதவன் காண்; அறிவுக்கு அறிவாண்டி - உயிராகிய நம்மனேர் அறிவுக்கும் அறிவாக விருப்பவன் காண்.

(வி - ம்.) வாசாம கோசரம் - சொற்கடந்தது. அஃதாவது திருவருள். அவன் எங்கும் நிறைந்தான் என முற்கூறினமையால் மலத்துள்ளும் அவன் நிறைந்தான் எனல் போதருதலின் மலத்துடிருந் தாலும் அவற்றுல் பற்றப்படாதவன் என்பார் ஆசூசமில்லான் என்றுர். ஆசூசம் - அழுக்கு; மலம். (நக)

பத்துத் திசைக்கு மடங்காப் பருமமடி
எத்திசைக்கு மேங்கு மிடைவிடா தேகமடி.

(இ - ள்.) பத்துத் திசைக்கும் அடங்காப் பருமம் அடி - தோழி! அம்மெய்ப் பொருள் சிற்றுயிராகிய நம் சிற்றறிவுள்ளிருப்பதாயினும்

அதன் பருமனோ நம் மறிவிற்கு அப்பாலாய்ப் பத்துத் திசைகளுள் ளேயும் அடங்காப் பெருமைத்துக் காண்; எத்திசைக்கும் எங்கும் இடை விடாது ஏகம் அடி - மேலும் அது எல்லாத்திசைகளுள்ளும் எல்லாவிடத்திலும் சிறிதும் இடையறவின்றி முழுமுதலாகிய ஒரே பொருளுமாகுங் காண்! என்பதாம்.

(வி - ம்.) கிழக்கும் அதன் கோணமும் முதலிய எட்டுத்திசைக ளோடு மேலுங் கீழுஞ் சேர்த்துப் பத்துத்திசை என்றவாறு. பருமம்-பருமைத்தன்மை. பருவம் என்னும் பாடஞ் சிறப்பின்று. திசை கடந்து அதன் பருமம் எல்லையற்ற தாதலேயன்றி எவ்விடத்தும் இடை யறவின்றியும் நிற்கும் என்பது கருத்து. அது தானும் ஒன்றே என்பார் ஏகம் என்றார். (௹உ)

தித்திக்க வூறுமடி சித்த முடையார்க்குப்
பத்திக் கடலுட் பதித்தபரஞ் சோதியடி.

(இ - ள்.) சித்தம் உடையார்க்கு - அச்செம் பொருளின்பால் அன்புள்ளம் உடைய சான்றோர்க்கு என்ஞான்று முவட்டாது தித்திக் குமபடி மெய்யின்பம் சுரக்குங் காண்; பத்திக் கடலுள் பதித்த பரஞ் சோதியடி - எனவே அம் மெய்ப்பொருள் அடியாருடைய அன்புக் கடலினூடே தன்னையே பதித்துக் கொண்டிருக்கும் ஒப்பற்ற ஒளிப் பிழம பென்றுணர்க! என்பதாம்.

(வி - ம்.) சித்தம் ஈண்டு அன்புள்ளம். இன்பம் ஊறும் என்க. ஆதலால் அது பத்திக்கடலுட் டன்னைத்தானே பதித்துக் கொண் டிருக்கும் பரஞ்சோதி என்றுணர்க என்பது கருத்து. (௹௩)

உள்ளுணர்வாய் நின்றவர்த முணர்வுக் குணர்வாண்டி
எள்ளளவு முன்னதிலே ஏறிக் குறையாண்டி.

(இ - ள்.) உள் உணர்வாய் நின்றவர் தம் - தோழி! புறத்தே புலன்களிற் செல்லாதடக்கி தம் முள்ளுணர்வாலே அவனை நாடி யிருக்கும சான்றோருடைய அவ்வுணர்ச்சிக்கும் உள்ளுணர்ச்சியாக நிற்பவனகாண்!; எள்ளளவும் முன்னதிலே ஏறிக்குறையாண்டி - உள்ளுணர்ச்சிக்கும் உள்ளுணர்ச்சியாய் நிற்கும்பொழுது அவ்வடியா ருணர்ச்சியினின்று ஓர் எள்ளளவேனும் மிக்காதல் குறைந்தாதல் இராது அதுவே தானாய் நிற்பன்காண் என்பதாம்.

(வி - ம்.) அன்பினாலே அவனைத் தம்முணர்வா லுணரப்புக்க அடியாருடைய அவ்வுள்ளுணர்ச்சியே தானாகி நிற்பன் என்றவாறு. (௹௪)

தூருந் தலையுமிலான் றோற்ற மொடுக்கமிலான்
ஆரு மறியாம லகண்டமாய் நின்றாண்டி.

(இ - ள்.) தூரும் தலையும் இலான் - தோழி உள்ளுணர்வாலே உணரப்படுவதாகின்ற அடியார் உணர்ச்சியளவுடையனுயினும், அவன்

தொடக்கமும் முடிவும் இல்லாதவன் காண் !; தோற்றம் ஒடுக்கம் இலான் – பிறப்பும் இறப்பும் இல்லாதவன்; ஆரும் அறியாமல் அகண்டமாய் நின்றாண்டி - எனவே அவன் சுட்டறிவுடைய யாராலும் அறியப் படாத பரப்புடையவனாய் நின்றான் என்றறிந்து கொள்க.

(வி - ம்.) இறைவன் அன்புணர்ச்சிக்குப் புலப்படுவான் அறிவிற்குப் புலப்படான் என்பது கருத்து. (௫௫)

எத்தனையோ வண்டத் திருந்தவர்க ளேத்தனைபேர்
அத்தனைபே ருண்டாலும் அணுவுங் குறையாண்டி.

(இ - ள்.) எத்தனையோ அண்டத்து – நம்பெருமானால் படைக்கப்பட்ட அண்டங்கள் எண்ணிறந்தனவாம்; இருந்தவர்கள் எத்தனை பேர் – அவற்றுளெல்லாம் வாழ்கின்றவர்களும் எண்ணிறந்தோராவர்; அத்தனை பேர் உண்டாலும் - அத்துணைச் சான்றோரும் அவனை நுகர்ந்தாலும்; அணுவும் குறையாண்டி - தன்னருளில் ஓர் அணுத்துணையும் குறையப் பெறாதவன் காண் ! என்பதாம்.

(வி – ம்.) எண்ணிறந்த அண்டங்கள் அவனாற் படைக்கப்பட்டன. அவற்றுளெல்லாம் அவனாற் படைக்கப்பட்ட உயிரினங்கட்கும் எல்லையில்லை; எல்லையில்லாத காலம் அவை யெல்லாம் நுகர்ந்தாலும் அணுத்துணையும் குறையாத பேரருட்கடல் அவன என்றவாறு. (௫௬)

வாக்கு மனமும் வடிவுமிலா வான்பொருள்காண்
போக்கும் வரவுமிலான் பொருவரிய பூரணன்காண் !

(இ - ள்.) வாக்கும் மனமும் வடிவும் இலா வான்பொருள் காண்- தோழி! நங்கள் இறைவன் தனக்கென்று மொழியும மனமும உருவமும் இல்லாத உயரிய அறிவுப் பிழம்பா யிருப்பவன் காண் !; போக்கும் வரவும் இலான்-போதலும் வருதலும் இல்லாமைக்குக் காரணமான; பொருவு அரிய பூரணன் காண் - தனக்குவமை யிலலாத முழுமை யுடையோன் காண்.

(வி - ம்.) இறைவன் மொழி முதலிய கருவிகளின் உதவியையும் வேண்டுவானல்லன்; எங்கும் நிறைந்திருத்தலால் போக்கும் வரவும் செய்ய வேண்டாதவன் என்பதாம். போக்கும் வரவுமிலான் என்றதற்குப் பூரணன் என்றது குறிப்பேதுவாய் நின்றது. (௫௭)

காட்சிக் கெளியான்காண் கண்டாலும் காணான்காண்
மாட்சிமனம் வைத்தார்க்கு மாணிக்கத் துள்ளொளிகாண்.

(இ - ள்.) மாட்சி மனம் வைத்தார்க்கு! - தோழி! அன்பினால் மாட்சிமையுடைய தம் நெஞ்சத்தைத் தன்பால் வைத்த மெய்யடியார்க்கு : காட்சிக் கெளியான் காண் - மிகவும் எளிதாகக் காட்சி கொடுப்பவன் காண் !; மாணிக்கத்துள் ஒளி - மாணிக்க மணியின் உள் விளங்கும் ஒளிபோன்று யாண்டும் நீக்கமற நிறைந்த அப்

பெருமான்; கண்டாலும் காணான் - காட்சிக் கெளியனாகக் காணப் பட்ட விடத்தும் அவன் நம்மால் முழுதும் காணப்படாதவனுமாகவே இருப்பன் காண்! என்பதாம்.

(வி - ம்.) இறைவன் அன்புடையார் காட்சிக்கு எளியன். ஆயினும், யாவரானும் முழுதும் காணப்படாதவனுமாவன் என்றவாறு. இதனை,

"கடலலைக்கே யாடுதற்குக் கைவந்து நின்றுங்
கடலளக்க வாராதாற் போலப்—படியில்
அருத்திசெய்த வன்பரைவந் தாண்டதுவு மெல்லாங்
கருத்துக்குச் சேயனாய்க் காண்."

எனவரும் திருக்களிற்றுப்படியாரானு முணர்க. (கஅ)

வாழ்த்தி யவனை வழிபட்டால் மன்னுயிர்கள்
தோற்ற வரியான்காண் சொல்லிறந்த சோதியன்காண்.

(இ - ள்.) மன் உயிர்கள் அவனை வாழ்த்தி வழிபட்டால் - உலகத்தே நிலைபெற்ற உயிர்கள் அம்முதல்வனை அன்போடு வாழ்த்தி வழிபாடு செய்தவிடத்தும்; தோற்ற அரியான் - அவ்வுயிர்களின் புறக்கண்ணிற்குத் தோற்றுதற்கு அருமையுடையான் காண்; சொல் இறந்த சோதியன்காண் - அஃதெற்றாலெனின் அவன் சொல்லொணாத பேரொளிப் பிழம்பாகலின் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் அன்பர் புறக்கண்ணிற்குக் காட்சி நல்குதலிலன். அக்காட்சியை உயிர்களின் புறக்கண் காணவியலாமைக்குக் காரணம், அக்கண் கண்டு பொறாத பேரொளியாக அவன் இருப்பதேயாம் என்றவாறு. எனவே, ஒரோவழி அவன் அடியார் புறக்கண்ணிற்குத் தோன்றுதல் வேண்டுமிடத்து அக்கண் பொறுக்குமாறு அருள் வடிவுகொண்டே தோன்றுவன் என்பது கருத்தாயிற்றென்க. (கக)

ஐய மறுத்தவனை யாராய்வா ருண்டானால்
வையகத்தே வந்து மலர்ப்பாதம் வைத்திடுவான்.

(இ - ள்.) ஐயம் அறுத்து அவனை ஆராய்வார் உண்டானால் - இறைவன் உளனோ இலனோ என்னும் ஐயத்தினின்று நீங்கி உளன் என்று தெளிந்து அவனியல்பினை ஆராய்ந்துணர வேண்டும் என்று விரும்புவாருளராய விடத்து; வையகத்தே வந்து மலர்ப்பாதம் வைத்திடுவான் - மக்களுருவில் ஞானாசிரியனாக இந்நிலவுலகத்தே வந்து மலர்போன்ற தன் திருவடியை ஈந்து அவர் மலமறுத்து வீட்டின்பம் நல்குவன் என்பதாம்.

(வி - ம்.) மக்களாய்ப் பிறந்தோர்க்கும் இறைவன் உண்டோ இல்லையோ என்னும் ஐயந்தீர்தலும் அரிதாம்; ஐயந்தீர்ந்து உண்டென்ற தெளிவடைதலே அந்நெறி பிடித்தொழுகற்குக் காரணமாம். இத்தெளிவு பிறந்து அவனியல்புணர விரும்புமிடத்து அவனே

அவர்க்கு ஆசிரியனாய் வந்து மெய்புணர்வித்துத் தன் திருவடியை (வீடுபேற்றினை) அளிப்பன் என்றறிவுறுத்தியவாறு.

இதனை,

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"

(குறள் - கூ௫௪)

எனவரும் திருவள்ளுவர் பொன்மொழியானு முணர்க. (௬0)

அணுவுக்கு மேருவுக்கு மகம்புறமாய் நின்றான்காண்
கணுமுற்று ஞானக் கரும்பின் றெளிவான்காண்.

(இ - ள்.) அணுவுக்கும் மேருவுக்கும் அகம்புறம் ஆய் நின்றான் காண் - தோழி! மிகச் சிறிய அணுவிற்கும் மிகப்பெரிய மேருமலையினுக்கும் உள்ளும் புறத்தும் நிற்கின்றவன் நம் பெருமான் காண்!; கணுமுற்றும் கரும்பின் ஞானத் தெளிவான் காண்! - கணுக்களோடு முதிர்ந்துள்ள கரும்பின் சாற்றினை வடித்த தெளிவு போலத் தித்திக்கும் மெய்யுணர்வின் தெளிவாகியவன் காண்!; என்பதாம்.

(வி - ம்.) நம்மிறைவன் மிகச்சிறிய அணுவின் அகத்தும் புறத்தும் இருப்பவன் அங்ஙனமே மிகப்பெரிய மேருமலையினகத்தும் புறத்து மிருப்பவன் என்றவாறு. (௬௧)

எந்நாளு மிந்நாளு மிப்படியா யப்படியாய்ச்
சொன்னாலுங் கேளான்காண் தோத்திரத்திற் கொள்ளான்
காண்.

(இ - ள்.) இந்நாளும் எந்நாளும் இப்படியாய் அப்படியாய்ச் சொன்னாலும் கேளான் காண் - இந்தக் காலத்திலாதல் அல்லது எந்தக் காலத்திலாதல் அவனியல்பினை இப்படியிருக்கும் என்றும் அப்படியிருக்கும் என்றும் சமயவாதிகள் தத்தம் மனம் போனவாறு கூறினாலும் அவற்றை ஏன் என்று கேட்பானல்லன் காண்!; தோத்திரத்திற் கொள்ளான் காண் - அவனியல்பும் பெயரும் கூறிப் பாடுகின்ற புகழ்மாலையின்கண் அடங்காப் பெருமையுடையவன் காண்!; என்பதாம்.

(வி - ம்.) சமயக் கணக்கர் தன்னை எவ்வாறு கூறினும் கூறுக என்றிருப்பதல்லது அவற்றைக் கேட்டு மகிழ்தலோ வெறுத்தலோ இல்லாதவன்; அவனை எத்துணைப் புகழ்ந்து பாடினும் அவன் புகழ் அடங்காது என்றவாறு. (௬௨)

ஆத்தாளுக் காத்தாளா மப்பனுக்கு மப்பனுமாம்
கோத்தார்க்குக் கோத்தநிலை கொண்ட குணக்கடல்காண்.

(இ - ள்.) ஆத்தாளுக்கு ஆத்தான் ஆம் அப்பனுக்கும் அப்பனும் ஆம் - தோழி! நம் பெருமான் தாய்க்கு அவள் தன் தாய்த் தன்மையா யிருப்பவன் தந்தைக்கு அவனின் தந்தைத் தன்மையா யிருப்பவன்; கோத்தார்க்குக் கோத்த நிலைகொண்ட குணக்கடல் காண் - இன்னும் உறவினர் பாலும் அவரவர் கொண்ட உறவுத் தன்மையாக விருப்ப வனும் அவனே காண்! என்பதாம்.

(வி - ம்.) உயிர்களை ஈன்று வளர்க்கும் தாய் உயிரின்கண் தாய்மையாகவும் தந்தையுயிரின்கண் தந்தைமையாகவும் மாமன் மாமி முதலிய உறவினர்பால் அவ்வுறவுத் தன்மையாகவும் இறைவனே விளங்குகின்றான் என்றவாறு. கோத்தார் - தொடர்புடையோர்; சுற்றத்தார். (கூகூ)

இப்போ புதிதோடி யெத்தனைநா ளுள்ளதடி
அப்போதைக் கப்போ தருளறிவு தந்தாண்டி.

(இ - ள்.) இப்போ புதிதோடி - நம் பரம்பொருள் நாமுணரு கின்ற இப்பொழுது நம்முள் தோன்றிய புதுப்பொருளோ காண்! புதியதன்று; உள்ளது எத்தனை நாள் - நமக்கியன்ற வாழ்நாள்கள் பலப்பல பிறப்பினும் எத்தனையுண்டோ அத்துணை நாளும் அது நம் மோடுளது காண்; அப்போதைக்கு அப்போது அருள் அறிவுந் தந்தாண்டி - யாம் அறியா விடினும் அக்காலங்களி லெல்லாம் அவ்வப் போதிற்கு வேண்டிய திருவருளும் அறிவும் நமக்கு வழங்கியே வருகின்றான் காண்! என்பதாம்.

(வி - ம்.) இறைவன் உளன் என்று யாம் அறிகின்ற இப் பொழுது தான் அவன் புதியனாக உளனாயினன் அல்லன். என்று யாமுளேம் ஆயினேமோ அன்று முதல் எப்பொழுதும் அவன் நம் முடனே இருப்பவனே காண்! அன்றியும் யாம் அஃறிணையுயிராய்ப் பிறந்த பொழுதும் உயர்திணை ஆகிய பொழுதும் யாம் வேண்டா திருக்கவேயும் அருளும் அறிவும் வழங்கி வந்திருக்கின்றான் என்ற வாறு. (கூஉ)

பற்றற்றார் பற்றாகப் பற்றி யிருந்தாண்டி
குற்ற மறுத்தாண்டி கூடி யிருந்தாண்டி.

(இ - ள்.) பற்று அற்றார் பற்று ஆகப் பற்றி இருந்தாண்டி - உலகத்தின்கண் புலன்களிலே பற்றறுத்த மேலோர்க்குத்தானே பற்றுக் கோடாக விருத்தலோடு அவர் மீண்டும் உலகினைப் பற்றாதபடி தானும் அவர்களைத் தன்னருளாலே பற்றிக் கொண்டிருந் தான் காண்!; குற்றம் அறுத்தாண்டி - அம்மெய்யன்பர் வினைகளையும் அறுத்தனன் காண்; கூடி இருந்தாண்டி - வினையற்ற பின்னர் அவரோடு இரண்டறக் கலந்து மிருந்தான் காண்! என்பதாம்.

(வி - ம்.) இக்கருத்தினை,

" சலமிலனாய் ஞானத்தால் தனை யடைந்தார் தம்மைத்
தானாக்கித் தலைவன் அவர் தாஞ்செய்வினை தன்னால்

நலமுடனே பிறர்செய்வினை யூட்டி யொழிப்பானுய்
நணுகாமல் வினையவரை நாடிக்காப்பன் ”

எனவரும் சித்தியாரினும் (சுப - ௯௦எ) காண்க. (௬௫)

வெட்ட வெளியிலேனை மேவி யிருந்தாண்டி
பட்டப் பகலிலடி பார்த்திருந்தா ரெல்லோரும்.

(இ - ள்.) பட்டப் பகலில் - நண்பகலில்; வெட்ட வெளியில் - வெறும் வெளியிலே; எனை மேவி இருந்தாண்டி - அப்பெருமான் அடிச்சியோடு புணர்ந்திருந்தானடி; எல்லோரும் பார்த்திருந்தார் — இதனை அமரர் எல்லாம் பார்த்து ஏக்கற்றிருந்தனர் காண்! என்பதாம்.

(வி - ம்.) வெட்டவெளி - வாலறிவுப் பரப்பு. மலவிருள் அகன்ற தூய நிலையைப் பட்டப்பகல் என்றார். எல்லோரும் என்றது தேவர்களை. இப்பேறு நமக்குக் கிடைத்திலதே என்று ஏங்கி யிருந்தார் என்பது கருத்து. (௬௬)

வாழ்வான வாழ்வெனக்கு வந்ததடி வாழாமல்
தாழாமற் ருழ்ந்தேண்டி சற்றுங் குறையாமல்.

(இ - ள்.) வாழாமல் தாழ்ந்தேண்டி - தோழி! யான் வாழ்க்கை யின்றி நீண்ட காலம் வீழ்ச்சியுற்றுக் கிடந்தேன் காண்; தாழாமல் சற்றுங் குறையாமல் - அவ்வாறு பின்னும் வீழ்ச்சியுருதபடி சிறிதும் குறையாமலே; வாழ்வான வாழ்வு எனக்கு வந்ததடி - அவன் அருளாலே மெய்யாய வாழ்க்கை அடியேனுக்குத் தானே வந்தெய்தியது காண்! என்பதாம்.

(வி - ம்.) இது கொண்டுகூட்டுப்பொருள்கோளுடைய செய்யுள். பிற ரெல்லாம் இவ்வாறு பொருள்கூற வறியாது பொருந்தாப் பொருளே கூறினர். அவன் அருள் பெருத காலமெல்லாம் யான் வாழ்தலின்றி வீழ்ச்சியே எய்தினேன் அவனருள் கிடைத்த பின்னரே மெய்வாழ்வும் கை வந்தது என்பது கருத்து. (௬௭)

பொய்யான வாழ்வெனக்குப் போதுமெனக் காணேண்டி
மெய்யான வாழ்வெனக்கு வெறும் பாழாய் விட்டதடி.

(இ - ள்.) பொய் ஆன வாழ்வு எனக்குப் போதும் எனக் காணேண்டி - தோழி! இவ்வுலகத்துப் பொய் வாழ்க்கை போதிய தாம் என்னும் அமைதி எனக்கு வரக்கண்டிலேன்; மெய்யான வாழ்வு - அது வருமுன்னரே உண்மையான வாழ்வு வந்தெய்தியது அது தானும்; எனக்கு வெறும் பாழ் ஆய்விட்டதடி - எனக்கு அது தானும் வெறும் பாழாகவே ஆகி விட்டது காண்! என்பதாம்.

(வி - ம்.) யான் உலகத்துப் பொய் வாழ்க்கையி லழுந்தியிருக்கும் போதே திருவருள் எனக்கு மெய்வாழ்க்கையை வழங்கியது. அது

வெறும் பாழாகவே முடிந்தது என்றவாறு. வெறும் பாழ் என்றது தூய நிலையினை. யான் பக்குவம் எய்து முன்னரே திருவருள் என்னை வாழ்வித்தது என அருளைப் பாராட்டிய படியாம். (கூஅ)

கன்னி யழித்தவனைக் கண்ணாரக் கண்டேண்டி
என்னியல்பு நானறியேன் ஈதென்ன மாயமடி.

(இ - ள்.) கன்னி அழித்தவனைக் கண் ஆரக் கண்டேண்டி - தோழி என் கன்னிமையை அழித்து என்னைக் கூடிய தலைவனை யான் என் கண்கள் இன்பத்தால் நிரம்பும்படி கண்கூடாகக் கண்டேன் காண்!; என் இயல்பு நான் அறியேன் - அவனைக் கண்ட பின்னர் என் இயல்பினை யான் ஒரு சிறிதுங் கண்டிலேன் காண்!; ஈது என்ன மாயம் அடி - இங்ஙனமானது என்ன மாயவித்தையோ? அறிகின்றிலேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) கன்னி - ஈண்டு உயிர் இறைவனை யுணராத நிலைமை என்க. உயிர் தன்னைச் சிவமாகவே ஞானக் கண்ணாற் காண்டலின் பின்னர்த் தன் முன்னைய உயிரியல்பினைக் காணாதாதலின், கண்ணாரக் கண்டேன் என்னியல்பு யானறியேன் என்றபடியாம். காணப்பட்டா ரிருப்பக் கண்டோர் மறைந்து போதலின் இஃதொரு மாயம் போலும் என வியந்தவாறு. (கூகூ)

சொல்லாலே சொல்வதற்குச் சொல்லவா யில்லையடி
எல்லாருங் கண்டிருந்து மிப்போ தறியார்கள்.

(இ - ள்.) சொல்லாலே சொல்லுதற்குச் சொல்ல வாய் இல்லை அடி - யான் அவனைக் கண்டபின் என்னைக் காணமல் அவனே யானு யிருந்த இவ்வியத்தகு நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லுதற்கு எனக்கு நாவன்மை யில்லையடி; எல்லாரும் கண்டிருந்தும் இப்போது அறியார் கள் - யானொருத்தி மட்டும் அல்லேன் எல்லாருமே இந்த நிகழ்ச்சி யினைக் கண்டிருப்பாரேனும் கன்னியாயிருக்குமிப் பருவத்திலே அதன் சிறப்பினை அறியமாட்டுவா ரல்லர் காண் என்பதாம்.

(வி - ம்.) இறைவனோடு கலந்திருத்தல் எல்லாவுயிர்க்கும் இயல் பாகவே யிருந்தும் அறியாமைக் காலத்தே அவனைக் காண்கிலர். கண்டவரோ சொல்வதுஞ் செய்யார் என்றவாறு. எனவே அது வானால் அதுவே சொல்லும் என்பது கருத்து என்க. (எ0)

கண்மாய மிட்டாண்டி கருத்து மிழந்தேண்டி
உண்மாய மிட்டவனை யுருவழியக் கண்டேண்டி.

(இ - ள்.) கண் மாயம் இட்டாண்டி கருத்தும் இழந்தேண்டி - தோழி! நம்பெருமான் தன் கண்ணாலே என்னை நோக்கி யாதோ ஒரு வித்தை செய்தான் அப்பொழுதே யான் என் கருத்தனைத்தும் இழந்து விட்டேன் காண் !; உள் மாயம் இட்டவனை உருவழியக் கண்டேண்டி - தன் நோக்காலேயே என்னுள்ளத்தே இத்தகைய மாயவித்தை செய்த

அப்பெருமானை யான் என்னுடைய உருவு அழிந்த பொழுதே காண்பேறு பெற்றேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) கண் மாயம் என்றது திருவருணோக்கத்தை; (நயன தீக்கையை). கருத்தும் இழந்தேன் என்றது சகலாவத்தை நீர்ந்ததனை. உருவு - உயிரியல்பு. (எக)

என்னசோல்லப் போறேனு னிந்த வதிசயத்தைக்
கன்னி யிளங்கமுகு காய்த்ததடி கண்ணுர.

(இ - ள்.) நான் இந்த அதிசயத்தை என்ன சொல்லப் போறேன் - தோழி! அவன் கண்மாய மிட்ட பின்னர் நிகழ்ந்ததொரு வியத்தகு நிகழ்ச்சியினைப்பற்றி என்னென்று கூறுவேன் காண்!; கன்னி இளங்கமுகு கண் ஆரக் காய்த்ததடி - அது காறும் பயனின்றி யிருந்த இளங்கமுகு கண்கூடாகக் காய்த்துக் குலுங்கியது காண்!; என்பதாம்.

(வி - ம்.) ஞானசிரியன் அருணோக்கால் உயிர் பிறவிப் பயனைப் பெற்றது என்றவாறு. அவ்வநுபவம் புதிதாகவும் சொல்லவியலாதது மாக இருந்தது என்க. (எஉ)

ஆர்ந்தவிட மத்தனையு மருளா யிருக்குமடி
சார்ந்த விடமேல்லாஞ் சவ்வாது மணக்குதடி.

(இ - ள்.) ஆர்ந்த இடம் அத்தனையும் அருளாய் இருக்கும் அடி - அவன் உண் மாயம் இட்ட பின்னர் யானுகர்ந்த இடமெங்கும் அருளமிழ்தமாகவே இருப்பதாயிற்று; சார்ந்த இடம் எல்லாம் சவ்வாது மணக்குதடி-யான் சென்ற விடமெல்லாம் சவ்வாது மணமே கமழ்வதாயிற்று என்பதாம்.

(வி - ம்.) அருளமிழ்தம் என்க. சவ்வாது மணம் என்றது, சிவமணம் என்றவாறு. (எ௩)

இந்தமண மேங்கு மியற்கைமண மேன்றறிந்து
அந்தச் சுகாதீதத் தருட்கடலில் மூழ்கினண்டி.

(இ - ள்.) இந்த மணம் எங்கும் இயற்கை மணம் என்று அறிந்து- இந்தச் சவ்வாது மணமே (சிவமணமே) இயல்பாக என்று மிருக்கின்ற கடவுள் மணமாகும் என்றுணர்ந்து; அந்தச் சுகாதீதத்து அருட் கடலில் மூழ்கினண்டி-அந்தப் பேரின்ப மயமான திருவருட் கடலிலே மூழ்கினேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) இந்த மணம் என்றது முன் கூறிய சவ்வாது மணத்தை. இயற்கை மணம் - கடவுள் மணம். சுகாதீதம்-பேரின்பம். (எச)

இரும்பினுறை நீர்போல வேனைவிழுங்கிக் கோண்டாண்டி
அரும்பிலுறை வாசனைபோ லன்றே யிருந்தாண்டி.

(இ - ள்.) இரும்பில் உறை நீர்போல - கொல்லுலையிற் காய்ச்சிய இரும்பினை நீரிற் றோய்த்துழி அவ்விரும்பாற் கவரப்பட்டு அதனூடே கரந்துறைகின்ற அந்த நீரைப்போன்று; எனை விழுங்கிக் கொண்டாண்டி - அவன் என்னைக் கவர்ந்து தன்னுள் மறைத்துக் கொண்டானடி; அன்று அரும்பில் உறை வாசனைபோல் இருந்தாண்டி - அவன் என் அறியாப் பருவத்தினும் அரும்பினூடே மணம் கரந்திருக்குமாறு போல என்னுள்ளே கரந்திருந்தானடி.

(வி - ம்.) இன்று என்னைத் தன்னுட் கரந்திருக்கச் செய்தனன் அன்று அவனே என்னுட் கரந்துறைந்தனன். ஆதலால் அவன் நமக்கு விருந்தினன் அல்லன் என்பது கருத்து. (எ[illegible])

அக்கினிகற் பூரத்தை யறவிழுங்கிக் கோண்டாற்போல்
மக்கினம் பட்டுள்ளே மருவ விருந்தாண்டி.

(இ - ள்.) அக்கினி கற்பூரத்தை அறவிழுங்கிக் கொண்டாற்போல் - நெருப்பானது தான்பற்றிய கருப்பூரத்தின் உருவம் முழுதும் அற்றுப் போகும்படி தன்னுள் மறைத்துக் கொள்ளுதல் போல்; மக்கினம் பட்டு உள்ளே மருவி இருந்தாண்டி - அடியேன் இயல்பு அழிந்து அவனுள்ளே கரந்துறையும்படி தானேயாக இருப்பானயினன் என்பதாம்.

(வி - ம்.) மக்கினம் படுதல் - அழிதல். மருவி யிருந்தாண்டி என்னும் பாடத்தை மருவ இருந்தாண்டி என்பதன் திரிபாகக் கொள்க. (எசு)

கடனீரு மாறும்போற் கலந்துகரை காணேண்டி
உடலு முயிரும்போ லுட்கலந்து நின்றாண்டி.

(இ - ள்.) ஆறும் கடல் நீரும்போல் கலந்து கரை காணேண்டி - தோழி! கரைகளினூடே இடுக்கட் பட்டொழுகிய யாற்று நீரானது கடலிற்புக்குழி அக்கடல் நீரும் யாற்று நீரும் வேற்றுமையின்றிக் கலந்து ஒன்றாகிப் பின் யாற்றுநீர் கரை காணாதவாறு போல யானும் கரைகாணாது ஒன்றினேன்; உடலும் உயிரும் போல் உள்கலந்து நின்றாண்டி - அவற்றானும் உடலும் உயிரும் ஒன்றி நின்றாற் போன்று என்னுட் கலந்தொன்றி நின்றான் காண்! என்பதாம்.

(வி - ம்.) கடல் நீரும் யாற்றுநீரும் இடையறவின்றிக் கலத்தற்கும் உடலும் உயிரும் இரண்டறக் கலத்தற்கும் உவமைகள் என்க. (எஎ)

போன்னுமுரை மாற்றும்போற் போருவரிய பூரணன்காண்
மன்னுமனு பூதியடி மாணிக்கத் துள்ளோளிபோல்.

(இ - ள்.) பொருவு அரிய பொன்னும் உரை மாற்றும் போல் பூரணன் காண் - தோழி! ஒப்பற்ற பொன்னும் அதனையுரைத்துக் காணின்ற அதன் மாற்றும்போல யாண்டும் நிறைந்திருப்பவன் காண்!;

மாணிக்கத்துள் ஒளிபோல் அனுபூதி மன்னுமடி - மாணிக்கத்தினுடு ஒளி யாண்டும் எப்பொழுதும் காணப்படுதல் போன்று அச்சிவாநுபவ மானது உயிரின் பால் நிலை பெற்று நிற்கும் காண்! என்பதாம்.

(வி - ம்.) பொன்னும் அதன் மாற்றும் போல் தானும் அருளும் ஒன்றுகிப் பொருவரிய நிறைவானவன் எனலுமாம்.

அநுபூதி - நுகர்ச்சி; சிவா நுபவம். உயிரும் அநுபவமும் மணியும் ஒளியும் போலும் என்க. (௭அ)

கங்குகரை யில்லாண்டி கரைகாணுக் கப்பலடி
எங்குமள வில்லாண்டி யேகமாய் நின்ருண்டி.

(இ - ள்.) கங்கு கரை இல்லாண்டி - தோழி! தனக்கொரு விளிம்பும் கரையும் இல்லாத திருவருட் கடலாகத் திகழ்பவனடி; கரை காணுக் கப்பலடி - உயிரானது அத்திருவருட் கடலில் கரை காணுமல் இடையருது இயங்கும் கப்பலேயே ஒக்குங் காண்!; அளவு எங்கும் இல்லாண்டி - தனக்கோர் எல்லை எவ்விடத்தும் இல்லாதவனடி; ஏக மாய் நின்ருண்டி - அவன் தனிப்பொருளாய் யாண்டும் நிறைந்து நிற்பவனடி.

(வி - ம்.) இது வீடுபெற்ற உயிர்களின் இன்பம் முடிவுரு மைக்குக் காரணம் கூறியவாறு. கப்பல் - உயிர்க்குவமை. (௭௯)

தீவகம்போ லென்னைச் சேர்ந்தபர சின்மயன்காண்
பாகவமோன் றில்லாண்டி பார்த்திடமேல் லாம்பரங்காண்.

(இ - ள்.) தீவகம்போல் என்னைச் சேர்ந்த பரசின்மயன் காண் - தோழி! பார்வை மிருகம் போலத் தானும் மக்களுருக்கொண்டு வலிய வந்து என்னேடு கூடிய அறிவுப் பிழம்பானவன் காண்!; பாவகம் ஒன்று இல்லாண்டி - அவனருளாலே அவன்ருள் அடைதலின்றி உயிர் கள் தம் பாவனையாலே அவனை எய்துதற்கு ஒரு வழியும் இல்லாதவன் காண்! என்பதாம்.

(வி - ம்.) தீவகம் - பார்வை மிருகம்; அஃதாவது மான் பிடிப் போர் மானைக்காட்டி அதனை வலையிற் சிக்கவைப்பதுபோல இறைவன் மக்களுருக்கொண்டு நல்லாசிரியனுய் அன்பர்களைத் திருவருளில் அழுத்துவன் ஆதலின் இவ்வாறு கூறினர்.

இதனை,

"பார்வையென மக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணுர் புவி"

திருவருட் பயன் - ௬௫.

என்பதனுனுணர்க.

பாவகம் - பாவனை. இறைவனைப் பாவனை வாயிலாக எய்துதற்கு வழியில்லை என்பது இரண்டா மடியின் கருத்து. இவ்வுண்மையை

"பாவிக்கின் மனுதி வேண்டும்...........பாவிக்க வேண்டா ஆண்ட பரனருள் பற்றினோர்க்கே" எனவரும் சிவப்பிரகாசத்தா னுணர்க. (அசு) (அ௦)

உள்ளார்க்கு முள்ளாண்டி யூருமில்லான் பேருமில்லான்
கள்ளப் புலனறுக்கக் காரணமாய் வந்தாண்டி.

(இ - ள்.) உள்ளார்க்கும் உள்ளாண்டி - தோழி! இறைவன் தன்னை நினையாத மடவோர் உள்ளத்தினும் உறைபவனடி; ஊரும் இல்லான் பேரும் இல்லான் - அவன் தனக்கென்று யாதேனுமோர் ஊராதல் பேராதல் இல்லாதவன்; கள்ளப்புலன் அறுக்கக் காரண மாய் வந்தாண்டி - ஊரும் பேரும் இல்லாதவனுயினும் அன்பருக்கு வஞ்சஞ் செய்து அவரைத் துன்பத்தில் அழுத்தும் ஐம்புலன்களை வேரோடறுத்தற்கு ஊரும் பேரும் காரணங்களாய் மேற்கொண்டு வந்தானடி என்பதாம்.

(வி - ம்.) உள்ளார் - தன்னை நினையாதவர். ஊரும் பேரும் இயல்பாகவே அவனுக்கில்லை. ஆயினும் அன்பர் புலனறுத்தற்கு அவை உள்ளவனாக வந்தான் என்றவாறு. (அக)

அப்பிறப்புக் கெல்லாம் அருளா யமர்ந்தாண்டி
இப்பிறப்பில் வந்தா னிவனுகு மெய்ப்பொருள் காண்.

(இ - ள்.) அப்பிறப்புக்கு எல்லாம் அருள் ஆய் அமர்ந்தாண்டி - தோழி! நந்தம் கழிந்த பிறப்புக்களி லெல்லாம் நம்பெருமான் நம் முள்ளே திருவருள் மாத்திரையாயிருந்து அவ்வப்போது நமக் குணர்த்த வேண்டுவனவற்றை உணர்த்தி வந்தனன்; இப்பிறப்பில் வந்தான் இவன் - இந்தப் பிறப்பிலே நல்லாசிரியனுய் மக்களுருவில் நம்மெதிரே வந்தவனுகிய இவனே; மெய்ப்பொருள் ஆகும் காண் - யாமுணர வேண்டிய அந்த மெய்ப்பொருளாவான் காண் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் உயிர்களின் அறிவு இச்சை செயல்களை ஒருமுகப்படுத்தி அவற்றிற்குப் பாகம் வருவிப்பது திரோதாயி என்னும் சிவசத்தியே ஆகலான் அப்பிறப்புக் கெல்லாம் அருளாயமர்ந் தாண்டி என்றார். மலம் பரிபாகம் வந்தவர்க்குச் சத்திநிபாதம் மேவும் அக்காலத்தே இறைவனே ஞானுசிரியனுய் உருவங்கொண்டு தானே வந்து மெய்யுணர்த்துவன் என்றும் ஓதுதல்பற்றி 'இப்பிறப்பில் வந்த இவன் மெய்ப்பொருள் ஆகும்,' என்றார். (அஉ)

நீரொளிபோ லெங்கு நிறைந்த நிராமயன்காண்
பாரொளிபோ லெங்கும் பரந்த பராபரன்காண்.

(இ - ள்.) நீர் ஒளிபோல் எங்கும் நிறைந்த நிராமயன் காண் - தோழி! இறைவன் நீரின்கண் ஒளி யாண்டும் நிறைந்திருப்பது போல எவ்விடத்தும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இன்பப் பிழம்பானவன் காண்!; பார் ஒளி போல் எங்கும் பரந்த பராபரன்காண் - நிலத்திலே

யாண்டும் பரவியுள்ள ஞாயிற்ருெளிபோல எங்கும் பரவி யிருக்கின்ற வன்காண் என்பதாம்.

(வி - ம்) நீரொளி இறைவன் பொருள்களின் அகத்தே நிறைந்திருத்தற்கும் பாரொளி புறத்தே பரவி அவற்றைக் கவிழ்ந்துகொண்டிருத்தற்கும் உவமைகள் என்க. (அ௩)

நூலா லுணர்வரிய நுண்மையினு நுண்மையன்காண்
பாலாறு சர்க்கரைபோற் பரந்தபரி பூரணன்காண்.

(இ - ள்.) நூலால் உணர்வு அரிய நுண்மையினு நுண்மையன் காண் - கல்வி யறிவினல் அறிதற்கான நுண் பொருளினுங் காட்டில் அவன் நுண்ணியனு யிருத்தலின் அவன் அவ்வறிவிற்குப் புலப்படான் காண்; பால் ஆறு சர்க்கரைபோல் பரந்த பரிபூரணன் காண்- ஆயினும் அன்புணர்வினலே உணரும் மெய்யடியார் உளத்தில் பாலிற் கலந்தாற்றிய சர்க்கரையைப் போன்று யாண்டும் பரவியின்பஞ் செய்கின்ற முழுமுதற் பொருளாவன் காண் என்பதாம்.

(வி - ம்) மெய்ப்பொருள் நூலறிவால் அறியப்படாது, அன்புணர்ச்சியுடையார் உயிரினூடே பரவி நின்று அவரால் முழுமையாக உணரப்படுபவன் என்றவாறு. (அ௪)

உளக்கண்ணுக் கல்லா தூன்கண்ணு லோருமதோ
விளக்குச் சுடரொளிபோன் மேவி யிருந்தாண்டி.

(இ - ள்) விளக்குச் சுடர் ஒளிபோல் மேவி யிருந்தாண்டி - தோழி! சிவபெருமான் தானே வந்து அன்பருளமாகிய தகழியிலே ஏற்றிய விளக்கினது ஒளிபோல இருந்தான் காண்; உளக்கண்ணுக்கு அல்லாது ஊன் கண்ணல் ஓரும் அதோ - ஆயினும் அம்மெய்ப்பொருள் அன்பருடைய அகக்கண்ணலுணரப் படுவதல்லது; புறக்கண்ணல் அறியப்படுவதன்று காண் என்பதாம்.

(வி - ம்) இதனை 'ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக்கண்ணினில் சிந்தை நாடி .....பாசம் ஒருவத் தண் நிழலாம்பதி' (சிவஞான - சூ க). என்பதனலும் உணர்க. (அ௫)

கல்லு ளிருந்த கனலொளிபோல் காரணமாய்ப்
புல்லி யிருந்தும் பொருவரிய பூரணன் காண்.

(இ - ள்) கல்லுள் காரணமாய் இருந்த கனல் ஒளிபோல் புல்லியிருந்தும்-மணியினுள் அதன் சிறப்புக்குக் காரணமாக இருந்த சுடர் நின்ற அதன் ஒளிபோன்று அவன் நம்முயிரினைத் தழுவியிருந்தும்; பொருவு அரியபூரணன் காண் - தனக்குவமையில்லாத முழுமுதல்வனும் ஆவான் காண் என்பதாம்.

(வி - ம்.) அவன் நம்முள் நாமாக அணுக்கனு யிருப்பினும் உவமை யில்லாப் பெரியோன் ஆவன் என்பது கருத்து. (அ௬)

போற்பூவும் வாசனைபோற் போதம் பிறந்தார்க்குக்
கற்பூவும் வாசனைபோற் காணுக் கயவர்க்கு.

(இ - ள்.) காணுக் கயவர்க்கு - அவனியல்பறியாத கீழோர்க்கு அவன்; கற்பூவும் வாசனை போல் - கல்லாலியன்ற மலரின்கண் மணம் போல்பவன்; போதம் பிறந்தார்க்கு - மெய்யுணர்வு பிறந்த மேலோர்க்கு அவன்; பொன்பூவும் வாசனைபோல்-அழகிய மலரின் கண் மணம்போல யாண்டும் புலப்படுவான்காண் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் மெய்யுணர்வார்க்கே புலப்படுவான். ஏனை யோர்க்குச் சிறிதும் புலப்படான் என்றவாறு. (அஎ)

மைக்குழம்பு முத்தும்போன் மருவிமற வாதவர்க்குக்
கைக்குட் கனியாகும் கருவறுத்த காரணர்க்கு.

(இ - ள்.) மறவாதவர்க்கு - இறைவன் தன்னை மறவாதிருக்கும் சான்ரூேர் உளத்தின்கண்; மைக்குழம்பும் முத்தும்போல் மருவி-கரிய மையினூடே மறைந்து கிடக்கும் முத்துப்போல நன்கு வெளிப்படா தடங்கியிருந்து; கரு அறுத்த காரணர்க்கு - பிறப்பறுத்தற்குக் காரண மான மெய்ஞ்ஞானியர்க்கு; கைக்குள் கனி ஆகும்-உள்ளங்கையிலிருக் கும் மாணிக்க மணிபோல ஐயமறத் தோன்ரு நிற்பன் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் சரியை கிரியை யோகம் என்னும் மூன்று படியினும் நிற்பார்க்கு உள்ளத்தே மறைந்திருப்பன். ஞானிக்கு நன்கு விளங்கித் தோன்றுவன் என்றவாறு. (அஅ)

பளிங்கிற் பவளமடி பற்றற்ற பாவலர்க்குக்
கிளிஞ்சிலே வெள்ளியென்பார் கிட்டாதார் கிட்டுவரோ.

(இ - ள்.) பற்று அற்ற பாவலர்க்கு பளிங்கில் பவளம் அடி - பொய்ப்பொருளின்கண் பற்றற்ற புலமையாளர் உளத்தின்கண் இறை வன் பளிங்கினிறத்தைத் தன்னிற மாக்கிக்கொண்ட பவளம்போல்வன் ஆவன்; கிட்டாதார் கிளிஞ்சிலே வெள்ளி என்பார் - அவனை எய்தப் பெருதவர் யாவரோ எனின் கிளிஞ்சிலே வெள்ளி என்பதற்குக் காரண மான மயக்கமுடையோரே யாவர். கிட்டுவரோ - இத்தகையோர் அவனை எய்துவரோ காண்! என்பதாம்.

(வி - ம்.) பற்றற்ற தெளிவுடையோர் உளம் சிவமயமாகத் திகழும். பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளுடைய யோர் சிவத்தை அணுகார் என்றவாறு. (அகூ)

எட்டுக் கடங்காண்டி யெழுத்திற் பிறவாண்டி
நாட்டி னரிகளேல்லாம் நற்புரவி செய்தாண்டி.

(இ - ள்.) நாட்டின் நரிகள் எல்லாம் நல்புரவி செய்தான் - மாணிக்கவாசகர்க்காகப் பாண்டி நாட்டிலுள்ள நரிகளை எல்லாம் நல்ல

குதிரைகளாக்கிய சிவபெருமான் எட்டுக்கு அடங்கான் - நூல்களில் காணப்படான்; எழுத்தில் பிறவான் - மந்திரங்களிலே தோன்றான் காண் என்பதாம்.

(வி - ம்.) மாணிக்கவாசகர் போன்ற அன்பர்க்கே எளியவன் ஆவான் என்பது குறிப்பு. (௧0)

பஞ்சப் பிரளயத்து மிஞ்சி யிருப்பாண்டி
நஞ்சுபோதி மிடற்ற னயனத் தழல்விழியான்.

(இ - ள்.) நஞ்சு பொதி மிடற்றன் நயனத்தழல் விழியான் - நஞ்சு தங்கிய மிடற்றினையும் நெருப்புக் கண்ணையும் உடைய நம் பெருமான் ஐம்பெரு பூதங்களும் அழிந்தொழிகின்ற பேரூழி முடிவின் கண் திருமால் முதலிய பிறகடவுளரும் அழிந்தொழியத் தான் ஒருவனே மிஞ்சி யிருப்பவன்காண்.

(வி - ம்.) அழிப்பதே யன்றி அனைத்துயிரையும் காத்தலும் அவன் றொழிலே என்றற்கு நஞ்சுபொதி மிடற்றன் என்றும் நயனத் தழல் விழியான் என்றும் ஓதினர் என்க. (௧௧)

அகங்காக்கும் புறங்காக்கும் அளவிலா வண்டமுதல்
சேகங்காக்குங் காணுத் திசைபத்துங் காக்குமடி.

(இ - ள்.) அகங்காக்கும் புறங்காக்கும் - தோழி! அச்சிவபெருமான் உயிரினகத்தேயும் புறத்தேயும் நின்று பாதுகாப்பவன் காண்; அளவு இலா அண்டம் முதல் செகங்காக்கும் - எண்ணிறந்த அண்டங்கள் முதலியவற்றையும் அவற்றின் கண்ணுள்ள நாடுகளையும் அவனே காப்பவனாவன். காணுத்திசை பத்தும் காக்கும்-நம்மனோரால் எல்லை காணப்படாத திசைகள் பத்தையும் அவனே காப்பன்; என்பதாம்.

(வி - ம்.) அவனே காவற் கடவுளும் பிறரல்லர் என்றவாறு. (௧௨)

பேசாப் பிரமமடி பேச்சிறந்த பேரொளிகாண்
ஆசாபாசங்கள் அணுகாத பேரொளி காண்.

(இ - ள்.) பேசாப்பிரமம் அடி - இவ்வண்ணத்தான் இப்படியன் என எத்தகையோரானும் இயம்ப வொண்ணுத பெரும் பொருளாவான் காண்; பேச்சு இறந்த பேர்ஒளி காண் - அவன் நம்மனோர் மொழிக்கும் அப்பாற்பட்ட பெரிய அறிவு வொளியா யிருப்பவன் காண்!; ஆசாபாசங்கள் அணுகாத பேரொளி காண் - அவா முதலிய அழுக்கு வகைகள் சிறிதும் அணுகொணுத பேரறிவுச் சுடராயிருப்பவன் காண் என்பதாம்.

(வி - ம்.) பிரமம் - இறைப்பொருள். (௧௩)

தேச மிறந்தவன்காண் திசையிறந்த தேண்கடல்காண்
ஊசி முனையூன்ற வில்லா வுறுபொருள்காண்.

(இ - ள்.) தேசம் இறந்தவன் காண் - தோழி! நம் பெருமான் உலகுகளுக்கு அப்பாலான பெருமை யுடையவன் காண்; திசை இறந்த தெள் கடல் காண் - திக்குகளை யெல்லாம் கடந்து விரிந்திருக்கின்ற தெளிந்த திருவருட் கடலானவன் காண்; ஊசி முனை ஊன்ற இல்லா உறுபொருள் காண் - பெருமையால் இத்தகையனுயினும் ஊசியின் முனையை நாட்டுதற்கு மிடமாத நுண்மையுற்ற பொருளாகவும் இருப்பவன் காண்! என்பதாம்.

(வி - ம்.) அண்ட மோரணுவாம்படி பெரியன். அணுவோர் அண்டமாம்படி நுண்ணியன் என்றவாறு. (௬௪)

சிப்பின் முத்தொளிகாண் சின்மயநோக் கில்லார்க்கு
அப்பி லொளிபோ லமர்ந்த வரும்பொருள்காண்.

(இ - ள்.) சிப்பின் முத்தொளி காண் - தோழி! மெய்யுணர் வார்க்குச் சிப்பியின்கட் டோன்றிய முத்துப் போன்று தண்ணொளி யுடையவன் ஆவன்; சின்மய நோக்கு இல்லார்க்கு - அறிவுக் கண்ணால் நோக்க மாட்டாதவர்க் கெல்லாம்; அப்பில் ஒளிபோல் அமர்ந்த அரும் பொருள் காண் - நீரின்கண் ஒளிபோல அவரறியாவாறு அவருள்ளிருக் கின்ற காண்டற்கரிய பொருளா யிருப்பவன் காண்!; என்பதாம்.

(வி - ம்.) மெய்யுணர்வுக்குப் புலப்படுபவன் அஃதில்லாதாருள் மறைந்திருப்பவன் என்றவாறு. சிப்பி - சிப்பு எனத்திரிந்து நின்றது. (௬௫)

ஆலா விருட்சமடி யளவிலாச் சாகையடி
மேலாம் பதங்கள் விசும்பூடுருவு மெய்ப்பொருள்காண்.

(இ - ள்.) ஆல விருட்சமடி - தோழி! நம் பெருமான் ஆலமரம் போன்று பார்த்த நிழலை யளிப்பவன் காண்; அளவு இலாச் சாகையடி - அவன் எண்ணிறந்த கிளைகளை யுடையவன் காண்; மேலாம் மரங்கள் விசும்பு ஊடுருவும் மெய்ப்பொருள் காண் - அவன் மேலே மேலே உள்ள உலகங்களையும் அவற்றிற்கு அப்பாலான வானத்தையும் ஊடுருவி நிற்கின்ற மெய்யாய பரம்பொருள் காண் என்பதாம்.

(வி - ம்.) ஆலா விருட்சம் — விகாரம். சாகை - கிளை. ஈண்டுச் சமயங்கள். பதம் — உலகம். (௬௬)

வங்கிசமேல் லாங்கடந்து வருமா மலர்ப்பதங்காண்
அங்கிச மாயெங்கு மாய்ந்த அரும்பொருள்காண்.

(இ - ள்.) வங்கிசம் எல்லாம் கடந்து வரும் மா மலர்ப்பதங் காண் - தோழி அவனுடைய திருவடிகள் உயிர்களை வழி வழியாகப் பாதுகாத்து வருகின்ற செந்தாமரை போன்ற திருவடிகள் காண்; எங்கும் அங்கிசமாய் ஆய்ந்த அரும்பொருள் காண் - எவ்விடத்தும் சமய நூலோர் பகுதி பகுதியாக ஆராய்ந்து காண்கின்ற முழுது முணர்தற்கரிய மெய்ப்பொருளா யிருப்பவன் காண் என்பதாம்.

(வி - ம்.) அங்கிசம் - பகுதி. சமயவாதிகள் அம்மெய்ப் பொருளின் ஒவ்வொரு பகுதியையே ஆராய்வதன்றி முழுமையாகக் காண்டற்கரியவன் என்றவாறு. (கூஎ)

நாமநட்ட மானதடி நவிலவிட மில்லையடி
காமனைக்கண் ணுலெரிக்கக் கனல்விழித்த காரணன்காண்.

(இ - ள்.) நட்டம் நாமம் ஆனதடி-தோழி! அவனுடைய ஊழிக் கூத்து அனைத்துயிர்க்கும் அச்சந்தருவதே யாகுங்காண்; காமனைக் கண்ணுல் எரிக்கக் கனல் விழித்த காரணன் காண் - உயிர்கட்கு இம்மை யின்பந்தருகின்ற காமவேளை எரித்தற் பொருட்டாகவே தனது நெற்றிக் கண்ணைத் திறந்த நிமித்த காரணன் காண் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் அழிக்குங்கா லாடுங் கூத்து அச்சந் தருவது. காமவேளைத் தன் தீக்கண்ணுற் சுட்டுச் சாம்பராக்கினுன் என்க. (கூஅ)

கோட்டாத செம்பொனடி குளியாத் தரளமடி
எட்டாத கொம்பிலடி ஈப்புகாத் தேனமுதம்.

(இ - ள்.) கொட்டாத செம்பொன் அடி - தோழி! நம் பெருமான் கொல்லராற் கொட்டி யுருவாக்காத சிவந்த பொன் காண்!; குளியாத்தரளம் அடி - முத்துக்குளிப்போர் மூழ்கி எடாத முத்துக் காண்!; எட்டாத கொம்பில் ஈப்புகாத் தேன் அமுதம் அடி - அன்புடையார்க்கன்றி ஏனையோர்க்கு எட்டாத உயரத்துள்ள தேனீக்கள் புகாத தூய தேன் காண்!; என்பதாம்.

(வி - ம்.) இறைவன் எய்தற்கரியவன் என்பது கருத்து. கொட்டுதல் - கருவியாற் புடைத்தல். (கூகூ)

காணிப்பொன் ணுணியுடன் கல்லுரைமாற் றின்னதென்றே
ஆணியுடன் கூட்டி யடங்கவிட்டுக் கொண்டாண்டி.

(இ - ள்.) காணிப்பொன் ஆணியுடன் கல்லுரை மாற்று இன்னது என்று-உரிய பொன்னை ஆணியாலும் கட்டளைக் கல்லாலும் இதன் மாற்று இன்னது என்று ஆராய்ந்து பாராமல்; ஆணியுடன் கூட்டி அடங்கவிட்டுக் கொண்டாண்டி - அப்பொன்னை ஆணி முதலியவற்றேடு சேர்த்து அனைத்தையும் தன்னுடையனவாகவே கொண்டவன் காண்.

(வி - ம்.) எல்லாம் தன்னுடைமையாகவே கொண்டவன் என்பது கருத்து. (க00)

அளவிறந்த வண்டத்தா ரத்தனைபே ருண்டாலும்
பிளவளவுந் தான்சற்றும் பேராப் பிரமமடி.

(இ - ள்.) அளவிறந்த அண்டத்தார் அத்தனைபேர் உண்டாலும்-எண்ணிறந்த அண்டங்களிலும் வாழ்கின்ற எண்ணிறந்த உயிர்

களும் நுகர்ந்தாலும்; தான் பிளவு அளவும் சற்றும் பேராப் பிரமம் அடி - தான் ஓர் எட்பிளவு அளவுதானும் சிறிதும் மாறுபடாத இன்பக் கடலாயிருக்கும் பிரமமே நங்கடவுள் காண் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் இன்பப் பிழம்பாகிய தன்னையே எண்ணிறந்த வுயிர்கட்கு வழங்கினும் சிறிதும் குறைபாடில்லாதவனுவான் என்றவாறு. (௩0௧)

கன்னெஞ்சி னுள்ளே கழுநீலம் பூத்தாற்போல்
என்னெஞ்சி னுள்ளே யிணையடிகள் வைத்தாண்டி.

(இ - ள்.) கல் நெஞ்சின் உள்ளே கழுநீலம் பூத்தாற்போல் - கருங்கற்பாறையுள்ளிருந்து கருங்குவளை முளைத்து மலர்ந்தாற் போல; என் நெஞ்சின் உள்ளே இணை அடிகள் வைத்தாண்டி - சிறிதும் அன்பில்லாத என்னுடைய வன்னெஞ்சிலேயும் தனது இரண்டு திருவடிகளையும் வைத்து என்னையும் ஆட்கொண்ட பேரருளாளன் காண்.

(வி - ம்.) நீர் நிலையில் மட்டுமே தோன்றி மலருமியல்புடைய கருங்குவளை கற்பாறையில் முளைத்து மலர்ந்தாற் போன்றிருந்தது எமபெருமான் என்னெஞ்சிற்றன் இணையடியைப் பதித்ததென வியந்தபடியாம. (௩0௨)

வேதப் புரவியடி விரைந்தோடி யும்மறியார்
காதற்ற ஞானமடி காண்பார் கருத்துடையோன்.

(இ - ள்.) வேதப்புரவி விரைந்து ஓடியும் அறியார் - வேதமாகிய குதிரையில் ஏறி மிகவும் விரைந்து செல்கின்றவரும் நம்பெருமானைக் காண்கிலார்; காண்பார் கருத்து உடையோன் - அவன் தன்னைக் காண்டற்குரிய அன்பருடைய நெஞ்சத் தாமரையையே கோயிலாகக் கொண்டிருத்தலாலே; காதற்ற ஞானம் அடி - அவனை யுணரும் அறிவு புறத்திருந்து செவி வழியாக உட்புகுவதன்று காண் என்பதாம்.

(வி - ம்.) இறைவனைக் கல்வியறிவாலும் கேள்வியறிவாலும் அறிய வியலாது. அகத்திற் பெருகும் அன்பால் மட்டுமே உணர்தல் கூடும் என்பது கருத்து. (௩0௩)

பாச வினையைப் படப்பார்த்த பார்வையுடன்
நேசத்தைக் காட்டி நில்லென்று சொன்னுண்டி.

(இ - ள்.) பாசவினையைப் படப்பார்த்த பார்வையுடன்-தோழி! நம்பெருமான் தன்னை யடைய விரும்பின் நீ பற்றினுலுண்டாகும் இருவகை வினைகளும் அழிந்து போகும்படி பார்க்கின்ற மெய்யுணர்வுப் பார்வையுடனே; நேசத்தைக் காட்டி - நின் பேரன்பை வெளிப்படுத்தி; நில் என்று சொன்னுண்டி - அவ்வன்பு நெறியிலேயே உறுதியாக நிற்பாயாக! என்று அடியேனுக்கு அறிவுறித்தினுன் காண்! என்பதாம்.

(வி - ம்.) இறைவனை யடைய வேண்டின் பற்றறுத்து அன்புநெறியின்கண் ஏறுதல் வேண்டும். வேறு வழியிலே எய்தவியலாதென்பது கருத்து. (௩0௪)

ஓசை யொடுங்குமிட மோங்காரத் துள்ளொளி காண்
பேசா திருக்கும் பிரமமிது வென்றாண்டி.

(இ - ள்.) ஓசை ஒடுங்கும் இடம் - தோழி! என் ஞானாசிரியன் கருவி கரணங்களின் ஆரவாரம் ஒழிந்த இடமே (பிரமம் ஆகும்) என்றும், ஓங்காரத்து உள் ஒளி காண் - பிரணவ மந்திரத்தின் உள் ஒளியே ஆகும்; பேசாதிருக்கும் பிரமம் இது என்றாண்டி - பேசா திருக்கும் அந்தப் பிரமப்பொருள் ஆகும் என்றும் அடியேனுக் கறிவுறுத்தினன் காண் என்பதாம்.

(வி - ம்.) பிரமம் யாண்டு மிருத்தல் தோன்ற பிரமமிது என்ற அண்மைச் சுட்டாலோதினர். ஓசை - கருவி கரணங்களின் ஆரவாரம். (௧0௫)

சின்மய நன்னோக்காற் சிற்சொரூபங் காட்டியெனைத்
தன்மயமா யாக்கியே தானவனாய் நின்றாண்டி.

(இ - ள்.) சின்மய நல்நோக்கால் - தோழி எம்பெருமான் தன் திருவருட் பார்வையாலே பார்த்து அடியேன் மலவிருளையகற்றி; சித் சொரூபம் காட்டி - அறிவுப் பிழம்பாகிய தன் வடிவத்தையும் எனக்குக் காட்டியருளி; தன் மயம் ஆக்கி - என்னைத் தானாகவே ஆக்கி; தான் அவனாய் நின்றாண்டி - யானே அவனாகி இரண்டறக் கலந்து நின்றான் காண் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் தன்னருட் பார்வையாலே என் தன் முனைப்பையகற்றி என்னைத் தன்னோடு இரண்டறக் கலந்து கொள்ளும் படி செய்தான் என்றவாறு. (௧0௬)

தானென்னைப் பார்த்தாண்டி தன்னைத்தா னல்லாமல்
நானென்ன சொல்லுவண்டி நவிலவிட மில்லையடி.

(இ - ள்.) தான்! என்னைப் பார்த்தாண்டி - தோழி! நம்பெருமான் அடியேனைத் தன்னருட் பார்வையாலே பார்த்தனன்; தன்னைத் தான் அல்லாமல் - அவ்வளவில் அடியேன் அவனையே கண்டதன்றி; நான் என்ன சொல்லுவண்டி - என்னுடைய நான் என்பதைப்பற்றி நான் என்னென்று சொல்லுவேன்; நவில இடம் இல்லையடி - அஃது உளதென்று சொல்லவும் இடமில்லாமற்போயிற்றுக் காண் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் திருவருட் பார்வை பட்டவுடன் நான் என்னைக் கண்டிலேன், யாண்டும் அவனையே கண்டேன் என்பது கருத்து. (௧0௭)

இன்றிருந்து நாளைக் கிறக்கிறபே ரெல்லாரும்
என்றும்பரி பூரணத்தி லினிதிருக்கச் சொன்னாண்டி.

(இ - ள்.) இன்று இருந்து நாளைக்கு இறக்கிற பேரெல்லாரும் - தோழி! நம் பெருமான் இன்றைக்கிருந்து நாளைக்குச் சாகும் நிலையாமை யுடைய உயிர்கள் எல்லாம்; என்றும் பரிபூரணத்தில் இனிது இருக்கச்

சொன்னாண்டி - எப்பொழுதுமே சாவில்லாத முழு நிறைவிலே இன்புற்றிருப்பனவாக! என்று வாழ்த்தினான் காண்! என்பதாம்.

(வி - ம்.) எல்லாவுயிர்களும் பேரின்ப நிலை எய்தல் வேண்டும் என்பதே இறைவன் திருவுளக் குறிப்பாகும் என்பது கருத்து. (௧௦௮)

பார்க்கி லெளிதலவோ பற்றற்ற பற்றலவோ
ஆர்க்கு மிடங்காட்ட வவனிதனில் வந்தாண்டி.

(இ - ள்.) அவனிதனில் ஆர்க்கும் இடம் காட்ட வந்தாண்டி - தோழி! நம் பெருமான் அன்பராயினார் யாவர்க்கும் வீட்டுலகத்தைக் காட்டவே ஞானாசிரியனாக உருவங்கொண்டு இங்கு எழுந்தருளினான்; பார்க்கில் எளிதலவோ - அவன் கூறியவை ஆராயின் எளியனவாகவே இருக்கின்றன அல்லவோ; பற்றற்ற பற்று அலவோ - அவ்வீட்டுலகந் தானும் பற்றற்ற இடமல்லவோ? என்பதாம்.

(வி - ம்.) பற்றறுதியே வீடாம். இவ்வுண்மையை உணர்த்தவே அவன் ஆசிரியனாய் உலகில் வருகின்றான். பற்றற்றவர்க்கு வீடுபேறு மிகவும் எளிதேயாம் என்றவாறு. (௧௦௯)

இத்தனை காலமடி யிறந்து பிறந்ததெல்லாம்
இத்தனையு மில்லையடி இரும்பிலுறை நீரானேன்.

(இ - ள்.) இத்தனை காலம் இறந்து பிறந்ததெல்லாம் - தோழி! அடியேன் எத்துணையும் பலவாகிய காலமெல்லாம் எத்துணையும் பன்முறை இறந்தும் பிறந்தும் எய்திய துன்பமெல்லாம்; இத்தனையும் இல்லை - அத்தனையும் இனி எனக்கு இல்லையாயின காண்; இரும்பில் உறை நீர் ஆனேன் - என்றுலெனின் அடியேன் இப்பொழுது கனலேறிய இரும்பாற் கவரப்பட்ட நீர் போன்று இறைவன் அருளிலே மூழ்கி விட்டேனாதலால் என்பதாம்.

(வி - ம்.) கொல்லுலையிற் பழுக்கக் காய்ச்சி நீரிற்றோய்க்கப்பட்ட இருப்புண்ட நீர்போல அடியேன் இறையருளாற் கவர்ந்து கொள்ளப்பட்டமையால் இனி எனக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை என்றவாறு. (௧௧௦)

எக்காலம் பட்டதடி யிறந்து பிறந்த தெல்லாம்
அக்கால மெல்லா மழுந்தினே னரகில்.

(இ - ள்.) பிறந்து இறந்தது எல்லாம் எக்காலம் பட்டது - தோழி அடியேன் பிறந்து இறந்து வருகின்ற செயலெல்லாம் அடியேனுக்கு எந்தக் காலத்தே தொடங்கினவோ?; அக்காலம் எல்லாம் நான் நரகில் அழுந்தினேன் - அத்துணைக் காலமும் நான் நரகத்திலே கிடந்துழன்ற காலமே யல்லது பிறிதில்லை காண் என்பதாம்.

(வி - ம்.) பிறவித் துன்பத்தே உழல்வதே நரகம் ஆகும். பிறவாமையே வீடுபேறு ஆகும். இவற்றையன்றி நரகுலகம் வீட்டுலகம் என்பன வேறில்லை என்பது கருத்து. (௧௧௧)

காலம் கழிந்ததடி கர்மமெல்லாம் போச்சுதடி
நாலுவகைக் கருவு நாமநட்ட மாச்சுதடி.

(இ - ள்.) காலம் கழிந்ததடி - தோழி! ஞானாசிரியன் அருணோக்கம் பட்டவுடனே அடியேன் திறத்தில் காலதத்துவம் முடிந்து போயிற்று. கர்மம் எல்லாம் போச்சுதடி - எல்லா வினைகளும் அழிந்து போயின; நாலுவகைக் கருவும் நாமம் நட்டம் ஆச்சுதடி-முட்டையிற் றோன்றுதல் முதலிய நான்கு வகைப்பட்ட பிறப்புக்களின் பெயர் தானும் இல்லையாயின காண் என்பதாம்.

(வி - ம்.) காலம் - காலதத்துவம். (௧௧௨)

முப்பாழுக் கப்பால் முதற்பாழ் முழுமுதலாய்
இப்போது வந்தான்காண் எனைவிழுங்கிக் கொண்டான்காண்.

(இ - ள்.) முப்பாழுக்கு அப்பால்-தோழி! மூவகை மாயையாகிய பாழ்களுக்கு அப்பாலாகிய; முதல் பாழ்முழு முதலாய் - அனைத்திற்கும் முதலாகிய அறிவு வெளியிலே முழு முதல்வனாகவே; இப்பொழுது வந்தான் காண் - அப்பெருமான் இப்பொழுது என்பால் வந்தனன்; எனை விழுங்கிக் கொண்டான் - அவ்வாறு வந்த அம்முழு முதல்வன் என்னையும் விழுங்கித் தானாகவே ஆக்கிக் கொண்டான் காண்! என்பதாம்.

(வி - ம்.) முப்பாழ் - அமாயை: அவாமாயை; மாமாயை என்பன. முதற்பாழ்-அறிவு வெளி. பண்டு பல்வேறு கடவுளாயிருக்கக் கண்டேன். இப்பொழுது கடவுள் ஒருவனே ஆயினன் என்றவாறு. (௧௧௩)

பாலின்க ணெய்யிருந்தாற் போலப் பரஞ்சோதி
ஆலிங் கனஞ்செய் தறவிழுங்கிக் கொண்டாண்டி.

(இ - ள்.) பாலின்கண் நெய்யிருந்தாற் போல்-பாலின்கண் நெய் யாண்டும் பரவிக்கலந்திருந்தாற் போன்று; பரஞ்சோதி - அப்பேரொளிப் பெருமான்; ஆலிங்கனம் செய்து - அடியேனை யாண்டும் இடையறவின்றித் தழுவி எடுத்து; அறவிழுங்கிக் கொண்டாண்டி - எனது தன்முனைப்பு அற்றுப்போம்படி விழுங்கித் தானாகவே ஆக்கிக் கொண்டான் காண்!

(வி - ம்:) பாலில் நெய் எங்கும் கலந்திருப்பது போல இறைவன் என் உயிர்ப்பரப்பெல்லாம் கலந்தனன் என்க. (௧௧௪)

செத்தபட மானேண்டி தீயிரும்பி னீரானேன்
ஒத்தவிட நித்திரையென் றோதுமுணர் வறிந்தேன்.

(இ - ள்.) செத்தபட மானேன் - தோழி! அவனால் அறவிழுங்கப் பட்ட யான் வெந்து ஆற்றலழிந்த ஆடை போலாயினேன் காண்!; தீயிரும்பின் நீரானேன் - தீயிலிட்டுப் பழுக்கக் காய்ச்சிய இரும்பு

தோய்த்த நீர் போல் ஆயினேன்; ஒத்தவிடம் நித்திரை என்று ஓதும் உணர்வு அறிந்தேன் - அவனும் யானும் சிறிதும் வேறுபாடின்றிக் கலந்த இடமே பேரின்பத்துயில் கோடற்குரிய இடம் என்று சான்றோர் கூறுதற்குக் காரணமான மெய்யுணர்வினை யான் அநுபவித் துணர்ந் தேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) தன்முனைப்பறுதற்குச் செத்த படமும் அவனுள் இரண்டறக் கலத்தற்குத் தீயிரும்புண்ட நீரும் உவமை. ஒத்தவிடம் என்றது அது வெனத் தான் என வேறுபடாமை என்க. (௧௧௫)

ஒப்பு முவமையுமற் றோதவரி தாயபோருள்
இப்பூவி னின்குருவே என்னவந்தோன் றாள்வாழி.

(இ - ள்.) ஒப்பும் உவமையும் அற்று ஓத அரிதாய பொருள் - தோழி! தனக்கு ஒப்பாய பொருளும் உவமையாம் உயர் பொருளும் இல்லாமையால் இத்தகையன் என்று யாராலும் கூறவியலாத செம் பொருளாகிய சிவபெருமானே; இப்பூவினின் குருவே என்ன வந்தோன் - நம்பால் வைத்த அருள் காரணமாக இந்நிலவுலகத்தின் கண் நல்லாசிரியனாகி வந்தனன்; தாள் வாழி - அங்ஙனம் வந்த அவன் திருவடிகள் வாழ்க! என்பதாம்.

(வி - ம்.) இறைவனே ஞானசிரியன் என்பது கருத்து. (௧௧௬)

ஒப்பாரி சோல்லிடினும் உவமை பிழைத்திடினும்
முப்பாழுங் கற்றுணர்ந்தோர் முன்னோர் போறுத்தருள்வர்.

(இ - ள்.) ஒப்பாரி சொல்லிடினும் - தோழி! அவன் திருவருட் பெருமையை யான் மாதர் ஒப்பாரி போல மனம் போனவாறு சொல் லிப் புலம்பினேன் ஆயினும்; உவமை பிழைத்திடினும் - யான் கூறிய உவமைகள் பொருந்தாமற் போயினும்; முப்பாழும் கற்றுணர்ந்தோர் முன்னோர் - மூன்று பாழ்களையும் கற்று மெய்யுணர்ந்தவர் தலைமை சான்ற பெரியோராதலின்; பொறுத்தருள்வர் - இப்புலம்பலின் கண் உள்ள பிழையைப் பொறுத்தருளா நிற்பர் என்பது என் நம்பிக்கை என்பதாம்.

(வி - ம்.) கற்பன அனைத்தும் பாசஞானமே யாகலான் முப் பாழும் கற்றுணர்ந்தோர் என்றார். (௧௧௭)

மகடூஉ முன்னிலையாகத் திருவாய்மலர்ந்தருளியது
முற்றிற்று.

இறந்தகாலத் திரங்கல்

வார்த்தைத் திறமில்லா மனிதருக்குப் புன்சொல்லாம்
சாத்திரங்கள் சொல்லிச் சதுரிழந்து கெட்டேனே.

(இ - ள்.) வார்த்தைத் திறமில்லா மனிதருக்குப் புன்சொல்லாம்- சொல்லின் திறந் தேர்ந்திலாத மடவோராகிய மாக்கட்குப் பொருளற்ற வறுஞ் சொல்லாகக் கழிவதறியாதே; சாத்திரங்கள் சொல்லிச் சதுர் இழந்து கெட்டேனே - மெய்ந்நூல்களைப் பயிற்றுவித்துப் பயிற்றுவித்த என் திறமைகள் கெட்டொழிந்தேனே என்பதாம்.

(வி - ம்.) கற்றன கல்லார் செவி மாட்டிக் கையாறெய்தினேன் என்றவாறு. சொற்றிறந்தேருதவர்க்கு மெய்ந்நூலும் புன் சொல் லாகவே தோன்றுதலின் திறமில்லா மனிதருக்குப் புன் சொல்லாம் சாத்திரம் என்றார். சதுர் - திறமை. (க)

மேத்தமேத்தச் செல்வாக்கில் வேறுமருளடுத்துத்
தத்தித் தலைகீழாய்த் தானடந்து கெட்டேனே.

(இ - ள்.) மெத்த மெத்தச் செல்வாக்கில்-பெருநிதிக் கிழவனாக இருந்தமை காரணமாக மிகவும் பெரிய செல்வாக்கும் பெற்றிருந்தேனாதலின், வேறு மருள் அடுத்து - இயல்பாகவே மயக்க முடைய யான் இதனானும் வேறு மயக்கமும் எய்தப்பெற்று; தத்தித் தலை கீழாய்த் தான் நடந்து கெட்டேன் - தவறு செய்து அறம் பிறழ ஒழுகிப் பெரிதும் கெட்டொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) செல்வாக்கு - சொன்னபடி மாந்தர் ஒழுகுதற்குக் காரணமான சொல்லுடைமை. இதற்குக் காரணம் செல்வமுடைமை என்க. (உ)

வழக்குத் தலங்களினும் மண்பொன் ஆசையினும்
பழக்கந் தவிராமல் பதியிழந்து கெட்டேனே

(இ - ள்.) வழக்குத் தலங்களினும் – எளியாரோடு வழக்காடி அவர் பொருள் கவர்தற்கு வழக்குமன்ற மேறுதலும்; மண் பொன் ஆசையினும் - மண் சேர்த்தலும் பொன் ஈட்டுதலும்; பழக்கம் தவிராமல் - பொய் பேசலும் வஞ்சித்தலுமாகிய எனது பழைய பழக்கத்தைக் கைவிடாமையால்; பதியிழந்து கெட்டேனே - என் நெஞ்சத்தே குடி கொண்டுள்ள மெய்ப்பொருளை இழந்து கெட்டொழிந்தேனே! என்பதாம்.

(வி - ம்) மண்ணாசை முதலியவற்றால் பொய் வழக்காடுதல் முதலிய தீய பழக்கங்களையே மேற்கொண்டு சிவபெருமானை நினையாதொழிந்தேன் என்றவாறு. (ங)

ஆணி போருந்து மரும்பூமி யத்தனையும்
காணி நமதேன்று கனம்பேசிக் கெட்டேனே.

(இ - ள்.) ஆணி பொருந்தும் அரும்பூமி அத்தனையும் நமது காணி என்று - உதோ கிடக்கின்ற நிலப்பரப்பில் ஓர் ஆணி அடிக்கும் காண்டற்கரிய சிறு நிலம் அளவும் பிறர்க்கில்லை பெறற்கரிய அவ்வளவு நிலமும் நமக்குரிய நிலமே கண்டீர் என்று; கனம் பேசிக்கெட்டேனே - என் பெருமையை யானே பிறர்க்கெல்லாம் கூறிச் செருக்கினேற் கெட்டொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) ஆணி அடிக்கு மளவு நிலங்கூட இந்த நிலத்தில் பிறர்க்கில்லை அவ்வளவும் நமது காணி என்று தற்பெருமை பேசிக்கெட்டேன் என்றவாறு. (௪)

ஆசார மில்லா வசடருடன் கூடிப்
பாசாங்கு பேசிப் பதியிழந்து கெட்டேனே.

(இ - ள்.) ஆசாரம் இல்லா அசடருடன் கூடி - நல்லொழுக்க மில்லாத கயவரோடிணங்கி; பாசாங்கு பேசிப் பதி யிழந்து கெட்டேனே - உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி நடிக்குமாற்றால் அடியேன் இறைவனை இழந்தொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) ஆசாரம் - நல்லொழுக்கம். அசடர் - கயவர். (௫)

குருமார்க்க மில்லாக் குருடருடன் கூடி
கருமார்க்கத் துள்ளே கருத்தழிந்து கெட்டேனே.

(இ - ள்.) குருமார்க்கம் இல்லாக் குருடருடன் கூடி - நல்லாசிரியனை அடுத்துப் பயின்று நன்னெறியிற் செல்லுதல் இல்லாத அகக்கண் குருடராயினோருடனே சேர்ந்து; கருமார்க்கத்துள்ளே கருத்து அழிந்து கெட்டேன் - மீண்டும் மீண்டும் பிறத்தற்குக் காரணமான தீ நெறிக்கட் சென்று அறிவழிந்து கெட்டொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) நல்லாசிரியர்பாற் பயின்று நன்னெறி நடப்பாரோடு கூடாமல் கயவருடன் கூடித் தீவினை பலவுஞ் செய்து கெட்டேன் என்றவாறு. (௬)

ஆல மருந்து மரன்பெருமை யெண்ணமல்
பாலர்பெண்டீர் மெய்யென்று பதியிழந்து கெட்டேனே.

(இ - ள்.) ஆலம் அருந்தும் அரன் பெருமை எண்ணமல் - தஞ்சம் புகுந்த தேவர்களைக் காக்கும் பொருட்டு பாற்கடலில் தோன்றிய நஞ்சுண்டு கறுத்த மிடற்றினையுடைய சிவபெருமானுடைய பெருமையைச் சிறிதும் எண்ணமல்; பாலர் பெண்டீர் மெய்யென்று - மக்களும் மனைவியரும் நிலையுதலுடைய உறுதிப் பொருளாகக் கருதி; பதி இழந்து கெட்டேனே - இறைவனை இழந்து கெட்டேன் என்பதாம்.

(வி - ம்.) தஞ்சம் புகுவாரைக் காப்பாற்றும் இறைவன் சிறப்பு நோக்கி ஆலம் அருந்தும் அரன் பெருமை என்றார். (௭)

பிணவாச முற்ற பெருங்காய மெய்யென்று
பணவாசை யாலே பதியிழந்து கெட்டேனே.

(இ - ள்.) பிண வாசம் உற்ற பெருங்காயம் மெய் என்று - பிண நாற்றமே மிகுந்த பெரிய இந்த உடம்பினை உறுதியுடைய மெய்ப் பொருளென்று கருதி; பண ஆசையாலே - அதனைப் போற்றும் பொருட்டுப் பொருளின்கண் பெரிதும் அவாவினைச் செலுத்தி; பதி இழந்து கெட்டேன் - அடியேன் இறைவனை இழந்து கெட்டொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) வீணுடலை வளர்த்தற்குப் பொருளையீட்ட நினைக்கு மாற்றால், சிவபெருமானை மறந்தொழிந்தேன் என்றவாறு. (அ)

கண்ட புலவர் கனக்கவே தான்புகழ
உண்ட உடம்பெல்லா மும்பூரித்துக் கெட்டேனே.

(இ - ள்.) கண்ட புலவர் கனக்கவே புகழ - என் சொல் லாற்றல் செய்யுள் செய்யாற்றல் முதலியவற்றைக் கண்ட புலமையோர் அடியேனைப் பெரிதும் புகழ்ந்துரைத்தல் கேட்டுழி; உண்ட உடம்பு எல்லாம் பூரித்துக் கெட்டேனே - உண்டமையாலே பருத்த என் உடம்பு பின்னும் பூரித்து நின்று கெட்டொழிந்தேன்.

(வி - ம்.) எல்லாம் அவன் செயலாகக் காணுமல் என் செயலைப் பிறர் புகழ்ந்துழிச் செருக்கெய்திக் கெட்டேன் என்றவாறு. எல்லாமும்-உம்: இசைநிறை. (௯)

எண்ணிறந்த சென்ம மெடுத்துச் சிவபூசை
பண்ணிப் பிழையாமல் பதியிழந்து கெட்டேனே.

(இ - ள்.) எண்ணிறந்த சென்மம் எடுத்து - எண்ணற்ற பிறப்பு களிற்பட்டு அத்துன்பத்தை உணர்ந்திருந்தும்; சிவபூசை பண்ணிப் பிழையாமல் - அரிய இம்மக்கட் பிறப்புற்ற விப்பொழுதும் சிவபெரு மானை வழிபாடு செய்து பிறப்புத் துன்பத்தினின்றும் தப்பிப் போகா மல்; பதி இழந்து கெட்டேனே - அச்சிவத்தையே இழந்து கெட் டொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) சென்மம் எடுத்தும் எனல் வேண்டிய சிறப்பும்மை தொக்கது. பதிதன்னை நினைவார்க்கன்றி இல்பொருள் போறலின் யாண்டும் பதி இழந்து கெட்டேன் என்றுரைதகின்றார் என்க. (௧௦)

சிற்றெறும்பு சற்றுந் தீண்டப் பொறுவுடம்பை
உற்றுருக்க வுஞ்சுடவு மொப்பித்து மாண்டேனே.

(இ - ள்.) சிற்றெறும்பு சற்றும் தீண்டப்பொறு உடம்பை - பண்டு பிறந்த பிறப்பிலெல்லாம் சிற்றெறும்பு கடித்தாலும் பொறுக்க மாட்டாத என் உடம்புகளை யெல்லாம் இறுதியிலே; உற்று உருக்கவும் சுடவும் ஒப்பித்து மாண்டேனே - வேறுவழி யின்மையால் சுற்றத்தார்

வந்து அவற்றைத் தீயிலிட்டு உருக்கவும் சுட்டுச் சாம்பராக்கவும் உடன்பட்டு அவர்பால் ஒப்புவித்து இறந்தொழிந்தேனே! என்பதாம்.

(வி - ம்.) எடுத்த உடம்பை யெல்லாம் அவ்வாறு செய்ய உடன்பட்டதன்றி உடம்பாலாகும் பயனைப் பெறாது கெட்டேன் என்பது கருத்து. (௧௧)

தன்னுடம்பு தானே தனக்குப் பகையாமென்
றெண்ணுமுணர் வில்லாம லின்பமென்று மாண்டேனே.

(இ - ள்.) தன் உடம்புதானே தனக்குப் பகையாம் என்று - ஒருவன் வீடு பேற்றினைப் பெறவியலாதபடி இச்சை வழியே நடந்து கெடுவதற்குக் காரணமாகி அவனுக்கு அவனுடம்பே பகையாகவும் உளது என்று; எண்ணும் உணர்வு இல்லாமல் - நினைக்கின்ற உணர்ச்சியில்லாமையாலே; இன்பம் என்று மாண்டேனே - உடலின்பமே இன்பமாகும் என்று கருதி எண்ணிறந்த உடம்புகளினின்றும் இறந்தொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) உடம்பு வீடுபேற்றிற்குக் கருவியாதலேயன்றி பற்றற்றுத் தன்புறவும் கருவியா யிருக்கின்ற உண்மையுணராமல் அதன் இன்பத்தையே விரும்பி இச்சைவழி நடந்து எண்ணிறந்த முறை யிறப்புற்றேன் என்றவாறு. (௧௨)

தோலெலும்பு மாங்கிசமுந் தோல்லன் னத்தால்வளரு
மேலெலும்புஞ் சுத்தமென்று வீருப்பாய் மாண்டேனே.

(இ - ள்.) தோல் எலும்பு மாங்கிசமும் - அருவருக்கத்தக்க தோலும் உள்ளெலும்பும் இறைச்சியும்; தொல் அன்னத்தால் வளரும் - தொன்று தொட்டுச் சோற்றாலே வளர்கின்ற; மேல் எலும்பும் - விலாவென்பு முதலியனவும்; சுத்தம் என்று - மிகவும் தூய்மையுடையன என்று நினைத்து; வீறுப்பாய் - இவற்றாலாய உடம்பின் அழகு முதலியவற்றால் செருக்கடைந்து; மாண்டேனே - பின்னர் இறந்திறந்துழன்றேன்; என்பதாம்.

(வி - ம்.) அருவருக்கத் தகுந்த உடம்பையே தூயதென்று கருதிச் செருக்குற்றுப் பன்முறை இறந்து பட்டேன் என் றிரங்கியவாறு. (௧௩)

போக்கும் வரத்தும் போருள் வரவுங்காணமல்
வாக்கழிவு சோல்லி மனமறுகிக் கேட்டேனே.

(இ - ள்.) போக்கும் வரத்தும் - அடியேன் இறந்து போதலையும் மீண்டும் பிறப்பினுள் வருதலையும்; பொருள் வரவும் காணமல் - இவ்வுடம்பின் வாயிலாய் மெய்ப்பொருளுணர்வு வருகின்ற நெறியையும் சிறிதும் ஆராய்ந்து பாராமல்; அழிவு வாக்கு சொல்லி - பொய்ம்மொழிகளே பேசி; மனம் மறுகிக் கெட்டேனே - பிறப்புக்கடோறும் சாக்காடு வந்துறும்போது நெஞ்சு சுழன்று கெட்டொழிந்தேன்; என்பதாம்.

(வி - ம்.) பொய்ப் பொருள் மெய்ப் பொருள்களை ஆராய்ந்து உண்மை புணராமல் பிறப்பிலே சுழன்று கெட்டொழிந்தேன் என்றவாறு. (௧௭)

இறந்தகாலத் திரங்கல் முற்றிற்று.

நெஞ்சொடு புலம்பல்

(அஃதாவது - நெஞ்சத்தை முன்னிலையாக்கி அதற்குக் கூறுமாற்றாற் கூறியது.)

மண்காட்டிப் பொன்காட்டி மாய விருள்காட்டிச்
செங்காட்டி லாடுகின்ற தேசிகனைப் போற்றாமல்
கண்காட்டும் வேசியர்தங் கண்வலையிற் சிக்கிமிக
அங்காடி நாய்போ லலைந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சே - பேதை நெஞ்சமே நீ; செங்காட்டில் ஆடுகின்ற தேசிகனைப் போற்றாமல் - திருச் செங்காட்டில் திருக்கூத்தியற்றுகின்ற சிவபெருமானாகிய ஞானாசிரியனை வழிபாடு செய்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்யாமல்; மண்காட்டிப் பொன்காட்டி - மண்ணையும் பொன்னையும் நிலையுதலுடைய பொருள் போலக் காட்டி அவற்றை ஈட்டுதற்கும்; மாய இருள் காட்டிக் கண்காட்டும் வேசியர் தம் கண்வலையிற் சிக்கி - தங்கள் பொய்மாய இருளை மெய்யுணர்வு போலக் காட்டித் தம் கண்களைக் காட்டி மயக்குகின்ற விலைமகளிர் வீசுகின்ற அக்கண் வலையிலே சிக்கிக் கொண்டும்; அங்காடி நாய் போல் மிக அலைந்தனையே - அங்காடித் தெருவி லங்கு மிங்கும் ஓடியலைகின்ற நாய்போன்று மிக மிக அலைந்து வருந்துகின்றனையே என்பதாம்.

(வி - ம்.) இனி மண் பொன் முதலியவற்றின் இயல்புகளைக் காட்டி இவற்றிற்குக் காரணமான மாயமாகிய மலங்களின் இயல்பையுங் கூறியருளுகின்ற ஆடுகின்ற ஞானாசிரியனைப் போற்றாமல் எனினுமாம். மண் பொன் முதலியவற்றை உறுதிப் பொருள் போலக் காட்டி என்க. அங்காடி - கடை. கடைத்தெரு நாய் ஆண்டுள்ள பல பொருள்களையும் தின்ன விரும்பி அங்குமிங்கும் அலைவதியல்பாகலின் பல்வேறு ஆசைகளாலும் உழலும் மனத்திற்கு உவமை கூறினர். தேசிகனைப் போற்றினால் அமைதியான பேரின்ப வாழ்வு பெறலாம் என்பது குறிப்பு. (௧)

புட்பா சனவணையிற் பொற்பட்டு மெத்தையின்மேல்
ஒப்பா வணிந்தபணி யோடாவி நீங்காமல்
இப்பாய் கிடத்தி யியமனுயிர் கொள்ளுமுன்னே
முப்பாழைப் போற்றி முயங்கிலையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - என்னெஞ்சமே நீ; புட்ப ஆசன அணையில் - நீ செருக்குற்று வீற்றிருக்கின்ற மலர் பரப்பிய சாயணையிட்ட இருக்கையிலாதல்; பொன் பட்டு மெத்தையின் மேல் - நீ நாள்தோறும் துயில்கின்ற அழகிய பட்டினலியன்ற பஞ்சணையிலாதல்; ஒப்பா அணிந்த பணியோடு ஆவி நீங்காமல் - நீ ஒப்பனையாக அணிந்திருக்கின்ற அணிகலன்களோடு இருக்கும் பொழுதாதல்; ஆவி நீங்காமல் - உன் உயிர் தன் விருப்பப்படி தானே போகாமல்; இப்பாய் கிடத்தி - உன் சுற்றத்தார் நினது சாதற்பொழுதினை அறிந்து நின்னை இந்தப் பழம் பாயிலே கிடத்தா நிற்ப; உயிர் இயமன் கொள்ளு முன்னே - நின் உயிரைக் கூற்றுவன் கவர்ந்து கொண்டு போதற்கு முன்பே; இப்பாழைப் போற்ற முயங்கிலையே - முப்பாழிற்கு முதல்வனாகிய இறைவனை வணங்க முயல்கின்றிலையே அப்பொழுது என் செய்குவை! என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சமே நீ இப்பொழுது மலரிருக்கையில் வீற்றிருக்கின்றனை. பட்டு மெத்தையிற் படுத்துறங்குகின்றனை. அணிகலன்களால் அணி செய்து கொள்கின்றனை. நின் உயிர் இவ்விருக்கையிலும் இம்மெத்தையிலும் இவ்வணி கலன்களோடும் இருக்கும்போது தானே பிரியமாட்டாது. சாக்காடெய்துங்கால் நின்னைப் பழம் பாயிலே கிடத்துவர்; அணிகலன்களையும் கழற்றி விடுவர்; உன் உயிரை மறலி தன் கயிற்றிற் கட்டிக்கொடு போவான்; அப்பொழுதென் செய்வை. அவ்வாறாகா வண்ணம் நீ இறைவனையே வழிபட வேண்டும்; அதுவுஞ் செய்திலை என்றவாறு. (உ)

முப்பாழும் பாழாய் முதற்பாழ் வெறும்பாழாய்
அப்பாழுக் கப்பானின் றாடுமதைப் போற்றாமல்
இப்பாழாம் வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன் றீயாமல்
துப்பாழாய் வந்தவினை சூழ்ந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) முப்பாழும் பாழாய் - ஆன்ம தத்துவமும் வித்தியா தத்துவமும் சுத்தத த்துவமுமாகிய மூவகை மாயையும் அகன்று போக; முதல் பாழ் வெறும் பாழாய் - இவற்றிற்கெல்லாம் காரணமான மாயை காரியப்படாமல் வறிதாய் நிற்க; அப்பாழுக்கு அப்பால் - அந்த வறும்பாழிற்கு அப்பாலாகின்ற அறிவு வெளியிலே; நின்று ஆடும் அதை - நிலைத்து நின்று இன்பக் கூத்தியற்றுகின்ற அந்த மெய்ப்பொருளை வழிபடாமல்; இப்பாழாம் வாழ்வை நம்பி - இந்த நிலையுதலில்லாத பொய் வாழ்க்கையையே நம்பி; ஏற்றவருக்கு ஒன்று ஈயாமல் - வல்லாங்கு வாழ்தற்பொருட்டு வருந்தி வந்து நின்பாலிரந்தவர்க்கு ஒரு சிறிதும் கொடாமல்; துப்பு ஆழாய் - இவ்வுலகவின்பத்திலே அழுந்தி; வந்த வினை சூழ்ந்தனை - அவ்வப்பொழுது வந்துற்ற தீவினைகளையெல்லாம் செய்தாயே நீ பெரிதும் அளியை காண் என்பதாம்.

(வி - ம்.) முப்பாழ் - காரிய மாயை மூன்றும் என்க. முதற்பாழ் - காரணமாயை. அப்பாழுக்கு அப்பால் என்றது அறிவு வெளியை. (உ)

அன்னம் பகிர்ந்திங் கலேந்தோர்க் குதவிசெயுஞ்
சென்ம மெடுத்துஞ் சிவனருளைப் போற்ருமல்
பொன்னு மனையுமெழிற் பூவையரும் வாழ்வுமிவை
இன்னுஞ் சதமாக வெண்ணினையே நெஞ்சமே.

(இ - ள்.) அன்னம் இங்கு அலேந்தோர்க்கு பகிர்ந்து உதவி செயும் சென்மம் எடுத்தும் - தான் தேடிய சோற்றினை இவ்வுலகத்தில் உணவின்றி அலேந்து திரிந்து வருந்துகின்ற வறியோர்க்குப் பகுத்து வழங்கி உதவுஞ் சிறப்புடைய மக்கட் பிறப்பு எய்தியிருந்தும்; சிவன் அருளைப் போற்ருமல் - அப்பிறவிப் பயனை அளிக்கின்ற சிவபெருமான் திருவருளைப் பெறுதற்கு அவனை வழிபாடு செய்யாமல்; இன்னும் பொன்னும் மனையும் எழில் பூவையரும் வாழ்வும் - இத்துணை உலகறிவு பெற்ற பின்னரும் பொன்னையும் இல்லத்தையும் அழகிய மகளிரையும் வாழ்க்கையினையும்; சதமாக எண்ணினையே - உறுதுணையாகக் கருதினையே இஃதென்ன பேதைமை காண்! என்பதாம்.

(வி - ம்.) பல்லோரோடும் பகிர்ந்துண்ணலே மக்கள் வாழ்க்கையின் இம்மைப் பயனுதலால் இவ்வாறு அடை கொடுத்தோதினர். இனி வீடுபெறுதலே மக்கட் பிறப்பின் பயன் அதனை நல்குவது திருவருளே. அதனைப் போற்றுதல் வேண்டும் என்றவாறு. (௪)

முற்ருெடர்பிற் செய்த முறைமையால் வந்தசெல்வம்
இற்றைநாட் பெற்ருேமென் றெண்ணுது பாழ்மனமே
அற்றவர்க்கு மீயாம லரன்பூசை யோராமற்
கற்றவர்க்கு மீயாமற் கண்மறந்து விட்டனையே.

(இ - ள்.) பாழ் மனமே - அறிவில்லாத நெஞ்சே!; முன் தொடர்பில் செய்த முறைமையால் வந்த செல்வம் - முன்னர்த் தொடர்ச்சியாக வந்த பிறப்புக்களிலே செய்த நல்வினையின் பயனுக ஊழ் முறைமையால் வந்த பொருளேயே; இற்றைநாள் பெற்ருேம் என்று எண்ணுது - இப்பிறப்பிலிந்தக் காலத்தே பெற்றுள்ளேம் என்று எண்ணி அதுபற்றிச் செருக்குருமல்; அற்றவர்க்கும் ஈயாமல் - ஈதலே செல்வத்துப்பயன் என்றுணர்ந்து அப்பொருளை வறியோர்க்கு வழங்காமலும்; அரன் பூசை ஓராமல் - பிறவிப்பயனை நல்கும் இறைவன் வழிபாட்டினை நினையாமலும்; கற்றவர்க்கும் ஈயாமல் - மெய்ந்நூலினைக் கற்றவர்க்கு அப்பொருளைக் கொடுத்துதவி மெய்யறிவு பெருமலும்; கண் மறந்து விட்டாயே - கண்ணேட்டத்தையும் மறந்து கைவிட்டனையே! நீ உய்யுமாறென்னையோ? என்பதாம்.

(வி - ம்.) செல்வம் ஆகூழால் வருவதென்றுணர்வோர் செருக்குருர். அது முற்செய் நல்வினைப் பயனென்றுணர்வோர் மீண்டும் அந்நல்வினை செய்ய முற்படுவர். மக்கட் பிறப்பின் பயன்பெற விரும்புவோர் பொருளால் இறைவழிபாடு செய்வர். மெய்யுணர விரும்புவோர் கற்றவர்க்குதவுவர். மக்கட் பண்புடையோர் கண்ணேடிப் பிறர்க்குதவுவார். இவற்றுள் நீ யாதொன்றும் செய்திலேயே! என்றவாறு. (௫)

மாணிக்க முத்து வயிரப் பணிபூண்டு
ஆணிப்பொன் சிங்கா தனத்தி லிருந்தாலும்
காணித் துடலைநமன் கட்டியே கைப்பிடித்தால்
காணிப்பொன் கூடவரக் காண்கிலமே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே — என் நெஞ்சே!; மாணிக்கமுத்து வயிரப் பணிபூண்டு - மாணிக்கமும் முத்தும் வயிரமும் ஆகிய சிறந்த மணிகளாலியன்ற அணிகலன்களை அணிந்துகொண்டு; ஆணிப் பொன் சிங்காதனத்திலிருந்தாலும் - நாம் உயரிய பொன்னாலியன்ற அரியணை மிசை வீற்றிருந்து உலகினை ஆட்சி செய்திருந்தாலும்; நமன் உடலை காணித்துக்கட்டி கைப்பிடித்தால் - கூற்றுவன் நம் முடம்பினைக் குறிக்கொண்டு நம்முயிரைக் கட்டித் தனது கையிலே பற்றிக் கொண்டுபோம்பொழுது; காணிப்பொன் கூடவரக் காண் கிலம் - ஒரு காணியளவு பொன்னேனும் நம்மோடு வரக்கண்டிலே மல்லமோ? ஆகவே இவற்றாற் பயன் என்னை? என்பதாம்.

(வி - ம்.) எத்துணைப் பொருளிருந்தாலும் இறந்துழி நமக்குப் பயன்படா என்றவாறு. (௬)

கற்கட்டி மோதிரநற் கடுக்கனரை நாண்பூண்டு
திக்கெட்டும் போற்றத் திசைக்கொருத்த ரானாலும்
பற்கிட்ட வேமனுயிர் பந்தாடும் வேளையிலே
கைச்சட்டங் கூடவரக் காண்கிலமே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே!-பேதை நெஞ்சே!; கல் கட்டி மோதிரம் நல் கடுக்கன் அரை நாண் பூண்டு - மணிபதித்த மோதிரங்களையும் அழகிய கடுக்கனையும் பொன்னாலியன்ற அரை நாணையும் அணிந்து கொண்டு; திக்குஎட்டும் போற்ற - எட்டுத் திசையிலும் வாழ்கின்ற மாந்தரெல்லாம் புகழ்ந்து பாராட்டுமாறு; திசைக்கு ஒருத்தர் ஆனாலும் - தாம்பிறந்த திசையிற் பிறந்த மாந்தருள் எல்லாம் சிறந்து வாழ்ந்திருந்தாலும்; ஏமன் - கூற்றுவன்; பல்கிட்ட உயிர் பந்து ஆடும் வேளையிலே - பற்கள் கிட்டிப்போகும்படி உயிரைக் கவர்ந்து அதனைப் பந்துபோல ஆடிக்கொண்டு போம்பொழுது; கைச்சட்டம் கூட - கணக்குக் குறித்த ஓலை நறுக்குத்தானும் அவரோடு போகக் கண்டிலேமே; இத்துணைத் தொடர்பற்ற பொருளைப்பற்றிக் கிடக் கின்றனையே! என்பதாம்.

(வி - ம்.) எத்துணைச் செல்வம் பெற்றிருப்பினும் நமக்குப் பயன் படா தொழியும்; அவற்றைப் பொருளாக மதிப்பது பேதைமை காண்! என்றவாறு. (௭)

முன்னநீ செய்ததவ முப்பாலுஞ் சேருமன்றிப்
பொன்னும் பணிதிகழும் பூவையுமங் கேவருமோ
தன்னைச் சதமாகச் சற்குருவைப் போற்றாமல்
கண்ணற்ற வந்தகன்போற் காட்சியற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - என்பேதை நெஞ்சே!; முன்னம் நீ செய்த தவம் மூப்பாலும் சேரும் அன்றி - முற்பிறப்பிலே நீ செய்த தவப்பயன் மட்டுமே நின்னுடைய அம்மை இம்மை மறுமையாகிய மூன்றிடங்களினும் நின்னை எய்தி ஆக்கந்தருவதன்றி; பொன்னும் பணி திகழும் பூவையும் அங்கே வருமோ - நீ உறுதிப் பொருளாகப் பற்றிக் கிடக்கின்ற பொன் முதலிய பொருள்களும் அணிகலன்களால் திகழுகின்ற மகளிரும் அங்கு வந்துதவுதலுண்டோ; தன்னைச் சதமாக எண்ணி - நின்னையே நினக்குறு துணையாகக்கொண்டு; சற்குருவைப் போற்றாமல் - மெய்யுணர்த்தும் நல்லாசிரியனை வழிபட்டு அம்மெய்ப் பொருளைக் காணாமல்; கண் அற்ற அந்தகன்போல் காட்சியற்றாய் - கண்ணில்லாத குருடனைப்போன்று காட்சியில்லாதாய் ஆயினையே! என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சே! நீ பொருளல்லாதவற்றைப் பொருளாக மதித்து மெய்க்காட்சியற்ற குருடனாயினை என்றவாறு. (௮)

பையரவம் பூண்ட பரமர்திருப் பொற்றாளைத்
துய்ய மலர்பறித்துத் தொழுது வணங்காமல்
கையி லணிவளையுங் காலிலிடும் பாடகமும்
மெய்யென் றிறுமாந்து விட்டனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - என் நெஞ்சே!; பை அரவம் பூண்ட பரமர் திருபொன் தாளை - நச்சுப்பையையுடைய பாம்பினை அணிந்துள்ள சிவபெருமானுடைய அழகிய பொன்னிற அடிகளை, துய்ய மலர் பறித்துத் தொழுது வணங்காமல் - தூயமலர் பறித்திட்டு வணங்கி வழிபாடு செய்யாமல்; கையில் அணிவளையும் காலில் இடும் பாடகமும் – மகளிருடைய கையில் அணிகின்ற வளையல்களையும் காலில் அணிகின்ற பாடகங்களையே கண்டு அம்மகளிரையே; மெய் யென்று - உறுதிதரும் மெய்ப்பொருள் என்று மயங்கி; இறுமாந்து விட்டனையே - பெரிதும் செருக்குற்று விட்டாயே இஃதென் பேதைமை காண்! என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சே! நீ மெய்ப்பொருளுணர்ச்சி யின்றிப் பொய்ப் பொருள்களைப் பற்றிச் செருக்குற்றுக் கிடக்கின்றனை, இஃதறி யாமையே காண்! என்பது கருத்து. (௯)

மாதுக் கொருபாகம் வைத்தவரன் பொற்றாளைப்
போதுக் கொருபோதும் போற்றி வருந்தாமல்
வாதுக்குத் தேடியிந்த மண்ணிற் புதைத்துவைத்தே
ஏதுக்குப் போகநீ எண்ணினையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே – என் நெஞ்சமே!; நீ மாதுக்கு ஒரு பாகம் வைத்த அரன் பொன்தாளை - உமாதேவியார்க்குத் தன்னுடம்பி லொரு கூற்றை இடமாக்கி வைத்த நம் சிவபெருமானுடைய அழகிய அடிகளை; போதுக்கு ஒரு போதும் போற்றி வருந்தாமல் - ஒரு நாளில் ஒரு பொழுதாயினும் வாழ்த்தி வருந்திப் பேரின்பப் பெருவாழ்

வெய்துதலை விடுத்து; வாதக்குத் தேடி - பிற்காலத்தவர் தம்முள் வழக்காடுதற்குக் காரணமான பொருளைப் பெரிதும் வருந்தித்தேடி; இந்த மண்ணிற் புதைத்து வைத்து - இந்த நிலத்திலே புதைத்து வைத்து; போக எதுக்கு எண்ணினையே - வறிதே இறந்து போதற்கு என் நினைத்தாயோ? அறிகின்றிலேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சே! நீ சிவபெருமானை வழிபடுகின்றிலை; மேலும் பொருள் தேடி அறமும் செய்யாமல் அவற்றைப் புதைத்து வைத்துமிருக்கின்றாய். இவ்வாறு செய்வதற்குக் காரணம் என்னை? என்றவாறு. (௧0)

அஞ்சருளைப் போற்றி யைந்துபுல னைத்துறக்க
நெஞ்சே யுனக்கு நினைவுநான் சொல்லுகிறேன்
வஞ்சகத்தை நீக்கி மறுநினைவு வாராமல்
செஞ்சரணத் தானைச் சிந்தைசெய்வாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - என் நெஞ்சமே!; அஞ்சு அருளைப் போற்றி - ஐவகைச் சத்திகளையும் வணங்கி; ஐந்து புலனைத் துறக்க - சுவை முதலிய ஐம்புலன்களின்பாற் பற்றொழித்தற்கு; நெஞ்சே உனக்கு நான் நினைவு சொல்லுகிறேன் - உனக்கு யான் என் கருத்தினைக் கூறுவேன் கேள்; வஞ்சகத்தை நீக்கி - முற்பட நினது வஞ்சகத்தைத் துவர விடுத்து, மறுநினைவு வாராமல் - பிற பொருள்களின் நினைவு நின்னெஞ்சிற் புகாதவாறு பாதுகாத்து; செஞ்சரணத்தானைச் சிந்தை செய்வாய் - சிவந்த திருவடிகளையுடைய சிவபெருமானையே இடையறவின்றி நினைப்பாயாக என்பதாம்.

(வி - ம்.) அஞ்சருள் - பராசத்தி முதலிய ஐவகைச் சத்திகள். புலன்களில் மனம் செல்லாதடக்குதற்குச் சத்தியே இன்றியமையாமையின் அஞ்சருளைப் போற்றிப் புலனைத்துறக்க என்றார். (௧௧)

அற்புதமா யிந்தவுட லாவி யடங்குமுன்னே
சற்குருவைப் போற்றித் தவம்பெற்று வாழாமல்
உற்பத்தி செம்போன் னுடைமைபெரு வாழ்வைநம்பிச்
சற்பத்தின் வாயிற் றவளைபோ லானேனே.

(இ - ள்.) அற்புதமாய் இந்த உடல் ஆவி அடங்கும் முன்னே - வியத்தகு முறையில் இந்த வுடம்பின்கண் உயிர்ப்பு அடங்குதற்கு முன்பே; சற்குருவைப் போற்றி - உண்மையான நல்லாசிரியனைக் கண்டு வழிபாடு செய்து; தவம் பெற்று வாழாமல் - அவனருளாலே தவவொழுக்கத்தை மேற்கொண்டு மெய் வாழ்க்கை வாழாமல்; உற்பத்தி செம்பொன் உடைமை பெரு வாழ்வை நம்பி - மீண்டும் பிறத்தற்குக் காரணமான செம்பொன்னும் பிறவுமாகிய உடைமைகளாகியலுகின்ற இம்மையின் பெரிய வாழ்க்கையையே மெய் வாழ்வாக நம்பி; சற்பத்தின் வாயில் தவளைபோல் ஆனேன் - பாம்பின் வாயிலகப்பட்ட தேரை போலாகி விட்டேன் என் செய்கோ? என்பதாம்.

(வி - ம்.) மீண்டும் பிறப்பதற் கேதுவான இவ்வுலக வாழ்க்கையை நம்பித் தவஞ் செய்யாமல் பற்றுக்களால் பெரிதும் பற்றப்பட்டுக் கெட்டொழிந்தேன் என்பது கருத்து. (௧௨)

உற்ருரார் பெற்ருரார் உடன்பிறப்பார் பிள்ளைகளார்
மற்ரு ரிருந்தாலென் மாளும்போ துதவுவரோ
கற்ரு விழந்தவிளங் கன்றதுபோ லேயுருகிச்
சிற்ருகிச் சிற்றின்பஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே! உற்ருர் யார் பெற்ருர் யார் உடன்பிறப்பார் பிள்ளைகள் யார் - நெஞ்சமே! நம் சுற்றத்தார் யார் கொல்? உடன் பிறந்தார் தாம் யாவரோ கொல்? பிள்ளைகள் தாம் நமக்கு யாராகுவர்; மற்று ஆரிருந்தால் என் - இவரும் இன்னேரன்ன ஏனையோரும் ஆகிய இவர்கள் யாரிருந்தாலும் என்னும்?; மாளும்போது உதவுவரோ - யாம் உயிர் விடும்பொழுது நமக்குச் சிறிதும் உதவுவரோ? கற்ரு இழந்த இளங்கன்றது போலே உருகி - கன்றீன்ற தாய்ப்பசுவினை இழந்த அதன் இளங்கன்றது போலே, இவர் தம் மறைவின்கண் நெஞ்சுருகி; சிற்று ஆகி - சிறுமையெய்தி; சிற்றின்பம் சேர்ந்தனையே - இவர்களோடு கூடி வாழ்வதனுலுண்டாகின்ற சிற்றின்பத்தையே விரும்பி இவரோடு சேர்வாயாகினை என்பதாம்.

(வி - ம்.) மனைவி மக்களுடைய இறப்பிற்குப் பெரிதும் நெஞ்சுருகுகின்ருய்; அவராக்கம் பெற்றுழி அவரோடு வாழும் சிற்றின்பமே விரும்பி வாழ்கின்ருய். உற்ருர் முதலியோர் உயிர்விடுங் காலத்துச் சிறிதும் உதவ மாட்டார் என்க. (௧௩)

வீடிருக்கத் தாயிருக்க வேண்டுமனை யாளிருக்க
பீடிருக்க வூணிருக்கப் பிள்ளைகளுந் தாமிருக்க
மாடிருக்கக் கன்றிருக்க வைத்த பொருளிருக்கக்
கூடிருக்க நீபோன கோலமென்ன கோலமே.

(இ - ள்.) வீடு இருக்க தாய் இருக்கவேண்டும் மனையாள் இருக்க பீடு இருக்க ஊண் இருக்க - நெஞ்சமே நீ கட்டிய வீடு இருக்கவும் நின் தாய் இருக்கவும் நீ விரும்பும் மனைவி யிருக்கவும் நீ பெற்ற பெருமையெலாமிருக்கவும், நீ உண்ணும் உணவுகளிருக்கவும்; பிள்ளைகளும் இருக்க - நின் மக்களும் உளராகவும்; மாடு இருக்க கன்று இருக்க வைத்த பொருள் இருக்க - நின் மாடுகளிருக்கவும் அவற்றின் கன்றுகள் இருக்கவும், நீ பிற்காலத்திற்கு வேண்டும் எனக்குவித்து வைத்த பொருளிருக்கவும்; கூடு இருக்க - உன் உடம்பு வாடாதிருக்கவும்; நீ போன கோலம் என்ன கோலமே - நீ மட்டும் இவற்றை யெல்லாம் கைவிட்டுப் போன தன்மை என்ன தன்மையோ அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) மக்கள் உயிர் இவ்வுலக வாழ்க்கைக் கியன்றனவெல்லாம் குறைவின்றி இருக்கவே மறைந்து போவதனை நெஞ்சிற்குக் கூறியபடியாம். (௧௪)

சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் பரிமளமும்
விந்தைகளாப் பூசிமிகு வேடிக்கை யொய்யாரக்
கந்தமலர் சூடுகின்ற கன்னியருந் தாமிருக்க
எந்தவகை போனுயென் றெண்ணிலையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - பேதை மனமே! நீ; சந்தனமும் குங்குமமும் சாந்தும் பரிமளமும் விந்தைகளாப் பூசி - சந்தனம் குங்குமம் மயிர்ச்சாந்தும் பிறவுமாகிய நறுமணப் பொருள்களும் கலைத் திறமபடத் தம்மேற் பூசிக்கொண்டு; மிகுவேடிக்கை ஒய்யாரக் கந்த மலர் சூடுகின்ற - பெரிய வேடிக்கையாக ஆகுலநீரவாகிய நறுமண மலர்களையும் சூடுகின்ற; கன்னியரும் தாம் இருக்க — நின்னைவயப் படுத்த முயலுகின்ற பருவமகளிர்கள் பலரும் இருக்கவேயும்; எந்த வகை போனுய் என்று - எவ்வாறு அவர்களை மறந்து இறந்தொழிந் தாய் என்பதனை; எண்ணிலையே - ஆராய்ந்து பார்க்கின்றிலை காண்! என்பதாம்.

(வி - ம்.) இவ்வுலகத்தே வாழ்தற்குத் தொடங்கு நிலையி லுள்ள இளைஞரும கன்னியரேங்க இறந்துபடுதலை நினையின் இவ் வுலக வாழ்க்கையின் புன்மை புலப்படும் என்பது கருத்து. (௧௫)

காற்றுத் துருத்தி கடியவினைக் குள்ளான
ஊற்றைச் சடலத்தை யுண்டேன் றிறுமாந்து
பார்த்திரங்கி யன்னம் பசித்தோருக் கீயாமல்
ஆற்று வெள்ளம் போலே அளாவினையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே காற்றுத் துருத்தி கடியவினைக்கு உள்ளான ஊற்றைச் சடலத்தை-என்னெஞ்சமே! காற்றுத் துருத்தியைப் போல் வதும் கொடிய தீவினையிலகப்பட்டதும் அழுக்கு மிக்கதுமாகிய இப் புல்லிய உடலை; உண்டு என்று இறுமாந்து - நிலைத்திருப்பது என்று நினைத்துப் பெரிதும் செருக்குற்று; பார்த்து இரங்கி - உன் அண்டை யயலார்களின் வறுமை நிலையினைப் பார்த்து அவர்களுக்கு இரக்கமுற்று; பசித்தோர்க்கு அன்னம் ஈயாமல் - பசியால் நலிவோருக்குச் சோறு தானும் வழங்காமல்; ஆற்று வெள்ளம் போலே அளாவினையே - ஆற்று வெள்ளம் கரைபுரண்டோடி எங்கும் பரவுதல் போலே நீயும் ஆசையால் இவ்வுலகத்தே விரிந்து கலந்தாயே. இஃதறிவுடை மையோ? எனபதாம்.

(வி - ம்.) நெஞ்சே உடம்பின் இழிதகைமையையும் அதன் நிலை யாமையையும் நினையாது இவ்வுலகத்தையே உனதாக்கிக் கொள்ள முயல்கின்றனை. அறமோ ஒரு சிறிதும் செய்திலை இஃதென்ன பேதைமை என்பது கருத்து. (௧௬)

நீர்க்குமிழி வாழ்வைநம்பி நிச்சயமென் றேயெண்ணிப்
பாக்களவா மன்னம் பசித்தோர்க் களியாமல்

போர்க்கு ளேமதூதன் பிடித்திழுக்கு மப்போது
ஆர்ப்படுவா ரென்றே யறிந்திலேயே நேஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - என்னெஞ்சமே!; நீர்க்குமிழி வாழ்வை நிச்சயம் என்றே எண்ணி நம்பி - நீரில் தோன்றும் குமிழிபோல ஞெரேலென அழிந்து போகின்ற இவ்வுடம்பின் வாழ்க்கையை உறுதியுடையதென்று நினைத்து அதனையே பெரிதும் நம்பி; பாக்கு அளவாம் அன்னம் பசித்தோர்க்கு ஈயாமல் - ஒரு பாக்கின் அளவுடைய சோற்றையேனும் பசித்து வருவோர்க்கு வழங்காமல் வச்சையனாய் வாழ்கின்றனை; போர்க்குள் - நீ சாக்காட்டோடு போரிடுகின்ற பொழுது; எமதூதன் பிடித்து இழுக்கும் அப்போது - கூற்றுவன் தூதன் உன் உயிரைப் பிடித்து இழுக்கின்ற அச்செவ்வியிலே; ஆர்படுவார் என்று அறிந்திலேயே - அவர் இயற்றுகின்ற துன்பத்தை யெல்லாம் நீயே படுதலின்றி வேறுயார் தாம் படுவார் இதுதானும் அறிந்தாயிலேயே என்பதாம்.

(வி - ம்.) இறந்த பின்னர் ஒருவன் செய்த நல்லறமே துணையாக வந்து அவனைப் பாதுகாக்கும். அறஞ் செய்யாதாரை எமதூதர் பெரிதும் துன்புறுத்துவர். அதனை அறியின் எல்லோரும் வாழும் போதே அறஞ்செய்வர் என்பதாம். (௧௭)

சின்னஞ் சிறுநதலாள் செய்த பலவினையான்
முன்னந்த மார்பின் முளைத்த சிலந்திவிம்மி
வன்னந் தளதளப்ப மயங்கிவலைக் குள்ளாகி
அன்னம் பகிர்ந்துண்ண வறிந்திலேயே நேஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - பேதை நெஞ்சே! நீ தானும்; முன் செய்த பலவினையால் - முற்பிறப்பிலே செய்த பல்வேறு தீவினைகளின் பயனாக; அந்த சின்னஞ் சிறு நுதலாள் - அந்தச் சிறிய நெற்றியினையுடைய பெண்ணின்; மார்பின் முளைத்த சிலந்தி விம்மி வன்னம் தளதளப்ப - மார்பில் தோன்றிய சிலந்தி போன்ற முலைகள் பருத்து விம்முதலுற்றுத் தமது நிறத்தினாலே தளதள வென்று தோன்ற; மயங்கி வலைக்கு உள்ளாகி - அவற்றைக் கண்டு மயங்கிக் காமமாகிய வலையுள் அகப்பட்டுக் கொண்டமையால்; அன்னம் பகிர்ந்து உண்ண அறிந்திலை - அவளோடு வல்லாங்கு வாழ்தற்பொருட்டு வச்சையனாய்ப் பசித்து வருவோர்க்கு நீ உண்ணும் சோற்றைப் பகுத்துக் கொடுத்துண்டலால் வரும் சிறப்பினைச் சிறிதும் அறிந்தாயில்லை என்பதாம்.

(வி - ம்.) இவ்வுலகத்தே காமுற்று வாழ்வோருட் பலர் அம்மகளிரோடு நன்கு வாழ்தல் கருதியே வச்சையராகி விடுகின்றனர். அறத்தின் சிறப்பினையும் அவரறியார் என்றவாறு. (௧௮)

ஓட்டைத் துருத்தியை யுடையும் புழுக்கூட்டை
ஆட்டுஞ் சிவசித்த ருளைமிகப் போற்றியே
வீட்டைத் திறந்து வெளியையொளி யாலழைத்துக்
காட்டும் பொருளிதென்று கருதிலேயே நேஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - பேதை நெஞ்சே; ஓட்டைத் துருத்தியை - பல துளைகளையுடைய தோல் துருத்தியை ஒத்ததும்; உடையும் புழுக்கூட்டை - ஞெரேலென உடைந்தழிகின்ற புழுக்கள் உறைகின்ற கூடும் ஆகிய இந்த வுடம்பை; ஆட்டும் சிவசித்தர் - நின்வினைக் கேற்ப இயக்குகின்ற சிவபெருமானாகிய வாலறிவனுடைய; அருளைமிகப் போற்றி - திருவருளைப் பெரிதும் வழிபாடாற்றி; வீட்டைத் திறந்து - தாம் அழியாமல் நிலைத்துப் பேரின்பப் பெருவாழ்வு எய்தற்குரிய வீட்டுலகின் கதவுகளைத் திறந்து; வெளியை அழைத்து ஒளியால் காட்டும் - நமக்குள்ளே அறிவு வெளியினை நம்முள்ளே வரவழைத்து அத்திருவருளாகிய ஒளியினாலே காட்டுதற்குரிய; பொருள் இஃதென்று கருதிலை - கருவியாகிய ஒரு சிறந்த பொருளாகும் என்று நீ நினைத்தா யில்லை காண் என்பதாம்.

(வி - ம்.) உடம்பு இறைவனை வழிபாடு செய்து வீடுபேறு எய்துதற்கு இறைவனால் வழங்கப்பட்டதொரு சிறந்த கருவியாகும். இவ்வுண்மையை புணராமல் நீ வாழ்நாளை வீணாக்குகின்றனை என்பது கருத்து. (௧௯)

ஊன்பொதிந்த காயம் உலைந்த புழுக்கூட்டைத்
தான்சுமந்த தல்லானீ சற்குருவைப் போற்றுமற்
கான்பரந்த வெள்ளங் கரைபுரளக் கண்டேகி
மீன்பரந்தாற் போலே விசாரமுற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - பேதை நெஞ்சே!; நீ ஊன் பொதிந்த காயம் - தசையாற் கட்டப்பட்ட இவ்வுடம்பாகிய; புழு உலைந்த கூட்டை - புழுக்கள் நெளிகின்ற கூட்டினை; சுமந்த தல்லால் - வாளாது சுமந்து திரிவதன்றி; சற்குருவைப் போற்றுமல் - இவ்வுடம்பாலாய பயனைப்பெறும் பொருட்டு உண்மையான ஞானாசிரியரை யடைந்து வழிபாடு செய்துய்யாமல்; கான் பரந்த வெள்ளம் - காட்டகத்தே பரவிய வெள்ளமானது; கரைபுரளக் கண்டு ஏகி - கரை புரண்டு ஒழுகுதலைக் கண்டு மகிழ்ந்து அவ்வெள்ளத்தினுட் புகுந்து; மீன் பரந்தாற்போலே - மீன்கள் பரவிச்சென்று வெள்ளம் வடிந்த பின்னர்க் காட்டிலகப்பட்டு வருந்துமாறு போலே; விசாரமுற்றாய் - நின் ஆசைப் பெருக்கினுட் புகுந்து மனம்போனவாறு சென்று பெருங் கவலைப்பட்டாயல்லையோ? அளியை காண்! என்பதாம்.

(வி - ம்.) உயரிய மக்கள்யாக்கை பெற்ற நீ அதன் பயனைப் பெற முயலாது அதைச் சுமந்து வருந்தினாய், ஆசை வழியோடி அல்லலும் எய்தினை காண்! என்றிரங்கிய படியாம். காட்டு வெள்ளத்திலேறிச் சென்ற மீன் வெள்ளம் வடிந்த பின்னர் நீர்நிலை காணாது வருந்திமாளுதலியல்பாகலின் உவமையாக்கினர். (௨௦)

உடக்கை யொருக்கி யுயிரை யடைத்துவைத்த
சடக்கைச் சதமென்று சார்ந்தங் கிறுமாந்தை
உடக்கைத் தகர்த்தே யுயிரையெமன் கொள்கையிலே
அடக்கமாய் வைத்தபொரு ளங்குவர மாட்டாதே.

(இ - ள்.) உயிரை யடைத்து உடக்கை ஒருக்கிவைத்த சடக்கை-நெஞ்சமே நீ உயிரை உள்ளே அடைத்துப் பிராணன் என்னும் ஒரு திருகாணியைத் திருகி அவ்வுயிர் வெளிப்படாதபடி அடக்கி வைக்கப் பட்டிருக்கின்ற இந்த சடப்பொருளாகிய உடம்பை; சதம் என்று சார்ந்து அங்கு இறுமாந்தை - மெய்ப்பொருளாக நினைத்து அதனைச் சார்ந்து பெரிதும் செருக்குற்றனை காண்!: உடக்கைத் தகர்த்து உயிரை எமன் கொள்கையிலே - அந்தத் திருகாணியைச் சிதைத்து உயிரைக் கூற்றுவன் கைக்கொள்ளும் பொழுது; அடக்கமாய் வைத்த பொருள் அங்கு வரமாட்டாது - நீ உடம்பைப் பேணும் பொருட்டு அறஞ்செய்யாது மறைத்து வைத்த செல்வம் அக்கூற்றுவனுலகிற்கு வந்துனக்கு உதவியாகாது காண் என்பதாம்.

(வி - ம்.) உடக்கு - திருகாணி. ஈண்டுப் பிராணனைத் திருகாணியாக உருவகித்தவாறு. அறம் செய்யாமல் மறைத்து வைத்த பொருள் பிற்காலத்தே உதவாது, அதனால் செய்த அறமே பொன்றுங் காற் பொன்றாத்துணை என்றவாறு. (உக)

தித்திக்குந் தேனைத் தெவிட்டாத தெள்ளமுதை
முத்திக்கு வித்தான முப்பாழைப் போற்றாமல்
பற்றிப் பிடித்தியமன் பாசத்தாற் கட்டும்வண்ணம்
சுற்றி யிருக்கும்வினை சூழ்ந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - பேதை நெஞ்சே; தித்திக்குந் தேனை-நினைக்குந் தோறும் தித்திக்கும் தேன் போன்றதும்; தெவிட்டாத தெள் அமுதை - சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாத தெளிந்த அமிழ்தம் போன்றதும் ஆகிய; முத்திக்கு வித்து ஆன முப்பாழைப் போற்றாமல் - வீட்டுலகிற்புக்கு முளைப்பதற்கு விதையாகிய மூவகை மாயைகட்கும் அப்பாலாகிய முதல்வனை வணங்காமல்; யமன் பற்றிப் பிடித்துப் பாசத்தால் கட்டும் வண்ணம் - நீயோ நின்னைக் கூற்றுவன் தன் கையாற்பற்றிப் பிடித்துத் தன் கயிற்றாலே கட்டிக்கொண்டு போகும் படி; சுற்றி இருக்கும் வினை சூழ்ந்தனையே - உன்னைச் சுற்றிக்கொண் டிருக்கின்ற தீவினைகளையே செய்து கொண்டனையே இனி என் செய்வது என்பதாம்.

(வி - ம்.) மக்கள் யாக்கை பெற்ற நீ அதன் பயனைப் பெறாமல் கூற்றுவன் ஒறுத்தற்கியன்ற தீவினைகள் பலவும் செய்து கொண் டனையே என்றிரங்கியவாறு. (உஉ)

அஞ்செழுத்தா யெட்டெழுத்தா யைம்பத்தோ ரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தாய் நின்ற பெருமானைப் போற்றாமல்
வஞ்சகமா யுற்றமுலை மாதர்வலைக் குள்ளாகிப்
பஞ்சரித்துத் தேடிப் பாழுக் கிறைத்தோமே.

(இ - ள்.) அஞ்சு எழுத்தாய் எட்டு எழுத்தாய் ஐம்பத்தோர் அட்சரமாய்-நெஞ்சமே! யாம் திருவைந் தெழுத்தாகவும் எட்டு எழுத்தாகவும் ஐம்பத்தோரெழுத்தாகவும்; பிஞ்சு எழுத்தாய் நின்ற பெருமானைப்

போற்றுமல்-சத்தி எழுத்தாகவும் நம்மனோர் மொழிக்குள்ளும் புகுந்து நம்பொருட்டு அணுக்கனாய் நின்ற சிவபெருமானை வழிபாடு செய்துய்யாமல்; வஞ்சகமாய் உற்ற முலை மாதர் வலைக்கு உள் ஆகி - நம்பால் வஞ்ச நெஞ்சத்தோடு வந்துற்ற முலைகளையுடைய மாதராசையாகிய வலையுளகப்பட்டு; பஞ்சரித்து - அவர்கட் கிச்சகம்பேசி அவர்க்கிதற்குப் பொழுதெல்லாம் பொருள்தேடு மாற்றால்; பாழுக்கு இறைத்தோம் - நம் வாழ்நாளை வீணுக்கி விட்டோமே! என்பதாம்.

(வி - ம்.) இறைவன் மனத்தையும் மொழியையும் கடந்தவனாயினும் நம்பா லருள்கூர்ந்து ஐந்தெழுத்து முதலிய மந்திரவுருவில் வந்து மனத்திற்கும் மொழிக்கும் உள்ளாகி நின்றனன் என்றவாறு. (௨௩)

அக்கறுகு கொன்றைதும்பையம் புலியுஞ் சூடுகின்ற
சொக்கர் திருத்தாளைத் தொழுது வணங்காமல்
மக்கள்பெண்டிர் சுற்றமுடன் வாழ்வைமிக நம்பியன்பாய்
எக்காலமு முண்டென் றெண்ணினையே நெஞ்சமே

(இ - ள்.) நெஞ்சமே - பேதை நெஞ்சமே நீ; அக்கு அறுகு கொன்றை தும்பை அம்புலியும் சூடுகின்ற - அக்கமாலையையும் கொன்றைமலர் மாலையையும் தும்பை மாலையையும் பிறையையும் அணிகின்ற; சொக்கர் திருத்தாளைத் தொழுது வணங்காமல் - சொக்கலிங்கப் பெருமானுடைய அழகிய அடிகளைத் தொழுது வணங்கியுய்யாமல்; மக்கள் பெண்டிர் சுற்றமுடன் வாழ்வை மிக நம்பி - மக்களையும் மனைவியையும் சுற்றத்தாரையும் இவர்களோடு கூடி வாழும் வாழ்க்கையினையும் பெரிதும் நம்பி; எக்காலமும் உண்டு என்று எண்ணினையே - இவ்வாழ்க்கை நமக்கு எப்பொழுதும் நிலைத்திருக்கும் என்றும் நினைக்கின்றனையல்லையோ? இஃதென்ன மடமை என்பதாம்.

(வி - ம்.) இவ்வுலக வாழ்க்கை அழிந்தொழிவதனைக் காட்சியளவையாற் கண்டிருந்தும் அதனை அழியாததென் றெண்ணுதல் எத்தனை அறியாமை என்பது கருத்து. (௨௪)

ஆண்ட குருவி னருளை மிகப்போற்றி
வேண்டுங் கயிலாய வீட்டுவழி பாராமல்
பூண்டகுழன் மாதுநல்லார் பொய்மாய்கைக் குள்ளாகித்
தூண்டி லகப்பட்டுத் துடிகேண்டை யானேனே.

(இ - ள்.) ஆண்ட குருவின் அருளை மிகப் போற்றி - அந்தோ! அடியேனை வலியவந்து ஆட்கொண்டருளிய ஞானசிரியனுடைய திருவருளைப் பெரிதும் பேணி; வேண்டும் கயிலாய வீட்டுவழி பாராமல் - என் உயிர் வேண்டுகின்ற கயிலாயமாகிய வீட்டுலகத்திற்குச் செல்லும் வழியை ஆராயாமல் என் அறியாமையாலே; பூண்ட குழல் மாது நல்லார் பொய் மாய்கைக்குள் ஆகி - இருமயிரையுடைய அழகிய மகளிருடைய வறும் பொய்யேயாகிய மாயையுட் சிக்கி; தூண்டில் அகப்பட்டுத் துடிகெண்டை ஆனேனே - தூண்டிலிரையை விழுங்கி

யகப்பட்டுக்கொண்டு தூண்டிலில் அகப்பட்டுக்கொண்டு துன்பத்தால் துடிக்கின்ற கெண்டை மீனைப் போலாகி விட்டேன்! என்பதாம்.

(வி - ம்.) ஆசிரியனருளால் பேரின்ப வீடு பெறுதற்கு முயலாமல் காமத்தாலே மாயையி லகப்பட்டுக்கொண்டு பெரிதும் வருந்துகின்றேன் என்றவாறு. (௨௫)

ஏணிப் பழுவா மிருளையறுத் தாளமுற்றும்
பேணித் தொழுங்கயிலை பேறுபெற மாட்டாமல்
காணவரும் பொருளாய்க் கண்கலக்கப் பட்டடியேன்
ஆணியற்ற மாமரம்போ லாகினேனே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - என்னெஞ்சே!; இருளை அறுத்து ஆள - நமது இருள் மலத்தை ஒழித்து நம்மை ஆட்கொள்ளுதற்கு நம்மாசிரியன் அறிவுறுத்தவை; முற்றும் ஏணிப்பழுவாம் - வீட்டுலகில் ஏறுதற்கு முழுவதும் ஏணியின் படிகளையே ஒப்பனவாம்; பேணி - அடியேன் அவற்றைப் பேணி; தொழும் கயிலை பேறுபெற மாட்டாமல் - அமரரும் தொழுகின்ற கயிலாயமாகிய அவ்வீட்டுலகில் ஏறிப் பேரின்பமாகிய பேற்றினைப் பெறமாட்டாமல்; காண அரும் பொருளாய் - அந்தப் பேறு இப்பொழுது காண்டற்கரிய பொருளாகி விட்டமையாலே; அடியேன் ஆணியற்ற மாமரம்போல் ஆகினேன் - அடியேன் ஆணி வேர் அற்ற மாமரம் போன்று வீழ்ச்சியுற்றேன் காண்! என்செய்கோ?

(வி - ம்.) முற்றும் ஏணிப்பழுவாம் என மாறி வேண்டுவன வருவித்தோதுக. (௨௬)

கோத்துப் பிரகாசங் கொண்டுருகி யண்டமெல்லாம்
காத்த படியே கயிலாயஞ் சேராமல்
வேற்றுருவப் பட்டடியேன் வெள்ளம்போ லுள்ளுருவி
ஏற்றுங் கழுவி லிருந்தபிண மானேனே.

(இ - ள்.) பிரகாசங்கொண்டு கோத்து உருகி அண்டம் எல்லாம் காத்தபடியே - சிவபெருமான் தன் திருவருளொளியிலே அனைத்துயிரையும் கோத்து உள்ளமுருகி எல்லா வண்டத்து மிகுந்த அவ்வுயிரை யெல்லாம் பாதுகாத்தபடியே யானும் எல்லாவுயிரையும் அருளாலிணைத்துப் பாதுகாக்கும் அவ்வருள் நெறியாலேயே; கயிலாயம் சேராமல் - வீட்டுலகத்தைப் பெறமாட்டாமல்; அடியேன் வேற்றுருவம் கொண்டு - அடியேன் அருள்நெறிக்கு மாறுபட்டுச் செல்லும் அவாவுருவுடையேனாய்; உள் வெள்ளம் போல் உருகி - துன்பத்தாலே நெஞ்சம் மிகவும் உருகி; ஏற்றும் கழுவில் இருந்த பிணம் ஆனேன் - குற்றஞ்செய்தாரை ஏற்றுகின்ற கழுமரத்திலே உயிர் நீங்கிய பின்னரும் இருக்கின்ற பிணம் போன்றிருக்கின்றேனே! என்பதாம்.

(வி - ம்.) இறைவன் தன் அருளாலே அனைத்துயிரையும் காக்குமாறு போலே அடியேனும் அனைத்துயிர்க்கும் அருள்புரியுமாற்றாலே

வீடுபே றெய்தாமல் அவாவழிச் சென்று உயிரற்ற பிணம் போன்றிருக்கின்றேன் என்றவாறு. (உஎ)

நிலைவிட் டுடலையுயிர் நீங்கி யகலுமுன்னே
சிலைதோட்ட வேடனெச்சில் தின்றானைச் சேராமல்
வலைபட் டுழலுகின்ற மான்போற் பரதவித்துத்
தலைகெட்ட நூலதுபோற் றட்டழிந்தாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - என் நெஞ்சே; உயிர்நிலை விட்டு உடலை நீங்கி அகலும் முன்னே - உயிரானது தான் நிற்கும் நிலைதவறி நம் முடம்பை நீங்கிப் போதற்கு முன்னரே; சிலை தொட்ட வேடன் எச்சில் தின்றானைச் சேராமல் - வில்லை எடுத்த வேடனாகிய கண்ணப்பன் வாயிலிட்டுச் சுவைத்துக் கொடுத்த எச்சிலாகிய ஊனைத் தின்றபேரருளாளனாகிய சிவபெருமான்பாற் றஞ்சம் புகுதாமல்; வலைபட்டுழலுகின்ற மான்போல் பரதவித்து - வலையிலே அகப்பட்டலலுறுகின்ற மான்போன்று வருந்தி; தலைகெட்ட நூலதுபோல் தட்டழிந்தாய் - தலை தடுமாறிப்போன நூல் போன்று தட்டுக்கெட்டழிந்தனையே! என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சே! ஆவியார் போமுன்னே இறைவனை வணங்கி யுய்யாமல் மாயையாகிய வலையிலகப்பட்டுப் பெரிதும் சுழலுகின்றாய்! என்றவாறு. (உஅ)

முடிக்குமயிர்ப் பொல்லா முழுக்குரம்பை மின்னாரின்
இடைக்கு நடைக்கு மிதங்கொண்ட வார்த்தைசொல்லி
அடிக்கொண்ட தில்லைவனத் தையனே நாயனையேன்
விடக்கை யிழந்த மிருகமது வானேனே.

(இ - ள்.) அடிக்கொண்ட தில்லை வனத்து ஐயனே - கூத்தாடுகின்ற திருவடிகளையுடைய திருத்தில்லையிலே எழுந்தருளி யிருக்கின்ற முதல்வனே!; நாய் அனையேன் - நாய்போலும் கீழ்மையுடைய யான்; மயிர் முடிக்கும் முழு பொல்லா குரம்பை மின்னாரின் - இடுமயிரிட்டுக் கூந்தலை முடிக்கின்ற முழுவதும் பொல்லாங்கேயுடைய வுடம்பையுடைய விலைமகளிரின்; இடைக்கும் நடைக்கும் இதங்கொண்ட வார்த்தை சொல்லி - அல்குலின் பொருட்டும் நடையழகின் பொருட்டும் அவர்க்கின்பமான மொழிகளையே சொல்லி; விடக்கை இழந்த மிருகமது ஆனேனே - தான் கௌவியிருந்த இறைச்சியை இழந்துவிட்ட நாய்போல ஆகிவிட்டேன் காண்! அடியேனை ஆட்கொண்டருள்க! என்பதாம்.

(வி - ம்.) நீரிற்றுள்ளிய மீனை விரும்பி வாயிலிருந்த இறைச்சியைக் கரையிலிட்டுச் சென்ற நாய் அவ்விறைச்சியைப் பருந்து கொடுபோக இழந்து வருந்தியது என்னும் கதை கருதியது. விடக்கை யிழந்த மிருகம் என்பது. (உக)

பூவாணர் போற்றும் புகழ்மதுரைச் சொக்கரது
சீர்பாதம் போற்றிச் சிவலோகஞ் சேராமல்
தாவாரந் தோறுந் தலைபுகுந்த நாய்போலே
ஆகாத நெஞ்சமே யலைந்து திரிந்தாயே.

(இ - ள்.) ஆகாத நெஞ்சமே - ஆக்கமெய்த வறியாத பேதை நெஞ்சே; பூவாணர் போற்றும் புகழ் மதுரைச் சொக்கரது - இந்நில வுலகத்திலே வாழுகின்ற சான்றோர் வணங்கும் புகழ்மிக்க மதுரையி லெழுந்தருளிய சொக்கலிங்கப் பெருமானுடைய; சீர்பாதம் போற்றிச் சிவலோகம் சேராமல் - சிறந்த திருவடியை வணங்கிச் சிவலோகமாகிய வீட்டுலகத்தை அடையாமல்; தாவாரம் தோறும் தலைபுகுந்த நாய் போலே - இல்லங்களின் தாழ்வாரந்தோறும் தலையை நுழைத்துத் திரிகின்ற நாயைப்போலே; அலைந்து திரிந்தாயே - அங்குமிங்கும் அலைந்து திரிந்து கெட்டொழிந்தனையே; என்பதாம்.

(வி - ம்.) தாவாரம் - தாழ்வாரம். இறைவனை வணங்கியுய் யாமல் அவாவழியோடி அலைந்து கெட்டனை என்பது கருத்து. (௩௦)

பத்தேட்டா யோரைந்தாய்ப் பதின்மூன் றையுங்கடந்
தோத்திட்டு நின்றதோ ரோவியத்தைப் போற்றாமல்
தேத்திட்டு நின்ற திரிகண்ணுக் குள்ளாகி
வித்திட்டாய் நெஞ்சே விடவு மறியாயே.

(இ - ள்.) நெஞ்சே - என் னெஞ்சமே நீ; பத்து எட்டு ஓர் ஐந்தாம் பதின்மூன்றையும் கடந்து - முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து; ஒத்திட்டு நின்றதோர் ஓவியத்தைப் போற்றாமல் - அனைத்தினும் அதுவதுவாய்ப் பொருந்தி நிற்கின்ற ஒப்பற்ற ஓவியம் போன்ற சிவ பெருமானை வணங்காமல்; தெத்திட்டு நின்ற திரிகண்ணுக் குள்ளாகி - நின்னை ஏமாற்றி நிற்கின்ற யாண்டும் திரிகின்ற கட்புலனுக் காட்பட்டு வித்திட்டாய் - நின் அறிவினைப் புறவுலகத்தே விதைத்து விட்டனை; விடவும் அறியாய் - அப்புறவுலகத்தை விடவும் வழியறிந்தாயில்லை காண்! என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சே நீ நின் ஞானக்கண்ணாலே இறைவனைக் காணாமல் புறக்கண் காட்டிய மாயையிலகப்பட்டனை. அதனை விட்டுய்யும் நெறியும் அறிந்திலை என்பது கருத்து. (௩௧)

அஞ்சுட னேழாகி யைம்மூன்று மெட்டுமொன்றாய்
மிஞ்சி யிருந்த விளக்கொளியைப் போற்றாமல்
பஞ்சிலிடு வன்னியைப்போற் பற்றிப் பிடியாமல்
நஞ்சுண்ட கெண்டையைப்போல் நானலைந்து கெட்டேனே.

(இ - ள்.) அஞ்சுடன் எழுஆகி ஐ மூன்றும் எட்டும் ஒன்று ஆய் - முப்பத்தாறு தத்துவங்களும் ஆகி; மிஞ்சி இருந்த விளக்கு ஒளியைப்

போற்றுமல் - அப்பாலாகவு மிருந்த சிவமாகிய விளக்கினது ஒளியாகிய திருவருளை அடியேன் வணங்கிப் பேரின்ப வீடெய்தாமலும்; பஞ்சில் இடு வன்னியைப்போல் நான் பற்றிப் பிடியாமல் - அத்திருவருளுதவியால் சிவத்தின் திருவடிகளைப் பஞ்சுப்பொதியி லிடப்பட்ட தீயானது விரைந்து பற்றுதல் போலே யானும் ஆர்வத்துடன் விரைந்து பற்றிக் கொள்ளாமல்; நஞ்சு உண்ட கெண்டையைப்போல் அலைந்து கெட்டேனே - நஞ்சுதின்ற கெண்டைமீன் துன்பந்தாளாமல் அலையுமாறு போலே பெரிதும் வருந்தித் திரிகின்றேனே! என்பதாம்.

(வி - ம்.) தத்துவங்களாகி அவற்றிற்கு அப்பாலும் இருந்த சிவமாகிய விளக்கின் ஒளியாகிய திருவருளைப்போற்றி அதனுதவியால் யான் இறைவன் திருவடிகளைப் பற்றுமல் வருந்தினேன் என்றவாறு. (௯௨)

ஊன முடனே யுடையும் புழுக்கூட்டை
மானமுட னேசுமந்து மண்ணுலகின் மாளாமல்
ஆனதொரு பஞ்சவர்க ளாண்டிருந்த தேசம்விட்டுப்
போனதுபோ லேநாம் போய்ப்பிழைத்தோ மில்லையே.

(இ - ள்.) ஊனம் உடனே உடையும் புழுக்கூட்டை - நெஞ்சே! காம முதலிய குற்றங்களோடிருந்து என்றேனும் ஒருநாள் இறந்து வீழும் உடம்பாகிய இந்தப் புழு மிகுந்த கூட்டினை; மானமுடனே சுமந்து - மானக்குணத்தோடே சுமந்து திரிந்து; மண்ணுலகில் மாளாமல் - இந்நிலவுலகத்தே மாண்டொழியாமல்; ஆனதொரு பஞ்சவர்கள் ஆண்டிருந்த தேசம் விட்டு - குருகுலத்தவர் ஆன ஒப்பற்ற பாண்டவர்கள் தீயவரை விட்டுத் தாம் ஆட்சி செய்த நாட்டினையும் கைவிட்டு; போனதுபோலே - தாமும் அறமுமாய்க் காட்டிற்குப்போனாற் போன்று; நாம் போய்ப் பிழைத்தோம் இல்லையே - யாமும் காம முதலிய தீமைகளைக் கைவிட்டு நன்னெறியிலே சென்றுய்ந்தோமில்லையே! என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சமே! யாம் வீணாக இவ்வுடம்பைச் சுமந்து திரிந்து சாகப்போகின்றோ மன்றிப் பாண்டவர்கள் தீயோரை ஒருவிக் காட்டிற் சென்று அறவாழ்வுடையரானாற் போன்று, யாமும் தீமையை விட்டு அறநெறி நடந்தோ மில்லையே என்றவாறு. (௯௩)

ஊறை யிறைக்கின்ற வுப்பிருந்த பாண்டத்தை
நாறுமல் நாறி நழுவும் புழுக்கூட்டை
வீறும் புரத்தை விரும்புகின்ற தேப்படியேன்
றூறுத நாட்டி லகன்றிருந்தே னில்லையே.

(இ - ள்.) ஊறை இறைக்கின்ற உப்பு இருந்த பாண்டத்தை - தன்னுள்ளே ஊறுகின்ற மலங்களைச் சொரிகின்றதும் உப்பு வைத்திருந்த மட்பாண்டம் நாளடைவிலே அழிவதுபோன் றழிகின்றதும், நாறுமல் நாறி நழுவும் புழுக்கூட்டை - குளித்தல் முதலிய தொழிலால் நாறுததுபோற் றேன்றினும் இயல்பாகவே தீ நாற்றம் நாறி என்

றேனும் ஒருநாள் இறந்தொழிவதும்; வீறு ஆம் புரத்தை - செருக்குக் குடியிருக்கின்ற நகரம் போன்றதும் ஆகிய இவ்வுடம்பை; எப்படி விரும்புகின்றது என்று - அறிவுடைய யாம் விரும்புவது எங்ஙனம் என்று ஆராய்ந்து கைவிட்டு; ஆறாத நாட்டில் அகன்று - இன்பந் தணியாத வீட்டுலகிலே சென்று; இருந்தேன் இல்லை - நிலைபெற் றிருந் தேனில்லையே! என்பதாம்.

(வி - ம்.) இவ்வுடம்பின் புன்மை முழுது மறிந்திருந்தும் இதனைப் பேணாமல் நன்னெறி நடந்து வீடு பெற்றேனில்லையே என்பது கருத்து. (௩௪)

அரிய வரிதேடி யறியா வொருமுதலைப்
பரிவுடனே போற்றும் பரஞ்சுடரைப் போற்றாமல்
கரியபெரு வாழ்வைநம்பிக் காமத் தழுந்தியே
அரிவாயிற் பட்ட கரியதுபோ லானேனே.

(இ - ள்.) அரிய அரிதேடி அறியா ஒருமுதலை - அமரர்கட்கும் காண்டற்கரிய திருமாலே தேடியும் காணமாட்டாத தனிப்பெரு முதல் வனும்; பரிவுடனே போற்றும் பரஞ்சுடரைப் போற்றாமல்—சான்றோர் கள் அன்புடனே வழிபடுகின்ற உயர்ந்த அறிவு ஒளிப்பிழம்புமாகிய சிவபெருமானை வழிபாடு செய்துய்யாமல்; கரிய பெருவாழ்வை நம்பி - தீவினையாலே இருண்ட பெரிய இவ்வுலக வாழ்க்கையினை உறுதி புடைத்தென்று நம்பி; காமத்து அழுந்தியே - ஆசையளற்றினுள் அழுந்தி; அரிவாயில் பட்ட கரியதுபோல் ஆனேன் - அரிமாவின் வாயிலகப்பட்ட யானைபோன்று உய்யும் வழியறியேனாயினேன்.

(வி - ம்.) மக்கள் யாக்கையிற் பிறந்ததற்கேற்ப இறைவனை வழி பாடு செய்துய்யாமல் இவ்வுலக வாழ்க்கையை நம்பி ஆசைச் சேற்றி லழுந்திக் கரையேற மாட்டாது கிடக்கின்றேன் என்பது கருத்து. (௩௫)

தந்திரத்தை யுன்னித் தவத்தை மிகநிறுத்தி
மந்திரத்தை யுன்னி மயங்கித் தடுமாறி
விந்துருகி நாதமா மேலொளியைக் காணாமல்
அந்தரத்தே கோலெறிந்த வந்தகன்போல் ஆனேனே.

(இ-ள்.) தந்திரத்தை யுன்னித் தவத்தை மிக நிறுத்தி-சைவாகம முறையைக் கருதி யான் மேற்கொண்டொழுகிய தவவொழுக்கத்தைப் பெரிதும் நிறுத்தி விட்டுப் பின்னர்; மந்திரத்தை உன்னி - வேத மந்திரம் ஓதும் முறையை மேற்கொள்ள நினைத்து; மயங்கித் தடுமாறி- அம்மந்திரங்கள் கூறும் பரம்பொருளைத் தெளிந்து கொள்ளாமல் மயங்கி நெறிதடுமாறி; விந்து உருகி நாதம் ஆம்மேல் ஒளியைக் காணாமல் - விந்துருகி ஒலியாகின்ற உயர்ந்த ஒளிப்பிழம்பாகிய இறை வனைக் காணாமையாலே; அந்தரத்தே கோல் எறிந்த அந்தகன்போல் ஆனேனே - தனக்கு வழிகாட்டுதற்குரிய கைக்கோலை வெளியிலே எறிந்து விட்டுத் தடுமாறுகின்ற குருடனைப்போல் ஆகிவிட்டேன்.

(வி - ம்.) ஒரே கடவுள் வழிபாடு கூறுகின்ற சிவாகம நெறியை விட்டுப் பல்வேறு கடவுளுக்கும் பரத்துவம் கூறுகின்ற வேதவழிப் பட்டு மயங்கினேன் என்பது கருத்து. (௧௬)

விலையாகிப் பாணனுக்கு வீறடிமைப் பட்டதுபின்
சிலையார்கை வேடனெச்சில் தின்றானைப் போற்றாமல்
அலைவாய்த் துரும்பதுபோ லாணவத்தி னலழுங்கி
உலைவாய் மெழுகதுபோ லுருகினையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - பேதை நெஞ்சே!; பாணனுக்கு விலை ஆகி வீறு அடிமைப்பட்டு - பாணபத்திரன் அன்பிற்குத்தானே விலைப் பொருளாகிச் சிறந்த அடிமையும் பட்டு; அது பின் - அதன் பின்னர். சிலை யார்கை வேடன் எச்சில் தின்றானைப் போற்றாமல் - வில்லேந்திய கையையுடைய வேடனாகிய கண்ணப்பன் எச்சிலையும் தின்றவனாகிய சிவபெருமானை வணங்காமல்; அலைவாய்த் துரும்பதுபோல் - கடலலையிலகப்பட்ட துரும்புபோல; ஆணவத்தில் அழுங்கி - இருள் மலத்திலே வருந்தி; உலைவாய் மெழுகதுபோல் உருகினையே - பெரிதும் துன்பமுற்று உலையிலிட்ட மெழுகுபோலே நெஞ்சழிந்தாயன்றோ என்பதாம்.

(வி - ம்.) அன்புடையார்க்கு எளியவனாகிய சிவபெருமானுக்கு அன்பு செலுத்தி இன்புறாமல் ஆணவ மலத்தாற் கட்டுண்டு பெரிதும் அல்லலுறுகின்றனை காண்! என்பது கருத்து. (௧௭)

நெஞ்சொடு புலம்பல் முற்றிற்று.

பூரணமாலை

மூலத் துதித்தெழுந்த முக்கோணச் சக்கரத்துள்
வாலைதனைப் போற்றாமல் மதிமறந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே - எங்கும் நிறைந்த மெய்ப்பொருளே!; மூலத்து உதித்து எழுந்த முக்கோண சக்கரத்துள் - மூலாதாரத்தில் தோன்றிய மூன்று மூலைகளையுடைய சக்கரத்துள் எழுந்தருளிய; வாலைதனைப் போற்றாமல் - இறைவியை வழிபடாமல்; மதி மறந்தேன் - அறிவு கெட்டுப்போனேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) மூலாதாரம் எருவாய்க்கும் கருவாய்க்கும் இடையிலுள்ளது. இவ்விடத்திருந்தே ஆற்றல் எழுகின்றது. ஆற்றல் - சத்தி; இறைவி இந்தச் சக்தியை வளர்த்தே வீடுபேறெய்துதல் வேண்டும்; யான் அதனை வழிபட்டிலேன் என்றவாறு. (௧)

உந்திக் கமலத் துதித்துநின்ற பிர்மாவைச்
சந்தித்துக் காணமற் றட்டழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே - நிறைவான பரம்பொருளே!; உந்திக் கமலத்து உதித்த நின்ற பிர்மாவை - கொப்பூழாகிய தாமரையில் தோன்றி நிலைபெற்ற பிரமனை; சந்தித்துக் காணமல் - யோக முயற்சியிலுலே; நன்கு கண்டுய்யாமல்; தட்டு அழிந்தேன் - தடுமாற்ற மெய்தினேன் காண் என்பதாம்.

(வி - ம்.) உந்திக் கமலம் - கொப்பூழாகிய தாமரை மலர். (உ)

நாவிக் கமல நடுநேடுமால் காணமல்
ஆவிகெட்டு யானும் அறிவிழந்தேன் பூரணமே.

(இ - ள்) பூரணமே :—யான் நாவிக் கமலநடு நெடுமால் காணமல் - அடியேன் மணிபூரகத்தின் நடுவே வீற்றிருக்கும் திருமாலைக் கண்டு வழிபடாமல்; ஆவிகெட்டு அறிவு இழந்தேன் - பிராணனைக் கெடுத்து அறிவிழந்து போனேன் காண் என்பதாம்.

(வி - ம்.) நாபி - மணிபூரகம். ஆவி - உயிர்ப்பு. யோகநிலையில்லாமையால் உயிர்ப்புப் பிறழ்ந்தியங்கிக் கெட்டது என்பது கருத்து. (௩)

உருத்திரனை யிருதயத்தில் உண்மையுடன் பாராமல்
கருத்தழிந்து நானும் கலங்கினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—இருதயத்தில் உருத்திரனை உண்மையுடன் பாராமல் - அடியேன் என் நெஞ்சத் தாமரையில் எழுந்தருளிய உருத்திரனை மெய்யன்புடன் நோக்காமையால்; கருத்து அழிந்து கலங்கினேன் - நினைவு மயங்கிக் குழப்ப மெய்தினேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) இருதயம் - நெஞ்சத் தாமரை. உண்மை - மெய்யன்பு. (௪)

விசுத்தி மயேசுரனை விழிதிறந்து பாராமல்
பசித்துருகி நெஞ்சம் பதறினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—விசுத்தி மயேசுரனை விழிதிறந்து பாராமல் - விசுத்தித் தானத்தில் எழுந்தருளி யிருக்கும் மயேசுரனை ஞானக் கண்ணைத் திறந்து நோக்காமையாலே; பசித்து உருகி நெஞ்சம் பதறினேன் - வயிற்றுப்பசி புண்டாகித் துயருற்று உருகி நெஞ்சு பதறிப் போனேன் என்பதாம்.

(வி - ம்.) விசுத்தியில் மயேசுரன் தேவியோடெழுந்தருளி யிருப்பர் என்க. (௫)

நேற்றி விழியுடைய நிர்மல சதாசிவத்தைப்
பத்தியுடன் பாராமல் போறியழிந்தேன் பூரணமே.

(இ - ள்) பூரணமே :—நெற்றி விழியுடைய நிர்மல சதாசிவத்தை - நெற்றிக் கண்ணையுடைய மலமற்ற சதாசிவத்தை; பத்தி

யுடன் பாராமல் பொறி யழிந்தேன் - அன்போடு நோக்காமையால் அறிவழிந்து போனேன் காண் என்பதாம்.

(வி - ம்.) சதாசிவம் ஆஞ்ஞை என்னும் தானத்திலிருப்பர். (௬)

நாதவிந்து தன்னை நயமுடனே பாராமல்
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நாத விந்து தன்னை நயமுடனே பாராமல் - நாத தத்துவமாகவும் விந்து தத்துவமாகவும் விளங்கும் உன்னை அன்புடனே நோக்காமையால்; அறிவு போத மயங்கி அழிந்தேன் - அடியேன் அறிவு பெரிதும் மயங்கி அழியலானேன் என்பதாம்.

(வி - ம்.) நாதவிந்து தத்துவம் சிவத்திற்கு நேரே உரியன (௭)

உச்சி வெளியை யுறுதியுடன் பாராமல்
அச்சமுட னானு மறிவழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—உச்சி வெளியை உறுதியுடன் பாராமல் - எப்பொருட்கும் அப்பாலாய அறிவு வெளியைத் திட்பமாகக் காண மாட்டாமையால் நான் அச்சமுடன் அழிந்தேன் - நான் சாவு முதலிய அச்சத்தோடு நெஞ்சழியலானேன் என்பதாம்.

(வி - ம்.) தத்துவங்கடந்த அறிவே தானுவதறியாமல் அழிந்தேன் என்றவாறு. (௮)

மூக்கு முனையை முழித்திருந்து பாராமல்
ஆக்கைகெட்டு நானு மறிவழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—முழித்து இருந்து மூக்கு முனையைப் பாராமல் - அடியேன் விழித்தவாறே யோக விருக்கையிலிருந்து என் நாசியின் நுனியைப் பார்த்து மனமடங்க விராமையால்; நான் ஆக்கை கெட்டு அறிவு அழிந்தேன் - நான் அரிது பெறு மக்கள் யாக்கையின் பயனும் கெட்டு அறிவழிந்து போனேன் என்பதாம்.

(வி - ம்.) மன மடங்காமல் புலன்வழிச் சென்றமையால் ஆக்கை கெட்டது என்பது கருத்து. (௯)

இடைபிங் கலையி னியல்பறிய மாட்டாமல்
தடையுடனே யானுந் தயங்கினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—யான் இடைபிங்கலையின் இயல்பு அறிய மாட்டாமல் - அடியேன் இடைகலை பிங்கலை என்னும் உயிர்ப்புக்களின் தன்மைகளை நன்கு அறியாமையாலே; தடையுடனே தயங்கினேன் - யோகநெறி தடைப்பட்டு உள்ளம் வருந்தா நின்றேன் என்பதாம்.

(வி - ம்.) இடைகலை பிங்கலை உயிர்ப்பு வகை என்க. (௧௦)

ஊனுக்கு ணீநின் றுலாவினதைக் காணுமல்
நானென் றிருந்து நலனழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—ஊனுக்குள் நீ நின்று உலாவினதைக் காணுமல் – அடியேனுடைய ஊனுடலின் கண்ணும் (உயிரின் கண்ணும்) நீயே நின்று உலாவிய வுண்மையை அறியாமையால்; நானென்று இருந்து நலன் அழிந்தேன் - எல்லாம் என் செயலே என்று செருக்குற்றிருந்து பிறப்பின் பயன் அழிந்து கெட்டேன் என்பதாம்.

(வி - ம்.) எல்லாம் நின்செய லென்றறியாமல் என்செயலென்று செருக்குற்றுக் கெட்டேன் என்பது கருத்து. (௧௧)

மெய்வாழ்வை நம்பி விரும்பிமிக வாழாமல்
பொய்வாழ்வை நம்பிப் புலம்பினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—மெய்வாழ்வை நம்பி விரும்பி மிக வாழாமல் - அடியேன் நின் திருவடிப் பேருகிய உண்மை வாழ்க்கையையே நம்பி அதனையே பெரிதும் விரும்பி அந்நெறி நின்று பெரிதும் வாழாமல்; பொய் வாழ்வை நம்பிப் புலம்பினேன் - பொய்யாய இவ்வுலக வாழ்க்கையையே நம்பி அந்நெறிச் சென்று பெரிதும் துன்புறுகின்றேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) நின் திருவடிப்பேறே மெய்வாழ் வென்றறியாமல் பொய் வாழ்வி லீடுபட்டுத் துன்புற்றுழல்கின்றேன் என்றவாறு. (௧௨)

பெண்டுபிள்ளை தந்தைதாய் பிறவியுடன் சுற்றமிவை
உண்டென்று நம்பி யுடலழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—பெண்டு பிள்ளை தந்தைதாய் பிறவியுடன் சுற்றம் இவை – அடியேன் மனைவியையும் மக்களையும் தந்தையையும் தாயையும் உடன் பிறந்தோரையும்; உண்டு என்று நம்பி - அழியாமல் என்றும் எனக்குத் துணையாதலுடையர் என்று நம்பி; உடல் அழிந்தேன் - அவர் பொருட்டே உழன்று என் உடம்பும் அழியலானேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) மனைவி முதலியோரை அழியாதவர் என்று எண்ணி அவர் பொருட்டே உழன்று என் உடம்பும் கெட்டழிந்தேன் என்பது கருத்து. (௧௩)

தண்டிகைபல் லாக்குடனே சகலசம் பத்துகளும்
உண்டென்று நம்பி யுணர்வழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—தண்டிகை பல்லாக்குடனே சகல சம்பத்துகளும் - அடியேன் அறிவின்மையாலே தண்டிகை பல்லாக்குள்ளிட்ட எல்லாச் செல்வங்களுமே; உண்டு என்று நம்பி – நமக்கு

எப்போதும் உள்ளனவாகும் என்றும் நம்பியதனாலும்; உணர்வு அழிந்தேன் - மெய்யுணர்வு அழியப் பெற்றேன் காண் என்பதாம்.

(வி - ம்.) பொருளல்லாதவற்றையும் பொருளென்று நம்பி உணர்வழிந்தேன் என்றவாறு. தண்டிகை - பல்லக்குவமை. (௧௪)

இந்த வுடலுயிரை யெப்போதுந் தான்சதமாய்ப்
பந்தமுற்று நானும் பதமழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே —இந்த உடல் உயிரை எப்போதுந்தான் சதமாய் - பொய்யாய இந்த உடலும் உயிரும் எப்போதும் நிலைத்திருக்கும் என்று நினைத்து; நான் பந்தம் உற்றுப் பதம் அழிந்தேன் - அறிவிலியாகிய யான் அவற்றின் பாற்கட்டுண்டு வீடு பேற்றினை இழந்தேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) இந்தவுடல் என்புழிச் சுட்டு அதன் நிலையாமை சுட்டியதாம். (௧௫)

மாதர் பிரபஞ்ச மயக்கத்தி லேவிழுந்து
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—மாதர் பிரபஞ்ச மயக்கத்திலே விழுந்து- மகளிர் இன்ப முதலிய உலக வின்பங்களிலே மயக்கமுற்று அழுந்தி விட்டமையாலே; போத மயங்கிப் பொறியழிந்தேன் - பெரிதும் மேன்மேலும் மயக்க மெய்தி மெய்யறிவினை இழந்து விட்டேன் காண்! என்பதாம்.

(வி – ம்.) மாயையில் மயங்கி மெய்யுணர்வு பெறேனாயினேன் என்றவாறு. (௧௬)

சரியைகிரி யாயோகந் தான்ஞானம் பாராமல்
பரிதிகண்ட மதியதுபோற் பயனிழந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—சரியை கிரியா யோகம் ஞானம் பாராமல்-அடியேன் நின்னை யுணர்தற்குரிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நன்னெறிகளைக் கண்ணாலும் பாராமையால்; பரிதிகண்ட மதியது போல் பயன் இழந்தேன் - கதிரவன் தோன்றியபின் ஒளி இழந்து விட்ட திங்கள் போன்று பயனில்லாத போயினேன்; என்பதாம்.

(வி - ம்.) பரிதிகண்டமதி பயனிழப்பு மாத்திரைக்கே உவமை. (௧௭)

மண்பெண்பொன் னாசை மயக்கத்தி லேவிழுந்து
கண்கெட்ட மாடதுபோற் கலங்கினேன் பூரணமே.

(இ – ள்.) பூரணமே:—கண்கெட்ட மாடதுபோல் - குருடான மாடுபோலே; மண் பெண் பொன் ஆசை மயக்கத்திலே விழுந்து -

மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்னும் இவற்றால் மயங்கி அவற்றைப் பெறுவதிலேயே முயன்று; கலங்கினேன் – பின் அவற்றாலேயே துன்புற்றுக் கலங்கா நின்றேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) குருடான மாடு பள்ளம் மேடுணராது விழுந்து கலங்குதல் போலே யானும் அறிவுக்கண் குருடாகி ஆசைக் குழியில் விழுந்து வருந்தினேன் என்றவாறு. (௧௮)

தனிமுதலைப் பார்த்துத் தனித்திருந்து வாழாமல்
அனியாய மாய்ப்பிறந்திங் கலைந்துநின்றேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—பிறந்து - மக்கள் யாக்கையிற் பிறந்தும்; தனித்து இருந்து தனி முதலைப் பார்த்து இருந்து வாழாமல் - கருவிகரணங்களோடு கூடாமல் ஒப்பற்ற முழு முதல்வனாகிய உன்னை ஞானக்கண்ணாற் கண்டு பேரின்பத்தே நிலைத்திருந்து அழியாத பெருவாழ்க்கை வாழாமல்; இங்கு அநியாயமாய் அலைந்து நின்றேன் - இவ்வுலக மாயையிலே சிக்கி முறையின்றித் தீய நெறியிலே அலைந்தலைந்து கெட்டொழிந்தேன் காண் என்பதாம்.

(வி - ம்.) தனித்து - கருவிகரணங்களோடு கூடாமல். தனி முதல் - சிவம். இங்கு என்றது - உலகமாயையை. (௧௯)

ஈராறு தன்கலைக்குள் ளிருந்துகூத் தாடினதை
ஆராய்ந்து பாராம லறிவழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—ஈராறு தன் கலைக்குள் இருந்து கூத்து ஆடினதை - நீ பிரமரந்திரத்திற்குப் அப்பால் பன்னிரண்டு அங்குலத்திற் குட்பட்ட நின் இடத்திலிருந்து இன்பக் கூத்தாடியதனை; ஆராய்ந்து பாராமல் அறிவழிந்தேன் - அடியேன் ஆராய்ந்து காணமையாலே மெய்யறிவு கெட்டொழிந்தேன் காண் என்பதாம்.

(வி - ம்.) ஈராறுகலை என்றது, துவாதசாந்தத்தை. (௨௦)

வாசிதனைப் பார்த்து மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்
காசிவரை போய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—வாசி தனைப் பார்த்து - உயிர்ப்பினை முறைப்படுத்தித் தெளிந்த நெஞ்சிலே; உனை மகிழ்ந்து போற்றாமல் - வீற்றிருக்கின்ற உன்னைக் கண்டு மகிழ்ந்து வணங்காமல்; காசிவரை போய்த்திரிந்து காலலுத்தேன் - என் அறியாமையால் புறத்தே உனைக் காணுதற்குக் காசி வரையில் உள்ள தீர்த்தங்களுக்கும் தலங்களுக்கும் சென்று சென்று கால்கள் இளைக்கப் பெற்றேன் காண் என்பதாம்.

(வி - ம்.) உயிர்ப்பினை ஒழுங்குபடுத்தி உள்ளிருக்கும் உன்னைக் காண மாட்டாமல் உலகெலாம் ஓடி ஓடிக் கால்கள் இளைக்கப் பெற்றேன் என்றவாறு. (௨௧)

கருவிகடோண் ணூற்றுறிற் கலந்துவிளை யாடினதை
இருவிழியாற் பாராம லீடழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே —தொண்ணூற்றாறு கருவியில் கலந்து விளையாடினதை-நீதான் என்னுடம்பாகிய தொண்ணூற்றாறு தத்துவங்களினும் பிரிவின்றிக் கலந்து திருவிளையாடல் செய்ததனை; இருவிழியால் பாராமல் ஈடு அழிந்தேன் - அடியேன் என் பெரிய ஞானக் கண்ணாற் கண்டு மகிழ மாட்டாமையாலே எனது பிறவிப் பெருமை அழியலானேன்! என்பதாம்.

(வி - ம்.) நீ என்னுளேயானுயிருந்ததனை ஞானக்கண்ணால் காணுமல் மக்கட் பிறப்பின் பெருமை அழியப்பெற்றேன் என்றவாறு. (௨௨)

உடலுக்கு ணீநின் றுலாவினதைக் காணுமல்
கடல்மலைதோ றுந்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—நீ உடலுக்குள் நின்று உலாவினதைக் காணுமல் – நீ என்னுடம்பினுள்ளேயே நின்று தொழிற்பட்டிருந்ததனை அடியேன் காணமாட்டாமையால்; கடல் மலைதோறும் திரிந்து கால் அலுத்தேன் – நின்னைத்தேடிக் கடல்களுக்கும் மலைகளுக்குமாகத் திரிந்து என் கால்களும் தளரப்பெற்றேன் காண் என்பதாம்.

(வி - ம்.) சிவம் யாண்டும் இருப்பினும் அதனை நம்முள்ளே காண்பதன்றிப் புறத்தே காண்டலியலாது என்பது கருத்து. (௨௩)

எத்தேச காலமுநா மிறவா திருப்பமென்று
உற்றனைத்தான் பாராம லுருவழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—நாம் எத்தேச காலமும் இறவாதிருப்பம் என்று - யாம் எவ்விடத்திலேனும் எந்தக் காலத்திலேனும் இறவாமல் நிலைத்தே யிருப்பேம் என்று என் அறியாமையால் நினைந்து செருக்குற்று, உனை உற்றுப்பாராமல் உருவு அழிந்தேன் - உன்னைக் கூர்ந்துணர்ந்து காணுமல் என்னியல்பு அழியலானேன் என்பதாம்.

(வி - ம்.) பொய்யை மெய்யென்று மயங்கி நின்னுண்மையை ஆராயாமல் விட்டு விட்டேன் என்பது கருத்து. (௨௪)

எத்தனைதாய் தந்தை யிவர்களிடத் தேயிருந்து
பித்தனு யானும் பிறந்திறந்தேன் பூரணமே.

(இ – ள்.) பூரணமே :—எத்தனை தாய் தந்தை - அடியேன் பிறந்துழலத் தொடங்கிய காலமுதலாக இன்றுகாறும் என்னை ஈன்ற தாய் தந்தையர் எத்துணையும் பலராவரே; பித்தனுய் இவர்களிடத்து யானும் பிறந்து இறந்தேன் - அடியேனும் மயக்கத்தாலே காமப் பித்தனுகி இவர்களிடத்தெல்லாம் மகவாய்ப் பிறந்தும் இறந்தும் வருந்தி வருகின்றேன் அல்லனே? என்பதாம்.

(வி - ம்.) இஃது அடிகளார் எண்ணிலாப் பிறப்புழற்சியைக் கருதி இரங்கிய படியாம். (உ௫)

பேற்றலுத்தார் தாயார் பிறந்தலுத்தேன் யானுமுன்றன்
போற்றுணைத்தாள் தந்து புகலருள்வாய் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—தாயார் பெற்று அலுத்தார் - அடியேனை எண்ணிறந்த தாய்மார்கள் எண்ணிறந்த முறை பெற்று அலுத்துப் போயினர்; யானும் பிறந்து அலுத்தேன் - அடியேனும் எல்லையற்ற பிறப்பினை எய்தி அலுத்துப் போயினேன்; உன்தன் பொன் துணைத் தாள் தந்து புகல் அருள்வாய் - ஆதலின் அடியேனுக் கிரங்கி உன்னுடைய திருவடிகளை வழங்கி அபயமளித் தருள்வாயாக; என்பதாம்.

(வி - ம்.) இனி, யான் பிறப்புத் துன்பம் பொறேன் என்று அபயம் புக்க படியாம். (உ௬)

உற்று ரழுதலுத்தார் உறன்முறையார் சுட்டலுத்தார்
பேற்றலுத்தார் தாயார் பிறந்தலுத்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—உற்றார் அழுது அலுத்தார் - சுற்றத் தாருட் பெண்டிர் என்சாவிற்கு அழுதழு தலுப்புற்றனர்; உறன் முறையார் சுட்டலுத்தார் - சுற்றத்தாருள் ஆடவர் என்னுடம்பைச் சுட்டுச் சுட்டு அலுப்புற்றனர்; பெற்றலுத்தார் தாயார் - தாய்மார்கள் பெற்று அலுப்புற்றனர்; பிறந்து அலுத்தேன் - அடியேனோ பிறந்து பிறந்து அலுப்படைந்து விட்டேன் என்பதாம். (உ௭)

பிரமன் படைத்தலுத்தான் பிறந்திறந்து நானலுத்தேன்
உரமுடைய வக்கினிதா னுண்டலுத்தான் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—பிரமன் படைத்து அலுத்தான் - நான் முகன் அடியேனைப் படைத்துப் படைத்து அலுப்புற்றனன்; நான் பிறந்து இறந்து அலுத்தேன் - நானும் பிறந்து மிறந்தும் அலுப் படைந்துவிட்டேன்; உரம் உடைய அக்கினிதான் உண்டு அலுத்தான்- ஆற்றல் மிக்க தீக்கடவுளும் என்னுடல்களைத் தின்று தின்று அலுத்துப் போயினன் என்பதாம். (உ௮)

எண்பத்து நான்குநூறு யிரஞ்சேனன முஞ்சேனித்துப்
புண்பட்டு நானும் புலம்பினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நான் எண்பத்துநான்கு நூறு ஆயிரம் செனனமும் செனித்து - அடியேன் எண்பத்து நான்கு நூறு ஆயிரம் வகைப்பட்ட எல்லாப் பிறப்புக்களினும் பிறந்து பிறந்து; புண்பட்டுப் புலம்பினேன்-நெஞ்சு புண்ணுகிப் பெரிதும் வருந்தினேன் என்பதாம்.

(வி - ம்.) எண்பத்து நான்கு நூறாயிரம் வகைப் பிறவிகள் உள்ளன என்பது நூலளவை. (உ௯)

என்னை யறியாம லெனக்குள்ளே நீயிருக்க
உன்னை யறியாம லுடலிழந்தேன் பூரணமே

(இ - ள்.) பூரணமே:—நீ என்னை அறியாமல் எனக்குள்ளே இருக்க-நீ யான் அறியாதபடி என்னுள்ளே மறைந்திருக்கவும்; உன்னை அறியாமல் உடல் இழந்தேன் - அடியேன் உன்னை அறியாமலே எண்ணிறந்த உடம்புகளை இழந்து விட்டேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) உன்னை அறிதற்குரிய மானிடவுடல்கள் பலவற்றை வீணே இழந்தேன் என்பது கருத்து. (௯0)

கருவா யுருவாய்க் கலந்துல கெலாநீயாய்
அருவாகி நின்ற தறிகிலேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—அருவு ஆகி கருவு ஆய் உருவு ஆய்க் கலந்து உலகு எலாம் நீ ஆய் - நீ அருவப் பொருளாய்க் கருவிலும் உருவிலும் கலந்தும் ஐம்பெரும்பூதக் கூட்டரவாகிய உலகம் அனைத்தும் நீயே யாகி; நின்றது அறியேன் - நிற்கின்ற நின்னியல்பினை அறியாது கெட்டொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) நீ அருவம் உருவம் அருவுருவமா யிருத்தலை அறியேன் என்றவாறு. (௯௧)

செம்பொற் கமலத் திருவடியைப் போற்றமல்
பம்பைகொட்ட வாடும் பசாசானேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—செம்பொன் கமலத் திருவடியைப் போற்றமல் - நின்னுடைய சிவந்த பொன்னிறமுடைய தாமரை மலர் போன்ற அழகிய அடிகளை வணங்கி யுய்யாமல்; பம்பை கொட்ட ஆடும் பசாசு ஆனேன் - பூசாரி பம்பையை முழக்கியவுடன் ஆடுகின்ற பேயே ஆகிவிட்டேன் என்பதாம்.

(வி - ம்.) பசாசு - பேய். பம்பை - ஒருவகைத் தோற்கருவி. (௯௨)

எனக்குள்ளே நீயிருக்க வுனக்குள்ளே நானிருக்க
மனக்கவலை தீர வரமருள்வாய் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—எனக்குள்ளே நீயிருக்க - அடியேன் உள்ளத்தினுள்ளே நீ யிருக்குமாறு போலே; உனக்குள்ளே நான் இருக்க - உன் திருவருளுக்குள்ளே யான் மூழ்கி யிருக்கவும்; மனக்கவலை தீர - அவ்வாற்றால் அடியேன் மனக்கவலை தீர்ந்தொழியவும்; வரமருள்வாய் - வரந்தந் தருளுக! என்பதாம்.

(வி - ம்.) நீ என்னுள் இருப்பது போல நான் உன்னுள் மூழ்கியிருப்பின் துன்பமகலும்; அவ்வரமருள்க! என்பது கருத்து. (௯௩)

எழுவகைத் தோற்றத் திருந்துவினை யாடினதைப்
பழுதறவே பாராமற் பயனிழந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—எழுவகைத் தோற்றத்து - உயிர்கள் பிறக்கின்ற எழுவகைப்பட்ட பிறப்புக்களினும்; இருந்து வினை யாடினதை - நீ அவ்வுயிருடிருந்து ஆட்டுவிக்கின்ற நின் அருட்செயலை; பழுது அறப் பாராமல் - குற்றந்தீர உணராமையாலே; பயன் இழந்தேன் - யான் பிறப்பின் பயனை இழந்தொழிந்தேன் என்பதாம்.

(வி - ம்.) எழுவகைத் தோற்றம் - தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, நிற்பன (மரம்) என்பன. (௩௪)

சாதி பேதங்க டனையறிய மாட்டாமல்
வாதனையா னின்று மயங்கினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே.—தனை அறிய மாட்டாமல் - உயிராகிய என்னியல்பினை அறிந்து கொள்ள மாட்டாமையால்; சாதி பேதங்கள் வாதனையால் நின்று மயங்கினேன் - கற்பனையாகிய சாதி முதலிய வேற்றுமைகளாலுண்டான பழக்கத்தாலே அறியாமையுள் நின்று மிகவும் மயக்கமுற்றேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) தனை என்றது உயிராகிய தன்னியல்பினை. வாதனை - பழக்கம். (௩௫)

குலமொன்று நீபடைத்த குறியையறி யாமனான்
மலபாண்டத் துள்ளிருந்து மயங்கினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நீ குலம் ஒன்று படைத்த குறியை நான் அறியாமல் - நீதானும் ஆருயிர் அனைத்தும் ஒரே குலமாகப் படைத் திருக்கின்ற நின் திருவுளக் குறிப்பை அறியாமையாலே; மலபாண்டத் துள் இருந்தும் மயங்கினேன் - அனைத்துயிரும் மலப்பாண்டமாகிய ஒரேவகை யுடலிலிருந்தும் அவற்றுள் உயர்விழிவு கற்பித்துக்கொண்டு மயங்கலானேன் காண்; என்பதாம்.

(வி - ம்.) உயிரெலாம் ஒரே குலம் அவற்றின் உடம்பெலாம் ஒரே வகை, அங்ஙனமாகவும் அவற்றுள் வேற்றுமை கற்பித்து மயங் கினேன் என்றவாறு. (௩௬)

அண்டபிண்ட மெல்லா மணுவுக் கணுவாய்நீ
கொண்ட வடிவின் குறிப்பறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நீ அண்டம் பிண்டம் எல்லாம் - நீ படைத்த அண்டங்களினும் அவற்றுள் வாழும் உயிரினங்களினும் உடம்புகளினும்; அணுவுக்கு அணுவாய்க் கொண்ட வடிவின் குறிப்பு அறியேன் - அணுவிற்கும் அணுவாக நீ கொண்டுள்ள உருவத்திற்கு நினது திருவுளக் குறிப்பு யாது என்று அடியேன் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் அண்டம் அணுவாம்படி பெரியன் 'மீண்டும் அவனே அணுவோர் அண்டமாம்படி நுண்ணியனும் ஆவன்' இவ்வாறு தற்குக் காரணம் நம்மனோர் காண்டலரிது என்பது கருத்து. (௧எ)

சகத்திரத்தின் மேலிருக்குஞ் சற்குருவைப் போற்றுமல்
அகத்தினுடை யாணவத்தா லறிவழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—சகத்திரத்தின் மேல் இருக்கும் சற்குருவைப் போற்றுமல் - அடியேன் நெஞ்சமாகிய ஆயிரமிதழ்களையுடைய தாமரை மலர் மேல் எழுந்தருளி யிருக்கும் உண்மையான ஆசிரியனை வழிபாடு செய்துய்யாமல்; அகத்தினுடை ஆணவத்தால் - என்னுடிருக்கின்ற இருள் மலத்தாலே மறைக்கப்பட்டு; அறிவு அழிந்தேன் - மெய்யறிவு அழியப்பெற்றேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) இறைவன் என்னுள் இருந்தும் மலமறைப்பால் அவனை அறியாமற் கெட்டேன் என்றவாறு. சகத்திரம்-ஆயிரம், ஆகுபெயர். (௧அ)

ஐந்து பொறியை யடக்கியுனைப் போற்றும
லைந்துருகி நெஞ்ச நடுங்கினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—ஐந்து பொறியை அடக்கி உனைப்போற்றுமல் - அடியேன் நெஞ்சம் மெய் முதலிய ஐந்து வழிகளானும் ஊறு முதலிய ஐந்து புலன்களினும் செல்லாமல் அடக்கி உன்னை என் உள்ளத்துள்ளே கண்டு வழிபட்டுய்யாமல்; நெஞ்சம் நைந்துருகி நடுங்கினேன் - புலன்களிலே சென்று என்னெஞ்சம் பெரிதும் துன்புறுதலாலே நடுங்குகின்றேன் என்பதாம்.

(வி - ம்.) உள்ளத்துள் நின்னைக் கண்டமைதியுருமல் புலன்களிற் சென்று வருந்துகின்றேன் என்றவாறு. (௧௯)

என்னைத் திருக்கூத்தா லிப்படி யாட்டுவித்தாய்
உன்னை யறியா துடலழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—திருக்கூத்தால் என்னை இப்படி ஆட்டுவித்தாய் - உன்னுடைய அழகிய கூத்தினாலேயே அடியேனை இவ்வாறெல்லாம் நான் எனது என்று ஆடும்படி செய்தனை அங்ஙன மிருந்தும்; உன்னை அறியாது உடல் அழிந்தேன் - உன்னை அறிந்து கொள்ளாமலே பலவுடம்புகள் அழியப்பெற்றேன் என்பதாம்.

(வி - ம்.) என்னுள்ளிருந்து ஆட்டுவிக்கும் உன்னை அறியமாட்டாமை பெரும் பேதைமைத்து என்றவாறு. (௨0)

நரம்புதசை தோலெலும்பு நாற்றத்துக் குள்ளிருந்து
வரம்பறிய மாட்டாமல் மயங்கினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—நரம்பு தசை தோல் எலும்பு நாற்றத்துக்குள்ளிருந்து - எளியேன் நரம்பும் தசையும் தோலும் எலும்புமாகிய

தீ நாற்றமுடைய பொருளாலியன்ற இவ்வுடம்பிற் குள்ளிருந்தும்; வரம்பு அறிய மாட்டாமல் - இவ்வுலக வாழ்க்கையின் எல்லை காண மாட்டாமல்; மயங்கினேன் - பெரிதும் மயங்கி விட்டேன் காண் என்பதாம்.

(வி - ம்.) அருவருக்கத்தக்க உடம்பிலிருந்தும் அதன் புன்மை காணமல் மயங்கினேன் என்றவாறு. (௬௧)

சிலந்தியிடை நூல்போல் சீவசேந்துக் குள்ளிருந்த
நலந்தனைத்தான் பாராம னலமழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—சிலந்தியிடை நூல் போல் சீவ செந்துக் குள்ளிருந்த நலந்தனைப் பாராமல் - சிலந்தியின் உள்ளே அதற்கு வேருன நூல் இருப்பது போன்று இறைவனுகிய நீ உயிர்களுக்குள்ளே யிருக்கின்ற நன்மையை ஆராய்ந்து பாராமையால்; நலம் இழந்தேன்- அடியேன் பிறப்புப்பயனை இழந்து விட்டேன் என்பதாம்.

(வி - ம்.) சிலந்தியினுள்ளிருந்த நூல் காரியப்பட்டு அதனைத் தாங்குமாறு போல் உயிர்களினுள்ளிருந்து வெளிப்பட்டு அவற்றிற்கு ஆதாரமாகின்றனை என்பது கருத்து. (௬௨)

குருவாய்ப் பரமாகிக் குடிலைசத்தி நாதவிந்தாம்
அருவாய் யுருவான தறிகிலேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—பரமாகி குடிலை சத்தி நாதவிந்து ஆம் அருவாய் - இறைவனும் சுத்த மாயையும் திருவருளும் ஓசையும் எழுத்தும் ஆகின்ற அருவப் பொருளாகிய நீயே; குருவாய் உருவானது அறிகிலேன் - அடியேனுக் கருள்புரிய ஆசிரியத் திருவுருவம் கொண் டெழுந்தருளியதனை அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) அருவப் பொருளாகிய இறைவன் உயிர்களை உய்வித் தற்கு உருவு கொண்டு ஆசிரியனுக வருகின்ருன் என்பது கருத்து. (௬௩)

ஒளியாய்க் கதிர்மதியா யுள்ளிருளா யக்கினியாய்
வெளியாகி நின்ற வியனறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—ஒளியாய் கதிர்மதியாய் அக்கினியாய் உள் இருளாய்-நீயே அறி வொளியாகவும் ஞாயிறு திங்கள் தீ முதலிய பூத வொளியாகவும் எம்மாலறியப் படாமையால் இருளாகவும்; வெளி யாகி நின்ற வியன் அறியேன் – உள்ளொளிக்கும் புறவொளிக்கும் இட மான ஞானவெளியும் பூதவெளியும் ஆகி நிற்கின்ற நினது பெருமையை அடியேன் அறிந்திலேன் காண்.

(வி - ம்.) புறச்சமயத்தவர்க்கு இருளா யிருத்தலின் நீயே இருளும் என்றவாறு. (௬௪)

இடையாகிப் பிங்கலையா யெழுந்த சுழுமுனையாய்
உடலுயிராய் நீயிருந்த உளவறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—இடையாகி பிங்கலையாய் சுழுமுனையாய்-இடைகலையும் பிங்கலையும் சுழுமுனையும்; உடல் உயிராய் - உடலும் உயிருமாக; நீயிருந்த உளவு அறியேன் - நீயே இருக்கின்ற உண்மையை அடியேன் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) நீயே எங்கள் உயிர்ப்பும் நாடியும் உடலும் உயிருமாயிருக்கின்றதனை அறிந்திலேன் என்றவாறு. (சரு)

மூலவித்தாய் நின்று முளைத்துடல் தோறுமிருந்து
காலனென வழிக்குங் கணக்கறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—மூலவித்தாய் நின்று - உயிர்கள் பிறத்தற்குக் காரணமாகிய விதையாக அவ்வுயிர்கட்கும் உயிராயிருந்து; உடல் தோறும் முளைத்து இருந்து - அவ்வுயிர்களோடு உடம்பு தோறும் முளைத்து அவற்றை நிலைப்பித்திருந்து; காலன் என அழிக்கும் கணக்கு அறியேன் - அவ்வுடம்போடுற்ற உயிர்களைக் கூற்றுவனாகி அழித்து வருகின்ற நின் திருவருள் நெறியை அடியேன் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் அநாதியாக உயிர்க்குயிரா யிருந்து அவற்றைப் படைத்தும் காத்தும் அழித்தும் வருகின்றான் இதற்குக் காரணம் அவன் திருவருளே என்றவாறு. (சசு)

உள்ளும் புறம்புமா யுடலுக்கு ணீயிருந்த
தெள்ளளவு நானறியா திருந்தேனே பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—உடலுக்குள் உள்ளும் புறம்புமாய் நீ இருந்தது - அடியேன் உடலின் அகத்தும் புறத்தும் நீ இருந்ததனை; நான் எள் அளவும் அறியாதிருந்தேனே-நான் ஒரு சிறிதும் அறியாதிருந்தேன்; என்னே! என் பேதைமை! என்பதாம்.

(வி - ம்.) அடியேனுக்கு அத்துணை அணுக்கமா யிருந்தும் யான் அறியாதிருந்தது வியப்பாகும் என்றவாறு. (சஎ)

தாயாகித் தந்தையாய்த் தமர்கிளைஞர் சுற்றமெல்லாம்
நீயாகி நின்ற நிலையறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—தாய் ஆகி தந்தை ஆய்த் தமர் கிளைஞர் சுற்றம் எல்லாம் நீயாகி நின்றநிலை - அடியேன் அகத்தும் புறத்துமிருந்ததேயுமன்றி அடியேன் தாயும்தந்தையும் உறவினரும் ஞாதியரும் சுற்றத்தாரும் ஆகிய அனைவரும் நீயே யாகி நின்ற நின் திருவருணிலையினையும்; அறியேன் - அடியேன் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவனே உயிர்கட்குத் தாய் தந்தையர் முதலியோராகவும் ஆகி அவற்றை நன்கு பாதுகாக்கின்றனன் என்பது கருத்து. (சஅ)

விலங்குபுள்ளூர் வனவாசம் விண்ணவர்நீர்ச் சாதிமனுக்
குலங்களேழு வகையினின்ற குறிப்பறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—விலங்கு புள் ஊர்வன வாசம் விண் அவர் நீர்ச்சாதி மனு-விலங்கும் பறவையும் ஊர்வனவும் நிற்பனவும் தேவரும் நீர்வாழ்வனவும் மக்களும் ஆகிய; குலங்கள் எழுவகையில் நின்ற குறிப்பு அறியேன் - எழுவகை இனமாகி நீ நிற்கின்றதற்கியன்ற நின் திருவுளக் குறிப்பு யாதென்று அடியேன் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) உயிர்கள் எழுவகைப்பட்ட எண்ணிறந்த பிறப்புக்களிற் றோன்றும்படி செய்கின்ற இறைவன் கருத்து நம்மனோரால் அறிதற்கரிது என்றவாறு. (௪௯)

ஆணுகிப் பெண்ணுய் அலியாகி வேற்றுருவாய்
மாணுகி நின்ற வகையறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—ஆண் ஆகி பெண் ஆகி அலி ஆகி வேற்றுருவு ஆய் மாண் ஆகி நின்ற - நீ ஆண் பெண் அலி இவற்றின் வேருய மருள் முதலிய உருவம் ஆகி மாண்புடனிற்கின்ற; வகையறியேன் - முறைமையினையும் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) அலி - ஆணும் பெண்ணும் அல்லாதது. (௫0)

வாலையாய்ப் பக்குவமாய் வளர்ந்துகிழந் தாஞகும்
பாலையாய் நின்ற பயனறியேன் பூரணமே.

(இ – ள்.) பூரணமே :—வாலைஆய் பக்குவம் ஆய் வளர்ந்து கிழம் தாஞகும் பாலையாய் - நீ இளமையுடையையும் காதற் செவ்வியுடையையும் பின்னும் வளர்ந்து முதுமை எய்தும் பகுதியையுடையையும் ஆகி; நின்ற பயன் அறியேன் - நிற்கின்றதனுல் நினக்குண்டாகும் பயன் யாதென்றறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) உயிர்களின் ஆக்கங்கருதியே இறைவன் இளமை முதலிய பருவமாகி நிற்கின்றுன் என்பது கருத்து. (௫௧)

போய்யாய்ப் புவியாய்ப் புகழ்வா ரிதியாகி
மெய்யாகி நின்ற வியனறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—பொய் ஆய் புவி ஆய் புகழ்வாரிதி ஆகி - நீ பாழ்வெளியாய் நில முதலிய பூதங்களாய்ப் புகழப்படுகின்ற கடல் மலை முதலியனவும் ஆகி; மெய் ஆகி நின்ற வியன் அறியேன் - உருக்கொண்டு நின்ற பெருமையினை அடியேன் அறிந்திலேன்.

(வி - ம்.) பொய் என்றது ஞானவெளியை. (௫௨)

பூவாய் மணமாகிப் போன்ஞகி மாற்ருகி
நாவாய்ச்சோல் லான நயமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :— பூ ஆய் மணம் ஆகி பொன் ஆகி மாற்று ஆகி - நீ மலராகி அதன் மணமும் ஆகிப் பொன் ஆகி அதன் மாற்றும் ஆகி; நா ஆய் சொல் ஆன நயம் அறியேன் - நாவும் அது சொல்கின்ற சொற்கள் ஆகியும் நிற்கின்ற நன்மையை அடியேன் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் பொருளும் அவற்றின் பண்பும் செயல் களும் ஆகி யிருக்கின்ருன் என்பது கருத்து. (இங)

முதலாய் நடுவாகி முப்பொருளாய் மூன்றுலகாய்
இதமாகி நின்ற வியலறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :— நீதான்; முதல் ஆய் நடு ஆகி முப்பொரு ளாய் - எப்பொருட்கும் முற்பட்ட பொருளாகவும் இடைநின்றபொரு ளாகவும் இறுதியிலுள்ள பொருளாகவும் உயிர் உலகு இறை என்னும் மூன்று பொருள்களாகவும்; மூன்றுலகாய் இதம் ஆகி நின்ற இயல்பு அறியேன் - மூன்றுலகங்களாகவும் உயிர்கட்கு இன்பமாகவும் நிற்கின்ற நின்றன்மையை யான் அறிந்திலேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) இனம்பற்றி இறுதியும் ஆகி என்றும் கொள்க. (இச)

ஊனு யுடலுயிராய் உண்ணிறைந்த கண்ணொளியாய்த்
தேனுய் ருசியான திறமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—ஊனுய் உடல் உயிர் ஆய் கண் உள் நிறைந்த ஒளிஆய் - நீ ஊனும் உடலும் உயிரும் ஆகி உயிர்களின் கண் ணுக்குள்ளே நிறைந்த ஒளியும் ஆகி; தேன் ஆய் ருசி ஆன திறம் அறியேன் - தேன் முதலியனவும் அவற்றின் இனிப்பு முதலிய சுவை களும் ஆகி யிருக்கின்ற நின்னுடைய திறமையை அடியேன் அறிந்தி லேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) நீயே ஊன் முதலியனவும் கண்ணும் ஒளியும் சுவையும் அவற்றையுடைய பொருள்களுமாகி யிருக்கின்றனை என்றவாறு. (இரு)

வித்தாய் மரமாய் விளைந்தகனி யாய்ப்பூவாய்ச்
சித்தாகி நின்ற திறமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—வித்து ஆய் மரம் ஆய் விளைந்த பூ ஆய்க் கனி ஆய்-நீயே விதையும் மரமும் அதன்கட் டோன்றும் பூவும் பழமும் ஆகி; சித்து ஆகி நின்ற திறம் அறியேன் - இவற்றை அறிகின்ற அறிவும் ஆகி யிருக்கின்ற நின்றன்மையை அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) நீயே அறிவும் அறியப்படு பொருளுமாக விருக் கின்றனை என்றவாறு. (இசு)

ஐவகையும் பெற்றுலக வண்டபகி ரண்டமேல்லாம்
தெய்வமென நின்ற திறமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—ஐவகையும் பெற்று - நீ ஆக்கல் முதலிய ஐந்து தொழில்களையும் உடையையாகி; அண்ட பகிரண்டம் எல்லாம்- அகவுலகமும் புறவுலகங்களுமாகிய அனைத்திலும் வாழ்வோர்; தெய்வம் என நின்ற திறம் அறியேன் - கடவுள் என்று வணங்கும்படி நிற்கின்ற நின்றன்மையை அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) ஐவகை - ஐந்துவகைத் தொழில்கள்; ஆக்கல் முதலியன. (௪௭)

மனமாய்க் கனவாகி மாயையா யுள்ளிருந்து
நினைவாகி நின்ற நிலையறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—மாயை ஆய் மனம் ஆய் உள்ளிருந்து கனவு ஆகி நினைவு ஆகி - நீயே மாயை ஆகி அதனாலியன்ற மனமும் ஆகி அம்மனத்தொடு தோன்றுகின்ற கனவும் நினைவுகளும் ஆகி; நின்ற நிலை அறியேன் - நிற்கின்ற நின்னியல்பினை அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவனே மாயையைக் காரியப்படுத்துதலின் மாயை ஆகி என்றவாறு. (௪௮)

சத்தி சிவமிரண்டாய்த் தான்முடிவி லொன்றாகிச்
சித்திரமாய் நின்ற திறமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—சத்திசிவம் இரண்டாய் - படைக்கும் பொழுது அம்மையும் அப்பனும் ஆகிய இரண்டுருவாகி: முடிவில் சித்திரமாய் ஒன்று ஆகி - அழிப்புக் காலத்தே வியத்தகு முறையில் ஒரே பொருளாகி; நின்ற திறம் அறியேன் - நீ நிற்கின்ற தன்மையை அடியேன் அறிந்திலேன் காண் என்பதாம்.

(வி - ம்.) படைக்கும் பொழுது தானே ஆண் பெண் என்னும் இரண்டுருவும் கொள்கின்றனன். அழிக்குங்கால் - ஒரே பொருளா யிருக்கின்றான் என்பது கருத்து. (௪௯)

போறியாய்ப் புலனாகிப் பூதபே தப்பிரிவாய்
அறிவாகி நின்ற அளவறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—பொறி ஆய் புலன் ஆகி பூதபேதப் பிரிவு ஆய் - நீயே உயிர்களின் உடம்பு முதலிய கருவிகளாயும் சுவை முதலிய புலன்களும் நில முதலிய பூதங்களின் வேறுபாடுடைய கூறுகளும்; அறிவு ஆகி நின்ற அளவு அறியேன் - அடியேங்கள் அறிவிற்கு அறிவாகவும் நிற்கின்ற நின்னியல்பினை அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) பொறி, அறிகருவியும் தொழிற் கருவியுமாம். புலன் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. பூதம் - நிலம் நீர் தீ வளி வெளி என்பன. (௫௦)

வானிற் கதிர்மதியாய் வளர்ந்துபின்னோன் றானதுபோல்
ஊனுடலக் குள்ளிருந்த உயிர்ப்பறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—வானில் கதிர்மதியாய் வளர்ந்து பின் ஒன்று ஆனது போல் - வானத்தின்கண் ஒளியானது பிறையாகி நாள்தோறும் வளர்ச்சியுற்றுப் பின்னர் ஒருநாள் தன் முதலாகிய ஞாயிற்றுடன் ஒன்றுனது போல; ஊன் உடலுக்குள் இருந்த உயிர்ப்பு அறியேன் - நீ ஊனுகிய நம்முடலுக்குள் வளர்ந்திருந்த எம்முயிர்ப்பாதலை யான் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) கதிர் - ஒளி. ஞாயிற்ருேடு ஒன்றுனது போல என்க. நீயே நம்முள் உயிர்ப்பாயிருந்து எம்மை வளர்த்து நின்னோடு ஒன்ருக்குகின்ருய் என்பது கருத்து. (சுக)

போய்யும் புலேயுமிகப் பொருந்திவீண் பேசலன்றி
ஐயோ வுனேயுரைக்க வறிகிலேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—ஐயோ பொய்யும் புலேயும் மிகப் பொருந்தி வீண் பேசல் அன்றி - ஐயகோ! அறிவிலியாகிய யான் பொய் பேசுதலும் புலேத்தொழில் செய்தலும் ஆகிய இவற்ருேடு நன்கு பொருந்தி நின்று வீண் பேச்சுக்களேயே பேசுதலல்லாமல்; உனே உரைக்க அறிகிலேன் பூரணமே - உன்னுடைய திருப்பெயரைக் கூறவும் அறிந்திலேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) அடியேன் பொய் பேசுதலும் தீவினே செய்தலும் பயனில் பேச்சுப் பேசுதலுமல்லாமல் உன்னே நினேத்து மறியேன் எங்ஙனம் உய்வேன் என்றவாறு. (சுஉ)

நிரந்தரமா யெங்கு நின்றுவிளே யாடினதைப்
பரமதுவே யென்னப் பதமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—எங்கும் நிரந்தரமாய் நின்று விளே யாடினதை - நீ யாண்டும் இடையீடின்றிப் பரந்து நின்று விளேயாடிய நின் திருவிளேயாட்டினே அறிந்து; அதுவே பரம் என்ன - அங்ஙனம் விளேயாடிய பொருளே பரம்பொருளாகும் என்றுணர்தற்கு; பதம் அறியேன் - தகுதியான செவ்வியையும் யான் அறிந்தெய்திலேன் என்பதாம்.

(வி - ம்.) நீ எங்கும் நிறைந்து நின்ருயேனும் நின்னே அறியும் தகுதியை யானெய்திலேன் என்றவாறு. (சுங)

கோல்வாய் பிறப்பிப்பாய் கூடவிருந் தேசுகிப்பாய்
செல்வாய் பிறர்க்குள் சேயலறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—கொல்வாய் பிறப்பிப்பாய் கூட இருந்தே சுகிப்பாய் - நீ அடியேங்களேக் கொல்வாய் மீண்டும் பிறக்கச் செய்வாய் பிறந்த பின்னர் எம்மோடிருந்து இன்ப முறுவாய்; பிறர்க்குள் செல்வாய் - பிறர்க்குள்ளே புகவும் புகுவாய்; செயல் அறியேன்-நீ இத்துணேயும் செய்வாயாகவும் இச்செயல்களே அடியேன் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்) எம்முடன் கூடவிருக்கின்ற உன்னையே அறியாமை எமது பேதைமை மிகுதியை உணர்த்துகின்றதென்பது கருத்து. (கூச)

வாரிதியாய் வையமெலா மன்னுமண்ட பிண்டமெலாம்
சாரதியாய் நின்ற தலமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—வாரிதியாய்-நீயே கடல்களாய், வையம் எல்லாம் மன்னும் அண்ட பிண்டம் எல்லாம் - உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் நிலைபெற்ற உலகங்களையும் அவற்றின் கூறுகளையும் நடத்திச் செல்லுகின்ற; சாரதியாய் நின்ற தலம் அறியேன் - வலவனாகவுமிருக்கின்ற இடத்தை அடியேன் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) வாரிதி - கடல். சாரதி - ஈண்டு நடத்துபவன் என்னும் பொருள் குறித்து நின்றது. தலம் - இடம். (கூரு)

வித்தாய் மரமாய் வெளியா யொளியாய்நீ
சத்தா யிருந்த தரமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—நீ வித்தாய் மரமாய் வெளியாய் ஒளியாய் - நீ விதையாகவும் மரமாகவும் அவை வளர்கின்ற வெளியாகவும் அவற்றிற்கு வேண்டிய ஒளியாகவும்; சத்தாய் - அவற்றிற்கின்றியமையாத எரு முதலியனவும் ஆகி; இருந்த தரம் அறியேன் - இருந்த பெருமையை அடியேன் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) தரம் - பெருமை. (கூகூ)

தத்துவத்தைப் பார்த்துமிகத் தன்னை யறிந்தறிவால்
உய்த்துனைத்தான் பாராம லுய்வாரோ பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—தத்துவத்தைப் பார்த்துமிகத் தன்னை அறிந்து - பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரை யேறி யுய்ய வேண்டின் முதலில் உலகியலை நன்குணர்ந்து பின்னர் உயிராகிய தன்னியல் பினையும் அறிந்து கொண்டு; உய்த்து அறிவால் உனைத்தான் பாராமல் - அதன்மேல் குறிப்பாக நினது திருவடிஞானத்தாலே நின்னைத் தமக்குள் காணுமல்; உய்வாரோ - வேறு வழியாலே உய்வரோ காண்! என்பதாம்.

(வி - ம்.) பிறவிக்கடலை நீந்துவோர், உலகறிவும் உயிரறிவும் இறையறிவும் (பாசஞானம் பசுஞானம் பதிஞானம்) ஆகிய பொருளியல்புகளை நன்குணர்தல் வேண்டும் என்பது கருத்து. (கூஎ)

ஒன்று யுயிரா யுடல்தோறு நீயிருந்தும்
என்று மறியார்க ளேழைகள்தாம் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—நீ ஒன்றாய் என்றும் உடல்தோறும் உயிராய் இருந்தும் - நீ ஒரே பொருளாய் எவ்விடத்தும் எப்பொழுதும்

உடல்கள் தோறும் வாழுகின்ற தம்முயிர்க் குயிராக இருக்கவேயும் அறியார் ஏழைகள் - நின்னை யறியாத எம்மனோர் பெரிதும் அறிவில்லாதவரே யல்லரோ காண்! என்பதாம்.

(வி - ம்.) இறைவன் எங்கும் எப்பொழுதும் உயிர்க்குயிரா யிருக்கின்றனன் ஆயினும் உயிர்கள் அவனை அறிதலரிது என்பது கருத்து. (௬௮)

நேற்றென்று நாளையென்று நினைப்புமறப் பாய்ப்படைத்து
மாற்றமாய் நின்ற வளமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நேற்று என்றும் நாளை என்றும் நினைப்பும் மறப்பாய்ப் படைத்து - என்றும் ஒன்றேயாகிய காலதத்துவத்தை இறப்பும் எதிர்வும் ஆகவும் நிலையுதலுடைய உயிரையும் நினைத்தவற்றை மறப்பதாகவும் படைத்து; மாற்றமாய் - நீ அவற்றிற்கு வேறாக நிற்கின்ற நின் திருவருட் பெருக்கத்தை அடியேன் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) அழிவற்ற பொருளை அழிவன போன்றும் நினைப்பு மறப்பு மற்ற பொருளை நினைப்பு மறப்பு முடையனவாகவும் படைத்து நீ அவற்றிற்கு அப்பாலா யிருக்கின்றனை என்பது கருத்து. (௬௯)

மனம்புத்தி சித்த மகிழறிவாங் காரமதாய்
நினைவாந் தலமான நிலையறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—மனம்புத்தி மகிழ் அறிவு ஆங்காரமதாய் - நீ மனம் சித்தம் புத்தி மகிழ்தற்குரிய அறிவு செருக்கு என்பனவுமாகி; நினைவு ஆம் தலமான - அந்த மன முதலியவற்றில் நினைவுண்டாகும் இடமும் ஆகியிருக்கின்ற; நிலை அறியேன் - உன் தன்மையை அடியேன் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) உயிர்களின் மன முதலிய கருவிகளும் அவற்றால் நினைவுண்டாகும் இடமும் நீயேயா யிருக்கின்றாய் என்றவாறு. (௭0)

உருப்பேத மின்றி யுயர்ந்தசப்த பேதமதாய்க்
குருப்பேத மாய்வந்த குணமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—உருபேதம் இன்றி - உருவத்தாலே மக்களாகிய எம்முருவத்தோடு சிறிதும் வேற்றுமை இல்லாமல்; உயர்ந்த சப்த பேதம் அதாய் - மக்கள் மொழியினும் உயரியதாய் ஒலிவேறுபாடுடைய மொழியையும்; குருப்பேதமாய் வந்த குணம் அறியேன் - நிறத்தின் கண்ணும் வேறுபாடுடையையாய் எளியேன்முன் எழுந்தருளிய நின் திருவருட் சிறப்பினை அடியேன் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) உரு - வடிவம். குரு - நிறம். குணம் - அருட் குணம். (௭௧)

சட்சமய பேதங்கள் தான்வகுத்துப் பின்னுமோரு
உட்சமய முண்டேன் றுரைத்தனையே பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—சட்சமய பேதங்கள் வகுத்து - நீ திருவாய் மலர்ந்தருளிய வேதத்தின்கண் ஆறுவகையான சமயநெறிகளை வகுத்துரைத்து; பின்னும் ஒரு உட்சமயம் உண்டு என்று உரைத்தனை - அந்த ஆறுசமயங்களுக்கும் பொதுவாகிய அகச்சமயமும் ஒன்றுண்டு என்று அறிவுறுத்தினை காண் என்பதாம்.

(வி – ம்.) சட்சமயம் - ஆறுவகைச் சமயம். உட்சமயம் - அன்புநெறி. (எ௨)

முப்பத் திரண்டுறப்பால் முனைந்துபடைத் துள்ளிருந்த
செப்பிடு வித்தைத் திறமறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—முனைந்து முப்பத்து இரண்டு உறுப்பு ஆய்ப்படைத்து - உயிர்கட்குரிய உடம்பை முப்பத்திரண்டு உறுப்புக்களை யுடையதாகப் படைத்தருளி; உள் இருந்த செப்பிடு வித்தைத் திறம் அறியேன் - அவ்வுடம்புகள் அனைத்தினும் அவற்றுறுப்புக்கள் அனைத்தினும் நீ ஒரே காலத்தில் இருக்கின்ற மாயவித்தையினை அடியேன் அறிந்திலேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) உயிரினங்களின் உடம்புகளினும் உறுப்புக்களினும் நீ எழுந்தருளியிருப்பது வியத்தகு செயல் என்றவாறு. (எ௩)

என்னதான் கற்றலேன் னெப்பொருளும் பெற்றலேன்
உன்னை யறியாதா ருய்வரோ பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—உன்னை அறியாதார் - உன் திருவருளாலே உன்னைத் தமதுயிருக்குள்ளே உணர்ந்து கொள்ள மாட்டாதார்; என்னதான் கற்றால் என் - எந்த நூலைப் பயின்றாலும் யாது பயன்; எப்பொருளும் பெற்றால் என் - எத்தகைய அரும்பொருள்களைப் பெற்றிருந்தாலும் யாதுபயன்?; உய்வரோ - பிறவித்துன்பத்திற்றப்பி உய்வாரோ? உய்யார் காண்! என்பதாம்.

(வி - ம்.) உன் திருவருளால் உன்னையறிவதன்றி வேறு வழியால் அறியப்படாது என்பது கருத்து. (எ௪)

கற்றறிவோ மென்பார் காணார்க ளுன்பதத்தைப்
பெற்றறியார் தங்களுக்குப் பிறப்பறுமோ பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—நூல்களைக் கற்று அக்கல்வியறிவாலே நின்னை அறிந்து கொள்வேம் என்று முயல்வோர் அவ்வழியில் உன்னை ஒருபொழுதும் காணமாட்டார்; உன் பாதத்தைப் பெற்று அறியார் தங்களுக்கு - அன்புடைமையாலே நின் திருவடிகளைத் தம் மனத்தினிடே பெற்றிலாத மடவோர்க்கு; பிறப்பு அறுமோ – பிறப்பு ஒரு காலத்தும் அற மாட்டாது என்பதாம்.

(வி - ம்.) அன்பாலே ஆண்டவனைக் காணலாம் பிறப்பறுக்கலாம். அறிவினால் அவனைக் காணவியலாது பிறப்பறுக்கவும் இயலாது என்பது கருத்து. (௭௫)

வானென்பார் அண்டமேன்பார் வாய்ஞானமேபேசித்
தானென்பார் வீணர் தனையறியார் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :— வான் என்பார் - மடவோர் உன்னை வெட்டவெளியென்று கூறுவர்; அண்டம் என்பார் - உலகமே நீ என்றும் கூறுவர்; வாய்ஞானமே பேசி - இவ்வாறு வாயான்மட்டும் பொய்ஞ்ஞானம் பேசி; தன்னை யறியார் - முடிவில் உயிராகிய தம்மையும் அறியமாட்டார்; வீணர் - இத்தகைய வீணர்கள்; தான் என்பார் - தானே கடவுள் என்றும் கூறிக்கொள்வர்; என்னே இவர் தம் பேதைமை என்பதாம்.

(வி - ம்.) உயிரியல்பறியாதார் இறையியல்பும் அறியார். இவர் தாமே கடவுள் என்றும் கூறுவர் என்றவாறு. (௭௬)

ஆதியென்பார் அந்தமென்பார் அதற்குணடு வாயிருந்த
சோதியென்பார் நாதத் தொழிலறியார் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :— ஆதி யென்பார் - நின்னைச் சிலர் தோற்ற முடையது என்பர்; அந்தம் என்பார் - இறுதியுடையது என்பர்; அதற்குள் நடுவாயிருந்த சோதி என்பார் - அவ்விரண்டற்கும் இடையிலே யிருந்த ஒளி என்று கூறுகிற்பர்; நாதத்தொழிலறியார் - அநாதியாகிய நீ நாத முதலிய தத்துவங்களிலே நின்று செய்கின்ற ஐந்தொழிலையும் அறியாத மடவோர் என்பதாம்.

(வி - ம்.) இறைவனுக்குத் தோற்றமும் இடையும் ஈறும் கூறுவாருளர். அவர் அநாதி என்பதனையும் இறுதியற்றவன் என்பதையும் அவன் தொழிற் சிறப்பையும் அறியார் என்றவாறு. (௭௭)

மூச்சென்பா ருள்ளமென்பார் மோனமெனு மோட்ச
மென்பார்
பேச்சென்பா ருன்னுடைய பேரறியார் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :— மூச்சு என்பார் - சிலர் நின்னை உயிர்ப்புக் காற்றென்பர்; உள்ளம் என்பார் - சிலர் நின்னை மனம் என்பர்; மோனம் எனும் மோட்சம் என்பார் - அலைவற்ற அமைதியே நீ என்பர். பேச்சு என்பார் - சிலர் நின்னை ஒலி யென்பர்; உன்னுடைய பேர் அறியார் - இவரெல்லாம் நினது திருப்பெயரைத் தானும் அறிகிலாதாரே என்பதாம்.

(வி - ம்.) மூச்சென்பர் பிராணன்மாவாதி. மோன மோட்சம் - பாடாண வாதிமதம். பேச்சென்பவர் - சத்தப்பிரமவாதி. இறைவன் திருப்பெயரிலேயே இறைவனியல்பெலாம் அடங்கியிருத்தலின் நின் பேர் அறியார் என்றவாறு. (௭௮)

பரமேன்பார் பானுவேன்பார் பாழ்வேளி யாய்நின்ற
வரமேன்பார் உன்றன் வழியறியார் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—பரம் என்பார் - சிலர் நின்னைக் கடவுள் என்பர்; பானு என்பார் - சிலர் ஞாயிறு என்பார்; பாழ் வெளியாய் நின்ற வரம் என்பார் - வெறு வெளியாகிய வரம் என்பார்; உன்றன் வழி யறியார் - இவரெல்லாம் உன்னையுணரும் அன்பு நெறியை அறிகிலாதார் என்பதாம்.

(வி - ம்.) அன்பே நீயாதலறியாது பற்பல கூறுவர் என்றவாறு.
(எகூ)

எத்தனை பேரோ வேடுத்தேடுத்துத் தானுரைத்தார்
அத்தனைபேர்க் கோன்ருன தறிகிலேன் பூரணமே.

(இ – ள்.) பூரணமே:—எத்தனைபேரோ எடுத்து எடுத்துத் தான் உரைத்தார் - இதுகாறும் உலகில் எத்தனையோ மெய்க்காட்சியாளர்கள் உன்னை நுண்ணுணர்வா லுணர்ந்து தாந்தாங் கண்டவாறே கூறி யுள்ளார். அவர் கூற்று வேறுபட்டிருப்பினும்; அத்தனை பேர்க்கும் ஒன்று ஆனது - தம்முள் முரணிக் கூறுகின்ற எண்ணிறந்த மெய்க் காட்சியாளர்க்கும் காட்சியாக நீ ஒருவனே நிற்கின்ற மாயத்தை; அறி கிலேன் - யான் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்). மெய்க்காட்சியாளர் கூற்றுக்கள் முரண்படினும் அவை யனைத்திற்கும் முதலாயிருப்பவன் இறைவன் ஒருவனே என்றவாறு.
(அ0)

நகார மகாரமேன்பார் நடுவே சிகாரமேன்பார்
வகார யகாரமேன்பார் வகையறியார் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நகாரம் மகாரம் என்பார்-நின் திருவைந் தெழுத்தில் இது நகாரம் என்றும் இதன் தத்துவம் இன்னதென்றும் இது மகாரம் என்றும் இதன் தத்துவம் இன்னதென்றும்; நடு சிகாரம் என்பார் - நடுநின்ற சிகாரத்தின் தத்துவம் இன்னதென்றும் கூறு கிற்பர்; வகாரம் யகாரம் என்பார் – இவ்வாறே வகாரம் யகாரங்களைக் கூறுவார். வகையறியார் - அவற்றூற் குறிக்கப்படுகின்ற நின்னை யடையும் வழியை மட்டும் சிறிதும் அறிய மாட்டார் காண் என்பதாம்.

(வி - ம்.) நூல்களைப்பற்றிப் பெரிதும் ஆராய்ச்சி செய்வார் ஆயினும் அவற்றின் பயனை எய்துதல் இலர் என்றவாறு. (அக)

மகத்துவமாய்க் காம மயக்கத்துக் குள்ளிருந்து
பகுத்தறிய மாட்டாமற் பயனிழந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—மகத்துவமாய் காம மயக்கத்துக்குள் இருந்து - செருக்கோடு காமத்துள்ளும் மயக்கத்துள்ளும் இருந்தமையாலே; பகுத்து அறியமாட்டாமல் - பொய்யிது மெய்யிது என்று

பகுத்தறிய மாட்டாமல்; பயன் இழந்தேன் - அடியேன் பிறவிப் பயனை இழந்துவிட்டேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) யானே பெரியன் என்று நிற்றலால் செருக்கினை மகத்துவம் என்றார். (அஉ)

உண்மைப் பொருளை யுகந்திருந்து பாராமல்
பெண்மயக்கத் தாலே பிறந்திறந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—பெண் மயக்கத்தாலே - அடியேன் மகளிர்பாலுண்டாகின்ற காம மயக்கங் காரணமாக; உகந்து இருந்து உண்மைப் பொருளைப் பாராமல் - தூய்மையா லுயர்ந்திருந்து மெய்ப் பொருளாகிய நின்னை நோக்காத குறையினால்; பிறந்து இறந்தேன் - எண்ணிறந்த பிறப்புக்களிலே பிறந்தும் இறந்தும் உழல்வேணாயினேன் என்பதாம்.

(வி - ம்.) மக்களின் உயரிய நோக்கத்தை இழிந்த ஆசை அழித்து விடுகின்றது என்பதாம். உகந்து - உயர்ந்து. (அ௩)

வாயார வாழ்த்தி மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்
காய மெடுத்துக் கலங்கினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—உனை வாயார வாழ்த்தி மகிழ்ந்து போற்றாமல் - உன்னை அடியேன் வாயார வாழ்த்தி மனமகிழ்ந்து வணங்காமையாலே; காயம் எடுத்துக் கலங்கினேன் பூரணமே - பிறப்பிலுழன்றுழன்று துன்புறுகின்றேன் என்பதாம்.

(வி - ம்.) அவன் தாள் சேர்ந்தார்க் கல்லது மனக்கவலை மாற்றுதல் அரிது என்பது கருத்து. (அ௪)

சந்திரனை மேகமது தான்மறைத்த வாறதுபோல்
பந்தமுற யானுமுனைப் பார்க்கிலேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—மேகமது சந்திரனை மறைத்தவாறு அது போல் - முகிலானது திங்கள்மண்டிலத்தை மறைத்து உலகை இருளாக்குமாறு போலே என் அறிவானது ஆணவ மலத்தால் மறைப்புண்டு போதலாலே; பந்தமுற - அதன் வாயிலாய் அடியேன் கட்டுண்டு கிடப்பதனால்; யானும் உனைப் பார்க்கிலேன் - அடியேன் உன்னை உணர்கின்றிலேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) என் அறிவினை இருள் மலம் மறைத்து விடுதலாலே உன்னை யான் காணேன் ஆயினேன் என்பது கருத்து. (அ௫)

செந்தாமரைத் தாளைத் தினந்தினமும் போற்றாமல்
அந்தரமாய் நின்றிங் கலைந்தேனான் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:— தினம் தினமும் செந்தாமரைத் தாளைப் போற்றாமல் - நாள்தோறும் நாள்தோறும் செந்தாமரை மலர் போன்று

அழகிய நின் அடிகளை வணங்காத பிழையினுல்; நான் இங்கு அந்தரமாய் நின்று அலேந்தேன் – அடியேன் புகலிடமின்றி இவ்வுலகத்திலே அலேந்துழலா நின்றேன் என்பதாம்.

(வி - ம்.) அந்தரமாய் நிற்றல் - சார்பிடமின்றி நிற்றல். (அசு)

நீர்மேற் குமிழிபோல் நிலேயற்ற காயமிதைத்
தாரகமென் றெண்ணிநான் றட்டழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நீர்மேல் குமிழிபோல் நிலேயற்ற காயமிதை - நீரின்மேற்றேன்றும் மொக்குள் நிலேயுதலின்றி விரைந்தழியுமாறு அழிகின்ற இந்த உடம்பினை; தாரகம் என்று எண்ணி - நிலேத்த சார்பிடமாகக் கருதி; தட்டு அழிந்தேன் - நிலேதடுமாறினேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) பொய்யை மெய்யென்று கருதித் தடுமாறினேன் என்றவாறு. (அஎ)

நெஞ்ச முருகி நினைந்துனைத்தான் போற்றிநெடு
வஞ்சகத்தைப் போக்க வகையறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நெடு வஞ்சகத்தை - அடியேனுளத்தில் நெடுங்காலமாக வுறைகின்ற வஞ்சகத்தை; உனை நெஞ்சம் உருகிப் போற்றி - உன் திருவடிகளை என் உள்ளம் உருகும்படி மெய்யன்போடு வாழ்த்துமாற்றுல்; போக்க வகை அறியேன் - போக்கிக் கொள்ளுதற்குரிய வழியை அறிந்திலேன்; என்பதாம்.

(வி - ம்.) தன்னெஞ்சத்துள்ள குற்றத்தைத் தீர்த்தருளும்படி இறைவனை நெஞ்சுருகி வாழ்த்தினுல் அக்குற்றம் அகன்று போம் என்பது கருத்து. (அஅ)

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கு நிறைந்திருந்த
துள்ள மறியா துருகினேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—எள்ளுக்குள் எண்ணெய் போல் - நீ தானும் எள்ளுக்குள் எண்ணெய் இடையறவின்றி நிறைந்திருக்குமாறு போலே; எங்கும் நிறைந்திருந்தது - அங்கிங்கெனுதபடி யாண்டும் நிறைந்திருக்கின்ற நின்னியல்பினை; உள்ளம் அறியாது - அடியேன் நெஞ்சம் அறிந்து கொள்ளாமையாலே; உருகினேன் - துன்பத்தால் உள்ளம் உருகினேன் காண்!

(வி - ம்.) எங்கும் நிறைந்திருப்பதனை அறிந்தால் நீ காக்குவை என்று வருந்தாதிருப்பேன் என்பது கருத்து. (அக)

மாயாப் பிரபஞ்ச மயக்கத் திலேவிழுந்தே
ஓயாச் சனன மொழித்திலேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—மாயாப் பிரபஞ்ச மயக்கத்தில் விழுந்து-மாயையாலியன்ற இவ்வுலகந்தருகின்ற பொய்யின்பத்திற்கு அவாவி மயக்கமுற்று உலகியலிலே மிகவும் அழுந்திக் கிடக்கின்றமையாலே; ஓயாச் சனனம் ஒழித்திலேன் - ஒழியாமல் வந்து கொண்டிருக்கின்ற பிறப்பினை ஒழிக்க முயன்றிலேன் காண்; என்பதாம்.

(வி - ம்.) மயக்கங் காரணமாக உய்வழி நாடாமலுழலுகின்றேன் என்றவாறு. (௯0)

பூசையுடன் புவன போகமெனும் போக்கியத்தால்
ஆசையுற்றே நானு மறிவழிந்தேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—பூசையுடன் - நின்னை நாடோறும் வழிபாடு செய்வேனாயினும் நின்பாலன்பின்றி; அந்த வறிய வழிபாட்டோடே; புவனபோகம் எனும் போக்கியத்தால் - இவ்வுலகவின்பம் என்று கூறப்படுகின்ற நுகர்பொருள்களிடத்தே பெரிதும் அவாவுற்று; நானும் அறிவழிந்தேன் - அடியேன் நல்லறிவிழந்து விட்டேன் காண்! என்பதாம்.

(வி - ம்.) நின் வழிபாட்டோடு அமையாது உலகவின்பத்தையும் விரும்பி அறிவிலேன் ஆயினேன் என்றவாறு. (௯௧)

படைத்து மழித்திடுவாய் பார்க்கிற்பிர மாவெழுத்தைத்
துடைத்துச் சிரஞ்சீவியாய்த் துலங்குவிப்பாய் பூரணமே.

(இ - ள்). பூரணமே:—படைத்தும் அழித்திடுவாய் - நீ எம்மனோரைப் படைத்தும் பின்னர் நீயே அழித்தும் விடுவாய்; பார்க்கில் ; ஓரோவழி நின் கடைக்கண்ணால் நோக்கினால்; பிரமா எழுத்தைத் துடைத்து - மீட்டுப் பிறக்கவென்று அயன் எழுதிய எழுத்தைத் துவரத்துடைத்து; சிரஞ்சீவியாய் துலங்குவிப்பாய் - அழிவில்லாத பேரின்ப வாழ்விலிருத்தி எக்காலமும் திகழ்ந்திருக்கவும் செய்குவை காண்! என்பதாம்.

(வி - ம்.) இறைவனே நீ உயிர்களைப் படைத்தும் காத்தும் அழித்தும் வருவாய்; சில செவ்வியில் நீ நோக்குவாயானால் அவற்றை மீட்டும் பிறவாமல் வீட்டுலகத்தில் இருந்து திகழவும் செய்குவை என்றவாறு. (௯௨)

மந்திரமாய்ச் சாத்திரமாய் மறைநான்காய் நீயிருந்த
தந்திரத்தை நானறியத் தகுமோதான் பூரணமே.

(இ - ள்.) பூரணமே :—நீ மந்திரம்ஆய் சாத்திரம்ஆய் நான்கு மறைஆய் இருந்த தந்திரத்தை-நீ மந்திரங்களாகியும் ஆகமங்கள் ஆகியும் நான்கு வேதங்களாகியும் உயிரினங்களுக்கு அணுக்கனாக இருக்கின்ற நின் சூழ்ச்சியை; நான் அறியத் தகுமோ - எளியேன் அறியக்கூடுமோ என்பதாம்.

(வி - ம்.) இறைவன் மனமொழிகட் கப்பாலானுயினும் அவனே மந்திரம் ஆகமம் மறை முதலியனவாகி அவர் மன மொழிகட்கு எட்டியு மிருக்கின்ருன் என்றவாறு. (௧௩)

அல்லாய்ப் பகலா யனவரத காலமெனுஞ்
சொல்லாற் பகுத்த தொடர்பறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—அல்லாய் பகலாய் அனவரத காலம் எனும் - நீயே காலதத்துவமாகி அதனையும் இரவு என்றும் பகல் என்றும் அனைத்துக் காலங்களும் என்றும்; சொல்லால் பகுத்த தொடர்பு அறியேன் - சொல்லால் வகுத்துள்ள இத்தொடர்ச்சிக்குக் காரணம் யாதும் அறிகின்றிலேன்; என்பதாம்.

(வி - ம்.) இறைவனே! கால தத்துவமாகின்ருன் அதனையும் பல்வேறு கூறுகளாக்கியு மிருக்கின்ருன் என்பது கருத்து. (௧௪)

நரகஞ் சுவர்க்கமென நண்ணுமிரண் டுண்டாயும்
அரகரா வென்ப தறிகிலேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நண்ணும் நரகம் சுவர்க்கம் என இரண்டு உண்டு ஆயும் - உயிர்கள் புகுதும் இடங்களாக நரகம் என்றும் துறக்கம் என்றும் இரண்டிடங்கள் உண்டாதலை அறிந்திருந்தும்; அரகரா என்பது அறிகிலேன் - நரகம் புகாமைக்கும் துறக்கம் புகுதற்கும் காரணமாகின்ற அரகர என்னும் நின் திருப்பெயரைக் கூறவும் அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) நின்பெயர் துன்பம் வாராமற் காக்கும், இன்ப முண் டாக்கும் என்பதறிந் திருந்தும் அதனை ஓதுகின்றிலேன் என்றவாறு. (௧௫)

பாவபுண்ணிய மென்னும் பகுப்பாய்ப் படைத்தழித்திங்
காவலையுண் டாக்கிவைத்த வருளறியேன் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—பாவம் புண்ணியம் என்னும் பகுப்பாய்ப் படைத்து அழித்து - நீ உயிர்கள் செய்யுந் தொழிலை அறம் என்றும் மறம் என்றும் இரு கூருய்ச் செய்து அவற்றிற் கிணங்க அவ்வுயிர்களைப் படைத்தும் அழித்தும் வருவாயாகவும்; இங்கு ஆவலை உண்டாக்கி வைத்த அருள் அறியேன் - இருவழியும் துன்பத்திற்கே இடமான இவ்வுலகிலவற்றிற்கு அவாவினையும் உண்டாக்கி யிருக்கின்ற நின் திருவருளின் குறிப்பு யாது என்று அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அறம்பாவங்கட் கீடாகப் பிறப்பிக்கு மிடமான இவ்வுலகம் துன்ப முடைத்தாகவும் அதனை உயிர்கள் அவாவும்படி செய் திருப்பதென்னையோ? என்றவாறு. (௧௬)

சாந்தமென்றுங் கோபமென்றும் சாதிபே தங்களென்றும்
பாந்தமென்றும் முத்தியென்றும் படைத்தனையே பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—சாந்தம் என்றும் கோபம் என்றும் - உயிர்களை அமைதியுடையன எனவும் வெகுளியுடையன எனவும், சாதி பேதங்கள் என்றும் - பல்வேறு வகுப்பு வேற்றுமைகள் உடையன என்றும்; பாந்தம் என்றும் முத்தி யென்றும் படைத்தனை - கட்டுடையன வென்றும் வீடுற்றன என்றும் படைத்துள்ளனை, இவற்றிற்குக் காரணம் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ம்.) ஒரே வகையான உயிர்களை இவ்வாறு வேற்றுமை யுடையனவாகப் படைத்தமை எற்றிற்கு? என்றவாறு. (௬௭)

பாச முடலாய்ப் பசுவதுவுந் தானுயிராய்
நேசமுட னீபொருளாய் நின்றனையே பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—(முப்பொருள்களுள் வைத்து) பாசம் உடலாய் - பாசமே உயிர்கட்குடம்பாகவும்; பசுவதுவும் - அப்பசுக்கள் தாமே; உயிராய் - உயிராகவும்; நீ பொருளாய் நேசமுடன் நின்றனையே - பதியாகிய நீயே அவ்வுயிர்கள் எய்துதற்குரிய மெய்ப் பொருளாகவும் அவ்வுயிர்களின்பால் வைத்த அருளோடே நிற்பாயாயினை என்பதாம்.

(வி - ம்.) இறைவன் உயிரின் பாசத்தை அவற்றிற்கு உடலாக்கிக் கழித்து அவற்றைத் தானாக்கிக் கொள்கின்றான் என்றவாறு. (௬௮)

ஏதிலடி யாரிரங்கி யிகத்தில்வந் துன்றன்
பாதமதிற் றாழப் பரிந்தருள்வாய் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—ஏது இல் அடியார் - நின் திருவருளை அடைதற்கு வேண்டிய காரணங்கள் வாய்க்கப்பெறாத எம்போன்ற அடியார்களுக்கும்; இரங்கி - அருள் கூர்ந்து; இகத்தில் வந்து - இவ்வுலக வாழ்க்கையினூடும் நீயே வலிய வந்து; உன்றன் பாதமதில் தாழ - நின்னுடைய திருவடிகளை எளிதிற்பெற்று வணங்குமாறு; பரிந்து அருள்வாய் - இரங்கி அருள்செய்வா யல்லலையோ? என்பதாம்.

(வி - ம்.) மெய்யடியார் இறைவனை எய்தும் பிற ஏதுக்கள் இலராய பொழுதும் அவன் தானே அவரெதிர் வந்து எளிதாகத் தன் திருவடிகளை வழங்கும் அத்துணைப் பேரருளாளன் என்பது கருத்து. (௬௯)

நானேநீ நீயேநா னு யிரண்டு மொன்றானாற்
றேனின் ருசியதுபோற் றேவிட்டாய் நீ பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—நானே நீ, நீயே நான் ஆய் இரண்டும் ஒன்றானால் - சீவனாகிய யான் அத்தன்மை கெட்டுச் சிவம் ஆகியும், பின்னரும் சிவமாகிய நீயே அத்தன்மையினின்று மிழந்து சீவனாகியும், இவ்வாற்றால் நீ நான் என்னும் இரண்டு மற்று ஒன்றாகி விட்டால்; நீ தேனின் ருசியதுபோல் தெவிட்டாய் - நீ இந்நிலையில் அடியேனுக்கு

எப்பொழுதும் தேனினது சுவை போன்று தெவிட்டாச் சுவை'யுடையை ஆகுவை காண்! என்பதாம்.

(வி - ம்.) நீயும் நானும் இருவேறு தன்மையுடையேமாயினும் நம்மிருவருக்கும் பொதுவாகிய அன்பினுல் ஒன்றுபடும்பொழுது அடியேனுக்கு எல்லையற்ற இன்பம் உண்டாகும் என்றவாறு. (௧௦௦)

முடிவிலொரு சூனியத்தை முடித்துநின்று பாராமல்
அடியிலொரு சூனியத்தி லலைந்தேனே பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—ஒரு சூனியத்தை முடித்து முடிவில் நின்று பாராமல் - ஒப்பற்ற பொய்யாகிய நான் என்னும் செருக்கினைத் துவரக்கெடுத்து அது கெட்டபொழுது தோன்றுகின்ற நின்னோடு இரண்டறக் கலந்து நின்று நின்னைக் காணமாட்டாமல் அடியில் ஒரு சூனியத்தில் அலைந்தேன் - அநாதியாகவே பொய்ப்பொருளாகிய மாயையினூடு அலைந்துழல்வேனாயினேன் என்பதாம்.

(வி - ம்.) சூனியம் இரண்டனுள் முன்னையது செருக்கு; பின்னையது மாயை. (௧௦௧)

பூரண மாலைதனைப் புத்தியுட னோதினர்க்குத்
தாரணியின் ஞானந் தழைப்பிப்பாய் பூரணமே.

(இ - ள்.) பூரணமே:—எங்கும் நிறைந்துள்ள சிவபெருமானே!; பூரணமாலைதனை - பூரணமாலை என்னும் இச்சிறு நூலை; புத்தியுடன் ஓதினர்க்கு - கருத்தூன்றிப் பொருளுணர்ந்து பயிலுகின்ற அன்பர்கட்கு; தாரணியில் - இவ்வுலகின்கண்; ஞானந்தழைப்பிப்பாய் - நின் திருவடி ஞானம் பெருகும்படி திருவருள் செய்தருள்க! என்பதாம்.

(வி - ம்.) அடிகளார், எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்னும் அருளுள்ள முடைமையால் இந்நூலை எல்லோரும் பயின்று இன்புறுமாறு செய்தருள்க! என்று இறைவனை வேண்டுகின்றார் என்க. (௧௦௨)

பூரணமாலை முற்றும்.

நெஞ்சொடு மகிழ்தல்

(அடிகளார் தமது நெஞ்சம் தம் வழிப்பட்டு நின்றமை கருதி மகிழ்ந்ததனைக் கூறும் பகுதி என்றவாறு.)

அன்றமுத லின்றளவு மாக்கையோடு சூட்சியுமாய்
நின்ற நிலையறிய நேசமுற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே - என் அருமை நெஞ்சமே; அன்று முதல் இன்று அளவும் - என்று யாம் பிறப்பினுட்புக்கோம் அந்த நாள் முதலாக இந்த நாள் வரையினும்; ஆக்கையொடு சூட்சியும் ஆய் நின்ற நிலை அறிய நேசம் உற்றாய் - வறிய சடமாகிய உடம்புகளோடு உயிராகிய யாம் சூட்சியாக நிற்கின்ற தன்மையை ஆராய்ந்தறிதற்கு என்னோடு இயைந்தனை ஆதலின் நீ நல்லைகாண்! என்பதாம்.

(வி - ம்.) இது நெஞ்சம் ஆசைவழிச் சென்றுஅவம் போகாமல் அறிவின் வழிப்பட்டு நின்றமைக்கு மகிழ்ந்தவாறு. (௧)

அங்கங் குணர்வா யறிவாகி யேநிரம்பி
எங்கேங்கு மானதிலே யேகரித்தாய் நெஞ்சமே.

(இ – ள்.) நெஞ்சமே - என் நெஞ்சமே நீ: அங்கு அங்கு உணர்வு ஆய் அறிவு ஆகியே - பற்றினதே பற்றாக அழுந்தாமல் அவ்வவ்விடங் களிலே யாம் பொருளை உணரும் நமதுணர்விற்கு உணர்வு ஆகவும்; நமது அறிவிற்கும் அறிவு ஆகியும்; நிரம்பி எங்கு எங்கும் ஆனதிலே - யாண்டு நிறைந்தும் எம்மறிவு எங்கெங்கே சென்றாலும் அங்கங்கே தானாகவே நிற்கின்ற சிவத்தோடு; ஏகரித்தாய் - நீ ஒன்றுபட்டனை யல்லையோ! நீ வாழ்க என்பதாம்.

(வி - ம்.) நம்முணர்வுக்கு உணர்வாய் அறிவிற்கு அறிவாய் யாம் எங்குப் பார்த்தாலும் அங்குந் தானாகவே நிற்கின்ற இறைவனோடு கலந் தனை என்பது கருத்து. இது நெஞ்சு உலகத்தைப் பொருளாகப் பாராமல் இறைவனாகக் கண்டிருந்த ஏற்றத்தைப் போற்றிய படியாம். (உ)

அலையாத பேரின்ப வானந்த வெள்ளத்தில்
நிலையா வுருவிறந்து நின்றனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—அலையாத பேரின்ப ஆனந்த வெள்ளத் தில் - நீ எங்கெங்கும் ஆகிய சிவத்தோடு ஒன்றுபட்டு அலைதற்கிட னில்லாத பேரின்பம் என்கின்ற அவனுடைய அருள் வெள்ளத்தி னூடே, உரு இறந்து - நினக்குரிய செருக்கு ஆகிய உருவத்தையும் கைவிட்டு; நிலையா நின்றனையே – அத்திருவருளே நீயாக நிலைபெற்று நின்றனையல்லையோ? நீ நீடுவாழ்க என்பதாம்.

(வி - ம்.) இது நெஞ்சம் நான் என்பது அறத் திருவருளில் மூழ்கி அதுவே தானாகிய நன்மையை நினைத்து மகிழ்ந்தவாறு. (௩)

பாராமற் பதையாமற் பருகாமல் யாதோன்றும்
ஓரா துணர்வுடனே யோன்றினையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—பாராமல் பதையாமல் பருகாமல் - நீ வேம்புதின்ற புழுப்போல வாதனை வயப்பட்டு மீட்டும் இவ்வுலக வின்பங்களை நினையாமலும் அவற்றிற்கு அலமாலுறாமலும் அவற்றை எய்தி நுகராமலும்; ஓராது - யாதொன்றனையும் நினைத்தலும் செய்

யாமல்; உணர்வுடனே யொன்றினையே - மெய்யுணர்வோடு கலந்தொன்று பட்டனையல்லையோ! நீ வாழ்க.

(வி - ம்.) மெய்யுணர்ந்த பின்னர் வாதனை வயப்படாமைக்கு மகிழ்ந்த படியாம். (ச)

களவிறந்து கோலையிறந்து காண்பனவுங் காட்சியும்போ
யளவிறந்து நின்றதிலே யன்புற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—களவு இறந்து கொலை இறந்து - களவு கோடலின்றியும் உயிரினங்களைக் கொல்லுதலின்றியும்; காண்பனவும் காட்சியும்போய் - காணப்படும் பொருளும் காண்கின்ற அறிவும் இல்லாமல்; அளவு இறந்து நின்றதிலே அன்பு உற்றாய் - எல்லையற்ற சிவத்தின்பால் அன்பினாற் கலந்து நின்றனையல்லையோ நீ வாழ்க என்பதாம்.

(வி - ம்.) இது சிவோகம்பாவனை கைவந்தமைக்கு மகிழ்ந்ததாம். (ரு)

பேச்சிறந்து சுட்டிறந்து பின்னிறந்து முன்னிறந்து
நீச்சிறந்து நின்றதிலே நேசமுற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—பேச்சு இறந்து சுட்டு இறந்து - நீதான் பேசுந்தொழிலையும் கடந்து சுட்டி அறியும் சிற்றறிவு நிலையினையுங் கடந்து; பின் இறந்து முன் இறந்து - காலவேறுபாட்டையும் இடவேறு பாட்டையும் கடந்து; நீச்சு இறந்து - மேலும் மேலும் தேடுகின்ற தேட்டமும் கடந்து; நின்றதிலே - நிலையுதலுடைய சிவத்திலே; நேசமுற்றாய் - அன்பால் ஒன்றினை யல்லையோ! நீ வாழ்க என்பதாம்.

(வி - ம்). நீச்சிறத்தல் - தேட்டற்றமைதல். (சு)

விண்ணிறந்து மண்ணிறந்து வெளியிறந்து வொளியிறந்து
எண்ணிறந்து நின்றதிலே ஏகரித்தாய் நெஞ்சமே.

(இ - ள்) நெஞ்சமே:—மண் இறந்து விண்ணிறந்து - மண் முதல் விண் ஈறாகிய பூதங்களுக்கு அப்பாலாய்; வெளியிறந்து ஒளியிறந்து - மனவெளியைக் கடந்து பூதவொளியையுங் கடந்து; எண் இறந்து நின்றதிலே - நினைப்பையுங் கடந்து நின்ற சிவத்தோடு; ஏகரித்தாய் - ஒன்றிக் கலந்தனை நீ வாழி என்பதாம்.

(வி - ம்.) இது சாக்கிராதீத நிலை எய்தினமையைப் பாராட்டியது. (எ)

பார்த்த விடமெங்கும் பரமெனமே யுட்புறம்புங்
கோத்தபடி யுண்மையெனக் கொண்டனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—பார்த்த இடம் எங்கும் பரம்என - யாம் ஞானக்கண்ணால் நோக்கிய இடமெல்லாம் இறைவனே உளன் எனவும்;

உள் புறம்பும் கோத்தபடி உண்மை என-அவன் அனைத்தையும் அகமும் புறமும் தழுவிக் கோவை செய்தவாறும் உண்மையே எனவும்; கொண் டனையே - உணர்ந்து கொண்டனையல்லையோ நீ வாழி! என்பதாம்.

(வி - ம்.) இஃது எல்லாம் இறை மயமேயென மெய்யுணர்ந்த மையைப் பாராட்டியவாறு. (அ)

ஊரிறந்து பேரிறந்து வொளியிறந்து வெளியிறந்து
சீரிறந்து நின்றதிலே சேர்ந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—ஊர் இறந்து பேர் இறந்து ஒளிபிறந்து வெளியிறந்து சீர் இரந்து நின்றதிலே - நீதானும் உலகங்கட்கு அப்பா லாய்த் தனக்கெனப் பெயர் யாதுமின்றி பூதவொளிக்கும் அப்பாலாய்ப் புகழ்க்கும் அப்பாலாய் நிற்கின்ற செம்பொருளிலே; சேர்ந்தனையே - இரண்டறக் கலந்தனை யல்லையோ நீ வாழி! என்பதாம்.

(வி - ம்.) ஊர் என்பது இடங்களை. ஒளி - பூதவொளி. (௯)

ஆண்பெண் ணலியென் றழைக்கவரி தாய்நிறைந்து
காண்பவரி தாயவிடங் கண்ணுற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—நீ; ஆண் பெண் அலி என்று அழைக்க அரிது ஆய் - அவன் என்றுதல் அவள் என்றுதல் அது வென்றுதல் சுட்டிக் கூறவியலாததாய்; நிறைந்து - எங்கும் நிரம்பி; காண்ப அரிது ஆய இடம் - காண்டற்கியலாத மெய்ப்பொருளாகிய இடத்தை; கண்ணுற்றாய் - நின்னுள்ளே கண்டு கொண்டனை; நீ வாழ்க! என்பதாம்.

(வி - ம்.) இது செயற்கரிய செய்தனை எனப் பாராட்டியது. (௧0)

ஆங்கார மச்ச மகற்றி யறிவினொடு
தூங்காமற் றூங்கிச் சுகம் பெற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—ஆங்காரம் அச்சம் அகற்றி - நீ செருக் கினைத் துவர நீக்கி அச்சத்தை அறப்போக்கி; அறிவினொடு - மெய் யுணர்வினோடு; தூங்காமல் தூங்கி - அறிதுயில்கொண்டு; சுகம் பெற்றாய் - வீட்டின்பத்தை எய்தினை; நீ வாழி! என்பதாம்.

(வி - ம்.) இது பெறற்கரிய பேறு பெற்றனை எனப் பாராட் டியது. (௧௧)

ஆதியாய் நின்ற வகண்டபரி பூரணத்தைச்
சாதியா நின்றவிடம் சார்வுற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—ஆதியாய் நின்ற அகண்ட பரி பூரணத்தை - நீ உலகங்கட் கெல்லாம் முதலாயிருக்கின்ற பிரிவில்லாப்

பெருநிறைவாகிய சிவத்தை; சாதியா நின்ற இடம் - தன்னுட்கண்டு அடைதற்குரிய ஓரிடத்தை; சார்வுற்ருய் - அடைந்தனை நீ வாழி; என்பதாம்.

(வி - ம்.) ஆதி - முதல். உலகிற்கு ஆதியாய் என்றவாறு. (கஉ)

விருப்புவெறுப் பில்லாத வெட்டவெளி யதனில்
இருப்பே சுகமேன் றிருந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:— விருப்பு வெறுப்பு இல்லாத வெட்ட வெளியதனில் – நீ வேண்டுதலும் வேண்டாமையும் இன்றி இருத்தற் கிடஞன; வெட்ட வெளியிலே - சாக்கிராதீத நிலையாகிய தூய வெளியில்; இருப்பே சுகம் என்று இருந்தனை - நிலைத்திருப்பதுவே இன்பமாம் என்றுணர்ந்து அந்நிலையி லிருக்கின்றனை யல்லையோ? நீ நீடுவாழ்க! என்பதாம.

(வி - ம்.) இது வீடுபேற்றினை யுணர்ந்து அதனை எய்தியதனைப் புகழ்ந்தது. (கங)

ஆருமுருப் பேரண்டத் தப்புறத்து மிப்புறத்தும்
நீருமுப்பு மென்ன நிலைபெற்ருய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சே:—ஆரும் உருப் பேரண்டத்து அப்புறத்தும் இப்புறத்தும் - எத்தகையோராலும் எய்த வொண்ணுத இந்தப் பேரண்டத்திற்கு அப்பாலும் இப்பாலும்; நீரும் உப்பும் என்ன - நீ நீரோடு கலந்த உப்புப்போன்று இறைவன் பரப்பெல்லாம் பரந்து; நிலை பெற்ருய் - நிலைத்திருந்தாயல்லையோ நீ வாழ்க என்பதாம்.

(வி - ம்.) இஃது நெஞ்சம் இறைவன் வியாபகத்துள் யாண்டும் வியாப்பியமாய் நின்றமையைப் பாராட்டிய படியாம். (கச)

உடனுக வேயிருந்து முணரவரி யானேடு
கடனீரு மாறும்போற் கலந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—உடன் ஆக இருந்தும் உணர அரியானேடு - அநாதியாக நம்மோடு கூடியிருந்தானுகவும் நம்மால் சிறிதும் உணரவியலாத அச்சிவபெருமானை உணர்ந்து அவனேடு; கடல் நீரும் ஆறும்போல் கலந்தனை - நீ கடல் நீரும் ஆற்று நீரும் கலந்தாற்போல இரண்டறக் கலந்தனை யல்லையோ நீ வாழ்க என்பதாம்.

(வி - ம்.) இஃது உணரவரியானை உணர்ந்தமைக்கு மகிழ்ந்தது. (கரு)

நெடியகத்தைப் போக்கி நின்ற சழக்கறுத்துப்
படியகத்துக் குப்பம்போற் பற்றினையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—நெடியகத்தைப் போக்கி - நீ நீண்ட பேச்சினைத் துவரத்துறந்து; நின்ற சழக்கு அறுத்து – எஞ்சிய குற்றங்

களையும் அழித்து: படிகத்தக் கும்பம்போல் - படிக்கத்தாலியன்ற குடம் போன்று தூய்மை பெற்று; பற்றினை - அவனடிகளை நீ நினக்குளேற்றுக் கொண்டனை யல்லையோ நீ வாழ்க.

(வி - ம்.) படிகக்குடம் ஏற்ற பொருளின் நிறமே தன்னிறமாக்கிக் கோடலால் நெஞ்சிற்குவமையாயிற்று. (கசு)

மேலாகி யெங்கும் விளங்கும் பரம்பொருளிற்
பாலூறு மின்சுவைபோற் பற்றினையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :— மேல் ஆகி - முப்பொருளினுள் வைத்து மேன்மையுடைய பொருளாகி; எங்கும் விளங்கும் பரம் பொருளில் - எஞ்சிய இரண்டு பொருளினூடும் கலந்து திகழ்கின்ற மெய்ப்பொருளின் கண்; பால் ஊறும் இன்சுவைபோல் பற்றினையே - பாலின்கட்டோன்றுகின்ற இனிய சுவை அப்பாலில் யாண்டுங் கலந்திருந்தாற் போன்று கலந்தனை காண்! நீ வாழ்க! என்பதாம்.

(வி - ம்.) முப்பொருளினுள் மேலாகி என்க. (கஎ)

நீரோடுதண் ணாலிவிண்டு நீரான வாறேபோல்
ஊரோடுபே ரில்லானோ டொன்றினையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—நீரொடு தண் ஆலி விண்டு நீரானவாறே போல் - நீரிலே பெய்யப்பட்ட குளிர்ந்த ஆலங்கட்டியானது தன்னுருவங்கெட்டு அந்த நீரிற் கலந்து அந்நீரேயாவது போல; ஊரொடு பேர் இல்லானோடு ஒன்றினையே - ஊரும் பேருமற்ற பரம்பொருளோடு இரண்டறக் கலந்தனை யல்லையோ நீ நீடுவாழ்க! என்பதாம்.

(வி - ம்.) ஆலி - ஆலங்கட்டி. (கஅ)

இப்பிறப்பைப் பாழ்படுத்தி யிருந்தபடியே யிருக்கச்
செப்பவரி தாயவிடஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே ;—இருந்தபடியே இருக்க - இவ்வுடம்பு தானிருந்தபடியே இருப்பதாகவும்; இப்பிறப்பைப் பாழ்படுத்தி - இந்தப் பிறப்பையே மீட்டுப் பிறத்தற்கு விதையாகா வண்ணம் பாழாக்கி; செப்ப அரிது ஆய இடம் சேர்ந்தனையே - கூறுதற்கியலாத வீட்டுலகத்திலே புக்கனையல்லையோ நீ நீடுவாழ்க.

(வி - ம்.) இது, சீவன்முத்தத் தன்மை பெற்றதனைப் பாராட்டியது. (கக)

மேலாம் பதங்களெல்லாம் விட்டுவிட் டாராய்ந்து
நாலாம் பதத்தி னடந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—பதங்கள் எல்லாம் ஆராய்ந்து விட்டு விட்டு - உயிர்கள் எய்துதற்கியன்ற சாலோக முதலிய பதவிகளை எய்தி

ஆராய்ந்து அவற்றை விட்டு விட்டு உயர்ந்து; மேல் ஆம் நாலாம் பதத்தில் நடந்தனையே - அவற்றுள்ளும் உயர்ந்த சாயுச்சிய பதவியில் சென்றனையே! நீ வாழ்க என்பதாம்.

(வி - ம்.) மேலாம் நாலாம் பதம் என்க; அஃது இறைவனோடு இரண்டறக் கலத்தல். (௨0)

கடங்கடங்க டோறுங் கதிரவ னூடாடி
அடங்குமிடந் தானறிந் தன்புற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—கதிரவன் - அறிவுப் பொருளாகிய உயிரானது; கடம் கடங்கள் தோறும் ஊடாடி - வினைக்கீடாக வந்தெய்தும் மட்குடங்கள் போன்ற உடம்புகளில் புகுந்தியங்கி; அடங்கும் இடம் அறிந்து - வினைத்தீர்வின்கண் அது சென்று அடங்கும் இடம் இன்னது என்றுணர்ந்து கொண்டு; அன்பு உற்றாய் - அவ்விடமாகிய இறைவன் பால் பெரிதும் அன்பு செலுத்தி உய்ந்தனை. நீ வாழ்க! என்பதாம்.

(வி - ம்.) அறிவுஒளி யுண்மையால் உயிரைக் கதிரவன் என்றார். (௨௧)

கற்றவனாய்க் கேட்டவனாய்க் காணனாய்க் காண்பவனாய்
உற்றவனாய் நின்றதிலே ஒன்றுபட்டாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—காணான் ஆய் - நீ முதலிலே உண்மைப் பொருளைக் காணாத மடவோனாயிருந்து, கற்றவனாய் - பின்னர் மெய்ந்நூல்களைக் கற்றறிந்தவனாகி; கேட்டவனாய்-பின்னும் நூலாசிரியனை எய்திக் கேட்டவனாகி காண்பவனாய் - பின்னர் உண்மைப் பொருளை உனக்கு அயலாகக் காண்பவன் ஆகி; உற்றவனாய் - மேலும் முயன்று அதனை அடைந்தவன் ஆகி: நின்று அதிலே ஒன்று பட்டாய் - அந்நெறியிலே நின்று அதனோடு இரண்டறக் கலந்தனையல்லையோ! என்பதாம்.

(வி - ம்.) இஃது உயிர்போகு மியல் புரைத்தவாறு. (௨௨)

நாலுவகைக் கரண நல்குபுல னைந்துமொன்றாய்ச்
சீலமுற்று நின்றதிலே சேர்ந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே :—நாலுவகைக் கரணம் நல்குபுலன் ஐந்தும் ஒன்றாய் - நான்கு வகைப்பட்ட உட்கருவிகளும் நுகர்ச்சி தருகின்ற ஐந்து புலன்களும் ஒன்றுபடும்படி; சீலம் உற்று - நல்லொழுக்கமுற்று; நின்றதிலே - நிலைத்து நின்ற மெய்ப்பொருளிலே; சேர்ந்தனையே - கலந்து விட்டனை. நீ வாழ்க!

(வி - ம்.) இஃது ஒழுக்க நெறி நின்றமையைப் பாராட்டியது. (௨௩)

விட்டிடமுந் தொட்டிடமும் விண்ணிடமும் மண்ணிடமுங்
கட்டுமொரு தன்மையெனக் கண்ணுற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—விட்டிடமும் தொட்டிடமும் விண்ணிடமும் மண்ணிடமும் - நீங்கிய இடத்தையும் புக்க இடத்தையும் துறக்கவுலகத்தையும் இந்நிலவுலகத்தையும்; கட்டும் ஒரு தன்மை எனக் கண்ணுற்றாய் - இறைமாயையாற் படைக்கப்படுகின்றமையின் ஒரே தன்மையுடையன என்றுணர்ந்து கொண்டனை காண்! என்பதாம்.

(வி - ம்.) காண்பன அனைத்தும் மாயையேயன்றி வேறில்லை என்றுணர்ந்தனை என்றவாறு. (௨௪)

எந்தெந்த நாளு மிருந்தபடியே யிருக்க
அந்தச் சுகாதீத மாக்கினையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—எந்த எந்த நாளும் - எதிர்காலமாக வருகின்ற எல்லா நாள்களிலும்; இருந்தபடியே இருக்க - யாம் மாறுபாடின்றி ஒரே தன்மையுடையேமாக விருக்கும்படி, அந்த அதீத சுகம் ஆக்கினையே - அத்தன்மையுடைய உயர்வறவுயர்ந்த பேரின்ப நிலையினை உண்டாக்கி விட்டனை. நீ வாழ்க என்பதாம்.

(வி - ம்.) சுக + அதீதம் = சுகாதீதம் - இன்பத்திலுயர்ந்த வின்பம். அது வீடுபேறு. (௨௫)

வாக்கிறந்து நின்ற மனோகோச ரந்தனிலே
தாக்கறவே நின்றதிலே தலைசெய்தாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—வாக்கு இறந்து நின்ற மன அகோசரந் தனிலே - சொற்கடந்து நின்றதும் மனங்கடந்து நின்றதும்; தாக்கு அறநின்றதிலே - பற்றப்படாது நிற்பதுமாகிய மெய்ப்பொருளின் கண்; தலை செய்தாய் - நீ நமக்கு இருப்பிடமமைத்துக் கொண்டனை காண்! என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சமே:—சொல்லையும் மனத்தையும் கடந்து பற்றறநின்ற பரம்பொருளிலே நமக்கு வீடுகட்டிக் கொண்டனை என்று பாராட்டியபடியாம். (௨௬)

எத்தேசமு நிறைந்தே யெக்கால முஞ்சிறந்து
சித்தாய சித்தினிடஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—எத்தேசமும் நிறைந்து - எல்லா இடங்களிலும் நிரம்பி; எக்காலமும் சிறந்து - எல்லாக் காலங்களினும் சிறப்புற்று; சித்து ஆய சித்தினிடம் - அறிவுப் பொருளேயாகிய அந்தப் பேரறிவின் கண்; சேர்ந்தனை - நீ இரண்டறக் கலந்தனை காண்! நீ வாழ்க! என்பதாம்.

(வி - ம்.) நீ நின்னறிவிற்கும் அறிவாகிய பேரறிவுடன் ஒன்று பட்டனை என்றவாறு. (௨௭)

தாழாதே நீளாதே தன்மய மாய்நிறைந்து
வாழாதே வாழ மருவினையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—தாழாதே நீளாமே - தாழ்ச்சியடையாமலும் உயர்ச்சி எய்தாமலும்; தன்மயமாய் நிறைந்து வாழாதே - தன்முனைப்பாலே நிறைவுற்று வாழ்தலின்றி; வாழ மருவினை - மெய்வாழ்க்கை வாழ்தற் கமைந்தனை காண்! என்பதாம்.

(வி - ம்.) தாழாதே நீளாதே - குறைதற்கு மிகுதற்கு மிடமில்லா நிறைவுபெற்று என்க. (உ௮)

உள்ளும் புறம்பு முவட்டாத வானந்தக்
கள்ளருந்தி நின்றதிலே கண்ணுற்றாய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—உள்ளும் புறம்பும் உவட்டாத ஆனந்தக் கள் அருந்தி - நீ தானும், நின் அகத்திலும் புறத்திலும் என்றென்றும் தெவிட்டாத மெய்யின்பம் என்னும் கள்ளைப் பருகி; நின்றதிலே கண் உற்றாய் - நிலையுதலுடைய மெய்ப்பொருளின் பால் இடங்கொண்டனை காண்! என்பதாம்.

(வி - ம்.) நின்றது - மெய்ப்பொருள். கண் - இடம். (உ௯)

வாதனைபோய் நிட்டையும்போய் மாமௌன ராச்சியம்போய்
பேதமற நின்றவிடம் பெற்றனையே நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—வாதனை போய் - பழக்கந் தவிர்ந்து; நிட்டையும்போய் - பொருளிலழுந்துதல் என்னும் நிலையும் தவிர்ந்து; மா மவுன ராச்சியம்போய் - பெரிய பேசாமை என்னும் நிலையைப் பேணுதலுந் தவிர்ந்து, பேதம் அறநின்ற இடம் பெற்றனை - சிவத்திற்கும் உனக்கும் வேற்றுமை தவிர்ந்து ஒன்றிய நிலையை நீ எய்தினை! நீ வாழி! என்பதாம்.

(வி - ம்.) நிட்டை - அருளிலழுந்துதல். மனத்தானினையாமையும் வாயால் பேசாமையும் மெய்யாற் செய்யாமையும் ஆகிய மூன்றுங் கைகூடல் மா மவுனம் எனப்படும். இம் மூன்றனையும் விழிப்புடனிருந்து அடக்கி ஆள வேண்டுதலின் மவுன ராச்சியம் என்றார். (௩0)

இரதம் பிரிந்துகலந் தேகமாம் வாறேபோல்
விரகந் தவிர்ந்தணல்பான் மேவினையே நெஞ்சமே.

(இ - ள்) நெஞ்சமே:—இரதம் பிரிந்து கலந்து ஏகம் ஆம் வாறே போல் - கருப்பின் சாறு பண்டு ஒன்றாயிருந்தது பிழிந்த பின்னர்த் துளிகளாய்ப் பிரிந்து மீண்டும் கலந்து ஒன்றேயாகுமாறு போலே; விரகந் தவிர்ந்து - நின்பாலிருந்த அழுக்காகிய காமம் ஒழிந்து; அணல் பால் மேவினையே - இறைவனோடு கலந்து ஒன்றினை! நீ நீடுவாழ்க! என்பதாம்.

(வி - ம்.) இரதம் - சாறு. விரகம்-காமம். அணல்: அண்ணல்; இறைவன்; விகாரம். (௩௧)

சோதியான் சூழ்பனிநீர் சூறைகொளு மாறேபோல்
நீதிகுரு வின்றிருத்தாள் நீ பெற்றுய் நெஞ்சமே.

(இ - ள்.) நெஞ்சமே:—சோதியால் சூழ்பனிநீர் சூறைகொளும் ஆறுபோல் - ஞாயிற்றின் ஒளியாலே சூழ்ந்துள்ள பனி நீரானது அகற்றப்படுவது போன்று, குருவின் நீதி - ஆசிரியரின் அறிவுரையாலே நின் மலம் அகற்றப்பட்டு; நீ திரு தாள் பெற்றுய் - நீ சிவத்தின் அழகிய திருவடி நீழலை எய்தியுய்ந்தனை காண்! ஆதலால் அவ்வாசிரியன் திருவருள் வாழ்க! என்பதாம்.

(வி - ம்.) சோதி - ஞாயிற்ளெளி. குருவின் - குருவினருளால். இஃது ஆசிரியரை வாழ்த்தியவாறும். (௩உ)

நெஞ்சொடு மகிழ்தல் முற்றும்.

உடற்கூற்று வண்ணம்

(இசை வாய்பாடு)

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த—
தந்ததனதான தனதானனு.

ஒருமடமாது மொருவனுமாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து—
பனியிலோர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்துபு குந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—
உருவமுமாகி யுயிர்வளர்மாத
மொன்பதுமொன்று நிறைந்துமடந்தை
யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து—
மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்துகவிழ்ந்து

மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—
ஒளிநகையூற லிதழ்மடவாரு
முவந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப—
உடைமணியாடை யரைவடமாட
வுண்பவர் தின்பவர் தங்களோடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரோ டோடிநடந்து—
அஞ்சுவயதாகி விளையாடியே ;

உயர்தருஞான குருவுபதேச
முந்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து—
மயிர்முடிகோதி யறுபதநீல
வண்டிமிர் தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க—
மதனசொரூப னிவனெனமோக
மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—
மனதுபொரும லவர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—
ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—
வளமையுமாறி யிளமையுமாறி
வன்பல்விழுந்திரு கண்களிருண்டு

வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து—
சேங்கையினிலோர்த டியுமாகியே ;

வருவதுபோவ தோருமுதுகூனு
மந்தியேனும்படி குந்திநடந்து
மதியுமழிந்து சேவிதிமிர்வந்து
வாயறியாமல்வி டாமல்மோழிந்து—
துயில்வருநேர மிருமல்போருத
தோண்டையுநேஞ்சுமு லர்ந்துவறண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகோண்டு—
கலியுகமீதி லிவர்மரியாதை
கண்டிடுமேன்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலவேன்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து—
தேளிவுமிராம லுரைதடுமோறி
சிந்தையுநேஞ்சமு லைந்துமருண்டு
திடமுமழிந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதனநோந்து—
மறையவன்வேத னேழுதியவாறு
வந்ததுகண்டமு மேன்றுதேளிந்து
இனியேனகண்ட மினியேனதோந்தம்
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற—
கடன்முறைபேசு மேனவுரைநாவு
றங்கிவிழுந்துகை கோண்டுமோழிந்து
கடைவழிகஞ்சி யோழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று—
நேஞ்சுதடுமா றிவருநேரமே ;

வளர்பிறைபோல வேயிறுமுரோம
முஞ்சடையுஞ்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து—

வலைகோடுவீசி யுயிர்கொடுபோக
மைந்தரும்வந்துகு னிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து—
பழையவர்காணு மேனுமயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று—
பலரையுமேவி முதியவர்தாமி
ருந்தசவங்கழு வுஞ்சிலரென்று
பணிதுகிறோங்கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை—
வரிசைகெடாம லெடுமெனவோடி
வந்திளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து—
விறகிடைமூடி யழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்கள்
உருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை—
நம்புமடியேனை யினியாளுமே.

உரை

ஒருமட......மீதுகலந்து

(இ - ள்.) *ஒருமட மாதும் ஒருவனும் ஆகி – ஊழ் கூட்டுதலாலே ஓர் இளைய நங்கையும் அவள் நெஞ்சு கவர்ந்த ஓர் இளைஞனும் கூடித் தமியராய்; இன்ப சுகம் தரும் அன்பு பொருந்தி - மிக்க இன்பத்தை யுண்டாக்குதற்குக் காரணமான காதலாலே ஒன்றுபட்டு; உணர்வு கலங்கி - மிக்க காம வுணர்ச்சியால் அவ்வாடவனுடைய நிலை கலங்கி நெகிழ்ந்து ஒழுகிய வெண்கரு நீரானது; ஊறு சுரோணிதமீது கலந்து - அவ்வாறே உணர்ச்சியாற் பெருகிய அந்நங்கையின் செங்கரு நீர்மிசை விழுந்து அதனோடு விரவி என்க.*

(வி - ம்.) *விந்து-ஆண்கருநீர். சுரோணிதம்-பெண் கருநீர்.*

பனியிலொர்......கால்களென்ற

(இ - ள்.) *பனியில் ஓர் பாதி சிறுதுளி - ஒரு பனித்துளியில் பாதியளவுள்ள சிறிய அக்கருநீர் விரவிய துளியானது; மாது பண்டி*

யில் வந்து புகுந்து திரண்டு - அவளுடைய வயிற்றினுள்ளிருக்கும் கருப்பையுள் வந்து நுழைந்து ஒருருவாய்த் திரண்டு; பதும அரும்பு கமடமிது என்று பார்வை மெய் வாய் செவி கால்கள் என்ற - தாமரை மொட்டுப் போலவும் ஆமை போலவும் உருக்கொண்டு கண் உடம்பு வாய் செவி கால் கைகள் என்று கூறப்படுகின்ற உறுப்புக்களும் உடைய; என்க.

(வி - ம்.) சுக்கில சுரோணித மிரண்டும் கலந்த கருநீரினும் பனித்துளியினும் சிறிய துளி யொன்று கருப்பையுட் புகுந்து உருக் கொள்ளும் என்றவாறு. பதும வரும்பு - தாமரை மொட்டு. கமடம் - ஆமை. கருநீர் - கருவுயிர்ப்பதற்கு வாய்ப்பன நீர்.

உருவமும்......நாளுமறிந்து

(இ - ள்.) உருவமும் ஆகி-மக்களுருவமும் பெற்று; உயிர் வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து-உயிருடன் அவ்வுருவம் வளர்ந்து நிரம்புதற்குரிய பத்துத் திங்களும் அக் கருப்பையினுள்ளேயே இருந்து நிரம்பப்பெற்று; மடந்தை உதரம் அகன்று புவியில் விழுந்து - பின்னர் அம்மடந்தையின் வயிற்றிலிருந்து நழுவி நிலத்திலே வீழ்ந்து பின்னர்; யோகமும் வாரமும் நாளும் அறிந்து — இந்நிலவுகிலே பிறந்த முழுத்தமும் கிழமையும் நாளும் கணிவர்களாலே ஆராய்ந்து குறித்துக் கொண்ட பின்னர் என்க.

(வி - ம்.) உயிருடன் வளருதற்கியன்ற மாதம் என்க. உதரம் - வயிறு.

மகளிர்......வளர்ந்து

(இ - ள்.) மகளிர்கள் சேனை ஆடை அணைதர - தாய் முதலிய மகளிர் குழுக்கள் அக்குழவிக்கு ஆடையாலியன்ற படுக்கையை விரித்து அதன் மிசைக் கிடத்த; மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து- அங்ஙனம் கிடத்தப்பட்ட அக்குழவியின் குதிகாவில் நிலம் படுதலாலே அதனைக் குதிகாலால் உந்தியும் உதைத்தும் நாளடைவில் பெரிதும் முயன்று தானே கவிழ்ந்து கொண்டும்; மடமயில் கொங்கை அமுதம் அருந்தி — இளமையுடைய மயில் போலும் சாயலையுடைய தன் தாயினது முலை சுரந்த இனிய பாலைப்பருகிப் பருகி; ஓர் அறிவு ஈர் அறிவு ஆகி வளர்ந்து - ஒன்றும் பலவுமாகிய பொருளறிவு பெருகா நிற்ப நாள்தோறும் வளர்ச்சியுற்றுத் திகழ்ந்து என்க.

(வி - ம்.) சேனை - ஈண்டுக் கூட்டம் என்னும் பொருட்டு. மடமயில் என்றது தாய் என்னும் பொருட்டாய் நின்றது.

ஒளிநகை......விளம்ப

(இ - ள்.) ஒளிநகை ஊறல் இதழ் - ஒளிதவழுகின்ற பற்கள் அரும்புகின்ற வாயினின்றும் ஒழுகுகின்ற ஊறலையுடைய உதட்டின் கண் முத்தாடுதலை; மடவாரும் உவந்து முகந்திட - கண்டகண்ட மகளிரெல்லாம் விரும்பி முத்தமிடா நிற்ப; தவழ்ந்து வந்து மடியில் இருந்து - தவழ்ந்துபோய் அம்மகளிர் மடிமிசையேறி அமர்ந்திருந்து; மழலை மொழிந்து - இனிய எழுத்துருவம் நிரம்பாத குதலை மொழி

கூறி; வா இரு போ என - வா எனவும் இரு எனவும் போ எனவும் கூறி, நாமம் விளம்ப - அம்மா அப்பா எனச் சில பெயர்ச் சொற்களை யும் கூறவும் என்க.

(வி - ம்.) நகை - பற்கள். வாளா சிரிப்பு எனினுமாம். முகத் தல் - முத்தமிடல்; நாமம் - அம்மா அப்பா என்பன முதலியன.

உடைமணி......விளையாடியே

(இ - ள்.) மணி உடை அரைவடம் ஆடை ஆட - மணிபதித்த பொன்னரைஞாணும் ஆடையும் அசைந்தாடச் சென்று; உண்பவர் தின்பவர் தங்களொடு உண்டு - இல்லின்கண் சோறு உண்பவரோடு தானும் சோறுண்டும் பண்ணிகாரம் தின்பவரோடு தானும் தின்றும்; தெருவில் இருந்து புழுதி அளைந்து - வீதியிலமர்ந்து புழுதியைக் கையாலளைந்தும்; தேடிய பாலரொடு ஓடி நடந்து - தன்னைத் தேடி வருகின்ற அயலில்லத்தார் மக்களோடு கூடி ஓடியும் நடந்தும்; அஞ்சு வயது ஆகி விளையாடியே - ஐந்து வயது நிரம்பப் பெற்றுத் தோழர் களோடு கூடி விளையாட்டயர்ந்தும்; என்க.

(வி - ம்.) மணியாடை - அழகிய ஆடையுமாம். வடம் - நாண். தின்பவர் என்றது பண்ணிகாரம் தின்பவர் என்றவாறு.

உயர்தரு......வந்து

(இ - ள்.) உயர்தருஞான குருஉபதேசமுத்தமிழின்கலையுங் கரை கண்டு - சிறந்த அறிவுடைய ஆசிரியரின்பாற் பெற்றுக் கொண்ட அருமறையும் செந்தமிழ்க் கலைகள் மூன்றும் நிரம்பப் பெற்று; பலரும் வளர்பிறை என்று விளம்ப - கண்டோர் பலரும் வளர்பிறைபோல்கின்றான் என்று கூறும்படி நாளுக்கு நாள் வளர்ச்சி யுற்று; வாழ்பதினாறு பிராயமும் வந்து - இம்மை வாழ்வு பெறுதற் கியன்ற பதினாறாண்டகவையும் வந்தெய்தப்பெற்று என்க.

(வி - ம்.) குழவிக்குப் பிறந்தவுடன் கொடுக்கப்படும் சேனை இனிப்புக் கலந்த பாலமுதென்றலும் ஒன்று. வளர்பிறை போல வளர்கின்றனன் என்று பலரும் விளம்ப என்க. மணப்பருவமாதலின் வாழ் பதினாறு பிராயம் என்றார்.

மயிர்முடி......வணங்க

(இ – ள்.) மயிர்முடி கோதி - தலைமயிர் முடியை நன்கு கை செய்து; கொண்டை அறுபதநீல வண்டு இமிர் தண் தொடை புனைந் தும் - கொண்டையிட்டு அதனைச் சுற்றி ஆறு கால்களையும் நீல நிறத் தையும் உடைய வண்டுகள் தேன்பருக வந்து இசை முரலாநிற்பக் குளிர்ந்த மலர்மாலையை அணிந்தும்; மணி பொன் இலங்கு பணிகள் அணிந்தும் – மணிகளாலும் பொன்னாலுமியன்ற விளங்கும் அணி கலன்கள் பல பூண்டும் அழகெய்த; மாகதர் போகதர் கூடி வணங்க- மாகதர் போகதர் என்னும் பாணர்கள் வந்து சூழ்ந்து வாழ்த்துப்பாடி வணங்காநிற்பவும் என்க.

(வி - ம்.) அறுபதம் - ஆறு கால்களையுடைய. இமிர்தல் - முரலுதல். போகதர் - பாணருள் ஒருவகையினர்.

மதன......கண்டு

(இ - ள்.) மோக மங்கையர் திரண்டு கண்டு - தெருவிற் செல்லுங்கால் காமமிக்க இளமகளிர் தம்முட்குழீஇ; நின்று கண்டு இவன் மதன சொரூபன் என மருண்டு - இவ்விளைஞன் காமவேள் போன்ற கவின்மிக்க வடிவத்தான் என்றுட்கொண்டு அறிவு மயங்கி; மாமயில் போல் அவர்-சிறந்த மயில் போலுஞ் சாயலையுடைய அம்மகளிர்; வரி விழிகொண்டு - செவ்வரி படர்ந்த தம் கண்களாகிய படைக்கலத்தைக் கொண்டு, சுழிய எறிந்து - தன் மனஞ் சுழலும்படி வீசிவிட்டு; போவது கண்டு - செல்வதனைத் தானும் கண்டு என்க.

(வி - ம்.) மதன சொரூபன் - காமவேள் போன்ற அழகுடையவன். சுழிய - சுழல.

மனது......வழங்கி

(இ - ள்.) மனது பொருமல் அவர் பிறகு ஓடி - நெஞ்சு அவர் பாலுண்டான அவாவினைப் பொறுக்க மாட்டாமையால் அம்மகளிர் பின் சென்று; மங்கல செங்கலசம் திகழ் கொங்கை மருவ - அம் மகளிரும் மங்கலமான செம்பொற் கலசங்கள் போன்று விளங்குகின்ற தம் முலைகளாலே முயங்குதலாலே; மயங்கி - பின்னரும் அவர்பால் மயக்கமுற்று; இதழ் அமுது உண்டு - அவருடைய முயக்கத்தோடு அவர் தம் வாயிதழ் ஊறுகின்ற அமிழ்தத்தையும் பருகி; தேடிய மா முதல் சேர வழங்கி - தான் ஈட்டிய பெரிய செல்வங்களை ஒருசேர அம்மகளிர்க்கு வழங்கி என்க.

(வி - ம்.) மனது அவாவினைப் பொருமல் என்க. கொங்கையால் மருவ என்க. முதல் - பொருள்.

ஒருமுதலாகிய......பிரிந்து

(இ - ள்.) ஒரு முதல் ஆகிய முதுபொருளாய் இருந்த தனங்களும் - ஒருங்கு திரண்டிருந்த பொருளாகிய தாயப் பொருளாக இருந்த செல்வங்களையும்; வம்பில் இழந்து - பகைவரோடெய்திய வழக்குகளிலே செலவிட்டு; இது மதன சுகந்த விதனம் என்று வாலிப கோலமும் வேறு பிரிந்து - காம நுகர்ச்சியா லெய்தும் இன்பத்தின் பயனாகிய துன்பம் இஃதென்று கூறுமாறு இளமையும் அதன் அழகும் தன்னை விட்டகன்று போகவும் என்க.

(வி - ம்.) முதல் - பொருள். முதுபொருள் - தாயப்பொருள்- விதனம் - துன்பம்.

வளமையும் .....தடியுமாகியே

(இ - ள்.) வளமையும் மாறி இளமையும் மாறி - இவ்வாறு பொருள் வளங்களும் அழிந்து யாக்கையின் இளநலமும் அழிந்து; வல்பல் விழுந்து இருகண்கள் இருண்டு - வலிய பற்களும் விழவும் இரண்டு கண்களும் ஒளிகுன்றி இருண்டு போகவும்; வயது முதிர்ந்து - அகவையால் முதுமை எய்தி; நரைதிரை வந்து - மயிர் நரைத்தலும் உடம்பு திரைதலும் உண்டாகி; வாத விரோத குரோதம் அடைந்து -

வாதபித்த சிலேத்மங்களும் தம்முட் கலாய்த்துச் சினங்கொள்ளுத லாலே; செங்கையினில் ஓர் தடியும் ஆகி - தன் சிவந்த கையிலே எப் பொழுதும் ஒரு தடியினைக் கொண்டு; என்க.

(வி - ம்.) வளமை - பொருள்வளம். வாதம் என்றமையால் ஏனைய இரண்டையும் இனம்செப்பு மாற்றாற் கூறிக்கொள்க.

வருவது......மொழிந்து

(இ - ள்.) ஒரு முது கூனும் - ஒப்பற்ற முதிர்ந்த கூன்முதுகி னோடு; வருவது போவது - வருதலும் போதலுமாகிய நடத்தற் றொழிலின் கண்; மந்தி எனும்படி குந்தி நடந்து - குரங்கு போலக் குனிந்து குந்திக் குந்தி நடந்தும்; மதியும் அழிந்து - அறிவு கெட்டுப் போய்; செவி திமிர் வந்து - செவியுஞ் செவிடுபட்டு உணர்ச்சியின்றித் திமிர்த்துப் போகவும்; அறியாமல் வாய்விடாமல் மொழிந்து - இன்னது பேசவேண்டும் என அறியாமல் வாயோயாது பொருளின்றிப் பேசியும் என்க.

(வி - ம்.) வாய் ஓயாது வறுமொழி பேசுதற்கு மதியழிந்தமை ஏதுவாய் நின்றது.

துயில்......கோரணி கொண்டு

(இ - ள்.) துயில் வருநேரம் இருமல் பொறுது - அரிதாக உறக்கம் வருகின்ற பொழுது இருமல் நோயைப் பொறுக்கொணுது துன்ப மெய்தியும்; தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு - விடாது இருமல் வருதலாலே மிடறும் நெஞ்சும் காய்ந்து வறண்டு போகவும்; துகிலும் இழந்து - ஆடை அவிழ்ந்து போனதும் அறி யாமல்; சுவையும் இழந்து - உடம்பின்கண் ஊற்றுணர்ச்சியும் அழிந்து போகவும்; தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு - மகளிரும் சிறுஅர்களும் இந்நிலைகண்டு பரிகசித்தலையும் எற்றுக்கொண்டும்; என்க.

(வி - ம்.) துயில் வருநேரம் என்றது துயிலும் எப்பொழு தாயினும் வரும்; அப்பொழுது என்பதுபட நின்றது. கோரணி - பரிகாசம்.

கலியுகம்......நடந்து

(இ - ள்.) கலியுகம் ஈதில் இவர் மரியாதை கண்டிடும் என்பவர் நாகரிகமிக்க இக்கலிகாலத்திலும் இக்கிழத்தின் அறியாமையைக் காணுமின் என்று இகழ்கின்ற இல்லத்தவர்; சஞ்சலம் மிஞ்ச - மனக் கலக்கம் மிகும்படி; கலகலவென்று மலசலம் வந்து - நடக்கும் பொழுதே களகள என்னும் ஒலியுடனே மலசலங்கள் புறப்பட்டுக் கால் வழியாக ஒழுகி உடம்பெலாம் பரவும்படி நடந்தும் என்க.

(வி - ம்.) மரியாதை ஈண்டு நாகரிகம். அது குறிப்பாக நாகரிக மின்மை குறித்து நின்றது. அஃதாவது இந்தக் கிழத்திற்கு மரியாதை சிறிதும் தெரிந்திலது என்று இகழ்ந்த படியாம்.

தெளிவும்......நொந்து

(இ - ள்.) தெளிவும் இராமல் உரைதடுமாறி சிந்தையும் நெஞ்சும் உலைந்து மருண்டு - அறிவுத்தெளிவு இல்லாமையால் பேசுகின்ற பேச்சுகளும் தடுமாறு நிற்ப: எண்ணங்களும் உள்ளமும் உலைவுற்று மருட்சி எய்தி; திடமும் உலைந்து - ஆற்றலு மழிந்து; மிகவும் அலைந்து - பெரிதும் அலைவுற்று; தேறி - இவ்வுலகியலை அறிந்து; நல் ஆதரவு ஏது என நொந்து - இனி எமக்கு நலந்தருகின்ற ஆதரவும் இவ்வுலகில் இல்லை என்று வருந்தி; என்க.

(வி - ம்.) தெளிவு - மெய்யறிவுமாம்.

மறையவன் வேதன்......நின்ற கடன்முறை பேசும் என

(இ - ள்.) வேதன் மறையவன் எழுதியவாறு - வேதங்கூறிய அந்தணனாகிய நான்முகன் நந்தலையில் எழுதியபடியே - கண்டமும் வந்தது என்று தெளிந்து - நமக்குச் சாக்காடு அணுகுகின்றதென்று உணர்ந்து; இனி என கண்டம் - இதனின் வேறாக இனி நமக்குக் கண்டமும் இலதாம்; இனி தொந்தம் என - இனி நமக்கு இவ்வுலகத் தொடர்பு யாதுளது; இனி மேதினி வாழ்வு நிலாது - மைந்தர் முதலியோரை நோக்கி இனி இவ்வுலக வாழ்வு நில்லாது; நின்ற கடன் முறை பேசும் என - பிள்ளைகாள்! இனி நான் கொடுக்க வேண்டியனவும் எனக்கு வரவேண்டியனவும் ஆகிய கடன்களை முறையே பேசித் தெரிந்து கொள்ளக் கடவீராக! என்று அறிவுறுத்தும் பொழுதே என்க.

(வி - ம்.) மறையவன் வேதன் : இருபெயரொட்டு.

உரைநா......நின்று

(இ - ள்.) உரை நா உறங்கி விழுந்து - மைந்தரொடு அந்தக் கடன் வகைகளைக் கூறும் பொழுதே கூறுகின்ற நாவானது ஆற்றல் கெட்டு ஓய்ந்து போதலாலே; கை கொண்டு மொழிந்து - அவர்க்குத் தன் கைக் குறிப்பாலே அறிவிப்ப; கஞ்சி கடைவழி வந்து ஒழுகிட - அம்மைந்தர் தன் வாயில் விடுகின்ற கஞ்சியானது உட்புகாமல் கடைவாய் வழியே ஒழுகவும்; நாலு பூதமும் சுவாசமும் நின்று - உடலின் கண்ணமைந்த நிலமும் நீரும் தீயும் வளியும் ஆகிய நான்கு பூதங்களின் இயக்கமும் உயிர்ப்பும் நின்று விட; என்க.

(வி - ம்.) நாலு பூதமும் என மாறுக. வெளி எப்பொழுதும் ஒரு படித்தாகலின் எஞ்சிய நான்கு பூதங்களையே கூறியவாறு.

வளைபிறை......தூதர்கள் வந்து

(இ - ள்.) வளைபிறை போல எயிறும் உரோமமும் சடையும் சிறு குஞ்சியும் மனது விஞ்ச - வளைந்த பிறைத்திங்கள் போன்ற பற்களும் அடர்ந்த மயிரும் சடையும் சிறிய குடுமியும் மனத்தின்கண் அச்சம் மிகும்படி; இருண்ட வடிவும் இலங்க - பெரிதும் கறுத்த உருவமும் திகழ; யமதூதர் மாமலை போல் வந்து - கூற்றுவனுடைய தூதர்கள் பெரிய மலைகளைப் போன்று அகக்கண் முன்னே வந்து தோன்றி என்க.

(வி - ம்.) எயிறு - பல். குஞ்சி - தலைமயிர்.

வலைகொடு......அறிந்து

(இ - ள்.) வலைகொடு வீசி உயிர்கொடு போக - தமது கையிலுள்ள கயிறாகிய வலையை வீசித் தன் உயிரைப் பிடித்துக்கொண்டு போதலாலே; மைந்தரும் வந்து குனிந்து அழ - அஃதறிந்த மக்களும் பிணத்தருகே வந்து தலை கவிழ்ந்து அழாநிற்பவும்; மனைவி மடியில் விழுந்து அழ - மனைவியானவள் துயர மிகுதியாலே அந்தப் பிணத்தின் மடியிலே வீழ்ந்து வாய் பிதற்றி அழாநிற்பவும்; இவர் மாழ்கினர் - இவ்வாறு இவ்வுலகில் பிறந்த இவர் இறந்தனராக; காலம் அறிந்து - இறந்தவருடைய அகவையைக் கணித்து என்க.

(வி - ம்.) தப்பாது அகப்படுதலின் கயிற்றை வலை என்றார். இவ்வாறு இவ்வுலகில் வந்து பிறப்புற்ற இவர் மாழ்கினர் என்க.

பழையவர்......விசாரியுமென்று

(இ - ள்.) பழையவர் காணும் எனும் அயலார்கள் - இவர் மிகவும் முதியவர்காண் என்று தம்முட் பேசிக்கொள்கின்ற அயலார்கள்; பஞ்சு பறந்திட - காற்றிற் பறக்கின்ற பஞ்சுபோல அவ்விடத்தினின்றும் விரைந்து தத்தங் காரியங்கருதி ஓடா நிற்ப; நின்றவர் பந்தா இடும் என - அவ்வாறு ஓடிப்போகாமல் உறவு முறை கருதி அங்கு நின்ற சுற்றத்தாருட் சிலர் ஒரு பந்தலிடுமின் என்று கூற; வந்து பறையிட - இச்செய்தி யறிந்து வந்து பறையர்கள் சாப்பறை கொட்டா நிற்ப; முந்தவே பிணம்வேக விசாரியும் என்று - சிலர் பிணம் அழுகல் நாற்றம் வீசு முன்பே அது வேதற்கு ஆக வேண்டியவற்றை ஆராய்ந்து செய்யுங்கள் என்று கூறி என்க.

(வி - ம்.) காலம் அறிந்து இவர் பழையவர் காணும் எனும் அயலார் என இயைக்க. பஞ்சுபோலப் பறந்தோடிப்போக வென்க.

பலரையும்......உடம்பை

(இ - ள்.) பலரையும் ஏவி - சுற்றத்தாருள் இளைஞராகிய பலரையும் அக்காரியஞ் செய்ய ஏவிய பின்னர்; முதியவர் தாம் இருந்த சிலர் சவம் கழுவும் என்று - அகவை முதிர்ந்தோர் வேறு சிலரை நோக்கிப் பிணத்தைக் கொணர்ந்து கழுவுமின் என்று கூற; பணி துகில் தொங்கல் களபம் அணிந்து - அவ்விளைஞர் பிணத்தைக் கழுவி அணிகலன்களாலும் கோடித்துணியாலும் சந்தன முதலிய மணப் பொருளாலும் ஒப்பனை செய்வார் போன்று; பாவகமே செய்து - பாவனை மாத்திரையே செய்ய; நாறும் உடம்பை - அந்த நறுமணப் பொருளையும் கடந்து தீ நாற்றம் வீசுகின்ற அந்தப் பிணத்தை என்க.

(வி - ம்.) சிலரென: பாவகமே செய எனத் திரித்துக்கொள்க. வாய்மையாக அணி செய்யாமையால் பாவகமே செய்து என்றார். செய்து - செய.

வரிசை......நொந்து

(இ - ள்.) வரிசை கெடாமல் எடும் என - (முதியவர்) பிணம் எடுக்கும் மரபு பிறழாமல் எடுமின் என்று ஏவுதலாலே; இளமைந்தர்

வந்து குனிந்து சுமந்து கடுகி நடந்து சுடலையடைந்து - இளைஞர்கள் பிணத்தருகே வந்து குனிந்து எடுத்துத் தோளிலே சுமந்துகொண்டு போம்பொழுது பிணநாற்றம் பொறுமையால் விரைந்து நடந்து போய்ச் சுடுகாட்டையடைந்து; மானிட வாழ்வு என வாழ்வு என நொந்து - இந்த மானிட வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையோ? என்று அதன் நிலையாமை கருதி மனம் வருந்தி என்க.

(வி - ம்.) வரிசை - மரபு. கடுகி நடத்தற்குக் காரணம் பிண நாற்றம் பொறுமை. இத்தகைய செவ்வியில் அறிவில்லாதார்க்கும் சிறிது மெய்யறிவு தோன்றும் என்பார். மானிட வாழ்வு என்ன வாழ்வு என்ற எண்ணி நொந்தனர் என்றார்.

விறகிட......ஆளுமே

(இ - ள்.) விறகு இட மூடி - ஈம விறகின்மேல் பிணத்தைக் கிடத்தப் பின்னர் வைக்கோலால் வேய்ந்து சேறு மெழுகி மூடிய பின்; அழல்கொடு போட - தீயைக் கொணர்ந்து மூட்டலாலே; வெந்து விழுந்து முறிந்து நிணங்கள் உருகி - தசை வெந்து உறுப்புகள் தனித்து விழுந்து முறிய நிணங்கள் உருகவும்; எலும்பு கருகிஅடங்கி- எலும்புகள் கருகி அடங்கவும்; ஓர் பிடி நீறும் இலாத உடம்பை-இறுதி யில் ஒரு கைப்பிடி யுள்ளடங்கும் அளவு சாம்பரும் இல்லா தொழிகின்ற இந்தப் புல்லிய உடம்பினை; நம்பும் அடியேனை-நம்பி அதற்காவனவே செய்கின்ற அறிவிலியாகிய இந்த அடிமையையும்; ஆளும் - நுமது பேரருட்டிறத்திலே ஆட்கொண்டருள்க! என்பதாம்.

(வி - ம்.) மூடி-வைக்கோலாலும் சேற்றால் மெழுகியும் மூடுதல். விழுந்து - விழ. முறிந்து - முறிய. கருகி - கருக என்க.

உடற் கூற்றுவண்ணம்

முற்றும்.

பட்டினத்தடிகள் திருப்பாடற்றிரட்டு

முற்றும்.

பெருமழைப் புலவர். பொ. வே. சோமசுந்தரனார் பட்டினத் தடிகள் திருப்பாடற்றிரட்டிற்கு வகுத்த சொற்பொருளுரையும் விளக்கவுரையும் முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்

பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்

மூத்த பிள்ளையார் வாழ்த்து

முத்திதரு ஞான மொழியாம் புலம்பல் சொல்ல
அத்தி முகவன்ற னருள்பெறுவ தெக்காலம்.

(இ - ள்.) வீடுபேற்றினை வழங்குமியல்புடைய மெய்யறிவினையுடைய சொன்மாலையாகின்ற 'மெய்ஞ்ஞானப் புலம்பல்' என்னும் இந்த நூலை இனிது, செய்து முடித்தற் பொருட்டு, யானைமுகக் கடவுளினது திருவருட்டுணையை அடியேன் பெறுதற்குரியது எந்தக் காலமோ? யானறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அறியேனாயினும் அவன் றிருவருளை நம்பியே இதனை இயற்றத் துணிகின்றேன் என்பது குறிப்பெச்சம். (க)

நூல்

ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்.

(இ - ள்.) நான் என்னுஞ் செருக்கினைத் திருவருளிலமுழ்த்திச் சுவை முதலிய ஐம்புலன்களிற் செல்லும் அவாவினை மெயயுணர்வாகிய தீயினாற் சுட்டு அழித்து அடியேன் அறிதுயிலின் மூழ்கிப் பேரின்பம் எய்துதற்குரிய காலம் எந்தக்காலமோ ? அறிகிலேன் ; என்பதாம்.

(வி - ம்.) ஆங்காரம் - நான் என்னும் செருக்கு. ஐம்புலன் : ஆகு பெயர். தூங்காமற் றூங்குதல் - அறிதுயில் கோடல். (உ)

நீங்காச் சிவயோக நித்திரைகோண் டேயிருந்து
தேங்காக் கருணைவெள்ளந் தேக்குவது மெக்காலம்.

(இ - ள்.) சிவத்தோ டிரண்டற்றிருப்பதாகிய நீங்குதலில்லாத அறிதுயில் மேற்கொண்டிருக்குமாற்றால், இப்பொழுது என்னுள்ளத்தே நிரம்புதலில்லாத திருவருள் வெள்ளத்தை என்னுள்ளே நிரப்புவது எந்தக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) சிவயோகம் - தானே அதுவாகவிருத்தல். (ங)

தேங்காக் கருணைவெள்ளந் தேக்கியிருந் துண்பதற்கு
வாங்காமல் விட்டகுறை வந்தடுப்ப தெக்காலம்.

(இ - ள்.) இப்பொழுது என்னுள்ளே நிரம்பாத திருவருள் வெள்ளத்தை நிரப்பி அறிதுயில் கொண்டிருந்து இறையின்பம் நுகர்வதற்குப் பண்டு என்னுள்ளே வாங்கிக்கொள்ளாமல் விட்டுவிட்ட

குறையாகிய மெய்யுணர்ச்சி மீண்டும் என்பால் வந்துறுவது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) வாங்காமல் - உட்கொள்ளாமல். (௪)

ஓயாக் கவலையினு வுள்ளுடைந்து வாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்ப தெக்காலம்.

(இ - ள்.) இடையறாத துயரத்தாலே நெஞ்சழிந்து வாடாம லிருப்பதற்குக் காரணமான ஒழியாத பிறப்பினை யுண்டாக்குகின்ற மயக்கத்தை அழிப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) துன்பத்திற்குக் காரணம் பிறப்பு, அதற்குக் காரணம் மயக்கம் என்பது கருத்து. (௫)

மாயாப் பிறவி மயக்கத்தை யூடறுத்துக்
காயா புரிக்கோட்டை கைக்கொள்வ தெக்காலம்.

(இ - ள்.) ஒழியாத பிறப்பிற்குக் காரணமான அறியாமையாகிய படைகளை ஊடறுத்துச் சென்று உடம்பாகிய நகரின் கண்ணுள்ள மனக்கோட்டையை யாம் கைப்பற்றி நமது ஆட்சியிற் கொள்வது எந்தக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மனம் நம் வயப்பட்டுவிட்டால் பிறப்பறும் என்றவாறு. (௬)

காயாபுரிக் கோட்டை கைவசமாய்க் கோள்வதற்கு
மாயா வநுபூதி வந்தடுப்ப தெக்காலம்.

(இ - ள்.) உடம்பாகிய நகரத்துள்ள மனக்கோட்டையை நாம் கைப்பற்றிக் கோடற்கு நமக்கு இடையறாத சிவாநுபூதியாகிய ஆற்றல் வந்தெய்துவது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மனம் வசப்படவேண்டின் சிவாநுபவம் கைகூட வேண்டும் என்றவாறு. (௭)

சேயாய்ச் சமைந்து செவிடூமை போற்றிரிந்து
பேய்போ லிருந்துன் பிரமைகொள்வ தெக்காலம்.

(வி - ம்.) அடியேன் குழந்தைகளைப்போல நெஞ்சம் படைத்துச் செவிடரும் ஊமையரும் போல உலகத்திலே இயங்கி பேய்பிடியுண்டவன்போல நின்திருவருளால் பிடியுண்டிருந்து நின்பாலன்பு கொள்வது எந்தக்காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) பிறப்பறுக்கலுறுவார் குழந்தையுள்ளம் பெற்றவராய்ப் புலனடக்கித் திருவருளில் அசையாத நம்பிக்கையும் அன்பும் உடையராதல் வேண்டும் என்பது கருத்து. (அ)

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்துபெண்ணைத்
தாய்போ னினைத்துத் தவமுடிப்ப தெக்காலம்.

(இ - ள்.) கண்டோரிகழும் பேய்திரியுமாறு திரிந்து; கிடக்குங்கால் கருவிகளோடு கூடாது பிணங்கிடப்பதுபோல் கிடந்து; மகளிரைக் காணுங்காலத்தே காமுற்று நோக்காமல் ஈன்ற தாயைப் பார்க்குமாறு அன்போடு பார்த்து யான் மேற்கொண்டுள்ள தவவொழுக்கத்தை முற்றுவித்துத் திருவருட் காளாகுங்காலம் யாதோ? அறிகின்றிலேன் என்றவாறு.

(வி - ம்.) துறவோர் உலகினர் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் பொருளாகக் கொள்ளாமல் புலனடக்கி ஆருயிர்க் கன்புசெய்தல் வேண்டும் என்றவாறு. (௯)

கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகம்காட்டி
மால்காட்டு மங்கையரை மறந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) தம் நடையழகையும் கையாற்காட்டும் அபிநய அழகையும் கண்களையும் முகத்தையும் காட்டி ஆடவர்க்குக் காம மயக்கமுண்டாக்குகின்ற மகளிர் நினைவேயுண்டாகாதபடி உளந்தூய்மை பெறுதல் எந்தக்காலமோ? அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) திருவருள் விழைவோர் காமமுண்டாக்கும் மகளிரை நினைத்தலுங் கூடாதென்றவாறு. (௧0)

பெண்ணினல்லா ராசைப் பிரமையினை விட்டொழிந்து
கண்ணிரண்டு மூடிக் கலந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அழகிய மகளிர்பால் எழுகின்ற ஆசை மயக்கத்தைத் தவிர்த்துப் புலன்களின்பால் மனத்தைச் செலுத்தும் புறக்கண்களிரண்டையும் மூடி அகக்கண்ணாலே திருவருளைக் கண்டு அதனோடிரண்டறக் கலந்திருக்க வாய்ப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) புலனடக்கி இறைவன் திருவடிகளை ஞானக்கண்ணால் நோக்கவேண்டும் என்பது கருத்து. (௧௧)

வெட்டுண்ட புண்போல் விரிந்தவல்குற் பைதனிலே
தட்டுண்டு நிற்கை தணிவதுவு மெக்காலம்.

(இ - ள்.) வாளேறுண்ட புண்ணைப் போன்று பிளவுடைய அல்குலாகிய அருவருப்புடைய தோல்பை காரணமாக நெஞ்சுதடுமாறி நிற்கும் வேட்கை தணிந்து அமைதியுறுதல் எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) காமவேட்கையுண்டாயின் அருளில் நெஞ்சம் அமைதியுறமாட்டாதென்பது கருத்து. (௧௨)

ஆறாத புண்ணி லழுந்திக் கிடவாமல்
தேறாத சிந்தைதனைத் தேற்றுவது மெக்காலம்.

(இ - ள்.) ஒருநாளும் ஆறாத புண்போன்ற அல்குலின் இழிதகைமையைத் தெளிந்து கொள்ளமாட்டாத என் நெஞ்சத்தை யான் தெளிவுண்டாக்கி உய்வது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மகளிரின் புன்மையை யுணர்வார் காமத்தால் மயங்கார் என்றவாறு. (௧௩)

தந்தைதாய் மக்கள் சகோதரரும் பொய்யெனவே
சிந்தைதனிற் கண்டு திருக்கறுப்ப தெக்காலம்.

(இ – ள்.) தந்தையும் தாயும் மக்களும் உடன்பிறந்தோரும் நமக்கு நிலைத்த துணையாவாரல்லர் என்று உள்ளத்தே ஆராய்ந்துணர்ந்து இவர்களால் உண்டாகும் மயக்கத்தை ஒழிப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) தந்தை முதலியோர் வினைக்கீடாக நம்மோடிணைக்கப் பட்டவர், அவர் நமக்குறு துணையாகார் என்றவாறு. (௧௪)

மன்னுயிரைக் கொன்று வதைத்துண்டு வாழாமல்
தன்னுயிர்போ லெண்ணித் தவமுடிப்ப தெக்காலம்.

(இ - ள்.) தன்னூன் பெருக்கற்குப் பிறவுயிரைக் கொன்றும் பிறரைத் துன்புறுத்தியும் உணவுதேடி உண்டு வாழாமல் அனைத்துயிரையும் தன்னுயிர் போல் எண்ணி அன்புற்று வாழுமாற்றால் என் நோன்பினை முற்றுவித்தல் எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அருளுடையார்க் கன்றி அவ்வுலகமில்லை என்றவாறு. (௧௫)

பாவியென்ற பேர்படைத்துப் பாழ்நரகில் வீழாமல்
ஆவிநின்ற சூத்திரத்தை அறிவதினி யெக்காலம்.

(இ - ள்.) உயிரினங்களைக் கொன்று தீவினையாளன் என்று இம்மையினும் பழிக்கப்பட்டு மறுமையினும் வறிய நரகில் வீழ்ந்து வருந்தாமல் உடம்புகளின்கண் உயிர்கள் நிற்கின்ற காரணத்தை அறிந்து கொள்வது இனி எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) சூத்திரம் - ஈண்டுக் காரணம் என்னும் பொருட்டு. ஆவி நின்ற சூத்திரமாவது - "உண்ணுமை யுள்ளது உயிர்நிலை" என்பது. (௧௬)

உளியிட்ட கல்லு முருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும் பொருளாவ தெக்காலம்.

(இ - ள்.) உளியாற் செதுக்கிய கற்படிவத்தினும் இறை உருவமாகப் புனைந்த செவ்விய சுதையினும் புளியாற் றுலக்கிய செப்புருவத்தினும் மெய்ப்பொருளைக் காணும் மெய்யுணர்வு கைகூடுவதெப்பொழுதோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) திருக்கோயிலிலுள்ள தெய்வப்படிமத்தைத் தெய்வமாகவே கண்டு தொழுவார்க்கு ஆண்டுத் தெய்வம் வெளிப்பட்டுத் திகழும் என்றவாறு. (கஎ)

வேடிக்கை யுஞ்சோகுசு மெய்ப்பகட்டும் போய்ப்பகட்டும்
வாடிக்கை யெல்லா மறந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் வேடிக்கை பார்ப்பதும் அணிந்துகொண்டு உடம்பாலே உலகினரை மயக்குவதும் பொய் கூறிப் பிறரை ஏமாற்றுவதும் ஆகிய தீய பழக்கங்களை யெல்லாம் கைவிட்டு நின் அருளிலே அழுந்தி யிருப்பது எந்தக் காலத்திற் கைகூடுமோ? என்பதாம்.

(வி - ம்.) வீண் தொழிலிலே பொழுது போக்காமல் உன்னையே நினைந்திருத்தல் வேண்டும் என்பது கருத்து. (கஅ)

பட்டுடை போற்பணியும் பாவனையுந் தீவினையும்
விட்டுவிட் டுன்பாதம் விரும்புவது மெக்காலம்.

(இ - ள்.) அடியேன் பட்டுடுத்துப் பொன் பூண்டு நல்லோன் போல நடிப்பதும் தீவினை செய்வதும் தவரக்கை விட்டு உன் திருவடிகளை விரும்பித் தொழுதிருப்பது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) பாவனை - நடிப்பு. (கக)

ஆமைவரு மாட்கண் டைந்தடக்கஞ் செய்தாற்போல்
ஊமை யுருக்கொண் டொடுங்குவது மெக்காலம்.

(இ - ள்.) ஆமையானது தன்னைத் துன்புறுத்தும் மனிதனைக் கண்டுழித் தனது ஐந்துறுப்புக்களையும் தனக்குள் அடக்கிக் கொள்ளுதல் போன்று அடியேன் துயர்க்குக் காரணமான புலன்களைக் கண்டுழி ஐம்பொறிகளையும் அடக்கிக்கொண்டு மூங்கைபோல ஒழுகித் தன்னுட் டானாக ஒடுங்கி யிருப்பது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) ஐந்து - கால்கள் நான்கும் தலையும் ஆகிய ஐந்தும்; மெய் முதலிய ஐம்பொறிகள். (உ0)

தண்டிகையுஞ் சாவடியுஞ் சாளிகையும் மாளிகையுங்
கண்டு களிக்குங் கருத்தொழிவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் பல்லக்கும் விடுதிகளும் கருவூலமும் மாடமாளிகையு முதலியவற்றை ஏற்படுத்திக்கொண்டு சிறப்பாக வாழவேண்டும் என்று கருதும் கருத்தொழிந்து நின்திருவடிகளையே நாடுங்காலம் எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) பொய்யுலக வாழ்க்கையை விரும்புதல் கூடாது என்பது கருத்து. பொய்யுலகம் - நிலையிலாவுலகம். (உ௧)

அத்த னிருப்பிடத்தை யாராய்ந்து பார்த்து நிதம்
சேத்த சவம்போற் றிரிவதினி யெக்காலம்.

(இ - ள்.) அடியேன் இறைவனிலையை நாள்தோறும் ஆராய்ந் துணர்ந்து கொண்டு உலகியலிலே சாராமல் செத்தாரைப் போலத் திரியும் மெய்வாழ்க்கை தலைப்படுவது இனி எந்தக் காலத்திலோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அத்தன் - இறைவன். சவம்போல் இவ்வுலகில் மனஞ் செல்லாமல் அடங்கித் திரிதல் என்க. (உ௨)

ஒழிந்ததரு மத்தினைவைத் துள்ளேவும்பு வெள்ளேவும்
பாய்க்
கழிந்த பிணம் போலிருந்து காண்பதினி யெக்காலம்.

(இ - ள்.) உலகவாழ் வொழிந்த அறமாகிய துறவறத்தை உறுதி யாகப் பிடித்துக்கொண்டு உள்ளேயுள்ள எலும்பு வெள்ளெலும்பாந் துணையும் வாளாது கிடக்கும் பிணம்போல உற்றநோய் நோன்று நிலைத் திருந்து உன் திருவடிகளைக் காண்பது இனி எக்காலத்திலே கை கூடுமோ? என்பதாம்.

(வி - ம்.) ஒழிந்த தருமம் - துறவறம். (உ௩)

அற்ப சுகமறந்தே யறிவையறி வாலறிந்து
கோப்பத்தில் வீழ்ந்து கோண்ட கோளறுப்ப தேக்காலம்.

(இ - ள்.) ஒரு நொடிப் பொழுதை யின்பமாகிய சிற்றின்பத்தை மறந்து வாலறிவனாகிய இறைவனை அவன்திருவடி யறிவாலே அறிந்து கொண்டு, இதுகாறும் பிறவிப் படுகுழியில் வீழ்ந்து மேற்கொண்ட கொள்கைகளை யெல்லாம் விடுவது எந்தக் காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) அற்ப சுகம் - சிற்றின்பம். கொப்பம் - குழி. கோள் - வாதனை. கோள் - கொள்கை. (உ௪)

கருப்படுத்தி யென்னை யெமன் கைப்பிடித்துக் கொள்ளாமு [ன்
உருப்படுத்தி யாள வுடன்படுவ தேக்காலம்.

(இ - ள்.) அறியாமையால் யானே என்னைக் கருவினுட் படுத் திப் பிறந்து பின் கூற்றுவன் என்னைத் தன் கைப்படுத்திக் கொள்ளு தற்கு முன்னே அடியேன் என்னை நின்னுருவாகச் செய்துகொண்டு வீட்டுலகத்தை ஆள்வதற்கு நின் திருவருள் முன்னிற்பது எந்தக் காலமோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) உருப்படுத்துதல் - சிவோகம் பாவித்தல். வீட்டுல கை ஆள என்க. (உ௫)

தூண்டு விளக்கணையத் தொடர்ந்திருள் முன்சூழ்ந்தாற்
போல்
மாண்டு பிழைத்துவந்த வகைதெரிவ தெக்காலம்.

(இ - ள்.) தூண்டிவிட்ட விளக் கணைந்தவுடனே அந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து கண் முன்னே இருள் வந்து கவிவது போன்று இறந்தும் பிறந்தும் அனுதியாக யான் வந்திருக்கின்ற தன்மையை ஆராய்ந்தறிவது எந்தக் காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) நிலையாமை புணர்ந்தாலன்றி மெய்யுணர்தல் கூடாது என்பது கருத்து. (உசு)

தூரியினின் மீன்போற் சுழன்றுமனம் வாடாமல்
ஆரியனைத் தேடி யடிபணிவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் மனம் தூர்ந்த கிணற்றின்கண் மீன் சுழலுதல் போல உலகியலிலே சுழன்று சுழன்று துன்புறுமைப் பொருட்டு நல்லாசிரியனைத் தேடிக்கண்டு அவன் அடிபணிந்து உய்வது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) தூரி - தூர்ந்த கிணறு. ஆசானைத் தலைப்பட்டாலன்றி மெய்யுணர்வு பிறவா தென்பது கருத்து. (உஎ)

எண்ணூ றுகமிருந்து மெய்தாத வீடுபேற
வெண்ணீறு பூசி விளங்குவது மெக்காலம்.

(இ - ள்.) எண்ணூறு ஊழிகள் உலகியலில் அழுந்தி யிருந்தாலும் எய்துதற்கரிய வீடுபேற்றினை அடியேன் எய்துதற்குத் திருவெண்ணீறிட்டுத் திகழ்வது இனி எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) சாதனம் பெற்றாலன்றிச் சாத்தியம் கைகூடா தென்றவாறு. (உஅ)

அவவேடம் பூண்டிங் கலைந்து திரியாமல்
சிவவேடம் பூண்டு சிறந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) பொய்த்துறவு பூண்டு இவ்வுலகத்தில் அலைந்து திரிந்து கெடாமல் மெய்யாய சிவவேடந் தாங்கித் திருவருள் பெற்றுச் சிறந்திருப்பது அடியேனுக்கு எப்பொழுது கைகூடுமோ? என்பதாம்.

(வி - ம்.) பொய்த்துறவால் துன்பமே வரும், மெய்யாகத் துறவு பூணல் வேண்டும் என்பதாம். (உகூ)

அண்டருக்கா நஞ்சருந்தி யம்பலத்தி லாடுசிவன்
தொண்டருக்குத் தொண்டனெனத் தொண்டுசெய்வ
தெக்காலம்.

(இ - ள்.) தஞ்சம்புக்க தேவர்களைக் காத்தற்பொருட்டு நஞ்சினை உண்டு, மக்களை உய்வித்தற் பொருட்டுத் திருத்தில்லையில் கூத்தாடு கின்ற சிவபெருமானுடைய அடியார்க்கு அடியவனுகி அவர்க்குக் குற்றேவல் செய்து அடியேன் உய்தி பெறுதல் எந்தக் காலத்திற் கை கூடுமோ? என்பதாம்.

(வி - ம்.) சிவனடியார் கூட்டரவு மெய்யுணர்வு தோற்றுவிக்கும் என்றவாறு. (௩0)

பன்றி வடிவெடுத்துப் பாரிடந்து மால்காணுக்
குன்றில் விளக்கொளியைக் கூறுவது மெக்காலம்.

(இ - ள்.) திருமால் பன்றியாகி நிலத்தை அகழ்ந்து தேடியும் அடி காணப்படாத திருவண்ணுமலையிற் பேரொளிப் பிழம்பாய் நின்ற சிவபெருமான் திருப்பெயரை அடியேன் ஓதியுய்வது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) இறைவன் திருவைந் தெழுத்தை அன்புடன் ஓதுபவர் வீடுபேறடைவர் என்றவாறு. (௩க)

தித்திக்குந் தெள்ளமிர்தைச் சித்தாந்தத் துட்பொருளை
முத்திக்கு வித்தை முதனினைப்ப தெக்காலம்.

(இ - ள்.) நினைவார் தம் நெஞ்சத்தில் அமிழ்தம் போன்று தித்திப்பதும் மெய்யறிவான் முடிந்த உட்பொருளும், வீடுபேற்றிற்கு வித்தும் ஆகிய முதன்மையுடைய திருவைந் தெழுத்தை நினைத்துய்வது எந்தக்காலமோ? அறிகிலேன்.

(வி - ம்:) திருவைந் தெழுத்தின் சிறப்புணர்த்தியவாறு. (௩உ)

வேதாந்த வேதமெல்லாம் விட்டொழிந்தே நிட்டையிலே
ஏகாந்த மாக விருப்பதினி யெக்காலம்.

(இ - ள்.) அடியேன் வேதாந்தம் வேதம் முதலியவற்றைப் பேசிப்பேசி வீணுள் கழியாமல், பேசாமை பெற்று நின்றிருவருளிலே அழுந்திக் கருவி கரணங் கடந்து இன்புற்றிருத்தல் எக்காலத்தில் கை கூடுமோ? என்பதாம்.

(வி - ம்.) கல்வி முதலியவற்றுல் மட்டும் பயன் உண்டாகாது. அடக்கத்தால் மட்டுமே வீடுபேறெய்துதல் கூடும் என்றவாறு. (௩௩)

மாற்றிடத்தைத் தேடியென்றன் வாழ்நாளைப் போக்காமல்
உற்றிடத்தைத் தேடி யுறங்குவது மெக்காலம்

(இ - ள்.) புறவுலக ஆய்வுகளால் வாழும் நாட்களை வீணுகக் காலம் போக்காமல், அகமுக ஆய்வுகளால் அகத்தவ உறக்கம் செய்வது எப்பொழுது? என்பதாம்.

(வி - ம்.) மற்றிடம் – வெளியிடம்; புறவுலகம். தேடுதல் - ஆராய்தல்; ஆய்தல். உற்றிடம் - அகமுகம்; உடம்பினுள். உறங்குவது - அகத்தவத் (யோகம்) துயில் கொள்வது. துயில் - விழித்துறங்குவது; அறிவொடு தூங்குவது. (௩௪)

இன்றுளோர் நாளை யிருப்பதுவும் பொய்யெனவே
மன்றுளோர் சொல்லும் வகையறிவ தெக்காலம்.

(இ - ள்.) இற்றை நாள் உயிரோடிருப்பவர் நாளைக்கும் இருப்பர் என்று எண்ணுதல் பொய்யாம் என்று அவையகத்துச் சான்றோர் அறிவுறுத்தும் நிலையாமையின் முறையை யான் மெய்யென்றுணர்ந்து கொள்ளல் எந்த நாள் இயலுமோ? என்பதாம்.

(வி - ம்.) நிலையாமை மக்கள் மனத்திற் பதிவதருமையாகலின் இங்ஙனம் கூறினர். நிலையாமை புணர்ச்சி வந்தாலன்றி மெய்புணர்தல் வரமாட்டாது. (௩௫)

கஞ்சா வபினியுடன் கள்ளுண்டு வாடாமல்
பஞ்சா வமிர்தம் பருகுவது மெக்காலம்.

(இ - ள்.) அடியேன் உணர்வழிக்கின்ற கஞ்சா அபினிகள் என்னும் இவற்றை யுண்டு துன்புறாமல் மெய்புணர் வுண்டாக்கும் திருவைந் தெழுத்தாகிய அமிழ்துண்டு மகிழ்வது எந்தக்காலமோ? என்பதாம்.

(வி – ம்.) ஐந்தெழுத்தாலாய மந்திரமாகலின் பஞ்சாமிர்தம் என்றார். (௩௬)

செஞ்சலத்தி னுற்றிரண்ட சென்னமோக் கம்பெறவே
சஞ்சலத்தை விட்டுன் சரணடைவ தெக்காலம்.

(இ - ள்.) சுக்கிலத்தோடு கூடிய சுரோணிதத்தாலே உருவாகத் திரண்ட இப்பிறப்பினின்றும் வீடு பெறுதற்கு, புலன்களிலே சென்று வருந்துவதனை விட்டு உன் திருவடியிலே அடியேன் தஞ்சம் புகுவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) செஞ்சலம் - சுரோணிதம். இனம்பற்றிச் சுக்கிலமும் கொள்க. (௩௭)

கும்பிக் கிரைதேடிக் கோடுப்போ ரிடந்தோறும்
வெம்பித் திரிகை விடுப்பதினி யெக்காலம்.

(இ - ள்.) அடியேன் சேற்றுக்குழி போன்ற வயிற்றிற்கு இரை தேடிச் சோறிடுவா ரில்லந்தோறும் நெஞ்சழிந்து திரிவதனை விடுவது இனி எந்தக்காலமோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) கும்பி : உவமவாகு பெயர். (௩௮)

ஆடுகின்ற சூத்திரந்தா னறுமளவு மேதிரிந்து
போடுகின்ற நாள்வருமுன் போற்றுவது மேக்காலம்.

(இ - ள்.) அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாலே ஆடுகின்ற தோற்பாவையாகிய இவ்வுடம்பு அக்கயிறுகள் அறுகின்ற நாள்வரையில் ஆடித்திரிந்து, அக்கயிறறுதலாலே இதனை வாளா போடுகின்ற நாள் வந்துறுமுன்னே உன்னை வழிபடுவது எப்பொழுது நேருமோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) சூத்திரம் - பொறி. சாவுவருமுன்பே இறைவனை வழிபடுக! என்றவாறு. (௩௯)

நவசூத் திரவீட்டை நானனென் றலையாமல்
சிவசூத் திரத்தைத் தெரிந்தறிவ தெக்காலம்.

(இ - ள்.) ஒன்பது பொறிகளாகிய வாயில்களையுடைய வீடாகிய இந்த உடம்பினை நான் என்று செருக்குற்று இவ்வுலகி லலையாமல் சிவத்தையுணரும் கருவியாகிய மறைமொழியை ஆராய்ந்தறிந்து கோடல் எந்தக்காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) சிவசூத்திரம் - சிவத்தை யடைவிக்கும் சூத்திரம்; அது, திருவைந்தெழுத் தென்க. (௪௦)

மறந்து மலசலங்கண் மாயும்புழுக் கூட்டைவிட்டுக்
கரந்தன் னடியிணைக்கீழ்க் கலந்துநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) தன்னை மறந்து மலசலங்கள் ஒழுகுவதும் ஒருநாள் இறந்தொழிவதும் புழுக்கள் வாழும் கூடுமாகிய இவ்வுடம்பின்கண் பற்றறுத்து மறைந்துவந் துன்னுடைய திருவடிகளிலே அடியேன் கலந்து நிலைத்திருப்பது என்று கொலோ? அறியேன்.

(வி - ம்.) பற்றற்ற துணையானே வீடுபேறுண்டாம் என்றவாறு. (௪௧)

இம்மைதனிற் பாதகனு யிருவினைக்கீ டாயெடுத்த
பொம்மைதனைப் போட்டுன்னைப் போற்றிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் முற்பிறப்பிலே தீவினையாளனாகி அந்தப் பெரிய தீவினையை நுகர்தற் பொருட்டு இப்பிறப்பிலே எடுத்திருக்கின்ற இந்தப் பொம்மையாகிய உடம்பைப் பற்றின்றி எறிந்து விட்டு உன் திருமுன் வந்து வழிபாடு செய்து நிற்கும் நாள் எப்பொழுதோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பாதகனுய் என்றமையால் இருவினை - பெரிய தீவினை என்க. (௪௨)

உப்பிட்ட பாண்ட முடைந்துகருக் கொள்ளுமுன்னே
அப்பிட்ட வேணியனுக் காட்படுவ தெக்காலம்.

(இ - ள்.) உப்பிட்டுவைத்த மட்பாண்டம் போன்று இவ்வுடம்பு அழிந்து மீண்டுமொரு தாய் வயிற்றிற் கருவாகு முன்பே கங்கையைச் சுமந்த சடையினையுடைய சிவபெருமான் திருவருளுக்கு ஆளாவது எந்தக்காலமோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இப்பிறவி தப்பினல் எப்பிறவிவாய்க்குமோ என்று ஐயுற்றபடியாம். (௩௩)

சேவை புரிந்து சிவரூபக் காட்சிகண்டு
பாவை தனைக்கழித்துப் பயனடைவ தெக்காலம்.

(இ - ள்.) திருக்கோயிலில் அலகிடுதல் மெழுகுதல் பூமாலை புனைதல் முதலிய திருத்தொண்டுகளை நாடோறுஞ் செய்து இறைவன் திருவுருவக் காட்சியினைக்கண்டு வணங்கிப் பொம்மை போன்ற இவ்வுடலை விட்டு, பிறவிப்பயனை அடைதல் எப்பொழுதோ என்பதாம்.

(வி - ம்.) பாவை - உடம்பிற்கு ஆகு பெயர். (௩௪)

காண்டத்தை வாங்கிக் கருமேக மீண்டதுபோல்
பாண்டத்தை நீக்கிப் பரமடைவ தெக்காலம்.

(இ - ள்.) கரிய முகிலானது திரள்பெற்றுப் பின் மழை பொழிந்து தனது திரட்சியினீங்கி நீர்நிலைக்கு மீண்டாற்போன்று அடியேன் மல பாண்டமாகிய இவ்வுடம்பை விட்டுப் பரம் பொருளை அடைவது எந்தக்காலமோ? என்பதாம்.

(வி - ம்.) காண்டம் - திரட்சி. மேகம் உருப்பெற்றும் பின்னர் நீராக மீண்டாற்போல என்பது கருத்து. (௩௫)

சோற்றுத் துருத்திதனைச் சுமந்தலைந்து வாடாமல்
ஊத்தைச் சடம்போட் டுனையடைவ தெக்காலம்.

(இ - ள்.) சோறடைக்கும் தோற்றுருத்தியாகிய உடம்பைச் சுமந்து அதற்குச் சோறிரக்க அலைந்து வருந்தாமல் அழுக்குடைய இந்த உடம்பை வீழ்த்திவிட்டு உனது திருவடிகளை அடைவது எந்தக் காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) ஊத்தைச்சடம் என்றது சுட்டுப்பொருள் மேலும் நின்றது. (௩௬)

தோடக்கைச் சதமெனவே சுமந்தலைந்து வாடாமல்
உடக்கைக் கழற்றி யுனையறிவ தெக்காலம்.

(இ - ள்.) பற்று பொருளாகிய இவ்வுடம்பினை நிலையாயது என்று கருதி அதனைச் சுமந்துகொண்டு ஊர் ஊராகச் சோறிரத்தற்கு அலைந்து வருந்தாமல் அதனோடு கூடிய கருவிகரணங்களையும் அகற்றித் தனித்திருந்துன்னை யுணர்வது எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) தொடக்கு - பற்று. உடக்கு - உடனிருப்பது. (௪எ)

ஆசைவலைப் பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசைமணித் தீபத்தி லொன்றிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் அவாவாகிய வலைக் கயிற்றினுளகப்பட்டு இடையறாது பிறந்திறந்துழலாமல் அவாவறுத்துப் பிரணவ வடிவமாகிய இறைஒளியி லிரண்டறக் கலத்தல் எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) இறைவன் பிரணவசொரூபி என்பது பற்றி ஓசை மணித் தீபம் என்றார். (௪அ)

கூறரிய நால்வேதங் கூப்பிட்டுங் காணாத
பார ரகசியத்தைப் பார்த்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) சொல்லுதற்கரிய நான்கு மறைகளும் கூவியழைத்தும் காணப்படாத பெரிய மறைபொருளாகிய சிவத்தை அடியேன் அகக் கண்ணாற் கண்டு களிப்பது எந்தக்காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) அறிவுக்கு அப்பாலாய் நின்ற மறைபொருள் என்றவாறு. (௪௯)

புல்லாய் விலங்காய்ப் புழுவாய் நரவடிவாய்
எல்லாப் பிறப்பி னிருளகல்வ தெக்காலம்.

(இ - ள்.) புல்லாகவும் விலங்குகளாகவும் புழுவாகவும் மக்கள் வடிவமாகவும் இன்னோரன்ன பிற பிறவிகளாகவும் பிறக்கின்றஎல்லாப் பிறப்புகட்கும் காரணமான ஆணவமலமாகிய இருள் அழிவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) இருள் என்றது ஆணவ மலத்தை. (௫0)

தக்கும்வகைக் கோர்பொருளுஞ் சாராம லேகினைவில்
பக்குவம்வந் துன்னருளைப் பார்த்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) மாயாகாரியமாகிய பொருள்களுள் ஒன்றனையும் சாராமல் சார்தற்குரிய உன்னோடு கலத்தற்குத் தகுந்த வகையிலே என்னெஞ்சத்தே சத்திநிபாதம் வரப்பெற்று நினது திருவருளையே கண்டிருப்பது எந்தக்காலமோ என்பதாம்.

(வி - ம்.) தகும்வகை - தக்கும்வகை என நின்றது. (௫௧)

பருவத் தலைவரோடும் பல்கியின்பம் கொள்வதற்குத்
தெரிவைப் பருவம்வந்து சிக்குவது மெக்காலம்.

(இ - ள்.) எக்காலமும் இளமைப் பருவமே யுடையனாய் மூவா முதல்வனாகிய எம்பெருமானோடு கூடி அழியாத பேரின்பம் எய்து

வதற்கு அடியேனுக்குத் தெரிவையாகிய பருவம் வந்து அவன் கடைக் கண் பார்வையிலே சிக்குண்பது எந்தக்காலமோ? என்பதாம்.

(வி - ம்.) இறைவனோடு கூடுதற்கியன்ற செவ்வி பெறுவது எப்பொழுதோ? என்றவாறு. (௩௨)

தெரிவையுறும் பக்குவத்தின் சீராட்டேல் லாமறிந்து
குருவையறிந் தேநினைத்துக் கும்பிடுவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் என் தலைவனோடு கூடுதற்கியன்ற தெரிவைப் பருவம் வந்தெய்தப் பெறுஞ் செவ்வியிலே, நல்லாசானைக் காணப்பெற்று அவன் வாயிலாய் என் தலைவனுடைய சிறப்புக்களையும் திருவிளையாடல்களையும் அறிந்து எம்பெருமானை நினைந்து கும்பிடுவது எந்தக்காலமோ? என்பதாம்.

(வி - ம்.) பக்குவம் பெறினும் ஆசிரியனருளும் வேண்டும் என்க. (௩௩)

வம்படிக்கு மாதருடன் வாழ்ந்தாலு மன்னுபுளி
யம்பழமுந் தோடும்போ லாவதினி யெக்காலம்.

(இ - ள்.) பூசல் விளைக்கின்ற பொல்லாத மகளிருடன் கூடி இல்லிலிருந்து வாழ்ந்தபோதும் புளியம்பழமும் அதன் தோடும்போலச் சிறிதும் பற்றின்றி வாழத்தெரிந்து கொள்ளல் இனி எந்தக் காலத்திற் கைகூடுமோ? என்பதாம்.

(வி - ம்.) வீடுபேற்றிற்குப் பற்றறுதியே காரணம் என்றவாறு. (௩௪)

பற்றற்று நீரிற் படர்தா மரையிலைபோல்
சுற்றத்தை நீக்கமனந் தூரநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) நீர்மேல் படருகின்ற தாமரையிலையானது நீரைப் பற்றாதிருப்பது போன்று அடியேன் மனம் சுற்றத்தார்பாற் பற்றின்றி விலகி நிற்கும் காலம் எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) சுற்றத்தார்பாற் பற்றின்றி நீக்குதற்குத் தகுதியாக என்க. (௩௫)

சல்லாப லீலையிலே தன்மனைவி செய்தசுகம்
சொல்லாரக் கண்டேனக்குச் சொல்வதினி யெக்காலம்.

(இ - ள்.) காம விளையாட்டின்கண் ஒருவன் தன் மனைவி வழங்கிய இன்பத்தைச் சொல்லுமாறு போலே அடியேன் இறைவனுடன் கூடி நுகர்ந்த பேரின்பத்தை உலகினர்க்குச் சொல்லலாவது இனி எப்பொழுதோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறையின்பத்தை நுகர்ந்து உலகினர்க்கு யான் சொல்லாமல் சொல்லவேண்டும் என்பது கருத்து. (௰௬)

மருவ வயற்புருடன் வருநேரம் காணுமல்
உருகுமனம் போலேனுள முருகுவது மெக்காலம்.

(இ - ள்.) ஒருத்தி தன் கள்ளக்காதலன் வருதற்குரிய காலத்திலே அவன் வரக்காணாமையாலே அவாவாலுருகுகின்ற அவள் நெஞ்சம் போன்று அடியேன் நெஞ்சம் ஆண்டவன் வரவை எதிர் நோக்கி உருகி யிருப்பதுவும் எந்தக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவனை உள்ள முருகி நினைத்தாலன்றி அவன் வருதலிலன் என்பது கருத்து. (௰௭)

தன்கணவன் றன்சுகத்திற் றன்மனம்வே றுனதுபோல்
என்கருத்தி லுன்பதத்தை யேற்றுவது மெக்காலம்.

(இ - ள்.) ஒருத்தி தன் கணவன் றன்னைப் புணர்ந்தின் புறுத்தும் போதும் அவள் மனமானது அவ்வின்பத்தி லழுந்தாமல் தன் கள்ளக் கணவனையே நினைத்து வேறு பட்டிருப்பது போல அடியேன் இவ்வுலக வாழ்வி லிருக்கும் பொழுதே இதிலழுந்தாமலுன் திருவடிகளையே நினைத்திருப்பதுவும் எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) உலகியலில் இருக்கும் பொழுதே அதிலழுந்தாமல் திருவருளில் அழுந்தி யிருத்தல் வேண்டும் என்பது கருத்து. (௰௮)

கூடிப் பிரிந்துவிட்ட கோம்பனையைக் காணுமல்
தேடித் தவிப்பவன்போல் சிந்தைவைப்ப தெக்காலம்.

(இ - ள்.) தன்னோடு கூடிப் பிரிந்து போய்விட்ட பூங்கொம்பு போல்வாளாகிய தன் காதலியைத் தேடி மனந்தவிக்கும் ஒரு காமுகன் போன்று, அடியேன் உன்னைத் தேடித் தவிக்கும் நெஞ்சுடையேனுதல் எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) இறைவன் தன்னை எய்தத்தவிக்கும் நெஞ்சுடையார்க்கே அருள் செய்வான் என்றவாறு. (௰௯)

எவ்வனத்தின் மோக மெப்படியுண் டப்படிப்போல்
கவ்வனத் தியானங் கருத்துவைப்ப தெக்காலம்.

(இ - ள்.) காமுகன் ஒருவனுக்குக் காளைப்பருவத்திலே காரிகையார்பால் எவ்வாறு மோக முண்டாகுமோ அவ்வாறு போல அடியேன் நின்பாற் காதலாகி நின்திருவடியைக் கௌவுகின்ற அழகிய நின் நினைவையே என் நெஞ்சத்தே இருத்தி வைப்பது எக்காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) கவ்வு வனத்தியானம் - கவ்வனத்தியானம் என விகாரமெய்தி நின்றது. வனம் – அழகு. (௬௦)

கண்ணு லருவி கசிந்துமுத்துப் போலுதிரச்
சொன்ன பரம்பொருளைத் தொகுத்தறிவ தெக்காலம்.

(இ – ள்.) அடியேன் கண்களினின்றும் கண்ணீர் கசிந்து முத்து முத்தாய் உதிரும்படி நூலோர் சொன்ன பரம்பொருளின் புகழை யெல்லாம் ஒரு சேரத்தொகுத்து அறிவது எப்பொழுதோ அறிகிலேன் என்பதாம்.

(வி – ம்.) இறைவன் பொருள்சேர் புகழை இடையறாது அன்புடன் கற்றும் கேட்டும் உளமுருக வேண்டும் என்றவாறு. (௬௧)

ஆக மிகவுருக வன்புருக வென்புருகப்
போக வனுபூதி பொருந்துவது மெக்காலம்.

(இ - ள்.) அடியேன் உடம்பு மயிர் சிலிர்த்துருகுமாறும் நெஞ்சம் அன்பாலுருகவும் என்புகள் உருகவும் சிவப்பேரின்ப நுகர்ச்சியின்கண் பொருந்தி யிருப்பது எந்தக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) போகவநுபூதி - இன்பநுகர்வு. (௬௨)

நீரிற் குமிழிபோ னிலையற்ற வாழ்வை விட்டுன்
பேரிற் கருணைவெள்ளம் பெருக்கெடுப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் நீரிற்றோன்றும் குமிழிபோன்று நிலையுதலில்லாத இவ்வுடம்பானுகரும் இவ்வுலக வாழ்க்கையைக் கைவிட்டு உன் பெயர் ஓதுமாற்றால் நினது பேரருள் வெள்ளம் பெருகி என்னை மூழ்குவிப்பது எந்தக்காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) உன்பேரில்-உன் பெயரோதுமாற்றால் என்க. (௬௩)

அன்பை யுருக்கி யறிவையதன் மேற்புகட்டித்
துன்ப வலைப்பாசத் தொடக்கறுப்ப தெக்காலம்.

(இ – ள்.) அடியேன் அன்பினாலே என் நெஞ்சத்தை உருக்கி நெகிழ்வித்து அந்நெகிழ்ந்த நெஞ்சத்தினூடு மெய்யறிவையும் புகுத்தித் துன்பவலைக் கயிற்றாலாகிய இவ்வுலகப்பற்றினை ஒழிப்பது எப்பொழுதோ ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பற்றற வேண்டுமேல் இறைவன் திருவடியைப்பற்ற வேண்டும் என்றவாறு. (௬௪)

கருவின் வழியறிந்து கருத்தைச் செலுத்தாமல்
அருவி விழிசோரிய அன்புவைப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் பிறப்பெய்துங் காரணத்தை அறிந்து அதன்கண் மனத்தை விடுக்காமல் அடக்கி அப்பிறப்பறுக்கும் நின் திருவடியின் கண்ணீர் அருவிபோல வீழுமாறு அன்பு செலுத்துவது எந்தக்காலமோ? என்பதாம்.

(வி - ம்.) நன்மை தீமைகளை அறிந்து நன்னெறி நிற்றல் வேண்டும் என்றவாறு. (சுரு)

தெளியத் தெளியத் தெளிந்தசிவா னந்தத்தேன்
பொழியப் பொழியமனம் பூண்டிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) மெய்யுணருந்தோறும் மெய்யுணருந்தோறும் மிக்குத் தெளிவு தருகின்ற இறையின்பமாகிய தேன் பெருகப்பெருக அதனை என்னுள்ளம் ஏற்றுக்கோடல் எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறையின்பம் என்று மூலவாது பெருகு மியல் புடையது என்றவாறு. (சுசு)

ஆதார மூலத் தடியிற் கணபதியைப்
பாதார விந்தம் பணிந்துநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) ஆறுதாரங்களுள் வந்து மூலாதாரத்தில் கணபதியை அகக்கண்ணுற் கண்டு அவன் தாமரைமலர் போன்ற திருவடிகளை அடியேன் வணங்குவது எந்தக்காலமோ?

(வி - ம்.) ஆதாரமூலம் - மூலாதாரம். (சுஎ)

மண்வளைந்த நற்கீற்றில் வளைந்திருந்த வேதாவைக்
கண்வளைந்து பார்த்துள்ளே கண்டிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் நிலக்கூறாகிய வட்டமான சுவாதிட்டானத் தின்கண் குனிந்து தோன்றுகின்ற நான்முகனை அகக்கண்ணால் வளைத் துப் பார்த்து உள்ளத்தே கண்டமைவது எந்தக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மண்வளைந்த நற்கீற்று - சுவா திட்டானம் என்க. (சுஅ)

அப்புப் பிறைநடுவே யமர்ந்திருந்த விட்டுணுவை
உப்புக் குடுக்கையுள்ளே யுணர்ந்தறிவ தெக்காலம்.

(இ - ள்.) நீர்த்தத்துவமாய் பிறைவடிவிற்றாகிய மணிபூரகத்தின் வீற்றிருக்கின்ற திருமாலை உப்பிட்ட பாண்டமாகிய இவ்வுடம்பினுள்ளே கண்டு கை தொழுதிருப்பது எந்தக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அப்புப்பிறை - மணிபூரகம். உப்புக்குடுக்கை - உடல். (சுகூ)

மூன்று வளையமிட்டு முளைத்தெழுந்த கோணத்தில்
தோன்று முருத்திரனைத் தொழுதுநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) மூன்று வட்டங்கட்கிடையே தோன்றிய கோணமாகிய அனகதத்தின்கண் எழுந்தருளுகின்ற உருத்திரனைக்கண்டு தொழுவது எந்தக் காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) மூன்றுவளைய மிட்டு முளைத்தெழுந்த கோணம் அநாகதம். (எ0)

வாயுவறு கோணமதில் வாழு மகேச்சுரனைத்
தோயும்வகை கேட்கத் தொடங்குவது மெக்காலம்.

(இ - ள்.) காற்றின் கூற்றாய் ஆறுகோணமுடைய விசுத்தியின்கண் மகேசுரனைக்கண்டு என்னுள்ளத்தே எழுந்தருளும்படி வேண்டுவதும் எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) வாயுவறு கோணம் - விசுத்தி. (எக)

வட்டவழிக் குள்ளே மருவுஞ் சதாசிவத்தைக்
கிட்ட வழிதேடக் கிருபைசெய்வ தெக்காலம்.

(இ - ள்.) வட்டவடிவிற்றாகிய ஆஞ்ஞையில் சதாசிவத்தைக் கண்டு அணுகுதற்கு அடியேன் வழிகாணவும் அவனருள் செய்யவும் நிகழ்வது எந்தக்காலமோ அறிகிலேன்? என்பதாம்.

(வி - ம்.) வட்டவழி என்றது ஆஞ்ஞையை. (எஉ

உச்சிக் கிடைநடுவே யோங்கு குருபதத்தை
நிச்சயித்துக் கொண்டிருந்து நேர்வதினி யெக்காலம்.

(இ - ள்.) உச்சியின் நடுவிடத்தே எழுந்தருளி உயர்கின்றதாக ஞானசிரியரின் திருவடிகளை உறுதி செய்துகொண்டு தியானித்திருப்பது எந்தக் காலமோ? அறிகிலேன்; என்பதாம்.

(வி - ம்.) ஆறுதாரங்களுக்கு மேலே ஞானசிரியன் திருவடிகளைப் பாவனை செய்து தியானத்தமர்தல் வேண்டும் என்றவாறு. (எ௩)

பாராகிப் பார்மீதிற் பஞ்சவர்ணந் தானாகி
வேராகி நீமுளைத்த வித்தறிவ தெக்காலம்.

(இ - ள்.) இறைவனே நீயே நிலமுதற் பூதங்கள் ஐந்துமாய் அந்நிலத்தின்மேல் பொன்மை முதலிய ஐந்து நிறங்களுமாய் இவற்றிற்கெல்லாம் முதலாயிருந்து முளைப்பதற்கும் முதலா யிருக்கின்ற நின்னியல்பினை அடியேன் அறிவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) காரணங்கள் அனைத்திற்கும் காரணமா யிருக்கின்ற நின்னியல்பு என்க. (எச)

கட்டறுக்க வொண்ணுக் கருவிகர ணுதியெல்லாம்
சுட்டறுத்து நிட்டையிலே தூங்குவது மெக்காலம்.

(இ - ள்.) பற்றறுத்தற்கு இயலாமைக்குக் காரணமாயிருக்கின்ற கருவி கரணங்களின் குறும்புகளை அறிவுத்தீயினுற் சுட்டழித்து நின் திருவருளிலே அழுந்தி அறிதுயில் கோடல் என்று வாய்க்குமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) கட்டறுக்க வொண்ணுதபடி செய்கின்ற கருவி கரணம் என்றவாறு. (எரு)

கள்ளக் கருத்தை யெல்லாங் கட்டோடு வேரறுத்திங்
குள்ளக் கருத்தை யுணர்ந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) வஞ்சக நினைவுகளை யெல்லாம் ஒருங்கே வேரோடு அழித்துத் தூய்மை பெற்று அடியேன் மெய்ப்பொருளை மட்டுமே நினைந்து உணர்ந்து அதனோடு கலந்திருப்பது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) நெஞ்சில் வஞ்சமிருக்கு மளவும் மெய்யுணர்வு பிறவாது என்றவாறு. (எசு)

அட்டகாசஞ் செலுத்து மவத்தைச் சடலத்துடனே
பட்டபா டத்தனையும் பகுத்தறிவ தெக்காலம்.

(இ - ள்.) இவ்வுலகத்திலே ஆரவார நீர்மையுடைய வாழ்க்கை நடத்துகின்ற நிலைமையினையுடைய இப்பொய்யுடல் நிமித்தம் அடியேன் பட்ட துன்பங்களை யெல்லாம் பகுத்துணர்ந்து அதன்கண் பற்றறுத்தல் எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) அட்டகாசம் - ஆகுலத்தன்மை. (எஎ)

அறிவுக் கருவியுடன் அவத்தைபடும் பாட்டையெல்லாம்
பிறிய வுடனிருத்திப் பேலப்படுவ தெக்காலம்.

(இ - ள்.) அறிவுக் கருவிகள் புலன்களிற் செல்லுதலால் அவற்றுடன் அடியேன் துன்பப்படுகின்ற துயரங்கள் எல்லாம் அகலுமாறு அவற்றை என்வயமாக்கி மெய்யறிவு வன்மை பெறுவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) அறிவுக் கருவி: மெய்வாய் கண் மூக்குச் செவி என்பன. (எஅ)

பூதம் பொறி கரணம் போதவிந்து நாதமுமாய்ப்
பேதம் பலவிதமும் பிறித்தறிவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் இந்த வுடம்பினை பூதங்களாகவும் பொறிகளாகவும் உட்கருவிகளாகவும் அறிதற்குக் காரணமான விந்தாகவும் நாதமாகவும் என்னின் வேருகப் பிறித்துணர்தல் எந்தக்காலமோ? என்பதாம்.

(வி - ம்.) அடியேன் தத்துவ அறிவு கைவரப்பெற்று மெய்யுணர்தல் எப்பொழுதோ என்றவாறு. (எகூ)

தோன்ருசை மூன்றுந் தோடர்ந்துவந்து சுற்ருமல்
ஊன்ருசை வேரையடி யூடறுப்ப தெக்காலம்.

(இ - ள்.) மயக்கத்தால் தோன்றுகின்ற மூன்று வகையான ஆசைகளும் அடியேனை விடாமல் தொடர்ந்து வந்து சூழ்ந்து கொள்ளாதவாறு அவ்வாசைகள் என்னுள்ளத்தே ஊன்றி யிருக்கின்ற அவற்றின் வேர்களை மெய்யறிவாகிய வாளினலே நன்கு அரிந்தழிப்பது எந்தக்காலமோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) ஆசை மூன்ருவன - மண்ணுசை பொன்னுசை பெண்ணுசை என்பன. (அ0)

புன்சனனம் போகுமுன்னே புரியட்டம் போகிலினி
என்சனன மீடேற மேன்றறிவ தெக்காலம்.

(இ - ள்.) புன்மையான இப்பருவுடல் வீழ்வதற்கு முன்பே என் நுண்ணுடல் அழிந்து விடுமாயின் அப்பால் என் பிறப்பின் பயன் கைவருமென்று அடியேன் அறிவது எப்பொழுதோ என்பதாம்.

(வி - ம்.) புன்சனனம் என்றது பருவுடலை. புரியட்டம் - மன முதலிய எட்டுறுப்புக்களாலியன்ற சூக்குமவுடல் பருவுடலிருக்கும் போதே மன முதலியன இறந்துவிடின் வீடுபேறுண்டாம் என்றவாறு. (அக)

நட்ட நடுவினின்று நற்றிரோ தாயியருள்
கிட்ட வழிகாட்டிக் கிருபைசெய்வ தெக்காலம்.

(இ - ள்.) இறைவனே நீ அடியேனுள்ளத்தே யிருந்து நல்ல திரோதாயியின் அருளாகிய சத்திநிபாதத்தை அடியேன் அடையும் நெறியினைக் காட்டி நினது திருவருளை வழங்குவது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) திரோதாயியருள் - சத்திநிபாதம். (அஉ)

நானேநா னென்றிருந்தேன் நடுவினிற் கட்டழகி
தானே வெளிப்படுத்தித் தருவளென்ப தெக்காலம்.

(இ - ள்.) உயிராகிய யானே மெய்ப்பொருள் என்று செருக்குற்றிருக்கின்ற என்னுள்ளேயே அழகிய நின்திருவருட் சத்திதோன்றி என் உயிர்க்கும் உயிராயிருக்கின்ற நீயே மெய்ப்பொருள் என அறி

வித்து நின்னை எனக்குக் காட்டித்தருவள் என்று கூறுவது என்பால் நிகழ்வது எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) நூல் கூறுவது என்பால் நிகழ்வது என வருவித்துக் கொள்க. (அ௩)

அடர்ந்த மனக்காட்டை யஞ்செழுத்தாம் வாளாலே
தொடர்ந்துதொ டர்ந்துவெட்டிச் சுடுவதினி யெக்காலம்.

(இ - ள்.) என்னுள்ளே அடர்ந்து கிடக்கின்ற மனமாயையாகிய காட்டினைத் திருவைந் தெழுத்தாகிற வாளாலே விடாமல் முயன்று வெட்டிவீழ்த்தி அறிவுத் தீயினலே சுட்டழிப்பது எப்பொழுதோ! அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) திருவைந் தெழுத்தை முறைப்படி விடாதோதினல் மனமிறக்கும் என்றவாறு. (அ௪)

ஐந்துபொறி வழிபோ யலைக்குமிந்தப் பாழ்மனதை
வேந்துவிழப் பார்த்து விழிப்பதினி யெக்காலம்.

(இ - ள்.) ஐந்து வாயில்களாகிய பொறிகளின் வழியே புலன்களிலே சென்று என்னை இடையருது வருத்துகின்ற இந்தப் பொய்யாகிய மனக்காடு வெந்து சாம்பராய் வீழும்படி அறிவாகிய தீக்கண்ணால் நோக்கி அடியேன் விழிப்புறுவது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பாழ்மனம் - பொய்யாகிய மனம். விழிப்பது - விழிப்புறுவது. (அ௫)

இனமாண்டு சேர்ந்திருந்தோ ரெல்லாருந் தான்மாண்டு
சினமாண்டு போகவருள் சேர்ந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) ஆணவமலத்தின் இனமாகிய எல்லா மலங்களும் அழிந்தொழிய அவ்வாணவ மலத்தைச்சார்ந்த குற்றங்கள் அனைத்தும் அழிய சின முதலியனவும் ஒழிந்து போகுமாறு அடியேன் அவற்றை விடுத்து நின்திருவருளிலே மூழ்கியிருப்பது எந்தக் காலமோ என்பதாம்.

(வி - ம்.) ஆணவமல நீக்கத்தில் திருவருட் பேறுண்டாம் என்க. (அ௬)

அமையா மனதமையு மானந்த வீடுகண்டங்
கிமையாம ஞேக்கி யிருப்பதினி யெக்காலம்.

(இ - ள்.) அமைதியுருத மனமும் அமைதியுறுதற்குக் காரணமான பேரின்ப முண்டாகின்ற விடுதலையை அடியேன் எய்தி அதன்கண் உணர்வு கெடாமல் மெய்ப்பொருளை யுணர்ந்து என்றும் இருப்பதுதான் என்று கொலோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அமையா மனம் அமைதலால் உண்டாகின்ற ஆனந்தம் என்க. இமைத்தல் - உணர்வழிதல். (அஎ)

கூண்டுவிடுஞ் சீவன்மேள்ளக் கொட்டரவி கொண்டாற்போல்
மாண்டுவிடு முன்னேநான் மாண்டிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) உடம்பைவிட்டுப் போகின்ற உயிரானது மெல்லக் கொட்டாவி கொள்ளுதல் போன்று வாயைத் திறந்தவாறே புறப்பட்டுப் போதற்கு முன்பே அடியேன் யான் என்னும் செருக்கற்றமைதல் எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) அடியேன் இம்மையிலேயே வீடுபேறு காண்டல் இயலுமோ? என்றவாறு. (௪அ)

ஊனிறைந்த காய முயிரிழந்து போகுமுன்னம்
நானிறந்து போகவினி நாள்வருவ தெக்காலம்.

(இ - ள்.) தசை நிரம்பிய இந்த வுடம்பானது உயிரையிழந்து அழிந்துபோதற்கு முன்பே, அடியேனது செருக்கு அழிந்து போகும்படி இனி எனக்கு ஒரு நல்லநாள் உண்டாவது எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) செருக்கற்றழி வீடுபேறு எய்தும் என்றவாறு. (அக)

கேட்டுவிடு மாந்தர் கேர்விதங்கள் பேசிவந்து
சுட்டுவிடு முன்னேஎன்னைச் சுட்டிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேனைப் போன்று சாகின்ற மனிதர் யானிறந்தழிச் செருக்கு மொழிகள் பேசி என்னுடம்பினைச் சுட்டு விடுவதற்கு முன்பே அடியேன் நான் என்னும் அகப்பற்றினை அறிவுத்தீயினாற் சுட்டழித்து இம்மையிலேயே வீடுபெற்றிருப்பது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) இருவகைப் பற்றையுந் துறந்தவர் இவ்வுடம்பிலேயே வீட்டுலகை எய்தியவர் என்பது கருத்து. (௯0)

தோலேணி வைத்தேறித் தூரநடந் தேய்க்காமல்
நூலேணி வைத்தேறி நோக்குவது மெக்காலம்.

(இ - ள்.) அடியேன் மெய்ப்பொருளைக் காண்பதற்குத் தோல் மூடிய இவ்வுடம்பையே கருவியாகக்கொண்டு தொலையிலுள்ள நாடுகளிலெல்லாம் திரிந்திளையாமல்; மெய்ந்நூல்களையே கருவியாகக் கொண்டு உயர்ந்து அம்மெய்ப்பொருளைக் காண்பதுதான் எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) மெய்ப்பொருளை ஞானத்தாலன்றி அறிய முடியாதென்றவாறு. (௯௧)

வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடு கண்மூடித் தழுவிநிற்ப தேக்காலம்.

(இ - ள்.) அடியேன் மெய்ப்பொருளை யடைதற்கு வாய்பேசா திருந்தும் கண்மூடியிருந்தும் யாதொன்றுந் தெரியாமையால் மயங்கி நில்லாமல்; புறக்கண்களை மூடி அகக்கண்ணால் அருளாகிய தாயைக் கண்டு அவளோடு சென்று அம்மெய்ப்பொருளைத் தழுவி நிற்பதுதான் எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பொறிகளிலே செல்லாமல் மனமடக்கித் திருவருளின் துணைகொண்டு உள்ளத்துள்ளேயே இறைவனைக் காணவேண்டும் என்றவாறு. (கஉ)

காசினியே லாநடந்து காலோய்ந்து போகாமல்
வாசிதனி லேறி வருவதினி யேக்காலம்.

(இ - ள்). அடியேன் இறைவனைக் காணும் பொருட்டு உலக முழுதும் ஓடிக் கால்களும் ஓய்ந்து போகாமல் உயிர்ப்பினை முறை செய்து என்வயப்படுத்தி அதன் வாயிலாய்க் காண்பது எப்போதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்). வாசி - உயிர்ப்பு. பிராணயாமத்தால் மனமடக்கி இறைவனைக் காணவேண்டும் என்பது கருத்து. (கங)

ஒலிபடருங் குண்டலியை யுன்னியுணர் வாலெழுப்பிச்
சுழிமுனையின் றாள் திறந்து தூண்டுவது மேக்காலம்.

(இ - ள்.) அடியேன் மூலாதாரத்திலுள்ள ஒலியுண்டாதற்குக் காரணமான குண்டலி சத்தியினை நினைத்து அதனை உணர்ச்சியினால் எழுப்பி அதனுதவியாலே சுழிமுனை நாடியின் தாளைத்திறந்து உணர்வைத் திருவருளிற் புகும்படி தூண்டிவிடுவது எந்தக்காலமோ என்பதாம்.

(வி - ம்.) குண்டலி - குண்டலி சத்தி. (கச)

இடைபிங் கலைநடுவே யியங்குஞ் சுழிமுனையில்
தடையறவே நின்று சலிப்பறுப்ப தேக்காலம்.

(இ - ள்.) இடைகலை பிங்கலை என்னும் இரண்டற்கும் நடுவே இயங்கும் சுழுமுனையின்கண் பற்றற்றிருந்து மனத்தின் அலைவினை ஒழிப்பது எப்பொழுதோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்) இடைகலை முதலியவற்றின் விளக்கத்தை விரிந்த நூல்களிற் காண்க. (கரு)

மூல நெருப்பைவிட்டு முட்டிநிலா மண்டபத்தில்
பாலை யிறக்கியுண்டு பசியொழிவ தேக்காலம்.

(இ - ள்) அடியேன் மூலாதாரத்திலுள்ள தீயை வளியாலெழச் செய்து திங்கள் மண்டலத்தில் தாக்குவித்து ஆண்டிருந்துருகி ஒழுகும் அமிழ்தையுண்டு பசி யொழிந்திருப்பது எப்பொழுதோ?

(வி - ம்.) மூலாதாரத்திலுள்ள நெருப்பு என்க. நிலாமண்டபம் - சந்திரமண்டலம். (௯௬)

ஆக வெளிக்குள்ளே யடங்காப் புரவிசெல்ல
ஏக வெளியி லிருப்பதினி யெக்காலம்.

(இ - ள்.) கட்டுக்கடங்காத உயிர்ப்பு உடம்பினுள்ளே செல்லும்படி செய்து ஒன்றேயான அறிவுவெளியில் அமர்ந்திருப்பது எப்பொழுதோ ?

(வி - ம்.) உயிர்ப்பினை உடம்பினுட் பரவவிட்டு அறிவுமாத்திரையாகவே இருக்க வேண்டும் என்றவாறு. (௯௭)

பஞ்சரித்துப் பேசும் பலகலைக்கெட் டாப்பொருளில்
சஞ்சரித்து வாழ்ந்து தவம்பெறுவ தெக்காலம்.

(இ - ள்.) பாரித்துப் பேசுகின்ற பல்வேறு நூல்களுக்கும் எட்டாத மெய்ப்பொருளின்கண் அடியேன் மெய்யுணர்வினாலே புகுந்து அதன் கண்ணே அதுவாகவே வாழ்தற்கியன்ற தவத்தைப் பெறுவது என்று கொலோ ? என்பதாம்.

(வி - ம்.) இறைவன் அறிவைக் கடந்தவன் மெய்யுணர்விற்குப் புலப்படுபவன் என்க. (௯௮)

மலமுஞ் சலமுமற்று மாயையற்று மானமற்று
நலமுங் குலமுமற்று நானிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் மலமூத்திரத்துயரற்று மாயையும் அற்று மானமும் அற்று இவ்வுலக நலமும் குலமும் அற்று அதுவாகவே இருப்பது எப்பொழுதோ ?

(வி - ம்.) யான் உலகியல் துறந்து பொருண் மாத்திரையாய் இருப்பது எப்பொழுதோ ? என்றவாறு. (௯௯)

ஓடாம லோடி யுலகைவலம் வந்துசுற்றித்
தேடாம லென்னிடமாய்த் தெரிசிப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் இறைவனைக் காண்டற்கு யாண்டும் ஓடாமலும் ஓடி உலகத்தையே வலமாகச் சுற்றித்தேடித் திரியாமலும் என்னுள்ளத்தின் உள்ளேயே கண்டுகொள்வது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவனை உள்ளத்துள்ளே காண்பதன்றிப் புறத்தே யாண்டும் காணவியலாதென்றவாறு. (௧00)

அஞ்ஞானம் விட்டே யருண்ஞானத் தெல்லைதொட்டு
மெய்ஞ்ஞான வீடுபெற்று வெளிப்படுவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் அறியாமையைப் போக்கி திருவடிஞானத்தின் எல்லையை அன்புணர்ச்சியாலே தொட்டு மெய்யுணர்வாலே வீடுபேறெய்திக் கட்டற்று வெளியாதல் எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) வெளிப்படுதல்—அறிவு மாத்திரையாய் நிற்றல். (௧0௧)

வெல்லுமட்டும் பார்த்து வெகுளியெலாம் விட்டகன்று
செல்லுமட்டும் சிந்தை செலுத்துவது மெக்காலம்.

(இ - ள்.) மனத்தைப் புலன்களிலே செல்லாமல் அடக்கி வெல்லு மளவும் முயன்று சினத்தையும்விட் டப்பாலாகி நினைவு திருவருளிலே போந்துணையும் செலுத்துதல் எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) வெல்லுதல் - மனத்தை வென்று புலனிற் போகாதடக்குதல். (௧0௨)

மேலாம் பதந்தேடி மெய்ப்பொருளை யுள்ளிருத்தி
நாலாம் பதந்தேடி நான் பெறுவ தெக்காலம்.

(இ - ள்.) எவற்றிற்கும் உயர்ந்த இடத்தை அறிந்து; மெய்ப்பொருளாகிய அஃதொன்றினையே நெஞ்சினிருத்தி நாலாவது பதமாகிய மெய்ப்பொருளோ டிரண்டறக் கலத்தலை அடியேன் எய்தல் எப்பொழுதோ?

(வி - ம்.) நாலாம் பதம் - பொருளொடு புணர்தல். (௧0௩)

எண்ணுத தூரமெல்லா மெண்ணி யெண்ணிப் பாராமல்
கண்ணுடிக் குள்ளொளிபோற் கண்டறிவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் எம்மையாளுடையானைக் காண்டற்கு எண்ணவியலாத தொலைவிலெல்லாம் சென்று எண்ணி எண்ணி ஆராய்ந்து சோர்வடையாமல் கண்ணுடிக்குள்ளே தோன்றும் விளக்கினைப் பார்ப்பது போன்று என்னெஞ்சினுள்ளேயே கண்டுணர்வது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) எண்ணுத தூரமெல்லாம் எண்ணுதல் - பொய்ச்சமயம் புக்கு வீணே ஆராய்ந்து பார்ப்பது. (௧0௪)

என்னை யறிந்துகொண்டே னெங்கோமா னுடிருக்கும்
தன்மை யறிந்து சமைந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) ஆவி திருவருளால் தன் உண்மையினை அறிந்துகொண்டு பெரும் பொருளாகிய சிவத்துடன் ஒன்ருய் வேருய் உடனுய் நிற்கும் முப்புணர்ப்பு முறையால் கலந்து பேரின்பப் பெரும் பேற்றினை எய்தி இரவா இன்பம் நுகர்வது எக்காலம்.

(வி - ம்.) எங்கோமான் - எம் தலைவன்; சிவன். தன்மை - இயல்பு. (க0ரு)

ஆருதா ரங்கடந்த வானந்தப் பேரோளியைப்
பேருகக் கண்டுநான் பெற்றிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் மூலாதாரந் தொடங்கி ஆறுதாரங்களுக்கும் அப்பாலிருக்கின்ற இன்பப்பிழம்பாகிய பேரொளியை யான் பெறும் பேருக என்னுள்ளே கண்டுகொண்டு பேரின்பப் பெருவாழ் வெய்தியிருப்பது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) ஆனந்தப் பேரொளி - சிவம். (க0சு)

ஆணவமா யத்தா லழிந்துடலம் போகாமுன்
காணுதலா லின்பமுற்றுக் கண்டறிவ தெக்காலம்.

(இ - ள்.) ஆணவமலமாகிய பொய்ம்மையாலே இவ்வுடலம் அழிந்து போகாமுன்பே என்னுள்ளே நின்னைக்கண்டின்ப முற்றிருப்ப தெப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மெய்யுணர்தற்கு ஆணவமலமே தடையாதலின் உடலழிதற்கும் அதுவே காரணம் என்க. (க0எ)

மும்மலமுஞ் சேர்ந்து முளைத்தெழுந்த காயமிதை
நிர்மலமாய்க் கண்டுவினை நீங்கிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்களின் காரியமாகத் தோன்றிய இவ்வுடம்பிலிருக்கும் பொழுதே உயிரை மலமற்றதாக்கி நின்னை என்னுள்ளே காணுமாற்றல் பிறப்பிற்குக் காரணமான இருவகை வினைகளுங் கழிந்து வீடு பெற்றிருப்ப தெப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) மும்மலம்-ஆணவம் மாயை கன்மம். நீங்கிருப்பது : விகாரம். (க0அ)

முன்னை வினைகெடவே மூன்றுவகைக் காட்சியினு
லுன்னை வெளிப்படுத்தி யுறுவதினி யெக்காலம்.

(இ - ள்.) அடியேனுடைய பழவினை யழிந் தொழியும்படி பொருட்காட்சி உயிர்க்காட்சி இறைக்காட்சி என்னும் மூன்றுவகைக் காட்சிகளாலும் உன்னை என்னுள்ளிருந்து வெளிப்படச் செய்து உன்னோடு கலப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மூன்றுவகைக் காட்சி - பொருள் உயிர் இறை என்னும் மூன்றனையும் உள்ளபடி யுணர்தல். (க0கூ)

கண்ணினொளி பாய்ந்ததுவுங் கருத்தறிந்து கொண்டதுவும்
விண்ணிலொளி கண்டதுவும் வெளிப்படுவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேனது கண்ஒளியானது புறத்தே பாய்வதற்கும் அதனை என்னெஞ்சம் அறிந்து கொள்வதற்கும் இவ்வாற்றால் யான் விண்ணின் கண் ஞாயிற்றொளியைக் காண்டற்கும் காரணம் எனக்குத் தெரிவது எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) கருவிகளைத் தொழிற்படுத்தி உயிர்க்கு நுகர்ச்சியுண்டாக்குவது இறைவனே என்னும் உண்மையை யுணர்வது எப்பொழுதோ? என்றவாறும். (கக0)

கனவுகண்டாற் போலெனக்குக் காட்டிமறைந் தேயிருக்கு
நினைவைப் பரவெளிமே னிறுத்துவது மேக்காலம்.

(இ - ள்.) பொய்ப் பொருள்களைக் கனவு போலக் காட்டிக் காட்டித் தான் மறைந்து போகின்ற எனது நினைவை எப்பொழுதும் மேலான அறிவு வெளியின் கண் நிறுத்தி வைப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) உலகப்பொருளில் ஒன்றுவிட்டு ஒன்று பற்றுகின்ற என் நெஞ்சத்தை மெய்ப்பொருள் ஒன்றிலேயே நிறுத்துவது எப்பொழுது? என்றவாறு. (ககக)

ஆரென்று கேட்டதுவும் அறிவுவந்து கண்டதுவும்
பாரென்று சொன்னதுவும் பகுத்தறிவ தேக்காலம்

(இ - ள்.) அடியேனுள்ளிருந்து நீ யார் என்று ஒருவினா எழுந்ததும் அவ்வினாவிற்கு மெய்யறிவு வந்து ஆராய்ந்து விடை கண்டு கொண்டதும் அவ்விடைக்குப் பொருளா யமைந்ததனையே நீ இடையறாது நோக்குக என்று அடியேனுக்குச் செவியறிவுறுத்ததுமாகிய இவற்றை யெல்லாம் பகுத்தறிந்து மெய்யுணர்ந்து கொள்வது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) உயிர்க்குள் நீ யார் என்று வினா வெழுப்புவதும் அறிவினாலதற்கு விடை காணச் செய்வதும் அதற்குப் பொருள் தானேயாயிருப்பதும் எல்லாம் இறைவன் செயலே என்பது கருத்து. நீ யார் என்பதற்கு அறிவு கண்ட விடை. அதுவே நான் என்பது; அதுவென்பதன் பொருள் இறைப்பொருள் என்பதாம் என்க. (ககஉ)

நினைக்கு நினைவுதோறு நிறைந்தபரி பூரணத்தை
முனைக்குமேற் கண்டுகண்ணில் முத்துதிர்ப்ப தேக்காலம்.

(இ - ள்.) அடியேன் நினைக்கின்ற நினைவிற் கெல்லாம் நினைவாகி யாண்டும் நிறைந்திருக்கின்ற முழுமுதற் பொருளைச் சுழுமுனையின் மேலே கண்டு இன்பக் கண்ணீரை முத்து முத்தாயுதிர்ப்பது எக்காலம்? என்பதாம்.

(வி - ம்.) இறைவனை யுணர்ந்தின்பக் கண்ணீர் பெருகுவதெப்போது? என்றவாறு. (ககங)

முப்பாழும் பாழாய் முதற்பாழுஞ் சூனியமாய்
அப்பாழும் பாழா யன்புசெய்வ தெக்காலம்.

(இ - ள்.) பொய்யாகிய மூன்றுவகை மாயா காரியங்களும் அழிய, இவற்றிற்கும் முதலாகிய ஆணவப் பொய்யும் பொய்யாகிய அந்தப் பொய்யும் இல்லையாய் விட அடியேன் நினக்கு அன்பு செய்வ தெப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) முப்பாழ் - ஆன்மதத்துவம் வித்தியா தத்துவம் சிவ தத்துவம் என்பன. முதற்பாழ் - அநாதியாகிய ஆணவம். (௧௧௪)

சீயென் றெழுந்து தெளிந்துநின்ற வான்பொருளை
நீயென்று கண்டு நிலைபெறுவ தெக்காலம்.

(இ - ள்.) மாயா காரியமாகிய உலகப் பொருளைச் சீ என் றிகழ்ந்து பற்றறுத்துழி யுண்டான தெளிவின்கண் எஞ்சிநின்ற உயரிய பொருளையே நீ என்றுணர்ந்து அடியேன் நின்னோடு நிலையுற்றிருப்பது எக்காலமோ? அறிகிலேன் காண் என்பதாம்.

(வி - ம்.) அசத்தை அசத்தென்று கண்டு கழிப்ப எஞ்சி நிற்பதே சத்தாகிய சிவம் என்பது கருத்து. (௧௧௫)

வவ்வெழுத்து மவ்வெழுத்தும் வாளாகுஞ் சிவ்வெழுத்தும்
யவ்வெழுத்தி னுள்ளே யடங்கிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) திருவைந் தெழுத்தினுள் - இறைவியைக் குறிக்கும் வகரமும், அழுக்கினைக் குறிக்கும் மகரமும், மலத்தை அரிதற்கு வாளாகின்ற இறைவனைக் குறிக்கின்ற சிகரமும்; உயிரைக் குறிக் கின்ற யகரத்துள்ளே அடங்கி உயிர் வீடுபெற்று நிற்ப தெப்போதோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இதன்கண் சிவமும் சத்தியும் உயிருள் நின்று மலத் தின் ஆற்றலைக் கெடுத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தவாறும். இவற்றியல்பை விரிந்த நூலுட் காண்க. (௧௧௬)

எழுத்தெல்லா மாண்டிருந்தே யேகமாய் நின்றதிலே
அழுத்தமாய்ச் சிந்தைவைத் தன்புசெய்வ தெக்காலம்.

(இ - ள்.) வைந்தவத்தின் கலக்கமாகிய நூலறிவை யெல்லாம் கடந்து தனித்து நின்ற இறைவன் திருவடி ஞானத்தின் கண்ணே மனமழுந்தி நிற்ப அவ்வடிகட்கு அன்பு செய்வ தெப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) எழுத்து - நூலறிவிற்கு ஆகுபெயர். ஏகமாய் நின்றது - மெய்ப்பொருள். (௧௧௭)

அருவா யுருவாகி யாதியந்த மாகிநின்ற
குருவாக வந்தெனையாட் கொண்டருள்வ தெக்காலம்.

(இ - ள்.) அருவப் பொருளாகவும் உருவப் பொருளாகவும் ஆகி எப்பொருட்கும் முதலும் முடிவும் ஆகி நிற்கின்ற இறைவனே அடியேற் கிரங்கி ஞானாசிரியராக எழுந்தருளி வந்து அடியேனை ஆட்கொண் டருள்வது எக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவனே ஆசிரிய வடிவத்தில் வந்துயிர்களை ஆட் கொண்டருள்வன் என்றவாறு. (கக அ)

நானேன் றறிந்தவனை நானறியாக் காலமெல்லாம்
தானேன்று நீயிருந்த தனையறிவ தெக்காலம்.

(இ - ள்.) நானே பொருளென்று கருதி அவ்விறைவனே பொருளாவதனை அடியேன் அறியாது இருந்த காலத்திலெல்லாம்; நீதானென்று இருந்ததனை - நீயே பொருளென்றுணர்த்தி என்னுள் அவன் கரந்திருந்த திருவருட்டிறத்தை அடியேன் அறிவது எக் காலமோ? அறிகின்றிலேன் என்பதாம்.

(வி - ம்.) செருக்குட னிருக்குங்கால் உயிர் தலைவனைத் தோற்றும் அதுகாறும் இறைவன் உயிருள் மறைந்திருப்பான். செருக் கற்றபொழுது அவனே தலைவனாதல் தெரியும் என்பது கருத்து. (ககக)

என்மயமாய்க் கண்டதெல்லா மெண்ணியெண்ணிப் பார்த்த பின்பு
தன்மயமாய்க் கொண்டதிலே சார்ந்துநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) கண்ட பொருளை யெல்லாம் யானே என்று நினைத்து நினைத்து ஆராய்ந்துணர்ந்த பின்பு எல்லாம் அவனே என்று மெய் யுணர்வு கொண்டு அவனருளிலே நானென்பதறவு மூழ்கி யிருப்பது எந்தக் காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) எல்லாம் நானே என்பது பேதைமை, எல்லாம் அவனே என்ற உணர்வதுவே மெய்யுணர்வு என்றவாறு. (கஉO)

ஒளியி லொளியா முருப்பிறந்த வாறதுபோல்
வெளியில் வெளியான விதமறிவ தெக்காலம்.

(இ - ள்.) அறிவு ஒளியினின்றும் பூதவொளியாகிய உருவந் தோன்றுமாறு போல; இறை அறிவு வெளியினின்றும் உயிர் அறிவு வெளி தோன்றிய வகையினை அறிந்துகோடல் எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) பேரறிவாகிய இறைவனிடத்தினின்றே பூதங்களும் உயிர்களுந் தோன்றின என்பது கருத்து. (கஉக)

ஒளியிட்ட மெய்ப்பொருளை யுள்வழியி லேயடைந்து
வெளியிட்டுச் சாத்திவைத்து வீடுறுவ தெக்காலம்.

(இ - ள்.) அறி வொளி தருகின்ற இறைவனை முன்னர் உள்ளத்திலே கண்டெய்திப் பின்னர் புறத்திலேயும் அதனுண்மை கண்டு, பொறிவாயிலைந்தனையும் அடைத்து வைத்து அடியேன் வீடுபேறெய்துதல் எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) உயிர்கள் மெய்ப்பொருளை உள்ளத்துள்ளே புணர்ந்த பின்பே அவன் யாண்டும் நிறைந்திருத்தலையும் உணர்தல் கூடும். இங்ஙனம் அகத்தும் புறத்துங்கண்டு புலனடக்கியவழி வீடு பேறுண்டாம் என்பது கருத்து. (கஉஉ)

காந்தம் வலித்திரும்பைக் கரந்திழுத்துக் கொண்டதுபோல்
பாய்ந்து பிடித்திழுத்துன் பதத்தில்வைப்ப தெக்காலம்.

(இ - ள்.) கல்லில் மறைந்துள்ள காந்த சத்தியானது இரும்பினை வலிந்திழுத்துக் கல்லிலே சேர்க்குமாறுபோலே உனது திருவருளானது என்பால் வலியப் பாய்ந்து என்னைப்பற்றி இழுத்துனது திருவடியில் வைப்பது எந்தக் காலமோ? என்பது.

(வி - ம்.) அவனருளாலே தான் அவனடியைச் சேர்தல் கூடும் என்றவாறு. (கஉந)

பித்தாயங் கொண்டு பிரணவத்தை யூடறுத்துச்
செத்தாரைப் போலே திரிவதினி யெக்காலம்.

(இ - ள்.) எம்பெருமானைச் சேர்வதற்கு ஞானப்பயித்தியங் கொண்டு நூல்களையும் கைவிட்டுக் கருவி கரணங்களின் குறும்பு நிகழாமல் நடைப்பிணம் போன்று இவ்வுலகிலே அடியேன் திரிவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) இறைவன்பாற் பித்தேறி நிற்பாரே அவனை அடைதல் கூடும் என்றவாறு. (கஉச)

ஒழிந்த கருத்தினைவைத் துள்ளேலும்பு வெள்ளேலும்பாய்க்
கழிந்தபிணம் போலிருந்து காண்பதினி யெக்காலம்.

(இ - ள்.) இவ்வுலகின்கண் பற்றில்லாமையாகிய ஒரு கருத்தையே நெஞ்சில் நிறுத்தி உள்ளே உள்ள எலும்பு வெள்ளெலும்பாகும்படி பசையற்றுப் போன பிணம் போன்று சிறிதும் பற்றின்றியிருந்து நின்னைக் காண்பது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) பற்றற்ற கண்ணே பிறப்பறும் என்பது கருத்து. (கஉரு)

ஆதிகபி லர்சொன்ன வாகமத்தின் சொற்படியே
சாதிவகை யில்லாமற் சஞ்சரிப்ப தெக்காலம்.

(இ - ள்.) பண்டு கபிலர் என்னும் புலவர் தமது அகவற்பாவிற் கூறியதற் கிணங்கச் சாதி வேறுபாடு கொள்ளாமல் அனைத்துயிரும் சமமாகக்கண்டு உலகில் திரிவது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) கபிலர் என்னும் புலவர் ஓர் அகவற்பாவில் சாதி வேற்றுமை கொள்வது அறியாமை என்று கூறியிருத்தலறிக. (கஉசு)

சூதுங் களவுந் தொடர்வினையுஞ் சுட்டிடக்கால்
ஊதுந் துருத்தியைப்போட் டுனையடைவ தெக்காலம்.

(இ - ள்.) வஞ்சமும் களவும் உடைய தீவினைகளை விட்டுக் காற்றூதுகின்ற துருத்தியை யொத்த இவ்வுடம்பையும் விட்டு உன் திருவடிகளை அடைவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) வஞ்சமும் களவும் நீங்கியவர்கள் இறைவனருள் பெறுவர் என்பது கருத்து. (கஉஎ)

ஆசைவலைப் பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசைமணித் தீபத்தி லொன்றிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் ஆசையாகிய வலைக்கயிற்றிலகப்பட்டு வீணே இறந்து படாமல் ஒலிக்கும் நின் பூசைமணி யோசையிலும் தீபத்திலும் உள்ளம் கலந்து உன்னை வணங்கி நிற்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) உன்னை மணி தீப முதலியவற்றால் வழிபாடு செய்தலில் மனம் ஒன்றி நிற்பது என்க. (கஉஅ)

கல்லாய் மரமாய்க் கயலாய்ப் பறவைகளாய்ப்
புல்லாய்ப் பிறந்தசென்மம் போதுமென்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் அநாதியாகக் கல்லாகவும் மரங்களாகவும் மீன்களாகவும் பறவைகளாகவும் புற்களாகவும் இன்னோரன்ன எண்ணிறந்த பிறப்புக்களிலே பிறந்து துன்புற்றது போதுமென்று உன் திருவருளை நாடுவது எந்தக் காலமோ? அறியேன் என்பதாம்.

(வி - ம்.) பிறவித்துன்பம் உணர்வார்க்கன்றித் திருவருளில் மனம் புகாதென்பது கருத்து. (கஉகூ)

தக்கும்வகைக் கோர்பொருளுஞ் சாராம லேநினைவில்
பக்குவமா நின்னருளைப் பார்த்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) நின்திருவருட்கு ஆளாகத்தகும் வகையிலே இவ்வுலகப் பொருள்களில் ஒரு பொருளையும் பற்றாமல் விடுத்துப் பரிபக்குவத்தோடு நின் திருவருள் வரவினை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருப்பது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) நின் அருட்கு ஆளாகத்தக்கும் வகையில் என்க. (கதுO)

தூறோ டிசைந்து சுழன்றுவருந் தத்துவத்தை
வேரோ டறுத்து விளங்குவது மெக்காலம்

(இ - ள்.) மலமாகிய தூற்றினோடு பொருந்திப் பிறப்பின்கண் சுழன்று வருகின்ற தத்துவங்களனைத்தையும் வேரோடறுத் தெறிந்து நின் அடியவனாக விளங்குவது தான் இனி எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) தூறு என்றது ஈண்டு ஆணவ மலத்தை. (கநக)

பாசநடு வேறிப் பாய்ந்தெழுந்த சித்திரத்தை
ஏச நடுமூலந் திருந்துவது மெக்காலம்.

(இ - ள்.) உயிரினூடே பாசங்கள் எறிப்பாய்வதனால் உண்டான வியத்தகுமோவியம் போன்ற இவ்வுடலின்கண் அமைந்த பிறப்பின் வித்தினை அவித்து மேலே பிறப்புறாமல் உலகத்தார் ஏசும்படி திருத்தி விடுவது எக்காலமோ? என்பதாம்.

(வி - ம்.) உயிரினூடே பாசம் எறியதனால் விசித்திரமான பிறப்புக்கள் உண்டாகின்றன. அவற்றிற்கு விதை அவா. அதனை அவிக்க வேண்டும் என்றவாறு. (கநஉ)

ஓரின்பங் காட்டு முயர்ஞான வீதிசென்று
பேரின்ப வீடுகண்டு பெற்றிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) துன்பங் கலவாத இன்பமான தனிப்பேரின்பத்துச் செலுத்துகின்ற உயர்வினையுடைய ஞான நெறியிலே நடந்து பேரின்பமான வீட்டினைக் கண்டு அதன்கண் நிலைபெற்றிருப்பது எக்காலமோ? என்பதாம்.

(வி - ம்.) துன்பக் கலப்பின்றி இடையறாமையின் வீட்டின் பத்தை ஓரின்பம் என்றார். ஞானநெறி மட்டுமே வீடு நல்கும் என்றவாறு. (கநந)

காரணமாய் வந்தென் கருத்தி னுரைத்ததெல்லாம்
பூரணமாய்க் கண்டு புகழ்ந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) தன் பேரருள் காரணமாக வலிய வந்து என்னெஞ்சி லிருந்து எனக்கு அறிவுறுத்தவற்றை யெல்லாம் அடியேன் முழுதுங் கண்டு அவன் திருவருட் பெருமையை அடியேன் புகழ்ந்தின்புற் றிருப்பது எந்தக் காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) இறைவனே எவ்வுயிர்க்கும் உள்ளத்திருந்துணர்த்து கின்றான் என்றவாறு. (கநச)

ஆயுங் கலைகளெல்லா மாராய்ந்து பார்த்ததற்பின்
நீயன்றி யொன்றுமில்லா நிசங்காண்ப தெக்காலம்.

(இ - ள்.) ஆராய்ந்துணர்தற்குரிய மெய்ந்நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்துணர்ந்தபின் அவற்றாலறியப்படும் எல்லாப் பொருளும் நீ

யல்லது வேறொன்ற மில்லை என்னும் வாய்மையை யான் அறிந்து கொள்வது எக்காலம்?

(வி - ம்.) பல்வேறு சமய நூல்களும் உன்னையே கூறுகின்றன என்பதாம். (கரு௫)

குறியாகக் கொண்டு குலமளித்த நாயகனைப்
பிரியாமற் சேர்ந்து பிறப்பறுப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேனை ஈடேற்றுவதே தனது குறிக்கோளாகக் கொண்டு வழி வழியாக வருகின்ற என் பிறப்பை யெல்லாம் பாது காத்து வருகின்ற பெருமானை அடியேனும் பிரிவின்றி அன்பினாலே சேர்ந்து அவன் குறிப்பிற் கிணங்கப் பிறப்பறுப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் திருவுளக் குறிப்பிற் கிணங்கி யொழுகுதல் நங்கடமை என்பத கருத்து. (கரு௬)

மத்தடுத்து நின்று மருளாடு வார்போலே
பித்தடுத்து நின்னருளைப் பெற்றிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) உன்மத்தங்கொண்டு மருண்டு ஆடுபவர் போன்று நின்னைக் கூடுதற்குப் பயித்தியங்கொண்டு அதற்குத் துணையாக நின் திருவருளைப் பெற்றிருத்தல் எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மத்து - மத்தம். உன்மத்தம். (கரு௭)

சாவாமல் சேத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ்
வேவாமல் வேந்திருக்க வேண்டுவது மெக்காலம்.

(இ - ள்.) நின் திருவருளோடு கூடுதலாலே சாவாமலும், கருவி கரணங்களோடு கூடாமலிருத்தலால் உலகியலில் செத்தும் இருந்து, உண்மையான ஆசிரியரின் திருவடி நீழலிலே இருத்தலால் உளங் குளிர்ந்தும், உலகப் பொருளைப் பற்றுமல் இருத்தலால் உளம் வெந்தபடம் போன்றும் இருத்தல் எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) உலகியலில் செத்தும் அருள் நாட்டத்திற் சாவாதும் அருள் நீழலிற் குளிர்ந்தும் மாயை வெப்பத்தில் வெம்பியும் இருப்பது என்க. (கரு௮)

என்னை யறியாம லிருந்தாட்டு சூத்திரநின்
றன்னை யறிந்து தவம்பெறுவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் அறியாதபடி என்னுள் கரந்திருந்து என்னை அறம்பாவ மென்னும் அருங்கயிற்ருல் ஆட்டுவிக்கின்ற உன்னை

என்னுள்ளே அறிந்து நோன்புமேற் கொள்வது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) சூத்திர - விளி. சூத்திரதாரியே என்றவாறு. (௧௩௯)

உள்ள மறியா தொளித்திருந்த நாயகனை
கள்ள மனந்தெளிந்து காண்பதினி யெக்காலம்.

(இ - ள்.) அடியேன் உள்ளத்தில் கள்ள மிருத்தலாலே அவ்வுள்ளம் உணராதபடி கரந்துறைந்த பெருமானை அக்கள்ள மகன்று உள்ளந் தெளியப்பெற்று எம்பெருமானைக் காண்பது இனி எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம். (௧௪0)

வாசித்துங் காணாமல் வாய்விட்டுப் பேசாமல்
பூசித்துந் தோன்றாப் பொருள்காண்ப தெக்காலம்.

(இ - ள்.) நூல்களை ஓது மாற்றாலும் காணப்படாமலும் வாய் பேசா திருத்தலாகிய நோன்பிருந்தழியும் வழிபாடு செய்தழியும் காணப்படாமலும் என்னுள் மறைந்திருக்கின்ற மெய்ப்பொருளை அடியேன் அகக்கண்ணாற் கண்டின்புறுதல் எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) நூலாலும் நோன்பாலும் வழிபாட்டாலும் பயனில்லை. அன்பினாலே ஆண்டவனைக் காணவேண்டும் என்பது கருத்து. (௧௪௧)

பன்னிரண்டு காற்புரவி பாய்ந்து செல்லத் தப்பாமல்
பன்னிரண் டங்குலிக்குள் பிணைப்பதினி யெக்காலம்.

(இ - ள்.) உயிர்ப்புக் காற்றாகிய குதிரை பன்னிரண்டங்குலம் வெளியே செல்லவும் தப்பாமல் பன்னிரண்டங்குலம் உள்ளே கொணர்ந்து கட்டுவதும் இனி எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) காற்புரவி - காற்றாகிய குதிரை. வாசியைப் பன்னிரண்டு அங்குலம் வெளியிலே செல்லவிட்டுப் பன்னிரண்டங்குலம் உள்ளே வாங்கிப் பூரித்து வைப்பது எக்காலமோ? என்றவாறு. (௧௪௨)

நாட்டுக்கா லிரண்டும்விட்டு நடுவுக்கா லூடேபோய்
ஆட்டுக்கா லிரண்டினுள்ளே யமர்ந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) முறைப்படி நாட்டுகின்ற காற்றிரண்டையும் முறைப்படி விட்டு இடையிலுள்ள காற்றினுள்ளே புகுந்து போய்க் கூத்தாடுந் திருவடிகளிரண்டன் நிழலிலே இனிதாக அமர்ந்திருப்பது எக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) நாட்டுதல் - முறைப்படுத்தி வைத்தல். இரண்டு கால் - இரேசகபூரகமிரண்டும். நடுவுக்கால் - கும்பகம் என்க. (௧௪௩)

பாற்பசுவைப் பூட்டிப் பதியில்வைத்துச் சீராட்டிக்
காற்பசுவை யோட்டியதிற் கட்டிவைப்ப தெக்காலம்.

(இ - ள்.) இறையின்பமாகிய பால் சுரக்கும் பசுவாகிய உயிரை மனவெளியிலே சென்று மேயாதபடி கட்டிச் சிவம் என்னும் தொழுவத்தில் வைத்துச் சிறப்புச் செய்து பேணிப் பிராணன் என்னும் காற்றாகிய பசுவை அத்தொழுவத்திலே கட்டிவைத்துப் பயன் பெறுவது எந்தக்காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) பால் - இறையின்பம். பசு - உயிர். பதி - இறை. இது பசுக்கள் தங்குமிடமாகிய தொழுவம் என்க. காற்பசு - பிராணன். (கசச)

பலவிடத்தே மனதைப் பாயவிட்டுப் பாராமல்
நிலவறையி னூடேபோய் நேர்படுவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் நெஞ்சத்தைப் பலவாகிய புலன்களிலே செலுத்தி அதனால் துன்புற்று வருந்தாமல் குகையிலிருந்து நேர்மையுறுவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) உள்ளத்தை ஒருமையுடன் செலுத்தி ஆங்கு மெய்ப் பொருளைக் காண்டல் வேண்டும் என்றவாறு. (கசரு)

காமக் கடல்கடந்து கரையேறிப் போவதற்கே
ஓமக் கனல்வளர்த்தி யுள்ளிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் அவாவாகிய கடலைக்கடந்து வீடாகிய கரையில் ஏறுதற்கு என்னுள் ஞான மென்னும் வேள்வித்தீயை வளர்த்து அதனூடிருந்து ஆற்றல் பெறுவது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) அவாக்கடலிற் கிடத்தலான் உண்டாகும் குளிராகிய துன்பந்தீர ஞானத்தீயை வளர்த்து அதனூடிருக்க வேண்டும் என்றவாறு. (கசசு)

உதயச் சுடர்மூன்று முள்வீட்டி லேகொளுத்தி
இதயத் திருநடன மினிக்காண்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் எனது அகவீடாகிய உள்ளத்தின்கண் உலகறிவு உயிரறிவு இறையறிவு என்னும் மூன்று விளக்குகளையும் ஏற்றி மெய்ப்பொருளையுணர்ந்து அம்மெய்ப்பொருள் என் நெஞ்சமாகிய வீட்டிலிருந்து இன்பக் கூத்தாடுவதைக் காண்பது இனி எந்தக் காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) மெய்யுணர்வார்க்கு உலகறிவு முதலிய மூன்றறிவும் இன்றியமையாமையின் அவற்றை மூன்று சுடர்கள் என்றார். (கசஎ)

வேதாந்த மெல்லாம் விட்டேறி யேகடந்து
நாதாந்த மூல நடுவிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் வேதாந்தத்தையும் விட்டு மேலே போய் இவற்றிற்கு முதலான நாதத்தையும் கடந்து அதற்கும் முதலாகிய சிவத்திஞேடு கலந்திருப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் வேதத்தையும் அதற்கு முதலான நாதத்தையும் கடந்திருப்பன் என்க. (௧௪௮)

பட்டமற்றுக் காற்றிற் பறந்தாடுஞ் சூத்திரம்போல்
விட்டு வெளியாக விசுவசித்த லெக்காலம்.

(இ - ள்.) தன்னைத்தான் செல்லுந் திசையில் வலித்திழுக்கின்ற பட்டமானது அற்றவீழ்ந்த பின்னர்த் தன்னைப் பற்று பொருளின்றிக் காற்றினூடே தன் போக்கில் அசைந்து ஆடுகின்ற வறிய கயிறு போன்று என்னுயிரை இவ்வுலகப்பற்று விட்டு விடுதலாலே நான் அறிவு வெளியிலே தனித்து மெய்ப்பொருட்கு அன்பு செலுத்துவது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பட்டம் - உலகிற்குவமை. சூத்திரம் - உயிர்க்குவமை. வறியகயிறு - வெறுங்கயிறு. (௧௪௯)

அட்டாங்க யோகமதற் கப்பாலுக் கப்பாலாய்க்
கிட்டாப் பொருளதனைக் கிட்டுவது மெக்காலம்.

(இ - ள்.) அடியேன் எட்டுறுப்புக்களையுடைய யோகத்திற்கும் அதற்கப்பாலான ஞானத்திற்குமே கிட்டுதற்கியலாத மெய்ப்பொருளை அணுகுவது எப்பொழுதோ ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அறிவுக்கும் அப்பாற்பட்ட மெய்ப்பொருளை அன்புணர்ச்சியாலே மட்டும் அணுகக் கூடும் என்பது கருத்து. (௧௫௦)

ஒட்டாம லொட்டிநிற்கு முடலுமுயி ரும்பிரிந்தே
எட்டாப் பழம்பதிக்கிங் கேணிவைப்ப தெக்காலம்.

(இ - ள்.) சடமும் சித்துமாய்த் தம்முள் மாறுபட்டிருத்தலால் ஒன்றஞேடு ஒன்று ஒட்டாதாகவும் இறைவன் ஆணையால் ஒட்டி நிற்கின்ற உடலையும் உயிரையும் பிரித்துணர்ந்து என் உயிரானது சடத்தை விட்டுத் தன்னினமாய் எட்டாதிருக்கின்ற பழைய மெய்ப்பொருளில் ஏறுதற்கு அன்பாகிய ஏணியை அதஞேடு சாத்துவது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) உடல் சடமும் உயிர் சித்துமாதலின் ஒட்டாமல் ஒட்டி நிற்றல் வேண்டிற்று. (௧௫௧)

பாசத்தை நீக்கிப் பசுவைப் பதியில்விட்டு
நேசத்தி னுள்ளே நினைந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) உலகப் பொருளின்கண் பற்று நீக்கி என் உயிரை இறைவனோடு ஒன்றுபடுத்தி அன்பினாலே அவனே யான் என இடையறுது நினைந்திருத்தல் எப்பொழுதோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பற்றறுத்து மெய்யுணர்ந்து அதுவேயானாய் அன்புற்றிருப்பது எப்பொழுதோ? என்றவாறு. (கஙஉ)

ஆசார நேய வனுட்டான முமறந்து
பேசாமெய்ஞ் ஞானநிலை பெற்றிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் இவ்வுலக வொழுக்கங்களையும் உலகப் பற்றையும் உலகத்தார் சடங்குகளையும் துவரமறந்து பேசாமையையுடைய மெய்யுணர்வு நிலையை எய்தி இன்புற்றிருப்பது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) ஆசாரம் - உலகவொழுக்கம். நேயம் - பற்று. (கஙங)

பல்லா யிரங்கோடிப் பகிரண்ட மும்படைப்பே
அல்லாது வேறிலையென் றறிவதினி யெக்காலம்.

(இ - ள்.) பலவாகிய ஆயிரமாயிரங் கோடியாக வானவெளியிலே உலவுகின்ற உலகங்கள் எல்லாம் நம் பெருமானாற் படைக்கப்பட்டனவே அல்லால் வேறில்லை என்று நம் பெருமான் பெருமையை உணர்ந்துவப்பது எந்தக்காலமோ? அறிகிலேன் என்பதாம். (கஙச)

ஆதிமுத லாகிநின்ற அரியென்ற வக்கரத்தை
ஓதியறிந் துள்ளே யுணர்வதினி யெக்காலமோ.

(இ - ள்.) எழுத்துக்களுக் கெல்லாம் முதற்காரணமாய் அவற்றிற்கெல்லாம் முதலிலும் நிற்கின்ற அரி என்கின்ற எழுத்தை ஓதி அதனியல்பெல்லாம் அறிந்து அதுவே பிரணவமாகும் என்று உள்ளத்தினுள்ளே அதனை நினைவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) அரி என்ற எழுத்துப் பிரணவம் ஆகும். அஃது இறைவனுக்கு ஓர் அறிகுறி யென்றுணர்ந்து அம்மந்திரத்தை ஓதிஉய்ய வேண்டும் என்றவாறு. (கஙரு)

சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு துயரறுப்ப தெக்காலம்.

(இ - ள்.) ஆகமங்களை ஞானத்தீயால் சுட்டழித்து நான்கு வேதங்களும் மாயை யென்றுணர்ந்து இவற்றிற் கெல்லாம் ஆதாரமாய்

நின்ற மெய்ப்பொருளை அனுபவித்து அறிந்து பிறவித்துயரத்தை அழிப்பது எந்தக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) சாத்திரம் - ஆகமம். சூத்திரம் - ஆதாரம். (கடுசு)

அல்லும் பகலுமென்ற னறிவையறி வாலறிந்து
சொல்லுமுறை மறந்து தூங்குவது மெக்காலம்.

(இ - ள்.) அடியேன் இரவும் பகலுமாகிய இருபொழுதும் இடையறுது என் சிற்றறிவினைப் பேரறிவாகிய இறையருளாலறிந்து அறிந்ததனைச் சொல்லும் முறைமையையும் மறந்து அறிதுயில் கொண்டிருப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) தனக்குரிய அறிவும் அப்பேரறிவு அறிவுறுத்த அறியும் அறிவே என்றுணர்ந்து அப்பேரறிவிற் கலந்திருப்பது எக்காலம் என்றவாறு. (கடுஎ)

இயங்குஞ் சராசரத்தி லேள்ளுமெண்ணே யும்போல
முயங்குமந்த வேத முடிவறிவ தேக்காலம்.

(இ - ள்.) உலகின்கண் இயங்கும் பொருளினூடும் நிலைத்திருக்கும் பொருளினூடும் எள்ளும் அதனூடு யாண்டும் கலந்திருக்கும் எண்ணெயும் போல யாண்டுந் தழுவியிருக்கின்ற வேதத்தின் முடிவிலுள்ள மெய்ப்பொருளை அடியேன் அறிந்து கோடல் எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) இறைவன் எல்லாப் பொருள்களினும் நிறைந்துளன் என்பது கருத்து. (கடுஅ)

ஊனுகி யூனி லுயிராகி யேவ்வுலகுந்
தானுகி நின்ற தனையறிவ தேக்காலம்.

(இ - ள்.) இறைவன் உடல்களாகவும் அவ்வுடலிலுறையும் உயிர்களாகவும் அவை வாழ்கின்ற எல்லா வுலகங்களாகவும் தானே உருக்கொண்டு நின்ற அவனது பேரருட்டிறத்தை அடியேன் அறிவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) இறைவன் உயிர்கட்கு உடல் முதலியனவாக இருக்கின்றுன் என்றவாறு. (கடுகூ)

என்னைவிட்டு நீங்காம லேன்னிடத்து நீயிருக்க
உன்னைவிட்டு நீங்கா தோருப்படுவ தேக்காலம்.

(இ - ள்.) எம்மையாளுடையாய்! நீ அடியேனை நொடிப்பொழுதும் பிரியாமல் என்னிடத்தே இருப்பாயாகவும், அறிவிலியாகிய யான் உன்னை விட்டுப் புறத்தே போகின்றேன்; அங்ஙனமின்றி யானும் உன்னைவிட்டு நீங்காதிருக்குமாறு மனம் ஒருப்படுதல் எக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மனம் புலன்களிற் செல்லாமல் அகத்துறையும் ஆண்டவன்பா லிருத்தற்கு ஒருமையுறுதல் வேண்டும் என்றவாறு. (கசு0)

இன்னதென்று சொல்லவொண்ணு வெல்லையற்ற
வான்பொருளைச்
சொன்னதென்று நானறிந்து சொல்வதினி யெக்காலம்.

(இ – ள்.) ஆசிரியன் இத்தன்மைத் தென்று சொல்லாற் சொல்ல வியலாத சிறந்த மெய்ப்பொருளையே குறிப்பாற் கூறியது என்று அடியேன் உணர்ந்து கொண்டு அப்பொருளை அடியேனும் சொல்வது இனி எந்தக்காலமோ? என்பதாம்.

(வி - ம்.) ஆசிரியர் மாணவர்க்குக் குறிப்பாலுணர்த்தலன்றிச் சொல்லாற் சொல்லிக் காட்டலியலா தென்றவாறு. (கசுக)

மனதையொரு வில்லாக்கி வான்பொறியை நாணுக்கி
எனதறிவை யம்பாக்கி யெய்வதினி யெக்காலம்.

(இ - ள்.) அடியேன் நெஞ்சத்தைப் பொறிவழிச் செலுத்தாமல் அதனை வில்லாக்கிக்கொண்டு என் ஐம்பொறிகளையும் அம்புகளாக்கி மெய்ப்பொருள் ஒன்றனை அவற்றிற் கிலக்காக்கி அதனூடுபுகும்படி செலுத்துதல் எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) ஐம்பொறிகளையும் இறைவன்பாற் செலுத்த வேண்டும் என்றவாறு. (கசுஉ)

என்னை யிறக்கவெய்தே யென்பதியை யீடழித்த
உன்னை வெளியில்வைத்தே யொளித்துநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) நெஞ்சமே! உயிராகிய யான் மறைந்தொழியும்படி புலன்களாகிய கணைகளால் என்னை எய்து தொலைத்து என் தலைவனுடைய பெருமையையும் யான் அறியாதபடி அழித்துவிட்ட உன்னை என்பானின்றும் துவரப் புறப்படுத்தி வைத்து அடியேன் என் தலைவனூடுபுக்கு உனக்குப் புலப்படாமல் அவன்றிருவருளில் மூழ்கியிருப்பது என்றுகொலோ? என்பதாம்.

(வி - ம்.) எய்தென்றமையால் அம்பென்பது பெற்றும். (கசுங)

கடத்துகின்ற தோணிதனைக் கழைகள்குத்தி விட்டாற்போல்
நடத்துகின்ற சித்திரத்தை நானறிவ தெக்காலம்.

(இ - ள்.) ஓடக்காரன் அதனுள்ளிருந்தே ஓடக்கோலாகிய மூங்கில்களால் உந்தி ஓடத்தை நடத்திப் போதல் போன்று இறைவன் என்னுள்ளிருந்தே அறம்பாவமாகிய கோல்களை யூன்றி முன்னேறிச் செல்லும்படி நடத்துகின்ற வியத்தகு நிகழ்ச்சியை அடியேன் உணர்ந்து கொள்வது எப்பொழுதோ? என்பதாம். (கசுச)

நின்றநிலை பேராம னினைவிலொன்று சாராமல்
சென்றநிலை முத்தியென்று சேர்ந்தறிவ தெக்காலம்.

(இ - ள்.) என்னுள்ளம் தன் சார்புணர்ந்து அதன்கண் நின்ற நிலையில் பிறழாமலும் நினைவின்கண் புலன்களில் யாதொன்றும் புகாமலும் திருவருளினூடே செல்லுகின்ற நிலையே வீடுபேறு என்று அங்குச்சென்று உணர்வது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) நின்றநிலை மனமடக்கி நின்றநிலை என்றவாறு. (கசுரு)

பொன்னும்வெள் ளியும்பூண்ட பொற்பதத்தை
யுள்ளமைத்து
மின்னு மொளிவெளியே விட்டடைப்ப தெக்காலம்.

(இ - ள்.) பொன்னம்பலத்தினும் வெள்ளியம்பலத்தினும் திருக்கூத்துக் கோலம் பூண்டு நின்ற எம்பெருமானுடைய அழகிய அடிகளை உள்ளத்தே இருத்தி ஒளி வீசுகின்ற ஞானவெளியிலே என்னைப் புகவிட்டு மீண்டும் ஈங்கு வாராதவாறு வழியை அடைத்து விடுவது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பொன் வெள்ளி என்பன ஆகுபெயர். (கசுசு)

கூட்டிலடை பட்டபுழு குளவியுருக் கொண்டதுபோல்
வீட்டிலடை பட்டருளை வேண்டுவது மெக்காலம்.

(இ - ள்.) வேட்டுவாளியால் மண் கூட்டில் அடைத்து வைத்த புழுவானது அவ்வேட்டுவாளி யுருவத்தை எய்தினாற் போன்று யானும் இறைவனாற் றிருவருளினூடடைத்து வைக்கப்பட்டு அவனுருவம் பெறுதற்கு அவ்வருளையே விரும்பி யிருப்பதுவு மெப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) குளவி - வேட்டுவாளி என்னும் ஒருவகைக் குளவி. (கசுஎ)

கடலி லோளித்திருந்த கனலெழுந்து வந்தாற்போல்
உடலி லோளித்தசிவ மோளிசெய்வ தேக்காலம்.

(இ - ள்.) கடலினூடு மறைந்திருக்கின்ற வடவைத் தீயானது அக்கடனீரைச் சுவறச் செய்து வெளியே எழுந்து வந்தாற்போல என் னுடம்பில் மறைந்திருக்கின்ற சிவம் என்னை விழுங்கித் தானேயாய் வெளிப்பட்டருளுதல் எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) உயிரறிவுக் குள்ளிருக்கும் இறையறிவு உயிர் அறிவைத் தானுக்கிக் கோடல் எப்பொழுதோ என்றவாறு. (கசுஅ)

அருணப் பிரகாச மண்டமேங்கும் போர்த்ததுபோல்
கருணைத் திருவடியிற் கலந்துநிற்ப தேக்காலம்.

(இ - ள்.) ஞாயிற்றின் செவ்வொளி உலக முழுதும் கவிழ்ந்து கொண்டாற்போன்று அடியேன் இறைவன் அருளொளியால் விழுங்கப் பட்டு அவன் திருவடியிற் கலந்திருப்பது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம். (கசுசு)

பொன்னிற் பலவிதமாய்ப் பூடணமுண் டானதுபோல்
உன்னிற் பிறந்ததுன்னி லோடுங்குவது மேக்காலம்.

(இ - ள்.) பொற்கொல்லனுலே பொன்னினின்றும் பலவகை அணிகலன்கள் உண்டாகி மீண்டும் பொன்னுதல் போன்று-உன்னுலே மாயையினின்றும் காரியப்பட்ட பல்வேறு தத்துவங்களும் மீண்டும் மாயையாகி உன்னிடத்தே மறைவ தெப்பொழுதோ?

(வி - ம்.) இங்ஙனம் கூறுக்காற் சுத்தசைவ சித்தாந்தத்திற் கேலாமை யுணர்க. (கஎ0)

நாயிற் கடைப்பிறப்பாம் நான்பிறந்த துன்பமற
வேயிற் கனலோளிபோல் விளங்குவது மேக்காலம்.

(இ - ள்.) ஆண்டானிடத்தில் நன்றி யறிவின்மையாலே நாயினும் கீழான அடியேன்பால் பிறந்த துன்பங்களற்றுப் போம்படி மூங்கிலி னின்றும் தோன்றிய தீயொளி போன்று இறையொளி என்பாற் பிறப்பது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்) மூங்கிலினின்றுந் தீத்தோன்றுதல் இயற்கை. (கஎக)

சூரிய காந்திவெளி சூழ்ந்துபஞ்சைச் சுட்டதுபோல்
ஆரியன் ருேற்றத் தருள்பெறுவ தேக்காலம்.

(இ - ள்.) சூரியகாந்தக் கல்லின்கண் கனலொளி புறப்பட்டுப் பஞ்சைச் சுட்டழிப்பது போன்று நல்லாசான் எதிர்வந்து தோன்று

கிற்றலால் அவனது திருவருளாலே அடியேன் வினைகள் அழிவது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) ஆரியன் - நல்லாசிரியன். (கஎஉ)

இரும்பிற் கனன்மூட்டி யிவ்வுருபோ யவ்வுருவாய்க்
கரும்பிற் சுவைரசத்தைக் கண்டறிவ தெக்காலம்.

(இ - ள்.) என் உயிராகிய இரும்பின்கண் திருவருளாகிய தீயை மூட்டுதலாலே உயிர்த்தன்மை நீங்கி அடியேன் இறைத்தன்மை யெய்தப் பெற்று அவ்விறைவனாகிய முக்கட் கரும்பின் சுவையை அடியேன் நுகர்ந்துணர்வது எப்பொழுதோ ? என்பதாம்.

(வி - ம்.) இரும்பு - உயிர்க்குவமை. கரும்பு-இறைவன். (கஎங)

கருக்கொண்ட முட்டைதனைக் கடலாமை தானினைக்க
உருக்கொண்ட வாறதுபோ லுனையடைவ தெக்காலம்.

(இ - ள்.) கருக்கொண்ட கடலாமையானது கரையின்கண் இட்ட தன் முட்டையை மீண்டுங் கடலுட்சென்று நினைத்திருத்தலாலே அம்முட்டையானது பார்ப்பாக உருவாதல் போன்று ஆசிரியனாய் வருகின்ற நினது திருவுளத்து என்னை ஆட்கொள்ளக் கருது மாத்திரையானே அடியேன் நின்னுருவத்தை எய்தலாவது எந்தக் காலமோ ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) யாமை முட்டையானது தாயின் நினைவால் உருக்கொள்ளுதல் போன்று இறைவன் நினைவாலே உயிர் சிவமாகும் என்றவாறு. (கஎச)

வீடுவிட்டுப் பாய்ந்து வெளியில் வருவார்போல்
கூடுவிட்டுப் பாயும் குறிப்பறிவ தெக்காலம்.

(இ - ள்.) தாம் குடியிருக்கின்ற வீட்டிலிருந்து வெளியிலே எளிதாக விரைந்தோடி வருகின்ற மாந்தர் போன்று அடியேன் இந்த வுடம்பை விட்டு விரைந்து நின் அருள் வெளியிலே புகுகின்ற குறிப்பை அறிந்து கோடல் எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) கூடு - உடம்பு. வெளி - அருள்வெளி. (கஎரு)

கடைந்தவெண்ணெய் மோரிற் கலவாத வாறதுபோல்
உடைந்து தமியே னுனைக்காண்ப தெக்காலம்.

(இ - ள்.) மத்தாற் கடைந்தெடுத்த வெண்ணெயானது மீண்டும் மோரிற் கலந்திடாதவாறுபோல உன் திருவருளாலே மெய்

புணர்த்தப்பட்ட யான் உலகியலில் ஒட்டாதுடைந்து மீண்டும் அதனைப் பற்றுமல் எளியேன் உன்னைக் காண்பது எந்தக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) கடைந்த வெண்ணெய் ஞானத்தால் மெய்யுணர்த்தப் பட்ட உயிர்க்கும் மோர், உலகிற்கும் உவமை. (கஎசு)

இருளை யொளிவிழுங்கி யேகவுருக் கொண்டாற்போல்
அருளை விழுங்குமிருள் அகன்றுநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) ஒளியானது தோன்றி இருளை யழித்து யாண்டும் தானேயாகி நிற்பது போன்று, அருளைத் தன்னுள் மறைத்து எங்குந் தானுகவே நிற்கின்ற ஆணவமலம் துவரநீங்கி அடியேன் மெய்யுணர்ந்து நிற்பது எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) இது மாறுபடு முவமைத் தோற்றம். (கஎஎ)

மின்னெழுந்து மின்னிஞேடு விண்ணி லுறைந்தாற்போல்
என்னுணின்ற தென்னுள்ளே யானறிவ தெக்காலம்.

(இ - ள்.) வானத்தின்கண் சிறுமின்னல் தோன்றிப் பெரிய மின்ஞெளியோடு இரண்டறக் கலந்துறைதல் போன்று எனது சிற்றறி வினுள்ளே வீற்றிருந்த பேரறிவினை யான் உணர்ந்து அதனேடு கலப்பது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மின் இரண்டனுள் ஒன்று உயிரின் சிற்றறிவிற்கும் மற்றென்று இறைவன் பேரறிவினுக்கும் உவமைகள். (கஎஅ)

கண்ட புனற்குடத்திற் கதிரோளிகள் பாய்ந்தாற்போல்
கொண்ட சொரூபமதைக் கூர்ந்தறிவ தெக்காலம்.

(இ - ள்.) எதிர்ப்பட்ட நீர்க்குடங்கள் தோறும் ஞாயிற்றின் ஒளிகள் புகுந்து ஒளிருமாறு போலே உயிர்களினூடெல்லாம் இறைவன் அருள் புகுந்திருப்பதனை அடியேன் நுனித்துணர்வது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) நீர்க்குடந்தோறும் ஞாயிற்றுருவம் புக்கிருந்தாற் போன்று எல்லாவுயிர்களினூடும் இறையொளி புக்கிருக்கின்ற தென்றவாறு. (கஎகூ)

பூணுகின்ற பொன்னணிந்தாற் பொன்சுமக்கு மோவுடலைக்
காணுகின்ற வென்கருத்திற் கண்டறிவ தெக்காலம்.

(இ - ள்.) அணிகின்ற பொன்னணியை ஒருவன் அணிந்தால் அவ்வணி அவனுடலைத் தாங்குமோ? அவனுடலே அவ்வணிகலனைத்

தாங்குதல் வேண்டும். அங்ஙனமே யான் காணுகின்ற என் கருத்தே யானெடுத்திருக்கும் மாயா காரியங்களைத் தாங்குதல் வேண்டும், அவை என்னைத் தாங்கமாட்டா வென்று என் கருத்தினுள்ளே கண்டறிவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) மாயை பற்றுக்கோடாகாது இறைவனே பற்றுக் கோடாம் என்றவாறு. (கஅ௦)

செம்பிற் களிம்புபோற் சிவத்தை விழுங்கிமிக
வெம்பிநின்ற மும்மலத்தை வேறுசெய்வ தெக்காலம்.

(இ - ள்.) செம்பின்கண் களிம்பு தோன்றினாற்போன்று உயிரின் கட்டோன்றி அதனுள்ளிருக்கின்ற சிவம் அதற்குத் தெரியாதவாறு மறைத்து மிகவும் உயிர் துன்புற்று நிற்றற்குக் காரணமான ஆணவ முதலிய மூன்று மலங்களையும் அடியேனிடத்தினின்றும் நீக்கிவிடுவது எந்தக்காலமோ ? அறிகிலேன்.

(வி - ம்.) உயிரின்கட் செம்பிற் களிம்பு போலத் தோன்றிச் சிவத்தை விழுங்கிய மலம் என்க. (கஅக)

ஆவியுங் காயமும்போ லாத்துமத்து நின்றதனைப்
பாவி யறிந்துமனம் பற்றிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) உடலுக்குயிர் போன்று உயிர்க்கு உயிராகி நின்ற சிவத்தை, தீவினையாளனாகிய அடியேன் அறிந்து என் நெஞ்சத்தே அதனைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு நிற்பது எந்தக் காலமோ ? அறிகிலேன் என்க.

(வி - ம்.) இறைவன் உயிர்க்குயிரா யிருப்பவன் என்க. (கஅஉ)

ஊமை கனாக்கண் டுரைக்கறியா வின்பமதை
நாமறிந்து கொள்வதற்கு நாள்வருவ தெக்காலம்.

(இ- ள்.) ஊமையானவன் கண்ட கனவினைப் பிறர்க்குக் கூற வியலாமை போன்று அநுபவித்தவர் தாமும் இவ்வண்ண மிருந்த தென்று சொல்லவியலாத சிவப்பேரின்பத்தை யாம் கண்டுணர்தற் குரிய நன்னாள் வந்தெய்துவ தெப்பொழுதோ ? என்பதாம்.

(வி - ம்.) இறையின்பம் சொல்லொணாத் தன்மையது என்றவாறு. (கஅங)

சாகாச் சிவனடியைத் தப்பாதா ரெப்போதும்
போகா வுடலகன்று போவரென்ப தெக்காலம்.

(இ - ள்.) இறப்பற்ற சிவனுடைய திருவடிகளை ஒருபொழுதும் மறவாத மெய்யன்பர் ஒழியாத பிறப்பற்ற வீட்டுலகிற் புகுவர் என்று நூல் கூறுவது என்பால் மெய்யாவ தெப்பொழுதோ, அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் திருவடிகளை மறவாதவர் பிறவிக்கடலைக் கடப்பர் என்றவாறு. (கஅச

நிட்டை தனைவிட்டு நினைவறிவு தப்பவிட்டு
வெட்ட வெளியில் விரவிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) நிட்டை கூடுகின்றேம் என்னும் எண்ணமுமின்றி ஒன்றனை நினைத்தலும் சுட்டியறிதலுமின்றி இயல்பாகவே அறிவு வெளியிலே கலந்து விடுவ தெப்போதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) நிட்டை கூடவேண்டும் என்பதும் தன்முனைப் பாதலின் அதனையும் விடல் வேண்டிற்று. (கஅரு)

வெட்ட வெளிதன்னில் விளைந்தவெம் பாசத்தைத்
திட்ட முடன்கண்டு தெளிவதினி யெக்காலம்.

(இ - ள்.) தூய அறிவுவெளியிலிருந்து கொண்டு அநாதியாக உயிரின்கண் தோன்றிய அழுக்கைத் திண்ணமாகக் கண்டு தெளிவுறுவது எப்பொழுதோ ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மெய்யுணர்வார்க் கன்றிப் பாசத்தினியல்பும் அறிய வொண்ணா தென்றவாறு. (கஅசு)

எங்கும் பரவடிவா யென்வடிவு நின்வடிவாய்க்
கங்குல்பக லின்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் காண்கின்ற வடிவங்கள் அனைத்துமே இறைவன் வடிவாகவும் அவ்வாறு காணுகின்ற அடியேன் வடிவந் தானும் அவனுடைய வடிவன்றிப் பிறிதின்றென்னும் இரவு பகலில் லாமல் உன்னையே அடியேன் காண்பது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) சகலகேவல நிலைகளினீங்கிச் சுத்த நிலையிலிருந்து எல்லாம் இறைவடிவங்களாகவே காண்டல் வேண்டும் என்றவாறு (கஅஎ)

உண்டதுவு மாதருடன் கூடிச்சேர்ந் தின்பங்
கண்டதுவு நீயெனவே கண்டுகோள்வ தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் உலகத்தில் உணவின்கட் கண்ட இன்பமும் பெண்டிரைக் கூடிப்பெற்ற இன்பமும் இன்னோரன்ன இன்பங்கள்

எல்லாம் நீயேயன்றி வேறில்லை என்று அறிந்து கொள்வ தெப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) உயிர்கள் புலன்களிற் சென்று நுகரும் இன்பமாக இருப்பவனும் இறைவனே என்பதாம். (கஅஅ)

ஈமேன்று கேட்டதுவு மேன்னுள்ளே நின்றதுவும்
ஓமேன்று சோன்னதுவு முற்றறிவ தேக்காலம்.

(இ - ள்.) ஈம் என்ற ஒலியானது என்னுள்ளத்திருந்தே ஓர் ஒலி உண்டாகி அஃது என் உட்செவியிலே ஒலித்துக் கொண்டிருந்த தனையும் பின்னர் ஆசான் வந்து அருளாலே தோன்றி ஓம் என்று பிரணவ மந்திரத்தை எனக்கு அறிவுறுத்தியதனையும் அடியேன் கூர்ந்துணர்ந்து அவற்றிற்கெல்லாம் பொருள் நீயே என்று அறிவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) பிரணவம் இயற்கையில் ஈம் என்றும் செயற்கையில் ஓம் என்றும் ஒலிக்கும் என்றவாறு. (கஅகூ)

சத்தம் பிறந்தவிடந் தன்மயமாய் நின்றவிடம்
சித்தம் பிறந்தவிடந் தேர்ந்தறிவ தேக்காலம்.

(இ- ள்.) ஈம், ஓம் என ஒலிக்கும் பிரணவ வொலியின் பிறப் பிடத்தையும் அவ்விடமாகிய பரம்பொருள் தானே தானாக நின்ற இடத்தையும் இவற்றை யெல்லாம் உணருகின்ற அடியேன் நெஞ்சம் பிறந்த இடத்தையும் அடியேன் ஆராய்ந்தறிந்து கொள்வது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) எல்லாம் சிவமயம் என்றவாறு. (ககூ0)

போக்கும் வரவும் புறம்புள்ளு மாகிநின்றுந்
தாக்கு மோருபோருளைச் சந்திப்ப தேக்காலம்.

(இ - ள்.) போதலும் வருதலும் புறமும் உள்ளும் ஒன்றற் கொன்று முரண்பட்ட செயல்களாகவும் இடங்களாகவும் ஆகி உயிர் களைத் தன் அருளாலே உந்துகின்ற ஒரே பொருளாகிய மெய்ப் பொருளை அடியேன் என்னுள்ளே காண்பது எப்பொழுதோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவனே தம்முள் முரண்பட்ட பொருள்களாகி நின்று உலகை இயக்குகின்றான் என்றவாறு. இம்முரண்பாடின்றேல் இயக்கமும் இல்லையாம் என்பது கருத்து. (ககூக)

நானெனவு நீயெனவு நாமிரண்டு மற்றேன்றும்
நீயெனவே சிந்தைதனி னேர்படுவ தெக்காலம்.

(இ - ள்.) நான் எனவும் நீயெனவும் தனித்தனியாகவும் யாமிருவரும் என்ற ஒருங்கிணைந்தும் இவ்வேற்றுமை ஒற்றுமைகளைக் கடந்து நிற்கின்ற பரம்பொருள் என்பதுவும் ஆகி எல்லாம் நீயே யாவாய் என்னும் மெய்ம்மை என்னெஞ்சிலே நன்கு பொருந்துவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடத்துள்ளனவும் ஒருமைப் பொருளும் பன்மைப் பொருளும் இவ் வேற்றுமை கடந்து நிற்கும் பரம்பொருள் என்பதுவும் ஆகிய அனைத்தும் சிவமே என்றவாறு. (கக௨)

அறிவையறி வாலறிந்தே யறியு மறிவதனில்
பிறிவுபட நில்லாமற் பிடிப்பதினி யெக்காலம்.

(இ - ள்.) என் சிற்றறிவினை நின் திருவருளாகிய பேரறிவு அறிவிக்க அறிந்து அவ்வாறு அறிகின்ற என் அறிவு அத்திருவருளிற் பிரிந்து தனித்து நில்லாமல் அவ்வருளோடு ஒன்றுபடக் காண்பது எக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அருள் அறிவிக்க அறிவதன்றி உயிர்கள் தமக்கென அறிவு யாதுமில்லை என்பது கருத்து. (கக௩)

நீரும் புவனமெல்லா நிறைந்தசெந் தூரமதாய்
ஆடுந் திருக்கூத்தை யறிவதினி யெக்காலம்.

(இ - ள்.) நெடிய உலகமெல்லாம் செந்தூளாய்ப் போம்படி நீ ஆடாநின்ற நினது ஊழிக்கூத்தினை அடியேன் அறிவது எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) இறைவன் திருக்கூத்தாலே உலகங்களைப் படைத்து நிறுத்தி அழித்தும் விடுவன் என்றவாறு. (கக௪)

தித்தியென்ற கூத்துத் திருச்சிலம்பி னோசைகளும்
பத்தியுட னேகேட்டுப் பணிவதினி யெக்காலம்.

(இ - ள்.) தித்தித்தா யென்னும் ஓசையுண்டாக நீ இயற்றுகின்ற இன்பக் கூத்தின்கண் எழுகின்ற நின் அழகிய சிலம்பின் ஒலிகளை அடியேன் அன்போடு கேட்டு அகமகிழ்ந்து அத்திருவடிகளை வணங்குவது எந்தக்காலமோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறை திருவிளையாட்டை அகக்கண்ணாற் கண்டு வணங்குக என்றவாறு. (கக௫)

நயனத் திடைவெளிபோய் நண்ணும் பரவெளியிற்
சயனித் திருந்து தலைப்படுவ தெக்காலம்.

(இ - ள்.) இரு கண்களுக்கு இடையிலே புறப்பட்டுப்போய் ஆங்கு எதிர்ப்படுகின்ற அறிவு வெளியிலே அறிதுயில் கொண்டு இறையின்ப மெய்துவது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) கட்புருவத்திடையிலே இறைவன் களிநடம்புரிவன் என்பது யோக நூலோர் துணிபு. (கககூ)

அருவி மலைநடுவே யாயிரக்கால் மண்டபத்தில்
திருவிளை யாடற்கண்டு தெரிசிப்ப தெக்காலம்.

(இ - ள்.) அமுதவருவி பாய்கின்ற மலையின் இடையேயுள்ள ஆயிரக்கால் மண்டபமாகிய உள்ளத்துள் நீ ஆடுகின்ற திருவிளையாடல்களை யெல்லாம் அடியேன் அகவிழியாற் காண்பது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) அருவிமலை சந்திரமண்டலம். ஆயிரக்கால் மண்டபம் - ஆயிரமிதழ்களையுடைய நெஞ்சத்தாமரை. (கஉஎ)

மீனிரம்ப வுண்டுகக்கி விக்கிநின்ற கோக்கதுபோல்
தேனிரம்ப வுண்டு தெவிட்டிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) நீர் நிலையிலே மீன்களை நிரம்பத் தின்று கக்கியும் தொண்டை விக்கியும் நிற்கின்ற கொக்குப்போல நின்னருளாகிய தேனை நிரம்பப் பருகித் தெவிட்டியிருப்பது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) நின் திருவருளாகிய தேன் என்க. (கஉஅ)

பொல்லாத காயமதைப் போட்டு விடுக்குமுன்னே
கல்லாவின் பால்கறப்பக் கற்பதினி யெக்காலம்.

(இ - ள்.) தீங்குடைய வுடம்பை நிலத்திலே போகட்டு அதனைக் கைவிட்டுப் போதற்கு முன்னரே, அழிவில்லாத உயிராகிய பசுவின் கண் மெய்யுணர்வாகிய பாலைக் கறக்கக் கற்றுக்கொள்வது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) உடலார் அழியின் திடம்பட மெய்ஞ்ஞானம் சேராவாகலின் இவ்வாறு கூறினர். கல்லா என்றது - உயிரை. (கஉகூ)

வெட்டவெளிக் குள்ளே விளங்குஞ் சதாசிவத்தைக்
கிட்டவரத் தேடிக் கிருபைசெய்வ தெக்காலம்.

(இ - ள்.) பற்றற்ற அறிவுவெளியினூடே விளங்கித் தோன்றுகின்ற சதாசிவமானது என்னருகே வருமாறு யான் முயல அப்பெருமான் திருவருள் புரிவது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அப்பெருமான் கிருபை செய்வ தென்க. (உ00)

பேரறிவி லேமனதைப் பேராம லேயிருத்தி
ஓரறிவி லேன்னுளு மூன்றிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) எம்பெருமானுடைய திருவருளிலே நெஞ்சத்தை அசையாமல் நிறுத்தி மெய்யறி வொன்றனிலேயே எப்பொழுதும் அழுந்தியிருப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பேரறிவு - திருவருள். ஓரறிவு மெய்யறிவு. (உ0க)

அத்துவிதம் போலுமேன்ற ஞத்துமத்தி னுள்ளிருந்து
முத்திதர நின்ற முறையறிவ தெக்காலம்.

(இ - ள்.) எம்மையாளுடையான் என் உயிரினுள் இரண்டறக் கலந்து என்னுள்ளிருந்தே எனக்கு வீடு நல்குதற்கு இடையறுதிருந்த அவன் திருவருட் செயலின் முறைமையை அடியேன் அறிவது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் உயிர்களினூடிருந்தே அவற்றை உய்விக்கின்றனன் என்றவாறு. (உ0உ)

நானின்ற பாசமதி ஞனின்று மாளாமல்
நீநின்ற கோலமதி னிறைவிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் அநாதியாக நிற்கின்ற ஆணவமல முதலிய அழுக்கினூடேயே கிடந்து அழிந்துவிடா வண்ணம் நீ என்னுள்ளே பாசங்களிற் சிறிதும் பற்றற்று நிற்கின்ற நின்னுள்ளே நிறைந்திருப்பது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பாசத்தோடிருந்தும் இறைவன் அவற்றைப் பற்றுதிருப்பது போன்று அடியேனும் அவற்றைப் பற்றுது விடுத்து இறைவனைப்பற்றி யிருத்தல் வேண்டும் என்றவாறு. (உ0ங)

எள்ளுங் கரும்பு மேழுமலருங் காயமும்போல்
உள்ளும் புறம்புநின்ற துற்றறிவ தெக்காலம்.

(இ - ள்.) எள்ளில் எண்ணெயும் கரும்பின்கட் சாறும் தோன்றுகின்ற மலரின்கண் மணமும் உடலின்கண் உயிரும் போல் அகமும் புறமும் இடையீடின்றி நீ உயிர்களிடத்தே விரவிநின்ற நின்னியல்பினை அடியேன் கூர்ந்துணருவது எந்தக் காலம்? என்பதாம்.

(வி - ம்.) இறைவன் எள்ளில் எண்ணெய் முதலியன போன்று உயிர்களிடத்தே விரவி யிருக்கின்றான் என்றவாறு. (௨0௪)

அன்னம் புனலை வகுத்தமிர்தை யுண்டதுபோல்
என்னை வகுத்துன்னை யினிக்காண்ப தெக்காலம்.

(இ - ள்.) அன்னப் பறவையானது நீரும் பாலும் ஒருகலத்துள் விரவியிருக்கும்பொழுது நீரை விடுத்துப் பாலை மட்டும் பருகுவது போன்று அடியேன்பால் விரவி யிருக்கின்ற பாசமும் பதியுமாகிய இரண்டனுள் பாசத்தை விடுத்துப் பதியாகிய உன்னைத் தனியே கண்டு உன்னுடன் கூடுவது எப்பொழுதோ? அறிகிலேன்.

(வி - ம்.) பொய்ப்பொருளையும் மெய்ப்பொருளையும் ஆராய்ந்தறிந்து பொய்ப்பொருளைப் பற்றாமல் மெய்ப்பொருளையே பற்றி நிற்றல் வேண்டும் என்றவாறு. (௨0௫)

அந்தரத்தி னீர்பூத் தலர்ந்தெழுந்த தாமரைபோல்
சிந்தைவைத்துக் கண்டு தெரிசிப்ப தெக்காலம்.

(இ - ள்.) சேற்றில் முளைத்து நீரினூடு வளர்ந்தாலும் தாமரையானது அவற்றினின்றும் வெளிப்பட்டு வானவெளியிலே கதிரொளியில் மலர்ந்தாற்போன்று அடியேன் நெஞ்சம் ஆணவ மலத்தினின்றும் முளைவிட்டு மாயையாகிய நீரினூடு வளர்ந்து நின்அருள் வெளியிலே வந்து மலர்ந்து திகழ்வது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இதன்கண் ஆணவமலம் சேற்றிற்கும் மாயை நீரிற்கும் அந்தரம் திருவருளுக்கும் நெஞ்சத்திற்கு மலரும் உவமைகள். (௨0௬)

பிறப்பு மிறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பு நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் பிறப்பும் இறப்பும் அற்றுப் பேசுதலும் உயிர்த்தலும் அற்று நினைத்தலும் மறத்தலும் அற்றுத் தன்முனைப்பின்றி நின்னருளினூடு மூழ்கியிருப்பது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) சகலாவத்தை கேவலாவத்தைகளில் விடுபட்டுச் சுத்தாவத்தையில் இருக்க வேண்டும் என்றவாறு. (௨0௭)

மன்னும் பரவெளியை மனவெளியி லடைத்தறிவே
என்னு மொருநினைவை யெழுப்பிநிற்ப தெக்காலம்.

(இ - ள்.) யாண்டும் நிலைபெற்ற பேரறிவாகிய வெளியினை அடியேனுடைய மனவெளி நிரம்பத்தேக்கி, எல்லாம் இப்பேரறிவேயன்றிப் பிறிதொன்றில்லை என்னுமொரு கொள்கையை என்னுட் கொண்டிருப்பது எப்பொழுதோ என்பதாம்.

(வி - ம்.) எல்லாம் சிவமாகிய பேரறிவேயாகும் என்று திண்ணமாக எண்ணி யமைக! என்றவாறு. (உ0௯)

ஆசைகொண்ட மாத ரடைகனவு நீக்கியுன்மேல்
ஓசைகொண்டு நானு மொடுங்குவது மெக்காலம்.

(இ - ள்.) அடியேன் அறியாமையாலே ஆசை கொண்ட மகளிரைக் கூடி வாழ்தல் என்னும் பொய் மாயக்கனவு நிகழாவண்ணம் உன் மேலதாகிய திருவைந் தெழுத்தாகிய மருந்தை யுட்கொண்டு நான் என்கின்ற செருக்கும் அழிந்து போதல் எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இம்மையின்ப மென்னும் கனவு போன்ற பொய்யின் பத்தில் அவாவற்று யான் (எனது) என்னும் செருக்கும் அற்று அமைதி யுறுதல் வேண்டும் என்றவாறு. (உ0௧)

தன்னுயிரைக் கொண்டு தான்றிரிந்த வாறதுபோல்
உன்னுயிரைக் கொண்டிங் கொடுங்குவது மெக்காலம்.

(இ - ள்.) சின்னுட் பல்பிணிச் சிற்றறிவுடைய யான் என்னுயிரையே முதன்மையாகக் கொண்டு செருக்கித் திரிந்தது போலவே உலகின் பேருயிராகிய நீயே முதன்மையுடையை என்று மெய்யுணர்ந்து உன் திருவருளிலே செருக்கற்றடங்கி யிருப்பது எப்பொழுதோ என்பதாம்.

(வி - ம்.) நானே பெரியன் என்று செருக்குடனின்றாற் போன்றே நீயே பெரியை என்றறிந்து அடியேன் நின்னடிமையாகி விட வேண்டும் என்றவாறு. (உ௧0)

சேற்றிற் கிளைநாட்டுந் திடமா முடலையினிக்
காற்றிலுழல் சூத்திரமாய்க் காண்பதினி யெக்காலம்.

(இ - ள்.) சேற்றிலே நடப்பட்ட கிளைபோன்று நிலை நிற்கலாற்றாத இந்தப் பொய்யுடலை உயிர்க்காற்று லியங்குமொரு பொறி என்றே அடியேன் தெரிந்து கொள்வது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) திடம் என்றது இகழ்ச்சி; திடமற்றது என்றவாறு. உடம்பின் நிலையாமை புணர்ந்தாலன்றிச் செருக்கறுதலும் பற்றறுதலும் கூடா என்பது கருத்து. (உ௧௧)

என்வசமுங் கெட்டிங் கிருந்தவச முமழிந்து
தன்வசமுங் கெட்டருளைச் சார்ந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் எனதுயிர்த் தலைமையிற் சாராமலும் பாசங்களின் சார்பில்லாமலும் செருக்கின் வயப்படாமலும் நின் திருவருளின் சார்பிலிருந்து வாழ்வது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) பாசத்திலழுந்தாமலும் நானே பிரமம் என்னுமலும் செருக்குறுமலும் திருவருட் சார்பிலிருந்து வாழ்தல் வேண்டும் என்பதாம். (உகஉ)

தன்னை மறந்து தலத்து நிலைமறந்து
கன்ம மறந்து கதிபெறுவ தெக்காலம்.

(இ - ள்.) தானே பிரமம் என்பதையும் துறந்து பாசத்தில் வீழ்வதையும் விடுத்துத் தன் முனைப்பால் வினை செய்தலையும் விட்டால் வீடுறும் என்க.

(வி - ம்.) கன்மம் மறத்தலாவது யானிது செய்வேன் எனத் தன் முனைப்பாற் செய்தலை விடுத்தென்றவாறு. (உகங)

என்னையென்னி லேமறந்தே இருந்தபதி யுமறந்து
தன்னையுந்தா னேமறந்து தனித்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) நான் உயிர் என்பதனை எனக்கெனச் செயலில்லாமையால் மறந்து, யானிருக்கின்ற உடம்பும் உலகும் நிலையாமையால் மறந்து, இறைவன் வேறு என்று எண்ணுமல் நீயே நான் என்பதனுல் மறந்து யானே நீயாகத் தனித்திருப்பது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) தனக்கென வொருசெயலுமின்மையால் தன்னை மறத்தலும் உடலும் உலகும் நிலையாமையால் மறத்தலும் அதுவே நான் என்றதனுல் உன்னை வேருக நினைத்தலை மறத்தலும் வேண்டும் என்பதாம். (உகச

தன்னையுந்தா னேமறந்து தலைவாசற் ருழ்போட்டே
உன்னை நினைந்துள்ளே யுறங்குவது மெக்காலம்.

(இ - ள்.) என்னை என்னியல்பினுலேயே என் தலைமையை மறந்து புலன்கள் உள்ளே வருகின்ற வாயிலாகிய கண் முதலிய பொறி வாயிலைந்தனையும் சிக்கென அடைத்துத் தாழ்செறித்து மனத்தை நிறுத்தி இறைவனுகிய உன்னை என்னுள்ளேயே அன்பால் நினைந்து நின் றிருவருளிலே அறிதுயில் கொண்டிருப்பது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) உயிர்ச்செயலில்லை என்றறிந்து மனம் பொறிவழிச் செல்லாமல் அடக்கி என்னுள்ளேயே உன்னை நினையுமாற்ருல் அறிதுயில் கொள்ள அருள் செய்வாயாக என்பதாம். (உகரு)

இணைபிரிந்த போதலறி யின்பமுறு மன்றிலைப்போல்
துணைபிரிந்த போதருணூல் தொடர்ந்து கொள்வ
தெக்காலம்.

(இ - ள்.) தனது காதற்றுணை பிரிந்தபொழுது பிரிவாற்றாமையினாலே பேதுற்று அத்துணையைக் கூவிக் கூவி வருவித்து அதனோடு கூடி இன்புறுகின்ற அன்றிற் பறவையைப் போன்று என் அறியாமையாலே நின்னருட்டுணை பிரிந்த பொழுது நினது திருவருள் வெளிப்பாடாகிய தேவார திருவாசகங்களை அன்புடனோதி மீண்டும் நின்றுணையைப் பெற்றுக்கொள்வது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அருணூல் என்றது தேவார திருவாசகங்களை, இவை திருவருளின்பாற் சேர்ப்பிக்கும் தெய்வக் கருவிகள் என்பது அடிகளார் கருத்தாதலுணர்க. (உகசு)

ஆட்டமொன்று மில்லாம லசைவுசற்றுங் காணமல்
தேட்டமற்ற வான்பொருளைத் தேடுவது மெக்காலம்.

(இ - ள்.) அடியேன் நெஞ்சத்தில் புலனுசைபற்றிப் போராட்டஞ் சிறிதும் இல்லாமலும் உள்ளேயும் ஐயந்திரிபு முதலியவற்றாலும் சிறிதும் அசை வுண்டாகாமலும் உறுதியுடனிருந்து தனக்கென்று யாதொன்றனையும் தேடுதலற்ற சிறந்த மெய்ப்பொருளைத் தேடி புணர்வது மெக்காலமோ? அறிகிலேன்.

(வி - ம்.) ஆட்ட மென்றது அவாவாலுண்டாகும் போராட்டம் அசைவு அதுவோ இதுவோ என்னும் ஐயவுணர்வினு லுண்டாகும் தடுமாற்றம். (உகஎ)

முன்னைவினை யாலறிவு முற்றுமற் பின்மறைந்தால்
அன்னைதனைத் தேடி யமுதுண்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேன் பழவினை காரணமாக மெய்யறிவு தலைப்படாமல் பின்னர் அது மறைந்து போய்விட்டாலும் நினது திருவருளின்பால் தஞ்சம் புகுந்து அதன் துணையாலே நின்பேரின்பவமுதத்தை அடியேன் பெற்றுப் பருகுவது எக்காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) பழவினையாலே கடவுணெறியில் மனம் மாறினும் மீண்டும் அருளிலே தஞ்சம் புகுதுக! என்பது கருத்து. (உகஅ)

கள்ளுண் டவர்போற் கனிதருமா னந்தமதாற்
தள்ளுண்டு நின்றுடித் தடைப்படுவ தெக்காலம்.

(இ - ள்.) கள்ளுண்டு மயங்கித் தள்ளாடி நிற்பவர் போன்று அடியேன் என்னுள்ளங் கனிந்து தோன்றுகின்ற சிவவின்பத்தாலே மெய்ம்மறந்து தள்ளாடி இன்பக் கூத்தாடுகின்ற இனிய நாள் எந்த நாளோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) உள்ளம் இறைவன்பா லன்பாற் கனியும்பொழுது பேரின்ப முண்டாகும் என்றவாறு. (உகக)

தானென்ற வாணவமுந் தத்துவமுங் கெட்டொழிந்தே
ஏனென்ற பேச்சுமிலா திலங்குவது மெக்காலம்.

(இ - ள்.) நான் என்று செருக்குறுதற்குக் காரணமான ஆணவ மலமும் நாதமுதல் மண்ணீறுகிய மாயா காரியங்களும் தவரக் கெட்டொழிந்து போதலாலே பின்னர் ஆராய்ச்சியறிவும் மொழியு மற்று நின்னோடு கலந்து திகழ்வது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) ஏனென்ற பேச்சென்றது - ஆராய்ச்சி மொழியை. (உஉ0)

நானவனாய்க் காண்பதெல்லா ஞானவிழி யாலறிந்து
தானவனாய் நின்று சரணடைவ தெக்காலம்.

(இ - ள்.) அடியேனும் என்னாற் காணப்படுகின்ற உலகமும் அவனாகவே என் மெய்யுணர்வுக் கண்ணாலே கண்டு நான் அழிந்து அவனாகவே நின்று அவன் திருவடியிற் றஞ்சம் புகுவது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) அவன் என்னுள் மறைந்து யானாகியவாறு யான் அவனுள் மறைந்து அவனாகவே நிற்றல் வேண்டும் என்றவாறு. (உஉக)

தானந்த மில்லாத தற்பரத்தி னூடுருவி
ஆனந்தங் கண்டே யமர்ந்திருப்ப தெக்காலம்.

(இ - ள்.) ஈறில்லாத இறைவன் தன்மையினுட் புகுந்து எல்லை யற்ற பேரின்ப வாழ்வு பெற்றிருப்பது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) எல்லாம் இறைசெயலென் றுணர்ந்து அவனருளில் மூழ்கி இன்புற்றிருக்க வேண்டும் என்றவாறு. (உஉஉ)

உற்ற வெளிதனிலே யுற்றுப்பார்த் தந்தரத்தே
மற்ற மறமாய்கை மாள்வதினி யெக்காலம்.

(இ - ள்.) அறிவு வெளியில் ஆழ்ந்து ஆழ்ந்து மெய்யுணர்த லாலே அம்மெய்யுணர்விலே பொய்யாகிய தீய மாயை கரைந்தொழிதல் எக்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மெய்யுணர்வு வளர்வதனால் மாயை கரைந்துபோம் என்றவாறு. (உஉக)

ஏடலர்ந்த பங்கயமு மிருகருணை நேத்திரமுந்
தோடணிந்த குண்டலமுந் தோன்றுவது மெக்காலம்.

(இ - ள்.) அடியேமாகிய உயிர்களை உய்யக்கோடற் பொருட்டு இறைவன் மேற்கொள்கின்ற அம்மையப்பன் திருக்கோலத்தி லமைந்த இதழ் விரிந்த பொற்றாமரை போன்ற திருமுகமும் அதன்பாற் றிகழ்கின்ற பேரருள் ஒழுகும் இரண்டு திருக்கண்களும் ஒருபால் தோடும் ஒருபாற் குண்டலமும் திகழ்கின்ற திருச்செவியின் அழகும் அடியேன் அகக்கண்ணிற்குத் தோன்றுவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) இஃது இறைவன் திருவருட் டிருவுருவத்தை நினைந்து கூறிய தென்க. (உஉச)

ஐயாறு மாறு மகன்று வெறுவெளியில்
மையிருளில் நின்றமன மாள்வதினி யெக்காலம்.

(இ - ள்.) பேரிருளாகிய ஆணவமல முதலியவற்றில் அழுந்திக் கிடந்த அடியேன் நெஞ்சமானது, நாதமுதன் மண்ணீறாய் கின்ற முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து அப்பாலான அறிவு வெளியிலே புகுவதனால் இறந்து படுவது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மையிருள் - ஆணமலமாகிய பேரிருள். (உஉரு)

காட்டு மருண்ஞானக் கடலின்புக் கப்பல்விட்டு
மூட்டுங் கருணைக்கடன் மூழ்குவது மெக்காலம்.

(இ - ள்.) திருவருள் வலிய வந்து அடியேனுக்குக் காட்டுகின்ற ஞான நெறியாகிய கடலின்கண் அன்பாகிய வங்கத்திலேறிச் செலுத்தி அத்திருவருளே அழைத்துக் கொடுபோய்த் தொடர்புபடுத்துகின்ற பேரருட் கடலாகிய இறைவனுட் புகுந்து மறைவது எப்பொழுதோ அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) அருளே உயிர்கட்கு அறிவுதந்து இறைவன்பால் கூட்டுவிக்கின்றது என்பது கருத்து. (உஉசு)

நானாரோ நீயாரோ நன்றாம் பரமான
தானாரோ வென்றுணர்ந்து தவமுடிப்ப தெக்காலம்.

(இ - ள்.) அடியேனாகிய உயிரினியல்பும் திருவருளினியல்பும் மேலான இறைவனியல்பும் நன்குணர்ந்து அடியேன் மேற்கொண்ட தவவொழுக்கம் முற்றப்பெறுவது எந்தக் காலமோ? என்பதாம்.

(வி - ம்.) உயிரியல்பும் அருளியல்பும் இறையியல்பும் உணர்ந் தார்க்கே தவவொழுக்கம் இனிதே நிறைவுறும் என்றவாறு. (உஉஎ)

எவரேவர்க ளேப்படிக்கண் டேந்தப் படிநினைந்தார்
அவரவர்க் கப்படிநின் றுனேன்ப தேக்காலம்.

(இ - ள்.) யார் யார் எவ்வாறு எவ்வாறு கண்டு எத்தகையினன் என்று தம்முட் கருதினரோ அவரவர்களுக்கு அந்த அந்தத்தன்மை புடையவனாக எம்பெருமான் தோன்றுமியல்புடையவன் என்று உலகினர்க்குணர்த்துவது எந்தக் காலமோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) இறைவன் றனக்கென ஒரு வடிவமும் உடைய னல்லன்; அன்பராயினர் எந்த எந்த வடிவமுடையவனாகக் கருது கின்றனரோ அந்த அந்த வடிவில் அவரவர்க்குக் காட்சி தருவான் என்றவாறு. "மனக்கோள்; நினக்கென வடிவு வேறிலையே" என்பது பரிபாடல். (உஉஅ)

உற்றுற்றுப் பார்க்க வொளிதருமா னந்தமதை
நெற்றிக்கு நேர்கண்டு நிலைப்பதினி யேக்காலம்.

(இ - ள்.) உள்ளத்தின் ஆழத்தே கூர்ந்து நோக்க நோக்க உயிருக்கு ஒளிமிகச் செய்கின்ற பேரின்பமாகிய சிவத்தைப் புருவங்கட் கிடையிலே ஞானக்கண்ணாற் கண்டு அவ்வின்பத்தின்கண் நிலைத் திருப்பது எப்பொழுதோ? அறிகிலேன் என்பதாம்.

(வி - ம்.) மெய்யுணர்வு முதிர முதிர இறையின்பமும் மிகுத்து வரும் என்பதாம். (உஉகூ)

விளங்குகின்ற தாரகையை வெய்யோன் மறைத்தாற்போல்
களங்கமற வுன்காட்சி கண்டறிவ தேக்காலம்.

(இ - ள்.) இருளினூடே ஒளிகளாக விளங்காநின்ற விண்மீன் கூட்டத்தை ஞாயிறு தன்னொளியினாலே இல்லையாக்கினாற்போன்று நின் அருளொளியாலே அடியேன் சிற்றறிவை இல்லையாக்கி விடுத லாலே அடியேன் உன்னைக் கண்டுணர்வது எந்தக்காலமோ? அறிகி லேன் என்பதாம்.

(வி - ம்.) இறை ஞானத்தில் உயிர் ஞானம் இல்லையாகத் தன் முனைப்பற்றிருத்தல் வேண்டும் என்பதாம். (உகூ0)

என்னையே தானறியே னிந்தவண்ணஞ் சோன்னதேல்லாம்
முன்னையோர் கைக்கொள்ள முன்பணிவ தேக்காலம்.

(இ - ள்.) அடியேன் என்னியல்பினையே இத்தகைய தென்று அறிந்து கொள்ள வல்லேனல்லேன். அங்ஙன மிருப்பவும் இந்த மெய்ஞ்ஞானப் புலம்பலை அடியேன் கூறத் துணிந்ததும் உன் திருவருட் செயலே என்று இதனையும் சான்றோர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டி உன் திருவடிகளைப் பணிவது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) இந்த மெய்ஞ்ஞானப் புலம்பலைத் திருவருளே அடியேனைப் பாடுவித்தது; ஆதலால் நான் பாடினேன். இதனையும் சான்றோர் ஏற்றுக்கொள்க என்றவாறு. (உஙக)

ஐஞ்சு கரத்தானை யடியிணையைப் போற்றிசெய்து
நெஞ்சிற் பொருத்தி நிலைபெறுவ தெக்காலம்.

(இ - ள்.) ஐந்து கைகளையும் யானை முகத்தையும் உடைய மூத்த பிள்ளையார் திருவடிகளை அடியேன் நெஞ்சின்கண் இருத்தி இறைவன் திருவருளிலே நிலைபெற்றிருப்பது எப்பொழுதோ? என்பதாம்.

(வி - ம்.) பிரணவ வடிவனுகிய மூத்த பிள்ளையார் திருவடிகளை நினைப்போர் வீடு பேறெய்துவர் என்பது கருத்து. (உஙஉ)

பத்திரகிரியார்
திருவாய் மலர்ந்தருளிய
மெய்ஞ்ஞானப் புலம்பல் முற்றும்

பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனுர் உரை

முற்றும்.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண்: பக்க எண்]

பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள்

மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை